215277
to
215289

4 14
24
6-4-1939

215277

560 560
28 APR 1939 MADRAS
21527

171

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| பு 24 | கும்பகோணம் கலி 5039 பகுதான்ய-ஞு பங்குனி-மீ 24உ 1939-ஞு ஏப்ரல்-மீ 6உ | வெ 14 |

## தஞ்சாவூர் சர்க்கிள் கமிட்டிக்குள்பட்ட அரந்தாங்கி தாலூகா பரமந்து
## ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோவிலின்
### 1346-ம் பஸலி 1936—37 வருஷங்களின் வரவு செலவு.

| வரவு எனம். | ரொக்க ஆதாயம். R. | A. | P. | தான்ய ஆதாயம். க. | ம. | ப. |
|---|---|---|---|---|---|---|
| அறுப்படி இருப்பு | 12 | 8 | 3 | 497 | 8 | 1½ |
| கிரும ரொக்க வசூல் | 232 | 8 | 10 | 1058 | 11 | 0 |
| வசக்கட்டு பத்து | 85 | 13 | 2 | | | |
| கிரும புஞ்சை வாகு வித்தது | 14 | 8 | 0 | | | |
| சிலவுவகைக்கு திரும்ப | 7 | 8 | 0 | | | |
| உபய வரவு | 752 | 9 | 3 | | | |
| உண்டியல் வரவு | 0 | 8 | 0 | | | |
| வட்டி ஆதாயம் | 1 | 11 | 9 | 3 | 8 | 2 |
| தோப்பாதாயம் | 44 | 10 | 9 | | | |
| புளியமரத்தின் ஆதாயம் | 31 | 4 | 0 | | | |
| மாமரம் இலுப்பமரத்தின் ஆதாயம் | 15 | 4 | 0 | | | |
| வைக்கல் வித்தது | 23 | 0 | 0 | | | |
| நெல் வித்தது | 1359 | 7 | 0 | | | |
| பரிமாத்த கொள்முதல் சாமான்கள் வித்தது | 37 | 14 | 4 | | | |
| சில்லரை கடன் | 198 | 14 | 5 | 10 | 6 | 0 |
| வியனுதாயம் | | | | 49 | 6 | ½ |
| நெல் கொள்முதலில் | | | | 10 | 0 | ½ |
| ஆகமொத்தம் ஆதாயம் | 2818 | 1 | 9 | 1630 | 4 | ½ |

| செலவு எனம். | ரொக்க செலவு. R. | A. | P. | தான்ய செலவு. க. | ம. | ப. |
|---|---|---|---|---|---|---|
| நெல் கொள்முதல் செலவு | 16 | 13 | 11 | | | |
| பிடாரி அம்மன் கோவில் திருப்பணி செலவில் மேல்வாரவீதி | 71 | 8 | 8 | | | |
| கிரும கோவில் பூஜை | 4 | 4 | 0 | 2 | 0 | 0 |
| பிர்மோத்ஸவ செலவு | 632 | 14 | 2 | | | |
| நித்யபடி | 90 | 15 | 0 | 117 | 6 | 0 |
| மாஸ ஏறுபடி செலவு | 161 | 3 | 6 | 2 | 9 | 0 |
| ரிவினியூ கிஸ்தி | 481 | 7 | 2 | | | |
| கமிட்டியார் அவர்கள் பீஸ் | 20 | 4 | 0 | | | |
| போர்டார் அவர்கள் பீஸ் | 24 | 13 | 0 | | | |
| திருப்பரிவட்டம் கொள்முதல் | 11 | 11 | 0 | | | |
| வாகனம் கொள்முதல் | 110 | 0 | 0 | | | |
| பெட்ரோமாக்ஸ் லைட் கொள்முதல் | 10 | 12 | 9 | | | |
| திருப்பணி வேலைக்கு | 365 | 15 | 6 | | | |
| ஏரி மராமத்துக்கு | 17 | 6 | 6 | | | |
| நஞ்சை மராமத்துக்கு | 4 | 4 | 0 | | | |
| சிப்பந்தி சம்பளம் | 418 | 0 | 0 | 94 | 10 | 0 |
| தோட்டம் பரிபாலனத்துக்கு | 32 | 10 | 0 | | | |
| போஸ்ட் செலவு | 1 | 10 | 3 | | | |
| கோர்ட் செலவு | 59 | 2 | 0 | | | |
| போக்குவரத்துக்கு | 9 | 1 | 0 | | | |
| ஸ்டேஷனரி | 4 | 6 | 3 | | | |
| மிஷன்கூலி | 13 | 7 | 0 | | | |
| கட்டிட ரிப்பேர் | 18 | 4 | 0 | | | |
| பல சில்லரைசெலவு | 23 | 3 | 0 | | | |
| சில்லரை கடனுக்கு | 197 | 15 | 4 | 35 | 7 | 0 |
| திரும்பவரக்கூடிய அட்வான்சு | 15 | 5 | 2 | 4 | 3 | 0 |
| சத்தகூலி | | | | 3 | 5 | 1½ |
| நெல்வித்தமுதல் சிலவு | | | | 939 | 10 | 2 |
| கையிருப்பு | 0 | 12 | 7 | 430 | 1 | 1 |
| ஆக செலவு இருப்பு மொத்தம். | 2818 | 1 | 9 | 1630 | 4 | ½ |

S. திருவேங்கடத்தய்யங்கார்,
A. M. ராமய்யாதேவர், } டிரஸ்டிகள்.
S. கிருஷ்ணசாமியர், ஆடிட்டர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோண

# தேசிகன் தேன்மொழிகள்

## அத்வைதம்.

1. அத்வைதம் என்றால் என்ன ?

வேதாந்தக் கிரந்தங்களில் பரிசய முள்ள ஒரு பிரபு ஒரு நாள் ஸ்ரீமஹா ஸ்வாமிகளவர்களைப் பார்த்துக் கேட்கலாயினர்.

பிரபு:—அத்வைத ஸித்தாந்தத்தை அறிந்து கொள்ளப் பார்த்ததில் அநேக ஸந்தேஹங்கள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. அவைகளை என்னால் நிவர்த்தித்துக் கொள்ள முடியவில்லை. நான் ஸந்தித்த பண்டிதர்களின் உதவியை வைத்தும் அவை நிவர்த்தியாகமலே இருக்கின்றன. தாங்கள் தயவு செய்து அத்வைத வேதாந்தத்தின் தத்வத்தை எனக்கு உபதேசிப்பீர்களேயானால் மிகவும் கிருதார்த்தனாவேன்.

மஹா ஸ்வாமிகள்:—ஸாத்தியமானால் அவ்விதமே செய்வதில் எனக்கும் மிகவும் திருப்திதான். ஆனால் என்னால் ஸாத்தியமில்லாமலிருக்கிறதே.

பி:—விளையாட்டாகச் சொல்கிறீர்களென்று நினைக்கிறேன். அத்வைதம் போதிக்க யோக்கியதை இல்லை யென்று தாங்கள் சொல்லி விட்டால், இந்த ஜகத்தில் வேறு யார் தான் அதை நன்கு அறிந்திருக்கப் போகிறார்கள்? அதிகம், போதிக்க வல்லமை யாருக்குத் தானிருக்கும் ?

ம:—நாம் என்ன செய்யலாம்? விஷயத்தின் தன்மை அவ்விதமிருக்கிறது. அறிந்தேன் என்றவன் அறியாதவனே என்று உபநிஷத் கோஷிக்கிறது. அத்வைதம், கற்[illegible] யால் சொல்லிக் கொடுக்கக் கூடிய விஷயமும் இல்லை. தன்னாலேயே அறிந்து கொள்ளவேண்டியது தான் அதன் தன்மையாகும். ஆகையால் உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதென்பது ஸாத்தியமில்லை. ஆனால் நீங்கள் வேதாந்தக் கிரந்தங்களை வாசித்து வந்ததில் எங்கேயாவது மூலத்திலாவது வியாக்கியானத்திலாவது ஏதேனும் வாக்கியத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டு மென்று கேட்பீர்களேயானால், என்னால் முடிந்தவரையில் அர்த்தம் சொல்லிப்பார்க்கிறேன். வார்த்தைகளுக்கு அர்த்தம் சொல்லலாம்; வார்த்தைகள் சேர்ந்த வாக்கியத்திற்கு அர்த்தம் சொல்லலாம்; வாக்கியங்களால் சொல்லப்படும் விஷயங்களைத் தெளிவாகச் சொல்லலாம்; இதற்குமேல், அத்வைத தத்வம் இன்னதென்று உங்களுக்குத் தெரியும்படியாய்ச் சொல்லிக்கொடுப்பது ஸாத்தியமேயில்லை. அது வாக்குக்கு விஷயமல்ல; மனதிற்கும் விஷயமல்ல; இவ்விரண்டுக்கும் அதீதமாயிருக்கிற கேவல அநுபவ ரூபமே அது. தித்திப்பு என்றால் என்னவென்று எனக்குத் தெரியாமலிருந்தால், எனக்குத் தெரியும்படி உசிதமான வார்த்தைகளைக்கொண்டு உங்களால் செய்யமுடியுமா ?

பி:—முடியாது தான்

ம:—தித்திப்பாயிருக்கிற ஒரு பதார்த்தத்தை என் நாக்கில் வைத்தால்தான், தித்திப்பின் தன்மை எனக்குத் தெரியமுடியும்; வார்த்தைகளினால் சொல்லிக்கொடுக்க முடியாது. இன்னொருவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளவும் முடியாது. ஸாக்ஷாத் அநுபவத்தினாலேயே தெரிந்து கொள்ள வேண்டும். ஸர்வ ஸாதாரணமாக இருக்கிற தித்திப்பே வாக்குக்கு எட்டாமலிருக்கும் போது எல்லாவற்றிற்கும் மேலான ரஸ பதார்த்தமாகிய அத்வைதம் எவ்வளவு மேற்பட்டிருக்கவேண்டும்? கொஞ்ச நாளைக்குமுன் இங்கு வந்திருந்த ஒரு பிரபுவின் ஞாபகம் வருகிறது. பிராம்மணராக பிறந்திருந்தபோதிலும், அவருடைய ஸம்ஸ்காரங்களெல்லாம் நவீன மார்க்கத்திலேயே ஏற்பட்டிருந்தனவாகத் தெரிந்தது; பெயருக்கு பிராம்ஹணர் தான். ஸந்தர்ப்பங்கள் ஒத்துக்கொண்டபடியால், லோக ரீதியாய் நல்ல அந்தஸ்தையும் அடைந்தவர். இவ்விடத்திற்கு அவர் வந்தது இதுவே முதல்தடவை. இங்கே நதியிலுள்ள ஸ்வச்சமான தீர்த்தமும், பக்கத்தில் வனங்களின் ரமணீயகமும், சாந்தமான ஸந்நிவேசமும், மற்றும் விஷயங்களும் அவர் மனதை மிகவும் கவர்ந்திருப்பதாகத் தெரிந்தது. அவர் என்னிடத்தில் வந்து தன் ஸந்தோஷத்தைத் தெரிவிக்கும்போது "இதென்ன! பிரஹ்மானந்தமாயிருக்கிறது." என்றார். இது பிரஹ்மத்தின் ஆனந்தத்தைப் போல இருக்கிறதென்றுதான் தாத்பர்யம். நம் பிராசீன ஸம்பிரதாயத்திற்கு விருத்தமான ஸம்ஸ்காரங்களும் பழக்கங்களுமே அவருக்கு ஏற்பட்டிருந்தபோதிலும் கூட, எல்லா ஆனந்தங்களுக்குள்ளும் பிரஹ்மானந்தமே மேலானதென்றும், வாக்கால் சொல்லமுடியாத ஒரு ஸந்தோஷத்திற்கு உபமானம் சொல்லவேண்டுமானால் பிரஹ்மானந்தத்தைத் தான் சொல்லவேண்டுமென்றும், ஓர் எண்ணம் அவன் மனதில் இன்னும் அழியாமலே கிடக்கிறதென்று தெரிந்தது. இதை எதற்காகச் சொன்னேன் என்றால், ஸாமான்யமாக விஷயஸுகத்தை வர்ணிக்கக்கூட, வார்த்தைகள் போதாதென்று நமக்குத் தோன்றும்போது, ஸரியானபடி போதுமானதாய் ஒரு திருஷ்டாந்தம் வேண்டுமானால், பிரஹ்மானந்தத்தையே உதாஹரிக்கிறோம். பிரஹ்மானந்தமும் அத்வைதமும் ஒன்றே. ஆனதுபற்றி, அத்வைதமும் வாக்குக்கு எட்டாததென்பது யாரும் ஒப்புக்கொண்டவிஷயம். ஆகையால் அத்வைதத்தைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். அது ஸாத்தியமேயில்லை. ஆனால் ஏதேனும் ஒரு வாக்கியம் அன்வயம் தெரியவில்லையென்றால் கேளுங்கள். ஸித்தாந்தத்தில் எங்கேயாவது யுக்தியில் ஸந்தேஹமிருந்தால் கேளுங்கள். இவ்வளவு தான் என்னால் செய்யமுடியும்.

பி:—தங்கள் அபிப்பிராயம் நன்கு அறிந்துகொண்டேன். வியாகரணம், வாக்கியான்வயம், உபபத்தி இவைகளிலுள்ள ஸந்தேஹத்திற்காகத் தங்களை சிரமப்படுத்துவது உசிதமாகத் தோன்றவில்லை;

ம:—அதினால் பாதகமேயில்லை. இந்த ஸந்தேஹ நிவ்ருத்தியும் அத்வைதானுபவத்திற்கு உபயோகப்படுமானால் அவசியம் நிவிருத்தி செய்யவேண்டியதுதான்.

பி:—இப்பொழுது நான் புஸ்தகம் ஒன்றும் கொண்டுவரவில்லை. எனக்கு அர்த்தமாகாத வாக்கியங்களை ஞாபகத்திலிருந்து சொல்வதற்கு எனக்கு சக்தி போதாது.

ம:—அப்படியானால் அதை இன்னொரு ஸந்தர்ப்பத்தில் வைத்துக்கொள்வோம். புஸ்தகத்தைத் திருப்பிப்பார்க்க அவசியமில்லாத ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி இப்பொழுது விசாரிப்போம்.

பி:—தங்கள் அபிப்பிராயம் போலவே செய்கிறது.

ம:—"அத்வைதம்" என்றால் என்ன வென்று முதலில் பார்ப்போம். நீங்கள் எப்படி அர்த்தம் கிரஹித்திருக்கிறீர்கள்?

பி.—த்வி என்றால் இரண்டு, த்விதா என்றால் இரண்டாயிருக்கும் தன்மை, த்வைதம் என்றாலும் த்விதா என்று தான் அர்த்தம், எதில் இரண்டாயிருக்கும் தன்மை கிடையாதோ அதுவே அத்வைதம், என்று இவ்வாறு நிர்வசனம் செய்யக் கேட்டிருக்கிறேன்.

ம:— அது ஸரியே. இரண்டாயிருக்கும் தன்மையற்றது என்கிறீர்களே, அது எது?

பி:—பிரஹ்மம் தான்.

ம:—மிகவும் ஸரி. அதாவது, எந்த ஸத்பதார்த்தத்திலிருந்து ஜகத் இருப்பை அடைந்திருக்கிறதோ, எதினால் இருந்து வருகிறதோ, எதில் லயத்தை அடையுமோ, அதைத் தானே பிரஹ்மம் என்கிறீர்கள்?

பி.—ஆம்

ம:—பிரஹ்ம சப்தத்தையும் அதன் தாத்பர்யத்தையும் இப்பொழுது கொஞ்சம் மறந்திருப்போம். பொதுவாக ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்திற்குக் காரணமாயிருக்கிற தத்வத்தை அத்வைதம் என்று சொல்கிறீர்கள்.

பி:—ஆம்

ம:—அந்தத் தத்வத்தில் இரண்டாயிருக்கும் தன்மை கிடையாது என்கிறீர்கள்.

பி:—ஆம்

ம.—அதாவது, அந்தத் தத்வம் ஒன்று தான் என்கிறீர்கள்.

பி:—ஆம்

ம:—அதாவது அவ்விதம் இரண்டு தத்வங்கள் கிடையாது என்கிறீர்கள்.

பி:—ஆம்

ம:—அவ்விதம் இரண்டு தத்வங்கள் கிடையாதென்று சொல்வதினாலேயே, நம் ஸித்தாந்தத்திற்கு அத்வைதம் என்ற பெயர் மிகவும் பொருத்தமானது என்று தங்கள் அபிப்பிராயம்.

பி:—ஆம்

ம:—ஸரி. சற்று இதர ஸித்தாந்தங்களைக் கவனிப்போம். கிருஸ்துவ மதம், மகமதிய மதம், விசிஷ்டாத்வைத மதம், த்வைதம், தர்க்கம், யோகம் இவை முதலான, ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி கர்த்தா ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்கிற எந்த ஸித்தாந்தத்தை வேண்டுமானாலும் பார்ப்போம். அந்த மதஸ்தர்களில் யாராவது அவ்விதமாக இரண்டு தத்வங்கள் உண்டென்று சொல்கிறார்களா? அல்லது ஒரே மாதிரியாக எல்லோருமே ஒரு தத்வம் தான் உண்டென்று சொல்கிறார்களா?

பி:—ஒரே ஈசுவரர்கள் உண்டென்று எந்த மதவாதியும் சொல்கிறதில்லை. நம்மைப் போல் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிற கோஷ்டியில் சேர்ந்தவர்களான தேவர்கள் அநேகர் என்று சொல்லலாம். பரம்பொருளில் அநேகம் உண்டென்று சொல்வாரில்லை. அது எப்பொழுதும் ஒன்றே.

ம:—ஸரி ஆகையால் ஈசுவரன் ஸம்பந்தப்பட்ட மட்டில் இரண்டு உண்டென்று எந்த ஸித்தாந்தியும் சொல்லவில்லை.

பி:—இல்லை.

ம:—ஆகையால், இரண்டு ஈசுவரர்கள் கிடையாதென்று சொல்கிற அந்த மதவாதிகள் எல்லாருமே, தங்களால் சொல்லப்படும் தத்வம் அத்வைதம் என்றும், தங்கள் மதமும் அத்வைதம் என்றும், சொல்லிக்கொள்ள பாத்யமில்லையா? அப்படியிருக்க, உங்கள் பாரத்வத்திற்கும் உங்கள் ஸித்தாந்தத்திற்கும் அத்வைத சப்தத்தை உபயோகித்துக் கொள்ள என்ன நியாயம்?

பி:—தாங்கள் தான் தெளிவுபடுத்தவேண்டும்.

ம:—இன்னொரு சிரமமும் இருக்கிறது. அத்வைத ஸித்தாந்தத்தில் தான் வியாவஹாரிகமாக ஸகுண பிரஹ்மம் என்றும், பாரமார்த்திகமாக நிர்குண பிரஹ்மம் என்றும், சொல்கிறோம்.

பி:—ஆம்.

ம.—இந்த வித்யாஸத்தை இதர மதஸ்தர்கள் ஒப்புக்கொள்கிறதில்லை. பிரஹ்மத்தில் இரண்டுவிதம் உண்டென்று அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

(தொடர்ச்சி 6-பக்கம் பார்க்க)



ஸ்ரீ காமாக்ஷியை நம:

# மூக பஞ்ச சதீ.

## மந்தஸ்மிதசதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

30. விச்வேஷாம் நயனோத்ஸவம் விதனுதாம் வித்-
[யோததாம் சந்த்ரமா: |
விக்யாதோ மதனாந்தகேந முகுட மத்யேந
[ஸம்மான்யதாம் |
ஆ: கிம் ஜாதமனேன ஹாஸ ஸுஷமாம்
[ஆலோக்ய காமாக்ஷி! தே |
காளங்கீ மவலம்பதே கலு தசாம் கல்மாஷ
[ஹீநோப்யஸௌ ||

காமாக்ஷி! காமாக்ஷியே சந்த்ரமா:-சந்திரன். விச்வேஷாம்-எல்லாருக்கும். நயனோத்ஸவம்-நேத்ராநந்தத்தை. விதநுதாம்-செய்யட்டும். விக்யாத:-பிரஸித்தியுள்ளவனாக, வித்யோததாம்-விளங்கட்டும். மதனாந்தகேந-பரமசிவனால். முகுடமத்யே-தலை கிரீட மத்தியில் வைத்து, ஸம்மான்யதாம்-கௌரவிக்கப்படட்டும் அனேன-இதனால் ஆ: கிம்! ஜாதம்! ஆம் என்ன வந்துவிட்டது? அஸௌ-இந்த சந்திரன். கல்மாஷஹீனோபி-கல்மஷமற்றவனாயிருந்தபோதிலும், தே-உனது ஹாஸ ஸுஷமாம்-புன்சிரிப்பின் காந்தியை, ஆலோக்ய-பார்த்து, காளங்கீம் தசாம்-களங்கமுள்ள நிலைமையை, அவலம்பதே கலு-அடைகிறானல்லவா?

31. சேத: சீதளயந்து ந: பசுபதேரானந்த ஜீவாதவ:
நம்ராணாம் நயநாத்வஸீமஸு சரத்சந்த்ராதபோ
[பக்ரமா: |
ஸம்ஸாராக்ய ஸரோருஹாகரகலீகாரே துஷா
[ரோத்க்ரா: |
காமாக்ஷி ஸ்மரகீர்த்தி பீஜநிகரா: த்வந்மந்த
[ஹாஸாங்குரா: ||

காமாக்ஷி! காமாக்ஷியே, பசுபதே:-பரமசிவனுக்கு, ஆனந்த ஜீவாதவ:-ஆனந்தத்தைக் கொடுப்பவைகளும், நம்ராணாம்-நமஸ்கரிப்பவர்களுடைய நயநாத்வஸீமஸு-கண்பிரதேசங்களில், சரத்சந்த்ராதபோபக்ரமா:-சரத்காலத்திய நிலா போன்றவைகளும், ஸம்ஸாராக்ய ஸரோருஹாகரகலீகாரே-ஸம்ஸாரமென்கிற தாமரைக் குளத்தை கலக்கும் விஷயத்தில், துஷாரோத்கரா:-கடும்பனி போன்றவைகளும், ஸ்மரகீர்த்திபீஜநிகரா:-மன்மதனுக்கு கீர்த்தியை உண்டாக்கும் வித்துக்களாயுமிருக்கிற, த்வன்மந்தஹாஸாங்குரா:-உனது புன்சிரிப்புக்குருத்துக்கள், ந:-நம்முடைய, சேத:-மனதை, சீதளயந்து-குளிரச் செய்யட்டும்.

32. கர்மௌகாக்யதம: கசாகசிகான் காமாக்ஷி ஸம்
[சிந்தயே |
த்வன்மந்தஸ்மித ரோசிஷாம் த்ரிபுவன க்ஷேமம்
[கராநங்குரான் |
யே வக்த்ரம் சிசிர ச்ரியோ விகஸிதம் சந்த்ராத
பாம்போருஹ த்வேஷோத்கோஷண சாதுரீமிவ
[நிரஸ்கர்த்தும் பரிஷ்குர்வதே ||

காமாக்ஷி! காமாக்ஷியே, யே-எந்த புன்சிரிப்புக்கள், சிசிர ச்ரிய:-சிசிருதுவினுடைய காந்தியை அடைந்ததுகளாய், சந்த்ரதபாம்போருஹத்வேஷோத்கோஷண சாதுரீம்-நிலாவுக்கும் தாமரைப்பூவுக்குமுள்ள விரோதத்தை வெளியிடும் போக்கை, நிரஸ்கர்த்துமிவ-மாற்றுவதற்குப்போல், விகஸிதம் வக்த்ரம்-மலர்ந்துள்ள முகத்தை, பரிஷ்குர்வதே-அழகுபடுத்துகின்றனவோ, (தான்-அப்படிப்பட்ட) கர்மௌகாக்யதம: கசாகசிகான்-கர்மமென்கிற இருளை நாசம் செய்கிறவைகளும், த்ரிபுவனக்ஷேமங்கரான்-மூன்று உலகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கிறவைகளாயுமிருக்கிற த்வன்மந்தஹாஸத்விஷாம்-உனது மந்தஹாஸ காந்தியின், அங்குரான்-முளைகளை, ஸஞ்சிந்தயே-தியானம் செய்கிறேன்.

33. குர்யுர் ந: குலசைல ராஜதநயே! கூலங்கஷம்
மங்களம் | குந்தஸ்பர்த்தன சுஞ்சவ: தவ சிவே
மந்தஸ்மித ப்ரக்ரமா: | யே காமாக்ஷி! ஸமஸ்த
ஸாக்ஷி நயநம் ஸந்தோஷயத்யாந்த்ரம் | கர்ப்
பூரப்ரகாஇவ ப்ரஸ்ருமரா: பும்ஸாமஸாதார
[ணா: ||

குலசைலராஜதநயே! பர்வத அரசனாகிய ஹிமவானின் புத்திரியும், சிவே-சிவனது பத்நியுமான காமாக்ஷி! ஏ காமாக்ஷியே! பும்ஸாம்-புருஷர்களுக்கு, அஸாதாரணா:-கிடைக்கக்கூடாதவைகளான, யே-எந்தப்புன்சிரிப்புக்கள், ப்ரஸ்ருமரா:-புஷ்டியாயுள்ள, கர்ப்பூரப்ரகாஇவ-கர்ப்பூரக்குழம்புபோல், ஸமஸ்தஸாக்ஷி-ஸர்வ காலத்திற்கும் ஸாக்ஷியான, ஆந்தரம்-உள்ளிலிருக்கிற, நயநம்-கண்ணை, (அதாவது சித்தத்தை) ஸந்தோஷயந்தி-ஸந்தோஷப்படுத்துகின்றனவோ, தே-அந்த, தவ-உன்னுடைய, குந்தஸ்பர்த்தனசுஞ்சவ:-ஆம்பல்புஷ்பத்தைப் பழிப்பதில் ஸாமர்த்தியமுள்ள, மந்தஸ்மிதப்ரக்ரமா:-புன்சிரிப்புக்கள், ந:-நமக்கு, கூலங்கஷம்-அதிகமான, மங்களம்-க்ஷேமத்தை, குர்யு:-செய்யக்கடவன.

34. கம்ரேண ஸ்நபயஸ்வ கர்மகுஹநா சௌரேண
மாராகம-வ்யாக்யா சிக்ஷண தீக்ஷிதேன விதுஷா
மக்ஷீண லக்ஷ்மீபுஷா | காமாக்ஷி! ஸ்மிதகந்த
ரேண கலுஷ ஸ்போடக்ரியா சுஞ்சுனா காருண்யா
ம்ருதவீசிகா விஹரண ப்ராசுர்ய துர்யேண மாம் ||

காமாக்ஷி! காமாக்ஷியே, கம்ரேண்-அழகுபொருந்தியதாயும் கர்மகுஹநசௌரேண-கர்மத்தின் மாயையை ஒழிப்பதாயும், மாரகமவ்யாக்யாசிக்ஷணதீக்ஷிதேந-மன்மத சாஸ்திரத்தை விஸ்தரித்துக்கூறுவதில் தீக்ஷை பெற்றதாயும், விதுஷாம்-வித்வான்களுக்கு, அக்ஷீண லக்ஷ்மீபுஷா-குறைவற்ற ஸம்பத்தை விருத்தி செய்வதாயும், கலுஷஸ்போடக்ரியாசுஞ்சுனா-பாபத்தை நாசமாக்கும் கார்யத்தில் ஸாமர்த்தியமுள்ளதாயுமிருக்கிற, ஸ்மிதகந்தரேண-புன்சிரிப்புக்கூட்டத்தால், மாம்-என்னை, ஸ்நபயஸ்வ-முழுக்காட்டுவாயாக. (பரிசுத்தமாக்கு)

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஞு பங்குனி-மீ 24உ

## விற்பனை வரி மசோதா

சென்னை மாகாண வியாபாரிகளுள் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ள விற்பனை வரி மசோதாவானது ஜனப்பிரதிநிதி ஸபையில் ஆஜர் செய்யப்பட்டு பொறுக்கு கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது. அதன் யாதாஸ்தானது ஏப்ரல் 25உக்குள் கிடைத்துவிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய பெரிய வரி விதிப்பினால் பாதிக்கக் கூடியவர்கள் பல வழிகளில் எதிர் கிளர்ச்சி நடத்தியும், மந்திரியிடம் தூது கோஷ்டியனுப்பிக் குறைகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தும் கூட, ஸர்க்கார் பிடிவாதமாக இந்த வரியை விதிக்க முன் வந்திருக்கிறார்கள். மது விலக்குக் கொள்கை காரணமாக இப்போதும், இனி மேலும் ஏற்படக் கூடிய பணக்குறைவை ஸமாளித்துக் கொள்ள வேண்டியிருப்பதே இத்தகைய புதிய வரிக்கு முக்ய காரணமென்பது பிரதம மந்திரியின் பிரஸங்கத்திலிருந்து ஸம்சயமற விளங்குகிறது.

இவ்வளவு பெரிய விவாதத்திற்கிடமான வரியை விதிக்க முன் வந்த கவர்ன்மெண்டார். இவ்வரியால் திட்டமாகக் கிடைக்கக் கூடிய தொகையென்ன, இது எந்த வகுப்பாரை பாதிக்கும், எந்தெந்தப் பொருள்கள் இதிலிருந்து விலக்கப்படும் இத்யாதி விவரங்களை இது வரையில் வெளியிடவில்லை. சட்டஸபையில் பிரதம மந்திரி பேசுகையிலும் மேற்கண்ட விவரங்களைச் சொல்லாததுடன், இந்த வரி விதிப்பினால் ஏற்படக் கூடிய பலாபலன்களைப்பற்றி தமக்கும் முற்கூட்டியே ஒன்றும் தெரியாதென்றும் சொல்லிவிட்டார். இந்த வரி விதிப்பால் எந்த வகுப்பாருக்கு தீங்கு அதிகம் சேருமென்றோ, எவ்விதக் குழப்ப நிலை ஏற்படுமென்றோ, எவ்வளவு தொகை கிடைக்குமென்றோ தம்மால் சொல்லமுடியாதென்று பேசினார். பெரிய பொறுப்பை வஹிக்கும் அதிகாரிகள் மேற்கண்ட அவசியமான விவரங்களை அறியாமலோ, அல்லது அறிந்து வெளியிடாமலோ இருப்பது நியாயமாயில்லை. ஜனங்கள் மீது பெரிய பளுவை ஏற்றும் போது அது ஸம்பந்தமான ஸகல விவரங்களையும் ஸர்க்கார் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையா? நமது மாகாணத்தில், ரயில்வே மூலமாயும், துறைமுகங்கள் மூலமாயும், வேறு வழிகளிலும், ஏற்றுமதி, இறக்குமதியாகும் பண்டங்களின் அளவு, பொருமானம் முதலியவைகளை ஸரியான புள்ளி விவரங்களுடன் வெளியிடக் கூடிய ஸௌகர்யம் ஸர்க்காருக்கு இருக்கிறதே? இதன் மூலம் சுமாராகவாவது இந்த வரியினால் கிடைக்கக் கூடிய வருமானத்தைச் சொல்லிவிட முடியுமல்லவா? ஸர்க்கார் புள்ளி விவரங்களை சேகரிக்க முற்பட்டால் அது அஸாத்யமாகுமா? இப்படிச் செய்யாமல் "ஸர்க்காருக்குப் பணம் வேண்டும், அதற்காக வரி விதிக்கிறோம். இவ்வளவு தான் எங்களுக்குத் தெரியும், பின்னால் இதனால் ஏற்படக் கூடிய நிலை எங்களுக்குத் தெரியாது' என்று பேசுவது ஜனப்பிரதிநிதித்வம் வாய்ந்த ஸர்க்காரின் தன்மைக்கு ஏற்றதாயில்லை.

பிரதம மந்திரி சொல்லுவதுபோல் இந்த வரி விஷயமாக எவ்வித விவரமும் தெரியவில்லையானால் இந்த மசோதாவை நிறைவேற்ற ஏன் இவ்வளவு அவஸரப்படவேண்டுமோ தெரியவில்லை. நீண்ட அவகாசம் கொடுத்து தக்க முறையில் நிபுணர்களைக்கொண்டு விசாரணை நடத்தியும், எல்லாவிதப் புள்ளி விவரங்களையும் சேகரித்துக்கொண்டும் நல்ல பக்வ நிலைமையில் இதைக்கொண்டு வரும் வரையில் ஏன் காத்திருக்கக்கூடாது? இதற்கு முன் செய்ததுபோல் இதையும் அவஸர அவஸரமாக நிறைவேற்றிவிட முயற்சிப்பது நியாயமா? காங்கிரஸ் நிர்வாஹம் ஏற்பட்ட நாள் முதல் இந்த அவஸரக்கோலம் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. ஒரு மசோதா வரப்போகிறதாக முதலில் அறிவிக்கப்படுகிறது. மறுநாளே அது கெஜட்டில் பிரசுரமாகி விடுகிறது. அடுத்த நாளில் சட்டஸபையில் நுழைந்து ஒரு நொடியில் பொறுக்குக் கமிட்டி நாடகமெல்லாம் முடிந்து உடனே சட்டமாகிவிடுகிறது. பொது ஜனங்களோ, சட்டஸபை மெம்பர்களோ, மசோதாவின் ஸாதக பாதகங்களை நிதானிக்கக்கூட அவகாசம் கொடுப்பதில்லை. இதைப்பற்றி சட்டஸபை மெம்பர்களும் வேறு ராஜதந்திரிகளும் அதிருப்தி வெளியிட்டும் கூட பிரதம மந்திரி இந்த அவஸரக்கோலத்தை தமது ஸர்க்காரின் பெருமையாகப் பாவித்துக்கொண்டுவிட்டார். எப்படியும் இந்த விற்பனை வரி மசோதா போன்ற விஷயத்தில் ஸர்க்காருக்குக் கூடப் போதிய அநுபவமும் ஞானமுமில்லையென்று ஒப்புக்கொண்டிருந்தும், இவ்வளவு அவஸரப்படுவது பெரிய குற்றமாகத் தோன்றுகிறது.

மேலும் பிரதம மந்திரி, இந்த வரியால் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பேசுகையில் வாதப்பிரதி வாதத்தோரணையில் கக்ஷி சொல்லுகிறாரேயல்லது உண்மையென்ன வென்பதைத் தெரிவிக்கவில்லை. எதிர் கக்ஷியாரின் வாதங்களை, அவர்கள் வார்த்தையைக் கொண்டே மடக்கி அடக்கியும், பிரித்தாளும் தந்திரத்தினும் ஸமயோசிதபதிலைக் கொடுத்து மெம்பர்களை உட்காரவைத்து விடுவதில் ஸாமர்த்தியம் காட்டுகிறார். இது தானா முக்யம்? வியாபாரிகள் வரியை ஆக்ஷேபித்தால் 'நீங்கள் தான் பண்டம் வாங்குவோருக்கே இதனால் கஷ்டம் என்று சொல்லுகிறீர்களே, ஆகையால் நீங்கள் ஏன் ஆக்ஷேபிக்கவேணும்" என்று அவர்களுக்கு ஸமாதானம் கூறிவிடுகிறார்கள். பண்டம் வாங்குவோர் ஆக்ஷேபித்தால் "வியாபாரிகளுக்கல்லவோ இந்த வரி போடுகிறோம், உங்களுக்கு ஒன்றுமில்லையே" என்று அவர்களை அடக்கிவிடுகிறார். இந்த மாதிரி நம் ஜனஸமூஹத்தில் வியாபாரிகளென்றும், பண்டம் வாங்குவோரென்றும் பிரித்துப்பேசி ஒருவர் கஷ்டத்தில் மற்றொருவருக்கு ஸம்பந்தமோ, அநுதாபமோ இருக்கவேண்டியது அவசியமில்லைப்போல் பேசுவது மிக வருந்தத்தக்கது. அதிலும் காங்கிரஸ் தத்வத்தைக் கடைபிடித்து நிற்கும் ராஜாஜி இப்படிப்பிரித்துப் பேசுவது வெகு அதிசயமானது. ஜனஸமூஹத்தில் எந்த காரணத்தைக் கொண்டும் அவன், இவன், என்று பிரிவினை செய்யக் கூடாதென்பது காங்கிரஸின் தீவிரக் கொள்கையல்லவா? ஜனங்களைப் பிரிவினை செய்யக் கூடிய ஜாதி, மதம், ஆசாரம் முதலியவைகளைக்கூட நாம் விட்டுவிட்டால்தான் ஜனஸமுதாயம் முழுவதும் ஒன்றே என்ற கொள்கையைப் பரப்பவேண்டுமென்றும் காங்கிரஸ்காரர்கள் நமக்கு உபதேசிக்கிறார்களே? இப்படியிருக்க ஜனஸமூஹத்தைத் துண்டித்து அந்தந்தப் பிரிவினரை மட்டும் ஸமாதானப் படுத்தியோ பயமுறுத்தியோ, மற்றொரு பிரிவினர் மீது தந்திரமாக தூண்டிவிட்டோ காரியம் செய்வது காங்கரஸ் கவர்ன்மெண்டுக்குப் பெருமையாகுமா? உண்மையில் பண்டம் விற்போர், வாங்குவோர், ஆகிய எல்லோருக்குமே இந்த வரியால் பாதகம் சேருமென்பதை விளக்கிக் காட்டியிருந்தும் கனம் பிரதமமந்திரி வாததோரணையில் பேசி வாயடக்குவது முற்றிலும் விரும்பத்தகாத தந்திரமாகும்.

## குறிப்புகள்.

### வரி கொடுக்கப் பணம் எங்கே ?

காங்கிரஸ் நிர்வாஹம் நடைபெறும் மாகாணங்கள் எல்லாவற்றிலும் பொதுஜனங்களுக்குப் பலவிதப் புதிய வரிகளை விதிக்க மந்திரிகள் முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பணம் வேண்டியிருப்பதுதான் காரணம். காங்கிரஸ் ஸர்க்கார் வரி விதிப்பதற்குப் பயப்படமாட்டார்களென்றும், ஜனங்களும் புதிய வரிகளைக் கொடுக்க முணுமுணுக்கக் கூடாதென்றும், அவைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டுமென்றும் கண்டிப்பாகக் கூறிவருகிறார்கள்.

ஏழைகளுக்கு இரங்கும் குணம் வாய்ந்த காந்திஜியும் இந்த வரி விதிப்புக் கொள்கையை வெகு தீவிரமாக ஆதரிக்கிறார். இதனால் பொதுஜனங்கள் ஏமாற்றமும் ஏக்கமும் பிடித்துத் திகைத்து நிற்கிறார்கள்.

ஸர்க்கார் வரிவிதிப்பதற்கு ஆதாரம் பணமே. வரி கொடுப்பவனுக்கும் பணமே ஆதாரம். ஆதலால் எல்லாவற்றிற்கும் ஆதாரமானது பணமே. பணமென்பது என்ன? அது எப்படிச் சொந்தமாகிறது; எப்படி மனிதனுக்கு மனிதன் அது கை மாறுகிறது, இத்யாதிகளான அர்த்த சாஸ்திரத்திற்கும் அகப்படாத பல நுட்பங்களை இச்சமயம் நாம் இங்கு விசாரிப்பதற்கில்லை. ஆயினும் பொதுவாகப் பணமென்பது எல்லாவற்றிற்கு ஆதாரமென்பதை ஆக்ஷேபிப்பாரில்லை.

கவர்ன்மெண்டார் வரி மூலமாக ஜனங்களிடமிருந்து பணத்தைப் பெற விரும்பினால், ஜனங்களிடம் பணமிருக்கிறதா வென்பதையும தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பணம் போக, வரி கொடுக்கவும் ஜனங்களிடம் பணமிருக்கிறதா வென்றும் கவனிக்க வேண்டியது தர்மமாகும். எதை ஆதாரமாக கொண்டு வரி விதிக்க சாஸ்திர மனுமதிக்கிறதோ அந்த ஆதாரமான பணம் இல்லாத போனால் வரிவிதிப்பானது அதர்மமாகிவிடும். ஆதலால் வரி விதிக்கப்பிரியப்படும் ஸர்க்கார் பல வழிகளிலும் ஜனங்களுடைய பண சக்தியைப்பெருக்கிக் கொடுக்கக்கட்டுப்பட்டிருக்கிறார்கள். அப்படி செய்து கொடுத்த பிறகு தான் அந்தப்பணத்திலிருந்து வரியாக வீதம் கேட்க உரிமை உண்டு.

இந்த நியாயம் நமது காங்கிரஸ் ஸர்க்காரின் ஞாபகத்தில் இருக்கக்கூடுமென்றே நினைக்கிறோம். ஆயினும் இது காரியத்தில் விபரீதமாகக் காணப்படுகிறது. நாம் கவனித்த வரையில் காங்கிரஸ் கொள்கையோ, செய்கையோ ஸர்வாதாரமான பண சக்தியை ஒடுக்கும் தன்மை வாய்ந்ததன்றே சொல்ல வேண்டியிருக்கிறது. பணம் அல்லது பணக்காரர்களைக் கண்டால் காங்கிரஸுக்கு வெறுப்பு இருக்கிறது. இதை நாம் இப்போது விவரிக்க வில்லை பொது ஜனங்களே இதை நன்கு அறிந்தவர்கள். ஒருவனிடம் எந்த வழியிலும் பணம் சேரவிடக்கூடாதென்று நினைப்பவர்கள் அவனிடமிருந்து ஸர்க்கார் வரிக்காக பணம் கேட்க மட்டும் என்ன நியாயம்? எப்படிக் கொடுக்க முடியும்? காரணத்தைக் கொன்று விட்டு, காரியம் மட்டும் உண்டாகவேண்டுமென்ற காங்கிரஸ் கொள்கையின் விநோதத்தை அர்த்த சாஸ்திர நிபுணரோ, அல்லது ஸாதாரண பாமரரோகூடப் பரிஹஸிப்பார்களன்றோ?



### ராஜ்கோட் தீர்ப்பு.

காந்திஜி வெற்றி

'ஸர்தார் படேலுடன் ராஜ்கோட் மன்னர் செய்துகொண்ட உடன்படிக்கையை அவர் மீறிய விஷயமாக ஸமஷ்டி கோர்ட் சீப் ஜஸ்டிஸ் ஸர் மாரிஸக்வயர் விசாரணை நடத்தி தீர்ப்புக்கூறினர். காந்திஜி-படேல் கக்ஷியை ஆதரித்து தீர்ப்புச்சொல்லப்பட்டது. சீர் திருத்தக் கமிட்டியில் படேல் குறிப்பிடும் ஏழுபேர்களை நியமிக்க தாகூர் ஸாஹிப் கட்டுப்பட்டிருப்பதாகவும 10 பேர்களான மெம்பர்களுக்குள்ளிருந்தே தலைவரைப் பொறுக்கி கொள்ளவேண்டுமென்றும் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது

### வால்மீகி ஜயந்தி.

திருச்சி ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய பரிஷதின் ஆதரவின்கீழ் சென்ற மார்ச்சுமீ 29 தேதி புதன்கிழமை ஸ்ரீ நாகநாதஸ்வாமி கோவிலில் ஸ்ரீமான் மீமாம்ஸா பூஷணம் A. V. கோபாலாச்சாரியார் அவர்கள் தலைமையின் கீழ் வால்மீகி ஜயந்தி கொண்டாடப்பட்டது. அச்சமயம் திருச்சி தேசியக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ P. S. கணேச சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீராம நாம ப்ரபாவம் என்பதுபற்றி ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு வியாஸம் படித்தார். அதன் ஸாராம்சம் பிறகு வெளிவரும். ஒரு நிருபர்.

### கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல்.

கனம் கல்வி மந்திரி விஜயம்.

(நமது விசேஷநிருபர்)
கும்பகோணம் ஏப்ரல் 5உ

கும்பகோணத்திற்கு சென்னை கல்விமந்திரி கனம் சி. ஜே. வார்க்கி நேற்று மத்யானம் 3-35 மணிக்கு வந்து சேர்ந்தார். சப் கலெக்டர் ஸ்ரீமான் சிங்காரவேலுமுதலியார், கல்லூரி தலைவர் ஸ்ரீமான் கணபதிஐயர், டவுன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் என், ரெங்கஸாமிஐயர், பழய மாணவர்கள் சங்ககார்யதரி ஸ்ரீமான் கண்ணன் அய்யங்கார், தலைவர் ஆர், சுவாமிநாதய்யர் முதலியவர்கள் ரயிலடியில் வரவேற்றனர். கனம் மந்திரி ஸ்ரீமான் பந்துலு ஐயர் இலவச வாசகசாலைக்குச் சென்று முனிசிபாலிடியில் சேர்மன் ஸ்ரீமான் தியாகராஜன் படித்துக் கொடுத்த ஓர் வரவேற்ற பத்திரத்திற்கு பதில் கூறினார். முனிசிபாலிடியார் முதன் முதலாக கட்டாய இலவசக் கல்வியை ஏற்படுத்தி நடத்தி வருவதைப் பாராட்டி பேசினார். பத்திரத்தில் குறிப்பிட்ட பணமாறுதல்கள் சில இனங்களில் செய்வது பற்றி கவனிப்பதாகவும், தன் அநுதாபமுள்ள கவனம் விசேஷமாய் இருப்பதாயும் தெரிவித்தார். இந்த வைபவம் முடிந்ததும் கனம் மந்திரி டவுன் ஹைஸ்கூல் 75வது வருட கொண்டாட்டத்தில் தலைமை வகிக்கச் சென்றார். அவருக்கு பிரபலமானவரவேற்பளிக்கப்பட்டது. இவ் வைபவத்திற்கு வரமுடியாதவர்கள் எழுதிய கடிதங்களை கார்யதரிசி ஸ்ரீமான் கண்ணன் அய்யங்கார் படித்தார். பின்னர் ஸ்ரீமான் ஆர். சாமிநாதய்யர் நல்வரவு கூறினார். ஸ்ரீமான் என். ரெங்கஸ்வாமி ஐயர், (ஹெட்மாஸ்டர்) ஸ்கூலின் ஆரம்பம் முதல் இன்று வரை நடந்துவரும் சரித்திரத்தை படித்தார். பிறகு, மாணவர்களுக்கு பரிசுகளை கனம் மந்திரி வழங்கினார்.

கனம் மந்திரி தனக்குச் செய்த உபசாரத்திற்கு வந்தனம்கூறி மிகவும் உன்னத ஸ்திதியில் இக்கல்வி ஸ்தாபனம் நடந்து வருவதைக் காண மனப்பூர்வமாய் சந்தோஷிப்பதாயும் அதன் சிறந்த நிலையில் தேசத்தின் வழி காட்டியாக, இருளை நீக்கும் பிரகாசமாக உள்ள மகாத்மாஜீயின் படத்தை திறந்து வைக்கிறதற்கும் தனக்கு சந்தர்ப்பம் வாய்த்தமைக்கு பெரிதும் மகிழ்வதாயும் கூறி மகாத்மாஜி படத்தை திறந்து வைத்தார். டவுன் ஹைஸ்கூல் நிர்வாகத்தை திறமையாகச் செய்து வருவதை பாராட்ட இது போன்ற ஸ்தாபனங்கள் கேவலம் உத்தியோகத் திற்காகவே ஏற்பட்டதாயிருக்கும் நிலை மாறி பயன் படும் படிக்கு வார்தா திட்டம் போன்றவைகளை கையாள முற்பட வேண்டும் என்றும், எல்லாவற்றிற்கும் பணம் தேவை என்றும் ஒரு புறத்தில் அனீதமான வரிகளைப்போக்கிவிட்டால்— அந்த வருமானத்தை வேறு வழிகளில் பெற தடை செய்வதாகாதென்றும், நாட்டின் நலனை நன்கு பரிசீலனை செய்தே இப்பொழுதுள்ள சர்க்கார் தக்கபடி காரியங்களைச் செய்கின்றனர் என்றும், பிள்ளைகளின் பெற்றோர்கள் ஒத்துழைப்பும், உதவியும் இருந்தால்தான் வார்தாதிட்டம்போன்ற உயர்ந்த நோக்கமுள்ள கல்வி தேசத்தில் ஏற்பட ஸௌகர்யமாகும் என்றும், விற்பனை வரி போன்றவைகளால், மதுவிலக்கு செய்வதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யலாகும் என்றும், ஹிந்தியை டவுன் ஹைஸ்கூலில் நடத்தி அதன் உயர்ந்த லக்ஷியம் கைகூடப் பிரயத்தனம் செய்யப்படுவதைப் பாராட்டுவதாயும் இனி 3 பாரங்களைத் தவிர, 4, 5, 6 பாரங்களிலும் ஹிந்திபாடங்களை ஏற்படுத்தப் போகிறதாயும், தேகப்பயிற்சியை ஸ்கூலில் பெண்களுக்குள்பட கற்பிப்பது மிகவும் சந்தோஷிக்கக் கூடியதென்றும், இந்த 75 வது வருடப் பூர்த்தியில் ஸ்கூல் நிர்வாகஸ்தர்களை மனப்பூர்வகமாய் பாராட்டுவதாயும் சொன்னார்.

ஸ்ரீமான்கள் ஆர். நீலமேகாசாரியார், ராமசந்திர அய்யர், ஆர். முத்துசாமி அய்யர் சம்பிருதாய வந்தனோபசாரங்களை கூறினார்.

டவுன் ஹைஸ்கூல் நிர்வாக கமிட்டியின் சார்பாக ஸ்ரீமான் எ, சுப்பிரமணிய அய்யர் வந்தனோபசாரம் கூறினார். வைபவம் இரவு 8 மணிக்கு முடிந்தது

### கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்.

(நமது விசேஷ நிருபர்.)
கும்பகோணம், ஏப். 5

நேற்று முன் தினம் ஹை ஸ்கூல் நிர்வாக கமிட்டி கூட்டம் கூடியது. கமிட்டியில் இரண்டு ஸ்தானங்களுக்கு ஸ்ரீமான்கள் ஆர். நீலமேகாசாரியார் (கௌரவமாஜிஸ்டிரேட்டு கோர்ட்டு தலைவர்), சேர்மென் டாக்டர் எம். வி. தியாகராஜனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

### ஸ்ரீகேதார ஈஸ்வரர் சைவ பரிபாலன சங்கம் திரிசிரபுரம்:

நிகழும் வெகுதான்ய ஆண்டு பங்குனித் திங்கள் 25, 26, 27உக்கு (7, 8, 9-4-39)-ம் நாட்களில் சின்னக்கடைத்தெரு ஆரியன்

## வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

மதராஸ்.

ஷை சங்கத்தின் காரியக் கமிட்டி மீட்டிங் மதராஸில் 1939ஞு மார்ச்மீ 15உ நடந்த போது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

சபையின் நிர்வாக கமிட்டி மெம்பராக இருந்தT. S. நடேசய்யரின் மரணத்திற்கு வருந்துகிறது. அவருடைய குடும்பத்திற்கு தன் அனுதாபத்தை தெரிவிக்கிறது.

1939ஞு ஜன்வரிமீ 8உ காரிய கமிட்டியில் தீர்மானம் செய்யப் பட்ட, மாகாண கமிட்டி மீட்டிங் காமாக்ஷி அம்மன் கும்பாபிஷேகத்தின் போது காஞ்சீபுரத்தில் நடைபெறும். அதன் தேதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியரின் காரியதரிசியால் குறிப்பிடப்படும்,

சாரதா சட்டத்தை நீக்க எவ்வளவு பலமான எதிர்ப்பு இருந்த போதிலும், கவர்மெண்டார் ஒரு விதமான பொறுப்பும் அதை அகற்ற எடுத்துக் கொள்ளாமலும் அது நீக்கப்படாமல் இருப்பதோடில்லாமல் மேற்கொண்டு ஸநாதர்மத்தை பாதுகாக்க முடியாதபடியும் தர்மத்திற்கு ரொம்பவும் இடையூறாகவுமுள்ள பல புதிய திருத்தங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தர்மத்தை பாதுகாக்கவும் அச்சட்டத்தை எதிர்க்கவும் முயற்சி எடுத்துக் கொள்ள ஸநாதனிகளை நம்புவதே மேலாகும். மேலும் தலைவர்களையும் ஸநாதன பொது ஜனங்களையும் ப்ரஸித்தமாய் சாஸ்த்ரத்தில் விதித்துள்ளபடி கல்யாணங்கள் நடத்த வேண்டிக் கொள்ளுகிறது.

ஷை தீர்மானத்தை தன் பொறுப்பில் நிறை வேற்ற தீர்மானத்துள்ள கீழ் கண்ட கனவான்களுக்கு சபை தன் ஸந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. கான்பரன்ஸில் இதையே ஓர் பொது இயக்கமாக நடத்துவதைப் பற்றி யோஜிக்கப்படும்.

1 M. R. Ry. ராவ்சாஹிப் N நடேசய்யர், அவர்கள் பிரஸிடெண்டு, ஷை சங்கம்
(2) T S ராமசாமிய்யர் செகரிடரி ஷை சங்கம். (3) B S நாகராஜய்யர் செகரிடரிஷை சங்கம் தியாகராய நகர் (4) P N நாராயண சாஸ்திரி உதவி காரியதரிசி, ஹிந்து சென்ட்ரல் கமிட்டி, செங்கல்பட்டு.

13-3-39 K A சங்கர நாராயணய்யர் எழுதிய கடிதம் வாசிக்கப் பட்டது. கேரள சநாதனதர்ம கான்பரஸ் குருவாயூரில் பிரசார வேலை எடுத்துக் கொண்டதைப் பற்றி தன் வந்தனத்தை தெரிவிக்கிறது.

இச்சபை மகா-ராஸ்ரீ ராவ்சாகிப் N. நடேசய்யர், திவான்பஹதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜதாஸ் சேத் புருஷோத்தம தாஸ் கோகுலதாஸ் கே குப்புசாமிய்யர் இவர்கள் பொன்னனி தாலுகாவில் பிரசார வேலை நடத்த முதல் இரண்டு மாதத்திற்கு தலைக்கு ரூ 20 கொடுத்து ஒத்தாசை செய்ய முன்வந்தது பற்றி தன் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. இந்த அறிக்கையை ஓர் அகில இந்திய அறிக்கையாக பாவித்து பொது ஜனங்கள் தங்களாலான உதவியை இச்சபைக்கு அளிக்கும்படி பிரார்த்திக்கிறது.

T. S. ராமசாமி அய்யர்.
காரியதரிசி.

கலாசாலை இலக்ஷுமி மண்டபத்தில் ஷை சங்கத்தின் 4-ம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும்.

அதுபோது சேலம் ஜில்லா ஜலகண்டபுரம் உயர்திருவாளர் ஆசிரியர் அ. வரதஞ்சய பிள்ளை அவர்கள் போவைத்தலைமைதாங்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

## தண்டனை ஊர்ஜிதம்.

ஈ. வெ. ராமஸாமி நாயக்கர் மீது, ஹிந்தி எதிர்ப்புக்காக மறியல் செய்யும்படி தூண்டிய குற்றம்சாட்டி கீழ் கோர்ட்டில் விதிக்கப்பட்டிருந்த ஒருவருஷக் கடுங்காவல் தண்டனையானது சென்னை ஹை கோர்ட்டிலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

## கொச்சியில் கடன் நிவாரணம்.

சென்னை மாகாணத்தில் செய்யப்பட்டிருப்பதைப்போல் வட்டிக்குறைவு மூலம் வியவஸாயிகளுக்குக் கடன் நிவாரணம் செய்துகொடுக்க கொச்சி ஸமஸ்தானத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## வியாபார ஒப்பந்த மசோதா நிராகரிக்கப்பட்டது.

இந்தியாவுக்கும் - பிரிட்டனும் வியாபார விஷயமாக ஒரு புதிய ஒப்பந்தம் ஸமீபத்தில் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்த மசோதாவை அங்கீகரிக்குமாறு இந்திய சட்ட ஸபையில் கொண்டுவரப்பட்டிருந்த பிரேரணையை சட்டஸபை பெரும்பாலான வோட்டால் நிராகரித்துவிட்டது.

## அந்நிய தேசத்தினர் பதிவு மசோதா.

சட்டமாயிற்று.

இந்தியாவில் அந்நிய தேசத்தினர் குடியேறுவது ஸம்பந்தமாகவும், அவர்களைப் பதிவு செய்வது ஸம்பந்தமாகவும் இந்திய சட்டஸபையில் ஸர்க்காரால் கொண்டுவரப்பட்டிருந்த மசோதா நிறைவேறிவிட்டது.

## டாக்டர் காரேயின் கோபம்.

நேருவுக்கு நோட்டீஸ்.

மத்யமாகாண மாஜி பிரதம மந்திரியாயிருந்த டாக்டர் காரே என்பவர், தம்மைப் பற்றி ஸ்ரீமான் நேரு ஒரு பத்திரிகையில் அவதூறுகச் சில விஷயங்களை எழுதியிருப்பதாயும், அவைகளை வாபஸ் பெற்று மன்னிப்பு கேட்டுக்கொள்ளும்படியும், இல்லை நியாயஸ்தலத்தில் பிராது தொடரப்படுமென்றும் நேருவுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

## ஓம் மண்டலி ஸத்யாக்ரஹம்.

காராச்சியில் ஓம் மண்டலிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஸத்யாக்ரஹம் பலமாக நடந்தது. சில காரணங்களால் இப்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிளர்ச்சியானது மந்திரிகளின் ராஜீநாமா மூலம் சட்டஸபையிலும், வெளியிலும் பிரபலமாகி ராஜ்ய நெருக்கடியை உண்டுபண்ணிவிட்டது. மந்திரிகளின்மீது நம்பிக்கையில்லா பிரேரணையும் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. இது விஷயமாக சீக்கிரத்தில் ஸமாதானம் ஏற்படக்கூடும்.

## ஸ்பெயின் சரணகதி.

குடியரசு தோலைந்தது.

ஸ்பெயினில் நடந்துவந்த உள்நாட்டுச் சண்டையில் ஜனரல் பிராங்கோ பூர்ண வெற்றியடைந்து தலைநகரையே மாட்ரிட்டைப் பிடித்துக்கொண்டுவிட்டார். குடியரசுக் கக்ஷியார் ஓடிவிட்டனர். தேசம் முழுவதும் பிராங்கோ வசமாகிவிட்டது. இனி அங்கு ஸர்வாதிகாரி ஆக்ஷி நடைபெறும்.

## ஆந்திரமாகாணப் பிரிவினை.

இந்தியா மந்திரி தடை.

ஆந்திர தேசத்தைத் தனி மாகாணமாக ஆக்கிவிடவேண்டுமென்று சட்டஸபை தீர்மானித்ததையும் அதை ஆமோதித்து சென்னை ஸர்க்கார் செய்த சிபார்சையும் இந்திய மந்திரி அங்கீகரிக்க மறுத்துவிட்டார். மறுபடியும் இவ்விஷயமாக பேச்சுவார்த்தை நடப்பதாகத் தெரிகிறது.

## காங்கிரஸின் போக்கு.

ஹிந்து ஸபை கண்டனம்.

பிஹார் மாகாண ஹிந்து மஹாஸபைக் கூட்டத்தில் ஹிந்து-முஸ்லீம் ராஜி விஷயமாக காங்கிரஸ் செய்துவரும் பயங்கொள்ளித்தனமான முயற்சியைப் பலர் பலமாகக் கண்டித்தார்கள். முஸ்லீம்களை ஸமாதானப்படுத்த ஏராளமான பணத்தை காங்கிரஸ் வீணக்குவதாயும் ஜனநாயகத்தின் பெயரால் காங்கிரஸ் வஞ்சனை செய்வதாயும், காந்திஜியின் ஸமாஸப்போக்கால் பலன் ஏற்படாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## லக்ஷ்மணபுரி கூட்டத்தில் கலஹம்.

ஐக்யமாகாண ஸர்க்காரின் வரிவிதிப்புக் கொள்கையைக் கண்டிப்பதற்காக லக்ஷ்மணபுரியில் டாக்டர் ஸாப்ருவின் தலைமையில் காங்கிரஸ் காரல்லாதார்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டம் ஆரம்பித்ததும், அங்கு இருந்த காங்கிரஸ்காரர் சிலர் வெளியே போய்விட வேண்டுமென்று பிதவாதிகள் வற்புறுத்தினர். இதன் பயனாகப் பெரிய சச்சரவும் ஏற்பட்டு நாற்காலிகளும், கண்ணாடிகளும் வீசப்பட்டன. பலருக்குக் காயம் ஏற்பட்டது. ஐரோப்பியர் ஒருவர் காங்கிரஸ்காரர்களை அடித்ததாகக் கூறப்படுகிறது, கலஹத்தால் கூட்டம் நடைபெறுமல் கலைந்தது.

## பம்பாயில் மதுவிலக்கு.

பார்ஸிகளின் எதிர்ப்பு.

பம்பாய் நகர பிரதேசத்தில் மதுவிலக்குச் செய்யப் போவதை முன்னிட்டு பலமாக பிரசாரம் ஆரம்பமாகியிருக்கிறது. மதுவிலக்கானது பார்ஸி ஸமூஹத்தின் பொருளாதார நிலைமைக்கும், மதநம்பிக்கைக்கும் விரோதமாயிருப்பதால் அவர்கள் பலமாக எதிர்க்கிறார்கள். ஸத்யாக்ரஹமும் செய்யப் போவதாகக் கூறுகிறார்கள்.

(2-பக்கம் தொடர்ச்சி).

பி:—வாஸ்தவம்.

ம.—ஆகையால், உங்களைத்தவிர இதர மதஸ்தர்கள் எல்லாரும் பரவஸ்து ஒன்றே என்கிறார்கள், நீங்கள்மாத்திரம் தான் ஸகுணம் நிர்க்குணம் என்று இரண்டு பிரஹ்மம் உண்டென்று சொல்கிறீர்கள். நன்கு கவனிக்கும் போது, எல்லா ஸித்தாந்தங்களுமே அத்வைதம் என்ற பெயரை வஹிக்க லாயக்குள்ளவைகளாக இருக்கின்றன வென்றும், பரவஸ்து விஷயமாக அநேகத்வம் சொல்லும் காரணத்தினால் அத்வைதம் என்ற பெயருக்கு பொருந்தாமல் ஒரு ஸித்தாந்த மிருக்குமேயானால் அது உங்கள் மதம் தான் என்றும், அல்லவா ஏற்படுகிறது? இவ்விதமாக, அத்வைத மதம் என்று சொல்லப்படும் ஸித்தாந்தம் அப்பெயரைத் தனக்கு மாத்திரம் வைத்துக் கொள்ள பாத்யமுடையதில்லை என்றதுடன் இராமல், அந்தப் பெயரை வைத்துக் கொள்ளவே நியாயமில்லை யென்றும் தெரிகிறது. இப்படியிருக்க, அத்வைதம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்.

பி:-இதற்கும் தாங்கள் தான் ஸமாதானம் சொல்ல வேண்டும்.

ம:—அப்படியல்ல. நீங்களே ஸுலபமாகச் சொல்லலாம்.

பி:—எப்படி?

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக் டி.டி பிஸ்கட் பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
நிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22 20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.
விலை ரூ. 1—14—0. பவுன்டு.



# வெளியூர்ச்செய்திகள்.

## திப்பிராஜபுரம்.

பிரம்ம வித்யா ஸபா:— 18-3-39வ சனிகிழமை தினம், ப்ரும்மஸ்ரீ உள்ளூர் நாராயண ச்ரௌதிகளவர்கள் ஸ்ரீபகவத் கீதையின் மகிமையைப் பற்றிச்சொல்லி அது எப்படி சகல உபநிஷதர்த்தத்தை லகுவாகவும் சுருக்கமாகவும் தெரிவிக்கிற தென்றும், கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்கிற கர்மாக்கள் மோக்ஷயிச்சுவுக்கு அதிகாரபேதேன கல்பிக்கப்பட்டிருக்கிற தென்றும், பலத்தில் இச்சையில்லாமல் கர்மாக்களை செய்தே தீரவேண்டும் என்றும் சொல்லி முதல் அத்யாயத்தில் சில ச்லோகங்களுக்கு அர்த்தாந்தரங்களோடு சொன்னர்— பிறகு ப்ரும்மஸ்ரீ கொட்டாரம் ராமசுப்பிரமணிய சர்மா அவர்கள் சுமார் 1மணி நேரத்துக்கு மேல் மேற்படி ஸ்ரீ பகவத்கீதா மஹிமையைப்பற்றி அதிக கோட்பாடுகளுடன் ஷை கீதாவின் முதலாவது ஸ்லோகங்களுக்கு அநேக வ்யாக்யான கர்த்தாக்களுடைய வெவ்வேறு விதமான அழகான அபிப்ராயங்களுடைய சாரத்தை ரொம்ப நன்றாகவும், தெளிவாகவும், சொல்லி முடித்தார்.

25—3—39வ சனிக்கிழமையன்று திருவிசநல்லூர் பிரும்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளவர்கள் ஸகுண பக்தியைப் பற்றி வெகுவாக ஸ்ரீமத் பாகவதத்திலிருந்தும், ஸ்ரீமத் பகவத்கீதையிலிருந்தும், ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்தும் அநேக திருஷ்டாந்தங்களைச் சொல்லி, பக்தியில்லாத எந்த கர்மாவும், யோகமும் வியர்த்தம் என்றும், திருவிசநல்லூர் ஸ்ரீ அய்யாவாளுடைய சரித்திர பெருமையும், அவர்கள் செய்திருக்கிற சில ச்லோகங்களை எடுத்துச்சொல்லியும் வெகு அழகாக உபன்யஸித்தார்.

1—4—39வ சனிக்கிழமை தினம், உள்ளூர் பிரம்மஸ்ரீ நாராயணஸ்வாமி ச்ரௌதிகள், பரம உத்ஸாஹத்துடனும், காம்பீர்யத்துடனும் க்ஷேத்ராப்பணேச்வாருடைய (கண்ணப்ப நாயனார்) சரித்திரத்தை உத்கோஷித்தார். அன்று சனி ப்ரதோஷம் ஆனபடியால் சிவபக்த சரித்திரத்தை சொன்னதும், ஸதஸ்யர்கள் அதைக் கேட்கும்படியானவும் பாக்கியமேற்பட்டது.

## காலடி.

ஸ்ரீ சங்கரஜயந்தி உற்சவம்.

வழக்கம்போல் இவ்வருஷமும் ஸ்ரீ ஆதி சங்கராசார்யார் அவதரித்த காலடியில் ஏப்ரல்மீ 20வ குருவாரம் முதல் 24வ திங்கள் கிழமை வரை ஸ்ரீ ஆசார்யாள் மடத்தில் நடைபெறும். அவ்வமயம் வித்வத் பரிஷத்தும் வாக்யாத்தங்களும் பல பெரிய பண்டிதர்களால் நடைபெறும். எல்லோரும் வந்திருந்து உற்சவத்தை விமர்சையாய் நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

K. P. மஹாதேவ அய்யர்.

முக்கிய கவனிப்பு
3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.
அசல் தங்கநகைகளைப்போன்ற 'கன்னுஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்'' நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர் :—என். கன்னுசாமி பத்தர்
பெரிய தெரு, கும்பகோணம்.

## மன்னார்குடி.

விடாயாற்று உத்ஸவம்

ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிக்கு வழக்கம் போல் விடாயாற்று உற்சவம் கும்பகோணம் மிராசுதார்கள் ஸ்ரீ K. R. ரகுநாதராவ் சகோதார்களால் இவ்வருஷமும் 31-3-39 தினம் ராஹரி ருயர் தோட்டத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. மாலையில் திருமஞ்சனமும் அலங்காரமும் செய்யப்பட்டு சுமார் ரூ 500 செலவில் ஸ்ரீமான்கள் ருயர்களால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட மண்டபத்தில் ஸ்வாமியை எளச்செய்து எலெக்டிரிக் தீபாலங்காரங்களிடையே ஸேவை ஸாதித்தது கண்களைக் கவரத்தக்கதாயிருந்தது. இரவில் 7மணிக்கு கும்பகோணம் லலிதகலாவல்லப ஸ்ரீமான் வாதிராஜருவ் பாகவதர் B., A. அவர்களுடைய ஹரிகதையும் அச் சந்தர்ப்பத்தில் ஏற்படத்தக்கதாயும் பொருத்தமாயும் இருந்தது ஹரிகதையோ ஸ்ரீ ராஜகோபாலனின் லீலைகளை விளக்கும்படியான சுபத்ரா கல்யாணம். சபையோ பரம ரஸிகர்களான மன்னார்குடி டிட்டி கலெக்டர் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர், கும்பகோணம் ஸ்ரீமான் ஏ. சுப்பிரமணிய ஐயர், வித்வான் ஆங்கரை ரங்கசாமி சாஸ்திரிகள், வாலஸ் ஸகாராமாரவ், இன்னும் பல பிரபல உத்யோகஸ்தர்களாலும் நிறைந்திருந்தது.

பின் பாடகர்களும் மிருதங்கம் நடேச அய்யரும் நல்ல மேளக் கட்டுடனும் தத்தம் திறமையைக் காண்பித்தனர். பாகவதரும் இடையிடையே ஹாஸ்யரஸம் முதலிய நவரஸங்களுடனும் பொருந்திய வாக் திறத்தாலும் கூடியிருந்த அனைவரையும் மகிழ்வித்தார் ஒவ்வொன்றும் யாதொரு குறைவுமில்லாமல் நன்கு அமைந்திருந்தது. எல்லோருடைய பாக்யமேயாகும். முடிவில் ஸ்ரீமான் ருயர்களும் ராஜகோபாலதீக்ஷிதரும் பாகவதருக்கு ஸ்ரீ ராஜகோபாலனின் திருவருளால் மேன்மேலும் சகல வித சிரேயஸ்களும் உண்டாக வேண்டும் என்று பிரார்த்தித்து அர்ச்சனை செய்வித்துத் தகுந்தபடி ஸன்மான மளிக்கப்பட்டது.

M. ராமாரவ்.

## திருவாரூர்.

வேத பாராயணம்.

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி பிரும்மோத்ஸவம் பங்குனி மாஸத்தில் நடந்தேறியதில் பிரும்மஸ்ரீ சித்தமல்லி ஆர். சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் பிரதி வருஷம் போல் இவ்வருஷமும் பிராம்மண சந்தர்ப்பண வேத பாராயணமும் வெகு விமர்சையாய் நடந்தேறியது.

ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாளின் கிருபாகடாக்ஷத்தை முன்னிட்டும், ஸ்ரீதியாகராஜஸ்வாமியின் அனுக்ரஹத்தாலும் அநேகம் ஸநாதனிகளின் உதவியைக்கொண்டும் வேதப்பிரதிபாத்யர்களின் க்ஷேமாபிவிருத்தியின் பொருட்டும் இப்பெரும் கார்யத்தை மிகுந்த சிலவிலும் விசேஷ பரிச்ரமத்தோடும் இவ்வருஷமும் நடத்திய ஷை சாஸ்திரிகளும் நிகில புருஷார்த்தங்களை அடைய வேணுமாயும் ஷை கைங்கர்யம் மேன்மேலும் அபிவிருத்தியடைய வேணுமாயும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியை பிரார்த்திக்கின்றோம்.

ஸநாதன மகாஜனங்கள்.

# வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

பயனுண்டா? முழுச் சீர்திருத்தக்காரரான நேருவைக் கண்டு பல வைதிக பண்டிதர்கள் தேசிய ஸபை மதத்தில் தலையிடாவண்ணம் வேண்டிக்கொள்ளச் சென்றனர். இவர் போன்ற பிடிவாதக்காரர் குணமறிந்திருந்தும் தன்மதிப்பை விட்டு ஏனிவர்களைப் பார்க்கவேண்டும்?

கற்பைக் கனவிலும் மதியார்!! பஞ்சாப் சட்டஸபை. ஆண்மக்கள் இரு மனைவிகளை மணக்காவண்ணம் ஓர் சட்டம் செய்கிறது. மிகப்ரஸித்த வியபிசாரியாயிருந்தால் கூட அவளை விலக்கி ஜீவனாம்சம் தரவேண்டுமென்கிறது. அப்பிரஸித்த வியபிசாரி பத்நியைத் தள்ளக்கூடாதோ? என்னே தேசீயம்?

நமது மதக்கல்வி வேண்டாமோ? திருச்செந்தூர் தேசிய ஸபை ஒவ்வோர் கலாசாலையிலும் மகம்மதிய மதத்தை போதிக்க ஓர் ஆசிரியரை நியமிக்க ஜில்லா போர்டுகளை வேண்டுகிறது. நமது மதத்தை மதியாததுடன் எவ்வளவு விட்டுக்கொடுத்தாலும் முரட்டுத்தனம் செய்வோருக்கு எவ்வளவு தியாகம் செய்வதென்பதை நமது மேதாவிகள் உணரவில்லை!

என்ன யுக்தி! சென்னை கேரள ஸபையில் ஓர் மந்திரி குருவாயூரை பஞ்சமருக்கு திறந்துவிட்டால் எல்லாக் கோவில்களும் தானே திறக்கப்படுமென்றார். எப்படி என விளக்கமுடியவில்லை. கண்ணனைப் பூஜித்தால் எல்லாத் தேவர்களையுமர்ச்சித்ததாகுமென்ற ஸித்தாந்தத்தைப்போல எண்ணி பேசுகிறாரா? ஆனால் அதில் நம்பிக்கை உண்டோ? இருந்தால் இதை பேசுவாரா?

மிக நீச உபமை! முதல் மந்திரி பேச்சில் உபமையில் மிக வல்லவர் என சில பத்ரிகை பல்லாண்டு பாடுவது பழக்கம். அவர் காங்கிரஸை ஓர் பலமுள்ள கழுதை என ஓரிடத்தே கூறிய உபமையை ஸரஸகவிகள் ஏற்கார். க்ஷேமேந்த்ரன்போன்ற கவிகளின் சொற்களைப் படிப்பாரா?

பத்ரிகை படிக்கும் கீரி:—கல்கத்தாவில் ஓர் வீட்டில் வளரும் கீரி ப்ரதிதினம் பத்ரிகை வந்தவுடன் ஆஹ்லாதத்துடன் தன் வாயைத் திறவாமல் படிக்கிறதாம்!! அது உண்மையாயின் பத்ரிகை பித்துக்கொண்ட ஜீவன் நீச பிறவி எடுத்தும் பலமான பூர்வ வாஸனையை விடவில்லை என்பாம்!!

சிறந்த உபன்யாஸம்!! திருவாமாத்தூர் வேதபாராயண ஸபை வேண்டுகோளுக்கிணங்கி திருவண்ணாமலை பத்ரிகை ஏஜண்ட் பிரும்மஸ்ரீ வாமதேவ சாஸ்திரிகள் ஓர் மணி மிக அழகாக தேசிய மணம் கமழ, வைத்ய வாஸனை வீச, ஆஸ்திகதை ததும்ப ரஸமாக உபன்யாஸம் செய்தார்.

வேதமே கதி! திருப்பாபுலியூர் மணி தீக்ஷிதர் போன்ற பல கனபாடிகள் வேண்ட ஸ்ரீ. வே. ஸோமதேவ சர்மா தற்காலத்தில் வைதிகதர்மத்திற்கு வந்த தீங்கையும் அதை அகற்ற வேதபாராயணமே வழி என பல யுக்திகளைக்கொண்டு பேசி, முடிவில் ஆலய ப்ரவேச மசோதாவை கண்டித்தோர் தீர்மானம் செய்தார். பலவகை ப்ரதிபந்தகங்களுக்கிடையே சொந்த செலவு செய்து அடிக்கடி சென்னையிலிருந்து நேரில் வந்து வேதபாராயணம் நடத்தியதற்காக சர்மாவை ஆசீர்வதித்தனர்.

# கும்பகோணம் வர்த்தமானம்.

[நமதுவிசேஷ நிருபர்]

## "லேட்பீ" தபால்களை போட வசதி.

கும்பகோணம் ஏப் 5உ

சப் போஸ்டாபீஸ் வைக்க பணம்இல்லை. சென்ற டிஸம்பர் மாதத்தில் பொது ஜனங்கள் ஒரு மகஜரை சென்னை போஸ்டுமாஸ்டர் ஜனரலுக்கு அனுப்பி யிருந்தார்கள். அதில் ரயிலடித்தபால் பெட்டியில் லேட்டுபீ தபால்களை போட்மெயில் வரும் முன்பு க்ளியர் செய்து விட வேண்டிய வசதி செய்யவும் ஒரு சப் போஸ்டாபீசை மடத்துத் தெருவில் வைக்கச் செய்யவும், தபால் போடும் பெட்டிகளில் மணியைக் குறிப்பிட்டு சுத்தமாக வைக்கும் படியும், லேட்பீக்கு அரையணு ஒட்ட உத்திரவு செய்யவும் கேட்டுக்கொண்டார்கள். போஸ்டுமாஸ்டர் ஜனரல் லேட்பீ தபால்களை ரயிலடி தபால் பெட்டியில் எடுக்கும் படி உத்திரவிட்டிருப்பதாயும், தபால் பெட்டிகளில் கிளியரன்ஸ் செய்யும் மணி நேரம் குறிப்பிடச்செய்துவிட்டதாயும், ஆனல் மடத்தெருவில், பண நெருக்கடி காரணத்தால் சப் போஸ்டாபிஸை வைக்க முடியவில்லை என்றும், லேட்பீயை அரையணுவாக்க போஸ்டல் சட்டம் 13ன் படி செய்யவேணும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

நான்கு வருஷக்கேட்டதற்கு இரண்டு வான்களில் பொது ஜன சவுகரியம் செய்யப்பட்டிருப்பதை யாவரும் பாராட்டுவார்கள். வியாபாரிகளும், உத்யோகஸ்தர்களும் நிறைந்த நகரில் லேட்பீ தபாலை ரயில்வே பிளாட்பாரத்திற்குள் போக முடியாமல் பல வருடமாய் பட்ட கஷ்டத்தை போஸ்ட்மாஸ்டர் ஜனரல் நிவர்த்தி செய்திருப்பதற்கு நகரவாசிகள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதர கோரிக்கைகளையும் அவர்கள் புனர் ஆலோசனை செய்வார்களாக.

புது டபீர் தெருவில் தீ. புது டபீர் தெரு கிழக்கோடியில் புத்தக வியாபாரம் வி. எஸ். வெங்கடாரமன் வீட்டின் கீழ் புறம் இரண்டு வீடு கூரை கேற்று தீக்கிறையாயிற்று. சம்பவம் நடந்த இடத்தில் ஜனங்கள் கஷ்டப்பட்டு தீயை பாவாமல் அணைத்தார்கள். முனிசிபல் அதிகாரிகளாவது, போலீஸாராவது விபத்து நடந்த இடத்தில் காணவில்லை. ரூ 6000த்தில் தீயை அணைக்க தண்ணீர் இஞ்சினை வாங்க முனிசிபாலிடியார் முடிவு செய்திருக்கிறதால், இஞ்சின் வந்து விட்டால் அவர்கள் வருவார்கள் போலும்! கும்பகோணத்தில் இது வரை 5, 6 இடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. நிவர்த்திக்கு சீக்கிரமான ஏற்பாடுகள் செய்யவில்லை. வரி வசூலுக்கும் அமுலுக்கும் குறைவில்லை.

காங்கிரஸ் கூட்டத்தில் குழப்பம்:-காங்கிரஸ் கூட்டம் 31-3-39ல் ரயில்வே ஸ்டேஷனுக்கு போகும் ஹனுமார் கோவில் ரோட்டில் நடந்தது. இதே தினத்தில் ஜின்னு பார்க்கில் புகை இலை வரி மசோதாவைக் கண்டிக்க க. ம. கூட்டம் குறிப்பிட்டிருந்தது. இரண்டு தரப்பிலும் ஊர்வலங்கள் நடந்தது. ஊர்வலம் மோதிக்கொள்ளாமல் நடந்ததென்றாலும் காங்கிரஸ் ஊர்வலத்தில் இரண்டொரு கல்லுகள் போடப்பட்டது. புகை இலை வரி கண்டனக்கூட்டம் சீக்கிரம் முடிந்து காங்கிரஸ் கூட்டத்திற்கு அவர்கள் வந்திருந்தனர். கூட்டத்தில் வழக்கப்படி, காங்கிரஸ் முறைப்படி பேசப்பட்டதில் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் சாமிநாதன் செட்டி காங்கிரஸுக்கு விரோதிகள் கக்ஷியை குலாம் கோஷ்டி என்றும், அதிகார வர்க்கத்தின் தாஸர்களாக இருந்த காலம் ஜஸ்டிஸ் ராஜாங்கம் என்றும் சொன்ன மாத்திரத்தில் — இந்த அபசார மொழிகளைப் பொறுக்கமுடியவில்லை பெரியார் கோஷ்களுக்கு. உடனே அவர் கண்களுக்கு கல்கள் தான் புலப்பட்டது. சாமிநாத செட்டியை அவர்கள் வார்த்தைகளை வாபீஸ் வாங்க குழப்பம் செய்தனர். ஒரு மணி நேரம் பலமான குழப்பம்— சிலர் ஓடினர்கள் கல்லும், கரியும் பொழிந்தன. போலீஸ் அதிகாரிகள் அழைத்து வரப்பட்டனர். கலவரம் மாயமாயிற்று. கூட்டம் மறுபடி போலீஸ் பந்தோபஸ்துடன் நடந்தது. புண்பட்ட வார்த்தைகளால் இப்படி நேரிட்டதாக எதிர் கக்ஷி கூறுகிறது சாதாரணமாய் வழக்கப்படி காங்கிரஸ்காரர்கள் பேசினதாய் காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள் என்றாலும் அஹிம்ஸா வாதிகள் கூட்டம் போலீஸ் பந்தோபஸ்துடன் தான் பல மாதங்களாய் நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீ ராமநவமி உற்சவம்.

ஸ்ரீ ராமநவமிஉத்ஸவத்தை ஸ்ரீ ராமஸ்வாமி கோவில் டிரஸ்டிகள் ஸ்ரீமான்கள் ஆர். சி குருநாதபிள்ளை, எஸ். ராஜகோபால முதலியார், ஆர். கிருஷ்ணஸாமி ஐயங்காரும் சிறப்பாக நடத்திவைத்தார். 29—3—39ல் திருத்தேர் வடம் பிடித்து காலத்தில் நிலைக்கு வந்துவிட்டது.

முனிஸிபல் கூட்டங்கள்.

30—3—39ல் அவசரக் கூட்டம் கூடியது கல்வி வரா செலவு திட்டம் 1939-40க்கு யோசித்து முடிவு செய்யப்பட்டது. ரூ. 6000த்தில் நெருப்பை அணைக்கும் ஓர் மோட்டார் லாரி வாங்கத் தீர்மானம் செய்யப்பட்டது கோபால் ராவ், சாதுசேஷய்யா லைபரரிக்கு நன்கொடையாக ரூ 100 சாங்ஷன் செய்யப்பட்டது. ரூ 500 கல்வித் திட்டத்தில் வார்தா கல்வித்திட்டத்தில் தேற்சிக்கு உபாத்யாயர்களை பழக்க திட்டம் செய்யப்பட்டது.

ருபர்வைஸரை ஹெட்மாஸ்டராக்கவேணும், அல்லது சம்பளத்தை குறைக்கவேணும் என்று கொண்டுவந்த பிரேபனை சட்டத்தின் வேகத்தில் அடிபட்டுபோயிற்று. 31உ பொது வரவு செலவு திட்டமும் விசேஷ விவாதம் நடந்து நிறைவேறியது. ஆனல், நகரின் தண்ணீர் சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட சர்க்கார் நிதி கொடுக்கிறதை முன்னிட்டு அதற்கான சடங்குகள் ஆரம்பமாக செய்யப்படும் வரையில் உயர்த்தப்பட்ட வரி 4½பர்சன்டை 1-4-39 முதல் வசூலிப்பதை தள்ளிவைப்பதென்றும், திட்டம் செய்யாதவரை வசூலித்ததை திரும்ப வரி செலுத்துவோரிடம் கொடுக்கவேணும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார இன்ஜியர் வருகை.

குடந்தை தண்ணீர் சாக்கடை திட்டம் பற்றி கவுன்சிலர்களை கலந்து யோசனை செய்ய சுகாதார இஞ்சினியர் ஸ்ரீமான் ஏ. வி. ராமன் னாது 7—4—39ல் இந்நகருக்கு வருகிறார். அவர் அன்றைய தினம் கவுன்சிலர்களுடன் ஷை விஷயமாகக் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

ஸ்ரீமகா வீர ஜயந்தி.

போர்ட்டர் டவுன் ஹாலில் 2-உ மாலை ரிடயர்டு ஜில்லா ஜட்ஜ் திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் தலைமையில் ஜயின ஆசார்யனான ஸ்ரீமகா வீர் ஜயந்தி விமரிசையாக நடந்தது. பலர் அஹிம்ஸா மூர்த்தியான அப்பெரியாரின் பிரபாவங்களை உருக்கமாக எடுத்துப் பேசினார்கள். கூட்டத்திற்கு முன்பாக பிரபல ஊர்வலம் நடந்தது. இந்தக் கூட்டத்தை நகர இளைஞர்கலை கழகத்தின் ஆதரவையில் நடத்திய தன் நோக்கம் என்ன வென்பது விளங்கவில்லை.

உற்சவம். ஸ்ரீ காசி மடாதிபதி ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள் திருப்பணைத்தாளில் ஸ்ரீ வீரியம்மன்உற்சவத்தை இவ்வருடம் மிகச்சிறப்பாகநடத்திவைத்தார்கள். நாதசுர வித்வான்கள் 7க் திருநாளில் இனிய கானம் செய்தனர். ஸ்ரீ வீரியம்மன் முத்துப் பல்லக்கிலும், வெள்ளி ரதத்திலும் எழுந்தருளி காக்ஷி அளித்தார். விசேஷ பிராம்மண சந்தர்பணை நடந்தது. பல ஊர்களிலிருந்து தர்சனத்துக்கு பக்தர்கள் வந்திருந்தனர்.

ஸ்ரீ கும்பேச்வர ஸ்வாமிக்கு தேப்பம். கங்கை தீர்த்தமெனும் மகாமகக்குளத்தில் 3உ காலையில் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீ ஆதி கும்பேச்வர ஸ்வாமிக்கு தெப்ப உற்சவம் மிகச்சிறப்பாக நடந்தது. இவிலும் மின்சார விசித்ர வர்ண விளக்குடன் தெப்பம் நடந்த காக்ஷி என்றும் மறக்க முடியாத அழகாய் இருந்தது. பக்தர்கள் தர்சித்து ஆனந்தித்தனர்.

## வத்தல் குண்டு.

### ஆராதனை உத்ஸவம்.

வெகுதான்யஹு பங்குனீ 3உ முதல் 10உ வரை மதுரை ஜில்லா வத்தலக்குண்டு கிராமத்தில், குருபக்த சிகாமணி சே. ப. நாராயண பாகவதர் அவர்களால் அவர்களுடைய கிருஹத்தில் ஷையாருடைய குருநாதனும் ஜகத்பூஜ்யருமாய் விளங்கிய ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ம பாரதீ ஸ்வாமிகள் அவர்களின் 28-வது ஆராதனை மஹோத்ஸவம், சென்ற வருஷங்களில் நடந்ததுபோல் வெகு சிறப்பாயும் மங்களகரமாயும் நடந்தேறி முடிந்தது. ஷை நாராயண பாகவதர் அவர்களின் யோக்யதாம்சமும் குணவிசேஷங்களும் சொல்லொணுச் சிறப்புற்றோங்கியது. ஷையார், ஆசார்ய பக்தியிலும் குருசுச்ருஷையிலும் மிகச்சிறந்தவர். ஸதாசார ஸன்மார்க்க அனுஷ்டான சீலர்.

உற்சவத்துக்கு வெளியூர்களிலிருந்தும் ஜனங்கள வந்திருந்தனர். உற்சவ தினங்களில் பிரதிதினமும் ஸ்ரீ ஸ்வாமிகளின் திருவுருவப்படத்துக்கு மிக்க ரமணீயமாய் புஷ்பமாலையால் அலங்கரிக்கப்பட்டு ஷை யாருடைய பாதுகைகளுக்கு வேதவித்துக்களால் மஹான்யாஸ பூர்வமாய் ருத்ராபிஷேகம், பூஜை, வேதபாராயணம் முதலியதுகள் செய்யப்பட்டு வைதிக முறையுடன் பஜனையும் பிறகு பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடைபெற்று வந்தது. 9உயாகிய ஆராதனை தினத்தன்று ஷை பாதுகைகளுக்கு ஏகாதசருத்ர பாராயணம், உபநிஷத், மஹன்யாஸம் முதலிய வேத கோஷங்களுடன் அபிஷேகாதி அலங்காரமும், பிறகு ஆராதனை வைபவமும் நடந்தானது கண்கொள்ளாக்காக்ஷி,

ஆசார அனுஷ்டானங்கள் குன்றி நாஸ்திகம் பெருகிவரும் இக்காலத்தில் வருஷாவருஷம் ஷை பாகவதர் அவர்கள் விசேஷ செலவில் இப்படி பக்தியை புகட்டக்கூடியதான உற்சவாதிகள் நடத்தி, உலக க்ஷேமத்தின் பொருட்டு செய்யும் நற்காரியங்கள் பாராட்டத் தகுந்தது.

ஒரு நிருபர்



# யதார்த்தமான அஹிம்ஸாதர்மமும், பாரமார்த்திகமான ஸ்வராஜ்ய ஸித்தியும்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தற்காலத்திய கல்வி முறையில் நம் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களே போதிக்கப் படாமல் போய் விட்டதால், அநேகருக்கு யதார்த்தமான அஹிம்ஸாதர்மம் எதுவென்றும், அதினுல் அடையப்படும் ஸ்வராஜ்ய சித்தி எப்படிப்பட்டதென்றும், வியக்தமாய் விளங்கவில்லை யென்றே தோன்றுகிறது.

அஹிம்ஸாதர்மம், ஸ்வராஜ்ய சித்தி என்ற வார்த்தைகள் வேதோக்தமானவைகள். அவைகளை பிரயோகிப்பது, பேசுவது, அநுஷ்டிப்பது முதலிய செய்கைகள் தற்காலத்தில் வேத தாத்பர்யத்திற்கு முறண்பாடாயுள்ளவைகளாக ஏற்பட்டு விட்டது. இது கலியின் விரோதமென்றே கருதலாம். இக்காலத்தில் அனுஷ்டிக்கப்படும் உண்ணுவிரதம், சத்தியாக்கிரஹம், மறியல், ஒத்துழையாமை, குறைகளை தீர்க்கும் படி சொல்லி வேலையை நிறுத்தல் (Strike) முதலான செய்கைகளையும் அஹிம்ஸா தர்மம் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்த அனுஷ்டானம் ஒருவாறு காரியசித்தியைத்தாத்தக்க சாதனமானுலும் அவைகளை அஹிம்ஸை என்று சொல்லிக் கொள்வதற்கில்லை. உதாரணமாக, ஒருவன் பிறனை கொலை செய்தால் குற்றம் என்று சொல்வது போல், தன்னையே தான் தற்கொலை செய்து கொள்ளயத்தனித்தாலும் அதுவும் கிரிமினல் சட்டப்படி குற்றமாகவே பாவிக்கப்படுகிறது. அது போல், உண்ணுவிரதம், மறியல் முதலான செய்கைகள் பிறருக்கு ஹிம்சை செய்ய பாவிக்கப்படாவிட்டாலும், தனக்குத்தானே ஹிம்சைசெய்து கொள்வதால், அச்செய்கைகளை அஹிம்சை என்று சொல்வது பொருத்தமுள்ளதாகாது. அச்செய்கைகள் பிறர் மனதில் சிரமம் தாராமலிருக்கவும் முடியாது. பிறருக்கு சிரமம் தரும் எந்தச்செய்கையையும் அஹிம்ஸை என்று சொல்லிக்கொள்வதற்கில்லை.

வேதோக்தமான அஹிம்ஸா தர்மமோ ஆசையற்ற விவேகிகளின் அனுஷ்டானமாகும். அதனுல் கிடைக்கும் பயனே அகண்ட சாம்ராஜ்யாதிபத்தியமெனும் ஆத்ம ஞானமாகும். இக்காலத்தில் நவீனமாய் அநுஷ்டிக்கப்படும் அஹிம்ஸா தர்மமோ ஆசையே ஸ்வரூபமாயுள்ள அவிவேகிகளின் செய்கைகளாகும். இதினுல் வரும் பயன் (நாடு) அகில சாம்ராஜ்யாதிபத்யமென்ற அரசாக்ஷியாம். இவ்விதம் ஒன்றுக் கொன்று முற்றிலும் பொருந்தாத நிலைமையில் இரண்டு கொள்கைகளிலும் அஹிம்சா தர்மம், ஸ்வராஜ்யம் என்ற பதங்களை மட்டும் உபயோகிப்பதில் யாதும் பயனில்லை. ஆயினும், இக்காலத்திய அஹிம்ஸா தர்மமானது காரிய சித்திக்கான ஒரு ஸாதனமென்று சொல்லலாம். இத்தகைய சாதனங்களுக்கு 'ஹடம்' என்று முன்னமேயே சொல்லும் வழக்கமுண்டு.

நம் நாட்டில் வெகு நாலங்களாய் பற்பல பிச்சைக்காரர்களுண்டு. ஒவ்வொரு பிச்சைக்காரஜாதிகளும் தனித்தனி வகுப்பாய் இருப்பார்கள். அவர்களில் 'கல்லடி மாங்கன்' என்ற ஒரு வகுப்பார்கள். தங்கள் கையில் அரிசி வாங்க ஒரு பெரிய கொட்டாங்கச்சி, சிறு தடி, கறுப்புக்கயர், ஒரு சிறிய கத்தி இவைகளுடன் பிச்சைக்குப்புறப்படுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் வாசற்படியில் உட்கார்ந்து, முதலில் தடியால் தரையில் தட்டிக் கொண்டு கர்ண கடூரமாய்ப் பாடுவார்கள். இவர்களைக்கண்டதும் சாதாரணமாய் பிச்சையில்லை என்று சொல்லாமல் போடுவதே நம்மவர்களுக்கு வழக்கம். ஒரு சமயம் எந்த வீட்டிலாவது பிச்சை போட தயங்கினுல் இக்கல்லடிமங்கர்கள் தங்களிடமுள்ள கறுப்புக்கயிற்றினுல் தங்கள் கையில் இறுகக்கட்டிக்கொண்டு ரத்தஓட்டத்தைத்தடைசெய்து தங்களிடமுள்ள கத்தியால் ஒரு சிறு கீறல் செய்து, கொஞ்சம் ரத்தம் சொட்டும்படி செய்து கொள்ளுவார்கள். இந்தக்கண்டிராவியைக்காணச்சகிக்காமல் பிச்சை போடாத லோபியும் பிச்சையிட்டனுப்புவான். இவ்விதம் அநேகம் ஹடங்கள் நம் நாட்டில் உண்டு ஆயினும், அவைகள் சாஸ்திர யுக்தமான நல் வழியல்லவென்பது மறுக்கமுடியாது.

இந்தப்புதுமையான அஹிம்சா தர்மானுஷ்டானத்தைக்கண்டு அந்நிய நாட்டார்கள் கூடப்பயப்படுகிறார்கள். அங்கும் இக்கொள்கை பரவி வருகிறது. நம் நாட்டிலும் வா, வாநியாயமற்ற காரியங்களில் கூட இவ்வந்நியாயம் அனுஷ்டிக்கப்படுகிறது. அரசாள்பவருக்குண்டாகும் அஹிம்ஸையைக்கூட கவனியாமல் அஹிம்ஸா தர்மம் நடைபெறுவதில் யாது நீதியுளதோ தெரியவில்லை. இத்தகைய முட்டுக்கட்டை போன்ற ஹடம் நம் நாட்டிற்கு அவசியமாவென்பதை பொதுஜனங்கள் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டியது அத்யாவசியமானது. ஒரு சமயம் எல்லாக் காரியசித்திக்கும் இது இன்றியமையாத சாதனந்தான் என்றும், இவ்வனுஷ்டானம் நீதியானதுதான் என்றும் சித்தாந்தப்பட்டுவிட்டால், நம் நாட்டில் மக்களுக்குள்ள ஒவ்வொரு குறையையும் அஹிம்ஸா தர்மானுஷ்டான முறையில் தீர்த்துக்கொள்ளலாமல்லவா? அவ்விதமாயின் தாங்கமுடியாத வரிபளுவால் தவிப்பது வேலையில்லா திண்டாட்டம், வியபாரமந்தம், லேவாதேவி நடைபெறாமல் செய்துவிட்டதால் படும் பணக்கஷ்டம், பொருளாதாரக் குறைவு, சுகாதாரக் குறைவு, பொது நன்மைகளை பாழ் படுத்திவருவது, முதலான பல கஷ்டங்களுக்கும் பரிஹாரந்தேட தகுந்த வழியை நிபுணர்கள் யோஜித்து அததற்கான முறைகளை அப்போதைக்கப்போது வெளியிடுவார்களாயின் அறியாமையோடுள்ள அநேகருக்கு உபகாரமாகுமே.

## குடந்தை நகரசபை.

### கமிஷனருக்கு வேண்டுகோள்

கோடை ஆரம்பித்துவிட்டது நகரிலுள்ள உயர்தர பாடசாலைகளுக்கு விடுமுறை ஆரம்பமாகப் போகின்றன, நமது நகரசபை ஆதரவில் நடக்கும் ஆரம்பப் பாடசாலைகள் மட்டும் மே மாதம் வரையில் நடந்து பிறகு விடுமுறை ஏற்படும். இந் நிலையில் நமது சிறிய குழந்தைகளான மாணவர்களுக்கு வெய்யிலின் கொடுமை பாதிக்காமலிருக்க வழக்கப்படி அதிகாரிகள் ஏப்ரல்மீ முதல் காலை பள்ளிக்கூடமாக நடத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும். காங்கிரஸ் கவன்மெண்டார் பதவியேற்றசில காலத்திற்குள் ஸிரந்தரமாகவே காலையிலும் மாலையும் நடத்தும்படி ஏற்பாடு செய்தார்கள். அப்படி நடந்தும் வந்தது. பிறகு யாது காரணமோ மாறிவிட்டது. அது எப்படியாயினும் கோடையை முன்னிட்டு காலை 8-லிருந்து 10-30 வரையிலும் மாலை 3லிருந்து 5-30. வரையிலும் வழக்கப்படி நடத்த உத்தரவிட வேண்டுமென கமிஷனர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் பெற்றோர்.

## துகிலி.

### ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீ சங்கராசார்யாளுடைய ஜயந்தி மஹோத்ஸவம் வழக்கம்போல இவ்வாண்டும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டும் அன்பர்களின் ஆதரவை முன்னிட்டும், கம்ஸபுரத்தைச்சார்ந்த துகிலி அக்ரஹாரத்தில் ஆர்யவித்யா பிரபோதினீ சம்ஸ்க்ருத பாடசாலைத் தலைமை உபாத்யாயர், வியாகரண சிரோமணி K. S. வெங்கட்ரும சாஸ்திரிகள் அவர்களுடைய கிரஹத்தில் பிரமாதிஹு சித்திரைமீ 2உ ஸ்திரவாரம் (15—4—39) முதல் 11உ சோமவாரம் பஞ்சமி ஆருத்ரா நக்ஷத்திரங்கூடிய (24—4—39) சுபதினம் வரை கர்ப்போத்ஸவமாகக் கொண்டாடப்படும்.

அவ்வமயம், காலை உபநிஷத் முதலிய பாராயணங்களும், லக்ஷார்ச்சனையும், மாலை அரும்பெரும் உபன்யாஸங்களும் இரவில் சத்கதா காலக்ஷேபங்களும் நடைபெறுவதுடன், கடைசி தினமாகிய ஜயந்தியன்று, பிராம்ஹண சந்தர்பணையும் ஆசார்யாளுடைய திருவுருவப்படத்தின் திருவுலாக்காக்ஷியும் நடைபெறும். ஆகவே அன்பர்கள் யாவரும் தங்களால் இயன்ற உதவிபுரிந்து ஆசார்ய அனுக்ரஹத்தைப் பெறப் பாத்திரர்களாக ஆகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஆசார்யசரணஸேவாரதப்பர்கள்.

## நாகூர்.

### ஸ்ரீ ராமநவமி வஸந்த உத்ஸவம்.

புன்னுகவன க்ஷேத்திரமாகிய நாகூரில் மேல் அக்ரஹாரத்தில், து. வீராசாமிஐயரால் ஸ்தாபிக்கப் பட்டும். ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசாரியார் ஸ்வாமிகள் அவர்கள் அனுகிரஹமும் பெற்று பாதுகையும் பட்டதான ஸ்ரீபஜனை மடத்தில் 22-4-39 முதல் 1—5 39வரையில் வஸந்த உத்ஸவமும் ஸ்ரீசங்கர ஜயந்தி உத்ஸவமும் வழக்கம் போல் அதிவிமர்சையாய் நடைபெறும். ஷை உத்ஸவத்தில் பஜனைகள் உபன்னியாசங்கள் சத்கதா காலக்ஷேபங்களும் நடைபெறும் யாவறும் வந்திருந்து நடத்தி வைக்க பிறுத்திக்கிறேன்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்:-புன்னுகவன க்ஷேத்திரமாகிய நாகூரில் ஸ்ரீ பிரசன்ன வெங்கிடாசலபதி பெருமாள் கோவில் சந்நதியில் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை கும்பகோணம் பிர்ம்மஸ்ரீ T. N. ரெகுனாத பாகவதர் அவர்களால், 22—2—39 முதல் ஆரம்பிக்கப்பட்டு தினப்படி 15 நாள் 15 கட்டமாக நடத்திவந்து 8—9—39 புதன்கிழமை ராத்திரி ஸ்ரீ ராமசந்திர பட்டாபிஷேகம் விமர்சையாய் நடந்தது. பிறகு ஸ்ரீ நாகநாதஸ்வாமி கோவிலில் நாளது மாசிமீ 30உ முதல் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்திர காண்டம் பிரவசனம் ஷை பாகவதர் அவர்களால் நடத்தி பூர்த்தி செய்யப்பட்டு 27—3—39 திங்கள்கிழமை ராத்திரி 8 மணிக்கு ஸ்ரீராம ஜெனனமும் ஸீதா கலியாணமும் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது.

து. வீராசாமி ஐய்யர்.

215277




மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## திப்பிராஜபுரம்

### ஓர் உபந்யாஸம்.

திப்பராஜபுரம் ப்ரும்ம வித்யா ஸபாவில் மந்த்ரமூர்த்தி க்ருஷ்ண சாஸ்திரிகளால் உபந்யஸிக்கப்பட்டதாவது:—ப்ரும்ம வித்யையாகிய சித்சக்தியினால் மஹா விராட் புருஷனுக்கு அசரீரி வாக்கால் உபதேசிக்கப்பட்டு ஸ்ரீமந்நாராயண ப்ரும்மா, நாரத பரம்பரையாய் வந்த மஹா வாக்யத்தை வியாஸ பகவான் ஸ்ரீ சுகருக்கு உபதேசித்தபடி இந்த எல்லா உலகமும் நானே தவிர வேறில்லை என்ற மஹா வாக்யார்த்தத்தின்படி எல்லா உலகமும் ப்ரும்மமே என்றும் ப்ரும்மத்தினிடத்திலிருந்து உண்டானதென்றும் உபநிஷத்துக்களில் சொல்லியபடி பல விதமான மஹா ப்ரளய ப்ரும்மப்ரளய ப்ரும்மாதி வின்ன ப்ரளயங்களுக்குப் பிறகு உண்டாகிற பலவித ஸ்ருஷ்டிகளில் முண்டகோபநிஷத்தில் 1-1ல், 7-8 9-வது மந்த்ரங்களில் சொல்லியபடியும் 2-1 முதல் மந்த்ரத்தில் சொல்லியபடியும் ஸ்ருதியை அநுஸரித்து தேவி பாகவதம், 9ஸ்கந்தம் 3-வது அத்யாயத்தில் சொல்லியபடி மஹா ப்ரளயத்துக்குப்பிறகு ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் பரப்ரும்மத்தினிடம் லயப்பட்டிருந்த மாயை வெளிப்பட்டு இதில் ப்ரவேசித்த சைதன்யத்துக்கு மூலப்ரக்ருதி என்னும் திரிபுரசுந்தரி, மஹாலக்ஷ்மி, புவனேச்வரி, காமாக்ஷி என்றும் பலவித நாமதேயங்களுண்டு. இவ்வித சித்சக்தியாகிய தேவியானவள் முன் அரூபிணியாகயிருந்து தன்னிச்சையினால் கோடிஸூர்யப்ரகாச சந்த்ரகோடி சீதளமான தேஜோரூபத்தை தரித்து உடனே கோபசுந்தரீ ரூபத்தை தரித்தாள். எவ்விதமென்றால் புஜங்களுடன் கிரீட குண்டல நாஸாபரண ஹார கேயூர கங்கணாதி ஆபரணங்களால் அலங்காரத்துடன் முன் 2 கைகளால் முரளீ என்ற புல்லாங்குழல் வாத்யம் வாசிப்பதும் பின் இடது கையில் த்ருபுரசுந்தரியின் ஆயுதமாகிய கரும்பு வில்லும் பின் வலது கையில் புஷ்பபாணங்களும் தரித்து நெற்றியில் சூர்ணகுந்தளத்துடன் அபாஞ்ஜிதங்க பீதாம்பரத்துடன் அதி தேஜோமூர்த்தியாய் ஸாயங்காலத்தில் சிவந்த காந்தியால் வ்யாபித்த நீருண்ட மேகம்போல் வர்ணகாந்தியுடன் விளங்கி ஒரு க்ஷணம் புருஷரூபமாயும் அடுத்த நிமிஷம் ஸ்திரீ ரூபத்துடனும் தோன்றக்கூடிய இந்த கோபசுந்தரீ அவதாரத்தைப்பற்றி மந்த்ரசாஸ்திரத்தில் ரிஷிச்சந்தோன்யாஸ த்யான ச்லோகத்துடன் உபாஸ்ய தேவதையாக சொல்லப்பட்டிருக்கிறது.

பிறகு அடுத்த ஸமயத்தில் இந்த ரூபத்தை விட்டு இடதுபாகம் ஸ்திரீயாகவும் வலது பாகம் புருஷனாகவும். அர்த்தநாரீச்வர ரூபத்தை தரித்தாள். உத்தரக்ஷணத்தில் இடது பாகத்திலுள்ள ஸ்திரீரூபமானது தனி ஸ்திரீயாக ஆவிர்பவித்தது வலது பாகம் தனிப் புருஷனாக ஆகி அந்த தேவியானவள் ராதையாகவும் க்ருஷ்ணனாகவும் விளங்கினாள், இந்த ராதா க்ருஷ்ணர்களுக்கு ப்ரும்மாவின் வயஸ் பரிமாண காலம் வரையில் ராஸக்ரீடை நடந்தது. ராதை கெர்ப்பம் தரித்தாள் க்ரீடா காலத்திலுண்டான ராதையின் வேர்வை ஜலமானது மஹார்ணவ ஸமுத்ரமாக ஆகிவிட்டது. இந்த அர்ணவ ஜலத்திலிருந்து ஜலத்துக்கு அதிஷ்டான தேவதை வருணன் பத்னியுடன் ஆவிர்பவித்தான். இவ்விருவருடைய ப்ராண வாயுவிலிருந்து வாயு பகவான் பத்நியுடன் ஆவிர்பவித்தான் 100 மன்வந்தர காலத்திற்குப் பிறகு ராதை ப்ரஸவித்தாள். கோடிஸூர்ய ப்ரகாசத்துடன் வந்து முட்டைபோல் ப்ரும்மாண்டமான முட்டை பிறந்ததும் ராதை ஸந்தோஷமில்லாதவளாய் வெறுப்புடன் அந்த மஹார்ணவ ஜலத்தில் முட்டையை விசிறிவிட்டாள். உடனே க்ருஷ்ண பரமாத்மா ராதையை பார்த்து முட்டையின் மஹத்வம் அறியாமல் எறியலாமாவென்று பேசிக்கொண்டிருக்கும்போது ராதையின் நாக்கிலிருந்து ஸரஸ்வதி தேவியானவள் ஸர்வாபரண பூஷிதையாய் ஸர்வ ஸௌந்தர்ய வதியாய் அபய வரத புஸ்தக அக்ஷமாலையுடன் ஆவிர்ப்பவித்தாள் உடனே ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வலது சரீரத்திலிருந்து நாராயணன் ஆவிர்ப்பவித்தார். உடனே ராதையின் இடது பக்கத்திலிருந்து லக்ஷ்மீ தேவி ஆவிர்ப்பவித்தாள். உடனே பரமாத்மாவின் ரோம கூபங்களிலிருந்து கோடி கோடி கோபாலர்கள் ஆவிர்ப்பவித்தார்கள் உடனே ராதையின் ரோமகூபங்களிலிருந்து கோடி கோடி கோபஸ்திரீகள் ஆவிர்ப்பவித்தார்கள். உடனே கோலோகம் உண்டாயிற்று. உடனே ஸரஸ்வதி லக்ஷ்மீ இருவர்களையும் நாராயண பத்னிகளாக விவாஹம் செய்வித்து கோலத்தில் ஒரிடத்தில் வைகுண்ட லோகத்தை கல்பித்து அதில் ஸ்ரீமந் நாராயணனை பத்னிகளுடன் அமர்த்தினார்கள். லக்ஷ்மீ நாராயணனுடைய ரோம கூபங்களிலிருந்து விஷ்ணு பார்ஷதர்கள் ஆவிர்பவித்தார்கள். உடனே க்ருஷ்ண பரமாத்மாவின் நாபிகமலத்திலிருந்து ப்ரும்மதேவர் 4 முகத்துடன் ஸாவித்ரீ ஸமேதராய் ஆவிர்ப்பவித்தார். உடனே ஸத்யலோகத்தை நிர்மாணம் செய்து ப்ரும்மதேவரை ஸ்தாபித்தார்கள். உடனே க்ருஷ்ண பரமாத்மாவின் வலது பாகத்திலிருந்து 5 முகத்துடன் 10 கைகளுடன் காலாக்னி ருத்ரன் ஆவிர்ப்பவித்தார். தத்ஸமயத்தில் ஆதியிலுண்டான மஹாதேஜஸ்ஸிலிருந்து 1000 கைகளுடன் துர்க்காதேவி ஆவிர்ப்பவித்தாள். ருத்ரனையும் துர்க்கா தேவியையும் விவாஹம் செய்வித்து கைலாஸலோகம் கல்பித்து அதில் அமர்த்தினார்கள். இவ்விதம் கோலோகம் நிறைந்தது: பிறகு ராதையினால் எறியப்பட்ட அந்த ப்ரும்மாண்ட முட்டையானது உடைந்து ஆலிலைபோலாகி அதில் மஹாவிராட் புருஷன் 3 வயது குழந்தைபோல் விளங்கும் ஸமயத்தில் அந்த சித்சக்தியினால் அந்த மஹா வாக்யம் உபதேசிக்கப்பட்டது. உடனே க்ருஷ்ண பரமாத்மா கோலோகத்தில் அமர்த்திய ப்ரும்ம விஷ்ணு ருத்ரர்களைப்பார்த்து மஹாவிராட் புருஷனுடைய ரோமகூபங்களில் உண்டாகிற கோடி ப்ரும்மாண்டங்களிலும் நீங்கள் லேசலேசாம்சத்தால் ப்ரவேசித்து ஸ்ருஷ்டி பாலன ஸம்ஹாராதி கார்யங்களை நடத்தவேண்டுமென்று ஆக்ஞாபித்தார். இவ்வித ஸ்ருஷ்டி க்ரமத்தால் சித்சக்தியே ஸர்வ ப்ரும்மாண்ட சராசரரூபிணியாய் விளங்குவதாய் ஆகிறபடியால் எல்லா உலகமும் நானே தவிர வேறில்லை என்ற மஹா வாக்யத்தால் உபதேசித்தது பொருத்தமாயிருக்கிறது. இதுவே முண்டகோபநிஷத்தின் ஸாரம். முண்டகோபநிஷத்தில் பரா வித்யா என்ற வாக்யார்த்தப்படி ப்ரும்ம வித்யையால் ஆத்மதத்வம் விராட் புருஷனுக்கு உபதேசிக்கப்பட்ட மஹாவாக்யத்தை வ்யாஸர் ஸ்ரீ சுகருக்கு உபதேசித்தார்.

நாராயண ச்ரௌதி.

## ஒரு வித்வான் காலமானார்.

நிகழும் பகுதான்ய-ஷு பங்குனி-மீ 10௳ வியாழக்கிழமை தினம் எனது பரமாசார்யாரும் மைசூர், புதுக்கோட்டை, அனந்தசயனம், பரோடா முதலிய சமஸ்தானங்களில் உத்தமோத்தம சம்மானம் பெற்றவரும் அனேக சிஷ்யர்களுக்கு லக்ஷணாப்யாசம் செய்து வைத்தவரும் அமிருதகுணம் பொருந்தியவரும் பிர்ம்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் அவர்கள் குமாரருமான மயில்ரங்கம் பிர்ம்மஸ்ரீ இராமச்சந்திர கனபாடிகள் அவர்கள் தன் பூதவுடலை துறந்து ஈசுவர ஸாயுஜ்யத்தை அடைந்தார். அந்த பெரியாரின் மரணமானது நம் பாரத தேசத்திற்கு பெரிய நஷ்டமேயாகும். A. K. அருணாசல தீக்ஷிதர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அர்க்க

அர்யகர்பம்

15

4
24 13—4—1939

215278

66 215278 28 APR 1939 MADRAS 185

Registered No. M-2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியா;

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஹு பங்குனி-மீ 31உ 1939-ஹு ஏப்ரல்-மீ 13உ | வா 15

தஞ்சாவூர் ஸர்க்கிள் தேவஸ்தானம் கமிட்டியாரவர்கள் ஆளுகைக்குள்பட்ட இராஜகுமாராம்பாள்புரம் என்னும் மீன்புசல் ஸ்ரீ கல்யாணஸுமஸ்வாமிகோவில் வகையரு 1346ம் பஸலி

## வரவு செலவு ஸ்டேட்மெண்டு.

| வரவு | ரொக்கம் R. A. P. | தான்யம் | ஆக. |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு. கையிருப்பு. | 396 7 2 | 391 5 6 | |
| பேரேட்டு வரவு | 9420 2 2 | 198 8 14 | |
| கையிருப்பு | 955 14 0 | | |
| பரிமாத்து சாமான் இருப்பு | 13 15 7 | | |
| சில்லரை தேவஸ்தானம் இருப்பு | 3936 11 4 | | |
| ஆ | | | 14723 2 3 |
| கிராம வருமானம். கன்னூகூர் கிராமம். | | 1415 3 0 | 1415 4 0 |
| ஷை சின்ன கண்ணமரய் கஞ்சை | 133 4 0 | | 133 4 0 |
| கூடலூர் கிராமம் | | 925 3 14 | 925 5 2 |
| மாப்பண்ணை கிராமம். | 164 11 9 | | 164 11 9 |
| தத்தனி கிராமம் | 855 14 0 | | 855 14 0 |
| கொலேந்திரம் கிராமம் | | 54 6 2 | 51 8 2 |
| வடபில்லாள கிராமம் | 334 0 0 | | 334 0 0 |
| கிழகட்டளை கிராமம் | 670 12 0 | | 670 12 0 |
| ரொக்க குத்தகை | 63 14 0 | | 63 14 0 |
| சில்லரை தேவஸ்தானம் மோகினி. | 645 0 0 | | 645 0 0 |
| நெல்விற்றுமுதல்விலை வாசி ஆதாயம். | 323 5 1 | | 323 5 1 |
| தோப்பும் இதர வரும் படியும் | 305 6 8 | | 305 6 8 |
| (சில்லரை தேவஸ்தானம்) கடை வாடகை. | 20 10 0 | | 20 10 0 |
| உபயம் | 27 12 0 | | 32 12 0 |
| சில்லரை தேவஸ்தானம் ஷை | 5 0 0 | | |
| பாங்க் முதலியவற்றி விருத்திவட்டி. | 44 12 3 | | 58 1 0 |
| சில்லரை தேவஸ்தானம் ஷை | 13 4 9 | | |
| சாமான். ஆதாயம் | 97 13 4 | | 102 12 3 |
| சில்லரை தேவஸ்தானம்ஷை | 4 14 11 | | |
| அட்வான்ஸ் வரவு | 246 10 11 | | 246 10 11 |
| கால்நடை விற்று வரவு | 18 0 0 | | 18 0 0 |
| பிடித்த ஆதாயம். | 2 9 10 | | 2 9 10 |
| ஆ வரவு | | | 21095 15 1 |

| செலவு. | தான்யம் | ஆக |
|---|---|---|
| நித்தியப்படி அமுது படி | 495 10 3 | 811 5 5 |
| (சில்லரை தேவஸ்தானம்) ஷை | 315 11 2 | |
| பிர்மோத்ஸவம். | 97 4 4 | 97 4 4 |
| ஏர்படிகள் | 136 3 11 | 163 14 8 |
| சில்லரை தேவஸ்தானம் ஷை | 27 10 9 | |
| சிப்பந்திகள் சம்பளம் | 1874 6 1 | 2106 9 9 |
| (சில்லரை தேவஸ்தானம்)ஷை | 232 3 8 | |
| கட்டிடம் ரிப்பேர் | 159 1 0 | 159 1 0 |
| தட்டு முட்டு சாமான்கள் ரிப்பேர் | 226 9 11 | 226 9 11 |
| பித்தளை பாத்திரம் கொள்முதல் | 3 9 3 | 3 9 3 |
| கால்நடை தீனி | 29 1 3 | 29 1 3 |
| தோட்டம் விர்த்தி செய்ய | 14 13 9 | 14 13 9 |
| வாகனக்கொட்டகை ரிப்பேர் | 672 2 7 | 672 2 7 |
| (சில்லரை தேஸ்தானம்)பரிவட்டம் | 5 13 0 | 5 13 0 |
| வண்டிச்சத்தம் | 137 14 0 | 137 14 0 |
| ஸ்டேஷனரி சாமான் | 31 6 1 | 31 6 1 |
| போஸ்டேஜ் | 2 9 6 | 2 9 6 |
| பிரயாணப்படி | 89 8 5 | 89 8 5 |
| கோர்ட்டு சிலவு | 42 11 0 | 42 11 0 |
| செங்கல் காளவாய்ச் செலவு | 79 13 11 | 79 13 11 |
| நெல்லரவை மிஷின் கூலி | 50 0 6 | 50 0 6 |
| தேசாந்திரி சிலவு | 11 7 10 | 11 7 10 |
| அட்வான்ஸ் செலுத்தியது | 15 0 0 | 15 0 0 |
| அட்வான்ஸ் வரவுக்கு செலுத்தியது | 279 8 11 | 281 8 2 |
| சில்லரை தேவஸ்தானம் ஷை | 1 15 3 | |
| H. R. E. போர்டு பீஸ் | 231 4 0 | 247 14 0 |
| (சில்லரை தேவஸ்தானம்) ஷை | 16 10 0 | |
| கிஸ்தி | 556 9 4 | 556 9 4 |
| ஆடிட் பீஸ் | 140 0 0 | 140 0 0 |
| பல சில்லரைச் சிலவு | 187 6 6 | 197 0 6 |
| சில்லரை தேவஸ்தானம் ஷை | 9 10 0 | |
| கடைசி இருப்பு | | |
| அரை சாமான் இருப்பு | 8 0 6 | |
| (சில்லரை தேவஸ்தானம்) ஷை | 1 6 6 | |
| பேரேட்டு வசம் | 8537 7 1 | |
| (சில்லரை தேவஸ்தானம்) ஷை | 236 8 5 | |
| நெல் இருப்பு | 2062 5 4 | |
| கையிருப்பு ரொக்கம் டிரஸ்டி | 76 0 1 | |
| சில்லரை தேவஸ்தானம் ரொக்க இருப்பு | 550 6 11 | |
| ஸுப்ராண்டெண்டு வசம் | 217 6 2 | |
| கர்ணம் வசம் | 4 3 7 | |
| (சில்லரை தேவஸ்தானம்) கமிட்டியார் | 3228 6 4 | |
| ஆ | 21095 15 1 | 21095 15 1 |

வ. சுந்தரராஜன் சேர்வைக்காரர், டிரஸ்டி.

T. S. விஸ்வநாதன் G. D. A. R. A. ஆடிட்டர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

அத்வைதம்.

3. இரண்டற்ற தத்வம்

மஹாஸ்வாமிகள்:—ஸாதாரணமாக ஒரு பதார்த்தத்திற்கு ஒரு பெயரைக் கொடுக்க வேண்டுமானால், அப்பெயரால் சொல்லப்படும் லக்ஷணம் அப்பதார்த்தத்தில் மாத்திரம் இருந்தால்தான் நியாயமாகும். அநேக பதார்த்தங்களுக்குப் பொதுவாயிருக்கிற ஒரு லக்ஷணத்தைக் குறிக்கக்கூடிய ஒரு பெயரை அவைகளில் ஒரு பதார்த்தத்திற்கு மாத்திரம் கொடுக்கலாமா?

பிரபு:—கூடாதுதான்.

ம:—ஆகையால், ஒரு பெயரால் குறிக்கப்படும் லக்ஷணம் எந்தப்பதார்த்தத்தில் மாத்திரம் இருக்கிறதோ, அப்பதார்த்தத்திற்கே அப் பெயரைக் கொடுக்கவேண்டும்.

பி:—வாஸ்தவம்.

ம.—இதர ஸித்தாந்தங்களில் இல்லாமல் நம் ஸித்தாந்தத்தில் மாத்திரம் காணப்படும் விசேஷமென்ன?

பி.—மாயா நிர்வசனத்வதை சொல்லலாம்.

ம:—அப்படியே அதையும் அதைச்சேர்ந்தவைகளையும்.

பி.—சேர்ந்தவைகள் எவை?

ம:—இதிருக்கட்டும், மாயை என்றால் என்ன?

பி:—ஜகத்தில் வேற்றுமைக்குங் காரணமாயிருக்கிற பேதக தத்வம் என்று சிலர் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ம:—அசேதனப் பிரபஞ்சத்திலா, சேதனப் பிரபஞ்சத்திலா?

பி:—இரண்டிலும் நிருத், நிருசியம், இரண்டிலுமே நாநாத்வத்திற்கு மாயையே மூலகாரணம்.

ம:—மாயை இல்லையானால் நாநாத்வமே இருக்கமுடியாது.

பி:—அப்படித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ம:—அதாவது, மாயை இல்லையானால், ஜடமான த்வைத பிரபஞ்சம் தனித்திருக்க முடியாது.

பி:—அப்படியே.

ம:—அதே மாதிரி, மாயை இல்லையானால் நாம் இப்பொழுது இருக்கிற மாதிரி, தனித்தனியாக இருக்கமுடியாது.

பி:—அப்படித்தான்.

ம:—அதாவது, பேதத்தை உண்டுபண்ணுகிறதாக மாயை என்று ஒரு தத்வத்தை ஒப்புக்கொள்ளாத விஷயத்தில், பரதத்வமான ஈச்வரனுக்கு எப்படியோ அதேமாதிரி தனக்கும் தனியாக ஸத்தை உண்டென்று ஜடமான ஜகத்தும் சொல்லத்தலைப்படும். மண்ணிலிருந்து குடம் செய்கிற குசவனுக்கு ஸமானமான ஸத்தை குடத்திற்குக் காரணமாயிருக்கிற மண்ணுக்கும் இருப்பது போல.

பி:—வாஸ்தவம். சில ஸித்தாந்தங்களில் இந்தக் குசவனுடைய ஸ்தானத்தையே ஈச்வரனுக்குக் கொடுத்துவிட்டு, ஜகத்திற்கு உபாதான காரணமாக பிரதானம் என்றும் அணு என்றும் வேறு ஏதாவது என்றும் மூலகாரணம் கல்பிக்கிறார்கள்.

ம:—சில ஸித்தாந்தங்களில், அசேதனத்திற்கு தனியாக ஸத்தை கிடையாதென்றும், ஈச்வரனே நிமித்தகாரணமாயிருப்பது போல உபாதான காரணமாயுமிருக்கிறானென்றும், சொல்கிறார்கள். அதாவது, அவன் குசவன் மாத்திரம் அல்ல, மண்ணும் அவனே.

பி:—ஆம். விசிஷ்டாத்வைதிகள் அவ்விதம் சொல்கிறார்களென்று நினைக்கிறேன்.

ம—வேறு மதங்களிலும் இவ்விதம் சொல்லப்படுகின்றது. ஜகத்திற்கு ஈச்வரனே நிமித்தகாரணம், அவரே உபாதான காரணம் என்று சொன்னாலுங்கூட, ஜீவர்கள் அசேதனமில்லாததினால் ஜீவர்களுக்கு உபாதான காரணமாக ஈச்வரனைச் சொல்வதற்கில்லை. ஜீவர்கள் உண்டுபண்ணப்பட்டவர்களில்லாததினால், அவர்கள் ஸம்பந்தமாய் ஈச்வரன் நிமித்தகாரணமும் ஆகார்.

பி.—வாஸ்தவம்.

ம:—ஜீவர்கள் உண்டு பண்ணப்பட்டவர்களில்லையென்று வைத்துக் கொள்வதினால், அநாதியாக அவர்களும் இருந்தே வருகிறார்களென்று ஏற்படும். அப்படியானால், ஈச்வரனுக்கு துல்யமாய், ஸமகாலீநமாய், தனித்து இவர்களுக்கும் ஸத்தை உண்டென்று சொல்ல வேண்டிய அவசியம் அந்த மதவாதிகளுக்கு ஏற்படுகிறது.

பி:—அப்படித்தான். எல்லா ஜீவர்களுமே அநாதியென்று தான் சொல்கிறார்கள்.

ம:—நாமும் அப்படித்தான் சொல்கிறோம். ஜீவர்களுக்கு அநாதியாக ஸத்தை உண்டென்பதில் அவர்களுக்கும் நமக்கும் வித்யாஸமில்லை. அநாதியாய், தனித்து, ஜீவ ஸ்வரூபமாகவே ஸத்தை உண்டென்று அவர்கள் சொல்கிறார்கள். நாமோ வென்றால், ஜீவனும் பிரஹ்ம ஸ்வரூபமாயிருப்பதால் அநாதி என்றும், பிரஹ்மத்தை விட்டுத் தனித்து ஜீவனுக்கு ஸத்தை கிடையாதென்றும், சொல்கிறோம்.

பி:—வாஸ்தவம்.

ம:—அதாவது, சில ஸித்தாந்தங்களில், பரம்பொருளான ஈச்வரன் ஒருவர் உண்டென்றும், தனியான ஸத்தையுடன் அசேதன ஜகத்தும், தனியான ஸத்தையுடன் ஜீவர்களும் உண்டென்றும், சொல்கிறார்கள்.

பி.—ஆம்.

ம:—நம் அத்வைத ஸித்தாந்தம் ஒன்றில் தான், ஈச்வரனை விட்டு அசேதனத்திற்குத் தனி ஸத்தை கிடையாதென்பதுடன், ஈச்வரனை விட்டு ஜீவர்களுக்கும் தனி ஸத்தை கிடையாது என்கிறோம்.

பி.—அப்படியே.

ம.—பிரஹ்மம் என்று நம்மால் சொல்லப்படுகிற பரதத்வத்திற்கு வேறாக அசேதன ஜகத்திற்கு ஸத்தை கிடையாதென்பதுடன், ஜீவர்களுக்கும் தனியாக ஸத்தை கிடையாது என்று சொல்லும் அம்சம் அத்வைத ஸித்தாந்தத்தில் மாத்திரம் உள்ளதால், இதுவே அந்த ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணமான விஷயமாகும்.

பி—வாஸ்தவம்.

ம.—ஆகையால், இந்த அஸாதாரணமான அம்சந்தான் "அத்வைதம்" என்ற பெயருக்குக் காரணமாயிருக்கவேண்டும். அதினால்தான் அந்தப் பெயரை வஹித்துக் கொண்டு, இதரர்களாலும் அப்படியே வியவஹரிக்கப்படுகிறது.

பி—ஸரி. அந்த அஸாதாரணமான அம்சத்தை "அத்வைதம்" என்ற பெயர் எப்படிக் குறிக்கிறது?

ம.—நீங்களேதான் அத்வைதம் என்பது இரண்டற்ற தன்மையுடையதைக் குறிக்கும் என்றீர்களே?

பி.—ஆனால், அநேக ஈச்வரர்களை உலகத்தில் எந்த மதவாதியும் ஒப்புக்கொள்ளவில்லையென்று தாங்கள் எடுத்துக் காட்டினீர்களே!

ம.—வாஸ்தவம். "ஈச்வரனில் இரண்டாயிருக்கும் தன்மை கிடையாது" என்பதை "ஈச்வரனில் இரண்டு கிடையாது" என்று நீங்கள் தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டபடியால், எனக்கு மேல் கேள்விகள் கேட்க அவகாசம் கிடைத்தது. 'இரண்டு "ஈச்வரர்கள் கிடையாது" என்று மாத்திரம் அத்வைத சப்தத்திற்கு அர்த்தமானால், அப்பெயர் நம் மதத்தை மாத்திரம் சேர்ந்ததென்று சொல்ல எவ்வித நியாயமும் கிடையாது. 'ஈச்வரனைத் தவிர, இரண்டாவது தத்வம் கிடையாது' என்று அர்த்தம் வைத்துக்கொண்டால், அப்பொழுது அந்தப் பெயரை வஹிக்க நம் மதத்திற்கு மாத்திரம் பாத்தியதை உண்டு; வேறு யாருக்கும் கிடையாது. இந்த அர்த்தத்தில்தான் நம் மதத்தை "அத்வைதம்" என்கிறோம்.

பி—இப்பொழுதுதான் அப் பெயரின் வாஸ்தவத்தன்மை தெரிந்துகொண்டேன். ஆனால், ஜகத்தில் அசேதனங்களிலோ ஜீவர்களிடத்திலோ பேதத்திற்குக் காரணமாயிருக்கிற மாயாதத்வம் ஒன்று இருக்கிறதே! அது இரண்டாவது தத்வமில்லையா?

ம.—இல்லை. அது இரண்டாவது தத்வமாகாது. பிரஹ்மத்தினுடைய சக்தியென்று அதைப்பாவித்தாலுங்கூட, சக்தனாகிற பரமபுருஷனை பிரஹ்மத்தை விட்டு அதற்குத் தனியாக ஸத்தையிருக்கமுடியாது. இன்னும் பாரமார்த்திக த்ருஷ்டியில் கவனித்தால், அதற்கு ஸத்தையே கிடையாது. யா மா ஸா மாயா "எது இல்லையோ, அதுவே மாயை" என்ற நிர்வசனத்தினால் அதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. நித்ய வஸ்துவான பிரஹ்மத்திலிருந்து தாத்காலிகமாக ஸத்தையை இரவல் வாங்கிக்கொண்டு தானும் இருப்பதுபோல் தோன்றுகிறது. அவ்வளவுதான்.

பி.—இந்த மாயா விஷயமானது நவீன வித்வான்களில் அநேகர்களுக்கு வெறும் பிழையை உண்டுபண்ணுகிறது. அத்வைத ஸித்தாந்தம் எவ்வளவோ ஒழுங்காயிருந்த போதிலும், இது மாத்திரம் ஒரு அபலமான அம்சந்தான் என்று கூடச் சொல்கிறார்கள்.

ம.—அவர்களுடைய பிழை, அத்வைத ஸித்தாந்தத்திற்குக் கிட்டவே வராமல் தூர விலகிக் கொள்ளும்படி செய்துவிட்டால் பிசகுதல்லதாயிருக்கும். ஸாமான்ய ஜனங்களால் இன்னம் அநேக ஜன்மங்களுக்கு எட்டிக்கூடப் பார்க்கமுடியாத நிலையிலிருந்து அத்வைத ஸித்தாந்தம் பிரகாசித்திருக்கிறது. அதை இப்பொழுது இவர்களுக்கு தொடக்கூட அதிகாரமில்லை. அது ஸரியாதப்பா என்று நிர்மாணிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

(தொடரும்)

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆதாரங்களுடன் சுருக்கமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியது அவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம். கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை.

நாங்கள் சில்பாப்ரான்களை தயார் செய்து சரஸமான விலைக்கு விற்கிறோம். வேண்டியவர்கள் விலை விபரங்களுக்கு எழுதவும்.
R. Pandarinatham Chetty,
109-111, Naskarpara Road,
GHUSURI, HOWRAH.



# பர்வதராஜகுலத்தார்கள் கூட்டம்.

## ஜாதிபேதத்தைப்பற்றி ஸுகாதாரமந்திரி.

கும்பகோணம் ஸ்ரீ வாணிவிலாஸ சபையில் காலை 10-மணிக்கு சென்னை மாகாண பர்வதராஜ குலத்தார்களின் மூன்றாவது கூட்டம் கூடியது. இந்த மகாநாட்டிற்கு எடப்பாடி ஸ்ரீமான் எஸ், சின்னாண்டி பக்தர் தலைமை வகித்தார்.

காங்கிரஸ் காரர்கள் உலகத்தில் பல்வேறு ஜாதிகள் அரசாண்டனர் என்றும், அந்தந்த ஸமூகத்தாரின் பெருமை, கீர்த்தியை விளக்க கொடியுண்டென்றும் பறைசாற்றுவதை வாசகர்கள் அறிவார்கள். ஆயினும் மேற்படி சமூகத்தினரின் கொடி எத்தன்மையானதென்று அறியாததினாலோ, ஆராய்ச்சியில் அகப்படாததினாலோ, தங்கள் கொடி என்று காங்கிரஸ் கொடியை ஸ்வீகாரமாக்கிக் கொண்டனர்போலும். காங்கிரஸ் கொடியை சேலம் ஸ்ரீ. அ. சுப்பிரமணியம் எம். எல். ஏ. ஏற்றிவைத்தார், காங்கிரஸ் மகத்தின் பெயரால் வர்ணிக்கப்படும் முறையில் கொடியின் பெருமைகளை கொடியை ஏற்றிய பிறகு பேசினார்.

இது முடிந்ததும் சுகாதார மந்திரி கனம் டி. எஸ். எஸ். ராஜன் மகாநாட்டை திறந்து வைத்து பேசுகையில் பர்வதராஜகுலம் என்ற ஜாதி ஒன்று இருப்பதை தான் சுற்றித் திரிந்தவரையில் அறியவே இல்லை என்றும், ஜாதி வேற்றுமை என்பது காங்கிரஸ் கண்ணிற்கு புலனாகாதவை என்றும், இக்க வகுப்பார் மாகாணத்தில் பல்வேறு தொழில்களில் ஜீவனம் செய்து வருவதாக தன்னை மகாநாட்டிற்கு அழைத்தஸமயம் தான் அறிய நேரிட்டதென்றும், மனிதவர்க்கத்தில் ஒருவருக்கொருவர் வேறுபட்டு நிற்பது வெறுப்பானதென்றும், வகுப்பு முன்னேற்றம் என்று விக்ஞாபனம் செய்வதெல்லாம் ஸ்தானம், படிப்பு அதிகாரம் முதலியவற்றையே குறிப்பாகக் கருதப்பட்டுவருகிறதென்றும் ஆனால் அதைவிட உயர்ந்த விஷயம் பொதுவாக கடவுளுக்கும், நாட்டிற்கும் தொண்டாற்றுவதில் ஜாதி வித்யாஸம் இருக்கலாகாதென்றும், தெய்வத்தையும், ஜாதியையும் வித்தியாசம் செய்து ஆதியில் வைத்துவிட்டதினாலேயே நம் நாடு இருக்கிறது. தாக்கப்பட வேண்டியதென்றும், இந்த வித்தியாசம் அடிமையில் நாட்டினரை தலைகிளப்பாமல் செய்துவிடும் என்று காங்கிரஸ் செய்துவிட்டதென்றும், இதை ஜனசமூகமும் நன்றாகத் தெரிந்துகொண்டுவிட்டதென்றும், இந்த மகாநாட்டில் தான் வருவதற்குக் காரணம் காங்கிரஸுக்கும், அதன் மந்திரிகளுக்கும் பர்வதராஜகுலத்தவர் ஆதரவு அளிப்பதேயாகும் என்றும், எடப்பாடியில் வசிக்கிறவர்கள்தான் முதன் முதலில் காந்தி மதத்தில் சேர்ந்தார்கள் என்றும், ஜாதிமத வேறுபாடுகளை விட்டு தேசத்தின் சுவதந்திரத்துக்கு பலமாக உழைக்கும்படி வேண்டி மகாநாட்டை திறப்பதாகக் கூறினார்.

வரவேற்புக்கழகத்தின் தலைவர் ஸ்ரீமான் கே. பழனிசாமி பக்தர் வரவேற்பு பத்திரத்தைப்படித்தார். அதில் பர்வத ராஜகுலத்தோர் முன்னேற்றத்தைப்பற்றியும், கல்வி, சமூஹத்தொண்டு, பெண் கல்வி, கைத்தொழில், தேச கைங்கர்யம் முதலியவற்றைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகு, மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் ச. சின்னாண்டி பக்தர் தனது அக்கிராசன பிரசங்கத்தைச் செய்தார். இவருடைய பிரசங்கத்திலும் சமூக முன்னேற்றத்தை பல துறைகளில் வியாபிக்கச் செய்ய குறிப்பிடப்பட்டிருந்தது.

திருச்சினாப்பள்ளி ஸ்ரீமான் ஹாலாஸ்யம் காந்தி படத்தையும், ஜவஹர் படத்தை ஸ்ரீமான் அம்மாபேட்டை வெங்கடாமனும், சுபாஷ் படத்தை ஸ்ரீமான் டி. எஸ். ராமபத்ர உடையாரும் திறந்து வைத்தார். இத்துடன் கூட்டம் முடிந்தது.

மத்தியானம் 3-30 மணிக்கு மகாநாடு ஆரம்பித்தது. பெண் கல்வியைப்பற்றி ஸ்ரீ பழனி அம்மாள் என்ற சிறுமி ஓர் பிரசங்கம் செய்தாள்.

இந்த மகாநாடு காங்கிரஸ்காரர்கள் கிளப்பி விட்டு அந்த தோரணையிலேயே மகாநாடு நடத்தப்பட்டதாலும், அவர்கள் கொடியேற்றுவிழாவே செய்து வைக்கப்பட்டதாலும் தீர்மானங்களும் அதை அநுசரித்தே செய்யப்பட்டது. மந்திரியாகவிருந்து காலமான கனம் ராமன்மேனன் பிரிவுக்கு வருத்தப்படுவதாகவும், சென்னைகாங்கிரஸ் மந்திரிகள் மதுவிலக்கு, விவசாயக்கடன் சட்டம், புகைஇலை வரி, ஸாமான்கள் விற்கிறதின்மேல் வரி, சட்டங்கள், இனி வரும் சட்டங்களை ஆதரிக்கிற காங்கிரஸ் மந்திரிசபையை பாராட்டி ஆதரிக்கிறதாயும், குலத்தார் ஜீவ வதை செய்து நைவேத்தியம் வைக்கலாகாதென்றும், பத்திரிகை ஒன்று இந்த குலத்தவர்களுக்காக நடத்தப்படவேண்டும் என்றும், கலியாண காலத்தில் ரூ 1 இந்த சபைக்கு நன்கொடை பெறவேணும் என்றும், ஆண் பெண் இரு பாலரும் படிக்க கட்டாயம் செய்தல் வேண்டும் என்றும் சாந்தமான தீர்மானங்களைச் செய்தார்கள். காலை நடவடிக்கைக்கு காங்கிரஸ் கக்ஷியார்கள் வந்திருந்தார்கள், பிற்பகல் நடவடிக்கைகளுக்கு வரவில்லை. மகாநாட்டின் அக்கிராசனர் முடிவுரையில் குலத்தார் ஒற்றுமையாகவேண்டினார். வந்தனோபசாரம் செய்து கூட்டம் கலைந்தது.

ந. வி. நி.

## தர்ம ஸம்வர்த்தினி பிராமண ஸபா.

பெரிய குளம்.

26—3—39 முதல் 6 தினங்களிலும் சபையின் ஆதரவில் கலையம்புத்தூர் ப்ரம்மஸ்ரீ சுதாசிவ ப்ரம்மம் அவர்களால் ஆலயப் பிரவேசம், சமபந்தி போஜனம், காரியசித்தி, சமூஹ சீர்திருத்தம், க்ரஹஸ்தாஸ்ரம தர்மம், பாதிவ்ரத்ய தர்மம், இத்யாதி விஷயங்களை வேதப் பிரமாணங்களுடன் பொது ஜனங்களுக்கு புத்திகோசரமாக எடுத்துச் சொன்னார்கள்.

2—4—39 ப்ரம்மஸ்ரீ குலமங்கலம் வைத்தினாத பாகவதர் அவர்கள் ப்ரம்மணர்களுடைய நித்யகர்மனுஷ்டான விதிகளையும் பலன்களையும் பற்றி விபரமாய் எடுத்துச் சொல்லி ஆழ்வாராதிகளுடையவும் 63 நாயன்மார்களுடைய சரித்திரங்களை சிறுகதைகளாக குழந்தைகளுக்கு போதிக்க வேண்டிய வழிகளையும் எடுத்துக் சொன்னார்.

காரியதரிசி

## கும்பகோணத்தில் சுகாதார மந்திரி. பொதுக்கூட்டத்தில் பேச்சு.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம் ஏப்-11உ

காந்தி பார்க்கில் நேற்று மாலை 6 மணிக்கு திருச்சி ஸ்ரீமான் ஹாலாஸ்யம், சேலம் சுப்பிரமண்யம், அம்மாபேட்டை வெங்கடராமன், சின்னாண்டி பக்தர், சுகாதார மந்திரி கனம் ராஜன் எல்லோரும் தங்கள் தங்கள் நீண்டகால அனுபவத்திறமைப்பட பேசும் வழக்கத்தை அனுசரித்துப் பேசி விற்பனை வரிக்கு விதண்டாவாதம் செய்யாது விட்டுவிட வேண்டினார்கள். பிரசங்கத்தில் ஆக்ஷேபனைக் குப்பல, வேதாந்த உபதேசங்கள் செய்யப்பட்டன. பின்னர் நமக்கெது வேண்டும். வரிதான் வேண்டும்,

## ஸ்ரீ ராமபட்டாபிஷேக மகோற்சவம்.

சென்னை முத்தியாலுபேட்டை சைவ முத்தையா முதலி சந்து 2ம் நம்பர் கிருஹத்தில் சென்ற ஒன்றரை வருடகாலமாய் எண, திருமங்கலம் ஸ்ரீ உபயவே பாவஸ்து ரங்கசார்யா ஸ்வாமியால் நடத்தப்பெற்றுவந்த ஸ்ரீமத் வால்மீகி ராமாயண கதோபந்யாஸத்தில் நாளது வெகுதானிய பங்குனி மாதம் 25உ (7—4—39)வெள்ளிக்கிழமை மாலை "ஸ்ரீராம பட்டாபிஷேகம்" வெகு சிறப்பாக நடைபெற்றது.

பூர்வகதா ப்ரஸங்கத்தில் ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேக விவரணமானதும் வித்வான் டி. எஸ். கோதண்டராமய்யரவர்கள் பாகவதரைப் புகழ்ந்து கூறி அவருக்குப் பாமாலை சூட்டப்பழகாத பான்மையால் பூமாலை சூட்டுவதாக வெகு விநயத்துடன் கூறி ஒரு பூமாலையை யிட்டார். அங்கு வந்திருந்த திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கக் காரியதரிசி உபந்யாஸகரை கொண்டாடியதுடன் வால்மீகிராமாயணத்துடன்கம்பராமாயணப் பாக்களையும் சந்தர்பத்துக்கனுகுணமாக பிரசங்கியார் கூறுவது அழகாக இருப்பதாகவும் இருவரையும் நன்கு போற்றவே தமிழ் வளர்ச்சி பெற்று நாடு நலம் பெறும் என்றும் அழுத்தமாகக் கூறினர். அவையோர் கேட்டு அகமகிழ்ந்தனர்.

முத்தியால் பேட்டை ஸத்கதா பிரசார சபை இனிது வாழ்க. சுபம்.

ஒரு விசேஷ நிருபர்.

## திருவல்லிக்கேணித் தமிழ்சங்கம்.

கம்பர் திருநாட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 3—5—1939 (பங்குனி உத்திரம்) மாலை 6–30 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் பிராட்டி திருமுன்பு, பெருமாளும் தாயாரும் திருமணக் கோலத்துடன் ஸேவைஸாதித்து நிற்க, விசேஷ அலங்காரத்துடன் விளங்கிய மண்டபத்தில் "கம்பர் திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது.

"அலங்கலிற்றோன்றும்"; "உலகம் யாவையும்"; "ஆராதவருளமுதம்"; என்ற பாக்கள் கடவுள் வாழ்த்துப்பாடி, சில அவசர அலுவல்களால் அன்று அவைத்தலைமை தாங்க இணங்கியிருந்த திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் வாராது நிற்க, காரியதரிசியால் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பெற்று பிரார்த்தித்த அளவில் சங்கத்தலைவரும் ஆமோதிக்க திருமயிலை அட்வொகேட் ஸ்ரீ. ஆர். கோபாலஸாமி அய்யங்காரவர்கள் அக்ராஸநம் வஹிக்க, ஸ்ரீ காரியதரிசி அவருக்கும் அங்கு வந்திருந்த பெரியோர்கட்கும் மாலையிட, அவைத் தலைவர் வான்மீகியும் கம்பரும் அம்ருதமதன விருத்தாந்தத்திலே தத்தம் இராமாயணத்தைத் தொடங்கின அழகை முன்னுரையாகக் கூற, குருச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் தொல்வழிக் கம்பர்' எனும் விஷயம்பற்றி மிக உருக்கத்துடன் செவ்வியதோர் பிரசங்கம் செய்ய, தலைவர் சுருக்கமாக முடிவுரை கூற, காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க, பெருமாளும் பிராட்டியும் திருவமுது செய்த சர்க்கரைப் பொங்கல் இஷ்டவிநியோகமாக, கொண்டாட்டம் இரவு 8–15மணிக்கு இனிது நிறைவெய்தியது. 'கம்பராமாயண வகுப்பு' நடைபெற்றுவருகிறது. இராமன் வில்விறுத்த வாலாற்றினைத் தாதுவர் தயாத மகாராசனுக்குத் தெரிவிக்கின்றனர்.

ப. ரே. திருமலை அய்யங்கார்.
காரியதரிசி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
र्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

## ஆர்யதர்மம்

பகுதான்யஹு பங்குனி-மீ 31உ

### விவாஹரத்து மசோதா.

ஹிந்து ஸ்திரீகள் விவாஹரத்து செய்து கொள்ள வஸதியளிக்கக் கூடிய மசோதாவை டாக்டர் தேசமுகர் என்பவர் இந்தியா சட்டஸபையில் பிரேரேபித்துப் பேசுகையில் கூறிய சில விஷயங்களை நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. "விவாஹரத்து" என்ற கொடிய வார்த்தையைக் கூட இன்று வரையில் நம் தேசத்தில் கேட்டவர்கள் கிடையாது. நமது சாஸ்திரங்களிலும் இந்த ஆபாஸ வழக்கத்திற்குச் சிறிது கூட ஆதாரம் கிடைக்காது. உலகம் தோன்றிய காலம் முதலாக நம் தேசத்தில் இது மறைவாக வந்து வழக்கத்திலிருந்ததாகவும் சொல்லமுடியாது. ஆகவே இது மேற்றிசைகளிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட நாகரிகாபாஸங்கள் பலவற்றில் ஒன்றென்பது நிர் விவாதமான விஷயம்.

எந்த தேசத்திலிருந்து டாக்டர் தேஷ்முக் போன்றவர்கள் இந்த விவாஹரத்து அநாகரிகத்தை கற்று வந்தார்களோ, அத்தேசங்களில் இந்த முறையால் உண்டாயிருக்கும் தீங்குகளையும், கொடுமைகளையும் ஆபாஸங்களையும் கவனித்தவர்கள் புண்ய பூமியாகிய நம் தேசத்திற்கும் இது வேண்டுமென்று ஸ்வப்னத்திலும் நினைக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஒவ்வொரு வருஷமும் பதினாயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் விவாஹரத்துக் கோரி கோர்ட்டுகளில் வந்து கிரிப்பாலியாரும் கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்த வண்ணமாயிருக்கின்றன.

தவிரவும் அந்த தேசத்திலும் விவாஹரத்து என்பது வரையறையற்றதாயும், ஸுலபஸாத்யமாயுமிருக்கவில்லையென்பது கவனிக்கத் தக்கது. ஆனால் தேஷ்முக் மசோதாவோ வென்றால் மேற்றிசைச் சட்டங்களையும் விட அதிகரமித்ததாயிருக்கிறது. இத்தகைய மசோதாவை தேச க்ஷேமத்தில் உண்மை நோக்கமுள்ள எந்த இந்தியனும் சொண்டுவாவோ ஆதரிக்கவோமாட்டான்.

ஸரியான புருஷனை மணக்காததால் ஏற்படும் துன்பத்தை ஸஹித்துக்கொள்ள இஷ்டப்படும் ஸ்திரீகளை இந்த மசோதா கட்டுப்படுத்தாதென்று ஸ்ரீமான் தேஷ்முக் ஆறுதல் சொல்லுகிறார். இதற்கு 1856-ம் வருஷத்தில் செய்யப்பட்ட விதவாவிவாஹச் சட்டத்தை உதாஹரணமாகக் காட்டுகிறார்.

மேலும் இந்த மசோதாவானது ஹிந்துச் சட்டங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் உட்பட்டதென்று வாதிக்கிறார். ஹிந்துமதமானது ஸமயத்திற்கேற்றபடி மாறிக்கொண்டு வருகிறதாம். விவாஹரத்தானது ஹிந்து மதத்தின் கருத்திற்கு விரோதமானதில்லையென்றார் இவர் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறார்? சாஸ்திரத்தில் இதற்கு ஆதாரமிருப்பது உண்மையானல் இத்தேசத்தில் என்றைக்காவது இது வழக்கத்திலிருந்து வந்திருக்கவேண்டும். இப்பெரிய தேசத்தில் ஓரிடத்திலாவது இதுவரையில் இது இல்லாததாலேயே இது சாஸ்திரத்திற்குப் புறம்பானதென்பது தெளிவாகும்.

மேலும் மனு முதலியவர்கள் ஸந்தேஹத்திற்கு இடமில்லாத வழியில் இதைத் தடுத்திருக்கிறார்கள். தம்பதிகளின் ஸம்பந்தமானது கேவலம் இஹலோக கர்மங்களில் மட்டும் ஸம்பந்தப்பட்டதாக இல்லை. ச்ராத்தம் போன்ற பற்பல தர்மத்தை முன்னிட்டுப் பல தலை முறைவரையில் அந்த ஸம்பந்தம் நீடிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. விவாஹரத்து செய்துகொண்டவளோ, அவளுடைய பிள்ளைகளோ முந்திய பர்த்தா, பிந்திய பர்த்தா இவர்கள் விஷயமாக எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்று எங்கும் விதிகிடைக்கவில்லை, மதஸம்பந்தமான கொள்கைக்கு முரண்பாடில்லையென்று தேஷ்முக் தனிப்பில்லேயும் தோனேயில் பேசிவிட்டால் போதுமா? தர்மதத்வங்களின் வாஸனையைக் கூட இவர் அறிந்திருக்க நியாயமில்லை, பராசரஸ்ம்ருதியின் ஒரு சுலோகத்தை இவர் போன்றவர்கள் ஆதாரமாகக் காட்டுவதும் அபத்தமே, அந்த சுலோகத்தின் உண்மையான அர்த்தத்தை இவரோ இவரைப் போன்றவேறு சீர்திருத்த வாதிகளோ எவ்வளவு ஜன்மமெடுத்தாலும் அறியமுடியாது, ஸ்மிருதிகள் அல்லது ஹிந்து சாஸ்திரங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டியதற்காக ஏற்பட்டுள்ள நியமங்களையும் நியாயம் முதலியவைகளையும் புறக்கணித்துவிட்டது ஒருநிர்ணயம் செய்வது ஹிந்து மதமாகாது. சாஸ்திரங்களுக்கு வ்யாக்யானம் செய்த எந்த ஆஸ்திகரும் பராசரவசனத்திற்கு இவர் கொண்டுள்ள அர்த்தத்தைக் காட்டவில்லை. ஆதலால் சாஸ்திரத்திற்கு ஏற்றதென்று இவர் ஸாதிப்பது பாமரர்களை ஏமாற்றவே உதவும்.

இந்தியா கவர்ன்மெண்டாரும் மற்ற ஜனப்பிரதிநிதிகளும் தங்களுடைய பொறுப்பையும் கடமையும் மதித்து இவ்விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டியது அவச்யமாகும்.

## குறிப்புகள்.

### ஹிந்து மதமும் விக்ஞான சாஸ்திரமும்.

இக்காலத்தில் ஹிந்துமதத்திற்கும், விக்ஞான சாஸ்திரத்திற்குமுள்ள ஸம்பந்தத்தைப்பற்றி அதிகம்பேசப்படுகிறது, இதைப் பற்றி ஸ்ரீமான் ராமஸ்வாமி சாஸ்திரியார் சில தினங்களுக்குமுன் சென்னையில் பேசியிருக்கிறார், உபநிஷத்தில் கூறப்படும் காலத்திற்கு நாம் மீண்டும் திரும்பமுடியுமென்றும், அதற்கு ஆத்மஞானமும் காந்திஜி போதிக்கும் அஹிம்ஸையும், தாழ்த்தப்பட்டோரிடம் அன்பும் வேண்டுமென்று சொன்னார். சென்னட் மூன்று ஸாதனங்களும் இப்போதும் கூடச் சிறிதாவது நம் ஸமூகத்தில் இருந்துவருவதை மறக்கமுடியாது. மனிதர்களுக்கு ஆத்மஞானத்தை போதிக்க நம் தேசத்தில் இன்றைக்கும் கணக்கற்ற பெரியோர்கள் கங்கணம் கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆயினும் நவீன நாகரிக மோகமானது, நாஸ்திகபத்தை அடிப்படையாகக் கொண்டு நம் தேசத்தில் பரவிவருவதே நம்மவர்கள் ஆத்மஞானம் பெறுவதற்குத் தடையாயிருந்து வருகிறது. அஹிம்ஸையை உலகிற்கு போதித்த மதமே நமது மதம்தான். காந்திஜி தலையெடுப்பதற்கு எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன் நமது மதமானது, மனோ வாக்கு காயமென்ற திரிகரணத்தாலும் ஹிம்ஸை செய்வதை வெகு பலமாகக் கண்டித்திருக்கிறது. இந்த அஹிம்ஸாதர்மமானது தற்கால நாஸ்திக நாகரிகம் மூலமாக நம்மிடம் மறைந்துவருகிறது. ஆதலால் நாம் உபநிஷத் காலத்திய உயர்வை அடைய வேண்டுமானால் அதற்குப் பெரிய இடையூறாக நிற்கும் மேற்றிசை நாகரிகப் பிசாசத்தை ஓட்டவேண்டியதே முக்யகார்யமாகும்.

தாழ்த்தப்பட்டோரிடம் அன்பு காட்ட வேண்டுமென்பதும் நமக்குப்புதிதல்ல. அது நீண்ட காலமாகக்காட்டப்பட்டே வருகிறது அவர்களை நாம் நல்ல நிலைமையிலேயே நடத்திவந்தோம். ஸ்வயநலமிகளான தற்கால நாகரிகர்கள் தோன்றி நாம் தாழ்த்தப்பட்டவர்களை நன்கு நடத்தவில்லையென்ற பொய் பிரசாரத்தை நடத்தி வருகிறார்கள். ஆகையால் இந்த விஷயமும் நமக்குப்புதிய போதனையல்ல.

ஹிந்து மதமானது வெறும் பழக்க வழக்கத்தை ஆதாரமாகக்கொண்டதென்று நினைப்பது முற்றிலும் தவறென்று ஸ்ரீ சாஸ்திரியார் சொல்லியது உண்மையே. ஹிந்துமதமானது தற்கால விக்ஞான முறைப்படி அமைந்திருப்பதல்லாமல், ஜனநாயகம் நிஹிலவாதம் தொழில் அபிவிருத்தி ஆகியவைகளுக்கும் ஏற்றதாயிருக்கிறதென்று அவர் சொல்லியதும் முற்றிலும் வாஸ்தவமே.

விக்ஞானம் என்பது நிஷ்கர்ஷமாக எந்த அர்த்தத்தில் இக்காலத்தில் உபயோகப்படுகிறதென்பது தெளிவாயில்லை. ஆயினும் பொதுவாக அதற்கு ஓர் அர்த்தம் வைத்துக்கொண்டுதான் பேசுகிறார்கள். அதன்படி பார்த்தால் நமது மதமானது விக்ஞானத்தை அஸ்திவாரமாகக்கொண்டிருப்பது நிரூபணமாகும், நமது இஹலோக சம்பந்தமானதும், பரலோக ஸம்பந்தமானதுமான பல ஆசார அனுஷ்டானங்களும் கொள்கைகளுமிருக்கின்றன. ஆசமனம். பிராணாயாமாதிகளிலும் பிரம்ஹத்யாநாதிகளிலும் விக்ஞான சாஸ்திரீய தத்வங்களே அதிகமாயிருக்கிறதென்பதை நிரூபிக்க முடியும். ஜனநாயகம், நிஹிலவாதம் அல்லது பொது உடைமை தத்வம் தொழிலபிவிருத்தி ஆகிய ராஜ்ய சமூக தத்வங்களும் ஹிந்து மதத்தில் போல் எங்கும் அமைந்திருக்கவில்லையென்பதும் அசைக்கமுடியாத உண்மையாகும்.

### பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அவஸரக் கூட்டம்.

இதாலியானது அல்பேனியா என்ற பிரதேசத்தில் ஆதிக்யம் பெற முயற்சிப்பதால் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப்பற்றி யோசிப்பதற்காக பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அவஸரக்கூட்டம் கூட்டப்படுகிறது.

ஐரோப்பாவில் உள்ள ஒரே மஹம்மதிய ராஜ்யமாகிய அல்பேனியாவை இதாலி ஆக்ரமித்துக் கொள்ளுவதைப்பற்றி இந்திய முஸ்லீம்கள் பலவிடங்களில் கூட்டம் போட்டு இதாலியைக் கண்டிக்கிறார்கள். முஸோலினி இதைக்கண்டு நடுங்குவார் போலும்!



## வாரக் குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

புராண காலந் திரும்புகிறதா? அரிச்சந்த்ரன் தனக்கு புத்ரன் பிறந்தால் அவனைக் கொண்டு யாகம் செய்வதாகக்கூறி சுநச்சேபனைக்கொண்டு அதைப்பூர்த்தி செய்ய ஆரம்பித்ததாக புராணக்கதை. திண்டுக்கல்லில் 3 பெண்ணைப் பெற்ற ஒருவர் பிள்ளை பிறந்தால் அதை தன்னிஷ்ட தேவதைக்கு பலி கொடுப்பதாக பிரார்த்தித்தார். பிள்ளையும் பிறந்தது. பலியிடும் போது அரசாங்கம் தடுத்தது.

காசி மன்னர் மறைவு! வர்ணாச்ரம தர்மத்தில் பூர்ண அபிமானமும் ஆசார்ய பக்தியும் தேசீய தாராள நோக்கமுமுள்ள மன்னர் விச்வேசன் திருவடி சேர்ந்தார். பிரிடிஷ் அரசாங்கம் அவரை ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடாதென்றாலும் முடிவில் அவர் கார்யம் ஜயமாகி 12 வயது குழந்தையை அரசராக்கினர்.

மறுபடி பூனா சண்டை!! மாருதி கோயில் மணியடிக்கும் கட்டடம் கட்டும் சண்டையால் ஸத்யாக்ரஹம் தோன்றி ஒருவாறு அடங்கிற்று. மறுபடியும் சண்டை ஆரம்பமாகியது போலும்! என்ன ஹேது?

தென்னாட்டு தெய்வம் திரும்புகிறது!! காசி யாத்ரையை முடித்துக்கொண்டு நமது பரமாசார்யாள் காளஹஸ்தி வந்து விட்டார்கள்! காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கும்பாபிஷேகம் வைசாகத்தில் நடைபெறும்! ஆங்காங்கு ஸ்ரீமுகங்கள் படிக்கப்படுகின்றன! புண்யமுள்ளவர் பங்கெடுத்துக்கொள்க!!

பிரார்த்தனையின் பயன்! டாக்டர் பீடர்ஸ் என்ற தொழிலாளியைச்சேர்ந்த ஓர் பார்லிமெண்ட் அங்கத்தினர் பகலத் பிரார்த்தனையின் பயனை எடுத்துக்காட்டி இந்தியாவை அதில் நம்பிக்கை வைத்திருப்பதற்காக கொண்டாடுகிறார். ஆனால் அவர் ஸஹவாஸத்தால் நம்பிக்கை குறைந்தது!!

கஷ்டம்' கஷ்டம்!! மதுரையில் ஓர் ஸ்திரீ வறுமையால் உணவின்றி 3 ஆண் குழந்தைகளைக்கிணற்றில் தள்ளி தானும் விழுந்தாள். ஆனால் அவள் பிழைக்க, அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது!! கருணையுள்ள நீதிபதி சிக்ஷை விதித்து அரசாங்கம் கருணை காட்டும் படி கூறுகிறார். குற்றம் யாருடையது?

ஜைநர் எதிர்ப்பு! ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து ஜைநர் கிளர்ச்சி செய்வது மைசூர் அரசாங்கம் கண்ணைத்திறக்கிறது!! கவனிக்கின்றனர்!! முடிவு யாதோ? சென்னை?

பிள்ளையார் பூஜையோ? இதாலி அல்பேனியா யுத்தமாரம்பமாகி விட்டது. இது உலக யுத்தத்திற்கு விக்நேச்வர பூஜையோ என ஸந்தேஹிக்க வேண்டியிருக்கிறது?

இன்னும் துலுக்க பயமா? முல்டானில் ஓர் பதிவிருதை தன் கணவன் மரணத்தருவாயிலிருக்க அச்வத்த பிரதக்ஷிணம் செய்யச் சென்றாள். ஓர் துலுக்கன் தூக்கிக்கொண்டு போய்த் தன் வீட்டிலடைத்தான். அவள் தப்பி வந்து இறந்த கணவனைக்கண்டாள். கருணையுள்ள அரசாங்கத்தின் கடமை என்ன?

### ஸமஷ்டியை ஹிந்துக்கள் ஏற்க வேண்டும்.

டாக்டர் மூஞ்ஜே வற்புறுத்து.

ஹிந்து ஸபைத்தலைவரான டாக்டர் மூஞ்ஜே ஓர் முக்ய அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இந்தியாவில் தற்போதுள்ள நிலைமையில் ஹிந்துக்கள் ஸமஷ்டித்திட்டத்தை ஏற்றுக்கொண்டு நடத்துவதே சிறந்த விவேகமென்றும், ஹிந்துக்கள் ஸமஷ்டியை எதிர்ப்பதால் தங்கள் ஸமூஹத்திற்கே தீங்கு செய்துகொள்வதாயும், மகம்மதியர்கள் தங்கள் ஸமூஹ நன்மையைக் கருதியே ஸமஷ்டியை எதிர்ப்பதாயும், காங்கிரஸ் ஸமஷ்டியை கண்மூடித்தனமாக எதிர்ப்பதால் ஸமஷ்டியில் முஸ்லீம் ஆதிக்யம் அதிகமாகி ஹிந்துக்கள் மைனாரிடியாக இருக்க நேருமென்றும் இந்த பெரிய அபாயத்தை ஹிந்து ஸமூஹம் உணர வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

மேலும், காந்திஜி இப்போது ராஜ்கோட் முதலிய ஹிந்து ஸம்ஸ்தானங்களில் ஆரம்பித்துள்ள கிளர்ச்சியால், 'அங்கெல்லாம் இதுவரையிலில்லாத படி முஸ்லீம்களும் பங்கு கேட்க ஆரம்பித்து அதன் மூலம் ஹிந்து சமூஹத்தின் பாத்யங்கள் குறைந்துபோகுமென்றும் டாக்டர் மூன்ஜே குறிப்பிடுகிறார்.

ஒருக்கால் ஐரோப்பாவில் யுத்தமேற்பட்டால் அந்த ஸமயம் பார்த்து ஆப்கானியர்கள் 1919 ல் செய்தது போல் இந்தியர் மீது படையெடுத்தால் இந்தியாவிலுள்ள சுயநலம் கொண்ட முஸ்லீம் ராஜ்யங்களும் ஆப்கானியருடன் சேர்ந்து ஹிந்துக்களை நசுக்கக்கூடுமென்றும், ஒரு பக்கம், ஜப்பானாலும், மற்றொரு பக்கம் ஆப்கானியர்களாலும் ஹிந்துக்கள் நசுக்கப்படுவதற்கு இடமிருப்பதாயும், மூஞ்ஜே தமது அறிக்கையில் எச்சரிக்கிறார். அந்த ஸமயங்களில் காந்திஜியின் அஹிம்ஸா தர்மத்தை ஆப்கானியர்கள் மதிப்பார்களா வென்றும் கேழ்கிறார்.

### முஸ்லீம்களுக்கு தனி பிரதேசமாம்.

ஸமீபத்தில் நடைபெற்ற முஸ்லீம் லீக் கூட்டங்கள் பலவற்றிலும் இந்தியாவிலுள்ள முஸ்லீம்களைத் தனிப் பிரதேசத்தில் தனியான ஸ்வதந்திரத்துடன் வாழ்ந்துவரும் படி செய்துவிடவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் ஹிந்து மந்திரிகள் முஸ்லீம்களின் பாத்யங்களை வேண்டுமென்று நசுக்கி வருகிறதாயும் முஸ்லீம் தலைவர்கள் கட்டுப்பாடாக பிரசாரம் நடத்தி பாமரர்களை தூண்டி விட்டு வருகிறார்கள்.

### ஸம்ஸ்தானக் கிளர்ச்சியின் விபரீதம்.

ராமதுர்ககத்தில் பெரும் கலம். பலர் இறந்தனர்.

ராமதுர்க்கம் என்ற சிறிய ஸம்ஸ்தானத்தில் பிரஜா மண்டலத்தின் வேலைகளை ஸம்ஸ்தான அதிகாரிகள் தடை செய்ததுடன் பல தலைவர்களையும் கைது செய்தனர். இதனால் கோபமடைந்த ஜனக்கூட்டமானது பெரும் கலஹத்திலிறங்கி சில போலீஸ்காரர்களையும் ஜயில் வார்டர்களையும் கொன்று விட்டது. போலீஸாரும் சுட்டனர். ஜயில் நாசமாக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் அஹிம்ஸையை வற்புறுத்தி வருகிறார்களாம்!!

### ஹைதராபாத் ஹிந்துக்களின் கதியென்ன?

டில்லிக்கூட்டத்தில் கலவரம்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களை ஒதுக்குவதற்காகச் செய்யப்படும் சட்டத்தை எதிர்க்க டெல்லியில் ஸ்ரீஸரோஜனியின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது, அதில் ஏராளமான ஆர்ய ஸமாஜிகள் வந்து தங்களது குறைகளை வெளியிட்டார்கள், இந்தியாவிலேயே ஹைதராபாத் போன்ற விடங்களில் ஹிந்துக்களின் உரிமை பஹிரங்கமாக நசுக்கப்பட்டு வருகையில். அதைப்பற்றி காங்கிரஸ் தலைவர்களோ, மற்றவர்களோ வாய்திறவாமல் மௌனம் ஸாதித்து வருகையில் அன்னிய தேசவாஸிகளான இந்தியர் விஷயத்தை மட்டும் இவ்வளவு முக்யமாக கவனித்தால் போதுமா என்று ஆர்ய ஸமாஜிகளை கேட்டனர், வார்த்தை தடிக்கவே இருதரத்தினருக்கும் கலவரம் நடந்தது.

### தேசீய வாரக் கலஹம்.

தேசீய வாரத்தை முன்னிட்டு பல ஊர்களில் நடைபெறும் காங்கிரஸ் கூட்டங்களில் எதிர் கக்ஷியார் புகுந்து பெரிய கலஹம் நடத்துவதாகத் தெரிகிறது. சென்னை— திருச்சி முதலியவிடங்களில் கலஹம் நடந்தது. சென்னையில் போலீஸ் தடியடியும் நடக்கவேண்டியதாயிற்று.

### பொன் மொழிகள்.

வேதத்தை எப்பொழுதும் ஓது. அது கூறிய கர்மாவை நன்கு அனுஷ்டானம் செய் 'அக்கர்மாவே கடவுளுக்குச் செய்யும் பூஜை" காம்ய விஷயத்தில் ஆசையை அகற்று "குவிந்த பாபத்தை கர்மானுஷ்டானத்தினால் கரை" இல்லறத்திலுள்ள துக்கத்தை யோஜித்தும் பார். பரமாத்மாவிடம் ஆசை வை ஸம்ஸாரத் தொல்லையிலிருந்து சீக்ரமாய் கிளம்பு.

### திண்டுக்கல்.

சென்ற 26—3—39 ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ப்ரம்ஹஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகளவர்கள் உபமன்யு மஹரிஷியின் "பக்தி விலாஸத்"திற் கூறப்பட்ட "ஸ்ரீ அமர்நீதி நாயனார்" சரிதத்தை மிகவும் அழகாகவும் பக்திரஸம் ததும்பும்படியாகவும் உபன்யஸித்தார்கள்.

வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது. நிரு

### 3-4-39-ஹு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை | 3—8—0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை | 3—4—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை | 7—6—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை | 6-15—0 |
| தேங்காய் எண்ணை 64 சேர் நிறை | 4-12—0 |

ஷை தாசில்தார்.

## நாகப்பட்டினத்தில் ஸ்ரீ ராமசந்திர பட்டாபிஷேகம்.

நாகப்பட்டினம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற சுமார் 40 தினங்களாக மன்னார்குடி வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் பிரவசனம் செய்யப்பட்டு வந்ததில் சென்ற (6-4-39) குருவாரத்தன்று ஸ்ரீ ஸீதா ராமசந்திர பட்டாபிஷேக மஹோத்ஸவ கட்டமானது வெகு விமரிசையாக உபன்யஸிக்கப்பட்டது. சாஸ்திரிகளவர்களுடைய பக்தி புரஸ்ஸரமானதும் வெகு கம்பீரமானதுமான பிரவசனத்தில் ஈடுபட்டவர்களாக ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் கூடியிருந்தார்கள். பட்டாபிஷேக சந்தர்ப்பத்தில் சாஸ்திரிகள் அவர்களால்செய்யப்பட்ட ரமகாவமானது எல்லோருடைய மனதையும் பரவசமாகச்செய்தது.

அதற்கு முந்தி சாஸ்திரிகளவர்களால் விபீஷண சரணாகதியானது அத்வைத மத ரீதியாகவும் விசேஷமாக விசிஷ்டாத்வைத மத ரீதியாகவும் வியாக்யானங்களுடைய அபிப்பிராயங்களை விமர்சம்செய்து வெகு அழகாக உபன்யஸிக்கப்பட்டது.

### ஸ்ரீஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளின் ஸ்ரீமுகம்.

அன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளிடமிருந்து பிரம்மஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதரவர்கள் மூலம் அனுப்பப்பட்ட ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு ரதோத்சவமும் கும்பாபிஷேகமும் நடத்துவதாக செய்திருக்கும் ஸங்கல்ப சம்பந்தமான ஸ்ரீமுகமானது மஹாஜனங்கள் முன் பாகபடிக்கப்பட்டு ஸ்ரீ ஆசார்யகைங்கர்யஸபா கார்யதர்சி என். சாம்பசிவ அய்யரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி மஹாஜனங்களின் பிரதிநிதியாக பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள்வர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு ஸ்ரீ ஸ்வாமிகளவர்களுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் ஜனங்களுடைய ஸாஷ்டாங்கமான நமஸ்காரங்கள் சமர்ப்பணம் செய்யப்பட்டன. சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீஸ்வாமிகளவர்களுடைய குணங்களைக் கொண்டாடிப் பேசியதுடன் பிதிர்வாக்ய பரிபாலனத்திற்காக 14 வருஷங்கள் தண்டகாரண்யம் போயிருந்த ஸ்ரீராமசந்திரனுடைய வரவை அயோத்யா வாசிகள் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்களோ அவ்வளவு ஆவலுடன் தாஸானுதாஸர்களான நாம் ஸ்ரீஸ்வாமிகளவர்களுடைய ஆகமனத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

பட்டாபிஷேகதினத் தன்று புத்தூர் பிரம்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகளவர்கள் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுடைய குணத்தையும் பிரவசன காம்பீர்யத்தையும் கொண்டாடி சில சுலோகங்கள் கவனம் செய்து சமர்ப்பணம் செய்தார்கள். ஸங்கத்தின் தலைவரான பிரம்மஸ்ரீ பி. எஸ். சிவராம அய்யரவர்கள் அந்த சுலோகங்களின் தாத்பர்யத்தை ஜனங்களுக்கு மொழிபெயர்த்துச் சொல்லியதுடன் சாஸ்திரிகளவர்களுடைய விசேஷங்களைக் குறித்தும்பேசினார்கள். ஸங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீ என். சாம்பசிவஅய்யரவர்களால் சாஸ்திரிகளவர்களுடைய அத்யயன கௌரவத்தையும் சரீர சம்பத்தையும் பிரவசன சக்தியையும் படிப்பின் உயர்வையும் மிகவும் கொண்டாடிப் பேசிசமீபகாலத்தில் பெங்களூரில் சாஸ்திரிகளவர்களுடைய ராமாயண பிரவசனம் நடந்தபோது அவ்வூர் மஹாஜனங்களால் அத்யந்த பிரியமுடன் சமர்ப்பிக்கப்பட்ட உபசாரபத்திரத்தில் சாஸ்திரிகளவர்களுக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட "வேதமூர்த்தி" என்ற பட்டமானது மிகவும் பொருத்தமானதென்றும் வேதமே ராமாயணமாக வால்மீகி மூலம் வெளிப்பட்டிருக்கும் ஸ்திதியில் 'வேதமூர்த்தி' என்பது அத்யயன கௌரவத்தை குறிப்பதுடன் ராமாயண பிரவசன விசேஷத்தையும் குறிக்குமென்றும் அதைத்தான் மஹாஜனங்கள் முன்பாக ஆமோதிப்பதாகவும் இது முதல் அந்தப்பட்டமானது சாஸ்திரிகளவர்களுக்கு ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

தவிரவும் விச்வாமித்ராகமன சந்தர்ப்பத்தில் தசரதர் அவரை यथामृतस्य संप्राप्तिः என்ற சுலோகத்தினால் கொண்டாடினாரோ அதே சுலோகத்தினால் சாஸ்திரிகள் அவர்களை தான் கொண்டாடுவதாகவும், அந்த சுலோகத்தில் ஏற்படக் கூடிய தாத்பர்யமானது சாஸ்திரிகளவர்களுடைய பிரவசனத்தினால் மஹாஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை நன்கு குறிக்குமென்றும் அந்த சுலோகத்தினாலேயே தானும் சாஸ்திரிகளவர்களைக் கொண்டாடுவதாகவும் விச்வாமித்ரர் எவ்விதம் ஸ்ரீராமனை யாசிக்க வந்தாரோ அவ்விதம் சாஸ்திரிகளவர்கள் ஜனங்களுடைய மனதை யாசிக்கவந்திருப்பதாகவும் விச்வாமித்ரர் ஸ்ரீராமனை ஜானகியுடன் சேர்த்து வைத்துப் பார்க்கவே ஸங்கல்பித்ததுபோல் ஜனங்களுடைய மனதை யாசித்து அதை ஸ்ரீராமனுடைய திருவடிகளில் சேர்க்கவேண்டுமென்பதே சாஸ்திரிகளவர்களுடைய நோக்கமென்றும் விச்வாமித்ரர் ஸ்ரீராமனை மட்டும் யாசித்த போதிலும் முதலில் அனுப்பமறுத்தற்கு பிராயச்சித்தமாக ஸ்ரீராமனுக்கு அத்யந்த பிரியமுள்ள லக்ஷ்மணனையும் சேர்த்து அர்ப்பணம் செய்ததுபோல் முதலில் சாஸ்திரிகளவர்களிடம் மனதை கொடுக்க மறுபட்டதற்கு பிராயச்சித்தமாக அவர்கள் மனதை மாத்திரம் யாசித்த போதிலும் மனதிற்கு அத்யந்த பிரியமாக உள்ளதனத்தையும் சேர்த்து சமர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் சொல்லி ஸ்ரீராமாவதாரமானது தர்மஸ்தாபனத்திற்காகவே ஏற்பட்டிருப்பதால் அந்தந்த தர்மங்களை ஆங்காங்கு வெகு விமரிசையாக பிரவசனம் செய்த சாஸ்திரிகளவர்களுடைய பெருமையைக் கொண்டாடி வந்தனோபசாரங்கள் கூறப்பட்டன,

சாஸ்திரிகளவர்களும் தனக்கு ஏற்படக் கூடிய சகல விதமான கௌரவங்களுக்கும் பகவத்குணமும் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்களுடையவும், தனது குருவான மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களுடையவும் அனுக்ரஹமே முக்யகாரணங்களாகுமென்றும் தெரிவித்தார்கள்.

மறுதினம் யுவராஜ்ய பட்டாபிஷேகமும் பல சுருதியும் உபன்யஸிக்கப்பட்டு பிரவசனமானது பூர்த்தி அடைந்தது.

மஹாஜனங்களும் பரமஸிரத்தையுடன் சாஸ்திரிகளவர்களுக்கு விசேஷமாக சம்மானம் செய்து பட்டாபிஷேக மஹோத்ஸவத்தை வெகு விமரிசையாக நடத்திவைத்தார்கள்.

என். சாம்பசிவ அய்யர், பி.ஏ., பி. எல்.,


Mr. N. E வேங்கடேச சர்மா, எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸம்ஸ்க்ருத ஸ்வபோதினி. | 1 | 0 | 0 |
| ஸிரேஷ்ட தமிழ் அகராதி. | 5 | 0 | 0 |
| ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி | 2 | 8 | 0 |
| தமிழ் ஸம்ஸ்க்ருத அகராதி | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.


## மேல்மங்கலம்.

### கதாகாலக்ஷேபம்.

பங்குனீ 19உ சனிக்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 10மணி வரை மகா-ா-ா-ஸ்ரீ எம். எஸ். ஹரிஹரய்யர் அவர்கள் கிருஹத்தில் கூலமங்கலம் பிரம்மஸ்ரீ வைத்யநாத பாகவதரவர்கள் தருத்த பங்கவாத்யங்களுடன் துருவ சரித்திர கதா காலக்ஷேபம் நிகழ்த்தினார்கள். பெரியகுளம் முதலிய பக்கத்து கிராம மகா ஜனங்கள் சுமார் 100 பேர் வரை வந்திருந்தனர். பாகவதரவர்கள் கதையை கம்பீரமாகவும், உருக்கமாகவும், பக்தி ரஸத்துடனும், குழந்தை முதல் விருத்தர் வரை யாவரும் ஆனந்திக்கும் வண்ணமும் இனியகானத்துடனும் விரிவாய் எடுத்துரைத்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ எம். எஸ். ஹரிஹரய்யரவர்கள் அவருடைய கிருஹத்தில் பக்கத்தூர் மஹாஜனங்களுக்கு போஜன வசதி செய்திருந்தார்கள். மஹாஜனங்கள் கதையின் அன்பு வெள்ளத்தை ஆனந்தமாய்ப்பருகினர். பின்னர்பாகவதரவர்களுக்கு உபசாரம் சொல்லப்பட்டு இரவு 10 மணிக்கு முடிவடைந்தது. சிவகுமசுப்பதி கனபாடிகள்

## சேங்காலிபுரம்.

### ஸ்ரீ ராம நவமி உத்ஸவம்.

பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்பாஸாமி சாஸ்திரிகள் அவர்கள் கிருஹத்தில் சென்ற 9உ புதன்கிழமை முதல் ஸ்ரீ ராம நவமி உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினம் வேதபாராயணம், பிராம்மண சந்தர்ப்பணம் நடைபெற்றது. 16உ புதன்கிழமை ஸ்ரீ ராம நவமி தினம் காலை 7 மணி முதல் உபநிஷத் பாராயணம் ஸஹஸ்ரநாமார்சனமும் நடந்து லக்னத்தில் ஸ்ரீராமாவதார சரித்திர பாராயணமும் பிறகு பிரஸங்கபாது வைத்யனாத சாஸ்திரிகள் அவர்களால் உபந்யாஸமும் நடைபெற்றது. பரமஹம்ஸ ஸ்வாமிகள் அவர்கள் ஸமீபத்திலிருந்து பரமானுக்கிரஹம் செய்தார்கள். கிராமவாஸிகள் யாவரும் வந்து சிரவணம் செய்து பரம ஆனந்தமடைந்தார்கள். பிறகு வே. அப்பாஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சந்தனம் புஷ்பங்கள் வழங்கப்பட்டு பரிபூர்ணமாய் நடைபெற்றது.

ஒரு நிருபர்.

## கீர்வாணவாணி பரிஷத்

### பழூர்.

ஷை ஸபையின் பங்குனி மாதத்திய இரண்டாவது கூட்டம் 2—4—39உ மாலை 4-மணிக்கு வேத பாடசாலையில் நடை பெற்றது. அவ்வமயம் பிரம்மஸ்ரீ பேலகம் ராமசாஸ்திரிகள் தலைமை வகித்தார். வேத பாடசாலை மாணவன் சுப்பிரமணியனால் மங்களாசரணம் செய்யப்பட்டது. காரியதரிசி P. R. நாகேச்வர சாஸ்திரிகள் சென்ற கூட்டத்தின் ரிப்போர்ட்டை சபையோர்களுக்கு வாசித்துக் காட்டினார். (இக்கூட்டத்தில் தலைவரையே முக்யமான உபன்யாஸகராகப் போடப்பட்டிருந்தது) பிறகு கரகோஷங்களுக்கிடையே பிரம்மஸ்ரீ ராமசாஸ்திரிகள் தன் உபன்யாஸத்தை ஆரம்பித்தார். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் "மனுஷ்ய தர்ம." அல்லது "மனிதன் கடமை" என்ற விஷயத்தை விஸ்தாரமாகவும் பாமரர்களும் புரிந்து கொள்ளும்படியாக மிகவும் எளிய நடையில் 2 மணி நேரம் உபன்யஸித்தார்கள். சபையோர்கள் உத்ஸாகத்துடனும் சிரத்தையுடனும் உபன்யாஸத்தை கவனித்துக்கொண்டிருந்தனர். பிறகு சுப்பிரமணிய ஸிரௌதிகளால் 'ஆசார்ய பக்தி' என்ற விஷயம் உபன்யஸிக்கப்பட்டது. பின்பு காரியதரிசியால் வந்தனோபசாரம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

K N நடேச சர்மா.



## கும்பகோணம் வர்த்தமானம்.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம், ஏப்ரல் 12.

கல்விமந்திரி செய்த காரியம்:—குடந்தைக்கு கனம் கல்வி மந்திரி சி. ஜே வர்க்கி வந்தார். அவர் டவுன் ஹை ஸ்கூல் கொண்டாட்டத்தில் தலைமை வகித்துக்கொண்டிருக்கையில் காங்கிரஸ் கோஷ்டியின் பிரசாரகர் கொடிமுடி ஸ்ரீ ராஜகோபாலன் பிராங்கோ பிரச்னையை ஆதரித்ததற்கு காரணங்களை விளக்கும்படி கனம் மந்திரிக்கு ஓர் துண்டுக் காகிதத்தில் எழுதி அனுப்பினார். கனம் மந்திரியினிடம் இதைக்கொடுக்க சிலர் அஞ்சினார்கள். கேள்வி கேட்டவரின் வேகத்தால் அவர் துண்டுக் காகிதத்தை மந்திரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த டவுன் ஹைஸ்கூல் மாஜி தலைவரிடம் கொடுத்து, கனம் மந்திரியினிடம் கொடுக்கவேண்டினார். இதை ஸ்ரீமான் ஆர். ஸ்வாமிநாத ஐயர் கனம் மந்திரியினிடம் கொடுத்தார். அதை கனம் மந்திரி திருக்கரங்களால் வாங்கி, கம்பீரமாகப் பார்த்தார்; உடனே கோபம் முகத்தில் ஜ்வலித்து என்ன செய்தார் தெரியுமா? எறிந்தார் துண்டுக்காகிதத்தை சுவாமிநாத ஐயர் பக்கமாக. இந்த முறை மிகுந்த வருத்தத்தையும், முணுமுணுப்பையும் முக்கியமாக அங்கிருந்த காங்கிரஸ் வாதிகளிடையே கொடுத்தது இச்சம்பவத்திலிருந்து என்ன விளங்குகிறதென்பதையே நமது வாசகர்கள் அறியவேண்டும். சர்வசாதாரணமான விஷயங்களில் கூட பொறுமையற்ற நடத்தை, உதாஸீனம், அவமதிப்பு இவைகள் பெரியவர்களிடமே அந்த கோஷ்டிகளுக்குள்ளேயே கிடைக்குமானால், ஏனையோர்களின் கதியை விளக்கவேண்டுமா? இது மட்டுமா? கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் கனம் மந்திரி ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். முனிஸிபல் காங்கிரஸ் கக்ஷித்தலைவர் ஸ்ரீ துரைஸாமிப் பிள்ளை தமிழில் தர்ஜுமா செய்து பிரஸங்கத்தை சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், கனம் மந்திரி அவரை திரும்பி ஒரு பார்வைதான் பார்த்தார். அவ்வளவுதான்! பிரார்த்தனை பயனின்றி பறந்தோடியது. மான்யம் காங்கிரஸ் காரர்களுக்கு காங்கிரஸ் மந்திரியாரே வழங்கினார்.

### பிடால் கோர்டு ஜட்ஜியின் தர்மம்.

பிடால் கோர்ட்டு ஜட்ஜ் கனம் வரதாசாரியார் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமிக்கு சென்ற 7உ வெள்ளிக்கிழமை யன்று விடாயாற்றி உற்சவத்தை செய்யச் செய்திருந்தார். இந்த உற்சவத்தில் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமிக்கும் ஸ்ரீ கோமளவல்லித் தாயாருக்கும் மிக அழகிய முறையில் சாத்துப்படியும், மண்டபமும், மின்சார விளக்குகளும் பக்தகோடிகளைப் பாவசமாகசெய்தது. இது போன்ற தரிசனத்தை இந்நகர வாசிகள் என்றும் கண்டிருக்க முடியாதென்று புகழ்ந்து குறிப்பிட வேண்டும். நவீனநாகரீகத்தில் மூழ்கியுள்ள பத்திரிகைகள் எல்லாம் இது போன்ற உற்சவத்தை எல்லாம் பிரசுரிக்க வெட்கப் படுகிறது. பிரத்தியக்ஷமாகி விட்டது. என்னே நவீனநாகரீகத்தின் திமிறு?


முக்கிய கவனிப்பு

3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கநகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர்:—என். கன்னுசாமி பத்தர் பெரிய தெரு, கும்பகோணம்.


### பலசரக்கு வியாப்பாரியின் சங்கம்.

5–4–39உ மாலை 5-மணிக்கு கும்பகோணம் பலசரக்கு வியாபாரகளின் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு தலைவராக ஸ்ரீமான் M. C. N. ரெத்தின ஸபாபதி செட்டியாரை தலைவராகவும், ஸ்ரீமான்கள் N. வெங்கடாராமன் உபதலைவர், எ. சிங்காரவேலு S. S. கோவிந்தசாமி நடார் காரிய தரிசிகளாகவும், ஜனப் M. அஜீஸ் ராவுத்தர் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இச்சங்கத்தார் இனி பலசாக்குகளின் விலையைக் கொஞ்சம் சாரசரி உயர்த்தி விற்கப் படவேண்டும் என்றும், இந்த முறையில் வித்தியாசமின்றி வியாபாரிகள் ஒன்று பட்ட முறைகளை அனுஷ்டித்து விற்பனை வரியில் பாதிக்காமல் பாதுகாத்து கொள்ள வேணுமென்றும் தீர்மானித்து விட்டார்கள். நகரில் பொதுவான தோர் சங்கத்திற்கு உட்பட்டு இச்சங்கம் ஒத்துழைக்கும் என்று தெரிய வருகிறது.

தேசீய வாரம் நடக்கிறது. 6—4—39 முதலாக நகர காங்கிரஸ் கமிட்டியார் தேசீய வாரத்தை நடத்திவருகிறார்கள். முதல் தினத்தில் ஊர்வலமும், அட்வோகேட்டு ஸ்ரீமான் C. R.வீரராகவன் தலைமையில் கூட்டம் காந்திபார்க்கில் நடந்தது. பலர் பேசினார்கள். விற்பனை வரியை முன்னிட்டு வியாபாரிகள்முன் ஜாக்கிருதையாக ரூபாய்க்கு ஒரு பைஸா வீதம் அதிகமாய் விற்பனையில் சேர்த்து வருவதைக்கண்டித்து, அப்படி செய்பவர்களைப் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள சென்னை காங்கிரஸ் அரசாங்கத்தாரை அரைகூவிக் கேட்டுக் கொள்வதாய் அவசரத் தீர்மானம் ஒன்று செய்தனர். தீர்மானம் செய்வதற்கு முன்பே துண்டுப் பிரசுரங்களையும் வழங்கி விட்டார்கள். தேசியவாரத்தின் கூட்டத்தில் விற்பனை வரிஸம்பந்தமாகவும் ஸம்பந்த மில்லாததை ஸம்பந்தப்படுத்துவது ஒழுங்கான முறை போலும். தனிக்கூட்டமாகக் கூடி தீர்மானம், பிரதிநிதி கூட்டம் செல்லச் செய்யலாகாதா? 7உ கமலாநேரு வாசகசாலைக்கு முன்பாக ஸ்ரீசிவசுப்பிரமணிய பிள்ளை தலைமையில் கூட்டம் நடந்தது. பலர் பேசினார்கள். இதுபோன்ற கொண்டாட்டங்கள் சனாதன விஷயத்தில் ஆங்காங்கு நடத்தலாகாதா?

8—4—39ல் தேசீய வாரத்தில் சென்னை பார்லிமெண்டரி செகரிட்டரி ஸ்ரீமான் எம். பக்தவத்ஸலம் பேசினார். வியாபாரிகளின் மனம் விற்பனை வரியால் பயந்துவிட்டது என்றும், அப்படிப் பயப்படவேண்டாம் என்றும், அவ்வரி, ஸாமானை வாங்குபவர்கள் தலையில்தான் விடியும், விற்பனை வரி ஸாமான்யமாக கொசுக்கடிக்கு ஒப்பிடலாகும் என்றும், கேட்பவர்களுக்கு மிக்க மனம் இரங்கும்வகையில் காங்கிரஸ் கதையை எல்லாம் பேசிக் கதை சொன்னார். கொசுக்கடி குடந்தையில் சாமான்யமாகக் கருதப்படவில்லை. சமீபத்தில் 'மலேரியல்' திராவகம் உபயோகிப்பதை நிறுத்தியதால் "பைரோஸைடு 20" உபயோகித்தனர். காங்கிரஸ் கக்ஷி கவுன்ஸிலர்கள் உள்பட கொசுக்கடி தாங்கமுடியவில்லை. என்று கதறினார்கள். கவுன்ஸிலில் விசேஷக்கூட்டத்தில் தீர்மானம் செய்து மறுபடி மலேரியல் மருந்தை உபயோகிக்கச் செய்தார். தனக்கு வாராத தலைவலியாகையால், கொசுக்கடிக்கு ஸமதையாகும் விற்பனை வரி என்றார் போலும்! மற்றொரு புறத்தில் வியாபாரிகளை இந்த வரி சாராதென்றும், மறைமுகமாக அவசியமில்லாத சாமான்களை வாங்கும் தனிகர்களையே சாரும் என்றும், ஆகவே வர்த்தகர்களை இந்த வரி நசுக்காதென்றும், பயப் வேண்டியதில்லை என்றும் ஸமாதானம் சொல்லிவிட்டார். இந்தக் கூட்டத்தில் ஸ்ரீ பூவராக ஐயங்கார் தலைமை வகித்தார்

இரண்டாவது அரசியல் மகாநாடு:—பிரபல தேசீய வீரர் ஸ்ரீமான் எஸ். சத்திய மூர்த்தி மேற்படி மகாநாட்டில் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டிருக்கிறதாயும், ஆனால் மகாநாட்டை மே மாதம் முதல் வாரத்தில் கூடினால் தான் தனக்கு வர சாத்தியப்படும் என்று தெரிவித்திருக்கிறார். விவசாய இலாகா மந்திரி முனிசாமி பிள்ளை, ஸ்தலஸ்தாபன மந்திரி ஸ்ரீ கோபால ரெட்டி, ஜனப் மொஹிதீன் மரக்காயர், மதுரை ஹாஜீ மௌலானா சாகிப் தமிழ்நாடு காங்கிரஸ் கார்யதரிசி சி. பி. சுப்பையா, வி. நாடிமுத்துப்பிள்ளை, சீனிவாசன் முதலியவர்களும் மகாநாட்டிற்கு வருவதாக பிரசித்தம் செய்திருக்கிறார்கள். வழக்கம் போல பண உதவியும் தவறாமல் வேண்டப்படுகிறது.

ஸ்ரீமான் பக்தவத்ஸல விஜயத்தின் காரணம் என்ன?—நகரசபை காங்கிரஸ் கக்ஷிக்குள் ஒற்றுமை இல்லையாம். அபிப்பிராயபேதமும் வலுத்து, முனிசிபாலிடியில் காங்கிரஸ் கக்ஷியார் கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டியதில் முன்னுக்குப்பின் விரோதமாகிவிட்டதாம். கக்ஷிக்கூட்டத்தில் செய்வார்கள் ஒரு தீர்மானம். அது கவுன்சில் கூட்டத்தில் எப்படியோ மாயமாக மாறிவிடும்! கக்ஷிக்கூட்டத்தில் நடந்துகொண்ட விதம் வேறுபடாதும் அவரவர்களுக்கு அறியாமலே மனமாற்றம், வெறுப்பு உண்டாகிவிட்டதாம். இதை நிவர்த்திக்க தக்க ஔஷதம் தேடலாயிற்று, அதற்காக மருந்துடன் ஸ்ரீ பக்தவத்ஸலத்தை பக்தியுடன் வரவழைத்தார். "போனது போகட்டும் இனியாவது ஒன்றுபடுங்கள்" என்ற மருந்தை அவர் கொடுத்தாராம். இனிமேல்பட்டு இதையும் ஒரு மண்டலம் குணமாகிறதாவென்று பார்ப்போம். காங்கிரஸ் கக்ஷியார் ஷை யாரிடம் மனம்விட்டு தங்கள் குறைகளை தெரிவித்தார்களென்றும், தண்ணீர் சாக்கடை திட்டத்தைப்பற்றியும் மின்சார விளக்கு விதம் பற்றியும் தெரிவித்தார்களாம். புதிதாக ஒன்றும் பதிலில்லை. வழக்கப்படி கூறும் சம்பிரதாயமான 'அனுதாபத்துடன் கவனிக்கப்படும் சீக்கிரம்" பதில் கிடைத்ததாம். ஷையாருடன் கூட்டம் மிக அந்தரங்கமாகவே நடந்ததாய் சொல்லுகிறார்கள். கவுன்சில் கூட்டத்தில் சேர்மென் தீர்மானங்களை நிராகரித்துவிட்டதுபற்றியும் அது ஒரு குறையாகக் கொண்டதாயும் தெரிகிறது.

பச்சையப்பமுதலித்ருே.—முன் நிலைமையைவிட இன்னும் சீர்திருத்தமாகிவிட்டது. தெருவாசிகள் தெரு உள்ள உயர்ந்த நிலையை உணர்ந்து வேறு தெருவுகளில் போக ஜாகை பார்த்து வருகிறார்களென்று தெரிகிறது.


பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீவித்யாஸபர்யாபத்தி | 2 | 0 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# ஸ்ரீராமநாம ஸ்மரணம்.

திருச்சியில் நடைபெற்ற
வால்மீகி ஜயந்தியில்
ப்ரம்மஸ்ரீ
பி. எஸ். கணேச சாஸ்திரிகள் செய்த
பிரசங்கம்.

த்வாபரயுகத்தின் முடிவில் ஸகல ஜீவராசிகளிடத்திலும் அன்பு நிறைந்த தவச்ரேஷ்டர்கள் ஒருங்குகூடி, "எக்காலத்தில் செய்யப்பட்ட சிறிய தர்மமானது மஹத்தான பலனைக் கொடுக்கும்?" என்று ஆலோசித்தார்கள். அபிப்பிராயங்கள் பலவகைப்பட்டிருந்தனவாகையால் அவர்கள் ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை. உடனே அவர்கள் கங்காதீரத்தில் வஸித்துவந்த, பகவான் பராசருக்கு ஸத்யவதியிடம் தோன்றிய, ஸ்ரீ வேதவ்யாஸரை அணுகித் தங்கள் ஸம்சயத்தைத் தெரிவித்தார்கள். அம் முனிபுங்கவர் "அதற்குக் கலியுகம் தான் சிறந்தது" என அருளிச்செய்தார். உடனே "எப்படி?" என ரிஷிகள் வினவ, க்ருதயுகத்தில் பத்து வருஷமும், த்ரேதாயுகத்தில் ஒரு வருஷமும், த்வாபரயுகத்தில் ஒரு மாஸமும், அனுஷ்டிக்கப்பட்ட தர்மமானது எவ்வித பலனைக் கொடுக்குமோ அந்தப்பலனைக் கலியுகத்தில் பகல்-இரவு கொண்ட ஒரே நாளில் அனுஷ்டிக்கப்பட்ட அதே தர்மமானது கொடுக்கும்; மேலும், க்ருதயுகத்தில் த்யானத்தினாலும், த்ரேதாயுகத்தில் யக்ஞாதிகளாலும், த்வாபரயுகத்தில் அர்ச்சனையினாலும், எவ்வித பலனை அடைய முடியுமோ அப்பலனை க்ருதயுகத்தில் பகவானை ஸ்தோத்திரிப்பதினாலேயே அடையமுடியும்" என்று பதிலுரைத்தார்.

இக் கருத்தையே நமது பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளும் "ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுவதற்கு பகவந்நாம ஸ்மரணத்தைத் தவிர வேறு உபாயம் நாம் அறியோம்" என்று சொல்லியுள்ளார். ஆதலின், தேஹவலிமை, புத்திசக்தி, மனோதார்ட்யம், ஆயுள், இவை குறைந்து வருகின்ற இக் கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தனமே எல்லோராலும் கடைபிடிக்கக்கூடிய சிறந்த உபாயம் என்று விளங்குகின்றது.

இனி பகவந்நாமக்களில் எந்த நாமாவை ஸங்கீர்த்தனம் செய்வது என்பதை ஆராய்வோம். பகவான் மனுவானவர், "முன்னோர்கள் சென்ற நல்வழியே செல்வாயாக. அதனால் உனக்கு ஒரு தொந்திரவும் ஏற்படாது," என்று சொல்லியுள்ளார். இதனால் பகவானுடைய எந்த நாமாவானது அவரவர் மனதிற்குத் திருப்தியைக்கொடுத்து உள்ளத்தைப் பூரிப்படையச் செய்கின்றதோ அதையும் ஜபித்துவிடலாம். உதாரணமாக, ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதாச்சார்யர், "எங்கள் முன்னோர்களும் நாமும் சிவபிரானை வந்தனை செய்தவர்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. இடைவிடாது பஞ்சாக்ஷரம் என்ற மஹா மந்த்ரத்தையே ஜபித்துவருகின்றோம். ஆயினும், என்னுடைய மனதானது அந்தக் காயாம்பூவையொத்த திருமேனியையும் அழகிய முகத்தையுமுடைய ஸ்ரீ பாலக்ருஷ்ணனையே நாடுகின்றது" என்று வெளியிட்டிருக்கின்றார்.

மனதிற்குத் திருப்தியைக்கொடுப்பது என்பது எவ்வாறென்பதைத் திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேசார்ய என்கிற அய்யாவாள் மாத்ருபூத சதகத்தில் "ஓ மாத்ருபூதமே! உன் திருநாமம் என் செவியிற்பட்டவுடன் என் நெஞ்சு நெக்குவிட்டு, மொழி தழுதழுத்திடவும், கண்கள் ஆனந்தக்கண்ணீர் சொரியவும், உடம்பு சிலிர்த்து, வியர்த்துப் பரவசமாகும்படியும் அருள்புரியவேண்டும்" என வர்ணித்துள்ளார்.

கலி ஸந்தரணோபநிஷத்தில் ப்ரம்ஹாவானவர் தமது புத்ரரான நாரதரைப் பார்த்து "ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே" என்ற மஹா மந்த்ரத்தை மூன்றரைக்கோடி ஜபிக்கின்றவர்கள் பஞ்ச மஹாபாதகங்களினின்றும் விடுபடுகின்றார்கள்" என்று அருளிச்செய்திருக்கிறார். லீலாசுகர் போன்ற பெரியோர்கள் ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே விசேஷ ப்ரேமையை வைத்திருக்கின்றார்கள். ப்ரம்ம ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதர் போன்ற பெரியோர்கள் ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியிடம் விசேஷ அன்புவைத்துள்ளார்கள். ஆயினும் இந்நாமக்களில் யாதொருவிதமான உயர்வு தாழ்வு என்பது கிடையாது. ஏனெனில், ஆகாசத்திலிருந்து விழும்படியான எல்லா ஜலமும் எவ்விதம் நதிகளின்மூலம் ஸமுத்ரத்தையடைகின்றதோ, அவ்விதமே எந்த நாமாவை நாம் உச்சரித்த பொழுதிலும் அது பகவானையே சேர்கின்றது. அத்துடன் கூட எந்த நாமாவை ஜபித்த பொழுதிலும் பலன் ஒன்றே.

ஆயினும், ஸ்ரீ ராமநாமாவுக்குள்ள விசேஷமானது பின்வருமாறு:—"ஸ்ரீ விஷ்ணு பகவானுடைய ஆயிரம் நிவ்ய நாமாக்களை எந்த லகுவான வழியால் சொல்லக்கூடும்?" என்று ஜனங்களின் க்ஷேமத்தின் பொருட்டு ஜகன்மாதாவான பார்வதிதேவி கேட்டபொழுது பரமேச்வரன், "ஸ்ரீ ராம நாமமே அந்த ஆயிரம் நாமங்களுக்குச் சரியானது," எனத் திருவாய்மலர்ந்தருளினார். மேலும், ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் உயிர்விடுகிற மனிதர்களுடைய வலது காதில் பரமசிவன் இம்மந்த்ரத்தைத் தாமே ஓதுகிறார் என்று வழங்கிவருகிறது. ஆனதுபற்றியே ஸ்ரீ ராமபூர்வதாபினி உபநிஷத்தில் இந்த ராம மந்த்ரத்தை "பகபதி கிரீடக்ஷம்" எனவும் "பார்வதீ போதமந்த்ரம்" எனவும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

ரா என்பது அஷ்டாக்ஷரத்தினுடையவும், ம என்பது பஞ்சாக்ஷரத்தினுடையவும் பீஜாக்ஷரங்கள். ஆதலின் ஸ்ரீ ராம நாமாவை உச்சரிப்பதினால் மேற்படி இருமந்த்ர உச்சாரண பலனை யடையலாம் என்று சொல்லப்படுகின்றது. இந்தக் கருத்தே 'ஏவரி' என்று தொடங்கும் கீர்த்தனையில் ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் அவர்களாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ராம என்ற பதத்திற்கு (1) रमयति इति रामः (2) रमन्ते योगिनः अस्मिन् इति रामः (3) रमायाः अयं इति रामः ஸந்தோஷிக்கச் செய்பவர் ராமர் என்றும், எவரை நினைத்து யோகிகள் ஆனந்தத்தை அடைகின்றனரோ அவரே ராமர் என்றும், லக்ஷ்மியைச் சார்ந்தவர் ராமர் என்றும், இம்மூன்றுவிதமாக வ்யுத்பத்தி செய்யப்படுகின்றது. இதில் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீ ராகவனாக அவரித்த காலையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸீதா தேவியாகவும் ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதரித்தபொழுது ருக்மிணியாகவும் 'அவதரிக்கின்றாள்' என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பது இந்த மூன்றாவது வ்யுத்பத்திக்கு ஆதாரமாக இருக்கின்றது.

ரா என்ற சப்தத்தை உச்சரித்த மாத்திரத்தில் பாபங்கள் வாயினின்றும் வெளியேறுகின்றன, ம என்ற அக்ஷரமானது கதவு போல் அவை திரும்பிவாராமல் தடுக்கின்றது" என்று ராம சப்தத்திற்கு கர்ணாம்ருதாச்சார்யார் நிர்வசனம் செய்திருக்கின்றார்.

"ராம சப்தமானது பரப்ரம்ஹத்தையே குறிக்கின்றது" என்று ராமதாபினி உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், வேத ப்ரதிபாத்யமான பரம்பொருள் தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரனாக அவதரித்த பொழுது வேதமானது வால்மீகி மஹரிஷிமூலம் ராமாயணமாகத் தோன்றிற்று" என்று கர்ணாம்ருதாச்சார்யரால் குறிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ ராம நாமத்தினுடைய ப்ரபாவத்தை வெகுவாகப் பல கவிகள் வர்ணித்திருக்கின்றார்கள்

"ஸ்ரீராம என்று ஒருதடவை சொல்லவென் மனது ப்ரவர்த்திக்கின்றதோ அவனுடைய பெரியோர்கள் ஆயிரம் தலைமுறைக்கு வைகுண்டத்தில் வஸிக்கின்றார்கள்" என்றும்,

"இந்த ராமமந்த்ரம் சத்ருக்களை நாசம் செய்யும்; உபநிஷத்துக்களால் கொண்டாடப்படுகின்றது; பவஸாகரத்தை தாண்டச் செய்கின்றது; ஸர்பபயங்களை ஒழிக்கின்றது; எல்லாவித ஐச்வர்யத்தையும் உண்டு பண்ணுகின்றது; துக்கத்தைப் போக்கடிக்கின்றது; இந்த நாமத்தை எக்காலத்திலும் உச்சரித்து ஜன்மத்தை ஸபலமாகச் செய்து கொள்ளவேண்டும்" என்றும்,

"ராம நாமத்தை ஜபிக்கின்ற பாமரர்கள் கூட ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுகின்றனர். அப்படியிருக்க, ராமனுடைய கணையாழியை வாயில்கொண்ட ஹநுமான் ஸமுத்ரத்தைத் தாண்டினான் என்பது என்ன ஆச்சர்யம்!" என்றும்,

"திராக்ஷை, சர்க்கரை, காய்ச்சிய பால் முதலிய ருசிகரமான பதார்த்தங்கள் நாவிற்குக் கொஞ்ச காலத்திற்கே இனிமையைக் கொடுக்கின்றன. இவைகளைக்காட்டிலும் அம்ருதம் அதிக ருசியானது; அதையும் பசிக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டே ஸ்வர்க்க ஸாம்ராஜ்யத்தையனுபவிக்க ஆசைப்படுகிறவன் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களைச் செய்யவேண்டும் என்கிறசாஸ்த்ர விதிப்படி யாகங்களைச் செய்து அம்ருதம் முதலிய பதார்த்தங்களையனுபவித்துப் பிறகு புண்யகர்மாக்களின் பலன்கள் முடிவடைந்த பிறகு மீண்டும் பூலோகத்திற்கே வருகின்றார்கள். நாவிற்கும் செவிக்கும் தெவிட்டாத இனிமைவாய்ந்த ராமாம்ருதத்தைப் பருகுகின்றவர்களுக்கோ மறுபிறப்பு கிடையாது" என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

உலகில் பொதுவாக எல்லாக்காரியங்களும் நாமோச்சாரணங்களும் முறைப்படியே செய்யப்படவேண்டும். இல்லையெனில், வேத விதமாகச் செய்வதும், செய்யாதிருத்தலும் ஒன்றேயாகும். ஆனால் இந்த ராம நாமாவைத் தலைகீழாக ஜபித்தாலும் அது பலனைக் கொடுக்கக்கூடியது என்பது வால்மீகி மஹரிஷியின் சரித்திரத்தால் விளங்குகின்றது. "ஸ்நானம் செய்துதான் சாப்பிடவேண்டும்; காலையில் நின்றுகொண்டுதான் ஜபம் செய்யவேண்டும், ஸ்திரீ சூத்ரர்கள் வேதத்தை அத்யயனம் செய்யக்கூடாது" என்பனவை போன்ற விதிகள் நாமோச்சாரண விஷயத்தில் கிடையாது. இந்த விஷயத்தில் எல்லோருமே அதிகாரிகள். எக்காலத்திலும் எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் உச்சரிக்கலாம்.

இந்த நாமாவை உச்சரிப்பதனால் மனோவாக்குக் காயங்களால் செய்யப்பட்ட எவ்வித பாபங்களையும் போக்கடித்துக் கொள்ளலாம். ஸ்ரீராமநாமோச்சாரணத்திற்குப் பாபங்களைப் போக்கடிக்க எவ்வளவு சக்தி இருக்கின்றதோ அந்த அளவிற்குப் பாபங்களைச் செய்ய எந்தப் பாபியாலும் முடியாது.

பொருளையறியாமலேயே வாக்கினால் மாத்திரம் உச்சரித்தாலும் பகவந்நாமா பலனைக் கொடுக்கக்கூடியதென்பது ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ சுகப்ரம்ஹத்தால் பரீக்ஷித் மஹாராஜாவிற்கு உபதேசிக்கப்பட்ட அஜாமிளனுடைய சரித்திரத்தினால் விளங்குகிறது.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)



# புராணக் கதைகள்.

## புலி-நரி கதை.

மனிதர்களுள் துஷ்டர்கள், சாதுக்களை யறிவதற்கு பீஷ்மர் தருமருக்குபதேசித்த புலி நரிகளைப்பற்றிய கதை.—

புரிகை என்னும் பட்டணத்தில் பௌரிகனென்னும் அரசன் ஒருவனிருந்தான். அவன் மிகக்குரூரனும் மனிதர்களில் தாழ்ந்தவனும் பிறர்க்குத் துன்பஞ்செய்வதிலேயே ஆசை கொண்டவனுமாயிருந்தான். அவன் வாழ்காலம் முடிந்ததும் தான் செய்த பாபத்தால் மறுபிறப்பில் நரியாய்ப் பிறந்தான். அந்த நரிக்குத்தனது பூர்வஜன்ம ஞாபகமிருந்தமையால் மிக வெறுப்படைந்து மாம்ஸபக்ஷணம் செய்யாமலும் பிறஹிம்ஸை செய்யாமலும் ஸத்தியவாக்குடன் உறுதியான விரதானுஷ்டானம் செய்து தானாகவே உதிர்ந்த கனிகளால் ஆகாரம் செய்து வந்தது. அது வேறிடத்தில் வஸிக்க விரும்பாமல் மயானத்தில் வஸிப்பதையே விரும்பியது. அந்த ஜாதியிற் சேர்ந்த மற்றப் பிராணிகள் இதனுடைய சுபாவத்தைப் பார்த்துப் பொறுதவைகளாய் இதைக் கெடுப்பதற்காகப் பலவிதமான துர்ப்போதனைகள் செய்தன. ஆனால் இந்த நரியானது அவைகளைக்கேட்டு மிகுந்த அடக்கமாய்ப் பதில் கூறியதாவது.—

"எனக்குச் சீலம் முக்கியமேயன்றி பிறப்பு முக்கியமன்று. புகழ்பெருகும் காரியத்தையே நான் செய்யப் பிரியப்படுகிறேன். நான் எங்கு வஸித்தாலும் என்மனோ நிலையைக் கவனிக்கவேண்டும். இருக்குமிடத்திற்கும் தர்மத்திற்கும் ஸம்பந்தமில்லை. ஆத்மாவே கர்மாவை உபயோகமுள்ளதாக்கும். ஆச்ரமத்தில் ஒருவன் ப்ரம்மஹத்தி செய்து வேறிடத்தில் ஒருவன் கோதானம் செய்தாலும் முன்னது பாபமல்லாததாயும் பின்னது பயனற்றதாயும் ஆகாது. நீங்கள் விஷயபிரியத்தால் ஆகாரத்தில் மாத்திரம் ஆசையுள்ளவர்களாகிறீர்கள். விவேகமில்லாதவர்கள் தோஷங்களை கவனிப்பதில்லை. ஆகையால் நிந்திக்கத்தக்கதும் தர்மங் குறைவானதும் இகபரங்களில் துன்பமுள்ளதுமான ஜீவனத்தை நான் விரும்பேன்" என்றது

இதனுடைய நடத்தையைக் கண்டு ஒரு புலியானது இதைத் தனக்கு மந்திரியாக வைத்துக்கொண்டது. புலியானது நரியைப்பார்த்து "உனது ஸ்வரூபம் தெரிந்தது. எனக்கு ராஜகாரியத்தில் உதவியாயிரு. உனக்கிஷ்டமான போகங்களை யநுபவி. வேண்டாதவைகளை விட்டுவிடு. எங்கள் ஜாதி குரூரமானது. எளிய வசனங்களால் நீ ஆளவேண்டும். அப்போது நீ க்ஷேமமடைவாய்" என்று சொல்லிற்று.

இவ்வார்த்தையைக் கேட்டு நரியானது புலியை வணங்கிக் கூறியது. "ம்ருகேந்த்ர நீ இப்பொழுது சொன்னதெல்லாம் சரியே. அறம் பொருள்களில் சமர்த்தரும் பரிசுத்தர்களுமான மனிதர்களை நீ சகாயமாய்த் தேடுவது நியாயமே. மந்திரியில்லாத அரசனும் துஷ்டனும் விரோதியுமான மந்திரியுடன் கூடிய அரசனும் ராஜ்யத்தை ஆள முடியாது. அன்புள்ளவர்களும் ஜயத்தை விரும்புகிறவர்களும் ஆசையில்லாதவர்களும் மரியாதையுள்ளவர்களும் நல்ல அறிவாளிகளும் ஹிதத்தில் பிரயத்னமுள்ளவர்களும் பெரியமனமுள்ளவர்களுமான மனிதர்களை ஸஹாயமாய்க் கொண்டு ஸஹோதரர்களைப் போலவும் தந்தைகளைப்போலவும் அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டும்.

ம்ருகாதிபனே: ஸந்தோஷமாயிருப்பதைவிட எனக்குப் பிரியமானது வேறொன்றுமில்லை. ஸுகங்களிலும் போகங்களிலும் உன்னிடமுள்ள ஐச்வர்யத்திலும் எனக்கு விருப்பமில்லை. உனது பழைய வேலைக்காரர்களுடன் நான் சேர முடியாது. என் நிமித்தம் துன்பமடையும் அவர்கள் உனக்கு துர்ப்போதனை செய்வார்கள். நீ சிறந்தவர்களால் கொண்டாடத் தக்கவன். நல்ல மனமுள்ளவன்; பெரிய பாக்யம் பெற்றவன்; பாபிகளிடமும் கடுமையில்லாதவன், நீண்ட ஆலோசனையுள்ளவன், உத்ஸாஹமுள்ளவன், பெருங் கொடையாளி, பலசாலி, உபகாரத்திற்குப் ப்ரதி உபகாரஞ் செய்கிறவன். ஆனால் நான் என்னிலைமையிலேயே மிகுந்த ஸந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். என்னிஷ்டம் போல் காட்டில் திரியும் நான் பிறரை ஸேவிக்க அறியாதவன். ஸேவகா விருத்தி செய்பவனுக்குக் கஷ்டத்திற்கும் துக்கத்திற்கும் குறைவில்லை. யதேச்சையாயிருப்பவர்க்கு ஸுகத்திற்குக் குறைவில்லை. ஆகையால் எனக்கு உன்னிடம் மந்திரியாயிருப்பதற்கு விருப்பமில்லை. ஆனால் நான் மந்திரியாயிருக்க வேண்டுமென்று நீ விரும்புவாயானால் என்னுடன் சில உடன்பாடு செய்துகொள்ள வேண்டும் அதாவது :—

'என்னைச் சேர்ந்தவர்களை நீ மரியாதை செய்யவேண்டும் நான் சொல்லும் ஹித வசனத்தைக் கேட்கவேண்டும். என்னிடம் உனக்கு நல்ல உறுதியான நம்பிக்கை இருக்கவேண்டும். உனது மற்ற மந்திரிகளுடைய ஆலோசனையை நீ ஒருக்காலும் கேட்கலாகாது. அவர்கள் என்னைப்பற்றி ஏதாவது வீணாகப் பேசுவார்கள். நான் ரஹஸ்யமாய் உன்னிடம் ஹித வசனம் சொல்லுவேன். என் வார்த்தையைக் கேட்டு மற்ற மந்திரிகளைத் துன்புறுத்தக் கூடாது. கோபத்தால் என்னைச் சேர்ந்தோரைத் தண்டிக்கக் கூடாது.' என்று சொல்லிற்று.

இவைகளைக் கேட்டுப் புலியானது அப்படியே ஆகட்டும் என்று சொல்ல, நரியானது மந்திரி பதவியை ஒப்புக் கொண்டது. புலியினது இதர பரிவாரங்கள் ஒன்று சேர்ந்து நரியைப் பகைத்தன. நரியானது மந்திரி பதவியிலிருந்து விலகுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தன. ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. பிறகு இதை நாசஞ் செய்ய வேண்டிய பிரயத்னங்கள் செய்தன. புலிக்கு விருப்பமாகச் செய்யப் பட்ட ஆகாரமான மாம்ஸத்தை இவைகளே எடுத்து நரியின் வீட்டில் கொண்டு வந்து வைத்தன. இதன் உண்மை இன்ன தென்பது நரிக்குத் தெரிந்திருந்தும் எப்படியாவது நமது பந்தம் விலகட்டும் என்ற எண்ணத்துடன் நரி இதைப் பொறுத்திருந்தது. புலியானது தனக்கு செய்துகொடுத்த ப்ரதிக்ஞையின் நிலைமையை அறியவும் நரி இவ்விஷயத்தில் உபேக்ஷையாயிருந்தது. பசியுடன் இருக்கும் புலியின் மாம்ஸம் ஒரு ஸமயம் காணப்படாதபோது திருடனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று புலியானது கட்டளையிட, கபடமுள்ள துர்மந்திரிகள் 'அம்மாம்ஸமானது வித்வான் என்றும் மிகுந்த புத்திமான் என்றும் எண்ணும் உமது புதிய மந்திரியால் அபகரிக்கப்பட்டது' என்றறிவித்தன. இதைக் கேட்டதும் புலிக்குப் பொறுமையுண்டாகி நரியைக் கொல்ல நினைத்தது. இதுதான் ஸமயமென்று இந்நரிகள் அப்புதிய நரியின்மீது பலவிதமான துர்ப்போதனைகளைச் செய்து அதை ருஜுப்படுத்துபவை போல் அந்நரியின் வீட்டிலிருந்து மாம்ஸத்தையும் கொண்டுவந்து காட்டின. உடனே புலிக்குக் கோபமுண்டாகி நரியைக் கொன்றுவிட வேண்டுமென்று கட்டளையிட்டது.

# கோனேரிராஜபுரம்.

## மகா கும்பாபிஷேக வைபவம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு ஆகிய இரு நாயனார்களும் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற மஹிமையுள்ளதும் ஸ்ரீ பூமி தேவியினால் பூஜிக்கப் பெற்றதும் மற்றும் பல மாஹாத்ம்யங்களுள்ளதுமான "திருநல்லம்" என்னும் கோனேரிராஜபுரத்தில் அனவரத சான்னித்யமாய் விளங்காநின்ற ஸ்ரீ தேஹஸுந்தரீ ஸமேத ஸ்ரீ உமாமஹேச்வர ஸ்வாமிக்கும் சமஸ்த பரிவார தேவதைகளுக்கும் நாளது பகுதான்ய ஹு பங்குனி மீ 17உ காலையில் ஆரம்பித்து 24உ காலை 9மணிக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம், பரித்தியூர் ப்ரம்மஸ்ரீ சுப்பிரமண்ய சிவாசார்யாது அத்யக்ஷதையில் இலந்துறை "ஸமரஸ குஞ்சரம்" ப்ரம்மஸ்ரீ சிவாசார்ய கங்கா ஜடேச சர்மா அவர்கள் ப்ரதான ஆசார்யஸ்தானம் வஹிக்க பல சிவாசார்யர்களுடனும், ரிக், க்ருஷ்ண யஜுஸ், சுக்ல யஜுஸ், ஸாமம் ஆகிய நான்கு வேத பாராயணத்துடனும், திருப்புங்கூர் ப்ரம்மஸ்ரீ ஸோமசுந்தர சிவாசார்யர், உமையாள்புரம் ப்ரம்மஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர் இவர்களது தேவார கானத்துடனும், சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ ப்ரஸங்கபானு, வைத்யநாத சாஸ்திரிகளது அர்த்த புஷ்டியுள்ள அதிகம்பீரமான ப்ரஸங்கத்துடனும் விசேஷ வாத்ய கோஷத்துடனும் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

மாலையில் மஹாபிஷேகம் நடைபெற்று ஸ்ரீ தேஹஸுந்தரி அம்பிகைக்கு இலந்துறை சிவாசார்ய கங்கா ஜடேசசர்மா அவர்களால் சந்தனக்காப்பு திவ்யாலங்காரம் செய்யப்பெற்று பூஜை தீபாராதனை அர்ச்சனை முதலியன நன்குநடைபெற்று ராத்திரி விநாயகாதி பஞ்சமூர்த்திகளும் தத்தம் வெள்ளி வாஹனங்களில் திவ்யாபரண புஷ்ப அலங்காரங்களுடன் வெள்ளி மஞ்சத்தில் ப்ரம்மா விஷ்ணு மூர்த்திகளும் வாத்ய கோஷ வாண வேடிக்கைகளுடனும் வீதி வலம் வந்து கும்பாபிஷேக மஹோத்ஸவமானது பக்தகோடிகள் கண்டு களித்து நேத்ரானந்தமடையச்செய்தது.

அப்பொழுது விஜயஞ் செய்திருந்த வித்வான்களுக்கும் பக்தகோடிகளான ஸேவார்த்திகளுக்கும் உசிதமான காலத்தில் ஸந்தர்ப்பணைகளும் பலரால் செய்யப்பட்டு ஸமஸ்த ஜனங்களும் வயிறார உண்டு வாயார வாழ்த்திச்சென்றார்கள்.

உள்ளூர் பூஜகர் புதுக்குடி ப்ரம்மஸ்ரீ வைத்யநாத சிவாசார்யருடையவும், அவரது குமாரர் ப்ரம்மஸ்ரீ குஞ்சு குருக்கள் முதலியவர்களுடையவும் ச்ரத்தா பக்தி புரஸ்ஸரமான கைங்கர்யங்களைப் பலரும் கொண்டாடுகிறார்கள்.

மேலும் மண்டலாபிஷேகமும் ஸ்வாமி அம்பாளுக்கு லக்ஷார்ச்சனைகளும் தொடங்கப்பெற்று நன்கு நடைபெற்று வருகிறது.

ஒரு நிருபர்.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

பொருள் அறிந்து உச்சரித்தால் எவ்வித பலனைத்தான் அடைய முடியாது? மூர்த்தி த்யானம் செய்துகொண்டு நாமோச்சாரணம் செய்வோமேயானால் இன்னும் மேன்மையான பலனை அடையலாம். ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியை எந்த அவஸரத்தில் த்யானிப்பது என்பதுபற்றி யாரும் திட்டமாகச் சொல்ல முடியாது, அவரவர்கள் தங்கள் ருசிக்கேற்றவாறு த்யானித்துக் கொள்ளவேண்டியது ஆயினும் இகபரஸுகங்களை விரும்புகின்ற ஸம்ஸாரிகளுக்கு वामे भूमि सु என்று தொடங்கும் ச்லோகத்தையே த்யான ச்லோகமாக வைத்துக்கொள்ளலாம் என்பது பெரியோர்கள் கருத்து.

21-8-10

## கல்கத்தா.

ஸ்ரீராமநவமி உத்ஸவம்.—இது வரையில் நடக்கவில்லை. இந்த வருஷம் முதல் இந்த உத்ஸவத்தை கொண்டாட வேண்டுமென்று அநேகம் பேர்களுக்கு எண்ணம் உண்டாகி எவ்விதமாகவாவது ஆரம்பித்து வருஷாவருஷம் நடத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக ஸ்ரீராமநவமி தினம் Haris Mukargee Road ல் ஒருபெரிய கொட்டகை போட்டு அலங்கரித்து அதில் ஸ்ரீராமபடத்தை காலையில் பிரதிஷ்டைசெய்து பிறகு பிர்ம்மஸ்ரீ உபயவேதாந்தாசார்ய ஸிம்மாஸனாதிபதி, வித்வான் பண்டிதவர்ய, பார்ஹஸ்பத்ய தர்ண வேலாமூர் வேதாந்தாசார் ஸ்வாமிகளால் ஸ்ரீராம ஜனன கட்டம் வெகு அழகாக உபன்யஸிக்கப்பட்டது. பக்தர்கள் அநேகம்பேர் வந்து சிரவணம் செய்தார்கள், ஸாயங்காலம் 7 மணி முதல் 8மணி வரையில் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் பிறகு 8மணி முதல் 10½மணி வரையில் கும்பகோணம் பக்கிரிஸ்வாமி பிள்ளை Party நாதஸ்வரக் கச்சேரியும் நடந்தது. இவ்விதமாக தினம்தோறும் இரவில் ஸஹஸ்ரநாம அர்ச்சனைக்கு பிறகு சங்கீத வித்வான், கிருஷ்ணமூர்த்தி அய்யங்கார், சேலம் ராமண்ணு பாகவதர், இவ்வூர் வெங்காளத்துப் பாடகர்கள் பெங்காலி Archestra இவர்களுடைய கச்சேரி நடந்து நேற்று வெள்ளிக்கிழமை தினம் பூர்த்தியாகி ஸ்ரீ ராமபடத்தை ரதத்தில் ஆரோஹணித்து வெளிப்புறப்பாடு ஊர்வலம்செய்து மறுபடியும் கொட்டகைக்கு வந்து தூபதீப நைவேத்தியங்களுடன் நிர்விக்னமாய் திருப்திகாமாய் நடந்தது. இந்த விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு ஆதிமுதல் ஏற்பாடு செய்தவர் Braithwaite Company யில் உத்தியோகத்திலிருக்கும் பிர்ம்மஸ்ரீ ஜகந்நாதய்யங்கார் அவர்கள் அடுத்த வருஷம் முதல் இன்னும் சிறப்பாக நடத்தவேண்டுமென்று சபையோர்களிடம் வேண்டிக் கொள்ளப்பட்டது

ஸீதாகல்யாண மஹோத்ஸவம்-:—பவானிப்பூர் ஹரீஷ் முகர்ஜீ ரோட்டு 68/3 நம்பர் கிருஹத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ கோதண்டராம பஜனைமடத்தில் ஸ்ரீராம ஜனன உத்ஸவத்தைக் கொண்டாடி, நவமி முதல் தினசரி வேதபாராயணம் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் நடந்து நேற்று வெள்ளிக்கிழமை பூர்த்தியாகி காலையில் பக்தகோடிகள் ஊர்வலமும் பிறகு ஸ்ரீ ஸீதாகல்யாண மஹோத்ஸவமும் பிராம்மண ஸமாராதனையும் நடந்தது. அநேகம் ஸ்திரீ புருஷர்கள் விஜயம் செய்து சந்தோஷமடைந்தார்கள். இன்றையதினம் ராத்ரி ஆஞ்சநேய உத்ஸவம் நடக்கிறது.

ஹௌராவில் ஸ்ரீராம பட்டாபிஷேகம்.—சென்ற 3 மாதகாலமாக தை மாசம் முதல் ஆரம்பித்து ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை அய்யூர் (தஞ்சாவூர்) வேதாந்த விபூஷணம் வேதாந்த சிரோமணி பிர்ம்மஸ்ரீ எ. ஆர்.வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களால் சுருதி, ஸ்மிருதி தாத்பர்யத்துடன் அநேகம் ஜனங்களுக்கு மனது உருகும்படி வெகு விமரிசையாய் தினப்படி உபன்யாஸம் செய்து வருகிறார். நாளையதினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது. அத்துடன் அவ்விடத்தில் தென்னிந்திய பஜனாலயத்தில் ஸீதாகல்யாண உத்ஸவமும் நடக்கப்போகிறது. தியாகராஜய்யர்.

## ஓர் ஸம்சயம்.

நம் தேசத்தில் சிஷ்டர்கள் நடத்திக் கொண்டு வரும் ச்ராத்த கார்யவில் சிலர் விச்வ தேவஸ்தானத்துக்காக ஒரு ப்ராமணனையும் பித்ரு ஸ்தானத்துக்காக ஒரு ப்ராமணனையும் ஆக இரண்டு பிராம்மணர்கள் வரித்து ச்ராத்தம் பண்ணுகிறார்கள். (2) வேறு சிலர் இவ்விரண்டு பிராமணர்களோடு ச்ராத்த ஸம்ரக்ஷக மஹா விஷ்ணுவுக்கு என்று மூன்றாவதாக ஒரு ப்ராமணனை வரித்து ச்ராத்தம் செய்கிறார்கள். (3) மற்றும்சிலர் இந்தப் பிரகாரம் மூன்று பிராமணர்களை வரிப்பதுடன்—போஜன காலத்தில் மாத்திரம் நாலாவதாக ஒரு இலையைப் போட்டு சந்தனக் கட்டையையோ ஏதாவது புஸ்தகத்தையோ அல்லது படத்தையோ பூஜைப் பெட்டியையோ அல்லது ஸாளிக்கிராமத்தையோ ஒன்றுமேயில்லாமலேயோ இலைபோடுவது முதற் கொண்டு உத்தரா போசனாந்தம் ப்ரத்யக்ஷ மஹா விஷ்ணு என்று உபசரிக்கிறார்கள் அதிலும் விசேஷம் போதுவதில்லை இவ்விதம் அனுஷ்டிக்கிறார்கள். (4)இன்னும் சிலர் தேவ பித்ருக்களுக்காக இரண்டு பிராம்மணர்களை வரித்து மேல் காட்டிய 3வது ரீதியாக இலையை மாத்திரம் போட்டு விஷ்ணுவை ஆராதிக்கிறார்கள 3,4 இவ்விருவர்களும் போஜன ஸமயத்துக்கு முன்னாவது பிந்தியாவது விஷ்ணு ஸம்பந்த மேயில்லாமல் செய்து வருகிறார்கள்.

ஆனால் இவ்விதம் அனுஷ்டிக்கிறவர்கள் மஹா சிஷ்டர்களாயும் விசேஷக்ஞர்களாகவே யிருக்கிறார்கள்.

பின்னும் அந்த விஷ்ணுவின் உச்சிஷ்ட இலையில் சிஷ்டர்கள் போஜனம்செய்ய விரும்புவதில்லை,

பாலர்களையோ ஸ்த்ரீகளையோ அல்லது ஸாமான்யமான பிரும்ம பந்துவையோ போஜனம் செய்விக்கிறார்கள். இவ்விதம் பலவிதத்திலும் ஸம்சயத்திற்கு காரணமாக யிருக்கிறது.

எல்லா ஸூத்ர கார்களும் விஷ்ணுவானத்தைச் சொன்னதாகத் தெரியாது. ஸ்மிருதி கர்த்தாக்களோ அவசியம் விஷ்ணு வரணம் வேண்டு மென்று சொல்லி யிருக்கிறார்கள்: அதை பலவம்பித்து மூன்றாவதாக ஒரு ப்ராமணனை விஷ்ணுவாக வரித்து ச்ராத்தம் செய்வது மிகவும் சிலாக்கியம் என்பதில் யாரும் ஸம்சயபடமாட்டார்களென்றே நினைக்கிறேன். வரணமேயில்லாமல் போஜன காலத்தில் இலையை மாத்திரம் போட்டு முன்னும் பின்னும் இல்லாமல் ச்ராத்தம் செய்கிற விஷயத்தில் மாத்திரம் சரியானப் பிரமாண மென்ன வென்பதைத் தெரிய விரும்புகிறேன் இந்த விஷயத்தில் பண்டிதர்கள் பக்ஷபாதமில்லாமல் தன்று ஸ்மிருதிகளை பரிசீலனை செய்து சிஷ்டாசாரம் என்ற பிரமாணத்தைத் தவிர ஸ்ம்ருதி வாக்யங்களை ஸப்ரமாணமாக தெளிவாய் நல்லோரும் தெரிந்து கொள்ளும்படி ஆர்ய தர்மம் மூலமாய் ப்ரகாசப் படுத்த வேண்டு மென்று விநயத்துடன் பண்டித ரத்னங்களையும் பிரார்த்திக்கிறேன்.

## தர்ம சாஸ்திர ஸந்தேகம்.

வருகிற பிரமாதி ஞு மார்கழி மீ சுக்ல பஞ்சமி திதி எந்த காலத்தில் நடத்து என்ற விவரம்:-

அதாவது கார்த்திகைமீ 30உ சுக்ல பஞ்சமி திதி ராத்ரி சூரிய ஸங்கிரமணம் மார்கழி 1உ பஞ்சமி 5 நாழிகை இருக்கிறது. 30உ சதுர்த்தி- 46 நாழிகை தைமீ 1உ பஞ்சமி 51- அந்த முதல் தேதி 16- நாழிகைக்கு மகா ஸங்கரமணம் இதை தர்ம சாஸ்திரங்களைப்பார்த்து ஆதார வாக்கியத்துடன் ஆர்ய தர்மம் பத்திரிகை மூலம் வெளியிடவேணுமாய் ஆஸ்திகசாஸ்திரர்களை பிரார்த்திக்கிறேன்

விகவனுத சாஸ்திரிகள்.

## ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளின் ஸ்ரீமுகபடனம்.

3—4—30 திங்கட்கிழமை ஸாயங்காலம் 5-30 மணிக்கு ஸ்ரீமடத்தின் பிரதிநிதியால் இவ்விடம் ஸைனூர் இர்ரிகேஷன் ஓவர்ஸீர், மகா-ள-ஸ்ரீ ஸிவராமகிருஷ்ணய்யர் அவர்கள் க்ருஹத்தில், ஸ்ரீமுகபடனம் நடைபெற்றது. இவ்வூர் ஸைதாபேட்டை தலைமை உபாத்யாயரான மகா-ள-ள-ஸ்ரீ ஸிவஸாம்ப அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார், ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி அம்பாளுடைய, கும்பாபிஷேக விஷயமாய் வசூல் விஷயமாய் இவ்வூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பண்டிதரும், உபாத்யாயருமான பிரும்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களையும் வெங்கட்ராமய்யர் அவர்களையும் நியமிக்கப்பட்டு பிரஸாதங்கள் வழங்கி பூர்த்தி செய்யப்பட்டது. நமது நிருபர்,

## ஸ்ரீ ஸ்தவம்

மூலம் தாத்பர்யம்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணு 0—4—0

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸெண்டிபிக
டி. டி
ஹிங்கு பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறுசுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.
விலை ரூ. 1—14—0. பவுண்டு.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar. and S. Kalyanasundaram

ஆரியதர்மம்

4/24 ~~16~~ 16

20-4-1939

215282

502
215282
28 APR 1939
MADRAS
199

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4 / 24 | கும்பகோணம் கலி5039 பிரமாதி-ஸு சித்திரை-மீ 7உ 1939-ஸு ஏப்ரல்-மீ 20உ | வ 16 |

## காந்திஜியை துன்புறுத்தினர்.

### ராஜ்கோட்டில் வகுப்புவாதிகளின் விஷமம்.

ராஜ்கோட்டில் முஸ்லீம்களும், கிராஸியக்களும் தங்கள் வகுப்புகளுக்கு சீர்திருத்தக் கமிட்டியார் பிரதிநிதித்வம் கொடாத காரணமாக காந்தியை துன்புறுத்தினர். காந்திஜி பிரார்த்தனை செய்யும்காலத்தில் 500 பேர்கள் எதிரிகள் கூடி காந்திஜியை கேவலமாகப் பேசிக் கூச்சல்போட்டு அவரைச் சூழ்ந்துகொண்டு ஹிம்ஸைசெய்ய முயற்சித்தார்கள். காந்திஜீ சிரமப்பட்டுத் தப்பித்துக்கொண்டு தமது காரில் ஏறிச்சென்றாராம்.

## ராஜ்கோட் நிலைமை.

ஸர்தார் படேல், தாம் நியமிக்கவேண்டிய ஏழு சீர்திருத்தக் கமிட்டியங்கத்தினரின் பெயரை காந்திஜி மூலமாக மஹாராஜாவுக்கு அனுப்பிவிட்டார். கமிட்டியில் ஸ்தானம்பெற முயற்சித்த வேறு சில வகுப்புகளுடன் ஸமாஸம் பேசியது பலிக்கவில்லை. முஸ்லீம்கள், தீண்டாதார், கிராஸியக்கள் ஆகிய வகுப்பினர் எதிர்க்கிளர்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். தீண்டாதாருக்குப் பரிந்து அம்பேத்கார் அவ்விடம் ஓடியிருக்கிறார். கமிட்டி மெம்பர்களின் யோக்யதை ஸரியானதுதானாவென்று தாகூர் விசாரணை நடத்துவாராம்.

## ஐரோப்பிய நிலைமை,

இத்தாலி அல்பேனியாவை ஆக்ரமித்துக்கொண்டு தமது அரசரின் ஆதிக்யத்தின்கீழ் வந்துவிட்டதாக முஸோலினி அறிக்கை செய்துவிட்டார். இதன் காரணமாக ஐரோப்பாவில் சிறிய தேசங்களுள் பீதியும் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டன், பிரான்ஸ் ருஷ்யா போன்ற பெரியதேசங்கள் நிலைமையை தீவ்ரமாகக் கவனித்துவருவதுடன், சிறியதேசங்களுக்கு ஆபத்தேற்படாமல் தடுக்கவும், உறுதிமொழி கொடுக்கவும் தீர்மானித்தன.

## வங்காளத்தில் ரயில் விபத்து.

### 34 பேர் மரணம்.

வங்காளத்தைச் சேர்ந்த மஜதியா என்ற ஸ்டேஷனில் இரண்டு பிரயாணி வண்டிகள் மோதியதால் வண்டிகள் சிதறுண்டு 34 பேர் ஸ்தலத்திலேயே மாண்டார்கள். அநேகருக்கு பலத்த காயம்.

## கள்ளுக்கடைக்காரர்களின் ஸத்யாக்ரஹம்?

பம்பாய் நகரத்தில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவருவதை ஆக்ஷேபித்து அங்குள்ள கள்ளுக்கடைக்காரர்கள் கூட்டம் போட்டார்கள். காந்திஜிக்கும் தந்தி கொடுத்தார்கள். மதுவிலக்கு ஏற்படாமல் தடுக்க ஸத்யாக்ரஹம் செய்யப்போவதாக காந்திஜிக்கு அவர்கள் தெரிவித்திருக்கிறார்களாம்.

## The Kumbakonam Mutual Benefit Fund Ltd., KUMBAKONAM.

**NOTICE.**

This is to inform the shareholders of the Fund that Mr. S. Krishnamoorthi, G.D.A., R.A., Registered Accountant and Auditor has been nominated for the place of Auditor for the ensuing year.

Kumbakonam, 13—4—39. V. R. Satakopa Iyengar, *Secretary.*

## இந்தியா ஸ்திரீகளின் நிலைமை!

### விசாரணைக் கமிட்டி நியமனம்.

இந்திய சட்ட ஸபையில் ஸ்ரீமான் ஹெக்டே என்ற மெம்பர் ஒருவர் இந்திய ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி விசாரிக்க ஓர் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தை ஸர்க்கார் சில திருத்தங்களுடன் ஏற்றுகொண்டனராம்.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக்
டி. டி.
மிஸ்கி பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீர்ணத்தை அகற்றுகின்றது!!
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.
விலை ரூ. 1—14—0. பவுண்டு.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## அத்வைதம்.

### 3. ஆஸ்திகம்.

மஹாஸ்வாமிகள்:— நாம் தற்காலம் இருக்கும் நிலையில், நம்மில் அநேகர்கள் எவ்வளவோ கீழ்ப்படியிலிருக்கிறார்கள். நாஸ்திகத்தை விட்டுக் கவனிப்போமேயானால், ஜீவதத்வத்தைப்பற்றியே நினைக்காத நம்மில் சிலர், தம் உடலே ஆத்மாவென்று நினைக்கிற சார்வாகனுடைய நிலைக்கு வந்து சேரவே, இன்னம் அநேக ஜன்மங்கள் எடுக்கவேண்டியிருக்கும்.

பிரபு— அவ்வளவு மோசமாகவா இருக்கிறோம்? அந்தகாலத்திக நாட்களெல்லாம் அநேகமாய் போய்விட்டன. ஆஸ்திகர்களென்று சொல்லிக் கொள்ளக்கூட எங்களுக்கு யோக்யதை கிடையாதா?

ம:—அவ்வளவு உறுதியாய்ச் சொல்வதற்கு "ஆஸ்திகர்" என்ற சப்தத்திற்கு என்ன அர்த்தம் என்று நீங்கள் கொஞ்சம் கவனித்துப் பார்த்தீர்களேயானால், உங்களுக்கு நாம் ஆஸ்திகர் என்று தன்னை சொல்லிக்கொள்ளலாமா என்று சந்தேஹம் வந்துவிடும். ஒரு பதார்த்தம் அஸ்தி "இருக்கிறது" என்று சொல்கிறவன் "ஆஸ்திகன்", ஒரு பதார்த்தம் நாஸ்தி "இல்லை" என்று சொல்கிறவன் "நாஸ்திகன்" என்று ஸாமான்ய நிர்வசனம். நம் முன்னால் ஒரு குடம் வைத்திருக்கிறதாக நினைத்துக் கொள்வோம். அந்தக் குடம் "இருக்கிறது" என்று ஒருவனும், அதே சமயத்தில் மற்றொருவன் "இல்லை" என்றும் சொல்ல முடியுமா?

பி:— முடியாது. குடம் "இருக்கிறது" என்றால் இரண்டு பேர்களுக்கும் தான் "இருக்கிறது"

ம:— அப்படியே, ஹிமய பர்வதம் "இருக்கிறது" என்று ஒருவன் சொல்ல, அதை யொருநாளும் பார்க்காதவன் "இல்லை" என்று சொல்லலாமா?

பி:— அதெப்படிச் சொல்கிறது? தான் பார்த்ததில்லையென்று மாத்திரம் சொல்லலாமே தவிர, இல்லவேயில்லையென்று சொல்ல முடியாது.

ம:— அதாவது, ஒரு பதார்த்தம் இருக்கிறது என்று ஒருவன் சொல்லும்போது, அப்பதார்த்தத்தின் இருப்பு மற்றவர்களுக்கெல்லாம் தெளிவாய்ப் புலப்படாவிட்டாலும், அல்லது ஸரி பார்த்துக்கொள்ள ஸாத்தியமாயிருந்தாலும், அப்பதார்த்தம் இல்லையென்று யாவராலும் சொல்ல முடியாதல்லவா?

பி:— ஆம்.

ம:— ஆகையால், ஒரு பதார்த்தம் இருக்கிறதா, இல்லையா என்று மனப்பூர்வமாக அப்பிராய பேதம் ஏற்பட இடமிருக்க வேண்டுமானால், அந்தப் பதார்த்தம் தெளிவாய்ப் புலப்படாமலிருக்கவேண்டும், அல்லது உடனே ஸரிபார்த்துக்கொள்ள ஸாத்தியமில்லாமலிருக்கவேண்டும்.

பி:— வாஸ்தவம்.

ம.— ஜன்மாந்தரம் உண்டு என்ற விஷயம் தெளிவாக எல்லாருக்கும் புலப்படவில்லை, உடனே ஸரிபார்த்துக்கொள்ளவும் முடியாது. இந்தப் பூலோகத்தைத் தவிர அநேக யோக்கியமாய் லோகாந்தரங்கள் உண்டு என்பதும் தெளிவாய்த் தெரியவில்லை, உடனே ஸரிபார்க்கவும் முடியவில்லை. அதே மாதிரி, ஈசுவரன் இருக்கிறார் என்ற விஷயமும் எல்லாருக்கும் ஸ்பஷ்டமாகத் தெரியவில்லை. நம்முடைய பரிச்சின்னமான அல்ப சக்தியைக்கொண்டு ஸரிபார்ப்பதும் ஸாத்தியமில்லாமலிருக்கிறது.

பி:— அப்படியே.

ம:— வஸ்துவும் ஒரு பதார்த்தம் இருக்கிறது என்று சொல்வதினால் மாத்திரம் ஆஸ்திகன் என்றும், அப்பதார்த்தம் இல்லை என்று சொல்வதினால் மாத்திரம் நாஸ்திகன் என்றும், நாம் வியவஹரிக்கிறதில்லை. மேலே சொல்லிய மூன்று விஷயங்கள், அதாவது, ஜன்மாந்தரம், லோகாந்தரம், ஈசுவரன் இவைகள் உண்டென்று சொல்பவனை மாத்திரம் ஆஸ்திகன் என்கிறோம். இம்மூன்றும் கிடையாதென்று சொல்கிறவனை நாஸ்திகன் என்கிறோம். எவ்வளவு படித்தவனாகவேண்டியவனாலும் இருக்கட்டும், இப்பொழுதுள்ள மனிதர்களின் மனோநிலையைக் கவனிப்போம். அவர்களுடைய நித்திய நடவடிக்கையைப் பார்த்தால், ஜன்மாந்திரத்திலாவது, ஈசுவரனிடத்திலாவது நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்று நினைக்க இடமிருக்கிறதா? ஸுகமெல்லாம் இப்பொழுது கிடைத்தால் உண்டு. அதன்றேல் எப்பொழுதும் கிடையாது, என்ற நிர்ப்பயம் இருப்பதுபோலவே எல்லாரும் ஸுகத்தைத் தேடுவது ஜன்மாந்தரத்தைக் கொண்டிலைதானே, அதற்குக் காரணம் என்ன? ஜன்மாந்தரம், லோகாந்தரம் இவைகளில் நம்பிக்கையிருக்குமேயானால், தர்மத்தை யெவ உதாஸீனம் செய்ய முடியுமா? ஸகல ஸம்பவங்களுக்கும் ஸாக்ஷியாய் ஸகலவுமாய்க் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று ஜனங்களுக்கு நம்பிக்கை இருக்குமேயானால், இத்தனை வியவஹாரங்களும், பத்திரிகை பதிவு கச்சேரிகளும் நாள்தோறும் கொண்டே வருவதற்கு என்ன காரணம்? வெளிப்படையாக ஜனங்கள் என்ன சொல்லிக்கொண்டபோதிலும், தங்களுக்குள்ளேயே தங்களைப்பற்றி எப்படி நினைத்துக்கொண்டபோதிலும், ஆஸ்திகம் காணுகிறதான் அநேகமாய்க் குறைந்து கொண்டே தான் வருகிறது என்பதுதான் என் நிர்ணயம். மறுபடியும் அந்த ஆஸ்திகத்தை புஷ்டியாய் செய்து காப்பாற்றி வருவதற்காகவே நாம் இப்பொழுது பிரயத்தனம் செய்யவேண்டும். நம்மில் பெரும்பாலோருக்கு, பதார்த்தம் ஒன்று, இரண்டா, ஒன்றாமா என்ற கேள்விகளெல்லாம் சொற்பமேனும் பிரயோஜனமே யில்லை. ஆகையால் இப்பொழுது இவைபோன்ற விசாரங்களைத் தள்ளிவைத்து விட்டு, தர்மானுஷ்டானத்தினிலேயே அக்கறை செலுத்திக் கொள்ள வேண்டும். பொய் சொல்லுவது தவறு என்று யாரும் அறிவார்கள். இதில் யாருக்கும் கொஞ்சமேனும் ஸந்தேகம் கிடையாது. அப்படி இருந்தும், பொய் ஜாஸ்தியாகிக் கொண்டே வருகிறது. இன்னொருவனை வாயாற வைது பலது என்று யாரும் அறிவார்கள். அப்படியிருந்தும், இக்காலத்தில் வாயாறுதல் தான் ஸாதாரணமாக ஜீவனோபாயமாக இருக்கிறது. ஸாமான்ய தர்மத்தின் அடிப்படையான விஷயங்களைக் கூட அனுஷ்டானத்தில் வைத்துக் கொள்ளத் தயாராக இராத ஜனங்களுக்கு, அந்தப் பிரஹ்மத்தின் ஏக தத்வத்தைப் பற்றி வரிந்துச் சொல்வதில் கொஞ்சமேனும் பிரயோஜனம் உண்டா? ஸாமான்ய தர்மங்களை சிரத்தையாக அனுஷ்டித்து வந்து, அவரவர்களுக்கு ஏற்பட்ட விசேஷ தர்மங்களை அக்கறையுடன் அனுஷ்டித்து, சித்தசுத்தியையும் யோக்யதையையும் ஏற்படுத்திக் கொண்டபிறகு, அல்லவா அத்வைத வித்தாந்தத் தத்வத்தைத் தெரிந்து கொள்ள ஆரம்பிக்க வேண்டியது? அதற்கு அதிகாரம் ஏற்படும்? ஸரியான பரிபக்குவத்தைப் பெற்றவர் தான் வாசிக்கலாம் என்று நியாயமான விதியை மீறுவதினால் தான் இக்காலத்திலுள்ள வியர்த்தமான கலக்கங்கள் ஏற்படுகின்றன. தொத்தன் வேலை, தச்சன் வேலை, முதலிய சிறு காரியங்களுக்குக் கூட, அவரவர்கள் கருவிகளைக் கையாளும் முன்னர், அப்யாஸம் செய்தாக வேண்டியிருக்கிறது. எல்லா வித்யைகளிலும் மேலானதும் மிகவும் சிரமமானதுமான ஆத்ம விஷயமான ப்ரஹ்மவித்யையில் மாத்திரம், எல்லோருமே தன்னை அதிகாரி யென்று நினைத்து, அத்வைத ஸித்தாந்தம் வாசிக்கப்பார்த்தியதையுள்ளவாக நினைத்துக் கொள்கிறார்கள்; இவர்கள் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்லவும் ஆரம்பிக்கிறார்கள்; இந்த மனோபாவம் போக வேண்டும். யோக்யதையை ஸம்பாதித்துக் கொள்வதே நியமமாகப் பாடுபட வேண்டும். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடியும், குரு சொல்லும் பிரகாரமும் தவறாமல் நடந்து வந்து, அந்த யோக்யதையை ஸம்பாதிக்க மனப்பூர்வமாக யத்தனம் செய்து வருவோமேயானால் ஈசுவரனே நமக்கு வழி காட்டியாயிருந்து, மேல் மேல் ஸுலபமாக நம்மை அழைத்துச் சென்று, நம் பிரமங்களை நிவர்த்தித்து, நம் ஸந்தேஹங்களைத் தெளிய வைத்துக்கொடுப்பார். ஸகல வித்யாமய சிரமத்திலிருந்தும் தொந்தரவிலிருந்தும் நம்மை விடுவித்து, எல்லாம் ஒருமைப்பட்டுவேற்றுமையற்றிருக்கும் பிரஹ்மத்தின் தத்வத்தையும் ஆனந்தத்தையும் நமக்குக் கொடுத்து அத்வைதமாய் பயார்த்தமாயிருக்கும் நிலையை ஸாக்ஷாத்கரிக்கும்படி அனுக்ரஹிப்பார்.

["தேசிகன் தேன்மொழிகள்"—முற்றிற்று]

---

## C. S. தீக்ஷிதர் அண்டு கோ., பிரசுரங்கள்.


கும்பகோணம் C. S. தீக்ஷிதர் அண்டு கோ., வால் பிரசுரிக்கப்பட்ட அடியிற்கண்ட ஸம்ஸ்கிருதம், தமிழ் புஸ்தகங்கள் எம்மிடம் கிடைக்கும்.

பள்ளிக்கூடங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழக்கம்போல் கமிஷன் கொடுக்கப்படும் மேற்படி புஸ்தகங்களுக்கு அங்கீகாரமிருக்கின்றன விபரத்துக்கு எழுதவும்.

பண்டிட் S. வெங்கட்டராம சாஸ்திரிகள் இயற்றிய ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் (தேவநாகரம்)

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | கதாகுஸுமமஞ்சரி முதல்பாகம் | 0 | 8 |
| 2. | டிை. இரண்டாவது | 0 | 10 |
| 3. | டிை. மூன்றாவது | 0 | 8 |
| 4 | விக்ரமார்க்க சரித்திரம் | 0 | 8 |
| 5 | ஸுபாஷித மஞ்சரி | 0 | 6 |
| 6. | போஜ சரித்திர ஸங்கிரகம் | 0 | 4 |
| 7. | சப்தமஞ்சரி | 0 | 5 |
| 8. | பிரதமபாடமஞ்சரி | 0 | 5 |
| | தமிழ் புஸ்தகங்கள். | | |
| 1. | உத்தமர் சரித்திரம் மலர் | 0 | 3 |
| 2 | டிை 2 | 0 | 4 |
| 3. | டிை. 3 | 0 | 5 |
| 4. | டிை. 4 | 0 | 5 |
| 5. | டிை. 5 | 0 | 7 |

---

பாஸ்ரி ஸீரீஸ்

சென்னை P. T. பாஸ்ரி கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட சங்காரந் பூஜை கோபூஜை முதலிய புஸ்தகங்கள் நல்ல காகிதத்தில் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புக்கிணங்க தமிழிலுள்ளது. ஒவ்வொரு கிருஹத்திலும் இருக்க வேண்டியது.

எங்களிடமும் கிடைக்கும்.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




# வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

அறியாமையா? துரெண்ணமா? திருவல்லிக்கேணி கோவாபரேடிவ் ஸபை வர்ஷோத்ஸவத்தில் ஒருவர் பெண்கள் இதில் அதிகம் பங்கெடுத்து வேலைசெய்தால் அதிக லாபம் கிடைக்குமென்கிறார். பெண்களை கடையில் உட்காரவைப்பது இந்திய தர்மமா?

குருகுல தர்மாசாரியர்!! சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் ப்ரதமோபாத்யாயருக்கு மஹாஜனங்களால் கொடுக்கப்பட்ட பட்டமிது! வித்யையைவிட மாணவர் ஒழுக்கத்தில் அவர் காட்டும் ஊக்கத்திற்கு எந்த ஸன்மானம் செய்தாலும் போதாதென்போம்! நீண்ட ஆயுளை இறைவனளிக்க வேண்டும்!!

நல்ல தீர்மானம்!! ஜமீன்தார் ஸபை அரசாங்கம் மதத்தில் தலையிடக்கூடாதென்று செய்த தீர்மானம் காலத்திற்கவசியம் வேண்டியதே!

ஒவ்வொன்றாக பலியா? தேவஸ்தான போர்ட் ஒவ்வோர் ஆலயமாக உனது பரிபாலனம் நன்றாகயில்லை. நானொரு ஆளை வைக்கிறேன் என்று மந்திரி தந்திரத்தை நிறைவேற்றுகிறதுபோலும். கோவிலையும் கெடுத்து நாட்டையுமழிக்கவே இந்த தந்த்ரம் ஈசா! நீயே கதி!

வண்டியில் மருந்து! மைசூர் அரசாங்கம் மாட்டுவண்டியில் மருந்துடன் வைத்யர் ஊர் ஊராக போய் நோயாளிக்குதவுகிறது! சென்னை மந்திரி என் செய்கிறார்? ஊர் ஊராக போய் பேசுகிறார்.

தேசமுகரா? தசமுகரா? எப்படியோ இவரை இந்த ஆண்டு ஸபை மனிதராக்கிவிட்டதெனலாம்! இவர் பொய் மூட்டையை ஸர்க்கார் அவிழ்த்து அவருக்கு பலமில்லை என காட்டிவிட்டார்!!

தர்மவீர பஜோரியா? போதிய மனித ஸஹாயமில்லாவிடினும் இவ்வீரர் அதர்மத்தை எதிர்த்து போராட அஞ்சவில்லை. 400 மஹாஜர்களை மீட்டினர். தீரனாக முன் நின்றார், தார்மிகர் வாழி!!

ஐயோ! அவிவேகமே! வேதத்தைக் காலத்திற்கேற்க மாற்றவேனென்று மார்தட்டிய ஓர் பிரும்ம பந்துவுக்கு பல துருஷ்கர்கள் பாடங்கள் கற்பித்தனர். மானமோ மதாபிமானமோ இருந்தால் இனி அத்தகைய சொல்லைக் கூறுர்.

பாம்பேயின் அதிக ப்ரஸங்கம்! பெண்மக்களுக்கு விவாஹ ரத்து விஷயமாக இந்திய சட்டஸபையில் ஓர் மசோதா தொங்கிக்கொண்டிருக்கும்போது மாகாண ஸபை இதில் தலையிடலாமா என்று கூட யோசியாமல் அதே விஷயமாக ஓர் சட்டம் செய்ய முயற்சிக்கிறது.

நல்ல அறிகுறியா? புது ஆண்டு ஆரம்பத்தில் இடியும் மின்னலுமாக மழை பெய்தது நற்சகுனமா? என ஸந்தேஹத்திற்கிடமாகிறது. புது வருஷபலனைப் பார்த்தால் நன்மை வெகு தூரத்திலிருக்கிறது! ஆலய மடங்களுக்கு ஆபத்து ப்ரத்யக்ஷ மதிகரிக்கின்றது. தார்மிகர் கண்ணனை நம்பி கடும் போரி லிறங்கவேண்டும்.

ஸ்ரீசங்கர ஜயந்தி! சென்னை அமர கலா விலாஸினி ஸபை ஸ்ரீசங்கர மடம் திருவல்லிகேணி, மைலை மாம்பலம் அத்யயன ஸபைகள். சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை, மாம்பலம் கிருஷ்ண கிருபாலயம் ஸ்ரீஹரிஹராலயம் முதலிய பல இடங்களில் ஸ்ரீப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண மஹந்யாஸ பூஜை வேதபாராயணம் வேதாந்த உபன்யாஸங்கள் ஸர்வல பஜனைகளுடன் கொண்டாடப்படுவது மிக சிறந்ததே.

## கும்பகோணத்திற்கு ஸ்ரீஸத்திய மூர்த்தி வருகை.

### கும்பகோணம் இரண்டாவது அரசியல் மகாநாடு.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம் ஏப் 19வ

இந்நகர் இரண்டாவது அரசியல் மகாநாடு இந்தியா சட்ட சபை அங்கத்தினரும் அகில இந்திய காங்கிரஸ் வாதியுமான ஸ்ரீமான் S. சத்திய மூர்த்தி M. L. A, தலைமையில் நாளது மேமீ 14வ இந்நகரில் நடக்கும் என்று தெரிய வருகிறது. ஸ்ரீமான் சத்திய மூர்த்தி ஷை தினத்தில் வரவும், தலைமை வஹிக்கவும் சம்மதித்து புதிய டில்லியிலிருந்து ஷை மகா நாடு உபசரணை கமிட்டியாருக்குத் தெரிவித்திருப்பதாக அறிகிறேன்.

## கும்பகோணம் பாணாதுரை ஹைஸ்கூல்.

### மாணவர்களுக்கு அரிய உபதேசம்.

ஏப் 19

பாணாதுரை ஹைஸ்கூல் கவிநிரக்கழத்தின். வருடமுடிவு கொண்டாட்டம் தஞ்சைஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் ஆர். எம். சுந்திரம் ஐ. சி எஸ். தலைமையில் நடந்தது. ஸ்கூலில் மாணவர்கள் பல வகையில் திறமைத்தனத்தைக் காட்டி வந்தவர்களை களிக்கச்செய்தார்கள்.

ரிடயர்டு பிரொபஸர் ஸ்ரீமான் கே. எஸ். பார்த்தஸாரதியார் M. A. மாணவர்களுக்கு அரிய வகையில் அரிய மொழிகளால் உபதேசம் செய்தார்.

இந்தக்கொண்டாட்டத்திற்கு வந்திருந்தவர்கள் திடுக்கிடும்படி தமிழ் பாஷையில் மிக அழகாய் தேனினும் இனிமையாகப்பேசினார். தமிழ் பாஷையில் தான் தான் பேச விரும்புவதாயும், தமிழர்களே தன் முன் இருப்பதாயும் தெரிவித்தார். இச்சமயத்தில் கூட்டத்தில் உள்ளவர்களில் சிலர் திருமுகங்களின் மலர்ச்சி குறைவுற்றதை நான் கண்டேன். இதற்குக்காரணம் இன்னம் நம்மில் நவீன ஆசை ஒழியாதது தான் போலும்!! ஸ்ரீமான் ஆசாரியார் பேசுகிறபொழுது மேல் நாட்டுப்பழக்க வழக்கங்கள், நவீன நாகரீகம் மேல்நாட்டைப்போல் நாமும் நடை உடை பாவனைகளை பூசிக்கொண்டு கூத்தாடுவது மலிந்து விட்டது என்றும், இந்த கேவலமான நிலைமை நாட்டில் மறைந்து ஒழிய வேண்டும் மென்றும், காங்கிரஸ்காரர்கள் இயக்கங்களில் தோன்றும் பல்வேறு காரியங்களையும் மாணவர்களும் எடுத்துக்கொள்வது படிப்பு முறைக்கே தீங்கிழைக்கும் என்றும் காங்கிரஸ் பல் வேறு காரியங்களில் முக்கியமாக "ஸ்டிரைக்கு", சத்தியாக்ரஹம் இவைகள் தான் மாணவர்கள் கைக்கொள்ளலாகா தென்றும், குருவிடம் பணிந்து கட்டுக்கு அடங்கி நடப்பதுதான் முக்கியம் என்றும் காங்கிரஸ் இயக்கம் பெரிய விஷயங்கள் என்றும், அதில் மாணவர்கள் தலையிடுதல் நேர்மையற்றதாகும் என்றும், தாய் தந்தை மாணவர்களை நேர்மையாகப் படிக்கவும் நல்ல ஸ்திதிக்கு வரவேணும் என்று நினைக்கிறதற்கு விரோதமாக எவ்விதத்திலும் மாணவர்கள் நடக்கலாகாதென்றும், ராஜீய விஷயத்தைப்பற்றி கவனிப்பது மாணவர்களின் படிப்பு காலத்திற்கு வெளியான விஷயங்கள் வருங்காலத்தில் மாணவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு விடவே தான் இதை தெரிவிக்கிறதாயும், உபாத்தியாயர்கள் பாடங்களை போதிப்பதுடன் இதுபோன்ற நல்லொழுக்கம், கட்டுப்பாடு, சொன்ன சொல்லுக்கு மீறுதிருத்தல், மாணவர்கள் பிராந்தியத்திற்கு வெளிப்பட்ட விஷயத்தில் தலையிடாமல் நிற்றல் முதலியவற்றையும் அடிக்கடி உபதேசித்து வரவேணும் என்றார் சொன்னர்.

கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகித்தவர் பிரசங்கம் செய்த வரை தாங்கியே தன் அபிப்பிராயத்தை சொன்னர்.

## கும்பகோணத்தில் உற்சவங்கள்

ஏப்-19வ

குடந்தை திவ்யக்ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி விளங்கும் ஸ்ரீ ஆராவமுதனுக்கும், ஸ்ரீ சக்கிரபாணி ஸ்வாமிக்கும் சைத்திர உற்சவம் 24-4-39 முதல் துவக்கி நடைபெறும் என்று டிரஸ்டிகள் பிரஸித்தம் செய்திருக்கிறார்கள். டிரஸ்டிகள் உற்சவத்தை காலா காலத்தில் நடத்த வேண்டும் என்றும் ஒரு காலத்தில் டிரஸ்டியாகவிருந்த ஸ்ரீமான் சிவக்ஞான உடையார் நடாத்திய மாதிரி காலை 9 மணிக்குள் சுவாமி புறப்பட்டு சேருவதும் இரவு 10 மணிக்கு மேல் சுவாமி புறப்படாது— 10 மணிக்குள் சுவாமி புறப்பட்டு கோயிலைச்சேரும் படி செய்து புகழ் அடைய வேண்டுகிறோம். இதை டிரஸ்டிகள் கவனிப்பார்களாக.

## குடந்தை 1[illegible]—கருடசேர்வை.

பெரியதெரு காசுக்கடை வியாபாரிகள் எல்லோரும் பல வருடங்களாக நடத்தி வரும் 12—கருடசேர்வையை இவ்வருடம் ஏப்பிரில்மீ 22வ பெரிய தெருவில் அலங்காரப் பந்தலில் நடத்தி வைக்க தீர்மானித்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

## கும்பகோணம்

### ஸம்ஸ்கிருத பாஷாபிவர்த்தினீ ஸபா.

ஸனாதநிகள் காங்கிரஸை தூஷிக்கிறார்களாம்

16-4-39 ஞாயிற்றுக் கிழமை மாலை 4½ மணிக்கு ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் ஸம்ஸ்கிருத பாஷாபிவர்த்தினீ ஸபையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் கும்பகோணத்திலுள்ள ஸம்ஸ்கிருதபிமானிகளனைவரும் விஜயம் செய்திருந்தார்கள். சாஸ்திர ரத்னாகரம் பிரம்மஸ்ரீ திருவையார் விசுவனாத சாஸ்திரிகளவர்கள் தலைமை வகித்து பூர்வத்தில் ஸம்ஸ்கிருத பாஷை கிரந்த மகிமையையும் வேதம் சாஸ்திரம் முதலியவைகளின் பெருமையையும் நம்மவர்கள் அதை அலக்ஷியம்செய்து இதர பாஷைகளை அப்யஸிப்பதால் நமக்கேற்படும் தாழ்மையையும் இனிமேலாவது தர்மாபிமானிகள் ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்தியின் பொருட்டு இம்மாதிரி ஸபையை அடிக்கடி கூட்டவேண்டுமென்றும் உபன்யஸித்தார்கள். பிறகு வித்யார்த்திகளான M. N. ராஜகோபால சாஸ்திரிகள் முடிகொண்டான் சுந்தரேச்வரய்யரவர்கள் மகாதேவ சாஸ்திரிகள் முதலியவர்கள் திரிபுரா காங்கிரஸில் நடந்த விஷயங்களை அழகாக விமர்சனம் செய்து ஸம்ஸ்கிருதத்தில் உபந்யசித்தார்கள்.

பிறகு ஸபா தலைவர் காங்கிரஸ் மகாசபை முன் காலத்தில் நம்முன்னோர்கள் மனதினால் கூட செய்யக்கூடியது என்று நினைக்க முடியாததும் அடைய வேண்டுமென்று பிரயத்தனப்படாததுமான ஸ்வராஜ்யத்தை சற்றேறக்குறைய வாங்கிக்கொடுத்திருக்கிறதென்றும் அநேகம் யக்ஞம் முதலியவைகளைச்செய்து தீக்ஷிதர்களாக விளங்கின நம் மூதாதைகளால் அது செய்யமுடியவில்லை என்றும் ஆகையால் அவ்வளவு அரும்பெரும் கார்யம் செய்து கொடுத்த காங்கிரஸை வீணாக ஸனாதனிகள் தூஷிக்கக்கூடாதென்றும் பஞ்சம ஆலயப்பிரவேசம் சாரதாச்சட்டம் முதலியவைகளால் நமது மதத்திற்கு மிகவும் தீங்கிழைக்கின்ற காங்கிரஸ்காரர்களை நல்ல வழியில் திருப்பி அவர்களுக்கும் நம் மதத்தின் உண்மைகளையும் பெருமைகளையும் போதித்து அவர்களை ஸரியான வழியில்

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்ய தர்மம்

பிரமாதி-ஸ்ரீ சித்திரை-மீ 7உ

## விவாஹ ரத்து மசோதா.

சென்றவாரம் நாம் இந்த விஷயத்தைப் பற்றி எழுதிய பின், இந்திய சட்டசபையில் இந்த மசோதாவைப்பற்றிய பாக்கி விவாதமானது ஸெலக்கூட்டத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பெரிய அதர்மமாயும், மிகுந்த அநாசாரமயமுமுள்ள இந்த விவாஹ ரத்து மசோதாவை எதிர்ப்பதில் தார்மிக ஸமூஹமானது போதுமான ஊக்கத்தையோ, ஒற்றுமையையோ காட்டியதாக நாம் நினைக்கவில்லை. காங்கிரஸ் மந்திரி நிர்வாஹம் ஏற்பட்ட பின் நம் தேசத்தில் ஸனாதன தர்ம பிரசாரம் வெகுவாகக் குறைந்து வருகின்றதென்ற அபிப்ராயம் ஏற்பட்டிருப்பது ஆதாரமில்லாமல் போகவில்லை. மெஜாரிடி பலத்தைக் கொண்டு, யார், எதைச் சொன்னாலும் லக்ஷியம் செய்யாமல் தன் காரியத்தை நடத்திக்கொண்டு போகும் பிடிவாதமும் படைத்த மந்திரிகளுடன் எதாவது ஸம்பந்தமில்லை என்று ஸனாதனிகள் நினைத்திருக்கலாம். தங்கள் கக்ஷிகளை எடுத்துச் சொல்ல பொருத்தமான ஸந்தர்ப்பம் ஏற்படுவதை தார்மிகர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் போலும்.

ஆயினும் சாரதாச்சட்ட நிர்மாண காலத்தில் ஏற்பட்டிருந்த பிறகு கஷ்டப்பட்டதைப் போல விவாஹ ரத்து விஷயத்திலும் நாம் உதாஸீனமாக இருந்துவிட்டால் பெரிய அனர்த்தமேற்படுவது நிச்சயம். இந்த நிலைமையில் இந்த மசோதாவுக்கு தேசத்தில் அதிக ஆதரவு இருப்பதாக டாக்டர் தேஷ்முகர் கூறுவதில் ஆச்சர்யமென்ன? மசோதா விஷயமாக கவர்ன்மெண்டார் அபிப்ராயம் சேகரித்த வழியையும் நாம் ஆக்ஷேபிக்கவேண்டியதே. சிற்சில உத்யோகஸ்தர்களின் அபிப்ராயமே பெரும்பாலும் வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலோரான ஸனாதனிகளின் அபிப்ராயங்கள் அதிகம் வாங்கப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையில்கூட 100 ஆக்ஷேப அபிப்ராயங்களை ஸ்ரீமான் பஜோரியா ஆஜர்படுத்தியதை சொல்லிக்கொள்ளலாம்.

இந்த மசோதா விஷயத்தில் இந்திய கவர்ன்மெண்டார் காட்டியுள்ள மனோபாவம் கொஞ்சம் ஆறுதலை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. சட்ட மெம்பரான ஸ்ரீமான் ஸர்க்கார் ஸெலக்கூட்டத்தில் இருக்கமாட்டாராயினும் இந்த மசோதா விஷயமாகத் தம்முடையவும், இந்திய கவர்மெண்டி னுடையவும் அபிப்பிராயத்தைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்.

கனம் ஸர்க்கார் முதலில் இந்த மசோதா மூலம் டாக்டர் தேஷ்முக் எந்த உபகாரமும் செய்தவராக மாட்டார் என்பதை அழுத்தமாகக் கூறிவிட்டு, இந்த மசோதவினால் பாதிக்கப் படக்கூடிய ஸமூஹத்தார் இதை விரும்புகிறார்களா வென்பது நிரூபிக்கப்படவில்லை யென்ற உண்மையை வெளியிட்டார். இந்த மசோதாவுக்கு தேசத்தில் அதிக ஆதரவு இருப்பதாக தேஷ்முக் கோஷ்டியார் பெருமை சொல்லிக்கொள்ளுவதையும் கனம் ஸர்க்கார் தக்க ருஜூவுடன் முறியடித்து விட்டார். சில மாகாணங்கள் இந்த மசோதாவை வேண்டவில்லையென்றும் வேறு சில மாகாணங்கள் சில நிபந்தனைகளைச் சொல்லியிருக்கின்றனவென்றும், ஆகவே பொதுவாக இதற்கு எதிர்ப்பு இருப்பதே வெளியாகிறதென்றும் அவர் விளக்கினார். ஸொத்து உரிமை, ஸம்ரக்ஷணம், குழந்தைகளை வைத்துக்கொள்ளுதல், முதலியவைகளில் சட்டரீதியாக ஏற்படக்கூடிய சிக்கல்களையும் கனம் ஸர்க்கார் எடுத்துக்காட்டிவிட்டு, ஹிந்து ஸமூஹத்திற்கு இந்த மசோதா பெரிய தீங்கு விளைவிக்குமென்று எச்சரித்தார்.

இந்த விவாதத்தில் சட்டமெம்பரான ஸ்ரீமான் ஸர்க்கார், மதஸம்பந்தமுள்ள விஷயங்களில் இந்திய கவர்ன்மெண்டாரின் கொள்கை யென்னவென்பதைப்பற்றிப் பொதுவாக வெளியிட்டுள்ள அபிப்ராயம் முக்யமானது.

அவர் கூறியதாவது:—

"மத விஷயங்களிலும், ஸமூஹப்பழக்க வழக்க விஷயங்களிலும் தலையிடுவதில்லையென்ற விநிலை, இந்திய கவர்ன்மெண்டார் ஒழுக்க உணர்ச்சிக்கு விரோதமான வழக்கங்களில் தலையிடுவதற்கே மீறுகின்றனர், பெரும்பான்மையோர் விரோதமாயிருந்தாலும் அம்மாதிரியான விஷயங்களில் ஸர்க்கார் தங்கள் விநிலை மீறித்தலையிடுவார்கள்.

இந்தவிவாஹரத்து விஷயத்தில் அம்மாதிரி தலையிடுவது நியாயமென்று சொல்லக்கூடிய ஆதாரம் எதுவும் கிடையாது, சர்க்கார், சீர்திருத்தம் செய்ய விரும்பும் சிறு பான்மையோரது அபிப்ராயத்தை, பெரும் பான்மையோர் மீது சுமத்துவதற்கு சட்டஸபையில் மட்டும் மெஜாரிடிபலம் இருந்தால் போதாது.... கவர்ன்மெண்ட் மெம்பர் என்ற ஹோதாவில்தான், ஹிந்துக்களிடையில் அவர்களது ஸமூஹ எண்ணங்களைப் பற்றி ஏற்படும் மாறுதல்களின் மூலமே இந்த பிரச்னையை பரிஹரித்துக்கொள்ளுமாறு விட்டுவிடவேண்டுமென்று அபிப்ராயப்படுகிறேன்"

ஸ்ரீமான் ஸர்க்கார் இவ்வளவு ஸ்பஷ்டமாக அபிப்ராயம் தெரிவித்தபிறகு கூட மத விஷயத்தில் சட்டமூலமான நிர்ப்பந்தம் ஏற்படுத்த முயற்சிக்கும் டாக்டர் தேஷ்முக் போன்றவர்களின அடாதசெய்கையை யாவரும் கண்டிக்கவேண்டியதே. சாரதாச்சட்டம் போன்ற மதஸம்பந்தப்பட்ட விஷயங்களில் ஸர்க்கார் செய்த குற்றத்திலிருந்து தப்புவதற்காக ஸர்க்கார் ஒருபேச்சினைச் சேர்த்த போதிலும், பின்னிருக விவாஹ ரத்து மசோதாவானது அத்தகையதல்லவென்றும், இது முற்றிலும் மத ஸம்பந்தமானதேயென்றும், இதில் கவர்ன்மெண்டார் பிரவேசிப்பது சட்டவிநிலை மீறியதாகுமென்றும் தெளிவாக அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஸெலக்கூட்டத்தில் ஸ்ரீமான் ஸர்க்கார் இருக்கமாட்டாராயினும் புதிதாக வரும் சட்டமெம்பர் வேறுமாதிரியான கொள்கையை வெளியிடக் காரணமில்லை.

ஆயினும் தார்மிகர்கள் இப்போது முதலே தேசத்தில் கிளர்ச்சி நடத்தி ஸெலக்கூட்டத்திற்குள் ஏராளமான ஆக்ஷேபங்களை கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தி இந்த மசோதாவை நிராகரிக்கவேண்டிய காரியத்திலீடுபடவேண்டியது ஆவச்யகமாகும்.

## குறிப்புகள்.

### வகுப்புவாதத்தின் கோரத்தன்மை.

காந்திஜி பிராயோபவேசமிருந்து ராஜகோட்டில் ஸாதித்த காரியத்தை வகுப்புவாதப் பேய் விழுங்கிவிடும்போல் காண்கிறது. முஸ்லிம்கள் பார்ஸிகள், கிராயாவிதன், நிண்டாதார் ஆகிய பற்பல வகுப்பினர் தங்கள் தங்கள் உரிமையை வற்புறுத்த முன்வந்துவிட்டார்கள். தேசத்தின் பெரிய தலைவராக விளங்கும் காந்திஜியிடம் தங்களுக்கு நம்பிக்கை கிடையாதென்றும் அந்த வகுப்பார் வெளியிட்டிருப்பது காந்திஜியை அன்புறுத்தவே தவிர்க்கிறதாகத் தெரிகிறது. முஸ்லிம்கள்தான் இப்படிச் செய்கிறார்களென்றால், இந்துக்களுக்குள்ளேயே இருக்கும் நிண்டாதார் முதலிய வகுப்பார் கூட இம்மாதிரி காந்திஜியிடம் நடந்துகொள்ளுவது விரோதமாயிருக்கிறது.

அம்பேத்கார், எம். ஸி. ராஜா போன்ற நிண்டாதாராதித் தலைவர்களும் ஜின்னாவைப் போல காந்திஜியிடம் நம்பிக்கைப் படவோ, அவரைத் தாக்கவோ பின்வாங்கி நிற்கவில்லை. காந்திஜி தங்களுக்கு நியாயம் வழங்கமாட்டாரென்று நிண்டாதார் தலைவர்கள் கூசாமல் பேசுகிறார்கள். அந்தோ காந்திஜியின் கதியே! தேசத்தில் வகுப்புவாதத்தை அழிக்கவேண்டுமென்று எல்லா வகுப்புத் தலைவர்களும் மேடையில் பேசுகிறார்கள். ஆனால் தங்கள் காலம் வரும்போது இதைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு வகுப்புச்சண்டைக்குக் கிளம்பிவிடுகிறார்கள். இப்போது தேசமெங்கும் வகுப்புப் பேய்தான் தலைவிரித்தாடுகிறது. இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டிராத நெருக்கடியே இப்போது தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஜாதியை அழித்து, மதத்தை ஒதுக்கி எங்கும் ஸமதர்மத்தை நிலைநிறுத்துவதாக வேஷம்போடுவோரும் வகுப்பு வலத்திலேயே நோக்கம் கொண்டிருக்கிறார்களென்பது விசதமாகிவிட்டது.

ராஜ்யத்திலேயே ஜாதிமத வகுப்பு பேதங்களை ஒழிக்கச் செய்த முயற்சி தோற்றுவிட்டது. மதவிஷயத்தில்மட்டும் இந்த பேதத்தை நிவர்த்தித்துவிடவேண்டுமென்று பிதற்றுவது பலிக்குமா? ஸனாதனிகள் மீதோ, சாஸ்திரத்தின்மீதோ, பழிகூற வழியுண்டா?

### வக்கீல்களுக்கு பிராஸிக்யூடர் உத்யோகம்.

சென்னை கவர்மெண்டார் பிராஸிக்யூடர் உத்யோகத்திற்கு போலீஸாரை நியமிப்பதை நிறுத்திவிட்டு வக்கீல்களிலிருந்தே அந்த உத்யோகத்திற்கு நியமனம் செய்ய நிச்சயித்திருப்பதாக தெரிகிறது.



## குடந்தை நகரசபை

### காங்கிரஸ் கவுன்சிலர் தீர்மானத்தின் கதி!

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம் ஏப்ரல் 19உ

முனிசிபல் கவுன்சிலின் அவசரக்கூட்டம் நேற்று கூடியதில் ஏற்கனவே ஸ்ரீமான் மதுரைவீரன் பிள்ளை (காங்கிரஸ் கவுன்சிலர்) சென்னை கவன்மெண்டு பிரதம மந்திரியை விற்பனை வரி பில்லை கொண்டுவராமல் நிறுத்தும்படி கவுன்சில் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானத்தை கொண்டுவந்தார். இதை காங்கிரஸ் கக்ஷி அல்லாத கவுன்சிலர் ஆமோதித்தார். தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் கக்ஷிக்கூட்டத்தில் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி கிடைத்ததினால் கவுன்சிலில் தீர்மானம் வந்தது. கவுன்சிலில் வந்த பிறகு காங்கிரஸ் கவுன்சிலர்கள் காங்கிரஸ் கவர்ன்மெண்டு கொணர்ந்த ஒரு பில்லை காங்கிரஸ்காரர்களேயே ஆக்ஷேபணை செய்வது வெட்கமானதாயிற்றே, என்று நினைவு வந்துவிட்டது. உடனே இதை பட்டவர்த்தனமாய் சொல்லாமல் தீர்மானம் முனிசிபாலிடிக்கு சம்பந்தமற்றதாகுமே என்று கூறிக்கொண்டு ஒத்திவைத்தார்கள். பின்னர் இது விஷயமாக நீர்க்காலோசனை நடந்தது, இதற்கிடையே கவுன்சில் காங்கிரஸ் கக்ஷியின் அபிப்ராய பேதங்களை சமாளிக்க செய்ய பார்லிமெண்டரி செக்ரடரி ஸ்ரீமான் பக்தவத்ஸலம் விஜயம் செய்தார். தீர்மானத்தின் கதியும், அதன் ஸ்வரூபமும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, மறைந்து தேய்ந்து, மாயமாகிவிடநேரிட்டது. ஆரம்பத்தில், இத்தீர்மானம் கவுன்ஸிலில் நிறைவேறிவிட்டால், பிரேரேபித்தவர் கவுன்சிலர் ஸ்தானத்தை ராஜீனாமா கொடுப்பார் என்றும் அவரை பல கவுன்சிலரும் தொடர்ந்து ராஜீனாமா செய்வார்களென்றும் பலமான வதந்திகள்—பேச்சுக்கள் நிகழ்ந்தன. முடிவாக நேர் தீர்மானத்தை பிரேரேபித்த கவுன்சிலரே கவுன்சில் கூட்டத்திற்கு வாராமலிருந்துவிட்டார். ஸ்ரீ பக்தவத்ஸலத்தின் விஜயம் காரணமாகவா? இல்லை. தீர்மானத்தை ஆமோதித்த காங்கிரஸல்லாத கவுன்சிலர் ஸ்ரீ பழனியப்ப முதலியார் தீர்மானத்தை வாபசு பெற ஒப்ப மறுத்தார். தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டு காங்கிரஸ்காரர்கள் அதிக வோட்டினால் தீர்மானத்தை அநேகமாகத் தள்ளினார்கள். இது தான் நடந்தது. வாசகர்களே நிலைமையை அறியட்டும்.

முனிசிபல் சேர்மென் மின்சாரக்கம்பிகளை தூணில் போடாது தேரோடும் வீதிகளில் பூமிக்குள் கம்பிகளை விட ஓர் பிரேரேபணை செய்தது நிறைவேறியது.

### காங்கிரஸ் நிலைமையில் நெருக்கடி.

காரியக்கமிட்டியில்லாமல் முட்டுக்கட்டை ஏற்பட்டும், அபிப்ராயபேதம் அதிகரித்தும் நெருக்கடி அதிகமாகிவிட்டதைக்கண்டு தேசதலைவர்கள் கவலையடைந்திருக்கிறார்கள் நேரு, ஸுபாஷ்போஸை ஸந்திக்கப் போயிருக்கிறார், ரவீந்திரநாத டாகூர் காந்திஜிக்கும் போஸுக்கும் தந்தியடிக்கிறார். காந்திஜியும் கல்கத்தா போவாராம், காந்தி-போஸ்கடிதப் போக்குவரத்தை வெளியிடவேண்டுமென்று காந்திஜி விரும்புகிறார். காந்திஜிக்கும், போஸுக்கும் முரண்பாடு ஏற்பட்டு போஸ் ராஜிநாமா செய்யநேருமென்று பிரஸ்தாபிக்கப்படுகிறது.

### காங்கிரஸ தலைவர் மீது நம்பிக்கையில்லை.

வரப்போகிற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைத் தாங்கள் கொண்டு வரப்போவதாக இந்தியா சட்டஸபை காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் ஆறு பேர் சேர்ந்து அறிவித்திருக்கிறார்களாம்!

### இந்தியா சட்டஸபைக் கூட்டம் முடிந்துவிட்டது.

சென்ற 4 மாதங்களாக நடந்துவந்த இந்தியா சட்டஸபைக் கூட்டமானது 15உ யோடு முடிவுபெற்றது. மெம்பர்கள் தம் தம் ஊர் திரும்பினர் கனம் என். என். ஸர்க்கார் தமது நிர்வாஹ ஸபை மெம்பர் பதவியை விட்டு விலகிவிடுவார். ஸர் ராமசாமி முதலியார் வியாபார மெம்பர் பதவியை ஏற்பார்.

### தத்த ஹோமம் வேண்டாமாம்!

#### ஹைகோர்ட் தீர்ப்பு.

தௌஹித்ரனை ஸ்வீகாரம் செய்து கொண்டால் தத்த ஹோமம் வேண்டுமா வேண்டாமா என்ற சர்ச்சை கோர்ட்டில் ஏற்பட்டது. கும்பகோணத்திலுள்ள, முன்ஸீப், ஸப்கோர்ட்டுகள் ஹோமம் அவசியமில்லை யென தீர்ப்புக்கூறின.

சென்னை ஹைகோர்டில் இந்த விஷயம் விசாரணைக்கு வந்தது. ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரிகளும் சீப் ஜஸ்டிஸும் இவ்விஷயமாக தீர்ப்புக்கூறுகையில், யமஸ்மிருதியிலுள்ள ஒரு விசேஷ வசனத்தை யனுஸரித்து, தௌஹித்ரனுக்கும், ஸஹோதர புத்திரனுக்கும் தத்த ஹோமம் அவச்யமில்லையென்றும் அந்த ஸ்வீகாரம் சட்டப்படி செல்லக்கூடுமானதாகுமென்றும் முடிவு சொன்னார்கள்.

## மதிப்புரை.

### த்வம்மே அஹம்மே வியாக்யானம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரிய பரம்பரையில் மிகப்ரஸித்தியடைந்த மஹான் ஸ்ரீ பராசர பட்டர்ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனை திருமஞ்ஜன ஸமயத்தில் ஸேவிக்கும்போது, பெருமாளுடைய வடிவழகில் ஈடுபட்டு சமத்காரநிசயம் பொருந்திய பல சுலோகங்களை இயற்றியுள்ளார்.

அவற்றில் "த்வம்மே அஹம்மே" என்பது ஒரு சுலோகம். பெருமாள் திருமஞ்ஜன ஸமயத்தில் கொண்ட கோலத்தைப்பார்த்து அவர், பிரமாணம் செய்ய ஸித்தமாயிருப்பது போல் இந்த சுலோகத்தில் வர்ணிக்கப்படுகிறது.

இந்த சுலோகத்திற்கு அநேகர் வியாக்யானம் செய்திருக்கிறார்கள். பெருமாள் கோவில் ஸ்ரீ உ. வே. அண்ணங்காராசாரியார் அழகாக எழுதியுள்ள வியாக்யானத்தை ஸ்ரீரங்கம் அம்ருதலஹரீ ஸீரிஸ் 3 வது நம்பராக அச்சிட்டு இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. ரஸிகர்களுக்கு இப்புஸ்தகம் வெகுவாக ருசிக்கக்கூடியது விலை அணா 2

### பிரமாதி வருஷ திருக்கணித பஞ்சாங்கம்.

சென்னை திருவல்லிக்கேணி ஜ்யோதிர் பூஷணம் பிரம்மஸ்ரீ டி. எஸ். விச்வநாத சிரௌதிகள் பி. ஏ, அவர்களின் பார்வையில் ஷியார் சிஷ்யரான யாழ்ப்பாணம் மட்டுவில் ஸ்ரீ ஸுப்ரம்மண்ய அய்யரவர்களால் கணிக்கப்பட்ட பிரமாதி வருஷத்தின் திருக்கணித பஞ்சாங்கத்தின் பிரதியொன்று வரப்பெற்றோம். வழக்கம்போல் இப்பஞ்சாங்கங்கள் பற்பல ஜோதிஷ விசேஷங்களுடனும், வேறு அபூர்வ விஷயங்களுடனும் விளங்கி பொதுஜனங்களுக்கு மிகுந்த உபகாரம் செய்யக்கூடிய நிலைமையில் பிரசுரிக்கப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

### ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

பண்ருட்டி,

ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரகத்தை முன்னிட்டுக்கொண்டு நடத்தப்பட்டுவருகிற (24—4—39) க்குச் சரியான பிரமாதி வருஷம் சித்திரைமீ 11உ ஸோமவாரம் வைசாகசுத்த பஞ்சமி திதியன்று வருகிற ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாள் அவர்களுடைய ஜயந்தி மஹோத்ஸவத்தை பிரதிவருஷம் போல் இவ்வருஷமும் பண்ருட்டி அக்கிரஹாரத்தில் பிரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகள் அவர்களை முன்னிட்டுக்கொண்டு அதிவிமர்சையுடன் நடத்துவதாய் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது அதற்கு ஆஸ்திக பக்த மகாஜனங்கள் அனைவரும் மேற்படி மகோத்ஸவத்திற்கும் வந்து ஆசார்ய அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகவேணுமாய் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்வதோடும் கூட அவரவர்கள் தங்களாலியன்றமட்டும் திரவிய சகாயம் செய்து மேற்படி ஜெயந்தி மகோத்ஸவத்தை பூர்த்திசெய்ய வேணுமாயும் விக்ஞாபிக்கப்படுகிறது.

ஸ்ரீமடம் சிஷ்யன் சாம்பமூர்த்தி.

### 18-4-39-ஸ்ரீ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை | 3—3—0 |
| ஷை இரண்டாந்தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை | 3—4—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை | 7—6—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை | 6-15—0 |
| தேங்காய் எண்ணை 64 சேர் நிறை | 4-12—0 |

ஸ்ரீ தாசில்தார்.

உ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும் ஸ்ரீமான் G.V. கணேசய்யர், B.A., B.L. எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

மேலும், ஸ்ரீ பாஸ்கரராயருடைய ஸௌபாக்யபாஸ்கரம் ஸஹஸ்ரநாம பரிபாஷா ச்லோக ரீதிகள் முதலியன அடங்கியவை.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. செலவு தனி.

# "ப்ரஸ்தானபேதம்

(முன் தொடர்ச்சி)

एवं वैदिकपदसाधुत्वज्ञानेनोहादिकं व्याकरणस्य प्रयोजनम् । तच "वृद्धिरादैच्" इत्याद्यध्यायाष्टकात्मकं महेश्वरप्रसादेन भगवता पाणिनिनैव प्रकाशितम् । तत्र. कात्यायनेन मुनिना पाणिनीय सुत्रेषु वार्तिकं विरचितम् । तद्वार्तिकस्योपरि च भगवता मुनिना पतञ्जलिना महाभाष्यमारचितम् । तदेत त्रिमुनिना व्याकरणं वेदाङ्गं महाश्वरमित्याख्यायते । कौमारादि व्याकरणानितु न वेदाङ्गानि, किन्तु लौकिकप्रयोगमात्र ज्ञानार्थानीत्यवगन्तव्यम् ॥

இப்படியே வியாகரணத்தாலும் 'இந்த சப்தங்கள்தான் சரி, இவைகள் சரியல்ல" என்று தெரிந்துகொள்ளுகிறோம். அப்படித் தெரிந்துகொண்டால் விக்ருதி கர்மாக்களில் செய்யவேண்டிய 'ஊஹம்' (அந்தப்பிரகரணத்திலுள்ள திரவ்ய தேவதையை அனுசரித்து பதங்களை மாற்றுதல்) முதலியவைகளை தவறன்னியில் செய்யக்கூடும். இது தான் வியாகரணத்தால் வேதத்திற்கு ஏற்படக்கூடிய ப்ரயோஜனம். அந்த வியாகரணம் "वृद्धिरादैच्" என்று ஆரம்பித்து எட்டு அத்தியாயங்கள் கொண்டதாக, பரமேச்வரனுடைய அனுக்ரஹத்தைப்பெற்ற "பாணினி" என்ற முனிவரால் இயற்றப்பட்டது. பாணினியின் ஸூத்திரங்களுக்கு "காத்தியாயனர்" என்ற முனிவரால் வார்த்திகமும் அதற்குமேல் 'பதஞ்சலி' என்ற முனிவரால் 'மஹாபாஷ்யமும்' இயற்றப்பட்டிருக்கிறது. இந்த மூன்று முனிவர்களால் இயற்றப்பட்ட வியாகரணம், வேதாங்கமென்றும், 'மாஹேச்வரம்' என்றும் சொல்லப்படுகிறது. "கௌமாரம்" முதலிய வேறு சில வியாகரணங்கள் வேதாங்கங்களல்ல. ஆனால் கௌமாரம் சப்தப்ரயோகங்களை அறிந்துகொள்வதற்கு உபயோகப்படுகின்றன.

एवं शिक्षाव्याकरणाभ्यां वर्णोच्चारणपदसाधुत्वज्ञाने, वैदिकमन्त्रपदार्थज्ञानाकाङ्क्षायां तदर्थम् भगवता यास्केन, "समाम्नायः समाम्नातः" "सव्याख्यातव्यः" इत्यादि त्रयोदशाध्यायात्मकं निरुक्तमारचितम् । तत्र नामाख्यातनिपातोपसर्गभेदेन चतुर्विधं पदजातं निरूप्य वैदिकमन्त्रपदानामर्थः प्रकाशितः । मन्त्राणां चानुष्ठेयार्थप्रकाशनद्वारेणैव करणत्वात्पदार्थज्ञानाधीनत्वाच्च वाक्यार्थज्ञानस्य मन्त्रस्वपदार्थज्ञानाय निरुक्तमवश्यमपेक्षितम्, अन्यथानुष्ठानसंभवात् । "सृण्येवजर्भरीतुर्फरीतु" इत्यादि दुरूहाणां प्रकारान्तरेणार्थ ज्ञानस्यासंभावनीयत्वाच । एवं निघण्टवोऽपि वैदिकद्रव्यदेवतात्मक पदार्थपर्यायशब्दात्मक निरुक्तान्तर्भूता एव । तत्रापि निघण्टुसंज्ञकः पञ्चाध्यायात्मको ग्रन्थो भगवता यास्केनैव कृतः ॥

இப்படி சிக்ஷையினால் வேதத்திலுள்ள அக்ஷரங்களைப்பற்றியும் வியாகரணத்தில் பதங்களைப்பற்றியும் தெரிந்துகொள்வதற்காக 'யாஸ்கர்' என்ற முனிவரால் "समाम्नायस्समाम्नातः" "सव्याख्यातव्यः" என்று ஆரம்பித்து பதிமூன்று அத்தியாயங்களுடையதாக "நிருக்தம்" இயற்றப்பட்டிருக்கிறது. அதில் 'நாமம்" "ஆக்யாதம்" "நிபாதம்" 'உபஸர்க்கம்' என்று நான்குவிதமான பதங்களைப்பற்றி விசாரித்தபிறகு வேதமந்திரங்களுடைய பதங்களின் அர்த்தத்தைப்பற்றி கூறப்படுகிறது. देवदत्तः, यज्ञदत्तः, अश्वः, முதலிய பதங்கள், 'நாம' என்றும், भवति, वर्तते, முதலிய பதங்கள், 'ஆக்யாதம்' என்றும், उप, सं, முதலிய பதங்கள் 'உபஸர்க்கங்கள் என்றும் च, तु முதலியன நிபாதங்கள் என்றும் கூறப்படும்.) மந்திரங்கள் கர்மானுஷ்டான காலத்தில் அந்த கர்மாவைச் சேர்ந்த அர்த்தங்களை ஞாபகப்படுத்திவைக்கின்றன. அந்த மந்திரங்களும் வாக்யமாக இருக்கின்றன. வாக்யமென்றால் அநேக பதங்களுடைய கூட்டமாகும். ஆகவே வாக்யத்தின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்காக முதலில் பதங்களின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதைத் தெரிந்துகொள்வதற்கு 'நிருக்தம்' அவசியமாக இருக்கிறது. அதில்லாதபோதுல் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு கர்மாவை அனுஷ்டானம் பண்ணுவதென்பது முடியாது. கஷ்டமான சில மந்திரங்களுக்கு வேறு வகையாக நாம் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டபோதிலும் 'सृण्येवजर्भरीतुर्फरीतु' முதலிய மிகவும் கடினமான சில மந்திரங்களின் அர்த்தத்தை நிருக்தத்தைத் தவிர வேறு எதனாலும் தெரிந்துகொள்ளவே முடியாது. வைதிக கர்மாக்களிலுள்ள த்ரவ்யத்தையும் தேவதையையும் போதிக்கக் கூடிய அநேக பதங்கள் கொண்டதான 'நிகண்டு' என்று சொல்லப்படுகிற கிரந்தங்களும் நிருக்தத்தில் சேர்ந்தவைகளே.

அவைகளுக்குள் 'நிகண்டு' என்ற பெயருடன் ஐந்து அத்தியாயங்களடங்கிய ஓர் கிரந்தம் யாஸ்க முனிவராலேயே இயற்றப்பட்டிருக்கிறது. (தொடரும்)

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

திருப்பி ஸனாதனிகளும் ஏராளமாக காங்கிரஸில் சேர்ந்து காங்கிரஸ்ஸை நல்ல வழியில் திருப்ப முயற்சிக்க வேண்டுமே தவிர வீணாக காங்கிரஸ்காரர்களை குற்றம் கூறுவதையே தொழிலாக கொள்ளலாகாதென்றும் ஒவ்வொரு நவராத்ரியன்றும் மாலை 4 மணி ஸ்ரீமதாசார்யாள் மடத்தில் மேற்படி ஸபா மீட்டிங் நடத்தப்படுமென்றும் அதற்கு ஸம்ஸ்கிருதாபிமானிகள் அனைவரும் கூப்பிடாமலேயே இன்றையதினம்போல் நிரம்ப நிரளாக அவச்யம் வந்து சேரவேண்டுமென்றும் வற்புறுத்தி குழந்தைகளுக்கு புரியும்படியாக ஸம்ஸ்கிருதத்தில் எளிய நடையில் உபன்யஸித்தார்கள். முடிவில் காரியதரிசி P. S. அனந்தராம சாஸ்திரிகளால் வந்தனோபசாரம் சொல்லப்பட்ட பிறகு ஸபை இனிது கலைந்தது.

காரிய தரிசி.

---

ராமகிருஷ்ணப்பூர்.

ஹௌரா (கல்கத்தா)

ஸ்ரீ வால்மீகி ராமாயண பட்டாபிஷேகம்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின், திவ்யானுக்ரஹம் முன்னிட்டு 1-4-39 பகுதான்ய ஹு தைமீ 1உ முதல் ராத்திரி 8 மணி முதல் 10 மணி வரையில் ஸகல ஜனங்களின், தர்மாதி புருஷார்த்த லாபத்தை யுத்தேசித்து, மேற்படி ஊர் டென்னிஸ் மைதானத்தில் (Tennis Maidanam) மேற்படி கிராம மகா ஜனங்களின் பிரார்த்தனையின் பேரில் அய்மனூர் வேதாந்த விபூஷணம், வேதாந்த சிரோமணி, பிரம்மஸ்ரீ A R வெங்கடராமசாஸ்திரிகளவர்களால், பிரவசனஞ் செய்யப்பட்டு வந்த மேற்படி இராமாயண கட்டத்தில் ஸ்ரீராம பட்டாபிஷேக மென்கிற திவ்ய மஹோத்ஸவம் 4-9-39 பங்குனி மீ 27உ. ஞாயிற்றுகிழமை நடந்தது. இதுகாறும் நடந்து வந்த ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திலும், வேதம், வேதாந்தம், ஸ்மிருதி, முதலிய பிரமாண பிரதிசன பூர்வம், அநேக விதமான தத்வார்த்தங்கள் விளக்கிக் காட்டப்பட்டன. அறிஞர்களும், பாலர்களும், நன்குணருமாறு, அரிய பெரிய விஷயங்களை கூட, வெகு ஸுலபமாய், எடுத்துரைத்தார்கள். தூரத்திலிருந்து பக்தர்கள் அநேகர்கள் வந்து தவறாமல் சிரவணஞ் செய்து ஆனந்தமடைந்தார்கள்.

ஒவ்வொரு நாளும், மேன் மேலும் கூட்டம் அதிகரித்து வந்தன சிரத்தா பக்தியும் அப்படியே. இந்த மூன்று மாஸ காலமாய் விடுமுறை ஸமயத்தில், காலையில் ஸ்ரீ பகவத் கீதா பிரவசனமும் நடந்து வந்தது. மேற்படி கிராமத்திலுள்ளவர்களின் ஸநாதந தர்மாபிவிருத்தியில், உவமையற்ற உத்ஸாஹம். மிகவும், பாராட்டத்தக்கது. பிரதி தினமும், விசித்திரமான நிவேதம், அர்ச்சனை வகையும் விதிப்படி அனுஷ்டிக்கப் பட்டது. மேற்படி பட்டாபிஷேக தினத்தில், 500 பேர்களுக்கும் அன்னதானம், செய்யப் பட்டது தேவலோகத்தின், அமிருதத்திற்கு ஸமமானமாக ஒவ்வொரு போஜன பதார்த்தங்களும், போக்தாக்களின், ஸர்வேந்திரியங்களையும் ஆனந்திக்கச் செய்தன. இத்துடன் ஸ்ரீ ராம நவமி உத்ஸவமும் சேர்ந்து நடந்தது. 4—10—39 தினம் ஸ்ரீமத் ஆஞ்சநேய உத்ஸவமும் விமரிசையாய் நடத்தினார்கள். மேற்படி பண்டிதரவர்களுக்கும் விசேஷ மரியாதை செய்தார்கள். மஹாமஹோபாத்யாய ஸ்ரீமத், அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளவர்களும், விஜயஞ் செய்தார்கள். மேற்படி பண்டிதர்களின் உண்மையான வித்வத்தையும், கர்மானுஷ்டான சிரத்தையும் நன்கு எடுத்துரைத்து, உயர்ந்த ஸால்வை ஸன்மானம் செய்தார்கள். அவ்விதம், மேற்படி மகா ஜனங்களின் சிரத்தா பக்தியையும், விளக்கினார்கள். இன்னும், அநேக பண்டிதர்களும், கன தனவான்களும், விஜயஞ் செய்திருந்தார்கள்.

மேற்படி பண்டிதர்களும் ஸ்ரீ ராமசந்திர பிரஸாதத்தால் ஸகலர்களுக்கும், தர்மாபிவிருத்தி, சிரத்தை அதிகரிக்கச் செய்யும்படி ஸ்ரீராமபிரானை வேண்டிக்கொண்டார்கள். மேற்படி பண்டிதர்கள். ஸ்ரீ ஆசார்யபாதாள், கருங்குளம் மஹாமஹோபாத்தியாய பிர்ம்மஸ்ரீ K. S. கிருஷ்ணசாஸ்திரிகள், இவர்களின் சரண கமலத்தை தியானித்து சரித்திர மத்தியிலும் முடிவிலும் ஸ்ரீமத் ஆசார்ய மஹிமையையும், அடிக்கடி எடுத்துரைக்கிறார்கள். இந்தக் காலத்திற்கு தக்கவாறும் தர்மபிரசாரத்திற்கு மேற்படி பண்டிதர்கள் முக்கிய தன்மையவர்க்தலர்கள். எல்லாம் ஸ்ரீ பகவதனுக்ரகத்தை முன்னிட்டு நடக்கிறது. மேற்படி ஊரில் நடக்கும் மேற்படி எல்லா தர்மகாரியங்களுக்கும் முக்கிய காரணம், ஸ்ரீமான் A. V. அய்யாவர்கள் மேற்படி யார்களின் தீர்க்காயுஸ்ஸையும் மேல்மேலும் க்ஷேமாபிவிருத்தியும் பக்தர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

நமதுநிருபர்.

---

ஸ்ரீமத் பாகவதம்

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமய்யாவர்களால் மொழிபெயர்ப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| காலிகோ பைண்ட் (English) | ரூ. | 1 | 4 | 0 |
| சாதாரண பைண்ட் மேற்படி | ரூ. | 1 | 0 | 0 |
| காலிகோ பைண்ட் (தமிழ்) | ரூ. | 1 | 8 | 0 |

7, 8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது.

---



# "அறஞ்செய விரும்பு"

(A. ராமரெத்தினமய்யர், B.A., L.L.B., வக்கீல், திருச்சி.)

நமது தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வியும், தமிழ் மக்களின் ஆருயிர்த் தாயுமான ஔவைப் பிராட்டியார் இயற்றிய அரிய பெரிய நூல்கள் பலவற்றுள் "ஆத்திச்சூடி" ஒன்று. அதில் முதலில் கூறப்பட்டுள்ள நீதி வாக்யமான 'அறஞ்செய விரும்பு' என்பது நமது வினைகளையறுக்கும் அமிருத சஞ்சீவி மருந்து.

ஓதற்கெளிதாய், யுணர்தற்கரிதாகி, வேதப் பொருளாய் மிக விளங்கி, தீதற்றோர் உள்ளு தோறும் உள்ளம் உருக்கும் வள்ளுவர் வாழ்மொழி மாண்பைக் காட்டிலும் அது மிக்க சிறப்புடைத்தாய் விளங்குவது. திருமால் வாமனவதார காலத்தில், பலிச்சக்கரவர்த்தியிடம் யாசிக்கப் புகுங் காலத்தில்,

"நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தின் அருங் குறளானான்"

என்பது போல இந்தவுலகத்தில் அனைவர்க்கும் பயன்படுவதாக, வேதாகமங்களின் சாரங்கள் எல்லாம் ஒருங்கே திரட்டி ஔவை பிராட்டியும், இந்த நீதி வாக்கியத்தின் மூன்று வார்த்தைகள் கொண்ட ஓரே அடியால், 'வையத்தார் உள்ளுவ எல்லாம் ஓர்ந்து அளந்தார் என்று சொல்வது மிகையாகாது' எப்படி நம்முடைய தாய்மார்கள் நமக்குக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டி வளர்த்தார்களோ, அதுபோலவே நம் ஔவைப் பிராட்டியாரும் நமக்கு இளம்பருவ முதல், அதாவது நமக்குப் பாஷையின் எழுத்துக்கள் கூட்டி சேர்த்து வாசிக்கத் திறம் வாய்க்கும் காலத்திலேயே, 'அறஞ்செயவிரும்பு' என்னும் ஞானப்பாலை ஊட்டும்படி நமது தமிழுலகத்திற்கு அளித்திருக்கின்றனர்.

"கற்க கசடற கற்றபின்
நிற்க அதற்குத் தக". (குறள்)

என்னும் வாக்கியத்திற்கேற்றபடி கற்க தொடங்கும் காலம் முதல் அதன் பொருளை நன்றாய் அறிந்துகொண்டு அதற்கு தக்கபடி இறக்கும்வரை நாம் நடக்க முயலவேண்டும்.

நமது பெரியோர்கள், தாங்கள் எழுதியிருக்கும் அரியபெரிய நூல்களில் இருவிதமான அபிப்பிராயங்கள் தோன்றும்படி எழுதிவைத்திருக்கிறார்கள். அதாவது படிக்கும்பொழுதே வெளிப்படையாகத் தோன்றும் அர்த்தம் ஒன்று; அதைச் சிந்தித்தும் பார்த்து தெரிந்துகொள்ளவேண்டிய உள் அர்த்தம் ஒன்று. நம் ஔவைப் பிராட்டியாரும் இச்சிறு நீதிவாக்கியத்திலும் 'வெளி அர்த்தம்' 'உள் அர்த்தம்' என்ற இருவகை அர்த்தங்கள் கொள்ளும்படியாகவும் இந் நீதி வாக்கியத்தை அமைத்திருக்கிறார்.

சுவர்க்கம் முதலிய உலகங்களையும், அளவிறந்த பேரின்பத்தையுடைய முக்தியையும் அடைவதே புருஷார்த்தங்களில் சிறந்தது. புருஷார்த்தங்கள் நான்காம். அவை:— அறம், பொருள், இன்பம், வீடு என்பன; இவையே தர்மம் அர்த்தம், காமம், மோக்ஷம் என்று வடநூலார் கூறுவர். இவற்றுள் வீட்டை, ஒட்டியே ஏறுவதற்கு மற்ற மூன்றும் ஏணுகோலாயுள்ளது. வீடு என்பது மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத நிலைமையுடையதாதலால்,

"நன்று ஞாலங் கடந்து போய் நல்லிருதிரிய மெலா நீதித்து ஒன்றாய்க்கிடந்தவரும் பெரும் பாலழும்பி அதனை யுணர்ந்து புணர்ந்து சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால் அன்றேயப்பேதே விடு, மதுவே வீடு வீடாமே" என்வும், அறிந்தோர் உரைத்தருளியபடி துறவறமா காரணத்தின் வகையாறும் அறம், பொருள், இன்பம், நிலைமை மூலமாகவும், அறம், பொருள், இன்பம், இவைகளைப் போல இலக்கண வகையாற், நூல்களிற் கூறப்படுவதில்லை. நூல்களிற் கூறப்படுவன அது ஒழிந்த மூன்றுமேயாம். இந்த மூன்று புருஷார்த்தங்களை திரிவர்க்கமெனப்படும்- அவற்றுள் 'இன்பத்தை' அறம், என்றும், அகம் என்றும் அறம், பொருள், இவைகளைப் புறம் என்றும் தமிழ் மக்கள் இருவகைப்படுத்தி கூறியிருக்கின்றனர்.

இன்பத்தை அகம் என்றது; ஒத்த அன்பினராகிய தலைவனும், தலைவியும் தம்முள் கூடுகின்ற காலத்து பிறந்து அக்கூட்டத்தின் பின்னர், அவ்விருவராலும் ஒருவர்க்கு ஒருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கக் கூடியது. இந்த இன்பமும் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். ஸ்திரீ முதலான விஷயாதிகளை அனுபவிக்கிற காரணத்தால் ஏற்படும் சுகத்தை சிற்றின்பம் என்றும், வேதாந்தசிரவணாதி சத்கருமாக்களால் பிர்ம்ம சாக்ஷாத்காரத்தை அடைந்து அதன்மூலம் அனுபவத்திற்கு விஷயமாகிற நிரபேக்ஷமான ஸுகம் என்ற மோக்ஷானந்தமே பேரின்பமாகும்.

அறம், பொருள்களை புறம் என்றது. ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கமாதலால்தான் புறத்தே நிகழும் ஒழுக்கத்தை ஒரு வரிசையாகவும் சொல்லவேண்டுமென்று நினைத்துதான் நூல்களிற், அறம், பொருள், இன்பம், வீடு என்று வரிசையாக வர்ணிக்கப்பட்டிருப்பது போலும். மேல் சொன்ன நான்கு புருஷார்த்தங்களையும் ஜீவகோடிகள் அடைவதற்காகத்தான், அந்த ஜீவகோடிகளுக்கு புத்தி, இந்திரியம், மனது, ப்ராணன் என்ற நான்கு சாதனங்களையும் ஈசுவரன் கருணையால் கொடுத்திருக்கிறார். மேற்படி நீதி வாக்கியத்தைப்பற்றி உண்ணுந்தோறும், நமக்கு அடியில்கண்ட கேள்விகள் உதயமாகின்றன,

(i) முதலாவது.—இப்படி நான்குவித புருஷார்த்தங்களையும் அல்லது திரிவர்க்கம் என்னும் சொல்லும்படியான 'அறம், பொருள், இன்பம், என்னும் புருஷார்த்தங்களையும், ஒருங்கே அடையமுயலவேண்டும் என்று கூறாமல், அவற்றுள் ஒன்றை மாத்திரமே அதாவது முதல் புருஷார்த்தமான அறத்தை மட்டுமே கூறவேண்டியதன் காரணம் என்ன? அதிலும் 'அறம்' என்பதையே பிரதானமாகவும், முதலிலும் வைத்து கூற வேண்டியதேன்?

(ii) இரண்டாவது:—இந்தப் புருஷார்த்த விசாரணை, விஷயத்தை எழுத்துக்கள் கூட்டி சேர்த்துவாசிக்கும் திறமையுள்ள காலம் முதற்கொண்டே, கற்றுக்கொண்டு அதின்படி நடக்கவும் வேண்டும் என்பதை குறிக்க 'செய்' என்னும் வார்த்தையை குறித்ததின் காரணம்தான் என்ன?

(iii) மூன்றாவது:—அறம் என்பதின் பொருள்தான் என்ன? பல பல நூல்களிற் பல அர்த்தங்கள் வெளியாகின்றன. எதை 'அறம்' என்று சொல்வது?

(iv) நான்காவது:—மற்றைய நீதிவாக்கியங்களில் சொல்லியிருக்கிற பிரகாரம் இரண்டு வார்த்தைகளாலும், ஏவல் மொழியாலும் கூறாமல் மூன்று வார்த்தைகளையும் அமைத்ததின் நோக்கம்தான் என்ன? உலகில், விருப்பு, வெறுப்பு, இவைகளை ஒழிக்க வேண்டுமென்று வேத சாஸ்திர புராணநூல்கள் கூறுகின்றன,

'அவாவென்ப வெல்லா யுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவா. அப்பிறப்பீனும் வித்து' என்றும், 'அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார் அற்றாக வற்றதிலர் (குறள்)

இப்படியிருக்க 'செய்' என்று சொல்லாமலும் 'செய விரும்பு' என்று சொன்னதின் நோக்கம் என்ன? விருப்பைக் கைக்கொள்வது மேன்மையா?

(v) ஐந்தாவது:—'விரும்பு' என்னும் வார்த்தையிலிருந்தே 'அறம்' என்பதற்கு ஒரு ரகஸியார்த்தம் இருக்கவேண்டுமென்று தோற்றலால், ஔவை கருதியிருக்கக்கூடிய உள் அர்த்தம்தான் என்ன?

இவைகளைபற்றி சற்று ஆராய்வோம். முதலாவது, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்குவித புருஷார்த்தங்களும் வரிசை கிரமமாக அறத்தை முதலில் கொண்டு, வீடு கடையில் வைத்து சொன்னதின் நோக்கத்தையும், இந்நான்கு புருஷார்த்தங்களையும் சொல்லாமல் 'அறம்' என்னும், முதல் புருஷார்த்தம் மட்டும் கைக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருப்பதின் நோக்கத்தையும் கவனிப்போம்.

அறமானது, இம்மை, மறுமை, வீடு, என்னும் மூன்றையும் தருவது. பொருள் இம்மையையும், மறுமையும் தருவது. இன்பமோ இம்மையொன்றையே தருவது. இச்சிறப்பின் தகுதியாக அறம் முதலிலும், அதன்பின் பொருளும், அதன்பின் இன்பமும் நிறுத்தப்பட்டன. தவிர இரண்டாவதாகிய பொருள் முதலான அறத்துக்கும், மூன்றாவதான இன்பத்துக்கும் காரணமாதல்பற்றி இவ்விரண்டின் இடையில் வைக்கப்பட்டது.

பொருள் - தர்மம். காமங்களைத்தருவதை "அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து, தீதன்றி வந்த பொருள்" என்னும் திருக்குறள் வாக்காலும், "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்தாதான். எய்தும், உலைப்பெய் தடுவது போலுந்துயர்" (நாலடியார்) (பொருள்) குற்றமில்லாத இவ்வுலகத்தில் பொருந்திய அறம், பொருள், இன்பம் இம்மூன்றில் நடுவிற் சொல்லப்பட்ட பொருளை ஒருவன் எய்த, அதனால் இருதலையும், முன்னும்பின்னுள்ள அறத்தையும் இன்பத்தையும் அடைவான். நடுவணது எய்தாதான், இடையில் நின்ற அச் செல்வத்தை அடையாதவன் கொல்லனது உலைக்களத்தில் இட்டு காய்ச்சப் படுவதினால் உண்டாகும் துன்பத்தைப் போன்ற துன்பத்தை அடைவான் என்னும் வாக்காலும் அறிக, இக்கருத்தையே

"பாரோர் சொல்லப்பட்ட மூன்றன்றே யம்மூன்று
மாராயிற்றானே யறம், பொருள் இன்பமென்று
ஊரார் இவற்றின் இடையதனை யெய்துவார்,
சீரார் இருதலையுமெய்துவார், என்பதாலும்

"ஒண் பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு
எண் ஏனையிரண்டும் ஒருங்கு" (பொருள்) (குறள்)

செறியால் வரும் பொருளை மிக்க, இறப்ப படைத்தாற்கு மற்றை அறனும், இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம் என்னும் திருக்குறள்வாக்காலும் அறிக. தர்மம், அர்த்தம் இவை இரண்டில் முந்தி தர்மத்தையும், பிந்தி பொருளையும் வைத்ததற்கு காரணம் என்ன யெனில், தர்மம் தான் அர்த்தத்திற்கு காரணம் என்றும், அர்த்தம் தர்மத்திற்கு காரணமாகாது என்பதும் வெளியாகும். அதாவது பொருளினால் புண்யம் சம்பாதிக்க காரணம் உண்டு என்றும், புண்யமில்லாமல், பொருள் ஏற்படாதென்றும், பொருள் இல்லாமலே புண்யம் சம்பாதிக்கலாம் என்றும் ஏற்படும். பொருளை அபேக்ஷிக்காததான

தொடர்ச்சி 3ம் பார்க்கவும்.

# கும்பகோணம் வர்த்தமானம்.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம், ஏப்ரல் 19உ

புயல்காற்றும் மழையும்:- பிரஜைகளுக்கு, விவசாயிகளும் வரிப்பளு, கடன் பளு, பலசரக்கு சாமான்களை வாங்குவதில் வரி இல்லா பளு எல்லாவற்றையும் நிவர்த்தி செய்வதாக வாசாகைங்கிரிய பிரசாரம் ஒருபுறம் நடந்து வருகையில் வருண - வாயு பகவானும் இவ்வருடம் கிருபை செய்து விட்டார்கள் போலும். தஞ்சை ஜில்லாவில் பல்லாயிரக் கணக்கான வாழைகள், தென்னை மரங்கள், வீடுகள், மாடுகள், ஆடுகள் எல்லாம் அழிந்து போயின. தெய்வகதியாக நேரிடும் விபரீதத்தை மனுஷ்ய கதியால் மாற்றக்கூடியதை மாற்றி விவசாயிகளுக்கு ஹிதம் செய்யலாமல்லவா? இச்சந்தர்ப்பத்தை எவ்வாறு ராஜ்யம் நடத்துவோர் கருதுவார்கள் என்பதையும் பார்ப்போமாக.

இசை வேளாளர் சங்கம்:-தஞ்சை அதிதீவிர காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் வெங்கடகிருஷ்ண பிள்ளை தலைமையில் 12-4-39 ல் வாணி விலாஸசபையில் நடந்தது இச்சங்கம் சென்ற ஒரு வருடமாய் இந்நகரில் தன் சமூகம் முற்போக்கு அடைய நல்ல வேலை செய்து வருகிறது. இதன் சாஸ்வதமான தலைவர் ஸ்ரீமான் பிடில்வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளையாவார். நாதசுர வித்வான் ஸ்ரீமான் கா. சி. இராஜண்ணா பிள்ளை காரியதரிசி முறையில் சங்கத்தின் அறிக்கையைப்படித்தார். வருஷாந்திர கொண்டாட்டத்தின் தலைவர் சமூகத்தின் சங்கீத பரதநாட்டியகலைகளை வளர்த்து தேசத்தோடு நல்லொழுக்கத்தில் பாடுபட வேண்டிய நல்ல யோசனைகளை கூறினார். புதிய வருடத்திற்கு ஸ்ரீமான் இராஜமாணிக்கம் பிள்ளையையே தலைவராக தேர்ந்தெடுத்தனர்.

தாமதித்த தபால் எடுப்பு:- கும்பகோணம் ரயிலடியில் தாமதித்த தபால்களை எடுத்துப் போட்மெயிலில் போட ஏற்பாடு செய்ததாக இப்பத்திரிகை வாசகர்கள் படித்திருப்பார்கள். 14-4-36 இரவிலிருந்து "லேட்பீ" ஒட்டிய (ஒரு அணா தலை) தபால்களை போட் மெயில் வருவதற்கு முன் இரவு 10-10 மணி நேரத்திற்கு எடுக்க போஸ்டாபீஸ் அதிகாரி ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்விஷயமாக காங்கிரஸ்காரர்கள் பிரயத்தனம் நகருக்கு ஹிதம்செய்யும் முயற்சி எடுத்து செய்யப்படவில்லை. ஆகவே இதைப்பற்றி காந்தி பார்க்கில் தாங்கள் செய்ததாய் பிரதாபப்பிரசங்கம் இனி நிகழ்ந்து விடாது. மேற்கூறிய வசதிகள் போல் நகருக்கு செய்ய வேண்டியது எவ்வளவு இருக்கிறது தெரியுமா?

கனம் சுகாதார மந்திரி விஜயத்தில் ஓர் சம்பவம்: குடந்தை நகர் செய்த பாக்கியமே பாக்கியம்! மந்திரிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து தரிசனம் கொடுக்கிறார்கள். கனம் கல்வி மந்திரிகாக்ஷி அளித்ததில் ஒரு சம்பவம் தெரிந்ததே. வழக்கம் போல மகாநாடு திறப்பு விழா, பேட்டிகள், காங்கிரஸ் வேலையாளர் சம்பாஷணை, முனிசிபாலிடி கோஷ்டிகள் சந்திப்பு எல்லாம்நடந்தன. மாலைகள் அளவற்று செலவாயின. ஒரு சம்பவம் காங்கிரஸ் தொண்டர்கள் சந்திப்பில் நடந்தது. கனம் மந்திரியை நோக்கி காங்கிரஸ் தொண்டர்கள் பல்வேறு கேள்விகள் வான்களை கேட்டனர். சம்பிரதாயமாகப் பேச்சுகள் நடக்கிறது எல்லோருக்கும் தெரிந்ததே. இதிலிருந்து கனம் மந்திரி வெளியே புறப்பட்டார். கேள்விகள் பல ஓயாமல் கேட்டார்கள். கனம் மந்திரி கொஞ்சம் அலுப்புடன் 'கும்பகோணத்தைப் போல கெட்டது வேறில்லை' என்று சொல்லி விட்டார். அவர் வெளியே போய்க்கொண்டே இப்படி சொன்னார். அங்கு கூட்டத்தில் ஒருவர்— கனம் மந்திரி அவர்களே! விக்ஞாபனம் என்றார்:-

கனம் மந்திரி திரும்பி பார்த்து என்ன என்றார்?

கூட்டத்தில் ஒருவர்:- கனம்மந்திரி அவர்களே! கும்பகோணம் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி இருக்கிற நிலைக்கு— கும்பகோணம் நகரம் அவ்வளவு கெட்டதில்லை என்பது தான் எனது தாழ்மையான விக்ஞாபனம் என்று சொன்னார்.

கனம்மந்திரி:- அதற்கென்ன செய்கிறது என்று கூறினார்.

ஒருவர்:- நிவர்த்தி உங்களிடம் தான் இருக்கிறது. ஏழை ஜனங்கள் கஷ்டத்தை தாங்கள் தான் தீர்ப்பதாக கூறுகிறீர்கள் என்றார்.

கனம் மந்திரி:- டாக்டர் என்றால் அபவாதம் உண்டு தான்.

ஒருவர்:- அதிர்ஷ்ட வசமாய் தங்களிடம் அது இல்லையே. (சிரிப்பு)

கனம் மந்திரி பேசாது மோட்டாரில் சவாரி போய் விட்டார். ஆனால் கனம் கல்வி மந்திரி ஆண்டுகாகிதத்தை நடத்திய விதமாக செய்யவில்லை. இது அதிர்ஷ்டவசமே யாகும்

குடந்தை நகர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் சரியான சிகிச்சை பெற முடியவில்லை என்ற புகார் தலைதெறிக்கும்படி இருக்கிறது என்று தெரிகிறது. இதைப்பற்றி பலர் கனம் மந்திரிக்கும் எழுதினார்களாம். ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. இந்த காரியம்பற்றியே காங்கிரஸ் ராஜ்யத்தில் முக்கிய மந்திரியிடம் மேற்படியார் நேரில் வந்தபோது தெரிவித்தார் போலும். தெரிவித்துவிட்டால் என்ன?

ஜில்லா கலெக்டருக்கு உபசரிப்பு. தஞ்சை ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் ஆர். எம். சுந்தரம் ஐ. சி. எஸ். க்கு ஓர் உபசரிப்பை ஸ்ரீ வாணி விலாஸ சபையார் 16உ நடத்தினார்கள். இச்சபையில் அவர் இந்த டிவிஷனில் ஸப் கலெக்டராக இருக்கையில் தலைவராக இருந்தார். அதைபொட்டி இந்த உபசாரம் செய்யப்பட்டது.

## அறஞ்செயவிரும்பு.

7ம் பக்கம் தொடர்ச்சி.

புண்யங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதை அநுசரித்துதான், பொருள் என்ற அர்த்தத்தை பெற்றும், அறம் என்ற தர்மத்தை ஆத்மானந்தமாகிய மோக்ஷத்தை அனுபவிக்கவேண்டுமென்ற லக்ஷ்யத்தை விவேகிகளுக்கு சிற்றின்பம் என்கிற விஷயசுகமாகிற காமமானது உண்டுபண்ணும் காரணத்தைக்கொண்டு முன்பு காமம், பின்பு மோக்ஷம் புருஷார்த்தவரிசையில் ஏற்படுத்தி இருக்கிறது.

அறமும் பொருள், இன்பம், இவை இரண்டையும், ஒன்றன் பக்கத்தில் ஒன்று வைத்திருக்கும் நோக்கத்தையும் கவனிக்குங்கால், காமத்தை அனுபவிக்கத்தான் பொருள் தேவையன்றி மோக்ஷம் என்ற பேரானந்தத்திற்கும்; பொருளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்றும் வெளியாகும். மோக்ஷம் என்ற பேரானந்தத்திற்கும், அறம் என்ற தர்மத்திற்கும், சம்பந்தம் உண்டு என்பதை அறிவிப்பதற்கு ஆரம்பத்தில்தர்மத்தையும் முடிவில் மோக்ஷத்தையும், புருஷார்த்த வரிசையில் ஏற்படுத்தி, யிருக்கிறார்கள். தர்மத்தைப்போல் புகழையோ, கீர்த்தியையோ, ச்ரேயஸ்ஸையோ அடைவதற்கு பரமசாதனம் வேறு ஒன்றுமில்லை தர்மம்தான் முதன்மையானது என்றதை காட்டுவதற்கு, தர்மத்தை முதலில் ஏற்படுத்தி, மோக்ஷத்திற்கு மேலான புருஷார்த்தம் கிடையாது என்பதை சுட்டிக் காட்ட மோக்ஷத்தை கடையில் வைக்கப் பட்டிருக்கிறது. அர்த்தத்திற்கும், காமத்திற்கும், சமீப சம்பந்தத்தையும், தர்மம், மோக்ஷம் இவைகளின் தூர சம்பந்தத்தையும் தர்மத்தை செய்து மோக்ஷம் அடைவதை, காமமும், பொருளும் நடுவில் குறுக்குக் கட்டை கவர்போல் தடுத்து நிறைப் பட்டிருப்பதையும், கவனிக்கும்போது வீட்டையடைவதற்கு பொருளாலும் இன்பத்தாலும் முடியாதென்றும், பொருளும், இன்பமும் நிலைத்து வாழ்வனவல்ல என்றும், பொருளினாலும், இன்பத்தினாலும் ஆழ்ந்துகிடக்கிறவன் மோக்ஷமென்ற வீட்டை அடைய முடியாதென்றும், நமக்கு புலப்படும். மோக்ஷமென்ற புருஷார்த்தத்தை அடைந்தவர்களுக்கு ஜனன, மரணமென்ற துக்கம் கிடையாது. அதிலுள்ள ஆனந்தமோ மனதினாலும் வாக்கினாலும் சொல்லத்தக்கதன்று. இந்த புருஷார்த்தத்தை யடையவேண்டுமென்ற விருப்பமானது அநேக ஜன்மாக்களிற் செய்யப்பட்ட புண்யங்களினால்தான் ஏற்படவேண்டும். மோக்ஷமென்கிற நித்யமான புருஷார்த்தம் வேதபுருஷனுடைய ஸர்வ பௌமனுடைய ஆதீனமாகத்தான் ஏற்படவேண்டுமே தவிர, மற்ற பொருளினாலும் காமத்தினாலும் ஏற்படக்கூடியதில்லை பொருளை அடைந்து இன்பங்களிற் ஆசை வைத்து அனுபவிப்பவர்கள் பலர் உண்டு. ஆனால் தர்மத்தை அனுஷ்டித்து மோக்ஷத்தை அடைகிறவர்கள் சிலரே என்று அறிவூட்டும் பொருட்டுத்தான் ஆதிக்கும் அந்தத்திற்கும் முக்கிய பிரதன்யமுண்டு. நடுவிலுள்ளவைகளுக்கு அவ்வளவு பிரதான்யமில்லை. இக்காரணம்பற்றித்தான் தர்மமும் மோக்ஷமும் வேதசாஸ்திர சம்பந்தமான புருஷார்த்தங்கள். அர்த்த காமம் லோக சம்பந்தமான புருஷார்த்தங்கள் என்றும் ஏற்படுவதால், உலகத்தில் மனிதர்கள், அர்த்த காமத்தை வெறுத்து, அதன்பேரில் அதிக பிரேமை வைக்காமல் தர்ம மோக்ஷத்தை கம்பீரமான ச்ரேயஸ்ஸை அடைய எத்தனிக்க வேண்டும், அந்த மோக்ஷ வீடு அடைவதற்கும், தர்மம் பிரதானமாகையாலும், தர்மத்தால் பொருளும், பொருளால் இன்பமும் அடையக்கூடுமாதலாலும், தர்மத்தை ஒன்றை கடைபிடித்தாலே மற்ற மூன்றையும் சுலபத்தில் அடையக்கூடும் என்பது பற்றித்தான் அறம் என்னும் தர்மத்தை செய விரும்பு என்று பெரியோர் வாக்கு ஏற்பட்டிருக்கிறது.

(தொடரும்)

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.

தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்,



## ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கர குருகுலம்.

லைப்ரரியின் வருஷாந்திரக்கூட்டம்.

ஸ்ரீரங்கம் சங்கர குருகுலத்தில் ஸ்ரீ ஸச்சிதானந்தபார தீபாண்டாகாரம் என்ற லைப்ரரிதன் வருஷாந்திரக் கொண்டாட்டம் 9-4-39 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு திவான் பகதூர் பிரம்மஸ்ரீ K. S ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் மங்கள சுலோகம் சொல்லப்பட்டு தலைவரின் முகவுரைக்குப் பிறகு பிரம்மஸ்ரீ T K பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களால் முதல் வருஷத்திய ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டவுடன் திருச்சி ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்கிருத ப்ரொபஸர் ஸ்ரீ V கோபாலய்யங்கார் அவர்கள் "லைப்ரரியின் உபயோகம்" என்ற விஷயத்தைப்பற்றி மிகவும் விரிவாகவும் அழகாயும் உபன்யஸித்தார்கள்.

லைப்ரரி என்பது இக்காலத்தில் தான் புதிதாக ஏற்பட்டது என்று சொல்ல முடியாதென்றும் புஸ்தக கோசங்கள் வெகு காலத்திற்கு முன்னாலேயே நம் முன்னோர்களால் செவ்வனே நடத்தப்பட்டு வந்ததென்றும், புஸ்தக கோசத்தைப் பற்றிய விசேஷமான விபரங்கள் அக்னி புராணத்தில் அதிகமாக இருக்கிறதென்றும் சொன்னார்கள். மேலும் அக்னி புராணத்தில், ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்கள் அவசியம் இருக்க வேண்டுமென்றும் அவ்வாலயங்களிலேயே புஸ்தக கோசமும், வித்யாபிரவசனமும் நடத்தப்படவேண்டுமென்றும், புஸ்தகங்களை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வரவேண்டுமென்றும் சொல்லி யிருப்பதாயும், அப்புராணங்களில் சொன்னவிதமாகவே பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியய்யர் அவர்கள் இவ்வூரில் ஒரு ஆலயம் ஒன்று ஏற்படுத்தி யிருப்பதாலும் இவ்விடத்திலேயே சீக்கிரம் குருகுலத்தையும் ஸ்தாபிக்கப் போவதாயும், அவருடைய காரியங்கள் எல்லாம் எல்லோராலும் மிகவும் போற்றத்தகுந்ததென்றும் கூறிவிட்டு லைப்ரரியை புஸ்தகங்களை வைக்கக்கூடிய இடமாக மட்டும் நினைக்கக்கூடாதென்றும், சரஸ்வதியே புஸ்தக ரூபமாய் அவிடம் வாசம் செய்வதால் இதையும் ஆலயமாகவே பாவிக்கவேண்டுமென்றும் ஸம்ஸ்கிருத பாஷையில் கோசம் என்ற பதத்திற்கு அநேக அர்த்தங்கள் இருப்பதாயும் எல்லா அர்த்தங்களும் லைப்ரரிக்குப் பொருந்துமென்றும் இக்காலங்களில் ஞானத்தை சம்பாதிப்பதற்கு லைப்ரரி ரொம்பவும் உபயோகமுள்ளதாயிருக்குமெனறும் ஆகலால் இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்றும் கூறி முடித்தார்கள். தலைவர் முடிவுரையில், இக்காலத்தில் எல்லோரும் ஸ்வராஜ்யத்திற்காகப் பாடுபடுவதாகச் சொல்கிறார்களென்றும், ஆனால் அதற்கு எல்லோரும் ஆத்மசக்தியை சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்றும், அதற்கு உசிதமான கர்மங்களை சரிவர அனுஷ்டிக்கவேண்டுமென்றும், அதற்கு ஸம்ஸ்கிருத பாஷையை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் அதற்கு இதுபோன்ற லைப்ரரிகள் ஆவசியகமென்றும்கூறி, பிரம்மஸ்ரீ ஐயர் அவர்கள் தமது ரிபோர்டில் நண்பர்கள் பலரிடமிருந்துவந்த புஸ்தகங்களைமட்டும் கூறினாரென்றும் ஆனால் அவர்கள்மட்டும் ஏகதேசத்திலேயே 3500 புஸ்தகங்கள் கொடுத்திருக்கிறார் என்றும், இது விஷயங்களில் அவர்மட்டும் செய்யட்டுமென்று நாம் சும்மா இருக்கக்கூடாதென்றும், நாமாகவே முன்வந்து விசேஷமாக தியாகம் செய்யவேண்டுமென்றும், சொல்லி, அவர்களுடைய ஒவ்வொரு காரியங்களையும் சிலாகித்துஐயர் அவர்களை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

பிறகு குருபக்த சிகாமணி சாஸ்திரப்ரசார பூஷண பிரம்மஸ்ரீ T.K. பாலசுப்ரமணியய்யர் அவர்கள் வந்தனோபசாரங்கூறுவதற்காக ஆரம்பித்து, இந்தக்காரியங்கள் வடதேசங்களிலும் விசேஷமாக ப்ரசாரமடையவேண்டுமென்ற நோக்கத்துடன் இச்சபை ஆங்கிலத்தில் நடத்தப்பட்டதென்றும், இப்பொழுது லைப்ரரியில் 4170 புஸ்தகங்கள் இருப்பதாயும், இதுபோல் இன்னும் 3 ஹால்கள் கட்டுவதாக உத்தேசமென்றும், இவ்விடத்திலேயே குருகுலமும் ஆரம்பிக்கப்போவதாயும், சமீபத்தில் இவ்விடமிருந்து த்ரைமாஸிகபத்திரிகை ஆரம்பிக்கப்போவதாயும், அதில் இதுவரை அச்சில் வெளிவராத அநேக கிரந்தங்கள் வெளியாகுமென்றும் இது விஷயங்களுக்கு எல்லோரும் அவசியம் உதவிசெய்யவேண்டுமென்றும், இக்கொண்டாட்டத்திற்கு தன்னுடைய சிரமத்தையும் கவனியாமல் மதராஸிலிருந்து வந்து தலைமை வகித்த பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கும் மிகவும் அருமையான விஷயங்களை உபந்யஸித்த ஸ்ரீ கோபாலய்யங்கார் அவர்களுக்கும் மற்றும் வந்திருந்த சபையோர்களுக்கும் வந்தனோபசாரங்கூறி முடித்தார். பிறகு எல்லோருக்கும் சந்தனம், தாம்பூலம், புஷ்பம், கற்கண்டு முதலியவை வழங்கப் பெற்றது கூட்டம் இனிது கலைந்தது.

[ஒரு நிருபர்]

## பழூவூர். கீர்வாண வாணீ பரிஷத்.

சென்ற சித்திரை 3உ (16-4-39) மாலை 4 மணிக்கு இச்சபையின் கூட்டம் நெல்லூர் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் உள்ளூரிலிருந்தும் பக்கத்து ஊர்களிலிருந்தும் அநேக பிரமுகர்கள் வந்திருந்தார்கள். ஆரம்பத்தில் யக்ஞேச்வரன் என்ற மாணவனால் மங்களாசரணம் செய்யப்பட்டது. பிறகு தலைவர் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் பக்தி என்னும் விஷயத்தை ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்கள். பிறகு மகா-ா-ஸ்ரீ ரிடயர்ட் டிப்டி கலெக்டர் பி. ராமச்சந்திர அய்யர் அவர்களால் சிருகமணி என்ற கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ "பர்வதம்மாள்" ஆயுர்வேததர்ம வைத்தியசாலையில் வைத்தியராக இருக்கும் பிரம்மஸ்ரீ பி. ஏ. கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் அவர்கள் "சரீர ரக்ஷணோபாயம்" என்னும் விஷயத்தை நவீன ரீதிக்கும் ப்ராசீன ரீதிக்கும் உள்ள வித்யாசங்களையும் சில ஒத்ததான விஷயங்களையும் விஸ்தாரமாகத் தமிழில் எடுத்துரைத்தார்கள். பிறகு காரியதரிசி P. R. ராமேச்வர சாஸ்திரிகளால் வந்தனோபசாரம் தெரிவிக்கப் பட்டது. கூட்டம் இனிது கலைந்தது.

கே. என். நடேச சர்மா.

## கரூர். ருக்வேத பாராயணம்.

ஸ்ரீ அகண்ட சச்சிதானந்த சின்மய தேஜோரூபியாகிய ஸ்ரீ அலங்காரவல்லி சௌந்தரநாயகி சமேத ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வர ஸ்வாமிக்கு இக்கர் பபுரி க்ஷேத்திரத்தில் நிகழும் பகுதானிய ஹு பங்குனிமீ 12உ ஸ்திரவாரம் இரவு கிராம சாந்தியும் மறுநாள் துவஜாரோகணமும் ஆரம்பித்து 22உ மங்களவாரம் தீர்த்தவாரி இரவு ரிஷபவாகன காக்ஷியும் நடைபெற்றது. ஷை மஹோத்ஸவ காலத்தில் சென்ற தாது ஹு முதல் ஜகத்குரு அனுக்ரகத்தாலும் பக்தர்களுடைய கைங்கர்யத்தாலும் வெளியூரிலிருந்து வேத கோஷ்டிகளை இவ்வருஷமும் வரவழைத்து ஸ்ரீரங்கம் கணபதி சாஸ்திரிகளவர்களால் ரிக்வேத பாராயணமும் சந்தர்ப்பணைகளும் விமர்சையாய் நடந்தேறியது. இந்த கைங்கர்யம் மென்மேலும் அபிவிருத்தியடையவேணுமாய் ஸ்ரீபசுபதீஸ்வர சுவாமியை பிரார்த்திக்கிறோம்.

கடந்த 10 வருஷ காலமாய் நின்று விட்டது சமாராதனை (அன்ன தானம்) இவ்வருஷம் ரதோத்ஸவ தினமாகிய பங்குனிமீ 21உ திங்கள்கிழமை யன்று பக்தர்களால் வசூல் செய்து சுமார் 1000 பிராம்மணர்களுக்கு அன்னதானம், பகலிலும் இராத்திரியிலும் சந்தர்ப்பணை வெகு விமர்சையாக நடந்தேறியது பிரதி வருஷமும் நடக்கும்படி பக்தர்கள் பகவானை பிரார்த்திக்கிறார்கள்.

கர்பபுரி க்ஷேத்திரமாகிய இக்கரூர் பஜனை மடத்திலும் ஷை யூர் பசுபதீஸ்வர ஸ்வாமி ஸந்நிதி தெருவிலும் ஷை கரூர் அடுத்த திருமானிலையூரிலும் வழக்கம் போல் நாளது வெகுதான்ய ஹு பங்குனிமீ 16உக்கு (29-3-39) புதன்கிழமையன்று ஸ்ரீராமநவமி ஜனன உற்சவம் ஆரம்பித்து கதாகாலக்ஷேபங்களுடனும் உபன்னியாஸங்களுடனும் வெகுதான்னிய ஹு பங்குனிமீ 26உ (8-4-39) ஸ்திரவாரம் சதுர்த்தியன்று ஸீதா விவாஹ மஹோத்சவமும் பிரம்மண சந்தர்ப்பணைகளுடன் பக்தர்களுடைய பொருளுதவியால் வெகு விமர்சையாய் முடிவடைந்தது.

[ஒரு நிருபர்.]

## குன்னக்குடி ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளின் திருவவதார திவ்ய மஹோத்ஸவத்தைக் கீலகஹும் முதல் பக்தர்களின் பொருளுதவியை முன்னிட்டு நாங்கள் நடத்திவருகிறபடி நாளது பிரமாதிஹு சித்திரைமீ 7உ முதல் 11உ வரையில் வைசாக சுத்த ப்ரதமையில் ஆரம்பம் செய்து பஞ்சமி வரையில் இந்த மஹோத்ஸவம் மதுராபுரி பஜனை மடத்தில் நடைபெறுகிறபடியால் தாங்கள் வந்து தர்சித்து ஆசார்யாள் ப்ரஸாதம்பெற்று ஸர்வமங்களங்களுக்கும் பாத்திரர்களாகீர்களென விரும்புகின்றோம்.

பிரதிதினமும் காலை மாலைகளில் அபிஷேக ஆராதனங்களும் உபநிஷத் பாராயணங்களும் நடைபெறும்.

மஹாஜனங்கள்.

## மதிப்புரை.

கதாகுஸுமமஞ்ஜரீ, இரண்டாவது பாகம்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் பிரதம ஸம்ஸ்கிருத பண்டிதராக விளங்கிவந்த பிரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளவர்களால் இயற்றப்பட்டது: இதில் உயர்ந்த நீதிகளையும் தத்வங்களையும் போதிக்கக்கூடிய அநேக கதைகள் காணப்படுகின்றன. ஆசிரியர் தமது சிறந்த ஸம்ஸ்கிருத பாஷாபாண்டித்யத்தை இதில் நிதர்சனமாகக் காட்டியுள்ளார் மாணவர்கள் வெகு எளிதாக கிரஹிக்கும்படி இனிய எளியநடையில் இது எழுதப்பட்டிருக்கிறது. இது ஏழாவது பதிப்பாக இருப்பதிலிருந்தே இதன் அருமை விளங்கக்கூடியது. பள்ளிக்கூடங்களுக்கு பாடப்புத்தகமாக ஸர்க்கார் இதை அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். இஃது ஸ்ரீமான் வி, எஸ், தீக்ஷிதர் அவர்களுடைய கம்பெனியாரால் அழகாக அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது, விலை அணா 10,



அநவாசியமாக ஏன் — —
— — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## புராணக்கதைகள்.

### புலி- நரி கதை.

(முன் தொடர்பு)

மற்ற துர்மந்திரிகளின் துர்போதனையைக் கேட்டு புலியானது நரியைக் கொன்று விடும்படி கட்டளையிட்டபொழுது நரிக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டும் புலியின் தாயானது புலிக்கு நல்லறிவை யுண்டு பண்ண வேண்டிப் புலியிடம் வந்து நல்ல வார்த்தைகளால் 'மகனே! கபடமான முயற்சியுள்ள இந்த வார்த்தையை நீ கேட்க கூடாது. கெட்டவர்களால் நல்லவனும் குற்றவாளியாக்கப்படுவான். உயர்ந்தவனை ஒருவனும் ஸஹிக்க மாட்டான். உயர்ந்த வேலைகாரனது விரோதத்தையுண்டுபண்ணும். காட்டிலிருந்து கொண்டு தர்மம் செய்பவர்களுக்கும் ஸ்நேகம் பகை முதலியன உண்டாகும். லோபிகளுக்குச்சந்தர்களிடமும், பயங்கொள்ளிகளுக்குப் பலசாலிகளிடமும் மூர்க்கர்களுக்குப் பண்டிதர்களிடமும் தரித்திரருக்குத் தனவான்களிடமும் அழகில்லாதவனுக்கு அழகுள்ளவனிடமும் பகையுண்டாவது வழக்கம். ஒருவருமில்லாத உன் வீட்டிலிருந்து அந்த மாம்ஸமானது அபகரிக்கப்பட்டதாயிருக்கட்டும். அந்த நரியோ ஒருவரால் கொடுக்கப்பட்டதையும் விரும்புவதில்லை.

இதை முதலில் யோசிக்க வேண்டும். உலகத்தில் பல வஸ்துக்கள் பொய்யாயிருந்தும் மெய் போலவும் மெய்யாயிருந்தும் பொய் போலவும் காணப் படுகின்றன. ஆகாயமானது கவிழ்த்த கறுத்தசட்டியைப் போலும் மின்மினிப் பூச்சி நெருப்பைப் போலும் காணப் பட்டாலும் அவை உண்மையல்ல. ஆகையால் பிரத்யக்ஷமாய்க் காணப்படும் பொருளைப் பரீக்ஷித் தறிய வேண்டும்." அவ்விதம் செய்தவன் பின்னால் பரிதபிக்க மாட்டான். பிரபுவானவன் பிறனைக் கொல்வது அரிதன்று. பொறுமையுள்ள பிரபுவை உலகம் கொண்டாடிப் புகழும். இந்த நரியை நீ வைத்துக் கொண்டது சிற்றரசர்களுக்கும் தெரிந்திருக்கிறது. நல்லவர்கள் கிடைப்பது கஷ்டம். ஆகையால் இந்த நரியை உன் ஸ்நேகிதனாய் வைத்துக் கொள், பிறருடைய துர்போதனையால் நல்லவர்களைக் கெட்டவர்களாய் நினைப்பவர் பின்னால் வருந்துவார்கள்.! என்று சொல்லிற்று.

அப்போது நரியின் சத்துருக் கூட்டத்திலிருந்து தர்மபுத்தி யுள்ள ஒரு நரி வந்து 'இது கபடமாகச் செய்யப் பட்டது' என்றது.

இதைக்கேட்டுப்புலியானது நரிக்கு மரியாதைசெய்து அதை விடுவித்தது. நீதியுற்ற அந்தநரியானது புலியிடம் அனுமதி பெற்று தனக்கு நேர்ந்த அவமானத்தால் பிராயோபவேசம் செய்ய விரும்பிற்று. அப்போது புலியானது ஸ்நேஹத்தால் கண்ணீருடன் அந்நரியைத் தடுத்தது. அப்போது அந்நரியானது தழு தழுத்த குரலுடன் சொன்னதாவது:— "முதலில் உன்னால் நான் பூஜிக்கப்பட்டேன். பிறகு அவமானமடைந்தேன். சத்துருவாக நினைக்கப்பட்ட உன்னிடம்நான் வசிக்கத்தகுதியற்றவன். ஸந்தோஷமில்லாதவர்கள் அதிகாரத்திலிருந்து நழுவினவர்கள், அவமானமடைந்தவர்கள். தாமே துன்பம் செய்து கொண்டவர்கள், பிறரால் வஞ்சிக்கப்பட்டவர்கள் லோபிகள், கோபிகள், இழிவாய்ப்பேசப்பட்டவர்கள், கர்விகள், விலக்கிய பின் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள், பேராசையுள்ளவர்கள், மிக்க லாலனை செய்யப்பட்டவர்கள் முதலியவர் யஜமானனிடம் ப்ரீதியில்லாதவர்களும் பொருளற்றவர்களுமாயிருப்பார்கள். அவமானமடைந்தவனை திரும்பவும் அதிகாரத்தில் வைத்தால் நம்மிருவருக்கும் நல்லெண்ணம் எப்படி ஏற்படும்?

வேறு பட்டது சேருவது கஷ்டம்; சேர்ந்தது வேறுவதும் கஷ்டம். வேறு பட்டுச் சேர்ந்த விடத்தில் ப்ரீதியானது வளருவதில்லை. உன்னிடம் இருப்பவன் ஒருவனும் உனக்கு இதத்தை நினைப்பவனில்லை. உள்ளத்தில் ஸ்நேஹமுள்ளவர் கிடைப்பது மிக அரிது. அரசர்கள் மனிதர்களின் ஸ்வபாவத்தைத் தெரிந்து கொள்வது மிகக் கஷ்டம். இவர்களின் மனம் நிலையில்லாதது. மனிதர்களுக்குப் பெருமையும் குறைவும் நிமிஷமென்று நேரும். கபத்தையும் அசபத்தையும் பெருமையையும் கெடுக்கப் புத்தியின் சிறுமை காரணமாகும்' என்று சொல்லிற்று. தர்ம புத்தியுள்ள நரியானது இவ்விதமான நல் மொழியைச்சொல்லி அரசனை புலியை தேற்றி விட்டு வனம் சென்றது. அங்கு பிராயோபவேசம் செய்து சரீரத்தை விட்டு ஸ்வர்க்கத்தையடைந்தது.

ஸ. இராமச்சந்த்ர ஐயர்


முக்கிய கவனிப்பு·

3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கநகைகளைப்போன்ற 'கன்னாஸ் ப்ளேட் ரோல்ட்கோல்ட்'' நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர் :—எஸ். கண்ணுசாமி பத்தர் பெரிய தெரு, கும்பகோணம்.


## திப்பிராஜபுரம்.

பிரும்ம வித்யா ஸபா:— 8-1-30 சனிக்கிழமை தினம் மகா-ா-ா-ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமணியசாஸ்திரிகளவர்கள் குரு பக்தி, பிதரு பக்தி" இதுகளைப்பற்றி வெகுவாகச்சொல்லி புண்டரீகாக்யபுரம் என்னும் பண்டரிபுர மஹிமையையும், பாபாவனிகளான கங்கை யமுனை, ஸரஸ்வதி முதலானவர் தங்களிடம் வந்து சேருகிற பாபக்குவியல்களை பிரம்மநிஷ்டரான ஒரு ரிஷீச்வரரிடத்தில் போய் கைங்கர்யம் முதலானது செய்து ப்ரதி தினமும் போக்கிக்கொண்டு மறுபடியும் பரிசுத்தமாக திரும்புகிறார்கள் என்கிற விஷயத்தையும் எடுத்துச் சொன்னார். பிறகு ஸ்ரீ சின்ன ஹெட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ ஜகதீசய்யர் அவர்கள், சுமார் 1 மணி நேரம் பகவானுடைய பரம கருணையையும், மூடபக்தியின் அதிசயத்தையும் நன்கு எடுத்துச்சொல்லி, ராமநாம மஹிமையை, லோக க்ஷேமார்த்தமாக ஜனங்களுக்கு உபதேசம் செய்த பெரியார் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளுடைய திவ்ய சரித்திரத்தை வெகு அழகாகவும், உருக்கமாகவும் போதனாமுறையில் உபன்யஸித்தார்.

15-1-30உ சனிக்கிழமை தினம் ப்ரும்ம ஸ்ரீ நாராயண ஸ்ரௌதிகளவர்கள் ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள "தர்மத்வ தர்மவ்ய" ஆக்யானத்தைச்சொல்லி, சத்யவானுடைய கர்மானுஷ்டான பராக்ரமத்தையும், அக்னியை உபாஸித்து வந்தபெருமையையும், அவன் பூதவுடலை துறக்கும்போது அவனுடைய பத்னி ஸஹகமனம் செய்த பெருமையையும் ஸ்திரீகளுடைய தர்மத்தை சாஸ்திரீயமாகிய பிரமாணங்களுடன் எடுத்துச்சொல்லியும், மூத்தவனை தர்மத்திலிருந்து தான் கர்மாவிலனுபிருந்ததாலேயும், அக்னியை உபாஸித்தாலும் எப்படி நல்ல லோகம் கிடைக்குமென்றும், இவ்வளவு தர்மவானுக்கு எவ்வளவு மற்ற நல்ல குணங்கள் இருந்தாலும், ஆசாரம், ஸீலம் அக்னி உபாஸனம் இதுகள் குறைவினால் பரத்தில் எவ்வளவு கஷ்டப்படுத்தான் அனுபவித்தே ஆகவேண்டியிருந்தது என்றும் மிகவும் அழகாகவும், உத்ஸாஹத்துடனும் எடுத்துச்சொன்னார். 14-1-30ல் 'வருஷப்பிறப்பு தினத்தை உத்தேசித்து விசேஷ ப்ரும்மஸ்ரீ சாமிநாத ஸாஸ்திரியாரவர்களுடைய "ஸ்ரீ வள்ளி கல்யாண" கதாகாலக்ஷேபம் தகுந்த உத்க்ருஷ்டமான பக்க மேளங்களுடன் இனிது நடந்தேறியது குறிப்பிடத்தக்கது.

ஒரு நிருபர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

ஸ
17

11
24
27-4-1939

215279

215279
APR 1939
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| புஸ்த. 24 | கும்பகோணம் கலி5039 பிரமாதி-ஸு சித்திரை-மீ 14உ 1939-ஸு ஏப்ரல்-மீ 27உ | ஸஞ்சிகை 17 |
|---|---|---|

## ஆலயப்பிரவேச ஆதரவு மஹாநாடு.

### மதுரையில் நடக்குமாம்.

தென்னிந்திய ஆலயப்பிரவேச மஹாநாடு இந்த மாதக்கடைசியில் மதுரையில் நடக்க ஏற்பாடுசெய்யப்படுகிறதாம். ஸ்ரீமதி ராமேச்வரி நேரு என்பவள் தலைமை வகிப்பாராம். ஹரிஜன ஸேவா ஸங்கமே இந்த மஹாநாடு கூட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

## மத்ய மாகாணத்தில் ஆலயப்பிரவேச சட்டம்.

மத்ய மாகாணச்சட்ட ஸபையில் ஆலயப் பிரவேச மசோதா ஒன்று கொண்டு வரப்பட்டு பொது ஜன அபிப்பிராயம் அறிவதற்காக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## வங்காள ஹிந்துகளுக்கு அநீதி!

வங்காளத்தில் ஏற்கனவே மஹம்மதியர் ஜனத்தொகை அதிகமென்ற வியாஜம்கொண்டு 100க்கு 60 வீதம் அந்த வகுப்பினருக்கு உத்யோகம் முதலிய சலுகைகள் ஏற்பட்டு ஹிந்துக்களின் பாத்யம் பறிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது கல்கத்தா கார்ப்பரேஷனில் ஹிந்துக்களுக்கு மைனாரிடி ஸ்தானமும், முஸ்லீம்களுக்கு மெஜாரிடி ஸ்தானமும் ஏற்படும்படி சட்டம் செய்யப்படுகிறது. தவிர தீண்டாத வகுப்பாருக்கு புனா ஒப்பந்த விரோதமாக தனித்தொகுதி ஏற்படுத்தவும் முயற்சி நடக்கிறது.

இவைகளை எதிர்த்து ஹிந்துக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஹிந்து மந்திரிகளின் ராஜிநாமா பிரஸ்தாபமும் நடக்கிறது.

## உபாத்யாயர்கள் நியமனம்.

### பரிக்ஷை நடத்த ஏற்பாடு?

பள்ளிக்கூட உபாத்யாயர்களை நியமிக்க இனிமேல் ஒருவித போட்டி பரிக்ஷை நடத்த உத்தேசமிருப்பதாயும், அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டால் தான் பக்ஷபாதமில்லாமலிருக்குமென்றும் கல்வி மந்திரி திருப்பூரில் பேசினார்.

## மசூதிக்கு ஸமீபம் சாராயக்கடை.

### திருநெல்வேலியில் ஆக்ஷேபம்.

திருநெல்வேலியில் ஒரு மசூதிக்குக்கருகில் சாராயக்கடையை வைக்க கவர்ன்மெண்டார் நிச்சயித்திருந்ததை எதிர்த்து முஸ்லீம்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஜில்லாகலெக்டர் இதில் கவனம் செலுத்தி சாராயக்கடை வைப்பதை நிறுத்தி விட்டாராம். ஹிந்துக்களுக்கும் இந்த மாதிரி உணர்ச்சி உண்டாகுமா?

## ராஜ்கோட் நிலைமை.

### காந்திஜி தீவ்ர வழியில் இறங்குவார்.

சீர்திருத்தக்கமிட்டி வேலை ஆரம்பிக்க அரசர் தடை செய்து வருகிறார். முஸ்லீம்கள், தீண்டாதார் முதலிய வகுப்புக்காரர்களை அவர் கிளப்பி விட்டு தடை உண்டு பண்ணியிருக்கிறார். காந்திஜி, ரெஸிடெண்டுடன் மறுபடி கடிதப்போக்கு வரத்து நடத்துகிறார். ராஜி ஏற்படும் அறிகுறி ஒன்றும் இல்லை. வீரவல்லாவுடன் காந்திஜி நடத்திய ஸமரஸப்பேச்சு முறிந்து விட்டது.

காந்திஜி கல்கத்தா போய் விட்டுத்திரும்பியவுடன் ராஜ்கோட்டில் தீவ்ர வழியில் இறங்குவாராம்?

## ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஆசார்யாள்.

ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் சங்கர ஜயந்தி உத்ஸவத்தை முன்னிட்டு காலடிக்கு விஜயமாகியிருக்கிறார்கள். வரும்போது கோயமுத்தூர் முதலிய இடங்களில் விசேஷ உபசரிப்பு நடந்தது.

காலடிக்கு ஸ்ரீமத் ஆசார்யர் விஜயம்செய்ததும், திருவாங்கூர் திவான் ஸர். ஸி. பி. ராமஸாமி அய்யர் அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளை திருவாங்கூர் அரசர் சார்பாக வரவேற்று விசேஷ உபசாரம் நடத்தினர்.

ஸ்ரீ ஸ்வாமிகள் சில மாதம் காலடியில் தங்கியிருப்பார்கள்.

ஒரு நிருபர்.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.

மேன்மையான தன்மை படைத்தது

ஸைன்டிபிக்
டி.டி.
மிஸ்கி பெருங்காயம்

இரஸாயன தத்துவப்படி

இநிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)

இரத்த புஷ்டியை வளர்க்கிறது,

— அத்துடன் —

அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!

அஜீரணத்தை அகற்றுகின்றது!!

வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

விலை ரூ. 1—14—0. பவுண்டு.

பல்வியாதிகள்கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## ஆர்யதர்மம் பத்திரிகையின் பரிஷ்காரம்

(ஒரு அபிமானி)

ஸநாதனத்தின் ரக்ஷகனாக விளங்கிவரும் நமது ஆர்யதர்மம் பத்திரிகையைச் சிற் சில விஷயங்களில் பரிஷ்கரித்து இன்னும் உயர்ந்த நிலையில் நடத்தவேண்டுமென்ற அவா எங்கும் தோன்றியிருக்கிறது. இந்த எண்ணத்தை பத்திரிகை நிர்வாஹிகளோ, பத்திராதிபரோ ஏற்கமாட்டார்களென்று நினைக்க நியாயமில்லை. ஸரியானதும் ஸாத்யமானதுமான ஆலோசனை எதுவாயிருந்தாலும் அதை அவர்கள் கவனிக்கக் கூடியவர்களென்றே நாம் அறிந்துள்ளோம். ஆயினும் பரிஷ்காரம் செய்யவேண்டுமென்று மட்டும் வெளி மனிதர்கள் சொல்லுவதுடன் நிற்காமல் அது ஸம்பந்தமாகக் குறிப்பிட்ட ஆலோசனைகளையும் வெளியிடவேண்டும். ஸநாதனிகளுக்குப் பத்திரிகை கிடையாதென்ற குறையை ஆர்ய தர்மம் நீக்கியிருக்கிறது. ஆதலால் பத்திரிகையை நல்ல வழியில் உபயோகித்துக் கொண்டு உதவி செய்யவேண்டியது வெளியாரின் கடமை வெளியாருக்கும் அதில் அதிக ஸம்பந்தமுண்டு.

லௌகிக, வைதிக பிரமுகர்களும், வித்யார்த்திகளும், மற்றவர்களும் தற்கால நிலைமைக்கேற்றவாறு தர்ம ஸம்பந்தமாகவும், வேறு முக்ய விஷயங்களைப்பற்றியும் நல்ல ஆராய்ச்சியுடன் சிறந்த கட்டுரைகளை எழுதியனுப்பி உதவி செய்வதன் மூலமாகவே பத்திரிகையைப் பரிஷ்கரிக்கமுடியும். ஆகையால் உயர்ந்த வியாஸங்களை எழுதியனுப்பி உதவ வேண்டியது முதல் கார்யம்.

காலணாவுக்கும், அரையணாவுக்கும் பல பக்கங்களுள்ள தினசரிப் பத்திரிகைகள் கணக்கற்ற ஸமாசாரங்களுடன் கிடைக்குமின்றுளில் "ஆர்யதர்மத்தில் என்ன இருக்கிறது" என்ற குறைச் சொல் ஏற்படுவது ஸாதாரணமானது. ஆனால் இப்படிப் பேசுவோருக்கு நாம் பதில் சொல்லாமலிருப்பது நியாயமில்லை. "மற்றப் பத்திரிகைகளில் என்ன இருக்கிறது, என்று நாம் அவர்களை திரும்பிக் கேட்கவேண்டியிருக்கிறது. ஆங்கிலம், தமிழ் தினசரிகளில் தினமும் எல்லாப் பக்கங்களிலும் வெளியாகும் விஷயங்கள் எல்லாமே எல்லோருக்கும், எல்லாஸமயத்திலும் உபயோகப் படக்கூடியனவா யிருக்கிறதா வென்பதை அவர்கள் கவனிக்க வேணும். தற்போது வெளிவரும் ஆங்கில, தமிழ் தினசரிகளில் வெளிவரும் எல்லா விஷயத்தையும் யாவரும் படிப்பது கிடையாதென்பது நிர் விவாதமான விஷயம், எந்தப் பத்திரிகையிலும் இம்மாதிரி குறை உண்டென்பதே உண்மை.

தினசரிகளில் வெளிவரும் கணக்கற்ற ஸமாசாரங்களில் நம் தேசத்தினருக்கு உபயோகப்படக் கூடியவை எவ்வளவு? அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும், சைனா ஜப்பான் போன்ற விடங்களிலும் நடக்கும் அல்பமான, அவசிய மற்ற ஸமாசாரங்களையெல்லாம் நம்மவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமா? அவைகளால் நம்மவர்கள் அடையும் ஸௌக்கிய மென்ன? பத்திரிகை யென்றால் அதில் எல்லா விஷயமும் கலந்து தான் இருக்கும். படிப்பவர் தமது ருசிக்கேற்றபடி ஸமாசாரம் தேடப் படுவது வழக்கம். தமக்குப் பிடித்த ஒரு ஸமாசாரத்தைப் பார்க்கவே பெரும்பாலோர் பத்திரிகைகளைப் பார்க்கின்றனர். அதைப் பார்த்து விட்டு "பேப்பரில் ஒன்று மில்லையே" என்று மடித்துக் கீழே போட்டு விடுவது வழக்கமா யிருக்கிறது.

ஆர்யதர்மத்தில் வெளியாகும் விஷயங்களைப்பற்றி பலருக்குப் பலவித அபிப்ராயமிருக்கலாம், வெவ்வேறு ருசியுள்ள பற்பல அபிமானிகளைப் பொறுத்துத்தான் அவைகளின் உபயோகத்தை நிர்ணயிக்கவேணும்.

வாரப்பத்திரிகையில் நியூஸ் அல்லது ஸமாசாரங்கள் எதற்கு என்று சிலர் கேட்கிறார்கள். தினமும் காலணா, அரையணாப் பத்திரிகைகள்மூலம் உலகஸமாசாரங்களைப் பாமரர் முதல் அன்றுடம் அறிந்துகொள்ளும் போது வாரப்பத்திரிகையில் வரும் ஸமாசாரங்கள் பழையனவாகவேயிருக்குமென்பது நிஜமே.

ஸ்ரீமான் ஸோமதேவசர்மா கூட சில வாரங்களுக்குமுன் தமது குறிப்பில் எழுதுகையில், ஆர்யதர்மத்தில் ஸமாசாரங்கள் போடுவதை நிறுத்திவிடலாமென்று கூறியிருக்கிறார். இதற்குமுன் ஒரு தடவையில் இவர் எழுதும்போது நமது பத்திரிகையில் உள்நாட்டு விஷயங்களுடன் வெளிநாட்டு விஷயங்களும் பிரசுரிக்கப்படவேண்டுமென்று கூறியிருப்பதாக நமக்கு ஞாபகம். உண்மையில் வாரப்பத்திரிகையில்கூட சில முக்ய ஸமாசாரங்கள் வரவேண்டியது அவசியமென்று தோன்றுகிறது. கிராமாந்திரங்கள் பலவற்றிலுள்ளவர்கள் நமது பத்திரிகையைமட்டும் படிப்பவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு அவச்யமான நியூஸ்கள் தெரிய வேறு வழி இருக்காது. மேலும் அநேக நியூஸ்கள் நமக்கு, அதாவது ஸநாதனப் பிரசாரம் செய்கிறவர்களுக்குப் பிற்காலத்தில் உபயோகப்படும்படி ரிகார்டு செய்துவைக்கப்படவேண்டியது அவச்யமாகிறது. ஆர்யதர்மத்தைப் புரட்டிப்பார்த்தால் ஏற்கனவே நடந்த முக்ய விஷயங்கள் கிடைக்கக்கூடும். அவைகளை வைத்துக்கொண்டு பிரசாரகர்கள் பேசவும் எழுதவும் ஸௌகர்யமுண்டு.

ஆதலால் அவச்யமான சிற்சில நியூஸ்கள் நமது பத்திரிகையில் வரவேண்டியது அவச்யமென்றே நினைக்கிறோம்.

ஸநாதன தர்மத்தைப்பற்றி நமது பத்திரிகையில் அதிக வியாஸங்கள் வெளிவரவேண்டியது மிக்க அவச்யமே. ஆனால் அவைகள் வெறும் கர்நாடக ரீதியில் இல்லாமல் ஆராய்ச்சி முறையில் இருப்பது தற்காலத்திற்கு ஏற்றது. ஆராய்ச்சி முறையில் அவைகளை எழுத இக்காலத்தில் நல்ல ஸௌகர்யங்களும் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன.

நமது ஆசாரங்களுக்கும், ஆயுர்வேத முறைக்கும் ஒற்றுமையிருப்பதையும் நன்கு விளக்கி வியாஸம் பல எழுதலாம். ஜ்யோதிஷம், வைத்யம், ஸங்கீதம், போன்ற வைதிக கலைகளைப்பற்றியும் எழுதலாம். தர்ம ஸம்பந்தமான கதைகள், ஸம்பாஷணை, நாடகம் முதலியவைகளும் வெளியிடலாம். அந்த விஷயங்களில் நிபுணர்களா யிருப்பவர்கள் பிரயோஜனத்தை எதிர்பாராமல் பொது ஜன உபகார புத்தி கொண்டு நம் பத்திரிகைக்கு மேற்கண்ட வழியில் வியாஸங்கள் எழுதியனுப்புவது அவச்யம். அப்படிச்செய்யாமல் குறை மட்டும் கூறுவது உசிதமாயிராது. மேலும் உயர்ந்த கிரந்தங்களின் மொழி பெயர்ப்பும், மஹான்களைப்பற்றியவிஷயமும்எழுதிக்கொடுத்து உபகரிக்கலாம்.

அந்த மாதிரி உபகாரம் செய்ய வேண்டுமென்று அபிஜ்ஞர்களை நாம் வேண்டுகிறோம்.

ஆர்ய தர்மமானது தர்ம விஷயமாக அபிப்பிராயம் சொல்லுவதுடன் நிற்காமல் ராஜாங்க நிர் வாஹம் காங்கிரஸ் போன்ற ராஜ்ய விஷயங்களிலும் திட்டமான கொள்கையைக் கொண்டு அபிப்பிராயம் வெளியிட வேண்டியது அவசியம்.

புராண பிரவசன ஸம்பந்தமான நியூஸ்கள் நமக்கு அவச்யமானவைகளே. தர்ம பிரசார உபாயங்களில் புராண ப்ரவசனம் முதலாமானது தான். ஆயினும் அதன் ஸமாசாரங்களை ரொம்பவும் நீளமாக்காமல் கூடிய வரையில் சுருக்கி எழுதியனுப்பி உபகரிக்கலாம்.

தர்மசாஸ்திர ஸந்தேகங்களைப்பற்றிய விஷயம் நமது பத்திரிகையில் ரொம்பவருகிறது. ஆயினும் அந்த ஸந்தேகங்களுக்குப் பெரும்பாலும் பதில் வருவதில்லை. இதிலிருந்து தர்மசாஸ்திரக்ஞர்கள் கண்களில் ஆர்யதர்மம் விழுவதில்லையோவென நினைக்கவேண்டியிருக்கிறது. இக்குறையை பத்திரிகை நிர்வாஹிகள் நிவர்த்திக்கவேண்டியது அவச்யம். வெகு சிறியதாயும், வெகு ஸாதாரணமானதுமான ஸந்தேஹத்தைக்கூடப் பத்திரிகைக்கு எழுதியனுப்பிவிடாமல் அங்கங்குள்ள பெரியோர்கள்மூலம் நிவர்த்தித்துக் கொண்டுவிடுவதே மேல். அதிகம் விவாதத்திற்கு இடமானதும், உண்மையில் முக்யமுள்ள விஷயங்களையுமே பத்திரிகைக்கு அனுப்பி ஸந்தேஹம் தீர்த்துக்கொள்வது விரும்பத்தக்கது.

மேலும் ஸந்தேஹம் கேட்பவர்கள், பதில் சொல்லுவோருக்கு தபால் சார்ஜ் முதலிய அஸௌகர்யம் நேராமல் செய்துகொடுத்தால் பதிலும் சீக்கிரத்தில் கிடைக்க இடமுண்டாகும்.

நமது பத்திரிகையிலேயே தர்மசாஸ்திர விசாரத்திற்கென்று சிறிய இடம் ஒதுக்கப் பட்டு அதில் பல அபூர்வ விஷயங்கள் விவரிப்பது நலமென்று நினைக்கிறோம்.

பத்திராதிபர் தலையங்கத்திலும் குறிப்புகளிலும் பத்திரிகையின் கொள்கைக்கேற்றபடி அப்போதைக்கப்போது சேரும் ஸம்பவங்களைப்பற்றி கண்டனமோ, ஆதரவோ காட்டி எழுதப்படுகிறதானபடியால் மற்ற பக்கங்களில் வெளியார்கள் தர்ம ஸம்பந்தமாயும், புராணக் கதை ஸம்பந்தமாயும், வியாஸங்களையும், ஸம்பாஷணைகளையும் வேறுபலவற்றையும் எழுதி பத்திரிகையை இன்னும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வர முயற்சிப்பது அவச்யம்.

தற்போது நம் பத்திரிகை நடந்து வரும் ரீதியிலேயே இதை இன்னும் பரிஷ்கரிக்க நாம் சொன்ன மேற்கண்ட யோஜனைகளை அபிமானிகள் ஆதரித்து அபிப்பிராயம் வெளியிடுவதுடன் உபகாரம் செய்யவும் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

---


### தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியாவசியம்.

விலை ரூ 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.

தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்,




ஸ்ரீ காமாக்ஷ்யைநம:

# மூகபஞ்சசதீ

## மந்தஸ்மித சதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

35 த்வத்மந்த ஸ்மிதகந்தள ஸ்ய நியதம் காமாக்ஷி ! [சங்காமஹே
பிம்ப: கச்சன நூதன: ப்ரசலிதோ நைசாகர: சீகர:
கிஞ்ச க்ஷீரபயோ நிதி: ப்ரதிநிதி: ஸ்வர்வாஹிநீ
வீசிகா நிம்போகோபி விடம்ப ஏவ குஹநா மல்லீ
[மதல்லீருச: ||

காமாக்ஷி! காமாக்ஷியே நைசாகர:- சந்திரனுடைய பிம்ப:- உருவமானது த்வத்மந்த ஸ்மித கந்தளஸ்ய-உனது புன் சிரிப்பின் ஸமூஹத்தினுடைய கச்சன ஒரு நூதந:- புதிய சீகர: திவிலையாக ப்ரசலித:- வெளிவந்திருக்கிறது என்று, நியதம் சங்காமஹே-நிச்சயமாக நினைக்கிறோம்.

கிஞ்ச-மேலும் க்ஷீர பயோநிதி:- பால் ஸமுத்ரமும் பிரதிநிதி:- (உனது புன் சிரிப்புக்கு) பதிலாகாது. ஸ்வர்வாஹிநீ நிம்போகோபி. தேவகங்கையின் அலையின் அழகும். விடம்ப ஏவ. பரிஹாஸ்யமானதே. மல்லீ மதல்லீருச:- உயர்ந்தமல்லிகைப் பூவின் காந்தியும். குஹநா - ஏமாற்ற காமானதே

36 துஷ்கர்மார்க்க நிலார்க்க கர்க்கசமஹ: ஸம்பர்க்
கதப்தம் |
மிளத்பங்கம் சங்கர வல்லபே மமந: காமாக்ஷி
காஞ்சீச்வரி |
அம்ப! தவத் ம்ருதுளஸ்மிதாம்ருதரஸே மங்க்த்
வா விதூய வ்யதாம் |
ஆனந்தோதய ஸௌத ச்ருங்க பதவீமாரோடுமா
காங்க்ஷதி||

சங்கர வல்லபே- சங்கர பத்நியும். காஞ்சீச்வரி! காஞ்சி நகர் யஜமானியும். அம்ப- தாயுமான. காமாக்ஷியே, துஷ்கர்மார்க்க நிலார்க்க கர்க்க சமஹ: ஸம்பர்க்க தப்தம்—தீவினையென்றும் ஸூர்யனின் ஸ்வபாவமான க்ரூரமுள்ள கிரணங்களின் ஸம்பந்தத்தால் சூடானதாயும், மிளத்பங்கம்—அழுக்குள்ளதாயுமிருக்கிற, மம மந:—என்னுடைய மனதானது. த்வத்ம்ருதுளஸ்மிதாம்ருதரஸே—உனது புன்சிரிப்பென்ற அம்ருத ரஸத்தில், மங்க்த்வா, முழுகி, வ்யதாம் சிரமத்தை. விதூய— உதறி பெறிந்து ஆனந்தோதய ஸௌதச்ருங்கபதவீம்— பிரம்மானந்தமாகிற மாடியின் உயர்ந்த ஸ்தானத்தை ஆரோடும்— ஏறுவதற்கு. ஆகாங்க்ஷதி— ஆசைப்படுகிறது.

37 நம்ராணாம் நகராஜ சேகரஸுதே நாகாலயநாம்
[புர:
காமாக்ஷி த்வரயா விபத்ப்ரசமனே காருண்யதாரா:
[கிரந் |
ஆகர்சந்த மனுக்ரஹம் ப்ரகடயந் ஆனந்த
[பீஜாநிதே
நாஸீரே ம்ருது ஹாஸ ஏவ தநுதே நாதே!
[ஸுதா சீதள: ||

நகராஜசேகர ஸுதே - பர்வத சிரேஷ்டனை ஹிமவானின் குமாரியும், நாதே — உலகத்திற்கு யஜமானியுமான —காமாக்ஷி-காமாக்ஷியே- புர:-உன் முன்னால். நம்ராணாம்-நமஸ்கரித்து நிற்கிற. நாகாலயாநாம்-தேவர்களுடைய. விபத் ப்ரசமனே-ஆபத்தை நீக்குவதில்-த்வரயா வேகமாக. காருண்யதாரா:-கருணாரஸப் பெருக்கைகிரன்-வர்ஷித்துக்கொண்டு. ஆகச்சந்தம் ஏற்படப்போகிற. அநுக்ரஹம்-அநுக்ரஹத்தை, ப்ரகடயன்-வெளிப்படுத்துகிற. தே-உனது ஸுதா சீதள:- அம்ருதம் போல் குளிர்ந்த. ம்ருதுஹாஸ: ஏவ-அழகிய புன் சிரிப்பே. நாஸீரே முன்னணியில் ஆனந்த பீஜாநி-பிர்ம்மானந்தத்தின் வித்துக்களை தநுதே-விருஷ்டிக்கிறது.

38 காமாக்ஷி! ப்ரதமான விப்ரம நிதி: கந்தர்ப்ப தர்ப்
[பப்ரஸூ:
முக்தஸ்தே ம்ருதுஹாஸ ஏவ கிரிஜே முஷ்ணாது
மே கில்பிஷம் |
யம் த்ரஷ்டும் விஹிதே கரக்ரஹ உமே! சம்புஸ்த்
[ரபா மீலனம்
ஸ்மேரம் காரயதி ஸ்ம தாண்டவ வீநோதானந்
[தினா தண்டு நா |

கிரிஜே- பர்வத ராஜ குமாரியான. உமே- உமாதேவி யென்ற பெயருள்ள. காமாக்ஷி- காமாக்ஷியே. விஹிதே- ஏற்படுத்தப்பட்ட கர்க்ரஹே- கல்யாண காலத்தில். த்ரபாமீலிதம்— வெட்கத்தால் மூடியிருந்த. யம்-எந்த. ஸ்மேரம்—மனோஜ்ஞமான புன்சிரிப்பை. த்ரஷ்டும்— பார்க்க எண்ணத்துடன். சம்பு:- ஈச்வரன். தாண்டவ விநோதானந்தினா— நடனமாடுவதில் மிகவும் பிரியமுள்ளவனை. தண்டுனா— நந்திகேச்வரனைக்கொண்டு. காரயதிஸ்ம— உண்டாக்கினாரோ. ஸ: அப்படிப்பட்ட. தே- உமது. ப்ரதமான விப்ரமநிதி:— அதிக அழகு நிறைந்த. கந்தர்ப்ப தர்ப்ப ப்ரஸூ:* மன்மதனுக்கு கொழுப்பை கொடுக்கிறதும். முக்த.— அழகிய. ம்ருதுஹாஸ: புன் சிரிப்பானது. மே- என்னுடைய கில்பிஷம்— பாபத்தை முஷ்ணாது போக்கடிக்கட்டும்.

39 க்ஷுண்ணம்கேநசிதேவ தீரமனஸா குத்ராபிநாநா
ஜநை: |
கர்மக்ரந்தி நியந்த்ரிதைர ஸுலபம் காமாக்ஷி! ஸா
மான்யத: |
முக்தைர் த்ருஷ்டுமசக்யமேவ மனஸா மூடஸ்ய
மே சக்ஷுஷோ:
மார்க்கம் தர்சயது ப்ரதீப இவதே மந்தஸ்மித
ஸ்ரீரியம்||

காமாக்ஷி! காமாக்ஷியே குத்ராபி- ஏதோ ஒரு ஸமயத்தில் கேநசித்- யாரோ ஒரு தீரமனஸா- தைர்யசாலியே. க்ஷுண்ணம் பரிசயம் செய்யப்பட்டதாயும். கர்மக்ரந்தி நியந்த்ரிதை:-கர்மமென்றபாசத்தினால் கட்டப்பட்ட நாநாஜனை: - ஸாதாரண ஜனங்களால். ஸாமன்யத:-ஸுலபமாக. அஸுலபம்-அடையமுடியாததும். முக்தை: மூடர்களால் மனஸா - மனதினாலும். த்ரஷ்டும் - அறிவதற்கு முடியாததாயுமிருக்கிற, மார்க்கம் மார்க்கத்தை. தே உனது. இயம்- இந்த. மந்தஸ்மிதச்ரீ:- புன்சிரிப்பின் காந்தியானது, ப்ரதீப இவ தீபம்போல் மூடஸ்ய-மூடனான மே எனது சக்ஷுஷோ:-கண்களுக்கு. தர்சயது காண்பிக்கட்டும்.

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பிரமாதி-ஸு சித்திரை-மீ 14௳

## மத நடுநிலைமைக் கொள்கை.

பிரஜைகளின் மத ஸ்வதந்திரத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக் கூடாதென்ற பெரிய தத்வமானது நியாய ரீதியில் நடைபெறும் எந்த தேச நிர்வாகத்திலும் இருந்து வருகிறது. இந்தியாவிலும், கிறிஸ்தவர், மகமதியர் போன்ற மதஸ்தர்கள் விஷயத்தில் இந்தக் கொள்கை வெகு கண்டிப்பாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சட்டரீதியான பாதுகாப்பும் அந்த மதங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், புதிதாக எவ்வித ராஜ்யசீர்திருத்தம் செய்யப்பட்டாலும் அந்த மதங்கள் விஷயத்தில் அதிக ஜாக்கிரதை காட்டுவதும் வழக்கமாயிருந்து வருகிறது. இதற்கு அந்த மதஸ்தர்களின் உறுதியும், மத சிரத்தையும் பெரிதும் காரணமாகும். காங்கிரஸ்காரர் போன்றவர்களும், ஸமூஹசீர்திருத்த வாதிகளும் அந்த மதஸ்தர் வழிக்குப் போவதில்லை. அவர்களுடைய மதங்களுக்குப்பாதுகாப்பளிப்பதாக எந்தஸமயத்திலும் உறுதி கொடுத்து வருகிறார்கள். காசியில் காங்கிரஸ் செய்த தீர்மானமும் முஸ்லீம்களையே முக்யமாகக் கருதி ஏற்பட்டதாகும். இவ்வாறு இருக்கையில் ஹிந்துக்களின் மத விஷயத்தில் தான் பெரிய ஸங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ஸமூஹசீர்திருத்த வாதிகளும் ஸர்க்காரும் எவ்வித அச்சமுமின்றி ஹிந்து மதத்தை மனம் போனவாறு சீர்குலைக்கச் சட்ட மூலமாக வழி தேடி வருகிறார்கள்.

மாகாண ஸ்வய ஆக்ஷியேற்பட்ட பிறகு இந்த அபாயம் அதிகரித்து விட்டது. இப்போது அநேகமாக காங்கிரஸ் நிர்வாஹம் நடக்கும் எல்லா மாகாணங்களும் மத ஸம்பந்தமான சட்டத்தைச்செய்ய முன் வந்திருக்கின்றன.

மாகாண ஸ்வய ஆக்ஷி திட்டம் ஏற்பட்ட காலத்தில் மத விஷயமாக இருந்து வந்த ஸ்வல்ப பந்தோபஸ்தும் எடுக்கப்பட்டு விட்டது.

இந்த நிலைமையில் தட்டுத்தடையின்றி மத விஷயத்தில் சட்டம் செய்வது அதிகரிப்பது ஆச்சர்யமல்ல. இவ்விஷயமாக ஏதாவது ஒரு தக்க நியமத்தை ஏற்படுத்திக் கொள்ள நாம் கிளர்ச்சி செய்ய வேண்டியது வெகு அவசரமாயுள்ளது.

டாக்டர் தேசமுக் விவாஹரத்து மசோதா விஷயமாக இந்தியா கவர்ன்மெண்ட் சட்ட மெம்பர் பேசியபோது நடுநிலைமை விஷயத்தில் ஸர்க்கார் இன்னும் நியாயமான கொள்கையையே அநுசரித்து வருவதாக பேசினார். மதஸம்பந்தமுள்ள விஷயங்களில் மதநடு நிலைமைக் கொள்கையை தாங்கள் மீறவில்லையென்றும் அவர் தெளிவாகக் கூறினார். ஆனால் காரியத்தில் இது முற்றிலும் விபரீதமாகவே இருந்து வருகிறது. ஒழுக்க விரோதமான கார்யங்களைத் தடுக்கும் விஷயத்திலேயே இந்தியா கவர்ன்மெண்டார் மதநடு நிலைமைக் கொள்கையை மீறுகிறார்களென்று சட்ட மெம்பர் சொன்னார்.

சாரதாச்சட்டமானது முற்றிலும் மதஸம்பந்தமானதென்பதை காந்திஜியும், வேறு பல சீர்திருத்த வாதிகளும் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அந்தச் சட்ட மூலம் மதத்தைச் சீர்குலைக்க இந்தியா கவர்ன்மெண்டார் பின் வாங்கவில்லை. பால்ய விவாஹத்தில் ஒழுக்க விரோதமான அம்சமிருப்பதாக கவர்ன்மெண்டார் நினைத்தால் அதை விட மதத்தில் பிரவேசிக்கும் கொடுமை வேறு கிடையாது. மதக்கட்டளையின்படி செய்யப்படும் ஒரு கார்யமானது ஒழுக்க விரோதமென்று தீர்ப்புக் கூற வெளி மனிதர் எவருக்கும் சிறிதும் அதிகாரம் கிடையாது. அப்படி நினைத்தால் அதுவே மதநடு நிலைமையை மீறுவதாகாதா? அந்தந்த மதத்வங்களை அந்தந்த மதஸ்தர்கள் முடிவு செய்து கொள்ளும்படி விட்டு விடுவதல்லவோ மதநடு நிலைமையாகும்?

இந்தியா கவர்ன்மெண்டார் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லை யென்பது உண்மையானால் சாரதாச்சட்டத்தைச் செய்த குற்றத்திலிருந்து அவர்கள் தப்ப எவ்வித ஸமாதானமும் கிடையாது,

மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண ஸர்க்கார் செய்தனுப்பும் ஆலயப்பிரவேசச்சட்டம் போன்றவைகளுக்கு எவ்வித தடையின்றியும் ஸம்மதியளித்து வருகிறார்கள். இதுமதத்தில் பிரவேசிப்பதில்லையென்ற கொள்கைக்கு ஏற்றதா? ராஜப்பிரதிநிதி தமது விசேஷ அதிகாரத்தை உபயோகிப்பது ஸாதாரணமாயிருந்து வருகிறது. இந்தியா சட்ட ஸபையில் மெஜாரிடி மெம்பர்கள் நிறைவேற்றிய முக்ய விஷயங்களையெல்லாம் வைஸ்ராய் தமது விசேஷாதிகாரத்தால் ரத்து செய்து வருவது நித்யஸம்பவமாயிருக்கிறது. அப்படியிருந்தும் மாகாணச்சட்ட ஸபைகள் வோட்டு பலத்தால் கம்முடித்தனமாக நிறைவேற்றி யனுப்பும் ஆலயப்பிரவேச சட்டம் போன்றவைகளுக்கு வைஸ்ராய் ஏன் தமது விசேஷாதிகாரத்தை உபயோகிக்கக்கூடாது? ராஜ்ய நெருக்கடியை உண்டு பண்ணிக்கொள்ள அவர் பயந்தாரானால் இந்தியாவில் சட்டரீதியான ஆக்ஷி நடப்பதாக சொல்லிக்கொள்ள எவ்வித இடமுமிருக்காது. ஒரு விஷயம் சட்ட விரோதமென்பது தெளிவாகிவிட்டால் அதைத்தடுக்கவேண்டியது வைஸ்ராய் கடமையல்லவா? ஆகையால் இந்தியா கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்று ஸ்ரீமான் ஸர்க்கார் பெருமை பேசியது அர்த்தமற்றதாயிருக்கிறது.

கவர்ன்மெண்டார் ராஜ்யக் காற்று எந்த திசையில் இழுக்கிறதோ அவ்வழியில்ச்செல்லவேண்டியவர்களென்பதை நாம் அறிவோம் ஆகையால் ஸமயோசித ஸால்ஜாப்புகளைச் சொல்லி அவர்கள் தப்பித்துக்கொண்டு வருகிறார்கள். இதனால் மதாபிமானிகளின் மனம் புண்ணாகி நாளுக்கு நாள் பெரிய வருத்தம் பெருகிவருகிறது, ஆயினும் மதாபிமானிகளான ஹிந்துக்கள் மற்றமதஸ்தர்களைப்போல் ஸங்கமும் உறுதியும் காட்டாததே நடுநிலைமை கெடுவதற்குக்காரணமாகிறது. ஆகலால் மடாதிபதிகளான மதாசார்ய ஸ்தானங்களும், மற்றமதஸ்தாபனங்களும் தீவ்ர முயற்சி எடுத்து கவர்ன்மெண்டை நெருக்காத பக்ஷத்தில், விவாஹ ரத்து, ஆலயப்பிரவேசம், கலப்பு விவாஹம், ஸ்திரீகள் விஷயம் போன்றவைகளில் நாம் மீளாத துன்பத்தை அடையவேண்டியவர்களே. மஹம்மதியர் போன்றவர்கள் நம் கண் முன்னே ஸகல ஸ்வாதந்திரியத்துடன் தங்கள் மத தர்மங்களை அநுஷ்டித்து வருகையில் நாம் மட்டும், ஆதல் ரெட்டியும், ரங்காசாரியார், தேசமுகரும், மீனாக்ஷிஸுந்தரமும், நேருவும் போன்றவர்களும் வகுக்கும் வழியிலேயே மதா சாரங்களை அநுஷ்டிக்க வேண்டுமென்ற வெட்கக் கேடான நிலைமையிலிருப்பதற்கு நாமே காரணமாயிருக்கிறோம்.

## குறிப்புகள்.

### மந்திரிகளை ஸாப்ரு கண்டிக்கிறார்.

காங்கிரஸ் மந்திரி ஸபைகளின் வேலைத் திட்டங்களை, முக்யமாக மதுவிலக்கு, புதிய வரி, முதலியவைகளை கனம் ஸாப்ரு பலமாகக் கண்டிக்கிறார் ஸ்ரீமான் ஸாப்ரு இந்தியாவில் எல்லாவிதத்திலும் உயர்ந்த அந்தஸ்திலுள்ள பிரபல ராஜ்ய வாதியென்பதில் ஸந்தேஹமில்லை. சிலரைப்போல் எதையும் சுயபலம் கருதியோ, பக்ஷபாதமாகவோ அவஸரப்பட்டு கண்டிக்கக் கூடியவரல்ல. அத்தகையவர் காங்கிரஸ் மந்திரிகளுக்கு எச்சரிக்கை செய்திருப்பது கவனிக்கத்தக்கது.

முக்யமாக மதுவிலக்குக் கொள்கையையும், அதற்காகப் புதிய வரி விதிப்பதையும் அவர் பலமாக எதிர்க்கிறார். இப்போது காங்கிரஸ் மாகாணங்கள் எல்லா வற்றிலும் கட்டுப் பாடாகப் புதிய வரிகள் மூலம் ஜனங்களுக்கு அசௌகர்யம் ஏற்பட்டு வருவதும், அதற்காக ஜனங்கள் கண்டனம் செய்வதும் வெகுவாகிவிட்டது. மாகாணஸ்வய ஆக்ஷி ஏற்பட்டபின் செலவு அதிகமும், வருமானக் குறைவும் ஏற்பட்டு மந்திரிகள் பணத்திற்குத் திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பது ஒரு புறமிருக்க மந்திரிகளின் கொள்கை காரணமாயும் பணத்திண்டாட்டம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மதுவின்மூலம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏராளமான வருமானம் கிடைத்துவருகிறது. காங்கிரஸின் மதுவிலக்குக் கொள்கை காரணமாக இந்தப்பெரிய வருமானம் குறைந்துவருகிறது அடியோடு அந்த வருமானம் போய்விடவும் நேரும். இந்த வகையில் கோடிக்கணக்கான பணத்திற்கு வகைவேண்டி மந்திரிகள் புதிய வரிகளை விதிக்க முன்வந்திருக்கிறார்கள். ஸ்ரீமான் ஸாப்ரு மதுவிலக்குக் கொள்கையை பலமாகத் தாக்குகிறார். அது வெற்றிபெருதென்கிறார். வெற்றி பெற்றாலும் மாகாணங்கள் சாச்வதமாக தரித்திர நிலைமைக்கு வந்துவிடுமென்கிறார் மேலும் குடிப்பவர்களுக்கு ஸௌகர்யம் செய்து கொடுப்பதற்காக இதர ஜனங்கள்மீது வரி விதிப்பது அநியாயமென்கிறார். இது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோலிருக்கிறதென்கிறார். குடியர்களைக் காப்பாற்ற இதரர்கள் ஏன் வரி கொடுக்கவேண்டுமென்ற கேள்வியை ஸர் கே.வி. ரெட்டி போன்றவர்களும் சொல்லிவருகிறார்கள். முக்யமாக, காங்கிரஸ் மந்திரிகள் மெஜாரிடி பலம் வைத்துக்கொண்டு, தாங்கள் நினைத்ததையெல்லாம் முடித்துவிடுவதாலும், பொது ஜன அபிப்பிராயத்தை திருணமாக நினைப்பதாலும் அவர்களிடம் பொதுஜனங்களுக்கு ஆதரவு மிகவும் குறைந்துவிட்டதென்றும் ஸர் ஸாப்ரு எச்சரிக்கிறார். இந்த எச்சரிக்கையில் உண்மை இல்லையா?



### கோவில் திருடன் பிடிபட்டான்.

தாலூகா போலீஸாரின் ஊக்கம்.

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம் ஏப்ரல் 27௳

கும்பகோணம் தாலூகா போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் என். நாகராஜராவ் பூவாளூர் கிராமம் (திருச்சி ஜில்லா) கிருஷ்ணமூர்த்தி அய்யரையும், மற்றும் மூவரைக் கைது செய்து இ. பி. கோ. 380, 437 பிரிவின்படி சப்-மேயிடம் சார்ஜ்ஷீட் செய்திருக்கிறார்கள். ஷையார் தேவாலயங்களில் நுழைந்து திருடினதாகவும், சமீபத்தில் தாராசுரம் கோவிலில் திருடினதாகவும் தடயங்களுடன் கைது செய்திருப்பதாக தெரிகிறது.

### குடந்தை சு. ம. கூட்டம்,

வசைமொழி வருஷம்.

(நமது விசேஷ நிருபர்.)

கும்பகோணம், ஏப்ரல் 27௳

காந்திபார்க்கில் சுயமரியாதை கூட்டத்தில் 25௳ ஸ்ரீமான் சாமி தலைமை வகித்தார். ஸ்ரீமான் குப்தா குடந்தையில் வழக்கமாய் காங்கிரஸுக்கும், பிராம்மணர்களுக்கும், பிராமண குலத்தில் உதித்த பாபத்தினால் மந்திரி பதவியில் இருக்கும் ராஜாஜியையும் தாராளமாக வசைமொழிகளால் அபிஷேகம் செய்தார். இதுமட்டுமா? காந்திஜிக்கும் அதனில் அதிருஷ்டமில்லாதுபோகவில்லை. பலமான வசையில் காந்திஜியை விலக்க, கூட்டத்தில் சகிக்காத சிலர் கேட்டனர். இது காரணம் குழப்பம் தோன்றியது. போலீசார் வசைபை கேட்டுச் சபாதலர்களையும் வசைவள்ளல்களையும் குழப்பம் உண்டாகாதபடி தடுத்துவிட்டனர். வசைமொழிகளை பிராம்மண குலத்தார் பெறும் பாக்கியத்தை காங்கிரஸ் தேடி வைத்ததா? அல்லது சுயமரியாதையின் பெருமையில் உண்டாயிற்று?

### குடந்தை சைத்திர உற்சவம்,

மருதி தகராறு கிளப்ப முயற்சியா?

(நமது விசேஷ நிருபர்).

கும்பகோணம், ஏப்ரல் 27௳

நேற்று முன் தினம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி வழக்கம்போல் தெற்குவீதியில் எழுந்தருளியிருக்கும்போது சிறிது தகராறு மருதிக்கு முன் ஏற்பட்டதாக தெரிகிறது. இதை முற்றவிடாமல் சாமர்த்தியமாக போலீஸார் உள்பட கண்யவான்களும் தலையிட்டு தகராறு தலைகாட்டாமல் தடுக்கப்பட்டிருப்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்.

### ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமி கோயில் டிரஸ்டி ராஜீனாமா,

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம் ஏப் 27௳

ஷை ஆலயத்தின் டிரஸ்டியான ஸ்ரீமான் V. விஜயராகவாசாரியார் டிரஸ்டி ஸ்தானத்தை ராஜீனாமா செய்துவிட்டார். இவர் ஸ்தானத்திற்கு ஒருவரை நியமிக்க தேவஸ்தான கமிட்டியார் 30-4-39ல்யோசித்து முடிவு செய்வார்கள்.

### குடந்தையில் சைத்திர உத்ஸவத் தேர் ஓடும்,

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம், ஏப்ரல் 27௳

இவ்வருடம் சைத்திர உத்ஸவத்தில் சித்திரை தேருக்குப் பதிலாக பெங்கல் தேரை இழுக்க ஆலய டிரஸ்டிகள் ஏற்பாடு செய்துவருகிறது புகழத்தக்கது. நம் பத்திரிகையில் குறிப்பிட்டதை டிரஸ்டிகள் கவனித்து உற்சவத்தை காலையில் சீக்கிரம் நடைத்திவருவதும் புகழத்தக்கதேயாகும்.

### குடந்தைக்கு கிரீஸ் தேச மன்னர் விஜயம்.

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம் ஏப்ரல் 27௳

இந்நகருக்கு மேன்மை தங்கிய கிரீஸ் மன்னர் பீடர் 12—5—39ல் விஜயம் செய்து முக்கிய ஆலயங்களைப் பார்ப்பார். அவருக்கு ஆலயத்தின் நகைகள், அரிய விஷயங்கள் காண்பிக்கப்படும் என்று தெரிகிறது. அரசர் ஷை 12௳ முழுமையும் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார். மே 8—5—39லிருந்து மூன்று தினங்கள் தரங்கம்பாடி காரைக்காலில் சுற்றுப்பிரயாணம் செய்வதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஊர்களிலும் கோவிலை மட்டும் பார்க்கிறரோ அல்லது துறைமுகங்களின் வசதிகளையும் சேர்த்துப்பார்ப்பாரோ என்பது சந்தேகிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தியாவில் இம்மன்னர் விஜயத்தின் மர்மம் விளங்கவில்லை. இவர் நேற்று முன்தினம் திருவண்ணாமலை ஆலயம், ஸ்ரீரமணரிஷி உள்பட பார்த்துவந்ததாக ஸமாசாரம் கிடைத்திருக்கிறது.

### மாரியம்மன் கோடாபிஷேகம்.

கும்கோணம் நாகேஸ்வரர் திருமஞ்சன வீதியில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ படைவெட்டி மாரியம்மனுக்கு பிரமாதி-ஸு சித்திரை-மீ 10௳ (23-4-39) ஞாயிற்றுக்கிழமை, வேனிற்கால வெப்பமகற்றவேண்டி அம்பிகையின் பக்தர்கள் அம்பிகைக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து கொண்டாடினார்கள். அதை முன்னிட்டு ஜனார்த்தன அச்சுக்கூடம் தொழிலாளர்கள் சமாராதனை செய்து ஷை சமாராதனையில் சுமார் 200 பேர்கள் வரையில் அன்னம் அளிக்கப்பட்டது. ஷை சமாராதனை நன்கு சிறப்புடன் நடைபெற்றது.

அம்பிகையின் பக்தர்கள்.

### பாபநாசம்தாலூகா அரசியல் மகாநாடு.

[நமது விசேஷ நிருபர்]

பாபநாசம் ஏப் 26௳

28-5-39ல் அலவந்திபுரத்தில் பாபநாசம் தாலூகா அரசியல் மகாநாட்டை கூட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வரவேற்புக் கமிட்டியின் தலைவராக ஸ்ரீமான் எ. லக்ஷ்மண ஐயர், கார்யதரிசிகளாக எ. எஸ். ரெங்கநாதாசாரியார் சிரோமணி, டி. கந்தஸாமி செட்டியார், பொக்கிஷதார் டி. கே. தொரைஸாமி செட்டியார். இம்மகாநாட்டில் சநாதன தர்மத்திற்கு சாதகமான தீர்மானம் செய்யப்படுமோ? சந்தேகமில்லாமல் கிடையாது எனலாம்.

### குழந்தைக்கு வாழைப்பழம் கொடுத்து மாண்டதாக ஒரு ஸ்திரீ கைதியானாள்.

கும்பகோணம் ஏப் 27.

மேட்டுத்தெருவில் சிவபாக்கியம் என்ற ஸ்திரீ கருப்பூரில் வசித்த மருதநாயகம் என்பவர் வீட்டில் போய் வீட்டு வாடகை கேட்டபொழுது அவர் குழந்தைக்கு வாழைப் பழம் கொடுத்ததாயும், அக்குழந்தை வாங்கி எடுத்து மறுதினம் மாண்டதாயும் தாலூகா போலீசார் ஷை ஸ்திரீயைக் கைது செய்து விசாரித்துவருகின்றனர். ஷை ஸ்திரீ வீட்டில் ஷை மருதநாயகம் கள்ள நட்பு ஏற்பட்டதால் சக்களத்தி போராட்டம் ஏற்பட்டதென்றும், அதின் காரணமாய் ஜாகை கருப்பூருக்கு மாற்றப்பட்டதென்றும், வீட்டு வாடகை பாக்கியை கேட்க ஷை ஸ்திரீ 2, 3 தடவைகள் கருப்பூருக்குச் சென்றதாயும், ஒரு நாள் வாழைப்பழத்தை குழந்தைக்கு கொடுத்ததாயும் விசாரணையில் வெளியாகி இருக்கிறது. ந. வி. நி.

### 10-வது தென்னிந்திய வீரசைவ மகாசபை, கும்பகோணம்.

அன்புமிக்க ஐயன்மீர்:—நலம்; இறைவன் திருவருள் துணை கொண்டு, நிகழும் பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 22, 23 ஆம்நாள் வெள்ளி, சனிக்கிழமைகளில் (5, 6—5—39) கும்பகோணம் ஸ்ரீசாரங்க தேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்தின் கண் பெங்களூர், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், உயர் திருவாளர், G. பாமசிவய்யா அவர்கள், B.A. LL.B., தலைமையில் நமது 10-ஆவது தென்னிந்திய வீரசைவ மகா சபை நடைபெறும் அது போது பெங்களூர் சர்ப்பபூஷண சிவயோகி மடத்தின் தலைவர் ஸ்ரீமத் நிரஞ்சனமூர்த்தி மகாதேவ சுவாமிகள் முதலான அறிஞர்களும், பல புலவர் பெருமக்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். இன்றியமையாத பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பெறும். தாங்கள் அன்பர்களுடன் வந்திருந்து மகாசபையை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

S.N. மாரியப்பா.

### ஓம் மண்டலியை ஒழிக்க வேண்டும், கமிட்டியின் முடிவு.

காசியில் குல ஸ்திரீகளைக் கெடுக்க ஏற்பட்டுள்ள ஓம் மண்டலியை ஒழிக்கப் பெரிய கிளர்ச்சி நடந்ததும், அது விஷயமாக ஒரு விசாரணை கமிட்டி நியமிக்கப்பட்டதும் நேயர்களறிந்ததே, மண்டலியானது சிறு பெண்களை தகாத வழியில் செலுத்தி கெடுப்பதாயும் யுவர்கள் பலர் அந்த மண்டலியில் மெம்பர்களாயிருந்து வருவதாயும், இதை ஒழிக்கவேண்டியது அவசிய மென்றும் கமிட்டி ஏகமனதாக சிபார்சு செய்திருக்கிறது. சீக்கிரத்தில் கவர்ன்மெண்டார் விஷயமாக உத்தரவு போடுவார்களாம்.

### புகையிலை வரி மசோதா சட்டமாயிற்று.

சென்னை சட்ட ஸபையில் கொண்டு வரப்பட்டிருந்த புகையிலை வரி மசோதாவானது சட்டமாகிவிட்டது. சில்லரை வியாபாரிகளுக்கு லைசென்ஸ் கட்டணம் வாங்கவேண்டியதில்லையென்று முடிவுசெய்யப்பட்டது.

## ஸதி, அல்லது உடன் கட்டை ஏறுதல்.

சாஸ்திரத்தின் கருத்தென்ன?

அது நின்றது சட்டத்தால் தானா?

சென்னை சட்ட சபைக்கூட்டத்தில் [illegible] யான ஆலயப்பிரவேச மசோதாவைத் தாக்கி பேசிய கனம் ஸி. ராஜகோபாலாசாரியார், கவர்ன்மெண்டார் மத விஷயத்தில் பிரவேசிக்கலாமென்று [illegible] பல் கணித்திருக்கலாம். உடன்கட்டை யேறுதல் வழக்கமானது பலவீனமாயிருக்கும் கவர்ன்மெண்டார் அதை பிரவேசித்து சட்டம் செய்து அதைத் தடுத்து விட்டதை உதாரணமாகக் காட்டினார். இந்தியாவில் உடன் கட்டை ஏறுதல் என்ற குரூரமான மகவழக்கத்தை ஜனங்கள் ஆசரித்து வந்ததாயும் அதை கருணாமூர்த்திகளாகிய பிரிடிஷ் ராஜதந்திரிகள் சட்ட மூலமாகத் தடுத்து இந்தியாவின் கௌரவத்தையும், இந்திய ஸ்திரீகளின் உயிரையும் காப்பாற்றியதாகவும் வெகு நாளாகப் பெருமை சொல்லப்பட்டு வருகிறது. வெள்ளையரின் நாகரீக வேஷங்களில் மூழ்கி அதையே வரப்பிரஸாதமாக நினைத்து தடுமாறி வந்த பல ஹிந்துச்சீர்திருத்தக்காரர்களும் ஸதி விஷயத்தில் பிரிடிஷாரே நம்மை காப்பாற்றியதாக மூட எண்ணம் கொண்டிருப்பதும் பிரஸித்தமே.

ஸர்க்கார் மத விஷயத்தில் பிரவேசிக்கலா மென்பதற்கு இந்த ஒரு விஷயத்தையே சீர்திருத்தவாதிகள் கணக்கற்ற பிரஸங்கமேடைகளிலும், பத்திரிகைகளிலும் ஆர்ப்பாட்டத்துடன் பேசி வருவதைப்பார்த்து வருகிறோம். அதையே தான் கனம் ராஜகோபாலச்சாரியாரும் திருப்பிப்படித்து விட்டார்.

ஆயினும், உடன்கட்டை யேறும் விஷயமாக நமது சாஸ்திரங்களின் போக்குஎன்ன? அதைக் கட்டாய தர்மமாக நமது சாஸ்திரங்கள் விதிக்கின்றனவா? அந்த விஷயமாக வுள்ள விதி விலக்குகள் என்ன? ஸதி இப்போது நின்று விட்டதற்கு ஸர்க்கார் செய்த தடைச் சட்டம் தான் காரணமா? இத்யாதி விஷயங்களையும், வேறு சில உண்மைகளையும் நம்மவர்கள் தக்க பிரமாணயுக்தி பலத்துடன் விமர்சிக்கவேண்டியது அவசியமாகிறது.

நமது சாஸ்திரங்களில் ஸஹகமனம் என்ற தர்மம் சொல்லப் பட்டிருப்பது உண்மையே. அது உத்தம தர்மமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தர்ம சீலர்களும், பதிவ்ரதா [illegible] மாகிய உத்தம ஸ்திரீகள் தங்களது பர்த்தாவுடன் அநுகமனம் செய்வதால் உத்தமலோகத்தை அடைவதுடன் பர்த்தாவையும் உயர்ந்த கதியடையும்படி செய்கிறாளென்று சாஸ்திரம் கூறுகிறது. தனது மாத்ருகுலம், பித்ருகுலம், பர்த்ருகுலம், ஆகிய மூன்றையும் அவள் பரிசுத்தமாக்குகிறாள். கெட்ட நடத்தையுள்ள பர்த்தாவானவன் பார்யையின் அநுகமனத்தால் பரிசுத்தனாக மீட்கப் பட்டு உத்தம கதியடைவதும் அநுகமனத்தின் ப்ரயோஜனமாகக் கூறப்படுகிறது. இதை நமது சாஸ்திரம் மிகவும் பிரசம்ஸை செய்கிற தென்பது உண்மையே.

அநுகமனம் மூலமாக ஸ்திரீகளுக்கு ஸ்வர்க்க [illegible] அநுமதி. [illegible] போல், புருஷர்களுக்கும் ஒரு ஸந்தர்ப்பத்தில் ஸ்வேச்ச மரணம் தர்மமாக நமது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸந்யாஸ தர்மத்தினால் காலம் கழித்துவரும் சிலர்கள் தொண்டு கிழமாகி, சரீரத்தை தரிக்கச் சக்தியற்று, [illegible] செய்ய முடியாமலுமிருக்கிற பயன் [illegible]

[illegible] அக்கினிப்ரவேசம் செய்தோ, உபவாசமிருந்தோ, பர்வதத்தின் உச்சியிலிருந்து விழுந்தோ சரீரத்தை விட்டுவிடலாமென்பது நமது சாஸ்திரங்களின் அநுமதியாகும். இதுவும் உத்தமதர்மமாகச் சொல்லப்படுகிறது. அநேக மஹர்ஷிகள் இந்த முறையால் சரீரத்தை விட்டதான கதைகள் பல காவியங்களில் காணப்படுகின்றன. சரபங்க முனிவர் [illegible] சக்ரவர்த்தி [illegible] இது ஒரு சாதாரண விஷயமே.

[illegible]

ஃ ஃ ஃ

[illegible]

இல்லையெனில் உண்டா? ஆகையால் நமது சாஸ்திரம் அல்லது நாகரிகம் மட்டும் இதில் பழிக்கப்படுவதற்கு இடமேயில்லை. உண்மையில் இந்த தர்மத்தை எவரும் பழிக்கவும் நியாயமில்லை.

ஆகவே அநுகமனத்தை ஓர் உயர்ந்த தர்மமாக ஹிந்துக்கள் கொண்டாடுவது அநாகரிகமாகாது. நாகரிக வேஷம் போடும் எந்த தேசமும் மதமும் இதில் நம்மைப்பழிக்க இடமில்லை.

இவ்வாறு சாஸ்திரம், யுக்தி ஆகியவைகளால் அநுகமனம் ஒரு தர்மமாக இருந்த போதிலும், இதில் நமது சாஸ்திரம் விதித்துள்ள பந்தோபஸ்துக்களையும் நாம் கவனிக்கவேணும்.

அநுகமனம் அல்லது உடன்கட்டையேறுவது ஓர் கட்டாய தர்மமாக விதிக்கப்படவில்லை. அதாவது அநுகமனம் செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்குமென்று சாஸ்திரமானது நிர்ப்பந்திக்கவில்லை. "செய்தால் விசேஷம், செய்யாவிட்டால் பாபமில்லை," என்ற கொள்கையே சாஸ்திரத்தில் அவலம்பனம் செய்யப்பட்டதிலிருந்து இது ஒரு கட்டாய தர்மமாக நம் தேசத்தில் இருந்ததெனக்கூற எவ்வித ஆதாரமுமில்லை.

## நன் மொழிகள்.

எதை ஏற்க வேண்டும்? குரு வார்த்தையை. எதை விடவேண்டும்? அகாரியத்தை. யார் குரு? தத்வத்தை உணர்ந்து சிஷ்யனது நன்மையை நாடுபவர். சீக்கிரமாக செய்யத்தக்கது எது? ஸம்ஸாரத் தொடர்பை அறுத்தல். மோக்ஷமெனும் மரத்திற்கு விதை எது? சித்த பரிபாகத்திற்குப் பிறகு உதிக்கும் தத்வஞானமே.

ஃ ஃ ஃ

காதிற்கினிய அம்ருதம் எது? ஸதுபதேசம். கௌரவத்திற்கு காரணம் எது? யாசிக்காமலிருத்தல். எது துக்கம்? இருப்பதைக் கொண்டு சந்தோஷப்படாமை. எது அல்பத்தனம்? அதமனிடத்தில் யாசிப்பது.

ஃ ஃ ஃ

எவனுக்கு ஜனங்கள் வசமாவார்கள்? ஸத்யமாகவும் பிரியமாகவும் பேசி வணக்கத்துடனிருப்பவனுக்கு. எதிலிருக்க வேண்டும்? இம்மை மறுமைகளையளிக்கும் நியாய வழியில். குருடன் யார்? அகார்யத்தில் ஆசையுள்ளவன், செவிடன் யார்? ஹிதத்தைக் கேளாதவன். ஊமை யார்? காலத்தில் பிரியத்தைப் பேசாதவன்.

### பண்ருட்டி.

ஸ்ரீமுகம் படனம்.

ப்ரமாதி ஞு சித்திரைமீ 11௳ திங்கள் கிழமை தினம் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் அன்றுதினம் வந்திருந்து ஆஸ்திக மகாஜனங்கள் முன்னிலையில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுடைய கும்பாபிஷேகத்திற்கும் ஸ்ரீவள்ளி [illegible] கைங்கர்யத்திற்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீமஹாஸ்வாமிகளால் அனுப்பப்பட்டிருந்த ஸ்ரீமுக பத்திரிகையையும் சாம்பமூர்த்தி கனபாடிகளால் நன்றாக வாசிக்கப்பட்டு ஷை ஸ்ரீமுகப் பத்திரிகையை மகாஜனங்கள் முன்னிலையில் மகா-ள-ள-ஸ்ரீ அருணாசல அய்யரிடம் சமர்ப்பிக்கப்பட்டது ஷை அய்யர் அவர்களும் அதிக பக்திஸ்ரத்தா பூர்வமாய் நமஸ்காரத்துடன் கிரஹித்துக்கொண்டார்.

வருகிற வெள்ளிக்கிழமைதினம் பண்ருட்டியில் இருக்கும் ஆர்ய வைசிய மகாஜனங்களுக்கும் பேரி செட்டிமார்களுக்கும் ஸ்ரீமுகப்பத்திரிகை வாசித்துக்கொடுப்பதாய் நிச்சயம் செய்திருக்கிறது. ஸ்ரீமடம் சிஷ்யன்,

சாம்பமூர்த்தி.



## கும்பகோணம் வர்த்தமானம்.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம், ஏப்ரல் 26௳

கைகளுக்கு சிகப்பு ஆபரணம் போட அமுல். நகர போலீஸார் கைகளுக்கு பின்னால் மண் அடிக்காத வட்டாயின் மேல்புறமாக (மட்கார்டு) ஒரு சிகப்பு கண்ணாடியை பொருத்தும் படி அமுல் நடத்தி வற்புறுத்துகிறார்கள். கிராம வாசிகள் கைகளில் வந்து இது தெரியாமல் ஸங்கடப்படுவதை காண வருந்துகிறேன். நகரில் சிலரும் இக்கஷ்டத்திற்கு ஆளாகின்றனர். பொது ஜனங்களும் வாசகர்களும் இனி இதனால் தெரிந்து கொள்வார்கள் என்று இக்குறிப்பை எழுதினேன். ஆனால் கால்நடையாக செல்வோருக்கும் இது போன்ற அடையாளம் சிகப்பு கண்ணாடி இல்லாவிட்டாலும்– வலது புறம் போகாதே– இடது புறம் போங்கள் என்ற அமுல் சிலமாதங்கள் முன்பு போலீஸ் அதிகாரிகள் நடத்தினார்கள். நகர வாசகர்கள் அந்த வைபவத்தை மறந்திருக்கமாட்டார்கள்.

குடந்தை வக்கீல் சங்க வருடாந்தர கூட்டம். சென்ற 20–4–39 ல் இச்சங்கத்தின் வருடாந்திரக்கூட்டம் நடந்ததில் புது வருடத்துக்கு சங்கத்தின் தலைவராக ஸ்ரீமான் டி. கே. சிவராம ஐயரும், கார்யதரிசியாக ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணியமும் நியமிக்கப் பட்டனர்.

பன்னிரண்டு கருட தரிசனம். பல ஆண்டுகளாகக் காசுக்கடை வர்த்தகர்கள் பக்தியுடன் செய்து வரும் பன்னிரண்டு கருடசேவை இவ்வருடமும் செய்து வைத்தார்கள். உள்ளூர், வெளியூர் ஆஸ்திகர்கள் வந்து தரிசனம் செய்தனர். பொது ஜனங்களுக்கு வசதியாக ஏற்பாடுகளையும் வர்த்தகர்கள் இவ்வருடம் அதிகமாகவே கவனித்தார்கள்.

தேவாலயங்களின் பெருமை. நம் நாட்டின் தேவாலயங்களின் பெருமை, நம் தேயத்தவர்களுக்கு பல வழிகளிலும் தெரியவில்லை ஆனால் மேல்நாட்டினர்களுக்கு நம் ஆலயங்களிடத்தில் அதிக மதிப்பும், பக்தியும் இருப்பதை பல வழிகளிலும் அநுபவத்தில் அறிகிறோம். தென் இந்திய கோயில்களைக்காண ஹிஸ்ஹைனஸ் பிரின்ஸ் பீட்டர் ஆப் கிரீஸ் வருவார் என்றும், அவருக்குத் தக்கதை செய்யவும் இந்துமத தேவஸ்தான போர்டார் ஓர் அறிக்கையைவெளியிட்டிருக்கிறார்கள். கிரீஸ் தேசத்து அரசர் விஜயம் செய்யப்போகும் தேதி திட்டமாக தெரிய வில்லை. என்றாலும் அயல் நாட்டினர் நம் தேய கோவில்களை காணவும், சிற்பி சிறப்பை அறியவும் ஆவல் படுவது இதிலிருந்து வெளிப்படுகிறதல்லவா? ஆனால் நம்தேயத்தில், அதிலும் முக்கியமாக நம் சென்னை மாகாணத்தில், என்ன நிலைமை இருந்து வருகிறது? வேத வேதாந்தங்களால் மகரிஷிகளால் பூஜிக்கப்பட்ட புனித தேவாலயங்களில் எதை வேணுமானாலும் செய்யலாம்; கசாப்புகடை வைக்க மட்டில் முயற்சி செய்ய வில்லை. அது நம் அதிருஷ்டமன்றோ தெய்வ ஸ்தாபனங்களின் பெருமை குலைந்து விடவேணும் என்ற துரோகமான மனம் படைத்தவர்கள் மலிந்து துர்ப்பிரசாரம் வலுத்து விட்டது. வாசா கைங்கர்யம் நாற்றுக் கணக்கானவர்கள் செய்கிறார்கள்.

அதை பிரபல பத்திரிகை கோஷ்டிகள் நிறமையுடன் பிரசுரிக்கின்றன. மத சம்பந்தமாயோ, ஆலய உற்சவங்களையோ, பிரசுரிக்க வெட்கப் படுகின்றன! ஆனால் அயல் நாட்டு செய்திகள், படங்களைப் பிரசுரிப்பதை பெருமையாக அப்பத்திரிகைகள் நினைக்க தவறி விடுவதில்லை. இந்த நிலைமையை அறிந்திருந்தும் அயல் நாட்டு அரசர் தேவாலங்களை காண்பதற்கு வாராமல் இருக்கலாகாதா? அயல் நாட்டுப் பத்திரிகைகள் இந்திய நாட்டு தேவாலய உற்சவ படங்களைப் பற்றிய படங்களை மிக்க பரிவுடன் பிரசுரிக்கின்றன. ஆனால், இந்து வென்று பெருமை கூறிக் கொள்ளும் நம் தேயத்தார் படங்களை பிரசுரித்தால் இளப்பம் என்றும், அவமானமென்றும், செய்திகள் இன்பமற்றதாகும் என்றும் சொல்வது விவேகமாகுமா?

வக்கீல் குமாஸ்த்தாக்கள் பக்தி.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்காசாரியார்ஸ்வாமிகள் ஓர் ஸ்ரீமுகம் அனுப்பியதற்காக இச்சங்கத்தார்கள் சென்ற 20௳ கூடிய விசேஷக் கூட்டத்தில் ஸ்ரீகாஞ்சியில் செய்யப்படும் வெள்ளிதேத்துக்கு உபயமாக ரூ 25 கொடுக்கமிக பக்தியுடன் ஏகமனதாக தீர்மானித்து அனுப்பினார்கள். இவ்வருடம் கூட்டதில் ஸ்ரீமான் என். வாஞ்சி சாஸ்திரிகளை தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள். 21௳யன்று வலங்கிமான் முன்ஸிப் ஸ்ரீமான் கணபதிஐயர் மாற்றப்பட்டதற்காக ஓர் உபசரிப்பை நடத்திவைத்தார்கள்.

யுத்தத்தை நிறுத்த கோண்டாட்டம்.

புயல்காற்று அடிக்கிறது. அம்மியும் குழவியும் பறக்கிறது. இலவம் பஞ்சாகிய இந்தியர்கள் யுத்த எதிர்ப் புதியம் கொண்டாடி விட்டால் ஹிட்லர் பிரபு கனவிலும் யுத்தத்தை மறந்து விடுவாரல்லவா? அதற்காகத் தான் காந்திபார்க்கில் 23௳ யுத்தத்தை நிறுத்திவிடவேணும் என்று கூட்டம் கூடிகலைந்தது. யுத்தம் இனி கடைபெறுதன்றோ?

ஹைதராபாத் ஸத்யாக்ரஹம்.

732 பேர் கைதி.

ஹைதராபாத்தில் ஆர்ய ஸமாஜிகள் ஸத்யாக்ரஹம் வெகு மும்மரமாக நடக்கிறது. ஒரே தினத்தில் 734 பேர் சட்ட மறுப்பு செய்து கைதியாயினர். பெரிய அந்தஸ்துளவர்களும் ஸர்க்கார் பென்ஷனர்களும், வேறு பிரபலஸ்தர்களுமாக ஏராளமான பேர்கள் ஸத்யாக்ரஹத்தில் சேர்ந்து வருகிறார்கள்.

விற்பனை வரி மசோதா.

தனிக்கமிட்டி முடிவுரை.

சென்னை விற்பனைவரி மசோதாவைப்பற்றி தனிக்கமிட்டியார் பரிசீலனை செய்து வெளியிட்டுள்ள யாதாஸ்து சென்னை சட்ட ஸபையில் ஆஜர் செய்யப்பட்டது. மே மாதம் 8௳ இது விவாதத்திற்கு வரும். பொறுக்குக் கமிட்டியில் சிலர்மறுப்புரை எழுதியிருக்கிறார்கள். அசல் மசோதாவிலிருந்து ஸ்வல்பமாறுதலே செய்யப்பட்டிருக்கிறதாம்.

அகில இந்திய கமிட்டிக்கூட்டம்.

ஸ்ரீமான் போஸ் கல்கத்தா வந்துவிட்டார். விசேஷ உபசாரம் நடந்தது.

காந்திஜியும் ராஜ்கோட்டை விட்டு கல்கத்தாவுக்கு புறப்பட்டார். பம்பாயில் தங்கிவிட்டு வியாழக்கிழமை கல்கத்தா வருவார்.

போஸும், காந்திஜியும் ஸந்தித்துப்பேசுவார்கள். ஸமரஸம் ஏற்படாமல் போனால், ராஜிநாமா செய்யப் போவதாக போஸ் கூறுகிறார். தாமே கார்ய கமிட்டியை அமைத்து விடவும் அவர் உத்தேசிக்கிறார்.

நாங்கள் கில்பாய்தான்களை தயார் செய்து சரஸமான விலைக்கு விற்கிறோம். வேண்டியவர்கள் விலை விபரங்களுக்கு எழுதவும்.
R. Pandarinatham Chetty,
109-111, Naskarpara Road,
GHUSURI, HOWRAH.

## ஓர் அறிவிப்பு.

ஆர்யதர்மம்.

விஷயதானம் செய்வோருக்கு

பத்திரிகை இனும்.

ஆர்யதர்மம் பத்திரிகைக்குச்சிறந்த விஷயதானம் செய்ய முன் வருகிறவர்களுக்கு ஸௌகர்யம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தர்ம ஸம்பந்தமாக ஆராய்ச்சியுடன் வியாஸங்கள், புராணக்கதைகள், கற்பனைக் கதைகள், ஸம்பாஷணைகள், ஆயுர்வேதாதி விஷயங்கள் ஆகிய பல முக்ய விஷயங்களைப் பற்றி வியாஸம்எழுதியனுப்புவோர்க்கு ஆர்யதர்மம் இனாமாக அனுப்பப்படும். விஷயதானம் செய்வோருடைய தபால்செலவையும் அந்தந்த வியாஸங்களின் தன்மைக் கேற்றபடி நாம் ஏற்றுக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம்.

நல்ல கிரந்தங்களை ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்த்து பிரசுரிக்கவும் உத்தேசித்துள்ளோம். இதில் உபகாரம் செய்வோருக்கு எல்லா ஸௌகர்யம் செய்து கொடுப்பதுடன் அந்த புஸ்தகத்திலும் சில பிரதிகள் அளிக்கப் படும். மானேஜர்.

### பண்ருட்டி.

ஸ்ரீசங்கர ஜெயந்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெகத்குரு ஸ்ரீசங்காசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அநுக்கிரகத்தை முன்னிட்டுக் கொண்டும் பிரும்மஸ்ரீ சாம்பமூர்த்திகனபாட்டிகள் அவர்களைக் கொண்டும் பிரதி வருஷம் போல் இவ்வருஷமும் பிரமாதி ஞு சித்திரை மாசம் 10 தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் ஸ்ரீ ஆதிசங்கர பாகவத் பாதாள் அவதார மஹோத்ஸவத்தை ஆரம்பித்து 3நாள் உத்ஸவம் அதிவிமர்சையுடன் நடந்தது. சித்திரைமீ 11௳ சோமவாரம் அன்று தினம் காலையில் பஜனை கோஷ்டியுடன் உஞ்சவிருத்தியும் பிறகு உபநிஷத் பாராயணம் மஹந்யாஸருத்திர சகிதம் மஹாபிஷேகம் ஸஹஸ்ரநாமார்ச்சனை தீபாராதனை பிருமண சந்தர்ப்பணை முதலானதுகளும் அன்று சாயந்திரம் ஸகல பிரதுகளுடன் வேதபாராயண சகிதம் ஸ்ரீபகவத் பாதாள் பட ஊர்வலமும் பிரும்மஸ்ரீ கல்பட்டு துரைசாமி சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீசங்கார அவதார மஹிமையையும் அழகாய் உபந்யாஸம் செய்யப் பட்டும் ஷை ராத்திரி லலிதாஸகஸ்ர நாமர்ச்சனை செய்து பானக பூஜையும் நடத்தி ஆஸ்திக மஹாஜனங்களுக்கு பிரஸாதமும் விநியோகிக்கப் பட்டு அதி குதூஹலத்துடன் 10 ஞுதிய பிரமாதி ஞுதிய ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவம் நிர்விக்னமாய் நடந்தேறியதை ஸ்ரீசர்வேஸ்வரனை பிரார்த்திக்கிறோம். மேலும் இவ்வருஷம் அதிக முயற்சி எடுத்துக் கொண்டு நடத்தின சாம்ப மூர்த்தி கனபாட்டிகள் அருணாசல அய்யர் இவர்கள் 2பேருக்கும் ஸ்ரீபகவான் ஸுகிருத ச்ரேயஸை கொடுப்பதுடன் நீடூழிகாலம் வாழ்கவும்,

ஸ்ரீமடம் சிஷ்யர் கிருஷ்ணன்.

பிரும்மஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர் | 2 | 8 | 0 |
| காலிகோ | 3 | 0 | 0 |
| சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம் | 0 | 2 | 0 |
| ஸ்ரீ நாதபக்தி ஸூத்ரம் | 0 | 12 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்,

## ஸப்தஸ்தான க்ஷேத்திரங்கள்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீச்வர ஸ்வாமியின் பிரம்மோத்ஸவம், 23—4—39ல் ஆரம்பமாகி 27உ வெள்ளி ரிஷப வாஹன சேவையும், மே-மீ 4உ யன்று ஸ்ரீ பஞ்சநதீச்வரஸ்வாமி தர்ம ஸம்வர்த்தனீ அம்பாள் ஸமேதராய் திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை முதலிய ஸப்தஸ்தல ப்ரதக்ஷிணம் நடைபெறும். ஸப்தஸ்தல க்ஷேத்திர மகிமையாவன:—

### திருவையாறு.

1. திருவையாறு மூ. பஞ்சநதீச்வரர். தர்மஸம்வர்த்தினி. காவேரி நதீ இது தஞ்சாவிருக்கு வடக்கு 7-மைல் நல்ல வழியுண்டு.

திருநாவுக்கரசு நாயனாருக்குக் கைலாச தரிசனம் கொடுத்தருளிய ஸ்தலம். இவ் வைதிஹ்யத்தைக் காட்டும் உற்சவம். ஆடி அமாவாசையில் நடக்கின்றது. அவ்விதம் தரிசனம் கொடுத்த மூர்த்தி தெற்கு பிராகாரத்திலிருக்கிறார். அவருக்குத் தனி சந்நதி. அப்பர் ஸ்வாமிகளும் அங்கிருக்கிறார். அம்பர் ஸ்வாமிகள் எழுந்து வந்ததாகச் சொல்லும் குளம் கோவிலுக்கு வடமேற்கில் இருக்கிறது.

ஸப்தஸ்தானம் என்று வழங்கும் 7 ஸ்தலங்களில் முதன்மையான ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனாருக்குக்காகவும், சேமான் பெருமாளுயனாருக்காகவும், ஸ்வாமி காவேரியின பெருக்கைத் தவிர்க்க நாயன்மாரிருவரும் அடியார் கூட்டத்துடன் ஆற்றைக்கடைந்து சென்று தரிசனஞ் செய்த ஸ்தலம். ஸ்தல விநாயகருக்கு ஆதி விநாயகர் என்று பெயர் காவிரியாற்றில் மிகுந்த வெள்ளமாயிருந்தால் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அதன் தென் கரையிலிருந்து "ஐயாறுடைய அடிகளே என்றழைத்த பொழுது இவ்விநாயகர் ஓலம் ஓலம்" என்று சொன்னதாகச் சொல்கிறார். இவ் விநாயகருக்குப் பக்கத்தில் ஆட்கொண்டார் சந்நதி என்று ஒரு சந்நதி இருக்கிறது. ஒரு பிராமணப்பிள்ளையை யமன் தொடர்ந்து வந்ததாகவும், அக்கால் ஸ்வாமி வெளிப்பட்டு யமனை விலக்கி அப் பிள்ளையை ஜோதி ரூபமாய் ஆட்கொண்டதாகவும் ஆதலால் அவர் சந்நிக்கெதிரில் ஒரு சிறுகுழி உண்டாக்கி அதில் குங்குலியம் போட்டுக் கொண்டு வருவதாகவும் சொல்லுகிறார்கள். பிரார்த்தனைகாரர்கள் அநேகர் குங்குலியம் போடுகிறார்கள். இந்திரன் வாலி முதலியோர் பூஜித்த ஸ்தலம்.

### திருப்பழனம்.

[மூ. ஆபத்சகாயேச்வரர், பெரிய நாயகி.]

திருவையாற்றிற்குக் கிழக்கு 2 மைல்:— இது ஸப்த ஸ்தான க்ஷேத்திரங்களில் இரண்டாவதாகும். அப்பூதியடிகளின் அடிமைத் திறத்தினை அப்பர் ஸ்வாமிகளே வியந்தேத்தியுள்ள அருமை தேவாரப் பதிகத்தைக் கொண்டுள்ளது. விஷ்ணு (வேணுகோபால சந்நதி) ஒன்றிருக்கிறது. இவ்வூரில் வாழை அதிகம். ஸ்தலத்திற்கு கதலிவனம் என்று பெயர். இதற்குச் சமீபத்திலுள்ள திங்களூரில் அப்பூதிநாயனாருடைய பிள்ளை விஷந்தீண்டி இறக்க அப்பர் ஸ்வாமிகள்—திருப்பதிகம்பாடி அப்பிள்ளையை எழுப்பியருளினர். திங்களூர் சந்திரன் பூஜித்த ஸ்தலம். சந்திரனுடைய கிரணங்கள் பங்குனி, புரட்டாசி இந்த இரண்டு மாத பௌர்ணமியிலும் அதற்கு முன் பின் ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்வாமி மேற்படுகின்றனவாம்.

### திருச்சோற்றுத்துறை.

[மூ. தொலையாச்செல்வர். ஒப்பிலாவம்மை.]

தஞ்சாவூரிலிருந்து வடக்கே திருவையாற்றுக்குப்போகும் வழியில் 6-மைலுள்ள திருக்கண்டியூருக்குத் தென்கிழக்கு 1½-மைல் இதற்கு வடக்கு குடமுருட்டியாற்றையுங் காவிரியாற்றையுங் கடந்து சென்றால் 2-மைலில் திருப்பழனமிருக்கிறது. திருச்சோற்றுத்துறை ஸப்த ஸ்தலங்களில் மூன்றாவது ஸ்தலம். இந்திரன் சூரியன் முதலியோர் பூஜித்து சிவபக்தனான அருளாளன் என்றும் மறையவன் பசியால் வருந்தும் போது ஸ்வாமி அவனுக்கு எடுக்க எடுக்கக் குறைபடாத சோறு அளித்தருளிய ஸ்தலம். ஊருக்குத் தெற்கே சோறுடையான் வாய்க்கால் என ஓர் வாய்க்கால் இருக்கிறது.

### திருவேதிகுடி.

[மூ. வேதபுரீச்வரர் மங்கையர்க் கரசி]

தஞ்சாவூரிலிருந்து வடக்கே திருவையாற்றுக்குப் போகும் வழியில் 6மைல் சென்று திருக்கண்டியூரை அடைந்து அங்கிருந்து கிழக்கே சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம். இதற்குச் சமீபத்தில் வடகிழக்கில் 1மைலில் திருச்சோற்றுத்துறை இருக்கின்றது. இவ்விரண்டு ஸ்தலங்களுக்கும் மத்தியிற் குட முருட்டியாறு ஓடுகின்றது.

திருவேதிகுடி சப்தஸ்தானங்களில் 4வது ஸ்தலம். வேதங்கள் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி, வாழை மடுவில் உற்பத்தியானவர். வாழை மடுநாதர் எனவும் பெயர் உண்டு. பிள்ளையாருக்கு வேதப் பிள்ளையார் எனவும் பெயருண்டு. பங்குனிமீ 13 15உ களில் சூரிய பூஜை.

### திருக்கண்டியூர்.

[மூ. சிரக்கண்டீச்வரர் மங்கள நாயகி]

தஞ்சைக்கு வடக்கு திருவாடிக்குப் போகும் வழியில் இருக்கிறது. ஸப்தஸ்தான க்ஷேத்திரத்தில் இது ஐந்தாவது க்ஷேத்திரம். மாசிமீ 13, 15உ களில் சூரிய பூஜை. மேற்குப் பார்த்த சந்நதி அஷ்டவீர ஸ்தலங்களில் ஒன்று பிரும்மாவின் சிரஸ்ஸைக் கொய்த ஸ்தலம், ஸ்ரீசதாநந்தர் பூஜித்த ஸ்தலம் அவருடைய திருஉருவமும் பிரும்ம ஸரஸ்வதி இவர்கள் உருவங்களும் கோயிலுள் இருக்கின்றன.

### திருப்பந்துருத்தி.

[மூ. புஷ்பவன நாதர் அழகார்ந்த நாயகி.]

தஞ்சைக்கு வடக்கில் கண்டியூருக்கு மேற்கு 2மைல் இதற்கு வடக்கே 1மைலில் திருநெய் தான இருக்கிறது.

சோழ ராஜா குருத்தியை வைத்துப் பூஜிக்கச் செய்த தனல் திருப்பந்துருத்தி எனப் பெயர் வந்ததாம் பட்டீச்வரத்தைப் போல் நந்தி விலகி நிற்கின்றன. திருஞான சம்பந்தருக்காக விலகினராம். அப்பர் ஸ்வாமிகள் ஓர் மடங்கட்டி வித்துப் பல வகைத் திருத்தாண்டகங்களும் திரு அங்கமாலை முதலிய திருப்பதிகங்களும் பாடிக் கொண்டிருந்த ஸ்தலம் சம்பந்தர் பாண்டிய நாடு சென்று சமணரை வென்று திரும்பி வரும் போது அப்பர் ஸ்வாமிகள் இங்கிருப்பதைக் கேள்வியுற்று அவருடன் சில காலம் இருந்தருளிய திருப்பதி அப்பர் ஸ்வாமிகள் மடம் இடிந்து கிடைக்கின்றது. தேவேந்திரனும் காச்யபரும் பூஜித்த ஸ்தலம். சப்த ஸ்தானங்களில் ஆறுவதாகும்.

### திருநெய்தானம்.

ஸப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவது ஸ்தலம். ஸரஸ்வதி பூஜித்த ஸ்தலம், தக்ஷிணாமூர்த்தி நின்ற கோலம் மூர்த்தி செய்யாடியப்பர், பாலாம்பிகையம்மை, இது தில்லைஸ்தானம் என வழங்குகிறது. திருவையாற்றுக்கு ஒரு மைல் மேற்கு.

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.
மேலக்காவேரி.

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

யார் குடியை நிறுத்தவேண்டும்! ரெயில் மோடார் முதலியவைகளை ஓட்டுபவர் கட்டாயம் குடிக்கக்கூடாதென முதலில் நல்ல அரசாங்கம் சட்டம் செய்யவேண்டும். மிக்க போதைதரும் பானங்களை குடித்து நிலை தவறி ஓட்டிப் பலருக்கு போரபத்தை விளைவிக்கின்றனர். சமீபத்தில் கல்கத்தாவிற்கருகே நடந்த கோரவிபத்திற்கு குடியே காரணமோ!

இதற்கு மறு நீதியா! மந்திரிகள் சுகாதார சட்டத்தை இயற்றி அதைப்போன்ற மதுநீதிக்குச் சமாதி என்கிறார்கள். இவர்களுக்கு மதுநீதியால் மதிப்புண்டோ!

இதைக்கற்பாரா! பம்பாயில் பிச்சைக்காரருக்கென ஓர் தொழிற்சாலை ஏற்படுத்த சட்டமொன்று முயற்சிக்கிறது. அங்ஙனம் உருவான ஓர் வேலை இல்லை! அழிவு வேலையே நமது மாகாணத்தில் காணப்படுகிறது.

பஞ்சாபில் தொத்துநோய்! ஆலயப்ரவேச நோய் பஞ்சாபிலும் பரவி ஜனங்களபிப்பிராய மறியவிடப்பட்டிருக்கிறது! ஸநாதனிகள் அதை அழிக்க முயற்சிப்பாரா!

உண்மை கூறுகிறார்! கமது மந்திரிகள் ஸமயசந்தியில் பேச்சில் புலிகள். பொது ஜனங்களிடையே வியாபார வரியால் உங்களுக்கு கஷ்டமில்லை என்கின்றனர். வியாபாரிகளிடம் நீங்கள் வாங்குவோரிடம் வசூல் செய்யும் வழுண்டுகளே! ஜனங்களுக்கல்லவோ வரி என்கின்றனர். இருவரும் சேர்ந்து இவர்களைத்தியாகதுதான் வருத்தத்தக்கது!

ஸ்ரீசங்கரமடத்தில்! ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா தலைமையில் ப்ரஸ்தானத்ரயபாஷ்யாரம்பிக்கப்பட்டது. மாலைகளில் வே ஸோ சர்மா அவர்கள் ஸ்ரீ பகவத்பாத சரிதங்களை உபன்யஸித்தார். இரவுகளில் பல பாட்டுக்கச்சேரிகளும் காலக்ஷேபங்களும் நடந்தன. திருப்புகழ் மணி கிருஷ்ணசாமி ஐயர் பஜனை மிக உருக்கமாக இருந்தது. அத்யுடீக ஸபையார் காலை அபிஷேகத்தில் பாராயணம் செய்துவந்தனர். திங்களிரவு பகவத்பாத மூர்த்தி வீதி புறப்பாடு அழகாக நடந்தது.

தார்மிகர் வாழி! இவ்வாண்டு வழக்கப்படி அட்வகேட் ப்ரம்மஸ்ரீ வெங்கட்ராம சர்மா தக்க முயற்சியுடன் ஸகல ஸம்பிரதாயங்களையும் செய்தார். ஸ்ரீமான் சிவராமய்யர்வாள் (மடம் குமாஸ்தா) பக்திச்ரத்தையுடன் ஸ்ரீருத்ர பாராயணமும் செய்து தர்ம காரியத்தை கவனித்தார். ஆரோரா பிலிம் கம்பெனி மேனேஜர் ஸ்ரீமான் சுந்தர அய்யரவர்கள் 25 ரூ. நன்கொடை அளித்து தர்சனம் செய்தது கொண்டாடத்தக்கது! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் காலந்தவறாது பூஜையுடன் பாராயணமும் செய்தார்!

ஸ்ரீ சங்கரர் படக்காக்ஷி! ஆரோரா பிலிம் கம்பெனி ஸ்ரீமான் சுந்தரய்யரவர்கள் ஸ்ரீ சரிதத்தை படம் பிடித்துக்காட்ட தக்க பண்டிதர்களைக்கொண்டு முயற்சி செய்கிறார். ஸ்ரீ சங்கர ஜயந்தி வாரத்திலாரம்பித்த அது ஜயப்ரதமாயும் சாஸ்திர விரோதமில்லாமலுமிருக்கவேண்டுகிறோம்.



## ப்ரஸ்தானபேதம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

एवमृङमन्त्राणां पादबद्धच्छन्दोविशेषविशिष्टत्वात्तदज्ञाने च निन्दाश्रवणाच्छन्दोविशेषनिमित्तानुष्ठानविशेषविधानाच्च छन्दोज्ञानाकांक्षायां, तत्प्रकाशनाय "धीः श्रीः स्त्रीम": इत्याद्यष्टाध्यायात्मिका छन्दोविवृतिर्भगवता पिङ्गलेन विरचिता। "तत्राप्यलौकिकम्" इत्यादिना ध्यायत्रयेण गायत्र्युष्णिगनुष्टुब्बृहती पंक्तिस्त्रिष्टुब्जगतीति सप्तच्छन्दांसि सावान्तरभेदानि निरूपितानि। "अथ लौकिकम्" इत्यारभ्याध्याय पञ्चकेन पुराणेतिहासादावुपयोगीनि लौकिकानि छन्दांसि प्रसङ्गात् निरूपितानि, व्याकरणे लौकिकपदनिरूपणवत् ॥

இம்மாதிரியே 'ரிக்' என்ற மந்த்ரங்கள் சந்தஸ்ஸுகளுடன் கூடியிருப்பதாலும், அந்த சந்தஸ்ஸை தெரிந்துகொள்ளாமல் மந்திரங்களை உச்சரிப்பதை நிந்தித்திருப்பதாலும், சந்தஸ்ஸுகளுடைய விசேஷங்களை அநுசரித்து அநுஷ்டானத்திலும் சில விசேஷங்களிருப்பதாலும், நாம் சந்தஸ்ஸுகளையும் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும், அதைப் பற்றி கூறுவதற்காக "धीः श्री स्त्रीम्" என்று ஆரம்பித்து எட்டு அத்தியாயங்கள் கொண்டதாக "சந்தோவிவ்ருதி" என்ற கிரந்தம் "பிங்களர்" என்ற முனிவரால் இயற்றப்பட்டிருக்கிறது. அதில் "तत्राप्यलौकिकम्" என்று ஆரம்பித்து மூன்று அத்தியாயங்களால், காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், பிருஹதி, பங்க்தி, த்ருஷ்டுப், ஜகதீ என்ற ஏழு சந்தஸ்ஸுகள் ஒவ்வொன்றுமுள்ள வித்தியாசங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றன. பிறகு "अथ लौकिकम्" என்று ஆரம்பித்து ஐந்து அத்தியாயங்களால் புராணம், இதிகாசம், இவைகளிலுபயோகப்படக்கூடிய லௌகிக சந்தஸ்ஸுகள், வியாகரணத்தில் லௌகிக பதங்களைப்பற்றி சொல்லப்படுவது போல் கூறப்பட்டிருக்கின்றன.

एवं वैदिककर्माङ्गदर्शादिकालज्ञानाय ज्योतिषं भगवता आदित्येन गर्गादिभिश्च प्रणीतं बहुविधमेव।

இவ்விதமாகவே வேதத்தில் கூறப்பட்ட கர்மாக்களுக்கு அங்கமாகிய 'தர்சம்' (அமாவாசை) முதலிய காலத்தைத் தெரிந்துகொள்வதற்காக ஆதித்யனாலும், கர்கர் முதலிய முனிவர்களாலும் "ஜ்யோதிஷம்" என்ற சாஸ்திரம் இயற்றப்பட்டிருக்கிறது அது பல வகைப்படும்.

शाखान्तरीयगुणोपसंहारेण वैदिकानुष्ठानक्रमविशेषज्ञानाय कल्पसूत्राणि। तानि च प्रयोगत्रयभेदात्रिविधानि। तत्र हौत्रप्रयोगप्रतिपादकान्याश्वलायनशाङ्खायनादि प्रणीतानि, आध्वर्यप्रयोगप्रतिपादकानि बोधायनापस्तम्बकात्यायनादि प्रणीतानि, औद्गात्रप्रयोगप्रतिपादकानि लाट्यायनद्राह्यायणादि प्रणीतानि ॥

வேறு சாகைகளிலும் கூறப்பட்ட சிற்சில அங்கங்களையும் சேர்த்து அநுஷ்டிக்கவேண்டிய கர்மாக்களைப்பற்றி தெரிந்துகொள்வதற்காக 'கல்ப ஸூத்ரங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் மூவகையான ப்ரயோகத்தை அநுசரித்து மூவகைப்படும். அவைகளுக்குள் "ஆச்வலாயனர்" "சாங்காயனர்" முதலிய ரிஷிகளால் இயற்றப்பட்ட கல்ப ஸூத்ரங்கள் ஹோதாவினுடைய ப்ரயோகத்தைப்பற்றியும், "போதாயனர்" "ஆபஸ்தம்பர்" "காத்யாயனர்," முதலியவர்களால் இயற்றப்பட்டவைகள் அத்வர்யுவினுடையதும், 'லாட்யாயனர்,' "த்ராஹ்யாயனர்", முதலியவர்களால் இயற்றப்பட்டவைகள் உத்காதாவினுடைய ப்ரயோகத்தைப்பற்றியும் கூறுகின்றன.

एवं निरूपितः षण्णामङ्गानां प्रयोजनभेदः। चतुर्णामुपाङ्गानामधुनाच्यते।

இம்மாதிரி ஆறுவிதமான வேதாங்கங்கள் எதற்காக இயற்றப்பட்டன என்பதைப் பற்றி சொல்லப்பட்டது. இப்பொழுது நான்குவிதமான உபாங்கங்களைப்பற்றி சொல்லப்படப்போகிறது.

तत्र सर्गप्रतिसर्गवंशमन्वन्तरवंशानुचरित प्रतिपादकानि भगवता बादरायणेन कृतानि पुराणानि। तानि च ब्राह्मं, पाद्मं, वैष्णवं, शैवं, भागवतं, नारदीयं, मार्कण्डेयं, आग्नेयं, भविष्यं, ब्रह्मवैवर्तम्, लैङ्गं, वाराहं, स्कान्दं, वामनं, कौर्मम्, मात्स्यं, गारुडम्, ब्रह्माण्डंचेत्यष्टादश ॥

(1) ஸிருஷ்டி, பிரளயம், வம்சம், மன்வந்தரம், வம்சங்களுடைய சரித்திரம், இவைகளைப்பற்றி விஸ்தாரமாகக் கூறக்கூடியவைகள் புராணங்கள். அவைகளெல்லாம் பாதராயணரால் (வியாஸரால்) இயற்றப்பட்டன. அவைகள், "ப்ராமம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்னேயம், பவிஷ்யம், பிரம்ம வைவர்தம், லைங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம், மாத்ஸ்யம், காருடம், பிரம்மாண்டம்". என்று மொத்தம் பதினெட்டு

'आद्यं सनत्कुमारेण प्रोक्तं वेदविदां वराः।
द्वितीयं नारसिंहाख्यं तृतीयं स्कान्दमेव च॥
चतुर्थम् शिवधर्माख्यं दौर्वासं पञ्चमं विदुः।
षष्ठं तु नारधीयाख्यं कापिलं सप्तमं विदुः॥
अष्टमं मानवं प्रोक्तं ततश्चोशनसेरितम्।
ततो ब्रह्माण्डसंज्ञं तु वारुणाख्यं ततःपरम्।
ततः कालीपुराणाख्यं वासिष्ठं मुनिपुङ्गवाः।
ततो वासिष्ठलैङ्गाख्यं प्रोक्तं माहेश्वरं परम्।
ततस्साम्बपुराणाख्यं ततस्सौरं महाद्भुतम्।
पराशरं ततः प्रोक्तं मारीचाख्यं ततःपरम्॥
भार्गवाख्यं ततः प्रोक्तं सर्वधर्मार्थसाधकम्॥"

एवमुपपुराणान्यनेकप्रकराणि द्रष्टव्यानि॥

'ஸநத்குமார புராணம், நாரஸிம்மபுராணம், ஸாந்தம், சிவதர்மம், தௌர்வாஸம், நாரதீயம், காபிலம், மானவம், ஔசனஸம், பிரம்மாண்டம், வாருணம், காலீபுராணம், லைங்க புராணம், மாஹேச்வரம், ஸாம்பபுராணம், ஸௌரம், பாராசரம், மாரீசம், பார்கவம் என்று உபபுராணங்கள் பலவிதமாக இருக்கின்றன.

(தொடரும்)

### திருக்குடந்தை.

ஸ்ரீ எம்பெருமானார் மஹோத்ஸவம்.

இம்மா நகரில், இவ்வருஷம், ஸ்ரீ எம்பெருமானார் மஹோத்ஸவம் மிக விமர்சையாக நடந்தேறியது. திவ்யப்ரபந்த வேதபாராயண கோஷ்டிகளும், 4ம் திருநாள் முதல் 9ம் திருநாள் வரை வித்வான்களான, ஸ்ரீ. உ. வே தென்பரை, வெங்கட வரதாசாரியார், குருச்சி, ஸ்ரீநிவாஸரங்காசாரியார், வடுவூர், வங்கீபுரம், கிருஷ்ணமாசாரியார், வாஜபேயம், வே ஸ்ரீநிவாஸதாதாசாரியார், சிரோமணி, ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியார், ஸ்ரீ தேசிகதர்சன துரந்தர, இளையவில்லி தி ஸ்ரீநிவாஸாசாரியார், இந்த ஸ்வாமிகளால் 1. உடையவரும்—உலகினரும் 2 பேதா பேத சுருதிகளின் ஐகமத்யம், 3. உடையவரும் — அமுதனாரும். 4, உடையவர் ஸூக்தியின் பெருமை, 5, உடையவரும்— அத்வைத மத கண்டனமும் 6. மாறனும்— யதிராசனும், என்கிற விஷயங்களின் உபந்யாஸங்களும் இனிது நடைபெற்றன. ஷை ஸந்நிதி ஆதீனகர்த்தா, எம்புலி, சக்கிரவர்த்தி அய்யங்கார், ஷை ஸந்நிதியில் விசேஷ கைங்கர்யங்கள் செய்து மின்சார விளக்குகளால் அலங்கரித்திருந்ததும் பெரிதும் பாராட்டுதற்குரியதே. ஓர் ரஸிகன்.

### கும்பகோணம்.

நமது நகர் பெரியதெருவில் பிருந்தாவனம் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வியாஸராஜ மட பீடத்தைச்சேர்ந்த மூன்று ஸ்வாமிகளில் ஒருவரும் ஸ்ரீவியாஸராஜ ஸ்வாமிகளுக்குப்பின் பதினான்காமவருமான ஸ்ரீவித்யாபதி தீர்த்த ஸ்வாமிகளின் ஆராதனை வழக்கம் போல் இவ்வருஷமும் அபிஷேகமும், அலங்கார பந்தி, பிராம்மண ஸந்தர்ப்பணை முதலிய விமர்சையுடன் 23-4-39 பானுவாரத்தன்று ஸ்ரீமான் எம் ராமராவ் அவர்களின் மேற்பார்வையில் பூஜகர் ஸ்ரீமான் நரசிம்மாசாரியாரால் கொண்டாடப்பட்டது. அவர்களில் மற்றொருவரும் ஷை ஸ்ரீவித்யாபதிகளின் குருவுமான ஸ்ரீ வித்யாநாததீர்த்த ஸ்வாமிகளின் ஆராதனையும் நாளது 29-4-39 சனிக்கிழமையன்று நடைபெறும். ஒரு நிருபர்.

### முடிகொண்டான்.

ஆசார்யாள் ஸ்ரீமுக படனம்.

நாளது 17-4-39 முடிகொண்டான் கிராமத்தில் மகா-ள-ள-ஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் முன்னில் முடிகொண்டான் கிராமமகாஜனங்கள் கூடிய ஸபையில் ஸாமவேத பாடசாலையில் பரித்தியூர் ஸ்ரீ கோதண்டராம தீக்ஷிதர் ஸ்ரீமுக படனம் பண்ணியது அதை ஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் ஆமோதித்துதானும் ஸ்ரீ ஆசாரியாளிடம் தனக்கு இருக்கும் ப்ரீதியை வெகுவாய் காண்பித்து பேசி உபன்யாஸம்செய்ததுரொம்பமெச்சத்தக்கது

### ஸ்ரீராமநவமி உத்ஸவம்.

நன்னிலம் தாலூகா 96 செ. பரித்தியூர் கிராமத்தில் பிரம்மஸ்ரீ ராமாயணம் கிருஷ்ண சாஸ்திரியவரால் நிர்மாணம் பண்ணப்பட்ட ஸ்ரீ ராகவன் ஸந்நதியில் வெகு காலமாய் நடந்துவந்த ஸ்ரீராமநவமி உத்ஸவம் இவ்வருஷம் வெகுதான்யஸு பங்குனிமீ 16உ முதல் ஆரம்பித்து தினந்தோறும் காலையில் அபிஷேகம்,அர்ச்சனை வேதபாராயணம் இரவு பாகவத ஸம்பிரதாய யோத்ஸவம் பானக பூஜையும் திவ்ய நாமம் இவைகள் ஷை யூர் ஸ்ரீ வைத்தியநாத தீக்ஷிதர் விசுவநாத சாஸ்திரிகள் இவர்களை முன்னிட்டு தேதினீபுரம், வெங்கட்டராம பாகவதர் இவர்கள் உத்ஸவம் நடக்கும்போது ஷை கோதண்டராம தீக்ஷிதருடைய ஸ்நேகிதத்திற்கிணங்கி கோட்டூர் மகா-ள-ஸ்ரீ சுப்பிரமணிய பாகவதர் வந்து பத்து நாள் உத்ஸவ பூர்த்தி நடந்து கடைசி நாள் வஸந்தோத்ஸவம் பண்ணி ஆஞ்சநேயர் உத்ஸவமும் மிகவும் சிறப்பாக நடந்து பாகவதரையும் அபிமானித்து அனுப்பப்பட்டது வெகுவாக ஆனந்திக்கத்தக்கது.

த கோதண்டராம தீக்ஷிதர்.

### கல்கத்தா.

ஸ்ரீ ஸீதா கல்யாண மஹோத்ஸவம்.

Bowbazar Srinath Das Lane ல் உள்ளதும் ஸ்ரீமத் பகவத் பாத சங்கராசார்ய ஸ்வாமிகள் இவ்விடம் வந்த போது பாத தூளிகள் பட்டதுமான ஸ்ரீ ராமகிருஷ்ண பஜனாலயத்தில் நேற்று 16உ ஞாயிற்றுகிழமை ஸீதா கல்யாண மஹோத்ஸவமும் மறுநாள் ஆஞ்சநேய உத்ஸவமும் நடந்தது. ஞாயிற்றுக்கிழமை தினம் ஹௌராவிலுள்ள பஜனை மடத்து மெம்பர்களும், பவானிப்பூரிலுள்ள பஜனை மடத்து மெம்பர்களும் இன்னும் ஆஸ்திக பக்தியுள்ளவர்களும் வந்திருந்து மிகவும் ஒற்றுமையாகவும் சிரத்தையாகவும் நடத்தினார்கள். பிராமண ஸமாராதனையும் நடந்தது.

தியாகராஜன்.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்.

### திருவாடி.

ஸ்ரீயுவஜன வேத ஸம்வர்த்தினீ ஸபையின் ஆதரவில் இந்த மஹோத்ஸவம் வழக்கம் போல் இவ்வருஷமும் நன்கு நடைபெற்றது. அன்றைய தினம் காலையில் ஸ்ரீ பகவத் பாதர்களுக்கு விசேஷமான பூஜையும் உபநிஷத் பாராயணமும் அர்ச்சனைகளும் நடத்தப்பட்டன. மாலை மூன்று மணிக்கு சாஸ்திரரத்னாகரம் அத்வைத ஸபா பண்டிதர் பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரியவர்கள் "ஆசார மஹிமை" என்ற விஷயத்தை எளிய நடையில் நன்கு உபன்யஸித்தார்கள். ஐந்து மணிக்கு ஸ்ரீ ஆசார்யாளின் படத்தை நன்கு அலங்கரித்து மேளம் பாண்டு பஜனை வேத பாராயணம் இவைகளுடன் ஊர்வலம் நடந்தது. நகரிலுள்ள ஆஸ்திகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். ஸம்ஸ்கிருத கலாசாலை தலைமையாசிரியர் டாக்டர் வித்யாரத்னம் P. S. சுப்ரமண்ய சாஸ்திரியவர்கள், கவர்ன்மெண்டு வக்கீல் V. சுப்ரமண்யய்யர், மகா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் அய்யர், ஸ்ரீமான் ராமஸ்வாமி தீக்ஷிதர், மேலக்காவேரி பிரம்மஸ்ரீ சாஸ்திர விசாரத சிவராம சாஸ்திரியவர்கள் முதலிய ஆஸ்திகர்களும் இதில் கலந்து கொண்டனர். இதை மிகவும் பக்தியுடனும் சிரத்தையுடனும் நடத்திய மேற்படி சபை அங்கத்தினர்களின் உத்ஸாஹம் போற்றத்தக்கதாகும். இதில் கலந்து கொண்ட யாவருக்கும் ஸ்ரீ பகவத் பாதர்களின் பூர்ணமான அநுக்ரஹம் ஏற்படுமாறு ஸர்வேச்வரனை வேண்டுகிறேன்.

சேஷரும சாஸ்திரி.

### பழூர்.

பிரமாதி வருஷம் சித்திரை-மீ 11உ (24-4-39) திங்கட்கிழமை யன்று ஷை யூர் ரிடையர்டு டிபுடி கலெக்டர் மகா-ா-ஸ்ரீ பி. இராமச்சந்திரய்யர் அவர்கள் கிருஹத்தில் வேதவேதாந்த பாடசாலைகளின் உபாத்யாயர்கள் வித்யார்த்திகள் இவர்களால் காலையில் உபநிஷத்பாராயணங்கள் செய்துவிட்டு மஹாந்யாஸ பூர்வகமாக ஸ்ரீபகவத்பாத பூஜை செய்யப்பட்டது. பாஷ்யபாராயணங்களும் அச்சமயம் செய்யப்பட்டது. பிற்பாடு நைவேத்ய நீராஜனங்கள் செய்யப்பட்ட பின் தக்ஷிணாமூர்த்தி யஷ்டகம் சொல்லி நமஸ்காரங்கள் செய்யப்பட்டது. பின்பு பிருமண ஸந்தர்ப்பணம் பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் மகா-ா-ஸ்ரீ அய்யர் அவர்களால் ரொம்பவும் சிரத்தையுடன் நடத்தப்பட்டது ரொம்பவும் போற்றத்தக்கது. பிறகு ராத்திரி போஜனத்திற்குப் பிறகு ஸ்ரீ ஆசார்யபடத்திற்கு புஷ்பங்களால் விசேஷமாக அலங்காரம் செய்தார்கள். வேதாந்த பாடசாலை உபாத்யாயர் பிரும்மஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஆசார்ய சரித்திரத்தை விஸ்தாரமாக யாவரும் கேட்டு ஆனந்திக்கும்படி உபன்யஸித்தார்கள். பிறகு கிராம ஜனங்கள் யாவருக்கும் பிரஸாதம் விசேஷமாக வழங்கப்பட்டு உத்ஸவம் இனிது முடிந்தது.

[ஒரு நிருபர்.]

### அரியலூர்

இவ்வருஷம் அரியலூரில் 4வது வருஷத்திய சங்கரஜயந்தி உத்ஸவம் 20—4—39 முதல் 24—4—39 வரையில் 5 தினங்களில் பிரதிதினமும் காலையிலும் உபநிஷத் பாராயணமும் ருத்திரியில் பிரம்மஸ்ரீ வாசுர் வி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள் [illegible] பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளாலும் வேதாந்த விஷயங்களைப்பற்றி உபன்யாசங்கள் நடைபெற்றன.

திருப்பதியிலிருந்து ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்யாள் அவர்களால் ஸ்ரீமுகம் மந்த்ராக்ஷதை முதலியவைகளுடன் திருப்பதி ப்ரம்மஸ்ரீ விஜயருகவ கனபாடி அவர்களை அனுப்பியிருந்தார்கள். ஷையர் ஜயந்திதினம் கூட இருந்து மஹாந்யாஸ பூர்வகம் பூஜையும் ப்ராஹ்மண ஸந்தர்ப்பணையும் நடந்து மாலையில் வேதபாராயணத்துடன் பரமாசார்ள் ப்ரதிபிம்பத்துடன் வீதி பிரதக்ஷிணம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த வருஷ ஸ்ரீ மதாசார்யாள் அனுக்கிரகத்துக்கு கிராமவாஸிகள் பாத்திரரானபற்றி மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

என். சுப்பரமண்ய அய்யர், வக்கீல்.

### குன்னக்குடி ஷண்முகநாதபுரம்.

பிரமாதிஞு சித்திரைமீ 11உ 24-4-39 சோமவாரம் சுத்தபஞ்சமி தினம் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம் க்ஷுர வியாயநிபுண பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் கிருஹத்தில் கொண்டாடப்பட்டது. அன்று காலை 5மணி முதல் பகல் 1மணி வரை ஸ்ரீ சங்கரருக்கு மஹாந்யாஸ பூர்வ ஏகாதச ருத்திர ஜெபத்துடனும் உபநிஷத் பாராயணத்துடன் அபிஷேகமும் அர்ச்சனை முதலானதுகளும் அவர்களாலேயே செய்யப்பட்டதை பார்த்த மகாஜனங்கள் ஸ்ரீசங்கரரே இருந்து பூஜை செய்து பிரசாதம் அனுக்கிரஹம் செய்ததுபோல் மகிழ்ச்சி அடைந்தது போற்றத்தக்கது. 1மணி முதல் 2மணி வரை சந்தர்ப்பணம் நடந்தது. அப்பால் அவர்கள் வழக்கமாய் போட்டுவரும் ஸ்ரீமத் சத்குரு உண்டியலை தேவகோட்டை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ P. A. கேசவய்யர் அவர்கள் B.A, L.T., அவர்களால் உடைக்கச்செய்ததில் ரூ (620—0—6) இருந்தது. அதிலிருந்து தர்மகைங்கரிய செட்டுப்படி விதைதானம், பூரி, தர்மவிநியோகங்கள் முதலானதுகள் செய்தது போக பாக்கி ரூ(1—12—3)மும் மறுபடி மேற்படி உண்டியலில் சேர்க்கப்பட்டது. ஸ்ரீமத் ஆதிசங்கராசாரியார் அவர்கள் அவதாரத்தை காமாக்ஷிபுரம் ராமாயண ரத்னம் பிரம்மஸ்ரீ சாமா சாஸ்திரிகள் அவர்களால் பாஷ்யத்துடன் பிரவசனம் செய்யப்பட்டதும், பக்தர்கள் உபன்யாஸமும்; வாழ்த்துதலும் சங்கீதக்கச்சேரிகளும் பஜனைகளும் செய்யப்பட்டு ராத்திரி 12 மணிக்கு மங்களகானத்துடன் உத்ஸவமும் வெகு விமரிசையாய் பூர்த்தியானது போற்றத்தக்கது. பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் உண்டியல் உடைக்கும் சமயம் இந்த ஸ்ரீசத்குரு உண்டியலை தாதுஞு முதல் தர்மகைங்கரியத்துக்காகவே போட்டு வருகிறதாகவும் ஸ்ரீசத்குரு ஒருவர் தான் நமக்கு ஜீவதாதுகுடுத்து நம்மக்களை ரக்ஷிக்க முடியுமென்றும் அந்த ஜீவதாது குடுத்து நல்ல வழியில் ஜீவனை பிரவர்த்திக்கச்செய்து இந்த ஸகுண உபாசத்திலிருந்து நிர்குணத்துக்கு வர ஸ்ரீமத் ஆசார்யாள் கிருபை இல்லாமல் நாம் பாத்திரர்கள் ஆக முடியாதென்றும் என் சொந்த அனுபோகத்தால் அவர்கள் அனுக்கிரஹத்தைக்கொண்டே இவ்வாழ்வு நடத்திவந்ததையும் வருகிறதையும் ஆனகயால் தாங்களும் இதேமாதிரி ஒவ்வொரு கிருஹத்திலும் உண்டியல்கள் போட்டு ஆர்யதர்மத்தை விருத்திசெய்து ஸ்ரீமத் ஆசார்யாள் கிருபைக்கு பாத்திரர்கள் ஆகவேணுமாய் பிரார்த்தித்து மங்களகானத்துடன் பூர்த்தி செய்ததை மெச்சாதாரில்லை.

ஒரு நிருபர்.

### சென்னை.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் ஆதிகேசவப் பெருமாள் அக்ராஹாரத்து மண்டபத்தில் நிகழும் பிரமாதி ஞு சித்திரைமீ 11உ (24-4-39) சோம வாரம் ஆரம்பித்து ஷை சித்திரைமீ 17உ (30-4-39 ஆதிவாரம் பூர்த்தியாகிறது. பிரதிதினமும் காலை மாலை பூஜைகளும், இரவு 8- மணிக்கு உபன்யாஸங்களும் நடைபெறும்.

29-4-39 சனி வாரம் இரவு $7\frac{1}{2}$-மணிக்கு மேல் ஸ்ரீமத் பகவத் பாதாசார்யாளின் திருவுருப்படம் திருவீதி வலம் வரும். பக்தர்கள் அனைவரும் வந்திருந்து ஆசார்யாளின் பூர்ண அனுக்கிரகத்தை பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

ஒரு நிருபர்.

### ஸ்ரீவைதிக வர்த்தினீ ஸபா, புதுக்கோட்டை.

#### ஸ்ரீ சங்கர ஜயந்தி.

இச்சபையின் ஆதரவில் இவ்வருஷத்திலும் ஸ்ரீபரமாசார்யாளின் கிருபையை முன்னிட்டு அடியிற்கண்ட பிரகாரம் 21—4—39 முதல் 9—5—39 முடிய நடத்தப்பட்டது.

மாயவரம் பிரும்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் குமாரர் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் மூலமாக 21-4-39 முதல் 1—5—39 முடிய பிரதிதினம் மாலை 7-மணி முதல் 8-30 மணி வரை ஸ்ரீ சங்கர ஜயந்தி கதையின் ப்ரவசனம் நடைபெற்றது.

ஆரம்பதினமான 24-4-39உ திங்கட்கிழமை காலையில் 7-மணிக்கு ஸ்ரீ பரமாசார்யாளுக்கு ஷோடசோபசார பூஜைகள் முதலியவ நடத்தி ஸஹஸ்ரநாம அர்ச்சனை உபநிஷத்பாராயணம் முதலியதும் நடந்தது

பூர்த்தி தினமான 9-5-39உ காலையில் பூஜைகள் முதலியன நடத்தி மாலையில் ப்ரவசனம் முடிந்தவுடன் ஸ்ரீ பரமாசார்யாளின் படத்தை சிவிகையில் ஆரோஹணிக்கச் செய்து உபநிஷத் பாராயணம், மங்கள வாத்தியம், பஜனை கோஷ்டி ஸஹிதம் வழக்கம் போல் கிராம பிரதக்ஷிணமும் நடந்தது,

24-4-39உ முதல் 9-5-39உ முடிய பிரதி தினம் இரவு கதா ப்ரவசனம் முடிந்த பிறகு பக்கவாத்யங்களுடன் பகவத் பஜனையும்

ஷை தினங்களில் பிரதிதினம் காலையில் தருத்தபண்டிதர்களைக்கொண்டு 'ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணமும்', 'ஸ்ரீ நித்திலான சங்கர விஜய பாராயணமும்' நடைபெற்றன, மே மாதம் 2உ முதல் அடியிற்கண்ட உபன்யாஸங்கள் நடந்தன,

பிரும்மஸ்ரீ தக்ஷிணா சாஸ்திரியவர்கள் ஆசார்யமஹிமை, ஏ கெ பஞ்சாபகேச அய்யர் அவர்கள் எம் ஏ எல் டி, சங்கரதர்சனம் வி வெங்கடாச்சாரியார் அவர்கள் தாஞ்சிகாரி, மதத்திரயம், ஸி கிருஷ்ணமூர்த்தி அய்யர், அவர்கள் பி ஏ பி எல் வக்கில் பக்தியின்பாரம்யம், ராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் வ்யாகரண சிரோமணி கைர்வஸ்ய மஹத்வம், சாபகேச கனபாடிகள் அவர்கள் ஸம்ஸ்காரங்கள், எஸ் பஞ்சாபகேச சாஸ்திரியவர்கள் தோத்ரம்

டி மலையப்ப சாஸ்திரி,
காரியதரிசி,


முக்கிய கவனிப்பு

3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கநகைகளைப்போன்ற "கன்ஹாஸ் ப்ளேட் ரோல்ட்கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர் :—எஸ். கன்னுசாமி பத்தர் பெரிய தெரு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

H
24

18

4-5-1939

215280.

999

999

215280

3 O MAY 1939

22

REGD No. M. 2913. ARYA DHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस்तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்
களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஞு சித்திரை-மீ 21உ 1939-ஞு மே-மீ 4உ | லர-18

## போலீஸ் அதிகாரியின் தீரச்செயல்

### பெரியகுளத்தில் ஒரு சம்பவம்

#### ராவ்சாகேப் கிருஷ்ணசாமியய்யர் உயிர் தப்பிய விந்தை

பெரிய குளம் டெப்டிசூபரின்டெண்டு ராவ் சாகேப் ஈ. வி. கிருஷ்ணசாமியய்யர் பெரிய குளத்தைச் சேர்ந்த சின்னமனூரில் ஒடையா தேவன் என்ற பிரபல கேடியைக் கைது செய்ய வேண்டி. சென்ற பொழுது அந்தக்கேடி ஒரு துப்பாக்கியினால் டெப்டி சூபரின்டெண்டை நோக்கிச் சுட்டானாம். தெய்வச் செயலாகக் குண்டு கால் சட்டையில் பட்டு விழுந்து விட்டது. ஸ்ரீ அய்யர் பயப்படாமல் அவனைச் சேர்த்துக் கட்டிவிட்டார். அவனும் கட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றும், கடைசியில் தப்பமுடியவில்லை. ஆத்திரம் கொண்டு ரிவால்வர் முனையினால் ஸ்ரீ அய்யர் தலையில் அவன் அடித்ததாகவும், ரத்தம் பீறிட்டு வந்ததென்றும் கூறப்படுகிறது. உடனே உத்தம பாளையம் சப்-இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வீராசாமியய்யர் தனது துப்பாக்கி மூலம் இருதடவை ஒடையாதேவனைப் பார்த்துச் சுடவே அவன் கீழே விழுந்து விட்டான். பிறகு அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். இவன் பல திருட்டுகளுக்குக் காரணமாயிருந்ததாகவும், பல நாட்களாக இவனைப் போலீசார் பிடிக்க முயன்றும் இவன் தப்பி வந்தானாம். டிப்டிசூபரின்டெண்டு ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்ததைக்கண்டு, அவரை யாவரும் பாராட்டினார்கள்.

## புதிய காங்கிரஸ் தலைவர்

### காங்கிரஸ் கூட்டத்தில் கலவரம்

#### பலருக்குப் படுகாயம்.

அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபை அக்கிராசனாதிபதி ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தமது தலைவர் பதவியை ராஜிநாமா செய்து விட்டார். இவருக்குப் பதில் பழைய தலைவரான பாபுராஜேந்திரபிரசாதை மீண்டும் காங்கிரஸ் தலைவராக நியமித்திருக்கிறார்கள், இவர் மீண்டும் தலைவராக வருவதை சில காங்கிரஸ்காரர்கள் ஆக்ஷேபித்துக் கூட்டத்தில் "இந்தத் தலைவர் எங்களுக்கு வேண்டாம்" என்று கத்தினார்கள். சிலர் கலகம் செய்தார்கள். தாறுமாறாகத் தாவித்தனர். தலைவரை அடிக்கவும் முயன்றனர். காங்கிரஸ் தலைவர்களின் போட்டோக்களைச் சேதப்படுத்திவிட்டார்கள். டாக்டர் பிரபுல்லாகோஷ் என்ற தலைவர் படுகாயமுற்றார்.

## இரவாஞ்சேரியில் முஸ்லீம்கள் அட்டூழியம்

### காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டார்கள்

#### அதிகாரிகளுக்கு மனு

(நமது விசேஷ நிருபர்)

1—5—39உ இரவாஞ்சேரி கிராமத்தில் நடைபெற்ற காங்கிரஸ்கூட்டத்தில் பலத்த கலாட்டா நடைபெற்றது. கூட்டத்தில் பேசிய காங்கிரஸ்காரர்களை முஸ்லீம்கள் தாக்கினார்கள். கூட்டத்தில் தண்ணீரை வாற்றினார்கள். கூட்டம் கலைந்துபோன பிறகும் பொதுமக்களை முஸ்லீம்கள் துரத்திச் சென்று கற்களாலும் தடிகளாலும் தாக்கினார்களென்று தெரிகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரான ஜனாப் எஸ். ஏ. ரஹீம் பலமாகத் தாக்குண்டு மூர்ச்சித்துப் போனார். கூட்டத்திலிருந்த அம்மாபேட்டை வேங்கட்டராமய்யர், (சட்டசபை மெம்பர்) ஆர். கிருஷ்ணமூர்த்தி முதலியவர்களும் தாக்கப்பட்டார்கள். ஜனாப் ரஹீம் இரவாஞ்சேரி கிராம வைத்தியசாலையில் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறார்.

மணவாளநல்லூர் கிராம முன்சீப் போலீசாருக்கு இது விபரம் ரிபோர்ட் கொடுத்திருக்கிறார். அதிகாரிகளுக்கு ஸ்ரீ அம்மாபேட்டை வேங்கட்டராமய்யர் இதுபற்றி தந்தி கொடுத்திருக்கிறார்.

## ஓர் காங்கிரஸ் வாதியின் உண்ணாவிரதம்

### சர்வாதிகாரிகளின் மீது வெறுப்பு

#### அந்நிய சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமாம்

மதுரையைச்சேர்ந்த திருப்பரங்குன்றத்தின் மலையிலிருக்கும் பாண்டவர் சயனம் என்னும் குகையில் நேற்று முதல் பாலசுப்பிரமணியம் என்ற ஒரு காங்கிரஸ் வாதி உண்ணாவிரதம் அநுஷ்டித்து வருகிறார். காரணம் என்னவென்றால் சர்வாதிகாரிகள் எளிய நாடுகளை அடிமைப்படுத்திவருகிறார்களாம். இந்த சர்வாதிகாரிகளின் தேச சாமான்களை இந்தியர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமாம். பொது மக்களின் கவனத்தைக் கவரவேண்டி 21 நாட்கள் இவர் உண்ணாவிரதம் அநுஷ்டிப்பாராம். மதுரைப் பக்கங்களில் இதனால் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனி, இதாலி, ஜப்பான் சாமான்களைப் பகிஷ்கரிக்கும்படி இவர் எல்லோரையும் கேட்டுக்கொண்டார்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம், லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ப்ரஸ்தானபேதம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

न्याय आन्वीक्षकी पञ्चाध्यायी गौतमेन प्रणीता। प्रमाण प्रमेय संशय प्रयोजनदृष्टान्त सिद्धान्तावयव तर्क निर्णयवाद जल्पवितण्डाहेत्वाभासच्छल जाति निग्रहस्थानाख्यानां षोडशपदार्थानामुद्देशलक्षण परीक्षाभि स्तत्त्वज्ञानं तस्याः प्रयोजनम् । एवं दशाध्यायात्मकं वैशेषिकं शास्त्रं कणादेन प्रणीतम् । द्रव्यगुण कर्मसामान्यविशेषसमवायानां षण्णां पदार्थानाम मात्रसमानां साधर्म्यवैधर्म्याभ्यां व्युत्पादनं तस्य प्रयोजनम् । एतदपि न्यायपदेनोक्तम् ॥

2. ஆன்வீக்ஷிகி என்று சொல்லப்படுகிற 'நியாய சாஸ்திர'மும் ஐந்து அத்தியாயங்கள் கொண்டதாக 'கௌதம முனிவரால்' இயற்றப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரத்திற்கு 'பிரமாணம், ப்ரமேயம், ஸம்சயம், பிரயோஜனம், திருஷ்டாந்தம், ஸித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, ஹேத்வாபாஸம், சலம், ஜாதி, நிக்ரஹஸ்தானம்' என்ற பதினாறு பதார்த்தங்களுடைய தத்வத்தை அறிந்து கொள்வதுதான் பிரயோஜனம். (அப்படி அறிந்து கொள்வதால் 'எல்லா துக்கங்களுடைய நாசம்' என்கிற மோக்ஷம் ஏற்படுகிறது என்று இந்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.) மேற்குறிப்பிடப்பட்ட தத்வஞானமும், பதினாறு பதார்த்தங்களுடைய 'உத்தேசம்' (பெயரை மட்டும் சொல்லி பதார்த்தத்தை குறிப்பிடுவது) 'லக்ஷணம்' 'பிறகு லக்ஷணத்தைப்பற்றி விமர்சம் செய்வது' இவைகளால் ஏற்படுகிறது.

இவ்விதமாகவே பத்து அத்தியாயங்கள் கொண்ட 'வைசேஷிகம்' என்ற சாஸ்திரமும் 'கணாதர்' என்ற முனிவரால் இயற்றப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரத்திற்கு 'அபாவம்' என்ற பதார்த்தத்தை ஏழாவதாக உடைய, 'திரவ்யம், குணம், கர்ம, ஸாமான்யம், விசேஷம், ஸமவாயம்,' என்ற ஆறு பதார்த்தங்களுக்குள்ளும், சிற்சில பதார்த்தங்கள் சிற்சில தர்மங்களைக் கொண்டு வேறுபட்டிருக்கின்றன, என்று தெளிவாக எடுத்துக்கூறுவதுதான் பிரயோஜனம். உபாங்கங்களுக்கொள்ளொன்றாகிய 'நியாயம்' என்ற பதத்தால் இந்த வைசேஷிக சாஸ்திரமும் குறிப்பிடப்படுகிறது.

एवं मीमांसापि द्विविधा, कर्ममीमांसा शारीरकमीमांसाचेति । तत्र द्वादशाध्यायी कर्ममीमांसा "अथातो धर्मजिज्ञासा" इत्यादि, "अन्वाहार्ये च दर्शनात्" इत्यन्ता भगवता जैमिनिना प्रणीता । तत्र धर्मप्रमाणम्, धर्मभेदाभेदौ, शेषशेषी भावः, क्रत्वर्थपुरुषार्थभेदेन प्रयुक्तिविशेषः, श्रुत्यर्थपठनादिभिः क्रमभेदः, अधिकारविशेषः, सामान्यातिदेशः, विशेषातिदेशः, ऊहः, बाधः, तन्त्रम्, प्रसङ्गश्चेति क्रमेण द्वादशाना मध्यायानामर्थः

3. உபாங்கங்களில் ஒன்றாகிய மீமாம்ஸையும், கர்மமீமாம்ஸை சாரீரக மீமாம்ஸை, என்று இருவகைப்படும் அவைகளுக்குள் 'अथातो धर्मजिज्ञासा' என்று ஆரம்பித்து 'अन्वाहार्येचदर्शनात्' என்ற ஸூத்திரம் முடிய 12 அத்தியாயங்கள் கொண்டதான 'கர்மமீமாம்ஸை' ஜைமினி மஹரிஷியால் இயற்றப்பட்டது. அதில் பன்னிரண்டு அத்தியாயங்களிலும் முறையே அடியிற்கண்ட விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

(1) தர்மாதர்மத்திற்குப் பிரமாணமாகிய 'சுருதி' 'ஸ்மிருதி' முதலியவைகள்; (2) ஹோமத்தைக்காட்டிலும் யாகம் வேறுபட்டது, யாகத்தைக்காட்டிலும் தானம் வேறுபட்டது, என்ற 'கர்மபேதம்,' அதற்குப் பிரமாணங்கள், (3) 'அங்காங்கி பாவம்' (இது அங்கம், இது ப்ரதானம்) அதற்குப் பிரமாணங்கள். (4) 'க்ருத்வர்த்தம்' (யாகத்திற்காக அனுஷ்டிக்கப்படுவது) 'புருஷார்த்தம்' (புருஷனுடைய நன்மைக்காக அனுஷ்டிக்கப்படுவது. (5) 'சுருதி' 'அர்த்தம்' 'பாடம்' முதலிய பிரமாணங்களால், இதற்கு பிறகு இந்த கர்மாவை அனுஷ்டிக்கவேண்டும், என்ற 'கிரமம்' (6) எந்த கர்மாவை அனுஷ்டிப்பதற்கு யாருக்கு 'அதிகாரம்,' (7) பிரகிருதியைப்போல் விகிருதியை அனுஷ்டிக்கவேண்டும் என்று பொதுவாக 'அதிதேசம்' (8) குறிப்பிட்ட சில விகிருதிகளுக்கு சில ப்ரகிருதிகளிலிருந்து அதிதேசம், என்ற 'விசேஷாதிதேசம்' (9) பிரகிருதியிலிருந்து வரக்கூடிய 'மந்திரம்' 'ஸாம' 'ஸம்ஸ்காரம்' இவைகளை விகிருதி யாகத்திலுள்ள திரவ்ய தேவதைகளை அனுசரித்து மாற்றிக்கொள்ளுதல் என்ற 'ஊஹம்' (10) பிரகிருதியிலுள்ள பிரயோஜனமில்லாமையால் விகிருதியில் சில பதார்த்தங்களை அனுஷ்டிக்காமலிருத்தல் என்ற 'பாதம்' (11) தந்த்ரம், (12) பிரஸங்கம்.

तथा सङ्कर्षणकाण्डमध्याय चतुष्टयात्मकं जैमिनि प्रणीतम् ॥ तच्च देवताकाण्डसंज्ञया प्रसिद्धमप्युपासनाख्यकर्मप्रतिपादकत्वात्कर्ममीमांसान्तर्गतमेव ॥

நான்கு அத்தியாயங்களடங்கிய "ஸங்கர்ஷண காண்டமும்" ஜைமினி மஹரிஷியால் இயற்றப்பட்டதே. அதற்கு தேவதாகாண்டமென்ற பிரஸித்தி இருந்தபோதிலும் உபாஸனை என்ற கர்மாவைப்பற்றி கூறுகிறபடியால் அதுவும் கர்மமீமாம்ஸையில் சேர்ந்தது தான்.

तथा चतुरध्यायी शारीरकमीमांसा "अथातो ब्रह्मजिज्ञासा" इत्यादि: "अनावृत्तिश्शब्दादि"त्यन्ता जीवब्रह्मैकत्वसाक्षात्कारहेतुः श्रवणाख्यविचारप्रतिपादकन्यायानुपदर्शयन्ती भगवता बादरायणेन कृता । तत्र सर्वेषामपि वेदान्तवाक्यानां साक्षात्परम्परया प्रत्यगभिन्न द्वितीये ब्रह्मणि तात्पर्यमिति समन्वयः प्रथमाध्यायेन प्रदर्शितः॥

"अथातो ब्रह्मजिज्ञासा" என்று ஆரம்பித்து "अनावृत्तिश्शब्दात्" என்ற ஸூத்திரம் முடிய நான்கு அத்தியாயங்கள் கொண்டதான "சாரீரகமீமாம்ஸை" வியாஸ முனிவரால் இயற்றப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரம் ஜீவனும் பிரம்மமும் வேறல்ல, ஒன்றுதான் என்று அறிந்துகொள்வதற்கும் காரணமாக சிரவணம் என்ற விசாரத்தைப் பிரதிபாதனம் பண்ணக்கூடிய நியாயங்களை விளக்கக்கூடியதாகவும் இருக்கிறது. இதன் முதலத்தியாயத்தில் எல்லா வேதாந்த வாக்கியங்களும் ஸாக்ஷாத்தாகவோ அல்லது பரம்பரையாகவோ ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதாகவும் ஒன்றாகவுமிருக்கக்கூடிய பிரம்மத்தை போதிப்பதில்தான் தாத்பர்யம் என்ற "ஸமன்வயத்தை"ப்பற்றி கூறப்படுகிறது.

तत्र च प्रथमे पादे स्पष्टब्रह्मलिङ्गानि वाक्यानि विचारितानि । द्वितीये तु अस्पष्टब्रह्मलिङ्गानि उपास्यब्रह्मविषयाणि । एवं पादत्रयेण वाक्यविचारस्समापितः चतुर्थपादे तु प्रधानविषयत्वेन सन्दिह्यमानान्यव्यक्त जातिपदानि चिन्तितानि ॥

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் நான்கு பாதங்கள். அவைகளுக்குள் முதலத்தியாயத்தின் முதல் பாதத்தில் ஸ்பஷ்டமாக பிரம்மத்தை போதிக்கக்கூடிய (ஜீவனைக் கூறுவதா? அல்லது பிரம்மத்தைக் கூறுவதா? என்று சந்தேகிக்கத் தகாததான) வாக்யங்களைப்பற்றியும், இரண்டாவது பாதத்தில் பெரும்பாலும் ஜீவனைப் பற்றி கூறுவதா? அல்லது பிரம்மத்தைப் பற்றிக் கூறுவதா? என்று சந்தேகிக்கத் தகுந்ததாயும், உபாஸிக்கத்தகுந்த (ஸகுண) பிரம்மத்தைப் போதிக்கக்கூடியதாயுமுள்ள வாக்யங்களைப்பற்றியும், மூன்றாவது பாதத்தில் பெரும்பாலும், அறிவதற்கு மட்டும் தகுதியுள்ள (நிர்குண) பிரம்மத்தை போதிக்கக்கூடியதாயும், மேற்கூறியபடி சந்தேகிக்கத்தகுந்ததாயுமுள்ள வாக்கியங்களைப்பற்றியும் விசாரிக்கப்படுகிறது. இவ்விதமாக மூன்று பாதங்களிலும் வேதாந்த வாக்யங்களைப்பற்றிய விசாரம் முடிவடைந்தது. நான்காவது பாதத்திலோவென்றால் ஸாங்கிய மதத்தில் பிரஸித்தமான "பிரதானம்" என்பதைப் போதிக்கிறதோ என்று சந்தேகிக்கத் தகுந்த "अव्यक्तम्" "अजम्" முதலிய உபநிஷத்துக்களிலுள்ள பதங்களைப்பற்றி விசாரிக்கப்படுகிறது.

एवं वेदान्तनाम् द्वितीये ब्रह्मणि सिद्धे समन्वये तत्र संभावितं स्मृतितर्कादि विरोधमाशङ्क्य तत्परिहारः क्रियतइति अविरोधो द्वितीयाध्यायेन दर्शितः। तत्राद्यपादे सांख्ययोगकाणादादिस्मृतिभिः सांख्यादि प्रयुक्तैस्तर्कैश्च विरोधो वेदान्तसमन्वयस्य परिहृतः । द्वितीये पादे सांख्यादिमतानां दुष्टत्वं प्रतिपादितम्, स्वपक्षस्थापन परपक्षनिराकरणरूपपर्यवसायात्मकत्वाद्विचारस्य । तृतीयेपादे महाभूत सृष्ट्यादि श्रुतीनां परस्परविरोधः पूर्वभागेन परिहृतः, उत्तरभागेन तु जीवविषयाणाम् । चतुर्थपादेषु इन्द्रियविषयश्रुतीनां विरोधः परिहृतः ॥

இவ்விதமாக முதல் அத்தியாயத்தில் 'எல்லாவேதாந்த வாக்யங்களுக்கும் அத்விதீய பிரம்மத்தை போதிப்பதில்தான் தாத்பர்யம்' என்ற ஸமன்வயம் ஸித்தித்தபிறகு இரண்டாவது அத்தியாயத்தில் மேற்குறிப்பிடப்பட்ட ஸமன்வயத்திற்கு "ஸாங்கியம்" 'யோகம்' 'காணாதம்' முதலிய ஸ்மிருதிகளுடனும் சில அனுமானங்களுடனும் ஏற்படக்கூடிய விரோதத்தைக் கூறி, அவ்வித விரோதமொன்றுமில்லை என்று நிரூபணம் செய்யப்படுகிறது. ஆகவே இந்த இரண்டாவது அத்தியாயம் 'அவிரோதாத்தியாயம்' என்று கூறப்படும். இந்த அத்தியாயத்தின் முதற்பாதத்தில் ஸாங்கியம், யோகம், காணாதம், முதலிய ஸ்மிருதிகளுடனும், அந்த ஸ்மிருதிகளில் கூறப்பட்ட சில அனுமானங்களுடனும் ஸமன்வயத்திற்கு ஏற்படக்கூடிய விரோதத்திற்கு பரிஹாரம் பண்ணப்படுகிறது. விசாரமென்றால் தன்னுடைய மதத்தை ஸ்தாபிப்பதுடன் தன் மதத்திற்கு விருத்தமாகிய இதரர்களுடைய மதத்தையும் தன்னுடைய மதத்தை நிலைநிறுத்துவதற்காக தூஷிக்கவேண்டும். ஆகவே இரண்டாவது பாதத்தில் 'ஸாங்கியம் முதலிய ஸ்மிருதிகள் ஆத்மஸ்வரூபத்தைப் போதிக்கும் விஷயத்தில் முற்றிலும் சரியல்ல என்று தூஷிக்கப்படுகின்றன. மூன்றாவது பாதத்தின் முற்பகுதியில் மஹாபூத ஸிருஷ்டியைப்பற்றி கூறுகிற சுருதிகளுக்குள் தோன்றுகிற விரோதத்திற்கு பரிஹாரமும், பிற்பகுதியில் ஜீவனைப்பற்றி கூறுகிற சுருதிகளுக்குள் தோன்றுகிற விரோதத்திற்கு பரிஹாரமும், நான்காவது பாதத்தில் இந்திரியங்களைப்பற்றிக் கூறுகிற சுருதிகளுக்குள் தோன்றக்கூடிய விரோதத்திற்கு பரிஹாரமும் செய்யப்படுகின்றன.

(தொடரும்)



# கும்பகோணம் வர்த்தமானம்.

[ நமது விசேஷ நிருபர். ]

லைசன்சு பெறாத வாணவேலை.

கும்பகோணம், 3உ.

லைசென்ஸ் பெறாமல் வாணங்களைதயாரிக்க மருந்துக்களை வைத்திருந்ததாக உள்ளூர் போலீசார் வெங்கடாசலம் பிள்ளை மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சைக்கிளை திருடினதற்கு ஜாமீனில் விடுதலை.

எலக்டிரிக் கார்ப்பொரேஷன் காரியாலயம் குமாஸ்தா ஸ்ரீ கல்யாணம் ஐயர் சைகிளை 25—11—38ல் திருடிக் கொண்டு போனதாக நல்லூர் கிருஷ்ணமூர்த்தி அய்யரின் பேரில் உள்ளூர் போலீசார் தொடர்ந்த கிரிமினல் வழக்கில் இ. பி. கோ 379 பிரிவின்படி சப். மேஜிஸ்ட்ரேட் குற்றவாளியாக்கி முன்றுநபர் ஜாமீன் தலா ரூபா 100 வீதம் ஒரு வருடம் நன் நடத்தையுடனிருக்கும்படி உத்திர விட்டார்.

சைத்திர உற்சவ சிறப்பு.

ஸ்ரீ சக்கரபாணி சாரங்கபாணிக்கு சைத்திர உற்சவம் சிறப்பாக நடந்து வருகிறது. ஆலய டிரஸ்டிகள் இப்பத்திரிகையில் குறிப்பிட்டதை கவனித்து சுவாமியை காலையிலும் இரவிலும் சீக்ரமாய் எழுந்தருளச் செய்தனராயினும், அது இன்னம் அதிகமாய் கவனிக்கப்படவில்லை. வேதபாராயண கோஷ்டியும் உற்சவத்தை மேன்மைப் படுத்துவதாக இருக்கிறது ஐயங்கார் தெருவிலும், பாட்டாச்சாரியார்தெருவிலும் வேதகோஷ்டிகளுக்கு சந்தர்ப்பணம் நடந்துவந்தது.

சப்தஸ்தான உற்சவம்.

இந்நகர் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர ஸ்வாமிக்கு சப்தஸ்தான உற்சவம் நடந்து வருகிறது. இந்த வருடத்திற்கு முந்திய வருடங்களில் 10தின உற்சவம் நடத்தப்படவில்லை. இவ்வருடம் தான் 10 தின உற்சவம் நடத்தப்பட்டு வருகிறது.

முனிசிபல் கூட்டம்.

சென்ற மாதம் 29உ யில் முனிசிபல் மீட்டிங்கில் மின்சார விளக்கு விஷயத்தைப்பற்றி சர்க்கார் உத்திரவை ஏன் கவுன்ஸிலில் கொண்டு வந்து அறிவிக்கப் படவில்லை என்று கவுன்சிலர் ஸ்ரீமான் டி. எஸ் வெங்கட்டராமன், வி. எஸ். விஜயராகவாசாரியார், ஓ. என். சுப்பிரமணியம் கடினமாய் கேட்டார்கள். கமிஷனர் பதில் சொன்னதில் ஒரு மாதம் தான் தாமதமாகிறது அடுத்த கூட்டத்தில் வரும் என்று சொன்னார். இந்தக் கூட்டத்தில் மிகவும் சாமான்யமான விஷயங்களுக்கு பிரமாதமாக வாதம் நிகழ்ந்தது. வரிவிகிதம் பற்றி அப்பீல் செய்து கொள்ளும் கமிட்டிக்கு ஸ்ரீமான் கிரிராமசாமி ஐயர் தேர்ந் தெடுக்கப்பட்டார். நகரில் எல்லா இடங்களும் பரம சுத்தமாய் இருப்பதால், சுகாதாரம் மேன்மைப்பட்டுவிட்டதால், அதைக் கெடுப்பதாக இருக்கிற பொற்றாமரை குளத்தை முன் பணமாக செலவிட்டு தூரு எடுத்து பணத்தில் பாதியை கோவில் அதிகாரியிடம் வசூலிக்க தீர்மானம் செய்து விட்டார்கள். ஆபீஸுக்கு ஸ்டேஷனரிகளை சுதேசி சாமானாக வாங்க வேணும் என்றும், கல்விநிதி விஷயமாக ஆடிட்ரிபோர்ட்டை கவனிக்க ஓர் கமிட்டி நியமனம் செய்தார்கள்.

தாலூகா அரசியல் மகாநாடு. கும்பகோணம் தாலூகா அரசியல் மகாநாட்டை ஜூன் மாதத்தில் கூட்டவும், அதற்கு உபசரணைக்கமிட்டித் தலைவராக ஸ்ரீமான் கிருஷ்ண ராஜா தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பந்தநல்லூர் ஸ்ரீமான் சிவகுருநாத பிள்ளை முதலிய ஐவர் உபதலைவர்களாகவும் ஸ்ரீமான் பக்கிரிசாமி முதலிய 4 பேர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கொடி ஏற்று விழாக்கள். ஜகன்னாத பிள்ளையார் கோவில் தெருவில் ஸ்ரீமான் ஜம்புகேசநாடார் 29உ ஒரு தேசியகொடியை ஏற்றுவித்தார். பலர் காங்கிரஸ் பிரஸங்கம் செய்தனர்.

நேற்று பெரியதெருவில் டாக்டர் டி.பி சீதாராமன் தலைமையில் சேர்மன் டாக்டர் தியாகராஜன் தேசிய கொடி ஏற்றுவித்தார். பல அறிஞர்கள் ராஜீயப்பிரசங்கங்கள் செய்தனர். சிறுவர் சிறுமிகள் தேசியகீதங்களைப் பாடினார்கள். இவர்களுக்கு கவுன்சிலர் A. R விஸ்வநாதன் செட்டியார் பதக்கங்களை பரிசாக வழங்கினார்.

பர்வத ராஜகுல சங்கத்தின் கூட்டம்:—நேற்றுகூடியது. ஸ்ரீமான் சிவசுப்பிரமணியபிள்ளை தேசியக் கொடி ஏற்றினார். சங்க விஷயமாக ஸ்ரீ கணேசன் பேசினார். ஸ்ரீ சின்னசாமி தேசிய கீதங்கள் பாடினார். ஸ்ரீமான் பழனிசாமி தலைமை வகித்தார்.

# திருவீழிமிழலையில் பிரும்மோத்ஸவம்.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ பண்டாரஸன்னிதிகளின் விஜயம்.

(நமது விசேஷ நிருபர்)

மேமீ 2உ

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த திருவீழிமிழலை ஸ்ரீசுந்தரகுசாம்பிகா ஸமேத ஸ்ரீ தேஜினீவநேசுவர ஸ்வாமியின் பிரும்ம உற்சவம் இவ்வாண்டு திருவாவடுதுறை ஆதீன கர்த்தா ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண பண்டார ஸன்னதி அவர்களால் செவ்வனே நடத்திவைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் உற்சவம் நடந்து வந்ததில் சென்ற 28—4—39, 6-ம் திருநாள் வெள்ளிக்கிழமையன்று திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் அவர்களும், ஷை தேவஸ்தான டிரஸ்டியவர்களுமான ஸ்ரீ ல ஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னதியவர்கள் மாலை 8-மணிக்கு திருவீழிமிழலைக்கு எழுந்தருளினார்கள். சுவாமி தெரிசனம் செய்து இரவு திருக்கல்யாண உற்சவத்தையும் சிரத்தையோடு நடத்திவைத்து விசேஷ பிராம்மண உத்தமர்கள் தர்சிக்கும்படியும் செய்து புகழ் பெற்றார்கள் இந்த ஸ்தலம் ஸ்வாமி மூன்றூற்றிலொருவர் என்ற விசேஷமுடையது. இத்தலத்தில் உள்ளோர் ஸ்வாமியின் சம்பந்திபோதும், தாங்கள் தங்கள் வீட்டின் மாப்பிள்ளை போலும் திருக்கல்யாண தினத்தில் சுவாமியை பூஜித்து, வரிசைகள் கொணர்ந்து வைத்து, விருந்துகளிட்டு கௌரி கலியாணம் பாடியும் வரும் மங்களகரமான காக்ஷி பக்தி பரவசமாக்கும்படி இருக்கிறது.

இது நிற்க, திருநீலக்குடி ஸ்ரீ ஒப்பிலாமுலையம்பிகை சமேத ஸ்ரீமனோக்ஞநாத ஸ்வாமிக்கும் சென்ற 22—4—39 முதலாக சைத்திர உத்ஸவம் நடந்துவருகிறது. இவ்வாலயத்திற் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் உற்சவத்தை சிறப்பாக நடத்தச்செய்திருக்கிறார்கள். இப்பொழுது எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சுவாமிகள் மகாஜனங்களின் பக்தி சிரத்தை வளரும்படி ஆலயங்களை நன்கு பரிபாலித்து வருகின்றனர். சில மாதங்கள் முன் திருவிடமருதூர் மகாலிங்கஸ்வாமி மகாகும்பாபிஷேகம் செய்தும், திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீஸ்வர ஸ்வாமிக்கும் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். தர்மகைங்கர்யங்களை மிக பக்தி சிரத்தையுடன் நடத்திவருவது புகழத்தக்கதென்று குறிப்பிடுதல் மிகைப்படுத்தியதாகாது.

# வாரக் குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

கிருமத்தையும் கெடுக்கவா? மந்திரிகளும் மற்றோரும் வேலையில்லாமல் படித்துக்கவிப் போரை கிராமம் போ, கிராமம் போ என்கின்றனர்! நகரவாஸம் பலராலும் விரும்பப்படுகிறது! உத்யோக காலத்தில் வஸித்தவாஸனையால் ஓய்வு காலத்தில் கூட வயதானவர் கிராமஞ் செல்வதில்லை. சிறுவர் போவாரா? போனாலும் கிளப், முகக்ஷவரம், பீடி, ஷர்ட், சினிமா முதலியவைகளைக்கற்பித்து கொஞ்ச நஞ்சமுள்ள தர்மத்தையும் கெடுப்பர்!

திருப்பதி தேவஸ்தான உத்தேசம்! கீர்வாணவாணியை வளர்க்க நன்றாகத்தானிருக்கிறது! கீழ் நாட்டுக்கல்வியை பரப்பும் வேலையை விட அகில இந்தியாவுக்கும் உபயோகமாகும்படி பாஞ்சாத்ர வைகானஸ ஆகமாதி சாஸ்திரங்களை நன்கு போதித்து பாமரருமறியும்படி இதர பாஷைகளில் தர்ஜமா செய்யும் உத்தம வேலையிலீடுபடுவது இன்னும் சிறமான வேலையல்லவா?

அவச்ய வேலை! பட்டாசார்யர்கள் நன்கு படித்த விஷயக் ஞானத்துடன் சிஷ்டாசாரத்தை விடாமலிருக்கும்படி செய்தல் எந்தெந்த க்ஷேத்ரங்கள் யேயெவரால் எந்த காலத்தில கட்டப்பட்டன, எத்தனை சிவ விஷ்ணு திவ்ய க்ஷேத்ரங்களுண்டு. அந்தந்த க்ஷேத்ர மஹாத்மியம்! ஆலய ஸேவா பத்ததி! உத்ஸவாதிகளில் பற்பல ஸம்ப்ரதாயபேதமேன். உட்கருத்தென்ன? இவைகளை வெளியிடுவது முக்யமன்றோ?

இது அவச்யமா? பார்ஸி பௌத்தமத நூல் இவைகளை ஆராச்சி செய்ய திருப்பதி தனம் செலவு செய்வதை விட அநுசிதமான கார்யம் வேறொன்றுமில்லை! நேர் மாறான மற்ற மதத்திற்கு இடமளித்தால் ஒரு ஸமயம் பைபிள், குரான் இவைகளையுமாராய்ச்சி செய்ய இடமளிக்கும்.

என்ன மௌட்யம்! மத்ய மாகாண சட்டஸபையில் முகம்மதியரில் ஒரினத்தவர் அட்டஹாஸம் செய்து ஸபை தஸ்தவேஜிகளை கிழித்து நாசம் செய்ய ஆரம்பித்தனர்! காரணமென்ன? கண்மூடித்தனமாக தேசிய வாதிகள் கொடுத்த இடமே!

பெண்களுக்கு குதூஹலம்மயம் என்றார் வியாஸர் தனித்து கல் காக்ஷி சாலைக்கு சென்று ஓர் ஸ்திரீ நீர் யானையைத் தொட அது அவளை இழுத்து ஜலத்தில் சென்று விட்டது.

நல்ல குரு! நல்ல சந்தேஹம்! தேசமுந் சுபாஷ் பாபுவை ஆண்களுக்கும் விவாஹாத்து வேண்டுமா வேண்டாமா என்று கேட்கிறார்.

போபால் ஸமஸ்தான போக்கு! சாரதா சட்டத்துடன் 2 மாத சம்பளத்திற்கு மேல் சுபா சுபங்களுக்கு செலவு செய்யாதே என்கிறது! புதிய புதிய ப்ராக்ஷி சட்டங்களுக்கே உலகில் போட்டி பலம்!

முற்றிலும் தப்பு! பஞ்சாப் கவர்னர் இந்தியர் பிள்ளைகளுக்கு அடக்கமின்றி இடங்கொடுக்கின்றனரென்கிறார்! இது வெள்ளையரிடம்கற்ற துர்குணத்திலொன்றாயிருக்கலாம். இந்தியர் இயற்கையல்ல!

ஸ்வஸ்தானம் வந்தார்கள்! ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு இந்த வாரம் காஞ்சிக்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீ காமாக்ஷி ஆலய கும்பாபிஷேக வேலை விரைவாக நடக்கும்.

வைதிகஸங்க வார்ஷிகோத்ஸவம்! பனையூராச்ரமத்தில் 25உ நடக்கும்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥


# ஆர்யதர்மம்

பிரமாதி-ஹு சித்திரை-மீ 21உ


## சாரதா சட்டமும் ஸ்திரீ தர்மமும்.

நமது ஸமூக வாழ்வினைப் பயனுல், நமது ஜாதிகளையே அழிக்கக்கூடிய சாரதச் சட்டம் தீவிரமாக அமுலுக்கு வந்து விட்டது. நமது ஆஸ்திகத் தலைவர்கள் வெகு பாடு பட்டும் அதர்மப்பிரவாஹம் கரை மீறி பாவி விட்டது. பொது ஜனங்கள் சிலகாலம் இந்த சட்டத்தின் கொடுமையைத் தெரிந்து கொள்ளாமலிருந்தார்கள். பிறகு ஆங்காங்கு நியாயஸ்தலங்களில் அந்த சட்ட மீறுதலுக்காக விதிக்கப்பட்ட தண்டனைகளால் பயமுற்றார்கள். இந்த அநீதிச் சட்டம் அமுலில் இல்லாத இதர ராஜ்யங்களில் சிலர் விவாஹங்கள் செய்தார்கள். மற்றவர்கள் உபேக்ஷையாயிருந்தார்கள். ஆயினும் அந்த அதர்மச்சட்டத்தை ரத்து செய்ய பொது ஜனங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. இதைப்பார்த்தசீர்திருத்தக்காரர்கள் அந்தச்சட்டத்தை முன்னிலும் விட கடுமை படுத்தி விட்டார்கள். இப்போதசட்டமிருக்கும் நிலைமையில் இதர இலாக்காக்களில்கூட போய் பால்ய விவாஹங்கள் செய்யக்கூடாது

இவ்விதம் நமக்கு ஏற்பட்டிருக்கும் விபத்தானது நமது ஸமூகங்களால் செய்யப்பட்ட பல பாபங்களினுல் தான் என்பதில் ஐயமில்லை. எல்லாம் படைத்துக்காத்து அழிக்கும் அருட்பெருஞ்ஜோதியும் தனிப்பெருங்கருணையான இறைவனிடத்தில் நமது மனம் உண்மையில் பக்தி பாராட்டவில்லை. அவன் ஆணையிட்ட தர்ம நெறியினின்று நழுவி விட்டோம். சத்தியத்தை கைவிட்டு விட்டோம். சௌசம் போய் விட்டது. நாம் தர்மத்தை ரக்ஷிக்கவில்லை. ஆகையால் தர்மமானது நம்மையும் ரக்ஷிக்கவில்லை. எப்போது நாம் தர்மத்தில் ப்ரத்யயத்துடன் அதன்படி நடக்கிறோமோ அப்போது தான் நமக்கு விமோசனம். ஆகினும் அதுவரையில் தர்ம பீஜத்தைக்காப்பாற்ற ஆஸ்திகர்கள் முயற்சித்தால் மாத்திரம் பின்னால் யாராவது புண்யாத்மாக்கள் அதை உத்தாரணம் செய்யக்கூடும். இல்லாவிட்டால் அதற்குக்கூட கதியில்லை. ஆகவே அதர்மம் ஓங்கி விட்ட இக்காலத்தில் நாம் செய்யவேண்டிய கடமை என்ன ?

முக்கியமாக நம்முடைய ஸ்திரீகளிடத்தில் அதர்மம் பரவாமல் இருக்கவேண்டிய உபாயங்களை செய்யவேண்டும். அவர்களிடத்தில் தான் இன்னும் தர்மத்தின் வேகம் இருந்துகொண்டிருக்கிறது. அது போய் விட்டால் நம் ஸமூகங்கள் நசித்துப்போய் விடும். ஸ்ரீமத் பகவத்கீதையில் சொல்லியிருக்கிறபடி ஸ்திரீகள் கெட்டுப்போனுல் வர்ணஸங்கரமும் ஜாதிதர்மநாசமும் குல தர்ம சீர்கேடும் யாவத்து தர்மங்களுக்கும் லோபமும் முடிவில் நாகவாஸமும் ஏற்பட்டு விடும்.

ஸ்திரீ தர்மத்திற்கு நேர் விரோதமாக சாரதச்சட்டம் இருக்கிறது. அதை மறந்தால் ராஜதண்டனையும் காராக்ரிஹவாஸமும் ஏற்படும். அவ்விதம் ராஜதண்டனைக்குட்படாமல் எப்படி நம் ஸ்திரீகளைக் காப்பாற்றுகிறது என்பது நாம் அவசியமாக கவனிக்கவேண்டிய முக்கிய கடமையாக இருக்கிறது.

சாரதச்சட்டம் ஏற்பட்டுவிட்டதால் நம் நம்முடைய பெண்களை எந்த வயதில் வேண்டுமானுலும் விவாஹம் செய்யலாமென்று நினைத்து அலக்ஷ்யமாக இருக்கக் கூடாது. 14 வயதிற்குமேல் நாம் மற்றொரு கால அவதி ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. தாமதமின்றி விவாஹம் செய்துகொடுக்க வேண்டுமென்று எல்லோரும் ஸங்கல்பித்துக் கொள்ளவேண்டும். அதிகநாள் தாமதித்தால் பெண்களுக்கே அபவாதங்கள் நர்பித்துவிடுவார்கள். கல்யாணமாகாமலே நின்றுவிடும் தவிரவும் வயது வந்த பெண்களுக்கு அழகான புருஷர்களிடத்தில் மோஹம் ஏற்படுமே யல்லாது சாச்வதமான குணங்கள் மனதிற்கு பிரியப்படமாட்டா

மேலும் 14 வயதிற்கு மேற்பட்ட பெரும்பான்மையான பெண்கள் ப்ரௌடையானவர்களாக இருப்பார்களானதால் அவர்களை அந்தந்தக் காலங்களில மற்றவர்களுடன் கலந்துகொள்ளாமல் விலக்கிவைக்கவேண்டும் ப்ரௌடையானவர்களை ஆசாரவான்கள்போல் மறைத்துவைத்து விடு புருவும் தீட்டுச் செய்வதும் அதின் மூலமாக வைதிக கார்யங்களுக்கு லோபம் ஏற்படுத்துவதும் பாவமான செயல். அப்படி விலக்கிவைப்பதில் யாதொரு கெடுதலும் இல்லை. விலக்கி வைக்காமல் இருந்தால் எவர்களும் வயாறுகோய முமில்லை.

மற்றொரு விஷயம் முக்கியமாய் நாம் செய்யவேண்டியது. இந்த ஜாதிகளுக்குள் ப்ரௌடையான பிறகு கல்யாணம் செய்கிற வழக்கம் இருந்தபோதிலும் அவர்கள் பெண்களை ப்ரௌடையான பிறகு விவாஹம் ஆகும் வரையில் வெளியில் போகவிடுகிறதில்லை. கோஷா ஸ்திரீகள் போலவே வைத்துக் காப்பாற்றுகிறார்கள். அவ்விதமாகவே நாமும் செய்யவேண்டியது அத்யாவசியமானது. அந்தக் காலத்தில் பெண்கள் நாடகங்கள் பார்க்கவும் ஸினிமாக்களுக்கும் மற்றுமுள்ள பொது ஸ்தலங்களுக்கும் போகக்கூடாது. கோவில் குளங்களுக்குக்கூடப் போகக் கூடாது. வீட்டைவிட்டே வெளியில் போவது உசிதமில்லை. புருஷர்கள் இருக்குமிடங்களில் அதிகமாக சஞ்சரிக்கக் கூடாது. கல்யாணம் ஆகும் வரையில் பெண்கள் மிகவும் ஆடம்பரமாக உடைகள், ஆபரணங்கள் தரித்து வெளியில் நின்றுகொண்டிருக்கக் கூடாது. விரஸமான புஸ்தகங்களை பெண்களுக்கு வாசிக்கக் கொடுக்கக்கூடாது. அவரவர்கள் தங்களையும் தங்கள் பெண்களையும் மிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அவசியமான காலம் இதைவிட வேறு இல்லை,

இவைகளையெல்லாம் நாம் ஆபத்சர்மங்களாகக்கடைப்பிடித்து அனுஷ்டிக்கவேண்டும். இதைவிட ஆபத்தான காலம் தர்மசிந்தையுள்ளவர்களுக்கு ஏற்படப் போவதில்லை. இந்தக் காலத்தில் நம்முடைய ஸ்திரீகளைக் காப்பாற்றிவிட்டால் நம்முடைய தர்மங்கள் பின்னொருகாலத்தில் தலையெடுக்கக் கூடும். இல்லாவிட்டால் தர்மமும், மதமும் நம்முடைய சமூகங்களும் நசித்துவிடும்.

ஜி. வி. வி.

## குறிப்புகள்.

### ஆசார ப்ரசாரத்திற்கு உதவி செய்வாரா?

சென்னை சுகாதாரச்சட்டத்தை இயற்றியபின் கனம் ராஜன் கனம் ஆசாரியாரும், நமது முன்னேர்களின் ஆசார முறைகளையும் மனு முதலிய சாஸ்திர விதிகளையும் பற்றிப் புகழ்ந்து அதிகமாக பேசி வருவதைப்பார்க்கிறோம். தாங்கள் இயற்றியுள்ள சட்டமானது ஸநாதன சாஸ்திர ஆசார முறைகளையேஅடிப்படையாகக்கொண்டதாயும் பிராசீன ஹிந்து ஆசாரங்கள் யாவும் மிகுந்த சுகாதாரம் நிறைந்தவை யென்றும், நமது சாஸ்திர விதிகளே ஸநாதன மயமாயிருக்கிறதென்றும் இரண்டு மந்திரிகளும் பிரசங்கித்து வருகிறார்கள்.

சில தினங்களுக்கு முன் சென்னையில் ஸ்ரீமான் ராஜகோபலாசாரியார் பேசுகையில், எச்சல் பண்ணி தண்ணீர் குடிப்பதைப் பற்றிக் கண்டனம் செய்தார். இந்த துர்வழக்கம் இப்போது தான் நம்மிடம் ஏற்பட்டதாயும் முன் காலத்தில் தண்ணீரை பாத்திரத்தில் உயரத்தூக்கி குடிப்பதே வழக்கமாயிருந்ததாயும், இப்போது அந்த மாதிரி ஒருவன் செய்தால் அவனை "வைதிக பிராமணன்" என்று பரிஹஸிப்பதாயும், எச்சில் பண்ணிக்குடிப்பதால் ஸுகாதாரம் கெட்டு வியாதி பரவ இடமிருப்பதாயும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

எச்சில் தோஷமென்பது நம்மில் வெகு தீவிரமாக இருந்துவந்த காலமுண்டு. எச்சில் பட்டவிடங்களை உடனே சுத்த ஜலத்தால் அலம்பவேண்டுமென்பது நம்மில் கண்டிப்பான ஆசாரமாயிருந்து வருகிறது. "எச்சில், தீட்டுக்கிடையாதா" என்று ஸாதாரணமாய் விட்டுப்பிள்ளைக் கண்டிக்கும் வழக்கத்திலிருந்து எச்சில் பெரிய தோஷமாக நினைக்கப்படுகிறது.

ஸாதாரணமாக ஒருவன் குடித்த பாத்திரத்திலேயே மற்றொருவன் குடிக்கக் கூடாதென்பது விதியாகும். நமது குடும்பங்களில் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகவே தண்ணீர் குடிக்கப் பாத்திரம் உண்டு. ஒருவருடைய பாத்திரத்தில் மற்றொருவர் குடிப்பதில்லை. குடிக்க நேர்ந்தால் சுத்தி செய்து குடிக்கிறார்கள். இந்த ஆசாரமானது முற்றிலும் ஸுகாதார விதியை அநுசரித்ததேயல்லது மூட ஆசாரமல்ல. ஒரே பாத்திரத்தில் பலர் குடிப்பதால் வியாதி பரவ இடமுண்டாகிறது.

அமெரிக்காவில் ஹோட்டல்களில் ஒரே பாத்திரத்தில் பலர் எச்சில் செய்து குடிக்கும் வழக்கமிருந்தது. ஸுகாதார நிபுணர்கள் யோசித்து இதை சட்டமூலமாகத் தடை செய்து விட்டார்கள். ஹோட்டல்களில் எச்சில் பண்ணி குடிக்கக்கூடாது. குடித்தால் பாத்திரத்தை நன்கு அலம்பவேணும். இந்த ஆசாரம் எவ்வளவோ தலைமுறையாக நம்தேசத்தில் இருந்து வருகிறது. அநாதார நிபுணர்களை விட நம் வீட்டுப் பாட்டிமார்கள் இதில் விசேஷ நிபுணத்வமும் உறுதியும், சிரத்தையும் கொண்டவர்களென்பது புலப்படும். எச்சில் பண்ணிக்குடிப்பது சுகாதாரக்குறைவென்று கனம் ஆசாரியார் இப்போது கண்டிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் நமது மாணவர்களுக்கு இந்த தத்வத்தையும் இதைப்போன்ற ஆசாரங்களையும் போதிக்கப் புஸ்தகங்களையும், பிரசாரகர்களையும் இவர் ஏற்பாடு செய்வாரா? ஹைஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் மாணவர் இடையில் இந்த அனாசாரம் அதிகம் பரவி நிற்கிறது.



இதைப்போன்ற வேறு பல ஆசாரங்களையும் அவர்களுக்கு போதிக்க வேண்டியிருக்கிறது ஆதலால் கனம் மந்திரி வெறும் வாய்வேதாந்தத்தோடு நிற்காமல், தக்க பண்டிதர்களை கொண்டு நமது ஆசார விதிகளை மாணவர்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்யட்டும்.

## குடந்தையில் வேதபாராயண கோஷ்டி.

திருக்குடந்தை ஸ்ரீ சாரங்கபாணி சைத்திரோத்ஸவம் நேற்றோடு முடிவடைந்தது. பற்பல தகராறுகளுக்கு இடையில் சிறிய தேர் இழுக்கப்பட்டது. மானேஜிங் டிரஸ்டி, இதர டிரஸ்டிகளைக் கலக்காமலே காரியங்களைச் செய்து கொண்டு போவதாகப் புகார் ஏற்பட்டதென்று தெரிகிறது.

உத்ஸவம் கூடியவரையில் சிறப்பாக நடந்தது. தெளிவும், பகலிலும், இரவிலும் அகாலத்தில் ஸ்வாமி புறப்பாடு நடத்தியதால் பெருமாளுக்கும், சேவார்த்திகளுக்கும். கைங்கர்யபார்களுக்கும் ஏற்பட்டசிரமம் சொல்லத்தரமன்று.

இவ்வளவு சிரமத்திற்கிடையிலும், பாட்டாசாரியர், அய்யங்கார் தெருவாருடைய வேதபாராயண கோஷ்டிகளும், ததீயாராதனமும் வழக்கம்போல் வெகு நன்றாக நடந்து உத்ஸவத்தை சிறப்பித்தன. ஷை கோயிலின் வேதஅத்யாபகமிராசுதார்களான பாட்டாசாரியர்களுடைய மேற் பார்வையில் திவ்ய பிரபந்த பாராயண கோஷ்டியும் வெகு இனிமையாக நடந்தது. செவ்வாய்க் கிழமை இரவு 8மணிக்கு இருதெருக்களிலும் பாராயணகாரர்களுக்கு ஸம்பாவனை நடத்தப் பட்டது. பாட்டாசாரியர்தெருவில் நடந்த ஸபையில் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி தலைமை வகித்து ஸம்பாவனை நடத்தினர். அநேக லௌகிக வைதிகப்ரமுகர்கள் விஜயமாகியிருந்தார்கள். அத்யாபக வேத பாராயணகாரர்கள் சுமார் 50 பேருக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது.

ஐய்யங்கார்தெருக் கூட்டத்தில் ஸ்ரீசாரங்கபாணிகோவில் டிரஸ்டி ஸ்ரீமான் ஹரிராவ் M.A.B.L., அவர்கள் தலைமை வகித்து ஸம்பாவனைகளை நடத்தினர். ஸ்ரீமான்களான என். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் என். ராஜகோபால அய்யங்கார் ஆனரரி மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் நீலமேகாசாரியார் வெங்கடாசாரியர், கெ. சார்ங்கபாணி அய்யங்கார், வ. ந ஸ்ரீராமதேசிகாசாரியர், முதலிய பிரமுகர்கள் பலர் விஜயமாகியிருந்தார்கள். வேதத்தைப்பற்றி ஸ்ரீராமதேசிகர் முதலிய பலர் பேசினர்கள். வந்தனோபசாரத்துடன் வைபவம் பூர்த்தியாகியது.

நமது நிருபர்.

## திருவாரூர் ரதோத்ஸவம்.

### மே-மீ 7ந்தேதி நடக்கும்.

திருவாரூரிலுள்ள புனிதமான தேரை மே-மீ 7ந்தேதி காலை இழுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சென்னை சுகாதார இலாகா அமைச்சர் கனம் டாக்டர் ராஜன் தேர் இழுக்கப்படும் தினத்தன்று திருவாரூருக்கு விஜயம் செய்ய ஒத்துக்கொண்டிருக்கிறார். பிரபல பத்திரிகை ஆசிரியரான ஸர். ஆர். எஸ். சர்மா, ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை, ஸ்ரீ விஜயா வாண்டையார், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்தம் (தர்மபுரம் பண்டாரசன்னதி) குன்னம் ஸ்ரீ சுப்பிரமணியய்யர் முதலியவர்கள் சேர்ந்து ரதோத்ஸவத்தை வெற்றிகரமாய் நடத்திவைக்கும்படிப்பொதுமக்களுக்கு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஏ. கி.

## "ஜாதித்துவேஷமும் ராஜத்துவேஷமும் ஊட்டினர்கள்..."

### விடுதலை ஆசிரியர்—பிரசுரகர்த்தாவுக்குத் தண்டனை ஊர்ஜிதம்.

#### ஹைகோர்ட்டில் தீர்ப்பு.

"விடுதலை" என்ற வகுப்புத்துவேஷப் பத்திரிகையில் ராஜத்துவேஷமும், ஜாதித்துவேஷமும் ஊட்டத்தக்க கட்டுரையைப் பிரசுரித்ததாக அப்பத்திரிகையின் ஆசிரியர் மீதும், பிரசுரகர்த்தா மீதும் சில மாதங்களுக்கு முன் சென்னை அரசாங்கத்தினர் வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கை விசாரித்த கோயமுத்தூர் ஜில்லா ஜட்ஜ், "எதிரிகள் ராஜத்துவேஷக் குற்றம் செய்யவில்லை யென்றும், ஆனுல் ஜாதித்துவேஷமூட்டியிருக்கிறார்களென்று கூறி ஒவ்வொரு எதிரிக்கும் 6 மாதம் சிறைவாசமளித்தார்.

எதிரிகள் தண்டனை கிடைத்ததை ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார்கள்.

இந்த அப்பீல் சென்னை ஹைகோர்ட் நீதிபதிகள் கனம் ஜஸ்டிஸ் ஸ்டோடார்ட் ஜஸ்டிஸ் பர்ன் முன்பாக விசாரணைக்கு வந்தது.

நீதிபதிகள் தீர்ப்புக் கூறுகையில், "எதிரிகளுக்குக் கீழ் கோர்ட்டார் ஜாதித்துவேஷக் குற்றத்தில்" தண்டனை விதித்திருப்பதை ஊர்ஜிதம் செய்து, பிராமணரல்லாதாருக்கு பிராமணர்களிடம் விரோத மேர்படுத்தக்கூடிய முறையில் கட்டுரை எழுதப்பட்டிருப்பதாக அபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளி விட்டார்கள்.

ராஜத்துவேஷக் குற்றத்தில் எதிரிகளை கோவை ஜில்லா ஜட்ஜ் விடுதலை செய்ததை ஆக்ஷேபித்து சென்னை சர்க்கார் அப்பீல் செய்தார்கள். இந்த அப்பீலும் கனம் ஸ்டோடார்ட், கனம் பர்ன் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை நீதிபதிகள் அலசிப்பார்த்து எதிரிகளின்மீது ராஜத்துவேஷ குற்றம் இருப்பதாகவும், எனவே சர்க்கார் அப்பீலை அனுமதித்து எதிரிகளுக்கு 6 மாத சிறைவாசம் அளித்தார்கள்.

எதிரிகளுக்கு அதிக தண்டனை விதிக்க வேண்டுமென்று சர்க்கார் கோரவில்லை எதிரிகள் ஒவ்வொருவரும் இந்த 6மாத சிறைவாசக் தண்டனையை முன் தண்டனையோடு சேர்ந்தாற்போல் அனுபவிக்கவேண்டியதென்றும் உத்திரவிட்டார். (ஜாதித்துவேஷ குற்றத்திற்கு 6 மாதமும், ராஜத்துவேஷக் குற்றத்திற்கு 6 மாதமும் ஆக 1 வருஷ தண்டனை. ஆனுல் தண்டனையை சேர்ந்தாற்போல் அனுபவிக்க வேண்டியதால் மொத்தம் 6 மாதம் தான் சிறைவாசம்.)

## முனிசிபல் சபைகளுக்குப் புதிய உத்திரவு.

### உள்ளூர் பாங்கிகளுக்கு இனி ஆதரவில்லை.

சென்னை மாகாண முனிஸிபாலிடிகள் இதுவரையில் தங்கள் பணங்களை உள்ளூர் பாங்குகளில் போட்டுவைக்க சர்க்கார் அனுமதித்து வந்தார்கள். ஆனுல் இப்பொழுது அந்த முறையை மாற்றி இனி முனிஸிபாலிடிகள் தங்கள் தங்கள் பணங்களை இம்பீரியல் பாங்கியில்தான் போடவேண்டும் என்று ஓர் உத்திரவை பிறப்பித்துள்ளார்கள்.

## ஒரு வேண்டுகோள்

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமாயும் நேரிலும் சொல்லிவருகிறார்கள். ஆர்யதர்மம் நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதியதோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

அபிமானி.

## ஹைதராபாத்தில் ஸ்ரீ சங்கராசாரியார்

### அதிகாரிகளுடன் பேட்டி.

ஹைதராபாத்தில் ஹிந்துமதத்தினர் முகமதிய அரசாங்கத்தின் அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டு வருவதும். இதனை நிறுத்த வேண்டி அங்கு ஹிந்துக்கள் சத்தியாக்கிரஹம் நடத்தி வருவதும், தினசரி ஆயிரக்கணக்கான ஆரிய சமாஜ்காரர்கள் கைது செய்யப்பட்டு வருவதும் நேயர்கள் அறிந்த விஷயம்.

ஜோதிர்மடத்து ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியார் ஹைதராபாத்துக்கு நேற்று வந்து அதிகாரிகளைக் கலந்து பேசினர். ஹிந்துக்களின் கஷ்டங்களைப்பற்றி விசாரித்து வருகிறார்.

## பராங்குச பக்தஸபா கும்பகோணம்

மேற்படி ஸபையினுதாயில் வழக்கம்போல் சில அத்தியாபகஸ்வாமிகளுக்கு ஸம்மானம் செய்யப்பட்டது. புதுகோட்டை மகாராஜா கல்லூரி வடமொழி ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் தலைமைவகித்தார். ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் பிரதம டிரஸ்டி ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்கார் ஸ்வாமிகளுக்கு ஸம்மானம் செய்தனர். தலைவர் அழகிய சொற்பொழிவாற்ற, கார்யதர்சிகள், வந்தனோபசாரம் கூறிய பின்னர் கூட்டம் முடிவு பெற்றது.

ஓ. கி.

## முனிசிபல் பாடசாலையின் ஆண்டுவிழா.

குடந்தை காமாக்ஷிஜோசியர் தெருவிலிருக்கும் முனிசிபல் ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் ஆண்டுவிழா 30—1—39 தேதி மாலை முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ சம்பந்தம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார்.

பின்னர் டெப்டி இன்ஸ்பக்டர் ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்கார் "ஆண்டுவிழா கொண்டாடப் படவேண்டிய அவசியத்தைப்பற்றி" ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

சங்கீத டியூட்டர் ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஹைஸ்கூல் உதவி ஆசிரியரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் முயற்சியினுல் பாடசாலை சிறுவர்களும் சிறுமிகளும் "துருவ நாடகம்" நடித்திக்காட்டப்பட்டது.

வந்தனோபசாரம் கூறியபின் வைபவம் இனிது கலைந்தது.

(ஓ. கி.)

## பெரியகுளம்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் ஜயந்தி மஹோத்ஸவம்.

தர்மசம்வர்த்தனீ பிராம்மண சபா

ஷை சபா யக்ஞ ராகவ மந்திராலயத்தில் வைசாக சுத்தப் பிரதமை தினம் ஆசார்யாளுடைய படத்தை வேத பாராயணத்துடன் கொண்டு வைக்கப்பட்டு உபநிஷத்பாராயணம் மகாலிங்கங்களுக்கு அபிஷேக அர்ச்சனைகள் ஷோடச உபசாரத்துடன் அன்றும் தொடுத்தும் பிரதிதினம் நடந்து பஞ்சமி ஜயந்தி தினம் மஹந்யாஸம் மஹா அபிஷேகம் அர்ச்சனாதி ஷோடச உபசார பூஜை வேத உபநிஷத் பாராயணங்கள் விநிவத்தாக நடந்ததும் பஹுளமாக தீர்த்த நிவேதன ப்ரசாதங்கள் வழங்கப்பட்டன.

அன்று சாயங்காலம் 6 மணிக்கு ஆசார்யாளுடைய படம் நன்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்த விமானத்தில் அமைக்கப்பட்டு வேத உபநிஷத் பாராயணத்துடனும் சபையில் கற்றும் சிறுர்களின் ஸஹஸ்ரநாம பாராயணத்துடனும், மங்கள வாத்யத்துடனும் ஊர்வலம் புறப்பட்டு, சங்கர விஜயம் சித்தம் ப்ரம்மஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரி அவர்களால் சுருக்கமாக உபந்யஸிக்கப்பட்டது. ஞான வைராக்ய ஸித்தி சர்க்கரையுக்கப்ரஸாதம் விநியோகம் செய்யப்பட்டது.

அடுத்து இரண்டு நாள் திண்டுக்கல் ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர். மனீஷா பஞ்சகம் மோஹமுத்காம் இந்தச் சிரந்தகளில் அமைக்கப்பட்டிருக்கிற தத்வங்களைப் பற்றிக் கூறினர்.

## திப்பிராஜபுரம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்:— 20—4—39 பிரும்மஸ்ரீ மந்திரமூர்த்திகிருஷ்ணசாஸ்திரிகளவர்களுடைய கிருஹத்தில் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமானது கொண்டாடப்பட்டது. ஆரம்ப தினத்தன்று மாலையில் வலங்கிமான் பண்டிட் ப்ரும்மஸ்ரீ வி. கே சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத் பாதாள், ஸர்வ மத கண்டனம் செய்வதற்கும் அத்வைத மத ஸித்தாந்தத்தை நிலை நாட்டி ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்கும், அவதார செய்ய வேண்டிய ஆவச்யகத்தைப்பற்றி உபன்யஸித்தார். இரவில் பாகவதத்திலுள்ள ஸ்யமந்தகமணி உபாக்யானத்தை ஆதியோடந்தமாக சொன்னர்.

21—4—39 சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ பகவானுடைய குணகணங்களுடைய பெருமையைப்பற்றியும் அதற்கு திருஷ்டாந்தமாக புராண இதிகாஸாந்தர்கதமான ஒவ்வொரு ஆக்யானைகளையும் சொன்னர் இரவில் ஸ்ரீமத் மஹாபாரதத்திலுள்ள ஸ்ரீ பீஷ்ம ஜன்மாவின் ஆரம்பம் முதல் கடைசி வரையில் விரிவாக கூறினர்.

22—4—39 ப்ரும்மஸ்ரீ நாராயணஸ்வாமி ச்ரௌதிகளவர்கள் "ஸுபத்ரா பரிணயம்" என்னும் சரிதையைப்பற்றிச் சொன்னர். திருக்கருகாவூர் ப்ரும்மஸ்ரீ டி. எல். சுப்பய்யர் அவர்களும் சங்கர ஜயந்தி உத்ஸவம் கொண்டாட வேண்டிய ஆவச்யகத்தைப்பற்றிக்கூறினர்.

பிறகு இரவில் "பிரும்ம வித்யா ஸபாவில்" வழக்கம் போல் பிரும்மஸ்ரீ டி. எல். சுப்பய்யர் அவர்கள், கர்ம ஹீனமாய் (ஸ்வகர்ம லோபமாய்) செய்கிற எந்த காரியமும், பக்தியும், பஜனையும், ஞானமும், அவர்கள் கோரிய பலனைத்தாராது என்றும், ஸநாதன விஷயத்தை பற்றி வெகுவாகவும், ஸ்வானுபவத்தை நாட்டியும், ஸ்ருதி ஸ்ம்ருதி புராணங்களிலிருந்தும் அநேக கோட்பாடுகளுடன் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

23—4—39 சிமிழி பிரும்மஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகளவர்கள், மனுஷ்யன், தன் உத்தம ஜன்மாவை அடைந்ததற்கு உயர்ந்த லக்ஷியத்தை அடைய விருப்பமுள்ளவனாக யிருக்கும்பக்ஷத்தில், ஸத்ஸங்கத்தை அடைய விருப்பமுள்ளவனாயிருக்கும் பக்ஷத்தில், ஸத்ஸங்கத்தைச்சேரவேணுமென்றும், அது தர்மத்தில் புத்தியை ப்ரவிருத்திக்கச் செய்யுமென்றும், அந்த விதமான ப்ரவிருத்தியே ஈஸ்வரனிடத்தில் விசேஷ பக்தியை உண்டு பண்ணும் என்றும், அது ஸர்ஜிதமானதும் ஸஞ்சிதமான பாபக்குவியல்கள் தொலைவதற்கும் புண்ணியம் விருத்தியாவதற்கும் இக பர ஸாதக ஹேதுவாகும் என்றும் உபன்யஸித்தார்.

24—4—39 சிமிழி ஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகளவர்கள் உபந்யஸிக்கையில், ஈஸ்வரன், தான் ஆதியில் "சம்பு" என்னும் நாமவுக்கு (அதாவது) சந்தோஷம், மங்கள ரூபமாயிருக்கிறவர்) மாத்திரம் வாச்யமாயிருந்தவர், பிறகு சங்கரர் (சம்-கர:) என்றும் (மங்களத்தைச் செய்கிறவர், கொடுக்கிறவர்) நாமாவுடன் அவதரித்த பெருமையையும், மஹிமையையும், பீஷ்மருடைய ஆதிவிருத்தாந்தத்தை விரிவாகச்சொல்லி அவருக்கு ஸத்ஸங்கம் எப்படி உண்டானதென்றும், ஈச்வரனுடைய கருணா கடாக்ஷம் எப்படி விழுந்ததென்றும் தர்மபுத்ரருக்கு ராஜ்ய தந்த்ரோபதேசம் செய்த வரலாரின் ரஹஸ்யதத்வத்தையும், கடைசியில் ஸர்வ வேதஸ்வரூபனும், நியந்தாவுமாக பகவானே எப்படி சங்கரராக அவதாரம் எடுக்கவேண்டியிருந்த தென்றும் அதன் பெருமையையும், ஸத்ஸங்கம் கிடைக்காத போனும் சத்துக்களுடைய திவ்ய சரிதாம்ருதபானமோ, ச்ரவணம் செய்து பிறகு தியானித்தலோ, நம்மை தர்மப்ரவிருத்தியில் நைய்பிக்கச் செய்து ஈடுபட்டு க்ருதார்த்தர்களாக ஆக்கும் என்றும் உபன்யஸித்தார்.

## ஆத்தன்குடி முத்துப்பட்டணம்.

23-4-39உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமான் ா. அரு. நாச்சியப்ப செட்டியார் அவர்களின் பௌத்திரி திருவளர் செல்வி நாச்சமைக்கு காப்பு கட்டு புதுமை வெகு விமரிசையாய் நடந்தது. அவர்கள் நல்ல குணத்துக்கு அநேகம் ஆயிரம் ஜனங்கள் வந்து குழந்தையை ஆசீர்வதித்தார்கள். பிராம்மண சந்தர்ப்பணம், நகர விருந்து, நாபற விருந்துகள் வெகு விமர்சையாக இருந்து. அநேகம் உத்யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள் அதில் குன்னகுடி ஸ்ரீ சிவருமய்யர் அவர்களும் வந்திருந்தார்கள்.

## அறிக்கை.

" ஆர்ய தர்மம் " வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், " ஆர்ய தர்மம் ", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், " ஆர்ய தர்மம் ", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
" ஆர்ய தர்மம் "
கும்பகோணம்.

## புதிய காங்கிரஸ் தலைவர் தேர்தல்

" சட்டப்படி சொல்லாது "

ஸ்ரீ நரிமன் கர்ஜனை.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜிநாமா செய்தபோதிலும், அதன் பேரில் சம்பிரதாய முறையில் ஓட்டுக் கொடுத்தே அதை ஏற்க வேண்டும், அல்லது நிராகரிக்க வேண்டும், அல்லது புனாலே சனைக்கு அனுப்ப வேண்டுமென்றும், இப்பொழுது பாபு ராஜேந்திர பிரசாத்தைத் தலைவராக நியமித்தது சட்ட விரோதமென்றும், அது செல்லாது என்றும் பம்பாய் மாஜி மேயர் ஸ்ரீ நரிமன் கர்ஜிக்கிறார்.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக் டி. டி மிஸ்கி பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.
விலை ரூ. 1—14—0. பவுண்டு.



## அன்பே சிவம்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி).

தன் தகப்பனிடம் பணிவோடு புத்திரன் நடந்துகொள்ளுகிறான். ஒரு உத்தமமாது தன் கணவனின் இச்சைப்படி அவன் மனங்கோணுது கட்டுப்பட்டு நடக்கிறாள். அரசனின் ஆக்ஞையில் அதிக ஆவலாய் மனமுவந்து அதன்படி குடிகள் நடக்கிறார்கள். மித்திரர்கள் தங்களுக்கு சமயம் வாய்த்தபொழுது ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுகிறார்கள். பந்துக்களை கண்டவுடன் பரம சந்தோஷத்துடன் வரவேற்று விருந்திட்டு உபசரிப்பவர் பலர். ஒரு விட புருஷன் தன் மனதிற்கு இனிய காதலியின் நிமித்தம் எதையும் தத்தம் செய்ய தன் மனதை தயாராக்கிக்கொண்டு விடுகிறான். யாராகவிருந்தாலும் தங்கள் மக்கள்களிடம் வாஞ்சைகாட்டுவதில் யாதும் தடையுண்டா? இவ்விதம் உள்ள ஒவ்வொன்றையும் கவனிக்குமிடத்து யாவற்றும் நிகழ்வதற்கு அதில் உள்ள அவரவர்களின் அன்பே காரணமாகும்.

நமக்கு அநுகூலமான விஷயங்களில் பிரியமும் விருப்பமும், பிரதிகூலமான விஷயங்களில் அப்பிரியமும், வெறுப்பும் உண்டாவது சகஜமாயிருக்கிறது. அவ்விதம் அநுகூல விஷயங்களில் நாம் வைக்கும் பிரியமே அன்பு என்றழைக்கப்படுகிறது. எந்த விஷயமும் அநுகூலமானதென்றோ, பிரதிகூலமானதென்றோ குறிப்பிட்டு சொல்வதிற்கில்லை. அவைகள் நமக்குண்டாகும் பிரியாபிரியத்தைப் பொறுத்தேயுள்ளதாகும். இவ்வித நிலைமையில் அந்தந்த காலத்திற்கேற்றபடி ஒரு விஷயத்தில் அபிமானமும், நிரபிமானமும் நிகழ்வதாகும்.

"புலியுமனுகூலமெனிலிட்டமாம்
பகைசெயிற் புதல்வனெனினும்
[வெறுப்பாம்"

என்றபடி அவைகள் உள்ளவைகளாகும்.

ஆயினும், நாம் ஒவ்வொருவரிடமும் உள்ள குற்றங் குணங்களைக் கருதாமல், யாரிடமும் ஒரே ரீதியாய் அன்பு பூண்டொழுகுவதே நமது கடமையென கொள்ளல்வேண்டும். அது தான் உத்தமவிவேகமாகும். அதை நாமறியவே

"அன்பின்வழியதுயிர்நிலையஃதிலார்க்
கென்புதோல் போர்த்தவுடம்பு"

என்று போதித்தருளினர் நாயனர்.

அன்புமயமான ஆசாரணையை அனுஷ்டிப்பவர்களுக்கு யாது சாதனம் அவசியமென்பதை இனி ஆராய்வோம்.

பகுத்தறிவு பெற்ற மானிடர்களின் செய்கைகளை கவனிக்குமிடத்து, ஒவ்வொரு செய்கையையும் முதலில் மனதில் உதித்து பின் வாக்கில் வெளியாகி, அதன்பின் காரியத்தால் செய்யப்படுகிறது. அதினால் தீமையான எண்ணங்களை மனதில் நினைக்காமல் மனதைக்கட்டிக் காப்பதே ஒரு விவேகியின் முக்கிய கார்யம். அது தான் அவனுக்கு விரதமெனக் காட்ட "காப்பது விரதம்" என்று போதிக்கப்பட்டிருக்கிறது. தீங்கானவைகள் முதலில் மனதில் நிக்காவிடில் பின் வாக்கிலும், காயத்திலும் நிகழ்வதற்கு பிரசக்தியே இடையாதல்லவா? இத்தகைய மனத்தூய்மை பெற்ற, நடுநிலைமை தவறாத, ஆசாரணையைத் தான் அன்பு மார்க்கமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

"மநஸ் ஏகம் வசஸி ஏகம் கர்மண்
யேகம் மஹாத்மநாம்
மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத்
துராத்மநாம்"

என்ற நீதியால் அன்பு மார்க்க லக்ஷணங்கள் பூஜிக்கப்பட்டும். விலக்ஷணங்கள் தூஷிக்கப்பட்டுமிருக்கிறது.

மேலும், அன்புடன் பழகுவது, அன்புடன் பேசுவது, அன்புடன் நடப்பது, அன்பினுல் பிறரை உபசரிப்பது முதலானவைகள் உயர்குல உத்தம ஒழுக்கங்கள் என்று சிலாகிக்கவும் படுகிறது. அவ்வுயர் குணங்கள் ஒருவரோடொருவரை இணங்கச் செய்து விடுப்பிரியா வாத்ஸல்லியத்தை தந்து, மனதிற்கு இன்பமூட்டுவதாகும். இதற்கு மாறான அன்பற்ற குணங்களோ முற்றிலும் வெறுக்கத்தக்கதாகும்.

உள்ளத்தில் அன்பிலா அநேகர் போலி பிரியங்காட்டி பழகுவார்கள். அவர்கள், காரியவாதிகளானதால், அவர்கள் பேச்சில் நம்பிக்கை வைக்கலாகாது. அவர்களுடன் பழகும் பலருக்கும் மனதிற்கு துக்கமுண்டாகுமே யொழிய. அவர்களால் அணுவளவும் பயனிராது. சிலர் ஒப்புக்கு அன்பு காட்டுவதுண்டு. இத்தகைய அன்புமார்க்க சத்துருக்களின் குணங்கள் யாவும் அவர்களின் நடை, உடை, பாவனைகளை கவனித்தால் நன்கு வெளியாகும். அல்பமான உபசாரமும் அன்புடன் சேர்ந்தால் பெருமை பெறும். சிறப்பான உபசாரமாயினும் அன்பற்றவர்க செய்யப்படுமாயின், அவைகள் யாவும் துக்காஸ்பதமாகவே ஆகுமன்றி, அவ்வுபசாரத்தால் எள்ளளவு இன்பமும் பெறமுடியாது. அவைகளின் பாகுபாட்டை அறிவதற்குப் பலவழிகளும், பெரியோர்களின் போதனைகளுமுண்டு.

"உண்ணீர் உண்ணீரென்றுபசரியார்
[தன் மனையில்
உண்ணாமை கோடி பெறும்"

என்றும்,

"ஒப்புடன் முகமலர்ந்
துபசரித்துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும்
உண்பதே அமுதமாகும்
முப்பழம்பாலோடன்னம்
முகங்கடுத்திடுவாராகிற்
கப்பிய பசியினோடு
கடும்பசியாகுந்தானே"

என்றும் எடுத்துக்காட்டியிருப்பதே போதியதாகும்.

தவிர,

"வரகரிசிசோறும் வழுதுணங்காய்வாட்டும்
முரமுமெனவே புளித்தமோரும்-திறமுடனே
புள்வேளூர் பூதன் புகழ்ந்து பரிந்திட்டசோ
எல்லாவுலகும் பெறும்" (று)

என்றும்,

"காணக்கூசுதே கையெடுத்த நாணுதே
மாணுக்கவாய் திறக்க மாட்டாதே—
[வீணுக்கென்
என்பெல்லாம் பற்றியெரியுதே
[வய்யய்யோ
அன்பிலாளிட்ட வமுது."

என்றும், ஔவை பிராட்டியார் தன் அநுபவம் காரணமாய் அன்பிற்குப் புகழ்ந்தும், அன்பிலாமைக்கு இகழ்ந்தும், பாடிய செய்யுள்கள் நமக்கு அறிவுறுத்துவதாகும்.

அன்பெனும் நமது ஆசையை அசாச்வதமான பொருளாதிகளின் மேல் நாம் வைப்போமானால், அதினால் நமக்கு கிலேசம் தான் பிராப்தமாகும். பஞ்ச விஷயங்களிலும், பந்துக்களிடத்திலும், புத்திர, மித்திர, களத்திராதிகளிடத்திலும் நம் பிரியம் செய்வதை அவைகளிடம் அன்பு அடைவோமானால், அசாச்வத நிலையிலுள்ள அவைகள் யாவற்றிற்கும் அழிவோ, வேற்றுமையோ, விகாரமோ ஏற்படும் பொழுது, அவைகளில் நமக்கிருந்த பிரியம் போய், அன்பு மாறி, வெறுப்பும் துன்பமும் பலப்படுகிறது. இப்படிக்கின்றி நம் தன்மை சாச்வதமான [பிர்மம்] வஸ்துவினிடம் செலுத்துவோமானால் அவ்வஸ்துவுக்கு அழிவில்லாத் தன்மையிருப்பதால், அன்பே ஸ்வரூபமாயுள்ள அவ்வஸ்துவால் ஆனந்த பிராப்தி ஏற்படுகிறது. வஸ்துவே ஸ்வரூபமான பகவானை பஜித்து பூஜிப்பதற்கு அன்பே பிரதான சாதனமாகுமென்பதை,

"பத்ரம் புஷ்பம் பலம்தோயம் யோமே
[பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி
[ப்ரயதாத்மந:"

என்று, [பகவத்கீதை - அத் - 9 - சுலோ 26] பகவானே உபதேசித்திருக்கிறார்.

அன்பு தனித்து நில்லாது. ஒரு பொருளின்மீதுதான் வைத்தாகவேண்டும். பொருளாதிகளோ, அசாச்வதமாயுள்ளதுகள். சாச்வதமான வஸ்துவின் நிர்ணயமோ வாக்கு, மனம், காயம் இவைகளுக்கு எட்டமுடியாதது. வஸ்துவின் விளக்கம் பரிசுத்தமுள்ள அந்தக்கரணத்தில் புலனுவதில்லை. ஆகையால் அன்பு என்பதை தனது இயற்கை ஸ்வரூபமாக உடைய பெருந்தகையார்களாகிய மஹான்களிடத்தில் நாம் பேரன்பு கொள்வோமாகில், எங்கும் நிறைந்த பரிபூர்ண ஸ்வரூபத்தின் ஸ்புரணையை நாம் பெற்று, ஆன்மகோடிகள் அனைத்திலும் ஒரு படித்தாய்விளங்கும் ஆண்டவனின் அருள் விலாசத்தால் அனைவரிடமும் அழியா அன்பைப் பெற்று அன்புமார்க்க வழியை ஆசரித்தவர்களாவோம். எல்லாம் வல்ல இறைவனிடம் அன்பு பூண்டொழுகும் பெரியோர்களின் திருவுளத்தில் ஆண்டவனின் யதார்த்த ஸ்வரூபம் யாதொரு மறைப்புமின்றி யதாவத்தாய் விளங்கிக்கொண்டிருப்பதால், அத்தகைய (ஆண்டவனின்) அன்பர்களுக்கு நாம் அடிமைகளாகிவிடின், அவர்களின் அருள் நோக்கால், நமது அறியாமை யாவும் நசித்தொழிந்து, அன்புமயமென்னும் இன்பநிலையை எளிதிலடையலாம். இந்நிலை வாய்க்கும் வழியை,

அன்பர் பணிசெய்ய வெனை யாளாக்கி
[விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே'

என்று ஸ்ரீ தாயுமானஸ்வாமிகளும் மனங்குழைந்து, உள்ளுருகி, அன்புநிலையில் நின்று பாடினர்.

மேலும்,

" அன்பைப்பெருக்கி எனதாருயிரைக்
[காக்க வந்த
இன்பப் பெருக்கேயிறையே பராபரமே"

என்றும் தனது குரு நாதனுன மௌனரூப தேசிகரை மனமார அன்புமயமான நிலையில் வைத்துத் துதித்தார்.

அன்பு சுகஸ்வரூபமாகும். சுகஸ்வரூமான வஸ்து வேறு, தான் வேறு, என்ற பாவமுடையோர்களை அரியாமை அகலாதவர்களென சாஸ்த்ரம் செல்லுகிறது. அறிஞர்களாகிய மஹான்களின் ஸ்புரணையில் சுகஸ்வரூப நிலை ஒன்று மட்டும் விளங்குவதால் சுத்த அத்விதீய சிரேஷ்டராகிய திருமூல நாயனர்.

" அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகில
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
ன்பே சிவமா யமர்ந் திருப்பாரே "

என்று அன்பும் சிவமும் இரண்டற்று விளங்கும் அநுபவானந்தத்தை வெளியிட்டார்.

சமுத்திரத்தில் உள்ள ஜலமானது ஸூரிய கிரணத்தில் ஆவியாகி, அந்தரத்தில் மேகமென பெயர் பெற்று காற்றால் அங்கு மிங்கும் அலையும் பொழுது, தெய்வ கெதியால் காற்றில் குளிர் சம்பந்தப்பட்டு, குளிர் காற்றின் ஸ்பரிசம் மேகத்துக்கு ஏற்படவும், மேகத்திற்கு தன் சுருப நிலை தோன்ற மழையாக மாறி,

(தொடர்ச்சி 9 -பக்கம் பார்க்க).

# ஸ்ரீ சங்கர ஜயந்தி.

## நாகப்பட்டிணம்

சென்ற சித்திரை மீ 11வ ஸோமவாரத்தன்று நாகப்பட்டிணம் ஸ்ரீ ஆசார்ய கைங்கர்ய ஸபாவின் ஆதரவில் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவமானது வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று பகலில் வழக்கம்போல் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் ஸ்வாமி அம்பாள் தக்ஷிணாமூர்த்தி சந்நிதிகளில் மஹன்யாஸ பூர்வமாக விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றது பிறகு குருமூர்த்தியின் உத்ஸவ விக்ரஹத்திற்கு அபிஷேகமும் பிறகு ஸ்ரீசங்கர பகவத்பாதாளின் திருவுரு படத்திற்கு விசேஷமான பூஜையும் ஆராதனமும் நடைபெற்றது. பிறகு மன்னார்குடி வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய அவதார கட்டத்தை வாசித்து பிரவசனம் செய்ததில் அவதாரத்தின் காரணத்தையும் அவதார வைபத்தையும் அவதாரம் செய்து ஷண்மத ஸ்தாபனம் செய்து சாரதா பீடத்தில் ஆரோகணம் செய்த விமரிசையையும் வெகு அழகாக உபன்யஸித்தார்கள். மாலையில் ஸ்ரீ குருமூர்த்தியின் உத்ஸவ விக்ரகத்திற்கும் அபிமுகமாக ஸ்ரீபகவத் பாதாளின் திரு உருவப்படத்திற்கும் ஊர்வலமானது வெகு விமரிசையாக நடைபெற்றது. நகரத்தில் எல்லா வைதிகர்களும் தங்களுதாக பாவித்து வேதபாராயண கோஷ்டி நடத்தியதும் ஸ்ரீ ராம மடம் பஜனை கோஷ்டியார் தங்கள் கோஷ்டியை வெகு விமரிசையாக ஏற்பாடு செய்ததும் மிகவும் கொண்டாடத்தக்கதே.

பிறகு ஜயந்தி மஹோத்ஸவத்தை அநுஸரித்து பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஆசார்ய மகிமை என்ற விஷயமாக ஓர் அரிய உபன்யாஸம் செய்தார்கள். பகவத் கீதா வாக்யங்களை உதாகரித்தும் குசேல உபாக்யானம் துருவசரித்திரம் முதலிய சரித்திரங்களில் குரு சிஷ்ய பாவங்கள் வர்ணிக்கப்பட்டிருப்பதை வெகு அழகாக விமர்சம் செய்தும் ஆசார்ய சுச்ரூஷையும் ஆசார பக்தியும் இல்லாவிட்டால் எவ்வித வித்தையும் சபலமாகாதென்று வற்புறுத்திப்பேசினார்கள்

நகரத்திற்கு விஜயம் செய்திருந்த கோயம்பத்தூர் வாகவி பிரம்மஸ்ரீ வெங்கட்டருயர் அவர்களும் ஜயந்தி தினத்தன்று திருமாளம் ஸோமயாஜியார் சரித்திரத்தை பக்தி புரஸ்ஸரமாக உபன்யஸித்தார்கள்.

கடைசியாக ஸபாவின் காரியதர்சி அவர்களால் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டும் திருப்பதி க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்திருக்கும் நமது ஜகத்குருவான ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களுடைய திவ்ய சரணாவிந்தங்களில் மகா ஜனங்களின் சாஷ்டாங்க நமஸ்காரங்கள் தெரிவிக்கப்பட்டும் உத்ஸவமானது நன்கு பூர்த்தியடைந்தது.

N. சாம்பசிவ அய்யர்.

## திப்பருஜபுரம்.

ப்ரமாதி-ஞு சித்திரை-மீ 7வ குருவாரம் காலையில் அனுக்ஞை விக்னேச்வரபூஜை ஸங்கல்ப க்ரஹப்ரீதி புரஸ்ஸரமாய் பரமாசார்ய பூஜை செய்து கர்பூரஹாரத்திக்குப் பிறகு எல்லோரும் சேர்ந்து புஷ்பாஞ்சலி செய்து தக்ஷிணாமூர்த்தியஷ்டக நமஸ்காரம் செய்து தசசாந்தி புரஸ்ஸரமாய் உபநிஷத் பாராயண சங்கர பாஷ்ய பாராயணமும் ப்ருமணர்களைக் கொண்டு நடத்தி த்ருபுரசுந்தரீ ஸ்ரீ சக்ர ஆரவண பூஜையும் ஸஹஸ்ரநாம த்ருசதி அர்ச்சனமும் கர்பூரஹாரத்திற்குப் பிறகு சதுர்வேத அவதான ஆசீர்வாதமும் உத்தர சாந்தி உத்தர நமஸ்காரமும் தீர்த்த ப்ரசாதமும் வழங்கி ப்ராமண ஸந்தர்பணமும் 4-மணியிலிருந்து 6-மணிவரையில் உபன்யாஸமும் ஸாயம் சந்த்யைக்குப் பிறகு ஆச்சார்யதேவி பூஜையும் ப்ருமண ஸந்தர்பணமும் 8-மணியிலிருந்து 11-மணி வரையில் உபன்யாஸமும் இவ்விதம் 5 தினமும் நடத்தி 11வ சோமவாரம் ஆச்சார்யாவதார தினம் ராத்ரி வாத்யகோஷ ஸ்வஸ்தி வாசனதுடன் முத்து விமானத்தில் ஆச்சார்ய ப்ரதிமையையும் த்ருபுரசுந்தரியையும் அலங்காரம் செய்து திருமப்ரதக்ஷிணமும் ப்ரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளால் த்ருபுரஸ்தான மென்னும்க்ஷேத்தில் 16ம் உத்ஸவமானது நடைபெற்றது.

உபன்யாஸகவிபரம் ப்ரும்மஸ்ரீ கவியனி வி. கே. சுப்ரமண்ய சாஸ்திரிகள் 4 காலமும் ப்ரும்மஸ்ரீ நாருயணஸ்வாமி ச்ராஸ்திகள் 2 காலமும் மகா-ா-ாஸ்ரீ டி. எஸ். சுப்பய்யர்வாள் 1 காலமும் ப்ரும்மஸ்ரீ சிமிழி வெங்கடரும சாஸ்திரிகள் 3 காலமும் வாக்கினுல் ஈச்வர ஆச்சார்யகுண தர்ம தத்வங்களை அம்ருதவர்ஷமாக வர்ஷித்தார்கள். நதி

## இலந்துறை.

நாளது ப்ரமாதி-ஞு சித்திரை-மீ 11வ ஸோமவாரம் இவ்வூர் ஆரியன் எலிமெண்டரி பாடசாலையில் வழக்கம்போல ஹெட்மாஸ்டர் ஸ்ரீ A. K. ஸதாசிவய்யர் அவர்களது நன்முயற்சியால், காலையில் தண்டத்தோட்டம் ஸ்ரீ ஹரி:, விளங்குடி ஸ்ரீ கல்யாணசுந்தரமய்யர், ஜெடீயூர் ம்ருதங்கம் ஸ்ரீ ராமநாதையர், நடார் ஹிந்து எலிமெண்டரி பாடசாலை ஹெட்மாஸ்டர் ஸ்ரீ E. K. க்ருஷ்ணமூர்த்தி ஜெடீயூர் லக்ஷ்மணையர், த்ருபுவனம் ஸ்ரீ க்ருஷ்ணையர் முதலிய பாகவதர்களும் உள்ளூர் அசேஷ மஹாஜனங்களும் ஸ்ரீமதாசார்யாள் ஸ்ரீமடத்திலிருந்து அநுக்ரஹ புரஸ்ஸரமாக வந்திருந்த ஸ்ரீமுகம் திவ்யப்ரஸாதங்கள் முதலியவைகளை பகவன்நாம பஜனை கோஷ்டியுடன் கிராமப்ரதக்ஷிணமாக பாடசாலையில் ஸ்ரீமதாசார்யாள் பூஜைக்காக அலங்கரித்திருந்த மண்டபத்திற்கு வந்து ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாசார்யாள், தற்காலம் விளங்கிக்கொண்டிருக்கிற ஆசார்யாள் முதலிய திருவுருவப்படங்களுக்கு விசேஷ புஷ்பாலங்காரத்துடன் ஸ்தோத்ர பாராயண பூஜை ஆராதனைகள் நன்கு (உத்ஸவ ஸம்ப்ரதாயத்துடன்) நடைபெற்றது.

பெரிய கோவிலிலும் "ஸமாஸ குமாரம்" ப்ரும்மஸ்ரீ சிவாசார்ய நடராஜ நடேச சர்மா அவர்களது நன்முயற்சியால் வழக்கம்போல ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ பாராயணத்துடன் அபிஷேக ஆராதனைகளுடன் ஸ்ரீஜ்ஞான கைவல்ய ஸஹஸ்ரநாமமென்ற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸஹஸ்ரநாமார்ச்சனையும் தீபாராதனையும் நன்கு நடைபெற்றன.

பிறகு பாடசாலையில் ப்ராம்மண ஸந்தர்ப்பணை விசேஷமாக நடந்து, மாலையில் பூஜை ஆனதும் ப்ரம்மஸ்ரீ சிவாசார்ய நடராஜ நடேச சர்மா அவர்களால் ஆதி ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளது அவதார வைபவத்தை சுருக்கக் கூறி விளங்கவைத்து 'க்ஷேமமார்க்க' மென்ற விஷயத்தைப்பற்றிப் பல ஸம்ஸ்க்ருத தமிழ் மேற்கோளுடன் பண்டித பாமர ரஞ்சிதமாகவும் தற்காலத்தோன்றியுள்ள துர்ப்பிக்ஷங்களும் ஸுபிக்ஷமும் தோன்றுவதற்குமான மார்க்கத்தை நன்கு விளக்கி கேட்டோர் மனதில் பதியவைத்துக்கொண்டு பகவத்பக்தியில் பெருமாறு மிக அழகாக உபன்யஸித்தார்கள். பிறகு திவ்யநாம ஸங்கீர்த்தனம் முதலிய பாகவத ஸம்ப்ரதாயங்கள் நன்கு நடந்து பாகவதர்களுக்கும் மற்றும் அங்கு விஜயஞ்செய்திருந்த விசேஷ மஹாஜனங்களுக்கும் சந்தன புஷ்பதாம்பூலாதி ப்ரஸாத விநியோகங்களும் நன்கு நடைபெற்று மங்களம் பாடி மறுதின உதயத்தில் உத்ஸவமானது ஈச்வர க்ருபையால் நன்கு பூர்த்தி ஆயிற்று.

மறுதினம் விடையாற்றியும் ஆஞ்சநேய உத்ஸவமும் நடைபெற்றது.

ஸ்ரீ ஆசார்ய பக்தன்.

## செங்கற்பட்டு.

பிரமாதி சித்திரை-மீ 4வ திங்கள்கிழமை ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம் செங்கற்பட்டு ஈச்வரன் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. காலை 8-மணிக்கு, ஸ்ரீ ஆதி பகவத்பாதாள் உருவப் படத்திற்கு விசேஷ அலங்காரங்களுடன் ஷோடசோபசார பூஜைகள் நடைபெற்றது. அக்ரஹார ஜனங்கள் விசேஷமாய்க் கூடியிருந்தனர். பிறகு ரிடையர்டு போஸ்டுமாஸ்டர் K. விஸ்வநாத அய்யர் அவர்களால், ஸ்ரீ சித்விலாஸீய, சங்கர ஜயந்தியில் உள்ளதை அநுசரித்து ஸ்ரீ பகவத் பாதாளுடைய சரித்திரம் விசேஷமாய் உபன்யஸிக்கப்பட்டது. மாலையில் ஸந்திக்குப்பிறகு விசேஷ பூஜைகளுக்குப் பிறகு N. V சர்மா அவர்களால் விசேஷ பக்க வாத்தியங்களுடன் பஜனை நடத்தப்பட்டது. பிறகு ப்ரம்மஸ்ரீ புடார்ஜுன சர்மா அவர்கள் ஸ்ரீ சங்கர விஜயம் உபன்யஸித்தார்கள். அதில் ஸ்ரீ பகவத் பாதாள்களின் அவதார ரகஸ்யங்களும், குருபக்தியின் பெருமை ஸ்ரீ பகவத் பாதாளுடையவும், தற்கால காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஆசார்யாளுடையவும், மஹிமை முதலிய விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன. பிறகு பிரம்மஸ்ரீ சைதன்ய ஸ்வாமிகள் என்கிற யதீச்வரர்கள் த்வைத, விசிஷ்டாத்வைத, அத்வைத என்கிற மூன்று மதங்களும் பேரில் ஸாம்ராஜ்யமாகிய உப்பரிகையில் படிகளாக ஸோபானக்ரமமாக அமைந்திருக்கிற தென்றும் மதத்ரயத்தின் ஸாரஸ்யமும், முக்யமான மோக்ஷ ஸாதன விஷயங்களில் 3 ஆசார்யர்களின் ஐக்ய மத்யமும் தெளிவாய் உபன்யஸித்தார்கள். பிறகு பிரஸாதம் வழங்கி பூர்த்தி செய்யப்பட்டது. இந்த விஷயத்தில் பிரம்மஸ்ரீ அகோரம் அய்யர் அவர்களுடைய சிரத்தை விசேஷமானது.

நதி

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆசாரம்முதலியவைகளையும் சங்க்ரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியாவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல் திருச்சினா.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்,


நாங்கள் கில்ட்பாம்தான்களை தயார் செய்து சரஸமான விலைக்கு விற்கிறோம். வேண்டியவர்கள் விலை விபரங்களுக்கு எழுதவும்.

R. Pandarinatham Chetty,
109-111, Naskarpara Road,
GHUSURI HOWRAH.




235

## துகிலி.

### ஸ்ரீ சங்கர ஜயந்தி.

துகிலி அக்ரஹாரத்தில் ஆர்ய வித்தியா பிரபோதினி ஸம்ஸ்கிருத பாடசாலையின் ஆதரவில் சென்ற 15—4—39 முதல் 24-4-39 வரை ஸ்ரீசங்கர ஜயந்தி மகோத்ஸவம் அதிவிமரிசையாக பக்தகோடிகளால் நடத்தப் பெற்றது. அச்சமயம் ஸ்ரீ ஆசார்யாளுடைய சன்னதியில் 20-4-39-ல் ராமதாஸ் சரித்திரம் கிள்ளுகுடி ஸ்ரீ நடேச பாகவதர் அவர்களால் சொல்லப் பட்டது. 23-4-39-ல் கிராதர் ஜுநீயம் [பாசுப தாஸ்திரகட்டம்] என்ற சரித்திரம் ஸ்ரீமதி கும்பகோணம் சாவித்திரி அம்மாவினுல் தகுந்த பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது.

மாதிரிமங்கலம் ஸ்ரீ சாம்பசிவய்யர் அவர்களுடைய புல்லாங்குழல் கச்சேரியும் திருவாடுதுரை கிருஷ்ண பிள்ளையினுடைய புல்லாங்குழல் கச்சேரியும் நடை பெற்றது.

பிரதி தினம் மாலையில் ஸ்ரீமத் ஆசார்யாளுடைய சரித்திர உபன்னியாஸங்களும் நடை பெற்றது.

24-4-39 திங்கள் கிழமை மாலை ஆராதனை முதலியவைகள் நடந்த பிறகு ஸ்ரீ ஆசார்யாளுடைய திருவுருவப் படத்தின் 'கோ' ரதத்தில் ஊர்வலம் மூன்று ஜதை மேளக் கச்சேரியுடனும் சில பஜனைகளுடனும் இனிது நடைபெற்றது. அனைவர்களுக்கும் பிரசாதம் முதலியவைகள் வழங்கப் பெற்று முடிவடைந்தது.

26—4—39 மாலை ஸ்ரீ ஆசார்யாளுடைய சன்னிதியில் கும்பகோணம் ஸ்ரீமான் கவாய் கல்யாணமய்யர் மிருதங்கம் தேப்பெருமாநல்லூர் ஸ்ரீமான் ராமசாமி பாகவதர் அவர்கள் ஹார்மோனியம் முதலிய பக்கவாத்தியங்களுடன் மகாராஜபுரம் ஸ்ரீமான் சின்னசாமி பாகவதர் அவர்களால் குசேல சரித்திரம் சொல்லப் பட்டு நடை பெற்றது.

ஒரு நிருபர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி).

காடு, நாடு மலை முதலானதுகளில் வந்திருந்து பெரிய நதிகளின் வசமாகி, திரும்பவும் தானிருந்த நிலையை (சமுத்திரத்தை) அடைந்து கலப்பது போல், அகண்டாகார, சர்வவியாபக சச்சிதானந்த சிவமும், அநிர்வசனமான தனது சக்தியால் தனது யதார்த்தஸ்வரூபம் மறதி பெற்றதுபோலும், பிரமையினுல் பல நாம ரூபங்களுற்றது போலும் பரிணமித்துத் தோன்றி, கர்மக்காற்றால் அலைந்து திரியும் பொழுது தெய்வச்செயலாய் ஏற்பட்ட சுத்த சத்து வசம் பந்தத்தால் ஸ்வரூப பிரக்ஞை என்ற மழைத்துளிகளாக மாறி, மனோவாக்கு, காயங்களில், மாறியாக வந்து விழுந்து, நிறைந்து, ததும்பி, அன்பு மார்க்கமென்னும் நதிகளை அடைந்து அதன் வழியே சென்று ஆனந்தபிராப்தி யென்னும் அகண்டாகார விர்த்தி நிறைந்த சமுத்திரத்தில் கலந்துபோய் அங்கேயே வசித்து விடுகிறது என்ற ஓர் உவமை மனோபரிசுத்தம் பெற்ற அன்புமயமான ஆசானைக்குப் பொருத்தமுள்ளதாகும்.

பரிசுத்தமுள்ளவிடத்தில் பக்தியும், பக்தியுள்ள விடத்தில் அன்பும், அன்புள்ளவிடத்தில் சாந்தமும், சாந்தமுள்ள விடத்தில் தெய்விக சக்தியும், தெய்விக சக்தியால் ஞானமும், ஞானத்தால் சச்சிதானந்தமும் பவிப்பதாம். சச்சிதானந்த ஸ்வரூபமே கடவுள். கடவுளைக் கண்டவர் கடவுளே ஆகிறார்.

சர்வேஜனஸ் ஸுகினோ பவந்து.

## பண்ருட்டி.

### ஸ்ரீ முக படனம்.

28-4-39க்கு சரியான பிரமாதி ஞு சித்திரை மீ 15வ சுக்கிர வாரம் பூர்வ பல்குனி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பண்ருட்டியிலிருக்கும் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்பாளுக்கு பிரதி வருஷம் போல் இவ்வருஷமும் ஸ்ரீ ஜெயந்தி மகோத்ஸவத்தை பண்ருட்டியில் இருக்கும் ஆர்யவைசிய மகா ஜனங்களாலும் சமீபத்தில் இருக்கப்பட்ட புதுப்பேட்டை ஆர்யவைசிய மகா ஜனங்களாலும் அதிவிமரிசையாய் கொண்டாடப் பட்டது. மகாபிஷேகம் சகஸ்ர நாமார்ச்சனை பிருமண சந்தர்ப்பணை இவைகள் யதோக்தமாய் நடத்தப் பட்டது.

அன்று தினம் பிரம்மஸ்ரீ சாம்ப மூர்த்தி கனபாடிகளால் ஸ்ரீமுகப் பத்திரிகை வாசிக்கப்பட்டு குருபக்தி என்கிற விஷயம் ரொம்பவும் அழகாய் உபந்யசிக்கப் பட்டு கடைசியில் ஸ்ரீ முகப் பத்திரிகையை ஆர்யவைசிய சமூகம் நாட்டாமை ஆ. மு. சக்கிரபாணி செட்டியாரிடமும். புதுப்பேட்டை வைசிய சமூகம் நாட்டாமை சக்கிரபாணி செட்டியாரிடமும் சமர்ப்பிக்கப் பட்டது. 2பேர்களும் 2 ஸ்ரீமுகப்பத்திரிகைகளை தனித்தனி அதிக ச்ரத்தா நமஸ்காரத்துடன் ஸ்ரீ ஆசார்யாள் பக்தியை ரொம்பவும் மேலிட்டுக்கொண்டு கிரஹித்துக்கொண்டார்கள் பிறகு எல்லோருக்கும் விபூதிகுங்கும அக்ஷதை பிரஸாதங்களும்விநியோகிக்கப்பட்டது. புக்கை முகாமிலிருந்து ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ மகா சன்னிதானத்திலிருந்து சாம்பமூர்த்தி கனபாடிகளுக்கு வந்த லெட்டரின்பேரில் ஸ்ரீமகாஸ்வாமிகள் நடக்கிற மேமீ 12-13 தேதிவாக்கில் பண்ருட்டிக்குவிஜயம்ஆகப்போகிறதைமுன்னிட்டு பக்த சிஷ்யகோடி மகாஜனங்கள் அனைவரும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வரவையும், தரிசனத்தையும் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமடம் சிஷ்யன் சாம்பமூர்த்தி.

## பரித்தியூர்

### ஸ்ரீ முகபடனம்

21—4—1939 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சேங்காலிபுரம் கிருமத்தில் மகா-ா-ா-ஸ்ரீ வெங்கட்டருமய்யர் குகதாஸ் மகா-ா-ா-ஸ்ரீ நடருஜய்யர் இருவரும் பிரசங்கபானு பிரம்மஸ்ரீ வைத்திநாத சாஸ்திரியவை முன்னிட்டு கும்பகோணம் மடம் ஸ்ரீ சங்கராச்சாரியார் அனுப்பிய ஸ்ரீமுக படனம் அக்கிரகாரத்தில் ஸ்ரீ நாராயண வாஜபேயி முதலிய அநேக ஆகிதாக்னிகள் முன்னிலையில் கிரும மகா ஜனங்களுடைய மத்தியில் பரித்தியூர் பிரும்மஸ்ரீ கோதண்டராம தீக்ஷதரைக் கேட்டு நடத்தியதும் கிருமம் கொண்டாடத்தக்கது.

நாளது பிரமாதி-ஞு சித்திரை-மீ 9வ அக்ஷயதிருதியை அன்று நன்னிலம் தாலுகா சிமிழி கிராமத்தில் மாலை சுமார் 4-மணிக்கு செங்காலிபுரமிருந்து ஸ்ரீமுக விஷயமாய் போன குகதாஸ், நடருஜய்யர், வைத்தினாத சாஸ்திரியாள் முதலியவர்களை கிருமம் கிழக்கோடி, முதல் பூரணகும்பம் கொண்டு வேத கோஷத்துடன் மேல கோடி பெருமாள் கோவிலுக்கு அழைத்து ராத்ரி 9 மணி வரையில் பரித்தியூர் ஸ்ரீ கோதண்டராம தீக்ஷதரைக் கொண்டு ஸ்ரீமுகபடனம் செய்ததில் அவர் அங்காங்கு சருதி ஸ்மிருதி புருணங்கள் இதுகள் மூலம் குருக்களின் மகிமையை தமிழில் குழந்தைகள் முதல் அனைவரும் அறியுமாறு பிரகாசிக்கவும் பண்ணி பிறகு சந்தனம் தாம்பூலம் கொடுத்து ஸதசு பூர்த்தி அடைந்தது.

[ந—நி.]

## ஸ்ரீரங்கம்.

நாச்சியார் கோவில் லக்ஷ்மீ மந்திரம் அபிநவ ஸரஸ்வதீ வாங்முக ரத்னகோச: வித்வத் சிரோமணி பண்டித ராஜ ஸ்ரீ உபய வேதாந்த ஆசார் ஸிம்ஹரா ஸநாதிபதி. வித்வான் நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி ஸ்ரீ ரங்கநாயகி ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவதர்சனம் பெற்று கோயிலில் ஸ்தாபித்திருக்கிற ஸைபோரி மியூஸியத்திற்கு விஜயம் செய்து ஆபீஸரின் கோரிக்கைப்படி விஸிடிங் அபிப்ராய புஸ்தகத்தில் ஸம்ஸ்கிருத ச்லோகங்களால் புகழ் மொழி எழுதி ஆனந்தித்ததுடன் ஸ்ரீ அஹோபிலம் மடம் அழகிய சிம்மர் ஸ்வாமிகளால் புரஸ்கரிக்கப் பெற்றனர்.

ஒரு நிருபர்.

# மதிப்புரை.

## ஸ்ரீ ராதாகிருஷ்ண சரிதாமிருத ஸார ஸங்கிரகம்.

இத்தகைய பெயருள்ள புத்தகத்தைக் கண்ணுறும் யாவருக்கும் அமிர்த பானத்தின் பயனெய்த ஐயமில்லை. நம் தேசத்தில் பலர் ராதையையே அறியார். ராதாகலியாண உத்ஸவம் நடத்துவோர் சிற்பர். சிலர் அறிய விரும்பியும் தெளிவாக விஷயம் தெரியாமல் தயங்கி நின்றுளார். இப்புத்தகமோ ஸ்ரீராதா தேவியின் ஸ்வரூபம், கிருஷ்ணனை மணத்தல் முதலியவைகளைச் செவ்வனே விளங்கச்செய்கின்றது. இவ்வளவு மேன்மையுள்ள இச்சரிதாமிருதம் புராணக்கடலினுள் மறைந்திருந்ததை சீர்காழி ஸ்ரீ சுப்பருமய்யர் அவர்கள் கடைந்தெடுத்துத் திரட்டியளித் துள்ளார். कृषिर्भूवाचको धातुः णश्चनिर्वृति वाचकः । तस्मात् सदानन्दरूपः कृष्ण इत्यभिधीयते । என்ற வசனப்படி ஸ்ரீகிருஷ்ணன் ஸச்சிதானந்த ரூபமாய் பிரும்ம மென்றும் 'राध्यते मुक्तिरनया राधोपनिषदुच्यते ।' என்றபடியாக ஸ்ரீராதா தேவி உபநிஷத் என்று சொல்லக்கூடிய பிரும்மவித்தை யென்றும் பிரஸித்தமாதலால் அத்தகைய ஸ்வரூபம் அவாங்மனஸ கோசரம், எனக்கருதியே ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீசுகாசாரியாள் இச்சரிதத்தை வெளிப்படையாகக் கூறுமல் மயங்கிய முறையாலே குறித்துள்ளார் போலும். அவ்வித மோக்ஷ சாதனமான சரித்திரத்தை அங்கங்கே புராணாந்தரங்களில் உள்ளவாறு ஒருங்கே சேமித்துப் பண்டித பாமரர்கள் யாவரும் எளிதில் உணர்ந்து முக்தி பெருமாறு சங்கிரகித்து அச்சிட்டு வெளியிடுவதுடன் ராதாஸஹஸ்ரநாமம், பூஜா விதானம் முதலிய அரிய பெரிய விஷயங்களையும் இப்புத்தகத்தில் சேர்த்துக் கோர்த்திருப்பதால் பக்தகோடிகளனைவருக்கும் மிகுந்த பயனையளிக்குமென மகிழ்ச்சியுடன் மனமாறத்தெரிவிக்கின்றேன்.

ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள்

215280


மார்சலியே



சுவாஸப்பைகளில் கடமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக வ்யவஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## தமிழ்ப்புத்தாண்டு.

வெகுதான்யவாண்டு கடந்து பிரமாதி வருடம் தோன்றியுள்ளது. இத்தமிழ்ப் புத்தாண்டு வெள்ளிக்கிழமையில் பிறந்திருக்கிறது. இதனை நன்கு கவனிக்க வேண்டும். "வெய்ய பிரமாதியினில் வேந்தர் கொடுமையுறும், ஐயகேள் பஞ்சமடுக்கருமே—செய்ய பசுக்கள் மெலியும், பாரிற்குடிகள், சிறுக்களுடனலைவார்தேர்" என்ற வெண்பாவை நோக்கு மிடத்து இவ்வாண்டு மிகவும் வெய்யதென்பது பெறலாம். கலியில் கண்கொடுக்கும் தெய்வமாய் வேதவெற்பினில் விளங்கி நிற்கும் திருவேங்கட முடையான் வெள்ளிதோறும் திருமஞ்சனங் கண்டருளுகிறபடியால் அந்நன்னாளில் தொடங்கிய இவ்வாண்டு அலறல்களைக் கொடுப்பினும் இறைவனது திருக்கமல பாதங்களை அநுதினமும் தொழுவார்க்கு நலனளிக்கும் என்பதில் ஐயமில்லை. மருத்துவனாய் நிற்கும் மாமணிவண்ணன் மாணடிசேர சகல இடும்பைகளும் அறும் என்பது சொல்லவும் வேண்டுமோ!

"வாள்களாகி நாள்கள் செல்ல" என்றும் "சென்ற நாளெல்லாம் சிறு விரல் வைத்தெண்ணலாம்" என்றும் கூறுகிறபடி கடந்த நாட்கள் கணக்கற்றவை. நின்ற நாள் யாக்கும் உணர்வரிது நன்மை செய்வான் நாள் உலப்ப விட்டிருத்தல் நன்றன்று. ஆராண்டு கழிந்தவாறே ஒரு வயது அதிகமானதாகற்ப அறிவும் ஒழுக்கமும் முன்னையினும் மேம்பட்டுள்ளதா என்று ஒவ்வொருவனும் நன்கு ஆலோசித்துத்தற வேண்டும். குறைகளிருப்பின் அவற்றை நீக்கி இணைமடைய மியலல் வேண்டும்.

இப்புத்தாண்டில் நம்மவர் செய்ய வேண்டிய சில முக்கிய விஷயங்களை இங்குக் குறிப்பிடுவோம்.

1. மனம் வாக்கு காயம் மூன்றும் சுத்தமாய் வைத்துக்கொண்டு ஈக்காரியத்திலும் இறங்குவதே நல்லது. உள்ளொன்று வைத்து புறம் மொன்று பேசுதல் ஏதமுண்டாகும். புத்தாண்டு பிறப்பில் நாம் குதூகலிக்க வைத்த ஆண்டவன் அருளைத் தினந்தோறும் முறையே கொண்டாடல் அவசியம்.
2. "பெரியாரைத் துணைக்கொள்" "சான்றோரினத்திரு." நல்லாரோடிணங்கியிரு.
3. கூடுமான வரையில் பிரார்த்தம் கண்டால் இரங்கி அதனைப் பரிகரிக்கப்பார். அதனைக்கண்டு இன்புறுதே.
4. உபயோகமற்ற விவாதங்களில் தலையிட்டுக் கொண்டு காலத்தை வீணாக்காமல் நன்னூல்களைக் கற்றலிற் காலம் போக்கு.
5. தமிழ் வளர்ச்சி என்று விண்பறைபடிப்பதை நிறுத்தி எம்மட்டில் அதற்கு நம்மால் நல்வழியில் உதவக் கூடுமோ அவ்வத்துறைகளில் காலந்தாழ்த்தாது நன்மை செய்யமுற் படவேண்டும்.
6. திருக்குறள், கம்பராமாயணம் இவற்றை நாடெங்கும் நன்கு பரவச் செய்ய நாடு நலம் பெறும். தமிழ் வித்துவான் ஊதியத்தையே எதிர்பாராது இச்சிறிய தொண்டாற்றின் கலியுங்கெட்டு கிருதயுகத் தோன்றும்.
7. தமிழ் பத்திரிகைகளை நன்கு ஆதரிக்க வேண்டும். "இந்து நேசன்" "ஆர்ய தர்மம்" என்றிவை ஆற்றிவரும் நற்றொண்டை மனதிற் கொண்டு அவற்றிற்குத் தக்க உதவி அளித்தல் அத்தியாவசியகம். "வகுளமாலை" யையும் கவனிக்க பெரியார் அநுக்கிரஹம் உண்டாகும்.
8. பெரியார் திரு நாட்களை நன்னெறியில் கொண்டாடல் வேண்டும்.
9. வித்துவான்களைத் தக்கபடி போற்றல் வேண்டும்.
10. நன்மை கடைப்படி, அறனை மறவேல், திருமாலுக்கடிமை செய், தெய்வமிகமேல் நம்புர வொழுகு. ப. செ. தி.

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

### ஸ்ரீ வேதவியாசர் திருநாட் கோண்டாட்டம்.

21-4-30வ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவியாசர் திருநாட்கொண்டாட்டம் ஆரம்பமாகியது காரியதரிசி ஆரம்பத்தில் "அஞ்சிலே யொன்று பெற்றான்"; "ஆனை நால் வழிச் செவ்வை" என்ற இரண்டு பாசுரங்களையும் கடவுள் வாழ்த்தாகப் பாட, சங்கத்தலைவர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்து ஏகனாயின் ஸ்ரீமான் ஜஸ்டிஸ் லக்ஷ்மணாரவ் அவர்களைத் தலைமை வகிக்குமாறு வேண்ட, அப்பிரேரணையை சங்க உப தலைவர் ஸ்ரீ வி. நரசிம்மாசாரியாரும், வித்வான் பிரம்மஸ்ரீ கௌசிகேயது நாதாசாரியாரும் ஆமோதிக்க, ராயவர்களும் அவைத்தலைமை தாங்க, திவான் பகதூர் ஸ்ரீ. ராகவாசாரியார் வடமொழிச் சுலோகங்களால் அவருக்கு வாழ்த்துக்கூற, காரியதரிசி தமிழில் வாழ்த்துப்பாக்கள் வழங்க, ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹனுக்குச் சாத்தப்பட்டிருந்த பூமாலையை தலைவரவர்களுக்கு இட அவர்களும் முன்னுரையாகத் தனது நன்றியைத் தெரிவித்து உபந்யாஸகரைப்பிரசங்கிக்குமாறு தூண்ட அன்று பிரசங்கம் செய்ய இணங்கி யிருந்த ஸ்ரீ குருச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் அவர்களும் "ஸ்ரீ வேத வியாச வைபவம்" என்ற அரியதோர் விஷயத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்துகையில் வியாசருக்கும் ஸ்ரீயஃபதியானவிஷ்ணுவுக்கும் வாசியில்லை என்றும், இவரை அவர் காலத்தவரும் பிற் காலத்தவரும் நன்கு கொண்டாடும் படியான பேற்றைப் பெற்றவரென்றும், ஸூத்ரவதுவேதமாகிய பாரதத்தைப்பணித்து அதில் ஸ்ரீ பகவத் கீதையும் அடங்குமாறு உதவி எம்பெருமானது முகோல்லாஸத்தைப் பெற்றவரென்றும், தமது பிரம்மஸூத்ரத்தில் அர்த்த பஞ்சகத்தை நன்கு வெளியிட்டுள்ளாரென்றும், ஸ்ரீமந்நாராயணனே பரன் என்பதை மாற்றலரும் அமைந்து ஒப்புக் கொள்ளுமாறு தெளிவுபட விளக்கியிருப்பதுடன் சர்வ சரீரியாகிய அவனே சர்வலோக நாதனென்பதை முழக்கியுள்ளாரென்றும், உலகம் நன்னிலையடைந்தது இவராற்றுனென்றும், அவரது திருநாட் கொண்டாட்டத்தை நடத்துவது சாலச்சிறந்ததென்றும் அன்று தலைமை தாங்கிய ஜஸ்டிஸ் ராயர் அவர்களை மிகச்சிலாகித்தும் உருக்கமாகச் சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரையில் உபந்யாசம் வெகு அழகியதாயிருந்ததென்றும், அன்னார் கூறியதை அப்படியே ஆமோதிப்பதாயும் கொண்டாட்டத்தில் அங்கமித்துக்கொண்டது தனது ஆத்மாவுக்கு விசேஷ ஊக்கத்தையும் பலத்தையும் அளிக்கக்கூடிய அருமருந்தாகியதென்றும் விசேஷமாகப்பாராட்டிக்கூறினார்.

காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் கொண்டாட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது நிறைவேறியது.

ப. செ. திருமலை அய்யங்கார்
காரியதரிசி.


முக்கிய கவனிப்பு.

3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கத்தைப்போன்ற "கவரிங் ப்ளேட் ரோல்ட்கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர் :—என். கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

11 19

23

12-5-1939

215281

215281
28 MAY 1938 MADRAS
241

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஸூ சித்திரை-மீ 30உ 1938ஸூ மே-மீ 12உ | ஸ 19

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்ச் 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

### ஒரிஸா நெருக்கடி தீர்ந்தது.

#### கவர்னருக்கு லீவு ரத்து.

ஒரிஸாவில் காங்கிரஸ் மந்திரி ஸபை ஏற்படுத்திய ராஜிநாமா நெருக்கடி ஒருவாறு தீர்ந்துவிட்டது. லீவில் போக நினைத்த கவர்னரின் லீவு ரத்து செய்யப்பட்டு விட்டது.

இதனால் புதிய ஸிவிலியன் நியமனம் ரத்தாகி விட்டது நெருக்கடியும் தீர்ந்தது.

### இதாலியில் ஹிட்லர்.

ஜர்மன் ஸர்வாதிகாரியான ஹிட்லர் இதாலிக்குப்போனார். ஸர்வாதிகாரியான முஸோலினியுடன் ஸம்பாஷித்தார். ஏற்கனவே முஸோலினி ஜர்மனிக்கு வந்து போனார். இந்த இரண்டு ஸம்பவமும் உலகத்தின் மனதைக் கவர்ந்துள்ளது.

### மைசூரில் ஸ்ரீமான் படேல்.

மைசூரில் காங்கிரஸுக்கும், ஸர்க்காருக்கும் தகராறு முற்றி பெரிய குழப்பமும் சச்சரவும் ஏற்பட்டு வருவதால் இதில் தகுந்த பரிஹார முறையைக்கண்டு பிடிக்க ஸ்ரீமான் படேல் மைசூரில் வந்திருக்கிறார். திவானுடன் நெடுநேரம் பேசி நிலைமையைப்பரிசீலித்தார். தகுந்த முறையில் ராஜி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### எல்லைப்புறத்தில் காந்திஜி,

ஸ்ரீமான் காந்திஜி அப்துல்காபர்கானின் அழைப்பிற்கிணங்கி எல்லைப்புறச் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்.

ஜனங்கள் மிகுந்த உத்சாகத்துடன் அவரை வரவேற்று உபசரிக்கிறார்கள்.

### சாமி வெங்கடாசலத்தின் செய்கை

#### காங்கிரஸ் ஒழுங்கு முறைக்கு விபரீதம்.

சென்னை கார்ப்பரேஷனில், காங்கிரஸ் கக்ஷியாரின் ஒரு தீர்மானத்திற்கு எதிராக ஸ்ரீமான் ஸாமி வெங்கடாசலம் ஓர் திருத்தம் கொண்டு வந்தார். இது காங்கிரஸ் கக்ஷியின் கட்டுப்பாட்டுக்கு விரோதமானதால் அவர் மீது ஒழுங்கு முறை மீறிய செய்கைக்காக நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்படுகிறதாம்.

### சென்னையில் இரும்பு மறியல்.

ஜான்ஸிபார் கிராம்பை பஹிஷ்கரிக்கும்படி காங்கிரஸ் கட்டளை யிட்டிருப்பதைத் தழுவி சென்னையிலும், கிராம்பு மூட்டைகளை எடுக்கவொட்டாமல் காங்கிரஸ் காரர்களால் மறியல் நடத்தப்படுகிறது. கார்ப்பரேஷன் மெம்பர்களும், சட்ட ஸபை மெம்பர்களும், கூட இந்த மறியலில் ஈடுபடுவார்களாம்.

### பீஹாரில் வியவஸாய வருமான வரி.

#### தர்ம ஸொத்துகளுக்கு விலக்கு.

பீஹார் சட்ட சபையில் வியவஸாய வருமானத்திற்குவரி விதிக்க ஓர்மசோதா நிறைவேறிவிட்டது. முஸ்லீம்கள் தங்கள் தேவாலய தர்ம ஸொத்துக்கள் விஷயத்தில் இந்த வரியை விதிக்கக்கூடாதென்றும், குரான் விதி விரோதமாயிருப்பதாயும், ஆகலால் முஸ்லீம் தர்ம ஸொத்துக்களை விலக்கிவிடவேண்டு மென்றும் வற்புறுத்தினர். இதனால் காங்கிரஸ் ஸர்க்காருக்கு ஸங்கடமுண்டாயிற்று. முஸ்லீம்களை திருப்தி செய்ய வேண்டி அவர்கள் பணிந்தார்கள்.

கடைசியாக, ஹிந்து, முகம்மதிய தர்ம ஸொத்துகளை மசோதாவிலிருந்து விலக்கி விடத்தீர்மானிக்கப்பட்டது.

### பீஹாரில் வரதக்ஷிணை மசோதா.

#### ஸர்குலேட் செய்யத்தீர்மானம்.

பீஹாரில் சட்ட ஸபையில் கொண்டு வரப்பட்டுள்ள வரதக்ஷிணைத்தடை மசோதாவைப் பொது ஜன அபிப்பிராயம் அறியும் பொருட்டுஸர்குலேட் செய்ய வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. பெரும்பாலோரான மெம்பர்கள் இந்த மசோதாவை ஆதரித்துப்பேசினாராம். இரண்டு ஸ்திரீ மெம்பர்கள் பலமாக ஆதரித்தார்களாம்.

### மஹம்மதியர்களில் கூடவா?

சேலம் மஹம்மதிய ஸ்திரீகள் ஒரு கூட்டம் நடத்தி தங்களுக்கு விவாஹ ரத்து அவசியம் வேண்டு மென்றும் அதற்காகச்சட்டம் செய்ய வேண்டு மென்றும் தீர்மானித்தார்களாம். வியவஸ்தை நாசம் செய்யும் ஸ்திரீகள் முஸ்லீம்களிலும் கிளம்பி விட்டனரா? இது ஓர் புதுமை!

### புனாவில் காங்கிரஸ் விரோதம்.

காங்கிரஸ் வாதிகள் ஹிந்து ஸமூஹ விரோதமான கார்யங்களைச்செய்து வருவது பற்றி புனா ஹிந்துக்கள் காங்கிரஸிடம் மிகுந்த வெறுப்பும் விரோதமும் அடைந்திருக்கிறார்கள். சென்ற தினங்களாக அங்கு காங்கிரஸுக்கு விரோத கோஷங்கள் வலுத்து வருகின்றன. ஹிந்து தர்மிகீ ஜே; என்றும், காங்கிரஸ் வீழ்க என்றும் ஹிந்து யுவர்கள் கோஷித்து வருகிறார்கள். இதனால் காங்கிரஸ்காரர்களுக்கும் இவர்களுக்கும் சண்டை முற்றி அடிதடியும் காயமும் ஏற்பட்டிருக்கிறதாம்.

ஹிந்து ஸபையுவர்கள் மிகுந்த உணர்ச்சியுடனிருந்து வருகிறார்கள். காங்கிரஸிடம் விரோதம் அதிகரித்து வருகிறது.

### விக்ரஹங்கள் உடைக்கப்பட்டன.

#### முஸ்லீம்களின் துஷ்டத்தனம்.

மத்ய மாகாணத்தில் யோதிமால் என்ற நகரத்திலுள்ள ஒரு ஹிந்துக் கோவிலில் சில முஸ்லீம்கள் கட்டுப்பாடாக நுழைந்து, விக்ரகங்களை உடைத்துக்கின்றதில் எறிந்தனர். இதைத்தடுக்க முயன்றவர்கள் தாக்கப்பட்டனர். பழைய காலத்திய மஹம்மதிய அட்டூழியங்களை இது ஞாபகப்படுத்துகிறது.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஆர்யர்களின் ஆசார ரகஸ்யம்.

(பிராணாயாமம்)

பிரும்மஸ்ரீ T. V. தர்மராஜ கனபாடிகள், வேத பாடசாலை.

(முன் தொடர்ச்சி)

ஆர்யர்களே! பிராணாயாமம் சகர்ப்பம் அகர்ப்பம் என இருவகை என்றோமல்லவா? அவற்றுள் சகர்ப்பத்தின் சுபாவத்தைச் சொல்லுவாம்:— சங்கர்ப்பமென்பது, மந்திரோச்சாரணத்துடனும், அல்லது, தேவதாத் தியானத்துடனும் கூடியது. இவ்விஷயத்தில் யோகிகள்கண்ட ஸித்தாந்தமாவது:— ஏற்றத்தாழ்வில்லாது ஒரேவழியாகப் பிராணனை ஓளவிலொடுக்கி, அப்பியாஸப் படுத்தவேண்டியதற்காக, சங்கீதவித்தைக்குக் காலநியமனத்திற்காக அக்ஷர காலமேற்படுத்தியது போல, இதற்கும் சில அக்ஷரகாலங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளும் மாறுபாடின்றி ஒரேகணக்காய் இருத்தலால், ஒவ்வொருப் பிராணாயாமத்தால் இவ்வளவு கலைகள் கணிக்கப்படும் என்று, நிர்மானிக்கப் படுகின்றது. அதற்குவேண்டிய மந்திரம் சகலவேத மாதாவாகிய காயத்திரியை நியமித்திருக்கிறார்கள். அதற்குமுன் ஏழு மகாவியா கிருதிகளையும், பின்காயத்ரீ, சிரஸையும், சேர்த்திருக்கிறார்கள். இவ்விடம் மந்திரங்களை யுச்சரிக்கும் காலத்தில் சுவாஸம் தடைப்படுவதுமாத்திரம் அதன்பயனல்ல. அதன்பொருளை அறிந்தவர்க்கு அச்சமயம் பிராணாயாமத்தால் ஹிருதயம் சுத்திபெற்றிருக்க, அவ்விடம் நற்பொருள் தோன்றாதொழியாது.

மேற்கண்டபடி பிராணாயாமம் செய்வதால்மனம் மந்திரார்த்தத்தை தியானிக்கவும், வாக்குமந்திரத்தை யுச்சரிக்கவும், காயம் பிராணனைத்தடுக்க "நாஸிகாக்ரஹண" முத்திரை சேர்க்கவும் வியாபித்து நிற்றலால், திரிகாணங்களும் அச்சமயம் ஒருங்கு சேர்க்கதறிக. அக்காலத்தில் கண்கள் நாஸியின்நுனியை நோக்கி, வேறெப்பொருளையும் கவனாதிருக்கும். இவ்விடம் மூக்காணங்களும் விஷயங்களை நோக்கிச்செல்லாது, ஒடுங்கிடின் அச்சமயம் அவரவர்கள் பாக்கியத்திற்குத்தகுந்தபடி பரம்பொருள் தியானமும், அதனால் ஆயுள்பெருக்கமும் உண்டாவதில் தடைஇல்லை.

இதில் உலகசிருஷ்டியின் இயல்பைக் கூறுவது வியாகிருதிகள் ஏழுகூடிய முற்பகுதி. நடுப்பகுதியாகிய காயத்திரி சமஸ்தப்பிரபஞ்ச சாக்ஷித்தன்மையைக்கடவுளிடம் கூறி மத்யாவஸ்தையைத் தெரிவிக்கின்றது. சிரஸ் என்னும் பிற்பகுதி உபஸம்ஹாராவஸ்த்தையைத் தெரிவிக்கிறது. இங்குள்ள முப்பகுதிகளாலும் மும்மைப் பொருள்களெலாம் சொற்சுருக்கமாய் கூறப்பட்டதறிக. இதன்பொருளைக் கேட்டு இடைவிடாது சிந்திப்பவர்க்கு ஞானமும், வைராக்யமும் கைகூடுமென்பது, தெளிவாகும். ஆயின் இச்சகர்ப்பப் பிராணாயாமத்தின் பயன் மிகப் பெரிதெனக் கவனிக்கத்தக்கது.

அகர்ப்பப் பிராணாயாம வியலைப்பற்றி ஈண்டு விவரிப்பாம். அகர்பமென்பது, மந்திர, மந்திரார்த்தானுசந்தானங்கள் இல்லாததும், வெகுகால அப்பியாஸத்தால் அடையக்கூடியதும், அளவைக்கடந்ததும், நினைத்தபொழுதெல்லாம் நடத்தக்கூடியதும், முத்திரையற்றதுமாம். அதுநீண்டகாலம் சகர்ப பிராணாயாமத்தை அப்பியாஸித்த வர்களுக்கே கைகூடுமாதலால் அதனைத் தெரிந்துகொண்டவன் ஸித்தன்என்று கூறப்படுவான். அதில் யோகிகளுக் கதிகாரமேயன்றி, அப்பியாசிக்கு அதிகாரமில்லை. யோகசாஸ்திரத்தில் இவ்வகர்பப் பிராணாயாமத்தையே விசேஷமாகப் புகழ்ந்திருக்கின்றது. சகர்ப்ப பிராணாயாமத்தில் கடவுள் திருமேனியின் தியானம் இன்றியமையாமையால் அத்திருமேனியின் தியானவழி ஸ்ரீபஞ்சராத்திரத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அகர்ப்பப் பிராணாயாமத்தில் அரூப பாவஸ்துவைத் தியானிக்க வேண்டிய முறைகள், சிவாகமங்களில் விரித்துக் கூறப்பட்டன. சகர்பமென்பது பன்னிரண்டு, அல்லது பதினாறு கலைகளில் அடங்கும். அகர்பத்திற்கு அளவில்லை. ஒரே அகர்ப்பப் பிராணாயாமத்தை ஒருயுகமுற்றிலும் நடாத்தும் வலிமை சில யோகிகளுக்குண்டென அவர்களின் சித்தாந்தத்துணிபு. இக்காலத்திலும் மூன்று தினங்கள் அப்பிராணாயாமம் செய்பவர்களைப் பார்க்கலாம். ஆகையால் சகர்பமென்பது எல்லோராலும் சாதிக்கக்கூடியதும், அகர்பமென்பது கஷ்டசாத்தியம் என்பதும், மேற்கூறிப்போந்த நியாயங்களால் பெறப்பட்டது. சகர்பமென்பது எல்லோராலும் சாதிக்கக்கூடியதாதலால் அதன் முத்திரை முதலிய சர்வாங்கங்களின் பயன் வருமாறு காண்க.

ஐயா! மேற்குறித்த பிராணாயாமத்தில் ஒவ்வொரு வருணத்தவருக்கும், ஒவ்வொரு ஆசிரமத்தேவருக்கும், மூக்கைப் பிடிக்கும் முத்திரைகள் வேறுபடுகின்றன. அதற்குக்காரணங்கள் பல. அவைகளை எடுத்து விரிப்பதற்கு முன் பிராணக்குழலியல் அறியவேண்டியது இன்றியமையாதது. இவ்விஷயத்தில் யோகநூல்கள் "பிராணாயாமத்தை அறிய விரும்புவோன் பதினான்கு நாடிகளின் இயலை அறியவேண்டும்" என முறையிடுகின்றன. அந்நாடிகள் பதிநான்கையும் வருமாறறிக:—இடாது பிங்களாசைவ ஸுஷும்னாச ஸரஸ்வதி | வாருணைசவ பூஷா ச ஹஸ்தி ஜிஹ்வாய சஸ்விநீ || விச்வோதாரு ஹுசைவ சங்கிநீது பயஸ்விநீ || அலம்புஸாச காந்தாரீ முக்யாச்சைதா: தசுர்தச || இடை, பிங்கலை, சுழுமுனை, ஸரஸ்வதி, வாருணை, பூஷா ஹஸ்தி, ஜிஹ்வா, யசஸ்விநீ, விச்வோதரா, குஹூ, சங்கிநீ, பயஸ்விநீ, அலம்புஸா, காந்தாரி, என்பன.

மண்ணில் மக்கின அரசிலையின் கண் தோன்றும் சிறு நரம்புகளுக்கொப்ப நான்முகத்தாலன்றி மற்றவ்வளவேயாயினும் அறியப்படாத எழுபத்திரண்டாயிரம் நாடிகள் சரீரத்திலடங்கி நிற்பினும், அவையெல்லாம் மேற்கூறிப் போந்த பதினான்கு நாடிகளின் கிளைகள். ஆகையால் ப்ராணாயாமத்தால் அப்பதினான்கு நாடிகள் சோதிக்கப்பட்டால் மரத்திற்கு வேரில் விட்ட நீரால் கிளைகள் தழைப்பது போல, மற்றெல்லா நாடிகளும் வலியுறுமென்பது ஆசிரியர் யோகீச்வரர் கருத்து.

இஃதிங்ஙனமாக தற்காலத்து சோதகர் பல பிணங்களையறுத்துச் சோதித்த விடம் யோக நூல் சொல்லியபடி அவ்வவ்வமைப்புள்ள நாடிகளை அவ்வவ்விடங்களில் காண்கிலோம் என்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி யோக நூல்கள்:—"சரீரத்துள்ள உருபு கெட்டாலன்றி உயிர் வெளியோது." என்ற நியாயம் காட்டுகிறது. (இங்கு சுருக்கிச்சிறிதெழுதுவோம்.)

ஐயன்மீர்! சிந்துணாவேண்டும். சரீரத்தை விட்டுப்பிராண வாயு வெளியேறவேண்டுமானால், சரீர வுறுப்பின் அமைப்பு ஒருவாறு சிதைந்திடல் வேண்டும். அங்ஙனம் சிதைதொழின் உயிர்உடலைவிடுவதில்லை. சரீயந்திரம்நல்லமைப்பிலிருக்கும் வரையில் பிராணன் நிலைபெறுமென்பதும், அந்நிலைகுறைய அது வெளிப்படுமென்பதும் ஆயுள்வேத வறிவுமலித்த ஆன்றோர் கொள்கை. ஆயின், "பிராணன் சரீரத்தை விடுவது அதன் அமைப்பு குறைந்தமையால்" என்று அறிந்த ஒருவர் அக்குலைந்தவமைப்புற்ற பிணத்தைப்பலவாறு அறுத்துச்சோதித்தாலும்உயிருள்ள நிலையில் சரீரத்திலமைந்தவமைப்பை அறிவதெவ்வாறு!

ஆயின் பிணமறுத்து அதனால் துணியும் துணிபு உயிருள்ள சரீரநிலையைக் காட்டிய யோக நூலுண்மையைத் துணிய ஏதுவாகாது. மேல் அப்பிணமறுத்துத் துணியும் சரீர நிலைத்துணிபு, எப்பயனைக்கருதி எனின்? ஸ்தூல நாடிகளில் அமையும் வாதபித்த கபங்களின் இயலைக்கூறிய வைத்ய சாஸ்திரத்திற்கு இது மிகவும் உபயோகமாகும் என்றறிக. ஆதலாற்றான் 'தன்வந்தரி பகவான் வைத்தியத்தில்:— ப்ரத்யக்ஷதோஹியத்ருஷ்டம் ஸாஸ்த்ரதோபிச ஸ்யாகம்ய த்வயம் பூயோ பூயா ஞான விநிச்சய:

(இதன் பொருள்):—

'கண்கூடாக் கண்டதையும், கன் நூற் பயின்ற அறிந்ததையும் ஒன்று படுத்திக் கண்டாற்றான் அறிவு முதுமை பெறும்." என்றார். பிணமறுத்து அறியும் உண்மை யோகத்திற்கு எவ்விஷயத்துமா உபயோகமில்லை என்றறிக. ஆதலால் நேரில் அறுத்துப்பார்த்துத் துணிந்த உண்மை சூக்ஷ்ம யோக விவரண விஷயத்தில் எவ்வாற்றானும் சேர்ந்திடாததறிக. மேல் வைத்திய சாஸ்திரங்களிலும், உயிருடன் உள்ள சரீர நிலை விஷயத்தில், உள்நோக்கால் உண்மையறிந்து ஸ்வானுபவத்தில் கொண்டு நிற்கும் யோகிகள் கூற்றே பிரமாணமாக எடுக்கப்படுகின்றமையால் அவர் கண்ட சூக்குமவழியே ஈண்டு பிரமாணமாகுமென்க. மேலே "யாம் நேரில் காணாததும், பொய்யான நாடி ஞானம் கற்பனாளிதல் ஒவ்வாது" எனப் பிடிவாதம் பேசுதல் அழகன்று. உலகத்தில் கருடவிதம் வேறான எம்மனிதனும் செய்யும் கருடபாவனை விஷம் ஒழியும் விஷயத்தில் பயன்படுவதால் என்க. சோதித்தறிபவர் பாவனை பயக்கும் பயன் அனந்தம் எனக் கொண்டார். ஆதலால் நேரில்கண்டபடி அமையாதவமைப்புள்ள நாடிகளை யோகீசுவரன் எடுத்துக்காட்டினும் அவைகளை அவர் கூறியவியல்பினவெனவே நம்பிப் பிராணாயாமம் முதலியசெயல் கற்பனளிப்பதில் ஏதும் ஐயமில்லை. (தொடரும்)

## ஓர் உபநயநம்.

அத்வைத ஸபைக்கு ஸம்பாவனை.

சென்ற 27-4-38 புதன் கிழமை தினம் விஷ்ணுபுரம் ஜார்ஜ் மிடில் ஸ்கூல் சமஸ்கிருத உபாத்தியாயர் ஸ்ரீமான் V. S. ராமசந்திரசாஸ்திரிகள் அவர்களுடைய ஜேஷ்டகுமாரன் சிரஞ்சீவி சங்கரனுக்கு உபநயன முகூர்த்தம் வலங்கிமானில்ஹைஸ்கூல் ஸகோதரர் ஸ்கூல்மாஸ்டர் ஸ்ரீ S. மகாலிங்கய்யர் ஜாகையில் விமரிசையாக நடைபெற்றது. மந்திரவிதிப்படி வைதிககார்யங்கள் மிகவும் நன்றாய் நடைபெற்றன. ஹைஉபயத்திற்காக விஷ்ணுபுரம் வாசிகள் ஸ்ரீமான்கள் S. சேஷய்யர் அவர்கள், S. நாராயணஸ்வாமிஅய்யர் அவர்கள், V. மகாதேவய்யர் அவர்கள், V. கல்யாணசுந்தரமய்யர் அவர்களும், மற்றும் ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும் பொருளுதவி செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆசீர்வாதகாலத்தில் எல்லாசம்பாவனைகளுடன் கும்பகோணம் அத்வைதசபைக்காக ஏற்படுத்திருக்கும் ஸம்பாவனைக்காகவும் சத்தியநாசாரமாக சிறிதளவு திரவியம் சேர்ப்பிக்கப்பட்டது. இதில் செங்காலிபுரம்ஸ்ரீமான் S. V. நடராஜய்யர் அவர்களின் ஸங்கீதக்கச்சேரியும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

V. S. பைரவசுந்தரம்.



உ

# ஸ்ரீமந் நாராயண தீர்த்த குரு ஸ்வாமிகளின் சரித்திர சுருக்கம்.

(சென்றவார தொடர்ச்சி).

அப்பெரிய இடத்தில் அந்நாகம் இருந்து வருகிறபடியால் அதனிடத்தில் சர்ப்பங்களுக்குரிய அங்கங்கள் அமைந்திருந்தும் அது தன்னால் பிறருக்கு யாதொரு இடையூறும் இன்றி மிக சாந்தமாய் வாழ்ந்து வந்தது. அவ்வாறு வாழ்ந்து வரும் சமயத்துத் தொண்டை மண்டலத்தார் ஒருவர் பிறதி குரு பூஜைக்கும் தவறுமல் சிராக நெல் கொடுத்து வந்தார். ஒரு சமயம் குரு பூஜைக்குச் சரிவர நெல் கொடுக்காமையால் குரு பூஜை தடைபட்டது. அப்படித் தடைப்பட்ட சமயம் அத்தொண்டை மண்டலத்தார் அங்குவரப்புறப்பட்டார்.

அவர் வரும் வழியில் முன் சொன்ன தூயகட்செவி கண்ணுக்குப்புலப்படவே அவர் கதி கலங்கி வழி மறிக்கும் சர்ப்பத்தை நோக்கி வாய்விட்டலறி ஓடினர். நாகம் பின் தொடர்வதைக்கண்டு "குருநாதா குருநாதா" என்று பலதரம் பிரார்த்தித்துக் குரு பூஜைக்கு நெல்லைக் குறைத்துக் கொடுத்த காரணத்தால் இந்நல்ல பாம்பு தோன்றியது என்றுணர்ந்து பாக்கி நெல்லையும் சேர்ப்பித்து வருகிறேனென்று பிரார்த்தித்துக்கொண்டவுடனே கட்செவி மறைந்ததாம்.

ஆச்சிரமத்துக்கு தனக்குப்பின் அடியார் அமையவில்லையே என்று வருத்தங் கொண்டிருந்த சிதம்பரத்தம்பிரான் ஒரு நாள் நெற்றிக்கு அணியும் பொருட்டு கண்ணாடியைப்பார்த்தார் அது சமயம் தன்னுருவம் கண்ணாடியில் தோன்றாமல் தொண்டை மண்டல வேளாளர் மரபினில் தூய சந்நியாஸி ஒருவரைக் கண்டார். அப்படிக்கண்டவுடன் யோசித்து பேரின்ப கதி நிலை குறுகிற்றென்று எண்ணி, யார் இனி மடத்தில் அடிமை புரிவார்களோ வென்று துக்கித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் காவி காம்பர தண்டு கமண்டல ஜடா வல்கலதாரியாய் யாழ்ப்பாணத்திலிருந்து கால் நடையாகப் பல நாள் பிரயாணம் செய்து வந்த ஒரு சந்நியாசி கடைசியாக நாராயணக்குரு சுவாமிகள் ஆச்சிரமத்தையடைந்து துக்கித்திருக்கும் சிதம்பரத் தம்பிரானைக் கண்டார். சிதம்பரத்தம்பிரான் யாழ்ப்பாணத்துச் சுவாமியைக் கண்டவுடன் எழுந்துசெய்யவேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்து முடித்து தங்கள் வரலாறு யாது என்றார். யாழ்ப்பாணத்துச் சுவாமி சிதம்பரத் தம்பிரானை நோக்கி அடியேன் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் துறவு நூல் பல பயின்று கடைசியாகத்திருப்பதி நண்ணி வாழ்ந்து வந்தேன்.

அவ்விடத்திலிருந்த ஸ்ரீ வேங்கடாசலபதியை வரகூரில் கொண்டு வந்து ஸ்தாபித்த வரும் ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி யென்னும் உயர்ந்த கிரந்தத்தை இயற்றிய வரும், அமர்சிங்கன் கையிலிருந்த விலங்கினை நீக்கிய வரும், இறந்த மேஷத்தை எழுப்பியவருமான மகானுபாவர் அடைந்த இந்த இடத்தைக்காணும் பொருட்டு இங்கு வந்தேன். அடியேனுடைய நாமதேயம் சிற்றம்பலம் ஆகும் என்றார். இதைக்கேட்ட சிதம்பர சுவாமி பண்டு நாராயண குரு சுவாமியின் லீலைகளை எல்லாம் மனதில் கண்ட இவரே இந்த ஆச்ரமத்தொண்டுக்குரியவரென்று அளவிலா ஆனந்தங் கொண்டு நீரே என் பின் அடிமை என்று விண்டார்.

பேரின்பம் அடையும் நாள் வந்ததென்று அறிந்த சிதம்பர சுவாமி ஆடுவலம் வந்த அளவு அமர்சிங்கன் தந்த நிலத்தையும் பூஜை மண்டபம் முதலியவற்றோடு கூடிய ஆச்ரமத்தையும் ஆச்ரமத்தைச் சேர்ந்த வீடு, மாடுகளையும், மண்டபம், பாத்திரங்களையும், பூஜை சாமான்களையும் சிற்றம்பல சுவாமி இடம் ஒப்புவித்து பற்றற்ற நம்பலமடைந்தார்.

அப்பால் பரமசிவத்தம்பிரான், அண்ணாமலைத்தம்பிரான், தெய்வசிகாமணித்தம்பிரான், கருணைக்கிழங்குத்தம்பிரான் என்று வழங்கிவருகிற தெய்வசிகாமணித் தம்பிரான், ஆறுமுகதேசிகர் இவர்களால் முறையே உள்ளூரரால் கவனிக்கப்பட்டுப் பிறகு கற்பூரப்பணி சுப்பிரமணியத் தம்பிரான் கவனித்து வந்தார்.

இங்ஙனம் முறையே இன்றுவரை அரிய தொண்டர்கள் தொண்டுபுரிந்து சேவை செய்து, மடத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். மடமும் சீரும், சிறப்பும் பெற்று வருகிறது. பக்தர்களும் ஜீவசமாதியைத் தெரிசித்து போற்றிவந்து ஆன்மலாபத்தை அடைந்துய்வார்களாக.

முற்றிற்று.

## எசையனூர் சபை தீர்மானங்கள்.

எசையனூர் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்க சபையை மாகாணச் சபையுடன் இணைக்கலாமாக தீர்மானிக்கப்பட்டது.

இச்சபையானது பொதுவாக வைதிக ஸநாதன தர்மத்தில் தலையிட்டு கவர்ன்மெண்டாராலும், சட்டசபைகளில் சீர்திருத்தக்காரர்களாலும் கொண்டாடப்படும் சட்டதிட்டங்களைக் கண்டிக்கிறது

பிரகிருதம் மத்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட்டசாரதாச்சட்டதிருத்தம்,ஸ்ரீகள் சொத்து உரிமை சட்டம் முதலான அவைதிக சட்டங்களை இச்சபை அழுத்தமாய் கண்டிப்பதோடு, மதாஸ் அசம்பளியில் கொண்டு வரப்பட்டிருக்கும் தீண்டாதார் ஆலயப்ரவேச மசோதாவை நிறைவேற்றிவைக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

இந்த தீர்மானங்களைச்சென்னை கவர்மெண்டாருக்கும், மாகாண ஸ்வராஜ்யசங்கத்திற்கும், ஸ்ரீமடாதிபதிகளுக்கும், ஆர்யதர்ம பத்திரிகைக்கும் தெரிவிக்க இச்சபை பிரசிடெண்டு அவர்களுக்கு அதிகாரமளிக்கிறது.

இச்சபையின் ஆதரவில் ஆர்யதர்மப் பத்திரிகையைத்தருவிக்க வேணுமாய்த் தீர்மானிக்கப்பட்டது. E. கிருஷ்ணஸ்வாமி.

## மதுரை.

தர்மசாஸ்திர ஸபை வருஷோத்ஸவம்.

மேமீ 1உ யன்று மதுரைமீனாக்ஷி சுந்தரேசுவரர் கோவில் திருக்கல்யாண மண்டபத்தில் மதுரை தர்மசாஸ்த்ரஸபை வருஷோத்ஸவம் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பெற்றது. மண்டபம் தோரணங்களாலும் புஷ்பவகைகளாலும் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ப்ரம்மஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகளவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

ஆசார்யாள்பூஜை, உபநிஷத் பாராயணம், பகவத்ஸ்தோத்ரங்கள், திருப்புகழ் சங்கீதம் இவைகளுடன் ஸபை மங்களகரமாய் ஆரம்பித்தது. பிறகு ஸ்ரீசிருங்கேரி ஜகத்குரு மஹா சன்னிதானத்திலிருந்து அநுக்ரஹிக்கப்பட்ட ஸம்பாவனை வேத கோஷத்துடன் அக்கிராஸனாதிபதியவர்களிடம் கொடுக்கப்பட்டது.

அக்ராஸனாதிபதியவர்கள் முகவுரையில் தர்ம சாஸ்திர சபை 1894ம் ஸூ ஸ்ரீசிருங்கேரி ஜகத்குரு மஹா ஸந்நிதானத்தின் அநுக்ரஹத்தால் ஸ்தாபிக்கப்பெற்ற தென்றும் அதுமுதல் தனக்கு அந்த ஸபைக்கு கைங்கர்யம் செய்யும் பாக்யம் கிடைத்திருக்கிறதென்றும் சொல்லி அன்று உபன்யாஸ விஷயமான "ஆசார்யாளும் வர்ணாச்ரம தர்மமும்" என்கிறவிஷயத்தைப்பற்றியும் பேசினர் ஆசார்யாள் அவர்களின் அவதாரத்தில் காபாலிகன் அவர்களை பலி கொடுக்க அவர்களுடைய அனுமதியைப்பிரார்த்திக்க அதற்கு அவர்கள் ஸந்தோஷமாய் ஸம்மதித்து அவர்களின் ஆச்ரமத்துக்குறிய வைராக்யத்தைக் காண்பித்தார்களென்றும் இன்னும் அநேக உதாரணங்கள் மூலம் ஆசார்யாள் வர்ணாச்ரம தர்மங்களை எப்படி அநுஷ்டித்துக்காண்பித்தார்களென்று அழகாய் நிரூபித்தார்.

ப்ரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் வர்கள் "ஆசார்யாளும் வர்ணாச்ரமதர்மமும்" என்கிற விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார்கள். அநேக ஸ்ருதி, ஸ்ம்ருதி, புராண இதிஹாஸ வாக்யங்கள் மூலமாயும், ஆசார்யாளின் உபதேசபஞ்சகம் முதலியக்ரந்தங்கள் மூலமாயும் வர்ணாச்ரதர்மங்கள் எவை என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நிரூபித்து அவைகளைத்தீவ்ர புத்தியும் ஒழுங்காய் அநுஷ்டிக்கவேண்டிய அவஸ்யத்தையும் வற்புறுத்தினார்கள்.

பிரும்மஸ்ரீ N. S. விஸ்வநாதய்யரவர்களும் ப்ரம்மஸ்ரீ ஸீதாராமசாஸ்திரிகளவர்களும், வைதீக ஸபைகள் மூலமாயும் லௌகிகக்கார்யங்களிலும் ஸநாதனிகளெல்லோரும் ஒன்று சேர்ந்துக்கிராமந்தோறும் ப்ரசாரம் செய்வதுடன் அவைதிகர்களுடன் ஸதாபோராடி நாமெல்லோரும் ஸநாதன தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் நாம் ஜயம்பெறுவது நிச்சயமென்றும் உத்ஸாகப்படுத்தினார்கள். கார்யதர்சி பிறகு வருஷாந்த்ர விருத்தாந்த பத்ரிகை வாசித்தார்.

வித்வான்களுக்கு ஸம்பாவனைகளும் சபையோர்களுக்குத்தாம்பூலங்களும் வேதகோஷத்துடன் கொடுக்கப்பட்டன.

அக்ராஸனாதிபதியவர்களின் முடிவுரை, கூற வந்தனோபசாரங்களுடன் பிறகு ஸபை இனிது கலைந்தது.

மா. வேங்கடசேலம்.

## மாரியம்மன் கோடாபிஷேகம்.

கும்பகோணம் நகேஸ்வார் திருமஞ்சனவீதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபடைவெட்டி மாரியம்மனுக்கு பகுதான்யஸூ சித்திரைமீ 26உ (8-5-38) ஞாயிற்றுக்கிழமை, வேனிற்கால வெப்பமகற்ற வேண்டி அம்பிகை பக்தர்கள் அம்பிகைக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து கொண்டாடினார்கள். ஜனார்த்தன அச்சக்கூடம் தொழிலாளிகள் அபிஷேகத்தை முன்னிட்டு சமாராதனை செய்தார்கள். நன்கு சிறப்புடன் நடந்தது. ஒரு நிருபர்.




परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்ய தர்மம்.

பகுதான்ய-ஹு சித்திரை-மீ 30உ


## காலஞ்சென்ற பெரியார்.

ஆஸ்திக உலகத்திற்குத் திலகம் போல் விளங்கி வந்த பிரம்மஸ்ரீ கே. சுந்தரராமய்யர் அவர்கள் சென்ற வாரம் பரகதியடைந்த விஷயத்தைக் கேட்டு யாவரும் மிகுந்த துக்கத்தை அடைவார்கள். ஸ்ரீமான் அய்யரவர்களுடைய படிப்பும், விவேகமும், ஆத்ம குணங்களும், அவர் செய்துள்ள உயர்ந்த உபகாரங்களும் தென்னிந்திய சரித்திரத்தில் ஓர் முக்ய ஸ்தானத்தை அடைந்தவையாயிருப்பதால் அவைகளை நாம் இங்கு மறுபடி விஸ்தரிக்க வேண்டியது அவசியமில்லை. லௌகிகச் சிறப்புகளில் அவர் மிகுந்த மேன்மை பெற்றிருந்ததுடன் வைதிக தர்மங்களிலும், கர்மானுஷ்டானங்களிலும் அவர் காட்டி வந்த சிரத்தையானது தற்கால நாகரீகப்போக்குப் படைத்தவர்களுக்கு ஓர் பாடம் கற்பிப்பதுபோலிருந்தது. லௌகிகமும், வைதிகமும் கலந்த ஸ்ரீமான் அய்யருடைய வாழ்க்கையானது நவீன நாகரீகச்சுழப்பம் அடைந்துள்ளவர்களுக்கு நல்ல வழி காட்டியிருந்து வந்திருக்கிறது. ஸ்ரீமான் அய்யர் உயர்ந்த ஜாதியில் பிறந்தவர். ஆங்கிலக் கல்வியிலும் அதையொட்டிய பல அபூர்வ ஆராய்ச்சிகளிலும் இணையற்ற நிபுணராயிருந்தார். இவருடைய உயர்ந்த அபிப்பிராயங்களைப் படித்து மிக ஆச்சர்யமடைந்து புகழ்ந்த மேனாட்டு நிபுணர்களுக்குக் கணக்கில்லை. அவர் ஆதி முதல் பழகி வந்த இடங்களும், நண்பர்களும் தற்கால நவீன நாகரீகத்திற்கு உறைவிடமாக இருந்து வந்தவை. ஐரோப்பியர், மஹம்மதியர், கிருஸ்தவர் போன்ற பற்பல ஜாதி மதஸ்தர்களுடன் தமது தொழில் நிமித்தமாக நெருங்கிப் பழகவேண்டிய நிர்பந்தமுள்ளவராயிருந்தார். இப்படி ஸகல வழிகளிலும் ஸஹவாஸத்தாலும் படிப்பு, தொழில் முதலியவற்றாலும் நவீன விபரீத வாஸனைகளால் ஆக்ரமிக்கப்படக்கூடியவராயிருந்தும், இவர் தமது குல தர்மங்களையோ ஜாதி தர்மங்களையோ, ஸதாசாரத்தையோ சிறிது கூட நழுவ விடாமல் அவைகளில் மிகுந்த நம்பிக்கையுடன் நடந்து வந்ததை யார் தான் பாராட்டமாட்டார்கள்? எவ்வளவுக்கெவ்வளவு இவர் அன்னிய மதங்களையும், அன்னிய நாகரீகாதிகளையும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தாரோ, அவ்வளவுக்கு அது இவரைத் தமது மதத்திலும், நாகரீகத்திலும் மிகுந்த பற்று ஏற்படும்படியே செய்தது. பிற நாகரீகங்கள் இவரைத்தாக்கி அபஹரிக்கச்சிறிதும் இடம் கொடுக்கவில்லை. தற்காலத்தில் பலர் ஏதோ இரண்டு இங்கிலீஷ் எழுத்துக்கற்றவுடனேயே அந்நிய பாஷை, வேஷம், ஆசாரம் முதலியவைகளில் மோஹங்கொண்டு நமது நாகரீகத்தை இழிவாக நினைக்க ஆரம்பித்துவிடுவதுவழக்கமாயிருக்கிறது ஸகலவழிகளிலும் பிறரைப்போல் நடிப்பதே கௌரவமெனக் கொள்ளப்படுகிறது. அத்தகைய மட்டமான புத்திப்போக்குள்ளவர்களுக்கு ஸ்ரீமான் அய்யருடைய வாழ்க்கையானது ஓர் நல்லவழியைக்காட்டுவதாயிருந்தது. பண வரும்படியை உத்தேசித்தும் பிற நாகரீகத்தைக் கைப்பற்ற அவச்யமில்லை யென்பதற்கும் ஸ்ரீமான் அய்யர் நிதர்சனமாயிருந்தார். இவர் வைதிக ஹிந்து மதப்பற்றுள்ளவராயிருந்ததற்காகப் பண வரும்படியில் குறைவு ஒன்றும் ஏற்படவில்லை. ஆதலால் ஸ்ரீமான் அய்யர் போன்ற பெரியார்களுடைய இருப்பே நமது ஆஸ்திக மதத்திற்கு ஓர் வலுத்த ஆதாரமாயிருந்து வந்தது.

இப்போது வெகு வேகமாக ஏற்பட்டு வரும் விபரீதப்போக்குகளைக்கவனிக்கையில் ஸ்ரீமான் அய்யர் போன்ற மஹனியர்களுடைய பிரிவு நமக்கு ஸமாளிக்கக்கூடாத பெரிய நஷ்டமாகும்.

லௌகிகப் பிரவிருத்திகளிலிருந்து இவர் விலகிய பின் நமது மதத்திற்குச் செய்துள்ள உபகாரம் அளவிடக்கூடாதது. நம்மதத்தின் மீது பிறர் வெளியிட்டு வந்த குறைகளுக்கு ஸ்ரீமான் அய்யர் அசைக்க முடியாத ஆட்புங்கள் அடித்து வந்திருப்பதை அறியாதவரிருக்க மாட்டார்.

சாதல்பத்தில் படுத்தபடியே தர்மங்களை உபதேசித்து வந்த பீஷ்மரைப்போல், ஸ்ரீமான் அய்யர் அவர்களும், தம்மிடம் வந்தவர்களெல்லோருக்கும், வெகு ஸூக்ஷ்மமான தர்மமார்க்கங்களைப்பற்றிப் பேசுவதையே ஓர் உறுதியான கொள்கையாகக் கொண்டிருந்தார்.

இத்தகைய பெரியாருடைய பிரிவானது குடத்தை வாலிக்கு எந்த வழியிலும் பொறுக்கக் கூடியதல்ல. எவ்வளவு பெரியவர்களுக்கும் மரணம் என்பது தவிர்க்கக்கூடாததாகும். இது பரிஹரிக்க முடியாத விஷயமென்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார். ஆதலால் இத்தகைய மஹனியர்களுடைய பௌதிக சரீரம் மறைந்துபோனாலும், அவர்களுடைய கீர்த்தி சரீரமானது தேசமெங்கும் அழியாமல் பரவி நின்று அவர்களுடைய உபதேசங்களைப் பரப்புமென்று நினைத்து சாந்தி அடைவோமாக.

## குறிப்பு.

**ஆத்மஸ்துதி?**

திருவாங்கூர் ஸம்ஸ்தான நிர்வாஹத்தில் வருஷாந்திர அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதைத் தயாரித்துப் பிரசுரப்படுத்தியவர் ஸசிவோத்தமராகிய கனவானென்று தெரிகிறது. அவர் அங்கு தாம் செய்துள்ள மற்ற நற்கார்யங்களைவிட ஆலயப்பிரவேச விளம்பரத்தையே இவர் அதிகம் புகழ்ந்து பாடிக் கொள்ளுகிறார்.

இந்த ஆலயப்பிரவேச அறிக்கையால் இந்து மதத்தின் கௌரவமே உயர்ந்துவிட்டதாக அவர் கூறிக்கொள்ளுகிறார். இவர் ஆத்மஸ்துதி செய்து கொள்வதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் இவருடைய செய்கையால் ஹிந்துமதத்தின் கௌரவம் உயர்ந்துவிட்டதாகச் சொல்வது வெறும் அபத்தமே. ஹிந்து மதமானது, மஹம்மதிய கிருஸ்தவாதிகளான பிறமதத்தினருடைய புகழைவேண்டவில்லை. அதனால் அதற்கு ஓர் உயர்வையும் தேடவேண்டியதில்லை. அப்படியிருக்க ஸசிவோத்தமர் எந்த உலகத்தின் மதிப்பைத்தேடிக்கொடுத்து நமது மதத்தின் மானத்தைக் காப்பாற்றினாரோ தெரியவில்லை உண்மையில் பார்த்தால் ஹிந்து மதத்தின் உண்மையான உயர்வும், உயிரும் ஆலயப்பிரவேச விளம்பரத்தால் நசித்துவிட்டதென்றே சொல்லவேண்டும்.

திருவாங்கூரின் ராஜ்ய ஆட்சத்தைப்பற்றியவரையில் ஸசிவோத்தமரிடம் அங்குள்ளவருக்கு அதிருப்தி அதிகரித்து வருவதைப் பத்திரிகைகள் மறைக்கமுடியவில்லை. ஆலயப்பிரவேசத்தால் பொதுஜனங்களுக்கேற்பட்டுள்ள பலத்த ஆத்திரத்தை ஸந்தேஹமாக மறைத்து மாயா பிரசாரம் செய்யப்படுவது யாவரும் நன்கு அறிந்த விஷயம். இந்த ஸசிவோத்தமரின்நிர்வாக காலம் முடிந்ததும் அங்கு இந்த ஆலயப்ரவேச விளம்பரம் சின்னாபின்னப் படுத்தப்போவதை இவர் சிறிது பொறுத்து பார்ப்பாராக. அதற்குள் இந்த ஆத்மஸ்துதி அர்த்தமற்றது.

## திருவிடமருதூர்.

### ஸ்ரீ சங்கர ஜயந்தி.

பிரதிவருஷம்போல் ஸ்ரீ ஆசார்ய ஜயந்தி உத்ஸவம் சென்ற வெள்ளிக்கிழமை 29-4-38 அன்று ஆரம்பமாயிற்று. தினந்தோறும் காலையில் காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ விசுவேசுவர கனபாடிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நியம அத்யயன பாடசாலையின் உபாத்தியாய மாணவர்களாலும், நகரத்தார் பாடசாலை வித்யார்த்திகளாலும்வேதோ பநிஷத் பாராயணங்கள் நடைபெற்றன. பின்பு ஸ்ரீ ஆசார்யமூர்த்திக்கு ருத்ரத்திரிசதி அர்ச்சனைகளும் ஷோடசோபசாரங்களும் வழக்கம்போல் நடந்தேறின. பிரும்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களாலும் ஆடுதுறை பெருமாள் கோவில் பிரும்மஸ்ரீ வெங்கடேசாத்சர்மா அவர்களாலும் உபந்யாஸங்கள் செய்யப்பெற்றன. தினந்தோறும் இரவில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளின் புஷ்பாலங்கிருதியான உருவப்படத்தை திவ்யாலங்காரத்துடன் தெருவீதிக்குப் புறப்பாடு செய்யப்பட்டது. முறையே கீழ்க்கண்ட நாதஸ்வரவித்வான்கள் மேளக்கச்சேரி நிகழ்த்தினார்கள்.

29-4-38 திருவாடுதுறை T. N. ராஜரத்னம் பிள்ளை. 30-4-38 திருமருதூர் நடராஜன். 1-5-38 பொர்பூர் P. S. வீருசாமி பிள்ளை 2-5-38 நாச்சியார்கோவில் ராஜன் ப்ரதர்ஸ். 3-5-38 உப்பிலியப்பன் கோவில் சின்னத்தம்பி ப்ரதர்ஸ் சூர்னார்கோவில் நாராயணன் பிரதர்ஸ் 4-5-38 திருவாடுதுறை நக்கப்பாணனும் T. N. நடராஜசுந்தரம்பிள்ளை

கடைசிதினமாகிய ஸ்ரீ ஆசார்ய ஜனன உத்ஸவத்தன்று பிரும்மஸ்ரீ சந்தர்ப்பணைகளும் வினைதானங்களும் நடந்தன. அன்றிரவு வெள்ளிவிமானத்தில் மிகுந்த வாணவேடிக்கைகளிடையே, வேதகோஷங்கள் சூழ்ந்துவர ஸ்ரீ ஆசார்யாளின் திருவுருவப்படம் எழுந்தருளியது ஓர் பெருங் காக்ஷியாகவேயிருந்தது.

ஸ்ரீ ஆசார்யாள் ஜனனோத்ஸவத்தை முன்னிட்டு,ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் பிரமவாரம் முகாமிலிருந்து, ஸ்ரீ ஆதிசங்கரமூர்த்திக்குப் பட்டு வஸ்திரங்களும் ஸ்ரீசந்திரமௌளீசுவரர் பிரஸாதங்களும் அனுப்பிவைத்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குடிவாடா.
Gudivada.



## வாரக்குறிப்புகள்.

(வே. ஜோ. சர்மா)

கக்ஷி கலகலப்பு!! தர்மத்தை கைவிட்டது மாத்திரமல்ல! அதை அழிக்கவும் ஆரம்பித்ததால் காங்கிரஸ் நாளுக்கு நாள் செல்வாக்கை யிழந்து பலஹீனமாகி வருகிறது! சென்னை வியாபாரி ஒருவர் தேசிய ஸபை அத்து மீறி அந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் ஓர் திருத்தத்தைக்கொண்டு வந்தார். இனி அவர் மீது நடவடிக்கை எடுத்தாலும் கக்ஷி கலகலத்துப்போனதிற்கு காரணம் யாதென உணர்ந்து திருந்துவாரா?

பிடித்ததை சாதித்தார்! பண்டித மாளவியா ஒவ்வோர் ஜாதியிலுமுள்ள அவாந்தர ஜாதியார் ஒருவர்க்கொருவர் மணந்து கொள்ள வேண்டுமென நீண்ட நாளாக பிரசாரம் செய்து தன் பேத்திக்கே அப்படி கலப்பு விவாஹம் செய்தார். இது உதார குணமென பலர் நினைக்கலாம். இந்த மாதிரி பலர் பல கட்டுப்பாட்டுகளையும் தர்ம ஸேதுவையும் மீறி நடந்து ஹிந்து தர்மத்தையே இருந்த இடம் தெரியாமல் நாசம் செய்யக்கூடுமென்பதை பண்டிதர் உணர்வாரா?

அசட்டுத்தீர்மானம்! தேசிய ஸபை மந்திரி மூலம் பொது ஜனங்கள் எதிர்பார்த்த அளவு தேசிய கைங்கர்யம் செய்ய முடியவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அதே போல் பிறர் பார்த்து பரிஹஸிக்கும்படி ஸ்வஜாத்வேஷத்தையும் தர்ம நாசத்தையுமுண்டு பண்ணத்தக்க பல சட்டங்களை செய்கின்றனர். பிஹார் ஸபை 151ரூ வரதக்ஷிணைக்கு மேல் வாங்கினால் சிக்ஷை என்று தீர்மானிப்பது நகைப்புக்கிடமாயிருக்கிறது!

தார்மிகருக்கு தீமை கூடாது! பல எதிர்ப்புக்கிடையில் மைசூர் மன்னன் இதர் கலக்காமல் வேத சாஸ்திர பாடசாலைகளை நடத்தி ஆலயத்தையும் அசுத்தப்படுத்தாமல் காக்கிறார். பெங்களூரில் வால் நக்ஷத்திரம் காணப்படுகிறதாம்! இது சுப சூசகமல்ல!! ஆங்குள்ள சட்ட ஸபை செய்யும் சில அதிக்ரமங்களால் நேரிடக்கூடிய கஷ்டத்திற்கு இது சூசகமாகும்! தார்மிக மன்னன் குடும்பத்துடன் சுகமாக இருக்கும்படி அருள்புரிய ஆண்டவனை வேண்டுகிறோம்!

ஒரிஸா கவர்னர் விவேகி! ஆனபடியால் ஆங்கு ஓர் ஸிவிலியன் தனக்கு பதிலாக நியமிக்கப்பட்டதை யொட்டி தேசிய ஸபையின் கிளர்ச்சிக்கிடமளிக்காமல் லீவை மாற்றி தன் வேலையை ஒப்புக்கொண்டார்! கிளர்ச்சி ஒழிந்தது!

நாம் கோரியது இதே! குடந்தையில் சில ஸனாதனிகள் நகரஸபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது தார்மிகருக்குப் பேரானந்தத்தை அளித்தது. மற்றும் பல இடங்களில் முயற்சித்திருந்தால் நம்மை மதித்து தலை கீழாக போகாமலிருக்கும் தேசிய ஸபைக்கு சிறிது அச்சமும் உண்டாகும்.

ஸமயத்தை இழக்காதீர்? ஆஸ்திகர்கள் ஒன்று கூடுவது அரிது. ஸ்ரீ மதாசார்ய ஜயந்திகளை முன்னிட்டு கூடும் கூட்டங்களில் தற்கால சீர்கேட்டையும் ஸன்மார்க்கத்தையும் நன்கு உபதேசித்தில் நலமல்லவா? பல இடங்களில் பாட்டுக்கச்சேரியோடு நின்றது வருந்தத்தக்கது!

ஜ்யோதிர்லிங்க மாசாங்கத்தைச் சாருமா? திருவண்ணாமலை தேவாலயத்திற்கு சொந்தமல்ல என தங்களதேஎன அரசாங்கம் வழக்காடுகிறது. இது ஸாகஸமல்லவா?

## ஆலயப்பிரவேசக் கண்டனம்.

திருவாலங்காடு:— நரசிங்கம்பேட்டை ஸ்டேஷனுக்கு கிழக்கேயுள்ள வடாரண்ய ஸ்தலமான திருவாலங்காடு மஹாஜனங்கள் சென்னைசட்டசபையில் ப்ரேரேபிக்கப்பட்டிருக்கிற பஞ்சம ஆலயப்ரவேச மசோதா இவைகளைக் கண்டித்து சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும் அநேக கையெழுத்துக்களடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

ஆலங்குடி:— நீடாமங்கலம் அருகாமையிலுள்ள ஆலங்குடி கிராமவாசிகள் சென்னை சட்டசபையில் விவாதத்திற்கு வந்திருக்கிற ஆலயப்ரவேச மசோதாவை பலமாக ஆக்ஷேபித்தும் சர்க்கார் மதசம்பந்தமான கார்யங்களில் ப்ரவேசிக்கக்கூடாதென்று கனம் சென்னை பிரதமமந்திரிக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும் டில்லி சட்டசபை அக்கிராசனாதிபதி அவர்களுக்கும் மேன்மைதங்கிய கவர்னர் பிரபு அவர்களுக்கும் வைஸிராய் அவர்களுக்கும் முறையே மஹஜர் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கோடவாசல்:— இவ்வூர் வாசிகள் சென்னை சட்டசபையில் ராவ்பஹதூர் M. C. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா அசாஸ்திரீயமென்றும் மதத்தில் தலையிடுவதாகவுமிருப்பதால் அம்மசோதா சட்டமாகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை தேடும்படி வேண்டிக்கொண்டு அத்தத்தொகுதியின் சட்டசபை பிரதிநிதி அவர்களுக்கும் அகிலஇந்திய காங்கிரஸ் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்கும் மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

கபிஸ்தலம்:— கும்பகோணத்திலிருந்து திருவையார் போகும் மார்க்கத்திலுள்ள கபிஸ்தலம் கிராமஜனங்கள் சென்னை சட்டசபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மதவிரோத மசோதாக்களைக் கண்டித்தும் மஹஜர் மூலம் ஷை மசோதாக்களுக்கு தங்கள் ஆக்ஷேபணையை சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களுக்கும், சட்டசபை பிரதிநிதிகளுக்கும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பனங்குடி. நன்னிலம் ஸ்டேஷனுக்கு அதாவது சென்னையூரிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள பனங்குடி மஹாஜனங்கள் சென்னை சட்டசபையில் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவை மிகவும் கண்டித்து சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும், கனம் ராஜன் அவர்களுக்கும் மகஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பிலியூர் நாகப்பட்டணம் தாலுக்கா சிக்கல் ஸ்டேஷன் அருகாமையிலுள்ள பிலியூர்வாஸிகள் எம்.ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து மேன்மைதங்கிய கவர்னர் அவர்களுக்கும், பிரதமமந்திரி அவர்களுக்கும், கனம் Dr. ராஜன் அவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

உமயாள்புறம். கும்பகோணம் தாலுக்கா உமயாள்புறம் மஹாஜனங்கள் அநேகங் கையெழுத்தடங்கிய ஒரு மஹஜரை சென்னை சட்டசபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவை தடுக்கவேண்டுமென்று வைஸிராய் அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

மாதிரிமங்கலம் குத்தாலம் சமீபத்திலுள்ள மாதிரிமங்கலம் கிராமஜனங்கள் சென்னை கனம் மந்திரி முதலான பல அதிகாரிகளுக்கும் ஸ்ரீஜத் சுபாஷ்சந்திரபோஸ் அவர்களுக்கும் இச் ஜில்லா சட்டசபை பிரதிநிதிகளுக்கும் சென்னை சட்டசபையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் எம். ஸி. ராஜாவின் இரு மசோதாக்கள் நிறைவேறாமல் தடுக்கும்படிக் கேட்டுக்கொண்டு மனுச் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கலியாணபுரம். திருவிடமருதூர் காவேரிக்கடுத்த கலியாணபுரம் ஜனங்கள் நூற்றுக்குத் தொண்ணூறுக்குமேல் பிறமணரல்லாதார் அடங்கிய மஹஜர் மூலம் இச்சட்டத்தைமறுத்து சென்னை கவர்னருக்கும் கனம் மந்திரி அவர்களுக்கும் இன்னும் பல சட்டசபை உத்தியோகஸ்தர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

கடகம்பாடி. பூந்தோட்டம் சமீபம் சரபோஜிராஜபுரம் கடகம்பாடி மஹாஜனங்கள் சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் Civic Disabilities Removal Bill, Temple Entry Bill அகில இந்திய சட்டஸபையில் சமீபகாலத்தில் நிறைவேறிய B. Das Amending Bill to the Child marriage Restraint Act. முதலிய சீர்திருத்த மசோதாக்களை பலமாகக் கண்டித்து கவர்மெண்டார் மதஸம்பந்தமான கார்யங்களில் பிரவேசிக்கக்கூடாதென்றும் சென்னை சட்டஸபையில் ஆலோசனைக்கு வந்திருக்கப்பட்ட எம். ஸி. ராஜாவின் மசோதாக்கள் சட்டமாகாமலிருக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படிக்கும் சென்னை கவர்மெண்ட் பிரதம மந்திரி அவர்களைக்கோரியும் ஓர் மஹஜர் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

G. Sankaranarayana Vajapier.

## திருபநேயர்களுக்கு அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையில், ஆங்கில பாஷா விஷயங்களைப் பிரசுரிப்பது, சிறிது அசௌகர்யத்தால் தற்காலம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஆகையால் எல்லாவற்றையும்தமிழிலேயே எழுதியனுப்பக்கோருகிறோம்.

மானேஜர்.

## சென்னை.

### அசெம்பிளித்தலைவரின் ராஜிநாமா.

சென்னை அசெம்பிளித் தலைவரான கனம் புலுஸு ஸாம்பமூர்த்தி அவர்கள் தமது தலைவர் பதவியை ராஜிநாமா செய்துவிடத் தீர்மானித்து ஸ்ரீமான் ஸுபாஷ் போஸுக்குத்தெரிவித்திருக்கிறார். சட்டஸபை மெம்பர் பதவியையும் விட்டுவிட நிச்சயித்துள்ளார். சட்டஸபைக்கு வெளியில் இருந்து தேச ஸேவை செய்யவேண்டுமென அவர் விரும்புவதே இதற்குக்காரணமாம். இவரது ஐரோப்பியப் பிரயாணத்தைக் கார்யக்கமிட்டி தடைசெய்த விஷயமாக இந்த ராஜிநாமா கிளம்பியிருக்கலாமென்று பத்திரிகைகளில் ஊஹம் நடக்கிறது.

### 9-5-38-ஹு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3-12-0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3—1—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை | ரூ 8-12-0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்ப 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 7—2—0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | ரூ 4—6—0 |

ஷை தாசில்தார்.

## அரும்பாக்கம்.
### வர்ணாச்ரம ஸபை ஸ்தாபனம்.

பகுதான்ய வருஷம் சித்திரைமீ 19உ (1-5 38) மாலை 6.30 மணிக்கு வட ஆற்காடு ஜில் வாலாஜா தாலுக்கா அரும்பாக்கம் கிராமத்தில் பிரம்மஸ்ரீ வைத்தியம் கா. நாராயண அய்யர் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் கிரும மகா ஜனங்கள் கூடிய ஸமூகத்தில் ஸ்ரீமான் உ. வே. எ. சேஷகுப்பனய்யங்காரவர்கள் பேசுகையில்:—

இப்போது நம் நாட்டில் நம்மிடம் ஓட்டு பெற்று ராஜாங்க நிர்வாக முறையில் சீர்திருத்தகாரர்களுக்கு அதிகாரம் பெற்றவர்களினால் கொண்டு வரும் வர்ணாச்ரம தர்மங்களுக்கும் மத கோட்பாடுகளுக்கும் விரோதங்களான சட்டங்களால் நம் ஸனாதன தர்மம் அடியோடு அழிக்கப்பட்டு வருவதால் இது விஷயமாக ஜனங்களுக்குண்டாகும் குறைகளை ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளவும் இது விஷயமாக நம் மதாசார்யர்களுடைய ஆக்ஞா நிருபணங்களை நம் ஸமூகத்தாருக்குத் தெரிவித்து அந்தப்பிரகாரம் நடந்து கொள்வதற்கு முன் ஏற்கனவே சென்னைமாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவின் கீழ் நம் கிருமத்திலும் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் அவசியம் வேண்டுமென்பதை தெரிவித்துக் கொண்டார். சபையோர்கள் அதை ஏகமுகமாக அங்கீகரித்து அடியிற்கண்ட மெம்பர் ஷை ஸங்கத்துக்கு கார்ய கமிட்டி மெம்பர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

பிரம்மஸ்ரீ வைத்தியம் கோ. நாராயணய்யர் அவர்கள் அக்ராஸனாதிபதி. ஸ்ரீமான் உ.வே எ. சேஷ. குப்பனய்யங்கார் அவர்கள். உப அக்ராஸனாதிபதி, பொக்கிஷதார்.
ஸ்ரீமான் குப்புசாமி குருக்கள் ஸ்ரீமான் பா. சுந்தராசாரியார் அவர்கள் ஸ்ரீமான் உ. வே. எ. வேத வாத்தியார் கோபாலய்யங்கார் காரியதரிசிகள். பிரம்மஸ்ரீ எ கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் ஸ்ரீமான் உ. வே, எ. கி. சேஷாசாரியார் அவர்கள் ஸ்ரீமான் உ. வே. எ. வா. இராஜகோபாலய்யங்கார் அவர்கள் ஸ்ரீமான் ருகவாசாரியார் அவர்கள். ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண செட்டியாரவர்கள். கோபால் நாயுடு அவர்கள் இவர்களை மெம்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஷை சபையின் தீர்மானங்கள்.

1. இந்த ஸங்கத்தை சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்துடன் சேர்க்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

1. இப்போது காங்கிரஸ் ராஜாங்கத்தாரால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஹரிஜன ஆலய பிரவேசம் மசோதா, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கும் சாரதாச்சட்ட சீர்திருத்தம், ஸ்திரீகள் ஸொத்துரிமைச்சட்டம், மற்றுமுள்ள அவைதிகமான சட்டங்கள் தொன்று தொட்டு ஏற்பட்ட ஸனாதன தர்மத்திற்கு விரோதமாக இருப்பதால் அவைகளை சட்டங்களாக பாஸ் பண்ணாமலும் அமுலுக்கு கொண்டு வராமல் இருக்கும் படிக்கும் ராஜாங்கத்தாரை கேட்டுக்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டது.

3. ஷை விஷயங்களை ஸ்ரீ அஹோபில மடாதிபதி அவர்களுக்கும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

4. ஷை சபையில் பிரம்மஸ்ரீ போளூர் நாட். நாராயணராவ் அவர்களும் செயனூர் பிரம்மஸ்ரீ கி. சேஷாத்திரி சாஸ்திரியார் அவர்களும் ஸனாதனதர்ம விஷயமாக வெகு விரிவாக உபந்யஸித்தார்கள்.

சபையின் சார்பாக ஷை யார்களுக்கும் சபையோர்களுக்கும் ஸ்ரீமான் சேஷகுப்பனய்யங்கார் அவர்களால் வந்தனோபசாரம் செய்யப்பட்டது. கோ. நாராயணசர்மா.

## ஆத்தன் குடி.

ஸநாதன தர்ம மகாசபை.
அமாவாசைக் கூட்டம்.

பிரும்மஸ்ரீ T. P. ஜகதீசய்யரவர்கள் தலைமையில் ஜெ. ச. சாமிநாதய்யரவர்கள் கடவுள் வாழ்த்துப்பாட, திரு. சு. வீர. கதிரேசன் செட்டியார். பிரம்மஸ்ரீ P. S. சுப்பிரமண்யகனபாடிகள். M. திருவேங்கிடமய்யங்கார், P.R. சுப்பிரமண்ய சாஸ்திரிகள். முறையே மதபக்தியும் தேசபக்தியும், ஸம்ஸ்கிருதபாஷையின் மகிமை, தொண்டர்படையின் அவசியம், சாஸ்திரார்த்தம், என்பன பற்றி விரிவுரையாற்றிய பின் தலைவரவர்களால் தக்கசான்றுகளுடன் முடிவுரை கூறப்பட்டு வந்தனோபசாரத்துடன் சபை இனிதுநிறைவெய்தியது.

M. திருவேங்கிடமய்யங்கார்.
காரியதரிசி.

## மஹானின் தர்சன விசேஷம்.

திருவையாறு சப்தஸ்தான உத்ஸவத்தைப் பற்றி சென்ற வாரம் "ஆர்யதர்மம்" இதழில் வைகாசிமீ 2உ ஞாயிற்றுக்கிழமை திருப்பந்துருத்திக்கு பல்லக்கு விஜயம் என்று போடப்பட்டிருந்ததை நண்பர்கள் தயவு செய்து வைகாசிமீ 1உ சனிக்கிழமை என்று திருத்தி வாசிக்கவும். ஷை தினம் 1உ (14-5-38) சனிக்கிழமை திருப்பந்துருத்தி ஸ்ரீநாராயணதீர்த்தகுருஸ்வாமிகள் ஆச்ரமத்திற்கு பக்தாபிமானிகள் யாவரும் விஜயம் செய்து ஸ்ரீ மகானின் தரிசனமும், விநியோகமும் பெற்று புண்ணியப்பேறடையும்படி வேண்டுகிறேன். அடிமை,

அரியநாயக முதலியார்.

## ஓர் விக்ஞாபனம்.

திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயணதீர்த்தகுருஸ்வாமிகளின் ஜீவியசரித்திரத்தை லோகோபகார்த்தமாய் ஆர்யதர்மம் பத்திரிகையில் பிரதிவாரமும் தொடர்ச்சியாய் வெளியிட்டு வருகிறது. அத்துடன் அவைகளை புத்தகரூபமாய் அச்சிட்டுவருகிறது, அவைகளை ஷை ஸ்வாமிகள் சன்னிதானத்திலேயே இனாமாக கொடுக்கப்படும். ஆதலால் இதைக் கண்ணுறும் தர்மசீலர்கள் இப்புத்தகம் அச்சிடவேண்டிய வகைக்குகொஞ்சம் தங்களாலியன்ற பொருளுதவிசெய்து இப்புண்யகைங்கர்யத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுகிறேன்.

அரியநாயக முதலியார்.

குறிப்பு:— திரவியசகாயம் செய்பவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ மானேஜர், அவர்கள் ஜனார்தன அச்சுக்கூடம், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம் என எழுதியனுப்பவும்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்"

என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருக்கை P. O

## Prof. K. Sundararama Aiyar.

The death of Professor K. Sundararama Aiyar has removed from the stage of Bharata Varsha, a figure of outstanding eminence. His erudition and sincerity are too well-known to be recounted. He was a great Vedantin in theory and to a great extent in practice too. When he presided over the First Varna-Asrama-Dharma Conference at Nellore, I believe it was in 1915, he gave a splendid resume of the ideals and the tenets of Varna-Asrama-Dharma. To those who knew him and heard him then his opinion on the Temple Entry Question said to have been expressed by him in his 83-rd year and quite naturally exploited by The Hindu, even in its obituary notice of the Professor, which is indeed a tribute more than to be expected for a schoolmaster in this Age of Political Noise and Social Slogans, came indeed as a strange and unpleasant surprise. Mr. Sundararama Aiyar, it is must be remembered, was more a student of the Vedanta at all times than an orthodox student or follower of Vedic Ritualism in its full form. At a time when he was forming his opinions on our Dharma, he was influenced by a Teacher whom he followed cent percent. But another Teacher of the same period he threw overboard, because in the former there was a greater show of orthodoxy than in the latter. Both were not teachers of Hindu Dharma as taught in the Vedas, because neither knew it. But for this solitary opinion of the learned Professor, he should certainly be deemed to have been a sympathiser of Varna-Asrama-Dharma. He was a great man undoubtedly and must be honoured as one of our stalwarts. His nationalism slightly took him of his legs, when he was faced, as all of us are faced today; with the problem of the right place of the millions of our brethren who are not born in the Four Varnas of the Sastras, in the new scheme of things. So we have to think of many more people too of various creeds and countries in building up the New India of the future. It does not call for our giving up what we have inherited from the Rishis, but we have to solve the newer problems with a fresh outlook. We have to build and not pull down the Structure of Bharata Varsha. Mr. Sundararama Aiyar was one who did his share of the work well and honestly. He has died full of years and learning. Let not people use his name for small purposes, in the name of India and Hinduism.

N. K. Venkatesam.
Anantapur.

## ப்ரொபஸர் K. சுந்திரராமய்யரின் மரணம்.

சென்ற 6ம் தேதி வியாழக்கிழமை இரவு Professor K. சுந்திரராமய்யர் அவர்கள் தேகவியோகமடைந்தார், என்ற செய்தி இவ்வூரில் யாவருக்கும் துக்கத்தை உண்டு பண்ணியது. அவருடைய தார்மிக சிந்தையும், சாஸ்த்ர ஆராய்ச்சியில் உள்ள ஊக்கமும் அவரை மேன் மேலும் பெருமைப்படுத்தியது. அவருடன் சிறிது காலம் சம்பாஷணை செய்வதே அறிவை உண்டாக்குவதாயிருந்தது. அவர் அநேக நற்காரியங்களுக்குதவி புரிந்தும், வைதிக ஸமாஜங்களுக்கு மிகுந்த தொண்டு புரிந்துமிருக்கிறார். பள்ளிக்கூடங்களுக்கும் மாணாக்கர்களுக்கும் பொருளுதவி செய்து அவர் கைதூக்கி விட்டிருக்கிறார். ப்ராம்மண சமூகத்திற்கே தீபம்போல் விளங்கின ப்ரொபஸர் சுந்திரராமய்யரின் ஞாபகார்த்தமாக இவ்வூரில் ஒரு பொதுவான இடத்தில் அவரது உருவச்சிலையையோ, (அல்லது) அவர் பெயரால் ஒரு கட்டடத்தையோ ஸ்தாபிப்பதற்கு ஓர் நிதியை ஆரம்பிக்க ஆஸ்திகர்கள் முன் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S. Vasudevan.



### பல ஊர்களில்

# ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்சவம்.

## நாகப்பட்டிணம்.

ஸ்ரீ ஆசார்ய கைங்கர்ய ஸபாவின் ஆதரவில் சென்ற 4—5—38 புதன்கிழமையன்று ஸ்ரீசட்டநாதஸ்வாமி கோவிலில் ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோத்ஸவமானது வழக்கம்போல் வெகு விமரிசையாக நடைபெற்றது. காலையில் வேதபாராயணத்துடன் இஷ்டாரஸபாஷிணீ ஸமேத ஸ்ரீகாயாரோஹண ஸ்வாமிக்கும் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கும் விசேஷமாக அபிஷேக ஆராதனங்கள் நடத்தப்பட்டது. பிறகு ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி உத்சவ விக்ரஹத்திற்கும் ஸ்ரீசங்கர பகவத்பாதாளுடைய திருவுருவப் படத்திற்கும் விசேஷபூஜை ஆராதனங்கள் நடத்தப்பட்டு பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் வித்வத்பூஷணம் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய அத்வைத சித்தாந்தத்தைப்பற்றி முதலில் ஸம்ஸ்கிருதத்தில் பிரவசனம் செய்யப்பட்டு பிறகு அவதாரகட்டமானது வெகு அழகாக உபன்யசிக்கப்பட்டது. சாயந்திரம் உபநிஷத் பாராயணத்துடனும் மேளவாத்தியத்துடனும் ஸ்ரீகுருமூர்த்திக்கும் ஸ்ரீசங்கரபகவத்பாதாளுடைய திருவுருவப் படம் அபிமுகமாகவும் புறப்பாடு நடத்தப்பட்டது பிறகு இரவு 8மணிமுதல் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீபகவத்பாதாளுடைய அவதாரத்தின் நோக்கத்தைப்பற்றியும் அவர்களுடைய அரிய பெரிய வேலைகளைப்பற்றியும் வெகு அருமையான ஓர் உபன்யாசம் செய்தார்கள். அவதாரத்தின் ரஹஸ்யத்தைப்பற்றியும் கீதையில் தர்மத்திற்கு கிலானி ஏற்படும்காலங்களில் தன்னைத்தானே ஸ்ருஷ்டித்துக்கொள்வதாக பகவான் வாக்குத்தத்தம் செய்தபடி மதமானது சீர்குலைந்து போனகாலத்தில் பாமதங்கள் தலைக்கிளப்பி பலவிதமான வாதங்களைப்பிரசாரம்செய்துவந்ததைக் கண்டித்து ஸநாதனமான அத்வைத மதஸ்தாபனமே சங்கருடைய அவதாரத்தின் காரணமென்றும் ராமகிருஷ்ணாத்யவதாரங்களும் அவ்விதமே துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்திற்காக ஏற்பட்டதென்றும் ஸ்ரீ ராமன் தன்னுடைய நடத்தையினாலும் கிருஷ்ணன் தன்னுடைய வார்த்தைகளினாலும் பிறருக்கு உபதேசம் செய்துவந்தார்களென்றும் சங்கரன் ஸ்ரீபகவத்பாதாளாக அவதரிக்காதவரையில் அத்வைதமதமே ஒளிந்து போயிருக்குமென்றும் சொல்லி அத்வைத மதஸ்தாபனத்திற்காக சிறிதுகாலத்திற்குள் அவர்கள் செய்த பெரியவேலைகளையும் பாஷ்யங்களையும்பற்றி விஸ்தாரமாகச்சொல்லி அப்படிப்பட்டவர்களின் தினத்தைக்கொண்டாடவேண்டியது அத்யாவசிய மென்றும் ஆனால் அவ்விதம் கொண்டாடுவது மாத்திரம் போதாதென்றும் அவர்களால் செய்யப்பட்ட அத்வைத சித்தாந்தத்தை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள சிரமப்படவேண்டுமென்றும் அவ்விதம் தெரிந்துகொள்வதே சதுர்விதபுருஷார்த்தங்களையும் அடைவதற்கு சாதனமென்றும் சொல்லிமுடித்தார்கள். பிறகு ஸபாவின்கார்யதர்சியால் தற்காலம் பீடாதிபதிகளாக விளங்கும் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் பாத கமலங்களில் அசேஷ மகாஜனங்களுடைய சாஷ்டாங்கநமஸ்காரங்கள் சமர்பிக்கப்பட்டு வந்தனோபசாரங்கள்கூறப்பட்டு ஸபையானது கலைந்தது.

N. சாம்பசிவ அய்யர். B. A B.L.
காரியதரிசி.

## மண்ட கோளத்தூர்.

சங்கரநிலயத்தில் வழக்கப்படி சித்திரை மீ 22தேதி 23தேதி இந்தஇரண்டு தினங்களில் ஸ்ரீபரமாசார்யருடைய ஸ்ரீஜயந்தி மஹோத்ஸவமானது மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஜயந்திஅன்று காலையில் ஸ்ரீபரமாசார்யாளுடைய பிம்பத்திற்கு பூர்ணகும்பத்துடன் ஆஹ்வான ரூபமான வீதியுத்ஸவமும், வேதபாராயணம், மேளம் முதலானவைகளுடன் சமீபத்திலிருக்கும் ஸ்ரீபாஹுதாநதியிலிருந்து அபிஷேகதீர்த்தம் கொண்டுவந்து மஹாந்யாஸபூர்வமாக ஏகாதசருத்ர பாராயணத்துடன் ஸ்ரீமதாசார்ய விக்ரஹத்திற்கு விசேஷத்ரவ்யங்களுடன் மஹாபிஷேகம் 8மணிக்கு ஆரம்பித்து ஸஹஸ்ரநாமார்ச்சனம் விசேஷ நிவேத்யம், தீபாராதனம் மந்திரபுஷ்பம் இத்தியாதி வைபவங்களுடன் 11½மணிக்கு பூஜை நடந்தது.

அன்று 9 மணிக்கு ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடம் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமதாசார்யாள் அவர்களின் அனுக்ரஹத்தினால் ஸ்ரீமடம்தரபில் அனுப்பப்பட்ட சென்னையிலிருந்துவந்த பிரஹ்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களுக்கும் கும்பகோணத்திலிருந்துவந்த பிரஹ்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளுக்கும் மற்றும் பண்டிதாள் மஹாஜனங்கள் எல்லோருக்கும் ஸ்வாகத வசனம் சொல்லி, பிரஹ்மஸ்ரீ கங்காபுரம் நாராயணசாஸ்திரிகள் அவர்களின் அக்ராஸனத்தின்கீழ் ஸ்ரீபகவத்பாதாள் சரித்திரத்தை மிகவும் எளியநடையில் விசேஷகோட்பாடுகளுடன் வந்திருந்த மஹாஜனங்களின் மனதைக் கவரும்படியாக "பிரஸங்கவா" என்னும் பிருதத்திற்கனுகுணமாக பிரஹ்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள்11மணிவரை உபன்யாஸம் செய்தார்கள். பிறகு பிராஹ்மண பூஜனம் நடைபெற்றது.

ஸாயங்காலம் 3½மணியிலிருந்து 5மணி வரையில் பிரஹ்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள் ஸ்ரீபரமாசார்யாள் எவ்விதம் லோகத்திற்கு மஹோபகாரம் செய்தார்கள் என்ற விஷயத்தை பரமாசார்யாளின் கிரந்தங்களின் மேற்கோட்பாட்டுடன் உபந்யஸித்தார்கள். 5மணியிலிருந்து 6-20 வரையில் பிரஹ்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு அத்வைத தத்வத்தை மிகவும் ஸுலபமாக எல்லோரும் அறியும்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துரைத்து நடுவில் பிரஸங்கக் கர்மாநுஷ்டானத்தின் ஆவச்யகத்தையும் பிரவர்கதி மார்க்கம் அதன் ஸ்வரூபம் எல்லாவற்றையும் விவரமாக எடுத்துரைத்தார்.

மண்டகோளத்தூர் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி பாகவதர் அவர்கள் மார்க்கண்டேய சரித்திரகாலக்ஷேபம் செய்தார்.

ராத்திரி 11 மணியிலிருந்து 2½ மணி வரையில் அக்ரஹாரவீதியில் மாத்திரம் ஆசார்ய பிம்பத்திற்கு உத்ஸவமானது வேத பாராயணம் நாம பஜனம், மேளக்கச்சேரியுடன் மிகவும் விமர்சையாக நடந்தது பிறகு 5½ மணிவரை திவ்யநாம ஸங்கீர்த்தனம் என்ற விசேஷ பஜனம் ஷை காலக்ஷேப கர்த்தாவான கிருஷ்ணஸ்வாமி பாகவதர் ஸ்ரீமான் ஸுந்தரபாகவதர் இவர்களால் நடத்தப்பட்டது.

## திண்டுக்கல்.

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளுடைய திவ்ய ஜயந்தி மஹோத்ஸவமான இவ்வூரிலுள்ள ஸ்ரீ அபிராமாம்பா ஸமேத ஸ்ரீ பத்மகிரீச்வர தேவாலயத்தில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதானத்தில் ப்ரும்மஸ்ரீ K. S. ஸுப்ரமஹண்ய சாஸ்திரிகளவர்களால் நகர மஹாஜனங்களின் ஆதரவின்கீழ் உபநிஷத், கீதா, ஸூத்ரபாஷ்ய, சங்கரவிஜயம், ராமாயண பாராயணத்துடனும் ருக்யஜுஸ்ஸாமவேத பாராயணத்துடனும் வெகு விமர்சையாக நடந்தேறியது. ஸ்ரீ மதாசார்யாளுடைய ரஜதபாதுகைகளுக்கு ப்ரதிதினம் (30-4-38 லிருந்து 4-5-38வரை) மஹாபிஷேக நிவேதனங்களும், வேதகோஷத்துடன் ஊர்வலமும் நடந்தன.

ஒவ்வொருநாளும் மாலை மதுரைவாஸிகளான ப்ரும்ஹஸ்ரீ பண்டிட் ஸீதாராம சாஸ்திரிகளும் ப்ரும்ஹஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளும் சங்கர விஜயத்தைப்பற்றி வெகு அழகாகவும் உருக்கமாகவும் உபன்யஸித்து நவீன வேத விருத்தவாதங்களைக் கண்டனம் செய்தது மிகவும் போற்றத் தக்கது.

மூன்றும் நாள் உபன்யாஸத்தன்று (2—5—38) மாலை 7-மணிக்கு அகிலபாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்யாத்யக்ஷரும் சென்னைமாகாண வர்ணாச்ரம ஸங்கத் தலைவருமான மதுரை அட்வகேட் ஸ்ரீமான் N. நடேச ஐயரவர்கள் இவ்விடம் விஜயம் செய்து "தற்கால நிலைமையும் ஸநாதனிகளின் கடமையும்" என்னும் விஷயம்பற்றி ஓர் அத்புதமான உபன்யாஸத்தை ஆஸ்திகர்கள் நிரம்பிய கூட்டத்தில் 3 மணி நேரம் உருக்கமாகப் புரிந்தார்கள்.

மறுநாள் காலையில் 8 மணிக்கு ஸபை சேர்ந்து ஷை வைத்யநாத சாஸ்திரிகள் நிவர்த்திமார்க ஸ்வரூபத்தை நன்கு விவரித்துக்கூறினார்.

அதற்குப்பிறகு பிரஹ்மஸ்ரீ அ. வே. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் சுருதி ஸ்மிருதிகளுடைய கோட்பாட்டுடன் சிஷ்ய ஸம்பத்து என்பதை மிகவும் விசதமாக எடுத்துரைத்தார்.

பிரஹ்மஸ்ரீ கங்காபுரம் நாராயணசாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ சங்கரருக்கும் ஸ்ரீ ராமனுக்கும் அநேக விஷயங்களில் ஒற்றுமையை அவரவர் கிரந்தத்திலிருந்து எடுத்துக் காட்டி வெகு நன்றாக உபந்யாஸம் செய்தார்.

பிறகு 3 மணிக்கு ஸபை சேர்ந்து நிலயம் காரியதரிசியும் திருப்பதி ஸம்ஸ்கிருத காலேஜ் பண்டிதருமான அராமனாத சாஸ்திரிகள் சாரதாசட்டம், ஆதிதிராவிடர்கள் ஆலயப்பிரவேசசட்டம் இவைகளின் ஸ்வரூபத்தை எடுத்துரைத்து அதை சாஸ்திர விரோதம் என்றும் அனுதியாகவந்த ஆசார விரோதமென்பதையும் அதனால் ஏற்படக்கூடிய உபத்திரவங்களையும் எடுத்துரைத்து அவைகளைக் கண்டித்து ஒரு தீர் தீர்மானம் கொண்டுவந்து ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது.

இவ்வளவு விசேஷமாக நடைபெற்றதற்கு காரணம் ஸ்ரீமடம் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடம் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் விசேஷ அநுக்ரஹமும் ஆதரவுந்தான்.

R. ராமனாத சாஸ்திரி, காரியதரிசி.

# சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

## பெத்திநாயக்கன் பாளையம்.

சேலம்ஜில்லா பெத்திநாயக்கன் பாளையம் கிராமத்தில் வருஷாந்திரம் நடந்துவரும் சங்கரஜெயந்தி உத்ஸவத்தை இவ்வருஷம் சித்திரைமீ 22உ புதன்கிழமை ஷெயூர் பிராம்மண சபையின் ஆதரவில் வெகு விமரிசையாக பஜனை விநியோகம் பிரார்த்தனை முதலிய உபகாரணங்களோடு கொண்டாடப்பட்டது. பிரார்த்தனை காலத்தில் ஸனாதன தர்மம் நிலைத்து ஓங்க ஜெயகோஷங்கள் செய்யப்பட்டன.

Dr. V. சிவராமன்.

## மேல்மங்கலம்.

வழக்கம்போல் இவ்வருஷமும் சித்திரைமீ 18உ சனிக்கிழமைமுதல் 22உ புதன்கிழமை முடிய ஐந்துதினங்களிலும் ஸ்ரீமதாசார்ய பகவத்பாதாளுக்கு காலையில் மஹான்யாஸ புரஸ்ஸரமாக ருத்ராபிஷேகம், அர்சனை, த்ரிவேதபாராயணங்கள். இரவில் மதுரை பிரம்மஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் பகவத்பாதாளின் திவ்யசரித்திர உபன்யாஸங்கள். ஐந்துதினங்களிலும் பிராம்மண ஸந்தர்ப்பணை முதலியன விரிவாய் நடைபெற்று அன்றுதினம் மாலை 4½மணிக்கு உபநிஷத் கோஷத்துடன் ஸ்ரீமதாசார்யாள் படம் சப்பரத்தில் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலம் வந்து பானகபூஜையுடன் மஹோத்ஸவம் இனிது பூர்ணமானது. ஆஸ்திக மஹாஜனசபையின் ஆதரவின்கீழ் சித்திரைமீ 21, 23உகளில் மாலை 4மணிமுதல் 5½மணிவரை வேதம், தர்மம், தற்காலநிலை, அதைப்பரிஹரிக்க நாம் கையாளவேண்டிய சாதனங்கள் முதலியவைகளை பெரியகுளம் பிரம்மஸ்ரீ த. சுந்தரராஜ சர்மா அவர்கள் இனிய தமிழ்நடையில் ஆழ்ந்த கருத்துக்களுடன் விளக்கினார்கள்.

சிவரும கணபதி கனபாடிகள்.

## குன்னக்குடி.

குன்னக்குடியில் பிரம்மஸ்ரீ கணபதிசுப்பிரமணிய தீக்ஷிதர் முயற்சியால் பஜனை மடத்தில் ஸ்ரீமத் ஆசார்யாளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

ஷெயூர் ஷண்முகநாதபுரம் கௌரவ நியாயாதிபதி பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்ரீராமமந்திரத்திலும் ஜயந்திதினம் கொண்டாடப்பட்டது.

அன்றையதினம் ஆசார்ய பிரயுக்தமாக மஹான்யாஸபூர்வ ஸாமான ஏகாதசருத்திர அபிஷேகத்துடன் உபநிஷத் கோஷத்துடனும் ஆராதனைகள் வெகுசிறப்பாய் நடந்தது.

அப்பால் ஷெ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் வணக்கமாய்ப் போட்டுவரும் சத்குரு உண்டியலுக்கு பூஜைசெய்து மகா-ள-ள-ஸ்ரீயோகி சுந்தரராஜய்யரால் உடைக்கப்பட்டதில் ரூ (72-12-2) இருந்தது தர்ம விநியோகங்கள் போக இருப்பு ரூ 4-8-2ம் ஷெ உண்டியலில் சேர்க்கப்பட்டது. இதுபோல் ஒவ்வொரு கிருஹத்திலும் உண்டியல்போட்டு ஆர்யதர்மத்தை விருத்திசெய்து ஸ்ரீமத் ஆசார்யாள் கிருபைக்கு பாத்திரர்கள் ஆகவேணுமாய் எல்லோரும் ஒரேமனதாய் பிரார்த்தனைகள் செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாள் விஜயம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் வாசிக்கப்பெற்றது விதைதானம் சந்தர்ப்பணம் முதலானதுகள் செய்து ஸ்ரீசங்கரஜயந்தி தினம் கொண்டாட்டம் மங்களகரமாக வெகுசிறப்பாய் முடிந்தது.

ஒரு நிருபர்.

## பண்ருட்டி.

பண்ருட்டி அக்கிரகாரத்தில் வழக்கம்போல் காளது பஹுதான்ய-ஷு சித்திரை-மீ 21உக்கு 4—5—38 புதவாரதினம் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாளுடைய பூஜையும் அடியில்கண்டபடி வெகு விமரிசையாய் நடந்தது.

காலையில் விருஷப லக்னத்தில் க்ஷேத்ர பூர்வமாக கடத்தில் ஆவாஹனம் செய்து அதன்பிறகு பிரம்மஸ்ரீ V. அனந்தநாராயண பாகவதரால் பஜனையும், பிறகு தேவதா மூர்த்திகளுக்கு உபநிஷத் பாராயணங்களுடன் அபிஷேகமும், சகஸ்ரநாமார்ச்சனையும் நடந்து ஷோடசோபசார, நீராஜனை, நைவேத்யம், முதலான பூஜை, பூர்த்தியான பிறகு க்ரமப்படி தீர்த்தப் பிரசாதம், வழங்கியும் பிராம்மண சந்தர்ப்பணையும் பரிபூர்ணமாய் நடந்தது. இரவு புனர்பூஜை குங்குமார்ச்சனை நைவேத்யம், நடந்தது. ஷெ உத்ஸவம் வழக்கம்போல் பிரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகளவர்களால், வைதிக முறையில் பக்திபுரஸ்ஸரமாய் அநேக பக்தர்களுடைய திரவிய சகாயத்தினால், நடைபெற்றது. ஷெ மகோத்ஸவமானது, இவ்வூர் வாசிகளான ஆஸ்திக குருபக்த மகாஜனங்களால் வருஷந்தோறும் ஏகமனதாகவும், அன்னியோன்ய பாவத்துடன், மிக குதூகலமாய் நடத்தி, ஸ்ரேயஸ்ஸைப்பெற்று, ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை, அடையவேணுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

ஸ்ரீமடம் சிஷ்யன்.

## மிலட்டூர்

சென்ற 4-5-38 புதன்கிழமையன்று ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவம் ஷெ பாடசாலை கட்டிடத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடப்பட்டது. மாலை3-மணிக்கு பூஜை நிவேதனங்கள் முடிந்த பிறகு பிரம்மஸ்ரீ காசி சுப்பிரமய்யரவர்கள் தலைமையில் ஓர்கூட்டம் கூடிற்று. பிரம்மஸ்ரீ M. சுந்தரேச சாஸ்திரிகள் ஸ்ரீமத் சங்கரர் அவதரிக்கவேண்டிய அவசியத்தையும் அவரால் நம்முடைய மதஸ்தாபனம் எப்படி மேல் ஓங்கி வளர்ந்தது என்பதைப்பற்றி விரிவாக ஓர் உபன்யாசம் செய்தார். பிறகு திருக்கருகாவூர் மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பையர் ஸ்ரீசங்கரர் பிறந்தினத்தைக்கொண்டாட வேண்டிய அவசியத்தைப் பற்றிகூறியவுடன் குழந்தைகளுக்குச்சுண்டல் முதலான பிரசாதங்கள் வழங்கிய பிறகு கூட்டம் இனிது நிறைவேறியது.

R. பாலசுப்ரமண்ய அய்யர்.

## வல்லநாடு.

வல்லநாடு பழைய கிராமத்தில் 30-4-38ல் சங்கரஜயந்தி உத்ஸவம் ஆரம்பமாய்தினந்தோறும் காரியதரிசி ஸ்ரீமான் ராமசுவாமி அய்யரவர்களால் பூஜாநிகார்யங்கள் சிரத்தையுடன் நடத்தப்பட்டு 4—5—1938 புதன்கிழமை இரவுடன் மேல்படி உத்ஸவம் மங்களமாக நிறைவேறியது. உத்ஸவகாலத்தில் பிரதிதினம் காலையில் உபநிஷத் வேதபாராயணங்களும் ஸ்ரீமத் சங்கரவிஜய பாராயணமும் பக்தசிரோன்மணிகளால் நடத்தப்பட்டு மாலையிலும் இரவிலும் பிரம்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் சங்கர கதாகாலக்ஷேபமும் வேதாந்தோபந்யாஸங்களும் நிகழ்த்தப்பட்டது. பற்பல பக்தர்களும் வந்திருந்து கதா சிரவணம் செய்து ஆனந்தமடைந்தனர்.

ராமசுவாமி அய்யர்.

## ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை.

ஸ்ரீ ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் ஜனனதினமானது வைசாக சுத்தபஞ்சமி (4-5-38) புதன்கிழமைதினம் ராமச்சந்திரபுரம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷன் மானேஜர் என். ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள் ஜாகையில் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. காலையில் ஸ்ரீ சங்கருடைய திருவுருவப்படத்திற்கு வேத உபநிஷத் பாராயணங்களுடன் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றது. சாயங்காலம் குடுமியாமலை பிரும்மஸ்ரீ கல்யாணசுந்தர சாஸ்திரிகள் ஸ்ரீ சங்கரரது ஜனன விசேஷத்தைப்பற்றியும் அவர்களது ஜன்மதினத்தை எல்லோரும் கொண்டாடவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தற்காலம் ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஆசாரியஸ்வாமிகள் சிஷ்யகோடிகளிடமிருக்கும் கருணை மிகுதியினால் பல வருஷங்கள் தேச சஞ்சாரம் செய்துவருவது ஸ்ரீ ஆதி ஆசார்யாள் பாரத பூமி முழுவதும் சிறிது காலத்திற்குள் பலதடவை சஞ்சாரம் செய்திருப்பதை ஒத்திருக்கிறதென்றும் தற்போதய ஆசார்யாளை தரிசித்த ஒவ்வொருவரும் ஸ்ரீ ஆதி ஆசார்யாளிடம் பக்தி செலுத்தவேண்டிய அவசியத்தை அவரவர்களே உணர்வார்களென்றும் வெகு அழகாகப் பேசி முடித்தார். பிறகு புதுக்கோட்டை போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த பிரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அய்யர் ஸ்ரீ சங்கரரது அத்வைத ஸித்தாந்தத்தின் மேன்மையை மேல்நாட்டார் உணர்ந்திருப்பதுபோல நம் தேசத்தார் உணரவில்லையென்றும் ஆதி ஆசார்யாளைப்பற்றி பல மேல்நாட்டு அறிஞர்கள் வெகு பெருமையாக கூறியிருப்பதைப்பற்றியும் தகுந்த மேற்கோள்களுடன் பேசினார். முடிவில் கானப்பேட்டை பிரும்மஸ்ரீ மீனாக்ஷிசுந்தர தீக்ஷிதர் அத்வைத ஸித்தாந்த தத்வங்களைப் பற்றி சுருக்கமாகக்கூறி அத்வைதமே மோக்ஷ ஸாதனமென தெரிவித்தார். இரவில் புதுக்கோட்டை கிரும புனருத்தாரண ஆபீஸர் பிரும்மஸ்ரீ ஜி. வெங்கடேச அய்யர் அவர்களால் பெரிய புராணத்திலிருந்து சில பக்தர்களின் சரித்திரங்கள் இனிய நடையில் பிரசங்கம் செய்யப்பட்டது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்ஸவத்தில் கலந்துகொண்டார்கள்.

"ஒரு பக்தன்."

## துகிலி.

கும்கோணம் தாலுகா கம்சபுரத்தைச்சேர்ந்த துகிலிஅக்ரகாரத்தில் சென்றவாரம் புதன்கிழமை சி. 22உ ஸ்ரீஜகத்குரு சங்கரஜயந்தி மஹோத்ஸவம் 10நாளாக நடைபெற்று இனிது முடிந்தது. பிரதிதினமும் காலையில் உபநிஷத் பாராயணமும் லக்ஷார்ச்சனையும் மாலையில் அரிய உபன்யாஸங்களும் நடைபெற்றது. ஜயந்திதினமாகிய 22உ புதன்கிழமையன்று விசேஷமான ஆராதனைகளும் ஆசார்யாளுடைய திருவுருவப் படத்தின் கோலாகல ஊர்வலக்காக்ஷியும் தகுந்த மேளவாத்தியத்துடன் நடைபெற்றது. சிவ பஜனை கோஷ்டியும் பின் நடந்தது.

கிராம பொதுஜனங்கள்.

> **முக்கிய கவனிப்பு.**
> (3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது)
> அசல் தங்க நகைகளைப்போன்ற "குன்னூரல் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.
> தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.



# ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

## கும்பகோணம்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் சங்கரஜயந்தியன்று காலையில் ஸ்ரீ பகவத்பாதாளுடைய பாதுகைக்கும் ஸ்ரீ ஆசார்யமூர்த்தி படத்திற்கும் மஹந்யாஸ ஜப பூர்வகமாக விசேஷ பூஜைகள் நடந்தது. மாலை 4-மணிக்கு ஸ்ரீ பகவத்பாதாளுடைய அதிஷ்டான பரம்பரையான காமகோடிபீடம் முதலாசாரியாளான ஸ்ரீ ஸர்வஞ்ஞாத்மர் பிரம்மானந்தயோகிக்கு பகவத்பாதாளுடைய சரித்திரத்தைச் சொன்னதும், பிரம்மானந்தர் யோகானந்தருக்குச்சொன்ன பிரகத் சங்கர விஜயத்திலிருந்து பகவத்பாதாளுடைய ஜனனமானது பிரம்மஸ்ரீ மஹாதேவ சாஸ்திரிகளால் உபன்யஸிக்கப்பட்டது. பிறகு வழக்கம்போல் விநியோகங்களும், விதிப்ரதக்ஷிணையும் நடந்தபிறகு சாஸ்திர ரத்னாகரம் திருவையாறு பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் ஸ்ரீ பகவத்பாதாளுடைய சரித்திரத்தை அநேக தத்வங்களுடன் 3 தினம் உபன்யஸித்தார்கள். மூன்றாவது தினமாகிய சங்கர ஜயந்தியன்று ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸர்வஞ்ஞபீடாரோஹணம், ஸ்ரீ காமகோடி பீடஸ்தாபனம் வரையில் அதி விமர்சையாக உபன்யஸித்தார்கள்.

ஒரு நிருபர்.

## திப்பிராஜபுரம்.

திருபுராஸுதரம் என்னும் திப்பிராஜபுரத்தில் ப்ரும்மஸ்ரீமந்த்ரமூர்த்தி க்ருஷ்ண சாஸ்த்ரிகள் க்ருஹத்தில் 15-ஷுமாக நடந்துவந்ததுபோல் இவ்வருஷமும் 30—4—38 சனிக்கிழமை முதல் 4—5—38 புதன்கிழமைவரையில்ப்ரதிதினமும் காலையில் ஆச்சார்ய பூஜார்த்தத்தில் எல்லோரும் சேர்ந்து புஷ்பாஞ்சலி செய்து தொழிலுமூர்த்யஷ்டக நமஸ்கார தேசசாந்திபடன பூர்வகமாய் பாஷ்ய பாராயணமும் வேத உபநிஷத் பாராயணமும் உத்தராசாந்தி நமஸ்காரமும் ஸ்ரீ வித்யாபூஜையும் ப்ராம்மண ஸந்தர்ப்பணமும் மாலையில் உபன்யாஸங்களும், இரவில் பூஜார்த்தத்தில் ப்ராம்மண ஸந்தர்ப்பணம் செய்தபின் உபன்யாஸங்களும் ஷெ புதன்கிழமை ஜயந்திதினம் இரவில் வாத்யகோஷ வேதபாராயணத்துடன் விமானத்தில் பரமாசார்ய ப்ரதிமையையும் த்ருபுரஸுந்தரியையும் அலங்காரம் செய்து ஊர்கோலமும் நடத்தி ஆச்சார்யாநுக்ரஹத்தால் பூர்த்தி அடைந்தது.

### உபன்யாஸ விபரம்.

30—4—38 மாலை இரவில் ப்ரும்மஸ்ரீ சிமிழி வெங்கட்டராம சாஸ்த்ரிகள், 1-5-38 மாலை இரவிலும் ப்ரும்மஸ்ரீ கவிரத்னம் திருவடமருதூர் சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள், 2—5—38 மாலை ப்ரும்மஸ்ரீ நாராயணஸாமி ச்ரௌதிகள் ஷெ இரவு திருவடமருதூர் ஸ்ரீநிவாஸய்யர் கோட்டுவாத்தியம், 3-5-38 மாலை இரவிலும் கவிமணி ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் பஞ்சாபகேச சாஸ்திரிகள், 4-5-38 மாலை மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பய்யர்வாள் ஷெ இரவில் சேங்காலிபுரம் ராமயணம் அய்யாஸ்வாமி சிரௌதிகளும் உள்ளூர் வையாகரண ஸாம்பசிவ சாஸ்திரிகளும் உபன்யஸித்தார்கள்.

ஒரு நிருபர்.

## இலந்துறை.

ஸ்ரீ சங்கர ஜயந்தி மகோத்ஸவம் வழக்கம்போல் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம் பஹுதான்ய ஷு சித்திரை மீ 18உ முதற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தினமும் ஸ்ரீ ஆதி சங்கரர் திருவுருபடத்திற்கு நறுமணம் நிறைந்த புஷ்பங்களால் அலங்கரித்து தூப தீப, நைவேத்யாதிகளுடன் நடந்து ஷெ மீ 22உ புதன்கிழமை ஸ்ரீ ஆதி சங்கரர் அவதார கட்டத்தை பாராயணம் செய்யப்பட்டது. அன்றும் அலங்கரிக்கப்பட்டு தூப தீப நைவேதனங்கள் அர்ச்சனை முதலானதுகள் செய்யப்பட்ட பிறகு பிராம்மண ஸந்தர்ப்பணை நடந்தேறியது. அன்று இரவு சுமார் 7மணிக்கு ஸ்ரீமடம் பிரம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் அவதார கட்டத்தையும் மேற்கோள் உட்பட தெளிவாக உபன்யஸித்தார். சந்தனம் தாம்பூலங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. போஜனத்திற்குப்பின் பாகவதோத்தமர்களாலும், சிஷ்யகோடிகளாலும், பஜனை ஆரம்பிக்கப்பட்டு மறுநாள் காலை சுமார் 7மணி அளவில் மங்களம் பாடி முடிக்கப்பட்டு பிரஸாதங்களும் வழங்கப்பட்டன. வெள்ளிக்கிழமை விடையாத்தி நடத்தப்பட்டது.

ஸ்ரீ சங்கர தாஸன்.

## மணக்கால்.

சென்ற சில தினங்களாக இவ்வூரில் தங்கியிருந்த திருநெல்வேலி ஜில்லா சித்தமல்லி அமலானந்த தீர்த்தஸ்வாமிகளை முன்னிட்டுக்கொண்டு இவ்வருஷம் புதிதாக காயத்திரி நதியின் வடபாரிசத்தில் எழுந்தருளியிருக்கும் ஷண்முகர் ஆலய வேதபாடசாலை மண்டபத்தில் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஆசார்யபடத்தை மந்த்ரபுரஸ்ஸரமாக ஆவாஹனம் செய்து தினம் காலையில் ப்ரம்மஸூத்ர உபநிஷத் த்ரய பாஷ்ய பாராயணமும் மாலையில் ஸ்ரீ சங்கர விஜய விலாஸ பாராயணமும், ஷெ சுவாமிகளால் ப்ரவசனமும், பின் சிவகுரு பஜனையும் நடந்து, சங்கரஜயந்தி அன்று மாலை ஆசார்யாள்பட பட்டணப்ரவேசம் உபநிஷத் பாராயண, நாதஸ்வரகச்சேரியுடன் வெகு விமரிசையாய் நடந்தேறியது. இவ்விதம் வருடந்தோறும் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவத்தை இவ்வூர்வாஸிகள் விடாமல் நடத்திவர வேண்டுமென ஸ்ரீமத் பரமாசார்யாளுடைய அனுக்ரஹத்தைக் கோருகிறேன். தவிர, மத சம்பந்தமான சட்டங்கள் சட்டசபைகளில் நிறைவேறாமல் தடுக்க நம் ஆசார்யாள் ஆங்காங்கு அனுப்பியுள்ள மகஜர்களில் ஆஸ்திகர்களின் கையெழுத்துக்கள் வாங்கி, அவரவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

M. வைத்தீஸ்வரன்.

## திருக்கோயிலூர்.

இவ்வருஷ சங்கரஜயந்தி உத்ஸவம் ஸ்ரீமான் T. R. S. சர்மா அவர்களின் கிருஹத்தில் 4—5—38 புதன்கிழமை அன்று வேதபாராயண கோஷ்டியுடன் ஸ்ரீமத் பகவத் பாதாளுடைய படத்திற்கு பூஜையும் பிரும்மணபோஜனமும் வெகு சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியார் சுவாமிகளுடைய பரிபூர்ண அனுக்கிரகத்தாலும், ஆஸ்திக ஜனங்களுடைய கோஷ்டியினாலும் இஜ்ஜெயந்தி உத்ஸவம் மிகவும் சிறப்பெய்தியது.

ந. நி.

## மதுரை.

மதுரையில் தர்மசாஸ்திரஸபை, வைதிக ஸமாஜம் இச்சபைகளின் சார்பாக ஏப்ரல் 30உ முதல் மேமீ 4உ முடிய ஸ்ரீசங்கரஜயந்தி உத்ஸவம் வெகுவிமர்சையாய்நடைபெற்றது. அம்மன் ஸந்நிதித்தெருவில் ஸ்ரீசங்கரமடத்திலும் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வரர்கோவில் திருக்கல்யாண மண்டபத்திலும் ஆசார்யாளுக்கு விசேஷ பூஜைகளும் பாஷ்யபாராயணங்களும் வித்வான்களால் ஆசார்யாளின் சரித்திரத்தையும் க்ரந்தங்களையும் பற்றி அருமையான உபந்யாஸங்களும் செய்யப்பட்டன. ஸ்ரீசங்கர ஜயந்தி தினமான மேமீ 4உ யன்று ஸ்ரீ சங்கர மடத்தில் ஈச்வரனுக்கும் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் கோவிலில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கும் அபிஷேகங்களும் விசேஷ பூஜைகளும் நடந்தன. மத்யானம் பிராம்மண சந்தர்ப்பணையும் இரவில் சித்திரை வீதி பிரதக்ஷிணமாய் ஆசார்யாள் பட்டணப்பிரவேசமும் குதூகலமாய் நடைபெற்றன.

இவ்வுத்ஸவத்தில் பண்டிதர்களும் பாமரர்களும் வைதிகர்களும் லௌகிகர்களும் ஒன்று சேர்ந்து ஸ்ரீமத் ஆசார்யாளின் ஜயந்தி தினத்தைக்கொண்டாடினது வெகு அழகாயிருந்தது. பிரதி தினம் மாலையில் வித்வான்கள் உபன்யஸித்தார்கள். பிரம்மஸ்ரீ S. நடேசய்யரவர்கள் யாத்ரீக வழிகளில் ஆசார அநுஷ்டானங்களைப்பின் பற்றிவருதலால் நமக்கு இஹலோகத்திலும் பரலோகத்திலும் நன்மை தருமென்று எடுத்துக் காட்டினார்கள். ராமேஸ்வரம் தேவஸ்தானம் பாடசாலை பிரின்ஸ்பால் பிரம்மஸ்ரீ ஸுப்பிரமணிய அய்யரவர்கள் பரிசுத்தியுடனும் ஏகாக்ரசித்தத்துடனும் மந்திரங்களை ஜபிப்பதால் அம்மந்திரங்களுக்கு அத்புதமான சித்திகள் ஏற்படுகின்றன வென்பதை ஆசார்யாள் சரித்திர மூலம் விளக்கிக்காட்டினார்கள். பிரம்மஸ்ரீ ஸதாசிவப்ரம்மம் அவர்கள் தர்ம நாசத்தால் தேச நன்மையடையலாமென்று நவீனப்ரமுகர்கள் பேசுவதை யனுசரித்து தர்மமே நன்மை பயக்குமென வற்புறுத்தினார். மூன்றுப்பள்ளம் பிரம்மஸ்ரீ பக்ஞ தீக்ஷிதரவர்கள், ஆசார்யாள் ஸ்தாபித்த மடங்களின் மேன்மையைப்பற்றியும் அவைகள் லோகத்துக்குச்செய்து வரும் ஸ்திரமான நன்மைகளைப்பற்றியும் உபன்யஸித்தார்கள். பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் வர்ணாச்ரம தர்மங்கள் எவை என்று ஸ்ருதி, ஸ்மிருதி, புராண், இதிகாசங்கள் மூலமும் ஆசார்யாள் கிரந்தங்கள் மூலமும் விளக்கிக்காட்டி அந்த தர்மங்களை நாம் தீவ்ர புத்தியுடன் அநுஷ்டிக்க வேண்டுமென்று உத்ஸாகப்படுத்தினார்கள். பிரம்மஸ்ரீ V. S. ராமசுவாமி சாஸ்திரிகளவர்கள் ஆசார்யாள் அவர்களின் அவதாரத்தில் வர்ணாச்ரம தர்மங்களை எப்படி அனுஷ்டித்துக்காண்பித்தார்களென்று நன்கு விளக்கினார்கள். உத்ஸவம் முழுதும் பக்தகோடிகளனைவரும் ஆசார்ய பரவசர்களாய் இருந்தது வெகு சந்தோஷகரமான விஷயம்.

மா. வேங்கடாசலம்.


மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

216281




அநாவசியமாக ஏன் — —
— — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## வெளியூர்ச் செய்திகள்.

### திப்பிராஜபுரம்.

பிரமவித்யாஸபாவில்
ஓர் உபந்யாஸம்.

16—438ல் கர்மயோகத்தின் 2-வது வர்க்கத்தைப்பற்றி ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரியவர்கள் உபன்யஸித்தார்கள். அதின் ஸாரமாவது. முதல் உபன்யாஸத்தில் மோக்ஷத்திற்கு முதற்படியான கர்மாவை ஸரியாய் அனுஷ்டித்தால் சித்தசுத்தியேற்பட்டு பிறகு ஞானத்தைப்பெற்று அதினால் மோக்ஷத்தை யடையலாமென்று கூறப்பட்டது. இந்த உபன்யாஸத்தில், மோக்ஷத்தில் விருப்பமில்லாதவர்களும் இவ்வுலகில் சுகமாய் வாழவேண்டியதற்காக கர்மயோகத்தை அவச்யம் அனுஷ்டிக்கத்தான் வேண்டும் என்று நிரூபிக்கப்படுகின்றது.

மோக்ஷத்தில் தமக்கு விருப்பமில்லை என்று கர்மயோகத்தை யனுஷ்டிக்காமலிருந்தால் பலவித கஷ்டங்களை யனுபவிக்கும்படி நேரும். அஃதெங்ஙனமெனில் கூறுவாம். ஸகல உலகங்களுக்கும் ஈசனான பகவான் உலகங்களை ஸ்ருஷ்டிக்கும் காலத்திலேயே ஒன்றையொன்று அடுத்து ஜீவிக்கும்படி ஏற்படுத்தியிருக்கிறார். மேலான ஸ்திதியிலிருப்பவர்கள்கூட தம்மைக்காட்டிலும் கீழான நிலைமையிலிருக்கும் பிராணிகளை யபேக்ஷித்துத் தான் ஜீவனம் செய்யவேண்டும். பூமி ஸ்தாவரமாயிருந்தாலும் அதிலிருந்தும் நாம் பலத்தையடையவேண்டுமென்று விரும்பினால் அதை ஸரியானகாலத்தில் உழுது தண்ணீர்பாய்ச்சி கொத்தி களை முதலானவைகளை எடுத்து நன்கு பாதுகாத்தால்தான் நமக்கு அது தான்யத்தைக் கொடுக்கும். அவ்விதம் நாம் ரக்ஷிக்காவிட்டால் நமக்கு ஆகாரம் கிடைப்பது அரிதாகி விடும். இவ்விதமே காக்கும் பசுவிற்கும் புல், தண்ணீர், தவிடு முதலானவைகளை வைத்து ஆராதித்தால்தான் அது நமக்கு அபேக்ஷையுள்ள ஸமயத்தில் பாலைக்கொடுக்கும். இல்லாவிட்டால் பசுவினிடமிருந்து பாலை எதிர்பார்க்கமுடியாது. இவ்விதமே நம்மைக்காட்டிலும் மேலானவர்களான தேவதைகளுக்கும் நம்மை எதிர்பார்த்து ஜீவிக்கும்படி பகவான் கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால் நம்மால் யாகம் முதலான கர்மாக்களில் கொடுக்கப்படும் ஹவிஸ் முதலான ஆகாரங்களைப்பெற்று அதற்காக அவர்கள் நமக்குவேண்டிய ஸமயங்களில் காற்று, மழை உஷ்ணம் முதலியவைகளைக்கொடுத்து உபகரிக்கிறார்கள். இந்த தேவதைகள் அத்யாத்மம், அதிபூதம், அதிதெய்வம் என்று சொல்லப்பட்ட மூன்று ஸ்தானங்களிலிருந்துகொண்டு நமக்கு ஸகாயம் பண்ணுகிறார்கள். இவ்விதம் கீழ் மேல் என்கிற வேற்றுமையின்றி ஒருவருக்கொருவர் ஸகாயம் செய்துகொண்டு லோகவ்யவஹாரம் நடைபெறுகின்றது. இக்கருத்தையே கீதையிலும் பரஸ்பரம்பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத என்று பகவானும் கூறியுள்ளார்.

நம் முன்னோர்கள் தாம் உள்ளவரையில் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை விதிவழுவாது ஸரியாய் அனுஷ்டித்து தேவர்களுக்கும் திருப்தி செய்தமையால் அவர்களும் ஸந்தோஷத்துடன் ஜகத்திற்கு வேண்டிய ஸௌகர்யங்களையும் செய்து வந்தார்கள். மழை, காற்று முதலிய ஸௌகர்யங்களை தேவர்களுடைய அனுக்கிரகமில்லாமல் நம்போன்றவர்களுக்கு வரவழித்துக் கொடுக்கும் சக்தி அற்பங்கூட இல்லை என்பதும் யாவருமறிந்த விஷயமே! தற்காலம் ஜனங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை ஸரியாய் அனுஷ்டிக்காமல் அதர்மங்களையும் அதிகம் அனுஷ்டித்துவருகிறார்கள். தேவதைகளுக்கு ஆகாரத்தையளிக்கக்கூடிய யக்ஞம் முதலான வைதிக கர்மாக்கள் அடியோடு நின்றுவிட்டன. இதினால் தேவதைகளுக்கு நம்மால் கொடுக்கப்படும் காற்று, மழை முதலான ஸௌகர்யங்களை யனுபவித்துக்கொண்டு அவர்கள் நமக்குக் கொடுக்கவேண்டிய ஹவிஸ்ஸைக் கொடுக்கவில்லை என்று கோபமேற்பட்டு பலகாரணங்களால் மிகவும் அசுத்தமாக ஆயிருக்கும் அத்யாத்மமென்கிற நம் சரீரத்திலுள்ள ஸ்தானங்களிலிருந்தும், அதிபூதமென்கிற பூமி, ஜலம் முதலான ஸ்தானங்களிலிருந்தும், விலகிவிடுகிறார்கள். இவ்விதம் அவர்கள் விலகிவிட்டபடியால் பூமிகள் ஸரியாய் விளைகின்றதில்லை. மனிதர்களுக்கும் எதிர்பாராத காலரா பிளேக் முதலான கொடிய வியாதிகளும் மற்றும் பல கஷ்டங்களும் அடிக்கடியுண்டாகி மிகவும் வருந்துகிறார்கள். இந்த அபிப்பிராயத்தையே பகவான் பதஞ்ஜலியும் சாகஸம்ஹிதையால் விமானஸ்தானத்தில் விரிவாகவும் மிகவும் அழகாகவும் நிரூபித்திருக்கிறார். விரிவிற்கஞ்சி விடுத்தனம். நம் தேசத்தில் தற்காலம் ஜனங்களுக்கு நேர்திருக்கும் பலவித கஷ்டங்களுக்கும் காரணம் தர்மாநுஷ்டானக் குறைவும் அதர்மத்தின் அபிவிருத்தியேயாகும். ஆகையால் இவ்வுலகில் கஷ்டப்படாமல் நாம் சுகமாக வாழவேண்டுமென்றுகருதினால் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். இல்லாவிடில் உலகயாத்திரை ஸுகமாய் நடைபெறாது. இத்தக்கருத்தையே சரீரயாத்ராபிசதே நப்ரஸித்யேதகர்மண:

என்று கீதாசார்யனும் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் ஸகல ஜனங்களும் சுகமாய் வாழவேண்டுமானால் அவரவர்களுக்கும் விதிக்கப்பட்ட கர்மாக்களை முடிந்தவரையில் அனுஷ்டித்தே தீரவேண்டும் என்றும் இன்னும் பல அரிய விஷயங்களையும் நிரூபித்து ஸபையிலுள்ளோர்களுக்கும் கர்மானுஷ்டானத்தில் அதிக சிரத்தை ஏற்படும்படி மிகவும் தெளிவாய் அநேக விஷயங்களை எடுத்துக்காட்டி ஸகல ஜனங்களுக்கும் அதிக ஆனந்தத்தை யுண்டு பண்ணினார்கள். பிறகு ஸ்ரீ பகவத் பிரஸாதங்களும் விநியோகம் செய்யப்பட்டு ஸபையும் சிறப்பாய் பூர்த்தியடைந்தது.

காது நிருபர்.

### தர்மப்ரசாரம்.

சென்னை அமரகலாவிலாசனி ஸபை முத்யால்பேட் வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கம் இவைகளின் தலைவரான ஸ்ரீ வ. த்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ சங்கரபகவத் பாதாள் உத்திரவுப்படி அடியிற் கண்டபடி தர்மப்ரசாரம் செய்து பல கை எழுத்துக்கள் வாங்கி அதிகாரிகளுக்கனுப்புகிறார்.

4-5-38 மண்டகொளத்தூரில் காலையில் ஸ்ரீ மதாதி சங்கரபகவத்பாத சரிதம், மாலையில் ஸ்ரீசங்கரோபதேசம், சண்டாளரை ஏன் ஆலயத்தில் விடக்கூடாது? என்பது பற்றியும்

5-5-38 திருவண்ணாமலையில் ஸ்ரீ கோதண்டராம டீக்ஷிதர் தலைமையின் கீழ் விவாஹ தத்வம்.

4-5-38 ,, ,, சாரதாச்சட்ட க்கண்டனம். ஆலய மசோதாக் கண்டனம்.

7-5-38 ,, ,, ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்ராமய்யர் அட்வகேட் தலைமையில் வைசாக மாஹாத்மியம்.

8-5-38. ,, ஸ்ரீ வஜ்ரசர்மா அவர்கள் தலைமையில் பல பிராம்மணர்கள் வைதி சட்டங்கள் ஒழியவும் பிராம்மண ஸமூஹம் க்ஷேமமடையவும் அருணம் ருத்ரசமகம் புருஷஸூக்தம் ஸ்ரீ ருத்ரம் 4 உபநிஷத்துக்களைப்பாராயணம் செய்து கொண்டு ஸ்ரீ அருணாசல, கிரிப்ரதக்ஷிணம்.

9-5-38 திருவாமாத்தூரில் சாரதாச்சட்டக் கண்டனம் முதலியவைகளைச் செய்து விட்டு 10உ சென்னை வந்து சேர்ந்தார்.

வி. எஸ். ஜெயராமன். கார்யதரிசி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

ஆரியதர்மம்

4 ள

24 20

18—5—1939

215203

1001/00.

215283

REGD No. M. 2913.

ARYA DHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

| | |
|---|---|
| ஜீவிய சந்தா .... | ரூ. 50 |
| ஒரு வருஷ சந்தா | ரூ. 3 |
| ஆறுமாத சந்தா | ரூ. 1½ |

தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ளு வைகாசி-மீ 4வ 1939-ளு மே-மீ 18வ | ல-20

## "திருவாங்கூர் அதிதியாக இருக்கவேண்டாம்"

### மன்னரின் மரியாதைகளைப் பெறக்கூடாது.

### ஸநாதனிகளின் வேண்டுகோள்.

சிருங்கேரி ஜகத்குருவுக்கு மகஜர்

மேன்மை தங்கிய ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் தற்சமயம் காலடியில் தங்கி இருக்கிறார்கள் அவர்கள் ஆறு மாத காலம் அங்கேயே தங்கியிருக்க முடிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்குவேண்டிய வசதிகள் யாவும் திருவாங்கூர் சமஸ்தானத்து அதிகாரிகளால் நன்கு செய்யப்பட்டிருக்கின்றன. திவான் சச்சிவோத்தம ஸர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் மேற்பார்வையில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சங்கராசாரியார் காலடியில் தங்கும் வரையில் அவர்கள், "சமஸ்தானத்தின் பிரதம விருந்தினராக" க்கருதப்படுவாராம்.

மேன்மை தங்கிய திருவாங்கூர் மகாராஜாவும், அவரது அன்னை மே. த. சேதுபார்வதி பாய் அம்மையாரும், ஸ்ரீ ஜகத்குருவைத்தரிசித்து, மரியாதைகள் செய்ய முடிவு செய்திருக்கிறார்கள்.

தென்னாட்டிலிருக்கும் பிரபல ஸநாதனிகள் சார்பாக ஸ்ரீ ஜகத்குருவுக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த மகஜரில் ஏராளமாய் ஸநாதனிகளின் கையொப்பங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. மகஜரில் முக்கியமாய், ......................................
"திருவாங்கூர் சமஸ்தானத்தின் அதிகாரிகளின் மரியாதைகளையும், பாத பூஜைகளையும், பிக்ஷைகளையும் ஸ்ரீ ஜகத்குரு அங்கீகரிக்கக்கூடாதென்றும், திருவாங்கூர் சமஸ்தானத்து மகாராஜாவிடம், ஹிந்து மதத்துக்கு அவரால் செய்யப்பட்ட அநீதிகளையும், கோவில் திறப்பு பிரகடனத்தால் ஏற்பட்ட விபரீதங்களைப் பற்றியும் விவாதிக்கும்படி"க் கூறப்பட்டிருக்கிறது,

ஸநாதனிகள் சார்பாக அனுப்பப்பட்டிருக்கும் மகஜர் மே. த. ஜகத்குருவிடம் சேர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. அவர் என்ன முடிவு செய்வார் என்று தெரியவில்லை.

மகஜர் மூலம் ஸ்ரீ சிருங்கேரி முகாமில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

"ஸ்ரீ பத்மநாபஸ்வாமி கோவில் ஏற்கனவே தீண்டாதார்களுக்குத் திறக்கப்பட்டிருக்கிறதென்றும், இன்னும் பல கோவில்கள் திறக்கப்பட்டிருக்கிறதென்றும், தாங்கள் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்யப்போவதாகத் தகவல் கிடைத்திருக்கிறதென்றும், அப்படிப்போவது, ஸநாதனிகளின் விருப்பத்துக்கு நேரிடையாக இருப்பதாகவும், இதனால் ஸநாதனிகளுக்குள் பரபரப்பு ஏற்பட்டிருப்பதாகவும், தங்களை மகாராஜா பார்க்கவரும்போது, அவருக்குப் புத்திமதிகள் கூறி, 'கோவில் திறப்பு பிரகடனத்தை' வாபீஸ் வாங்கிக்கொண்டு, கோவில்களை புனிதப்படுத்தி, சாஸ்திரப்படி நடக்கும்படி கூறவேண்டும்,' ............ என்று மகஜரில் கூறப்பட்டிருக்கிறது.

## இந்திய நாகரிகத்தின் மேன்மை.

### "ஆத்ம சக்தி" வன்மை பொருந்தியது

டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் அபிப்பிராயம்.

"கிரேக்க நாகரிகமும் மற்றும் பல புராதன நாகரிகங்களும் அழிந்துபோயின. ஆனால், அதற்கும் முன்னர் இருந்து புகழுடன் வளர்ந்து வந்த நமது தொன்மையான நாகரிகம் இன்றளவும் ஜீவித்து நிற்கிறது. அசோகனையும், அக்பரையும் ஈன்றெடுத்த நாகரிகம் இன்று கவி தாகூரையும், மகாத்மா காந்திஜியையும், கவி இக்பாலையும் தோற்றுவித்திருக்கிறது. இதில் பெருமை கொள்வது அவசியந்தான், நியாயமும் கூட"............

டாக்டர் ஸர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் டர்பனில் தமக்கு நடந்த பிரிவுபசாரக் கொண்டாட்டத்தின் போது மேற்கண்டவாறு கூறினார்.

"இத்தகைய நாகரிகம் உலகில் எந்த நாட்டு நாகரிகத்துக்கும் பின்வாங்கியதில்லை யென்பதில் நாம் கர்வம் கொள்ளுகிறோம்" என்று குறிப்பிட்டு டாக்டர் ஸர் ராதாகிருஷ்ணன் மேலும் கூறியதாவது:

"ஆனால், இதற்குத் தக்கபடி பொறுப் பொன்றும் நம் தலையில் சுமந்திருக்கிறது. ஆத்ம வளர்ச்சிக்கும் பாடு படவேண்டியதவசியம். நம் பெருமைக்கு பங்கம் நேரிடும் சங்கதிகளில் நாம் கலந்துகொள்ளலாகாது. பலாத்காரத்தில் இறங்கவே கூடாது. அவ்வாறு தவறு செய்தோமானால், நாமே நம் நாகரிகத்துக்கு துரோகிகளாகிவிடுவோம்.

"தென்னாபிரிக்காவுக்கு இன்னொரு பெருமை. இந்த நாட்டில் தான் காந்திஜீயின் சத்யாக்கிரஹம் உருவெடுத்தது. காந்திஜியை தென்னாபிரிக்காதான் இந்தியாவுக்கு அளித்தது என்று கூடக்கூறலாம். பலாத்காரத்தை பலாத்காரத்தாலேயே அடக்க முயலுவது தவறு என்ற கொள்கை அவருடையது. எக்காலத்திலும் மிருக பலத்தைவிட ஆத்மசக்தி, வன்மை பொருந்தியது என்பதை நீங்கள் உணர வேண்டும்".

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# செய்தித் திரட்டு.

### விற்பனைவரி மசோதா

விற்பனைவரி மசோதா மேமீ 13தேதி சட்டசபையில் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது. மசோதா சட்டமாயிற்றெனத் தலைவர் அறிவித்தார். 106 ஓட்டுகள் சாதகமாகவும் 26 ஓட்டுகள் பாதகமாகவும் மசோதாவுக்குக் கிடைத்தன.

விற்பனைவரி மசோதாவில் குறிப்பிட்டிருந்த வரி விகிதத்தைக் குறைக்க சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை. இதனை ஆக்ஷேபித்து சட்டசபையில் இரண்டொரு அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு சில 'எதிர்க்கட்சிகள்' சட்டசபையிலிருந்து வெளியேறினர். ஐரோப்பியர்கள் வெளியேறவில்லை.

### மகாகனம் டாக்டர் சாஸ்திரியார்

அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யக்ஷர் மகாகனம் டாக்டர் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாருக்கு 12உ கட்டிக்காக ரணசிகிச்சை செய்யப்பட்டது. அவர் குணமடைந்து வருகிறார்.

### வேலூரில் அமைதி.

வேலூரில் சமீபத்தில் ஹிந்து-முஸ்லீம் கலவரம் நடந்தது. அதனை ஒட்டிப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் விசாரணை நடத்திவருகிறார்கள். கலவரம் அடக்கப்பட்டு இப்போது வேலூரில் பூர்ண அமைதி நிலவிவருகிறது. கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் போலீஸ் பந்தோபஸ்து இருந்துவருகிறது.

### வீணை தனம்மாள்

"காலம்சென்ற வீணை தனம்மாள் ஞாபகார்த்தமாக ஒரு ஞாபகச்சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று" சென்ற ஞாயிற்றுக்கிழமை லேடி வெங்கடசுப்பராவ் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பணம் வசூல் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

### ஹைதராபாத் சிறையில் 1500 பேர்கள்

இதுவரையில் 1500 பேர்கள் ஹைதராபாத் சத்யாக்ரஹத்தை ஒட்டி சிறை சென்றிருக்கிறார்கள். இவர்களில் பலர் கசையடித் தண்டனைக்குட்பட்டார்கள். சிலர் சிறையில் பலவித இன்னல்களுக்குட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேமீ 5000 தொண்டர்களை ஹைதராபாத்துக்கு அனுப்புவதென்று சர்வதேச ஆரிய லீக் தீர்மானித்திருக்கிறது. ஐக்கிய மாகாணத்திலிருந்து 1000 தொண்டர்களும், வங்காளத்திலிருந்து 300 பேர்களும், பீஹார், சிந்து, சென்னை, பம்பாய், ஒரிசா, முதலியவிடங்களிலிருந்து 3700 பேர்களும் ஹைதராபாத்துக்குச் செல்வார்களாம். ஹைதராபாத் சமஸ்தானாதிபதி இன்னும் கண்திறக்காமலிருக்கிறார்கள்.

### "அல்பேனியா தினம்"

'அல்பேனிய அரசரை' இதாலியர்கள் அடித்து விரட்டிவிட்டார்கள். முடிதுறந்த அல்பேனியா அரசரிடம் அனுதாபம் காட்டுவதற்காக மேமீ 20உ 'அல்பேனியா தினம்' ஆகக் கொண்டாடும்படி காக்சார் இயக்க ஸ்தாபகரான அலமா இனயத்துல்லா மஷ்ரக்கி தேசமெங்குமுள்ள காக்சார்களுக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார். அன்று மாலையில் பொதுக்கூட்டங்களில் துக்கமாகப் பேசி 'கண்ணீர்விடவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### டாக்டர் தாகூர்.

மேமீ 9தேதி டாக்டர் ரவீந்திரநாத தாகூருக்கு 79வது பிறந்ததினமாகும். உலகப் பிரசித்திபெற்ற கவியரசர் தாகூருக்கு அன்று உலகத்தின் பல பாகங்களிலிருந்துப் பாராட்டுச் செய்திகள் வந்து குவிந்தன. நாடெங்கும் பாராட்டுக்கூட்டங்கள் நடந்தன. ஒரிஸாவில் 5000 பேர்கள் கூடிய ஒரு மாபெருங் கூட்டத்தில் கவியரசருக்கு ஒரு பணமுடிப்பு அளிக்கப்பட்டது. பல ஸ்தாபனங்களின் சார்பாக உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஒரிசா பிரதம மந்திரி கனம் விஸ்வநாததாஸ், இதர மந்திரிகள் யாவரும் தாகூரைப் பாராட்டினார்கள்.

### "வெர்னகுலர்" பதம் ஒழிந்தது.

மேமீ 9தேதி முதல் "வெர்னகுலர்" (இந்த வார்த்தைக்கு அடிமை பாஷை என்று அர்த்தம்) என்னும் வார்த்தையைச் சர்க்கார் கடிதப் போக்குவரத்துகளில் சாத்தியமான வரையில் உபயோகிக்காமலிருக்க திருவாங்கூர் அரசாங்கத்தினர் முடிவு செய்திருக்கிறார்கள். எல்லா இலாகா அதிகாரிகளுக்கும் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஹைதராபாத் சத்தியாக்ரஹம்.

மேமீ 10தேதிமுதல் பம்பாய், கல்கத்தா, மீரட், பாரிஸ்லி, குல்பர்கா, நாகபூர் முதலிய விடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ஆரியத் தொண்டர்கள் ஹைதராபாத்தில் சத்தியாக்ரஹம் செய்ய வேண்டி ஹைதராபாத்துக்கு வந்து சேர்ந்தனர்

### தியாகிகள் தினம்.

மேமீ 21தேதியை "அகில இந்திய ஹைதராபாத் தியாகிகள் தினமாக"க் கொண்டாடவேண்டுமென்று ஆரிய சத்யாக்ரஹ ஸமிதியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

### டாக்டர் மூஞ்ஜேயின் அறிக்கை.

ஹிந்து மகாசபையின் பிரபலத் தலைவரும், மத்திய சட்டசபை அங்கத்தினரும், பான்சலே ராணுவ சர்வகலாசாலை ஸ்தாபகருமான டாக்டர் பி. எஸ். மூஞ்ஜே ஹைதராபாத் சத்யாக்ரஹத்தைப்பற்றிக் கூறுவதாவது:—

"ஹிந்துக்கள் சலியாமல் போராடவேண்டும். ஹைதராபாத்தில் முஸ்லிம் பிரஜைகளுக்குண்டான பிரஜா உரிமையானது ஹிந்துக்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காகவே போராட்டம் நடந்துவருகி(ற)து. சமஸ்தானத்தில் பெரும்பான்மைவகுப்பினர் வெளியிட்ட கோரிக்கைகள் நியாயமானவையெனக் கருதப்பட்டால் ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள ஹிந்துபிரஜைகளின் கோரிக்கைகளும் நியாயமானவைதான் !!........என்று குறிப்பிட்டார்.

### சமஸ்தானாதிபதிகள் மகாநாடு

திருத்தியமைக்கப்பட்ட சமஷ்டிப் பிரவேச சாசனத்தைப்பற்றியும், அது சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகளைப்பற்றியும் விவாதிக்க வேண்டி ஜூன்மீ 10உ பம்பாயில் அகில இந்திய சமஸ்தானாதிபதிகள் மகாநாடு கூடும். மகாநாடு 3 தினங்கள் நடைபெறும்.

### புதிய நீதிபதி

சென்னை மாகாண உயர்நீதி மன்றத்தின் (ஹைகோர்ட்) நீதிபதியான கனம் வ. ரே. இங் துரை ரஜாவில் செல்லுகிறார் அவர் ஸ்தானத்தில் சென்னை நகர சிவில் கோர்ட் பிரதம நீதிபதி ஸ்ரீ குன்ஹிராமன் ஆக்ட் செய்யும்படி. மே. த. வைஸிராய் பிரபுவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜூலை 17தேதி முதல் நவம்பர்மீ 23தேதி வரை கனம் குன்ஹிராமன் புதிய வேலையைப்பார்ப்பார்.

### கடுங்கோடை

சென்னையில் மேமீ 10உ 106-3° டிகிரி உஷ்ணமாக இருந்தது. பகலில் உஷ்ணக் காற்று பலமாக அடித்தது.

### வழக்கு வாபீஸ்

அண்ணாமலை சர்வகலாசாலையில் சில மாதங்களுக்குமுன் நடைபெற்ற கலவரங்களைப்பற்றி நேயர்கள் அறிந்திருப்பார்கள். அதில் முக்கிய பங்கெடுத்துக்கொண்ட தண்டாயுதம் என்ற மாணவர்மீது வழக்குத் தொடர்ந்திருந்ததைப் போலீசார் வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள். மற்றொரு மாணவர் மீதிருந்த வழக்கும் நிறுத்திக் கொள்ளப்பட்டது.

### ஆந்திரா-சென்னை சர்வகலாசாலைகள்

ஆந்திர சர்வகலாசாலை 'பட்டம்' அளிப்பு விழாவில் ஹைதராபாத் சமஸ்தானத்து பிரதம மந்திரி மகாகனம் டாக்டர் ஸர் அக்பர் ஹைதாரி பிரசங்கம் செய்வார். சென்னை சர்வகலாசாலை 'பட்டம்' அளிப்பு விழாவில் கல்விமந்திரி கனம் வார்தி பிரஸங்கம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார்.

### சுவாமிமலைக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி விஜயம்.

சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைத் தரிசிக்கவேண்டி ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி தனது குடும்பத்துடன் 14—5—39 இரவு 8 மணிக்கு சுவாமிமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு அர்ச்சனை செய்துவிட்டுத்திரும்பி குடந்தைக்குச் சென்றார். ஸ்ரீ. எஸ். சத்திய மூர்த்தியுடன் "ஆர்ய தர்மம்" உதவி ஆசிரியர், ஸ்ரீமான் வல்குடி எல். எஸ். சுப்பிரமணியயரும் சுவாமிமலைக்கு வந்திருந்தார்.



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# மூகபஞ்சசதீ

## மந்தஸ்மித சதகம்.

40. ஜ்யோத்ஸ்னா காந்திபிரேவ நிர்மலதரம் நைசாகரம் மண்டலம் |
ஹம்ஸைரேவ சரத்விகாஸ ஸமயே வ்யாகோசம் அம்போருஹம் |
ஸ்வச்சைரேவ விகஸ்வரை: உடுகணை: காமாக்ஷி! பிம்பம் திவ: |
புண்யைரேவ ம்ருதுஸ்மிதை ஸ்தவமுகம் புஷ்ணாதி சோபா பரம்||

காமாக்ஷி! காமாக்ஷியே, நிர்மலதரம் - மிகவும் பரிசுத்தமான நைசாகரம் மண்டலம் - சந்திர மண்டலமானது. ஜ்யோத்ஸ்னா காந்தி பிரேவ - நிலா வெளிச்சத்தால் மாத்திரம் (சோபிக்கும்). சரத் - சரத் காலமானது. ஹம்ஸைரேவ - ஹம்ஸங்களாலேயே (சோபிக்கும்) வ்யாகோசம் - மொட்டா யிருக்கிற - அம்போருஹம் - தாமரைப்பூவானது, விகாஸ ஸமயேவ - மலரும் காலத்திலேயே (சோபிக்கும்).

திவ:— ஆகாசத்தின், பிம்பம் - ரூபமானது. ஸ்வச்சை:— நிர்மலமான. விகஸ்வரை:— பிரகாசிக்கிற. உடுகணைரேவ - நக்ஷத்திரக் கூட்டங்களாலேயே (சோபிக்கும்) தவ - உன்னுடைய. முகம் - முகமானது. புண்யை:— பரிசுத்தமான. ம்ருதுஸ்மிதைரேவ - மந்தஹாஸத்தினால் மாத்திரமே. சோபாபரம் - அதிககாந்தியை. புஷ்ணாதி - விருத்தி செய்கிறது.

41. மானக்ரந்தி விதுந்துதேன ரபஸாதாஸ்வாத்ய [மானே |
நவப்ரேமாடம்பரபூர்ணிமா ஹிமகரே காமாக்ஷி! [தே தத்க்ஷணம்
ஆலோக்ய ஸ்மித சந்த்ரிகாம் முஹுரிமாமுன் [மீலனம் ஜக்முஷீம் சேத:
சீலயதே சகோர சரிதம் சந்த்ரார்த்த சூடா [மணே:|

காமாக்ஷி! காமாக்ஷியே. நவப்ரேமாடம்பரபூர்ணிமா ஹிமகரே - புதிய அன்பென்கிற பூர்ணமாஸ சந்திரனானவன், மானக்ரந்தி விதுந்துதேன — அபிமான மென்கிற ராகுவால். ரபஸாத்- வேகமாக ஆஸ்வாத்யமானே - விழுங்கப்படும் போது. தத்க்ஷணம் — உடனே. முஹு:— அடிக்கடி. உந்மீலனம் — விருத்தியை. ஜக்முஷீம் - அடைகிற. தே - உனது. இமாம் - இந்த. ஆலோக்ய - ஸ்மித சந்த்ரிகாம் - புன்சிரிப் பென்ற நிலாவை. பார்த்து. சந்த்ரார்த்த சூடாமணே:- அர்த்த சந்திரனை சூடாமணியாகக் கொண்ட பரமசிவனுடைய. சேத:- மனமானது. சகோர சரிதம் - சகோர பக்ஷியின் நிலைமையை. சீலயதே - பரிசயம் செய்து கொள்ளுகிறது.

42. காமாக்ஷி ஸ்மித மஞ்ஜரீம் தவ பஜே யஸ்யா
ஸ்த்விஷா மங்குரா, ஞ்பீனஸ்தன பானலாலஸதயா நி: சங்கமங்கே சய: |
ஊர்த்வே வீக்ஷ்ய விகர்ஷதி ப்ரஸ்ருமரா நுத்தாம
யா சுண்டயா ஸூனுஸ்தே பிஸசங்கயாசு குஹநா தந்தாவல க்ராமணீ: |

காமாக்ஷி! காமாக்ஷியே! பீனஸ்தனபான லாலஸதயா- ஸ்தன்ய பானம் செய்ய வேண்டு மென்கிற ஆசையால். நி: சங்கம்- ஸங்கோசமில்லாமல் அங்கேசய:— மடியில் படுத்துக்கொண்டிருக்கிற. தே- உனது. ஸூனு:— குழந்தையான. குஹநா தந்தாவலக்ராமணீ:— மாயா கஜமுகனான விக்னேச்வரன். ஊர்த்வே, வீக்ஷ்ய— மேலே அண்ணாந்துபார்த்து, ப்ரஸ்ருமரான்-பரவுகிற்கிற, யஸ்யா: - த்விஷாம் - அங்குரான் - எந்த புன்சிரிப்பின் காந்தி கிரணங்களை பிஸசங்கயா - தாமரைத்தண்டு என்கிற சந்தேஹத்தின்மேல், உத் தண்டயா சுண்டயா - நீண்ட தும்பிக்கையினால், ஆசு - வேகமாக, விகர்ஷதி - இழுக்கவிரும்புகிறதோ, தாம் - அத்தகைய, தவ - உன்னுடைய, ஸ்மிதமஞ்ஜரீம் - புனசிரிப்பு ஸமூஹத்தை, பஜே - ஸேவிக்கிறேன்.

43 காடாச்லேஷ விமர்த்த ஸம்ப்ரம வசாத் உத்தாம முக்தா குணப்ராலம்பே-
குச கும்பயோர் விகளிதே தக்ஷத்விஷோ வக்ஷஸி |
யா ஸக்யேத பிநஹ்யதி ப்ரசுரயா பாஸா ததீயாம் த சாம்
ஸா காமாக்ஷி! தவாஸ்ய சேதஸி கதத்வச்சா [ஸ்மிதாம்சு ச்சடா |

காமாக்ஷி! காமாக்ஷியே, குசகும்பயோ: - ஸ்தனங்களில், காடாச்லேஷ விமர்த்தஸம்ப்ரமவசாத் - இருக ஆலிங்கனம் செய்யும்போது ஏற்பட்ட பரபரப்பினால், உத்தாம முக்தாகுணப்ராலம்பே - கம்பீரமான முத்துமணிமாலையானது, தக்ஷத்விஷ: - பரமசிவனுடைய, வக்ஷஸி - மார்பில், விகளிதே - அறுந்து நழுவிய போது, யா - எந்தபுன்சிரிப்பானது, ஸக்யேந - ஸ்நேகக்கட்டுப் பாட்டைக்கொண்டு, ப்ரசுரயாபாஸா - தனது உயர்ந்த காந்தியினால், ததீயாம் தசாம் - அந்த முத்துமாலையினுடைய நிலைமையை - பினஹ்யதி - மறுபடி உண்டாக்குகிறதோ, ஸா - அப்படிப்பட்ட, அச்சா - பரிசுத்தமான, த்வ - உனது, ஸ்மிதாம்சுச்சடா - வெண்மையான புன்சிரிப்புக்காந்தி ஸமூஹமானது, அஸ்ய - இந்த என்னுடைய, சேதஸி - மனதில், கதது - விளங்கட்டும்.

44. மந்தாரே தவ மந்தர ஸ்மித ருசோ மாத்ஸர்ய [மாலோக்யதே |
காமாக்ஷி! ஸ்மர சாஸனேச நியதம் ராகோத [யோ லக்ஷ்யதே |
சாந்த்ரீஷு த்யுதி மஞ்ஜரீஷு ச மஹான் த்வேஷாங்குரோ த்ருச்யதே
சுத்தாநாம் கதமீத்ருசீ கிரிஸுதே சுத்தா தசா கத்யதாம் ||

கிரிஸுதே-பர்வத ராஜபுத்திரியான-காமாக்ஷி! காமாக்ஷியே தவ-உனது. மந்தஸ்மிதருச:- அழகிய புன் சிரிப்பின் காந்திக்கு மந்தாரே - மந்தார புஷ்பத்தினடம். மாத்ஸர்யம்-பொறாமையானது ஆலோக்யதே- இருக்கிறதாகக் காணப்படுகிறது. ஸ்மர சாஸனே ச- பரமசிவனைப்பார்க்கும் போதும், நியதம் - எப்போதும். ராகோதய:- ஆசையிருப்பதாக லக்ஷ்யதே-காணப்படுகிறது. சாந்த்ரீஷு சந்திரனுடைய தான. த்யுதிமஞ்ஜரீஷு காந்தி ஸமூஹங்களிலோ வென்றால் மஹான் பெருத்த, த்வேஷாங்குர:- கோபக்குறியிருக்கிறதாக த்ருச்யதே-காணப்படுகிறது. சுத்தாநாம்- பரிசுத்த காந்தியுள்ளவர்களுக்கு ஈத்ருசீ-இப்பேர்பட்ட. அசுத்தா தசா-சுத்தமில்லாத நிலைமையானது. கதம்—எப்படியுண்டாயிற்றோ- கத்யதாம்- சொல்லவேண்டும்.

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸு வைகாசி-மீ 4உ

# விற்பனைவரி மசோதா சட்டமாயிற்று.

சென்னை ஜனப்பிரதிநிதி ஸபையில் கனம் பிரதம மந்திரியால், ஆஜர் செய்யப்பட்டதும், இம் மாகாணத்தில் பெரிய அமளியை உண்டாக்கியதுமான விற்பனை வரி மசோதாவானது தனிக் கமிட்டியின் திருத்தங்களையனுஸரித்து நிறைவேற்றிவைக்கப்பட்டுவிட்டது. ராஜாங்க ஸபையிலும் ஸம்பிரதாய முறையில் விவாதங்கள் நடந்தபின் இது நிறைவேறிவிடுவது வெகு ஸுலபமே. கனம் ஆசாரியர், இந்த மசோதா விஷயமாக பலத்த எதிர்ப்பு இருந்ததையும், அதனுல், மந்திரிஸபை நிலைமையும் காங்கிரஸின் பலமும் பாதிக்கப்படக்கூடுமென்பதை நன்கு அறிந்திருந்தும், எதிர்கக்ஷியினர் வெளியேற்ற விழாமூலம் ஒத்துழையாமை செய்திருந்தும், இவைகளைப் பொருள்படுத்தாமல் வெகு தைர்யத்துடன் தன் கார்யத்தை சாதித்துக்கொண்டார். இதை அவருடைய உறுதியென்று வர்ணிப்பதா, அல்லது பிடிவாதமென்று சொல்வதாவென்று நமக்கு விளங்கவில்லை.

பெருத்த ஆக்ஷேபத்திற்கு இடமான இந்த வரியை இப்போது விதிக்க எவ்வித நிர்ப்பந்தமோ அவஸர ஸந்தர்ப்பமோ நேரவில்லையென்பதை கனம் ஆசாரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வருஷ வரவு செலவு திட்டமானது சற்றேறக்குறைய ஸரிப்பட்டுவிட்டது. 17 லக்ஷம் ரூபாய் துண்டுவிழுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் தொகையும் ஆக்ஷேபமற்ற சிறிய வரி இனங்களால் ஸரிப்பட்டுவிடுமென்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் கோடிக் கணக்கில் வருமானம் கொடுக்கக்கூடிய புதிய வரியொன்றை இப்போதுவிதிக்க நமதுமாகாணத்தில் எவ்வித ஆபத்தும் நேர்ந்து விடவில்லை. நேரக்கூடியதாயுமில்லை. பணமுடை ஏற்பட்டகாலத்திலும், பஞ்சம், யுத்தம் போன்ற நெருக்கடி காலத்திலும், அவஸரமாக வரிவிதித்து ஸர்க்கார் பணம் பெறுவது அவச்யமென்று ராஜநீதிக்கு ஒத்தது. இப்போது அந்த மாதிரி நிலைமை ஒன்றுமில்லாமலிருக்கையில் அஸந்தர்ப்பமாக இந்த வரியை விதிக்க முன்வந்தது புத்திசாலித்தனமாகாது. இந்த வரியானது காங்கிரஸ் கொள்கை காரணமாகவே ஜனங்களுக்கு விதிக்கப்படுகிறது அதாவது, மதுவிலக்கை ஏற்படுத்துவதாலுல் அதனுல் ஏற்படக்கூடிய வருமான நஷ்டத்தை வேறுவழியில் ஈடுசெய்துகொள்ளவேண்டும். அதற்காகவே இந்த வரி விதிக்கப்படுகிறதேயல்லது ஸர்க்காரின் பண நெருக்கடி காரணமாகவல்ல.

மதுவிலக்கு காங்கிரஸ் கொள்கையாயிருப்பது உண்மை. எலெக்ஷன் உறுதிமொழியிலும் இது பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது வாஸ்தவமே. ஆயினும் காங்கிரஸ்காரர் ஸர்க்கார் நிர்வாஹமேற்று 2 வருஷங்களுக்குள்ளேயே பூர்ண மதுவிலக்குத் திட்டத்தைப் புகவிடுவது பெரிய தீங்காக முடியுமென்று பல அரசியல் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மாகாணத்தின் பெரிய வருவாயை மதுவிலக்குப் பாதிப்பதாயிருப்பதால் சர்க்கார் மிகுந்த ஜாக்ரதையுடன் இதில் பிரவேசிக்கவேண்டுமென்பதை உணரவில்லை. மேலும் குடிப்பழக்கமுள்ள சில லக்ஷம் ஜனங்களுடைய பாபத்திற்காக குடிப்பழக்கமில்லாத கோடிக்கணக்கான ஜனங்களுக்குப் புதிய வரிவிதித்து தண்டிப்பது ராஜ்ய நீதிக்கு ஏற்றதாயில்லை. இது "கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோலிருக்கிற"தென்று டாக்டர் ஸாப்ரு கண்டிக்கிறார். மதுவிலக்குக் கொள்கை வெற்றி தாராதென்றும் ஸர்க்கார் வழ்மையாகிவிடுமென்றும் டாக்டர் ஸாப்ரு எச்சரிக்கிறார்.

ஆகையால் மிகுந்த ஆக்ஷேபத்திற்கிடமானதும், ஸர்க்காரின் பொருளாதார நிலைமையில் புரட்சியுண்டாக்கக் கூடியதுமான மதுவிலக்குக் கொள்கைக்காகப் பொது ஜனங்களை கஷ்டத்திற்குள்ளாக்குவது தர்மமாக இல்லை.

மேலும் இந்த மசோதாவைப்பற்றிய பலாபலன்களை மந்திரிகளே அறிந்துகொள்ளவில்லையென்று தெரிகிறது. இது யார் யாரைப் பாதிக்குமென்றோ, எவ்வளவுதொகை இந்த வரிமூலம் கிடைக்குமென்றோ கனம் மந்திரிகள் கூட அறிந்துகொள்ளவில்லை. மந்திரிகளுக்கு, எதிர்கக்ஷியாரும் கேவலம் ஊஹ்யங்களை வைத்துக் கொண்டே மேம்போக்காக வாதப் பிரதிவாதம் நடத்தியிருக்கிறார்களேயன்றி ஒருவரும் திட்டமாக விஷயங்களை குறிப்பிட முடியவில்லை. அவஸர அவஸரமாக இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதே இதற்கு காரணமாகும். ஸரியான புள்ளி விவரங்களை சேகரித்தும், இந்த வரி அநுஷ்டானத்திலுள்ள இதர தேச அநுபவங்களை அறிந்துகொண்டும், பொது ஜனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் போதிய அவகாசம் கொடுத்து நிலைமையை விளக்கி ஸமாதானம் கூறியும் ஆற அமர இக்கார்யத்தை ஏன் செய்யக்கூடாதென்பதற்கு கனம் மந்திரி எவ்வித ஸமாதானமும் சொல்ல முடியாது. வியாபாரிகள் ஆக்ஷேபித்தால், இந்த பண்டம் வாங்கு வோரையே பாதிக்கு மென்றும் பொது ஜனங்கள் கேட்டால், இது வியாபாரிகளையே பாதிக்கு மென்றும் முரண்பட்ட ஸமாதானத்தைக் கூறிக் கொண்டு திண்டாடுவதற்கும் இந்த அவஸரக்கோலமே காரணமல்லவா?

ஸர்க்கார் நிர்வாகம் நடத்த வரி விதிப்பதை நமது தர்ம நூல்களும் ஆதரிக்கின்றன. ஆயினும் அந்த வரிப்பணமானது புண்மடங்காகப் பெருகி பிரஜைகளின் நன்மைக்கே திருப்பிச் செலவிடவேண்டுமென்று ராஜநீதி சாஸ்திரம் கூறுகிறது. கனம் ஆசாரியர் இந்த தத்வத்தை அநுஸரித்து இந்த வரிப்பணத்தை பிரஜைகளுக்காகவே செலவிடம் போவதாகக் கூறுகிறார். இந்த வரியால் மூன்றரை கோடி ரூபாய் கிடைக்குமென்று சிலரும், நான்கு கோடி, முப்பது கோடியென்று வேறு சிலரும் கணக்கிடுகிறார்கள். அது எப்படியாயினும் அந்தத்தொகையாவற்றையும் மதுவிலக்குக்காகச் செலவிடுவதைப் பொதுஜனங்கள் ஏற்கமாட்டார்கள். இம்மாகண வருமானம் ஸுமார் 17 கோடியில் 8 கோடி ரூபாய் வரையில் விவஸாயிகள் கொடுக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகை கொடுத்தும், அவர்களுக்கு ரோட் வசதியோ, வெளிச்சம், குடிஜலம், வேறு சுகாதார வஸதிகளோ ஒன்றும் கிடையாது. விவஸாயத்திற்கு வேண்டிய பாசன வடிகால் வஸதிகளாவதுண்டா? ஒருவித பிரதிப்ரயோஜனமில்லாமல் ஏராளமான வரியைக் கொடுத்துவிட்டு சோற்றுக்குத் தவிக்கிறார்கள். இவர்களுடைய வரிப்பளுவானது அநியாயமானதென்று ஸர்க்காரே ஒப்பிய விஷயம். இதற்கு நீண்டகாலமாகப் பரிஹாரம் தேட முயற்சிக்கப்படுகிறது. காங்கிரஸும் இதில் அக்கரை காட்டியிருக்கிறது. எலெக்ஷன் அறிக்கையில் நமது மாகாண விவஸாயிகளுக்கு உறுதியும் கூறப்பட்டிருக்கிறது, இப்போதுள்ள நிலைமையில் மதுவிலக்கைவிட விவஸாயியின் குறை நிவர்த்தியே முக்யமென்று எங்கும் உணரப்பட்டிருக்கிறது. ஆதலால் கனம் ஆசாரியர் இந்த வரிமூலம் கிடைக்கும் தொகையை விவஸாயிகளுக்கும் உபயோகித்து வரிப்பளுவைக் குறைக்க முன்வருவாரானல், இப்போது அவர்மீதும், காங்கிரஸ் கக்ஷிமீதும் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பெரிய அதிருப்தியானது சிறிதளவாவது சமனமடையக் கூடுமென்று நினைக்கிறோம்.

## குறிப்புகள்.

### ஸ்ரீ ஸத்தியமூர்த்தியின் கோரிக்கை.

குடந்தையில் நடந்த அரசியல் மஹாநாட்டில் தலைமை வஹித்த ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஸநாதநிகள் காங்கிரஸில் சேர்ந்து ஒத்துழைக்கும்படி கோரினர். குடந்தையில் இத்தகைய கோரிக்கையைச் செய்வது அவச்யமென்று அவர் நினைத்தது நியாயமே. இப்போது இந்து ஸநாதன இயக்க முன்னணியில் நிற்கும் கனவான்கள் சிறிது காலத்திற்கு முன் வரையில் காங்கிரஸ் வேலைகளில் சிரத்தையுடன் ஈடுபட்டு அதை வெகுகவுரவமாக நடத்திப் புகழ்பெற்றவர்களென்பது ஸ்ரீ ஸத்யமூர்த்திக்குத் தெரிந்ததே. இந்நகரைப் போல் மாகாணத்தில் வேறு பலவிடங்களிலும் ஸநாதநிகள் காங்கிரஸுக்குப் பின்பலமாக இருந்துவந்திருக்கிறார்கள். காங்கிரஸின் சரித்திரத்தைக் கவனித்தால் ஆதிமுதல் அநேக தார்மிகர்கள் காங்கிரஸை வலுப்படுத்த எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தை தெரியவரும்.

அப்படியிருக்க இப்போது தார்மிகர்கள் விலகி நிற்கவும், அவர்களை ஒத்துழைக்கவும் ஸ்ரீ ஸத்யமூர்த்தி போன்றவர்கள் கேட்டுக்கொள்ளவும் நேர்ந்ததற்குக்காரணமென்ன? அந்த வேற்றுமையை நிவர்த்தி செய்யாத வரையில் ஸநாதநிகளை காங்கிரசுக்கு அழைப்பதில் அர்த்தமுண்டா?

ஸர்வ ராஜ்ய ஸ்தாபனமாக இருந்து வந்த காங்கிரஸானது சில வருஷங்களாக ஹிந்துக்களின் மத விஷயத்தில் புகுந்து சீர்திருத்தம் செய்ய புறப்பட்டிருப்பது தகுதியா? கல்கத்தாவில் ஸ்ரீ தாதாபாய்நௌரோஜி தலைமையில் கூடிய முதலாவது காங்கிரஸிலேயே, மத விஷயங்களில் காங்கிரஸ் பிரவேசித்து அபிப்பிராயத்தை கூறக்கூடாதென்று அவர் வெகு பலமாக எடுத்துரைத்திருக்கிறார். அந்தக்கொள்கையையே காங்கிரஸ் பின் பற்றி வந்தது. ஆசார சீர்திருத்த வாதிகள் தனி ஸபையே நடத்தி வந்தார்கள். ஆயினும் ஸ்ரீ காந்திஜி காங்கிரஸில் புகுந்தபிறகு அநாஹிந்துக்களின் மத விஷயத்தில் நிர்தாக்ஷிண்யமாகத் தலையிட ஆரம்பித்து விட்டது. இதைப்பற்றிய விவரங்கள் பலரும் அறிந்ததே.

ஸநாதநிகள், தேசத்தில் தற்போது பெரும்பான்மையோரா, சிறுபான்மையோரா என்பதைப்பற்றி கவலையில்லை. எப்படியிருந்தாலும், அவர்களுடைய மனச்சாக்ஷிபடியும் சாஸ்திர விதிப்படியும், மத தர்மத்தை அநுஷ்டிக்க உரிமையிருக்கவேண்டாமா? இந்த ஸாதாரண பிரஜா உரிமையைக்கூட காங்கிரஸானது தார்மிகர்களுக்கு வழங்க இஷ்டப்படவில்லை. பிரஜா உரிமைகளை ஸ்தாபிக்க வந்திருப்பதாக அது பெருமை பேசுகிறது. ஆயினும் சட்ட மூலமான நிர்ப்பந்தங்களால் மத உரிமையைப்பறிக்க காங்கிரஸ் துணிந்து விட்ட பிறகுஅத்துடன் தார்மிகர்கள் ஒத்துழைப்பதெப்படி?

ஹிந்துக்களின் மத உரிமையைப் பாதிக்கும் காங்கிரஸ், மஹம்மதிய கிறிஸ்த்வ வகுப்பினரின் மத விஷயத்தில் பிரவேசிக்கப்பயப்படுகிறது. அந்த மதங்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கவும் வாக்குறுதி கொடுக்கிறது. காரச்சி தீர்மானம் மஹம்மதியர்களைப் பற்றிய வரையில் தான் அர்த்தமுள்ளது.

ஆசாரத்திருத்தக்காரர்கள் நம் தேசத்தில் தங்கள் கொள்கைகளை பிரசாரம் செய்வதை ஸநாதனிகள் தடுக்கவில்லை. ஸநாதனிகள் கோருவதெல்லாம் வெகு சிறிய விஷயமே. அதாவது எந்த மதச்சீர்திருத்தத்தையும் சட்டமூலமாகச் செய்யவேண்டாமென்பதே. இப்படிச் செய்வது மத உரிமையைப்பாதிப்பதல்லவா? ஆதலால் சட்டமூலமான மதச்சீர்திருத்த நிர்ப்பந்தத்தை காங்கிரஸ் செய்யாமலிருப்பதுடன், அதை எதிர்ப்பதாயும் உறுதி கூறினல் ஸநாதனிகள் காங்கிரஸிடம் மதிப்புவைக்கக்கூடும். ஸநாதனிக்கு வேண்டுகோள்விடுவித்த ஸ்ரீ ஸத்யமூர்த்தி, காங்கிரஸுக்கும் ஹிந்துக்களின் மத உரிமையைக் காத்துக்கொடுக்கும்படி செய்ய தமது செல்வாக்கை உபயோகித்து ஆலோசனை கூறுவாரா?

## குடந்தையில்

### ஸ்ரீ பாகவத உபந்யாஸம்.

பிரமாதி ஸு வைகாசிமீ 10உ புதன் கிழமை (24—5—39) கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடம் ஜகத்குரு சங்கராசாரியாள் மடத்தில் விக்கிரமபாண்டியம் பிரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களால் உபன்யாஸம் செய்துவரும் ஸ்ரீமத் பாகவதம் ஸமாப்திபெறும். அன்று காலை மடத்தில் பூஜையும், பிராம்மண ஸந்தர்ப்பணமும், இரவு 7 மணிக்கு பட்டாபிஷேகமும் நடைபெறுவதால், ஆஸ்திகபக்த மகா ஜனங்கள் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ஒ-நி)

## திருப்பூந்துருத்தி.

### சப்தஸ்தானம்.

சமீபத்தில் நடந்த திருவையாறு சப்தஸ்தான உற்சவத்தன்று ஷெ சப்தஸ்தான ஸ்தலங்களில் கீர்த்திபெற்று விளங்கக்கூடிய திருப்பூந்துருத்தி என்னும் கிராமத்தில் ஈஸ்வர அவதாரமே போன்று விளங்கும் ஸ்ரீ நாராயணதீர்த்த குருஸ்வாமி அவர்கள் ஆலயத்தில் நிரளான பஜனை பக்தகோடிகளுக்கும், ஏழை மக்களுக்கும் ஜாதிமதபேதமன்னியில் பிரசாதங்கள் நவீன முறையில் வழங்கப்பட்டது. ஆலயத்தின் தர்மகர்த்தா ஸ்ரீ அரியநாயக முதலியார் அவர்கள் விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.



## "பத்ரிநாத் ஸ்ரீ சங்கராசாரியார்"

## இவருக்குப் பீடமுண்டா?

### "ஹிந்துக்களின் சார்பாகப் பேச இவருக்கு உரிமையில்லை"

### "தர்மராஜ்யா" பத்திரிகை கண்டிக்கிறது

"ஹிமாசலம், பத்ரிநாத் ஸ்ரீ ஜோதிர்மடம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியார் சுவாமிகள்", என்று காங்கிரஸ்காரர்களும், ஆர்ய சமாஜிகளும் ஒரு குறிப்பிட்ட "சன்னியாசியை" அழைத்துவருகிறார்கள்.

அவரைப் பத்திரிகைகள் பிரமாதமாக எழுதுகின்றன.

"இவர் யார்? எப்பொழுது வந்தார்? இவருக்குப் பீடமுண்டா? யார் இவருக்கு அதிகாரம் கொடுத்தார்கள்?...... இவர் செய்துவரும் வேலை என்ன?"........என்ற கேள்விகளை இப்பொழுது பிரபல ஸநாதன ஆங்கில வாரப்பத்திரிகையான "தர்மராஜ்யா" கேட்கிறது.

"அச்சம் தயை தாக்ஷண்யமின்றி," ஜோதிர் மடத்துக்கு சென்ற 150 வருடங்களாக ஒரு பீடாதிபதி கூட வந்ததில்லை. அந்த பீடத்துக்கு ஒரு தலைவரும் கிடையாது. ஜோதிர்மடம் இப்பொழுது கிடையாது. அதுபோன்ற மடம் எங்கு இருக்கிறதென்று 'தர்மராஜ்ய'ப் பத்திரிகை எழுதுகிறது.

ஹிந்து மகாசபை டாக்டர் குர்கோட்டியை "ஜெகத்குரு சங்காசாரியார்" என்று சிறிதுகாலம் அழைத்துவந்தது.

இப்பொழுது ஆர்ய சமாஜ்காரர்கள் தங்கள் சுயகாரியக்களுக்காக இந்த "ஜோதிர் மட அதிபதியை" சிருஷ்டித்திருக்கிறார்கள்.

நிஜாம் சமஸ்தானத்து அதிகாரிகளுக்கு ஒரு விக்ஞாபனம். "தானே முன்னணிக்கு வந்த இந்தப் போலி சங்காசாரியாரிடம் ஹைதராபாத் சமஸ்தானத்து அதிகாரிகள் ஒருவித உடன்படிக்கையும் செய்துகொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால், அது ஹிந்து மக்களை ஒருவிதத்திலும் கட்டுப்படுத்தாது" என்று "தர்மராஜ்யா" ஒரு குறிப்பு எழுதியிருக்கிறது.

[ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஹிந்து மக்கள் சத்யாக்ரஹம் செய்து வருவது யாவரும் தெரிந்த விஷயம். இந்த சத்யாக்ரஹ இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதும் ஹிந்து மக்களின் சார்பாக ஜோதிர்மடத்து சங்காசாரியார் சமஸ்தானத்து அதிகாரிகளிடம் தூதுபேசப் புறப்பட்டு சமஸ்தானத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவந்தார். இவரிடம் சமஸ்தானத்து அதிகாரிகள் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொள்ள முன்வந்தது நேயர்களுக்கு தெரிந்திருக்கும்.]

ஆசிரியர்.

## மேன்மை தங்கிய ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள்

## பண்ருட்டி விஜயம்

### மகத்தான வரவேற்பு

ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் அவர்கள் காசி யாத்திரியை முடித்துக் கொண்டு திரும்பி ராமேஸ்வரம் போகும் மார்க்கத்தில் 13–5–39 சனிக்கிழமை பண்ருட்டி சமீபம் லிங்காரெட்டிப் பாளையத்திலிருக்கும் இருளக்குரிச்சி எஸ்டேட் ஸ்ரீ குப்பராய செட்டியார் பங்களாவில் தங்கினர்கள். ஸ்ரீ மகாஸ்வாமிகளுக்கு பிக்ஷாபாத பூஜை முதலியவைகளும் ராத்திரி பட்டனப் பிரவேசமும் அதி விமர்சையாய் நடத்தப்பட்டது. மறுதினம் பண்ருட்டி மகாஜனங்களால் பூர்ண கும்பம், உபநிஷத் பாராயணம் சகிதம் நன்கு வரவேற்கப்பட்டு பக்த மகாஜனங்களால்உபசரிக்கப்பட்ட பிக்ஷையை முடித்துக்கொண்டு ஸ்ரீ சுவாமிகள் அன்று ராத்திரி திருப்பாப்புலியூருக்குப் புறப்பட்டார்கள். பிருமண சந்தர்ப்பணை விசேஷமாக நடைபெற்றது. சாயந்திரம் பண்ருட்டி ஆர்ய வைசிய சமூக நந்தவனத்தில் ஸ்ரீ மகாஸ்வாமிகள் அவர்கள் அநுஷ்டானம், பக்தி, ஆசாரம், ஞானம், அபாதக்ஷமம் இவைகளைப் பற்றி ஓர் அரிய உபந்யாஸம் வெகு அழகாக செய்தார்கள். பக்தகோடி மகாஜனங்கள் விஷேமாய் வந்திருந்து ஷெ உபந்யாஸத்தைக் கேட்டு ரொம்பவும் ஆனந்தமடைந்தார்கள்.

(ஒரு விசேஷ நிருபர்.)

## சென்னை காங்கிரஸ் அரசாங்கம்:

### நான்கு புதியச் சட்டங்கள் 16உ முதல் அமூலில் வரும்.

"புகையிலை வரி மசோதா", "பதவி இழந்தவர்களுக்கு பதவி அளிக்கும் மசோதா", "குழந்தைகள் சட்டத் திருத்த மசோதா", "மாப்பிள்ளை மருமக்கத்தாயம் மசோதா", ஆகிய நான்கு மசோதாக்களும் ஏகமனதாக ஜனப்பிரதிநிதி சபையில் நிறைவேறிற்று. ராஜாங்க சபையில் 16உ மசோதாக்களைச் சட்டமாக்கவேண்டி பிரேரேபிக்கப்பட்டது. மசோதாக்கள் ஓட்டுக்குவிடப்பட்டு நிறைவேறிச்சட்டமாயிற்று.

### யூதர்களை விரட்டுக.

ஜெர்மனி சில மாதங்களுக்குமுன் 'மெமல்' என்ற பிரதேசத்தைக் கைப்பற்றியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அங்கு வசிக்கும் யூதர்கள் 15 தினங்களுக்குள் வெளியேறிவிடவேண்டுமென்று ஹிட்லர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். பணமோ அல்லது சொத்தோ எதையும் யூதர்கள் வெளியே எடுத்துச் செல்லமுடியாது.

# புத்தக விமர்சனம். REVIEWS

॥ पुस्तकपरामर्शः ॥

["ஆர்யதர்மம்" வாரப்பதிப்பில் மதிப்புரைக்காக அனுப்பப்படும் புஸ்தகங்கள், பத்திரிகைகள் யாவும் பிரதி திங்கட்கிழமைக்குள் ஆசிரியர் விலாசத்துக்கு அனுப்பவேண்டும். ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பப்படவேண்டும். "மதிப்புரை" விஷயமாக தர்க்கங்கள்—ஆக்ஷேபனைகள் பிரசுரிக்கப்படமாட்டாது. கடிதப்போக்கு வரத்தும் நடத்தப்படமாட்டாது. ஆசிரியர்.]

"அழகர் மாலை" திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு

பதிப்பாசிரியன்:— ஸ்ரீ ப. ரெ. திருமலை ஐயங்கார்.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ப. ரெ. திருமலை ஐயங்கார், 42. வ. வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி. சென்னை.

விலை:— இலவசமாகக் கிடைக்கும். ஆனால் தபால் செலவுகளுக்காக இரண்டணா தபால்பில்லைகள் அனுப்பிப் பெறலாம்.

50 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு சென்னை, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தினரால் வெளியிடப்பட்டது.

"அழகர் மாலை" முற்பகுதியில் செந்தமிழ் பாடும் பரமகவிகளின் பாசுரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. பிற்பகுதியில் சிறந்த தமிழன்பர்களால் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

சீரும் சிறப்பும் வாய்ந்த பாண்டி நன்னாட்டுத்தலங்கள் பதினெட்டுள் திருமாலிருஞ்சோலை ஒன்றாகும். மிகப்பழமையான சங்க நூல்களிலும், ஜைன பௌத்த நூல்களிலும் திருமாலிருஞ்சோலை விவரம் காணப்படுகிறது.

திருமாலிருஞ்சோலை மிகவும் இயற்கை யழகு வாய்ந்தது. அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருநாமம் 'அழகர்' திருமாலிருஞ்சோலை, சிலம்பாறு முதலிய புண்ணிய தீர்த்தங்களையுடையது. அழகர் கோவில், திருமால் குன்றம், விருஷபகிரி முதலிய பல திருநாமங்களுடையது.

பெரியாழ்வார், நம்மாழ்வார் இவர்களுடைய பாடல்பெற்றது.

சிலப்பதிகாரம் என்ற பழைய நூல்களாலும் சடகோபந்தாதி, அழகரந்தாதி முதலிய பிரபந்தங்களாலும் சிறப்பிக்கப்பெற்றது.

இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நல விஷயமான திவ்யப்பிரபந்தப் பாசுரங்களையும் மற்றைக் கவிஞர் பாடல்களையும் தொகுத்தும், பண்டிதர்கள் குறிப்புகளைச் சேர்த்தும், ஸ்ரீ ப. ரெ. திருமலை ஐயங்கார் ஒரு புத்தகமாய் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இந்நன் முயற்சி பாராட்டத்தக்கது.

அழகர் வைபவமெல்லாம் அறிய விரும்பும் அன்பர்களுக்கு "அழகர் மாலை" மிகவும் பயன் படக்கூடியது. இது ஒரு "உயர்ந்த வெளியீடு" என்பது எனது அபிப்பிராயம். (லால்குடி L. S. மணி) உதவி ஆசிரியர்.

## ஸ்ரீ பட்டு சுவாமிகளின் 69 வது திருநக்ஷத்திரம்

குடந்தையில் கொண்டாட்டம்.

இந்நகர் ஸ்ரீ உபயவே பட்டு ஸ்வாமிகள் என்கிற அக்னிஹோத்ரம் ஸ்ரீனிவாஸதாதாசார் ஸ்வாமிகளின் 69-வது திருநக்ஷத்திரவைபவம் சென்ற மேமீ 9-ந்தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த வைபவத்திற்கு ஸ்ரீ சுவாமிகளின் சிஷ்ய கோடிகள் மாகாணத்தின் பல பாகங்களினின்றும் வந்திருந்தனர்.

ஸ்ரீ சுவாமிகளின் சீலமும் சாந்தகுணமும் சௌலப்யமான தன்மையும், மதாசாரசீலத்துவமும், ஏனையோர்கள் கண்டு மெச்சி பின்பற்றக்கூடிய உயர்ந்த ஒழுக்கமும் குறிப்பிடத்தக்கது. வேதவேதாந்த மீமாம்ஸ சாஹித்ய சம்பன்னராகவும், சிஷ்யகோடிகளுக்கு எக்காலத்திலும் உபதேசிக்கும் சாந்த ஸ்வரூபமே காந்தியாகவும், பெரியவர்களிடத்தும், சிறியவர்களிடத்தும் ஒரே மாதிரியாக இனிமையுடன் பழகும் அரியசுபாவமும்வாய்ந்த சீலர். இப்பெரியார் தினசரி அக்னிஹோத்திரம் செய்து வருகிறார், அன்னாருக்கு நீண்ட ஆயுளையும், காரிய சித்தியையும் தேகவலிமையும் அளிக்கும்படி இறைவனை இறைஞ்சுவோமாக.

## ஹைதராபாத்தில் நடப்பது தெரியுமா?

"ஹிந்துக்களுக்கும் ஆர்ய சமாஜிகளுக்கும் மத உரிமைகள் இல்லை"

சத்தியாக்கிரஹத்துக்கு முஸ்லீம்கள் ஆதரவு.

ஒரு முகம்மதிய வாலிபன் தீரம்.

லாஹூரைச் சேர்ந்த ஜனுப் பையான் அலி என்ற ஒரு முஸ்லீம் வாலிபர் ஆஜ்மீரிலிருந்து ஹைதராபாத்துக்குப் புறப்பட்ட சத்தியாக்கிரஹப்படையில் ஒரு தொண்டராகச் சேர்ந்து கொண்டார்.

"நான் ஹிந்து அல்ல; ஆர்ய சமாஜியுமல்ல. நைஜாம் ராஜ்யத்தில் ஹிந்துக்களுக்கும் ஆர்ய சமாஜிகளுக்கும் மத உரிமைகள் இல்லையென்பதை மதப்பற்றுள்ள முஸ்லீமும் எதிர்க்கத்தான் செய்வான் என்பதை உலகுக்குக் காட்டுவதற்காகவே நான் இந்த சத்யாக்கிரஹப்படையில் சேருகிறேன்."......... என்று வீரத்துடன் கூறினாராம்.

## "2 லக்ஷம் ரூ ஜீவனும்சம் தருக"

ஒரு ஜர்மன் ஸ்திரி கேட்கிறாள்.

இந்திய ஜமீன்தார் மீது வழக்கு.

பஞ்சாப் மாகாணத்தைச்சேர்ந்த ராஜா பிரேம் பிரதாப்சிங் என்பவர் 1936 ஞு ஆகஸ்டு மீ டிமெலிடா பிரங் என்ற ஒரு ஜர்மனிய தேசத்து ஸ்திரீயை விவாஹம் செய்து கொண்டாராம். இந்த மாது சிக் மதத்தில் சேர்ந்து விட்டாள். 1937ஞு நவம்பர் வரையில் இந்தத்தம்பதிகள் இல்லற வாழ்க்கை நடத்தி வந்தனர். பிறகு இந்த ஸ்திரி ஜர்மனிக்குப் போனாள். 1938ஞு மார்ச்சுமீ இந்தியாவுக்குத்திரும்பி வந்தாள். திரும்பி வந்த மனைவியை புருஷன் விரும்பவில்லையாம். மனைவியை ஆதரிக்கவில்லையாம். உடனே மனைவி "ஜீவனும்சம்" தரவேண்டு மென்று வழக்குத் தொடர்ந்தாள். 2 லக்ஷம் ரூபாய் தனக்குத் தரவேண்டுமென்று வாதித்தாள். இந்த வழக்கு டேராடன் சிவில்கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீபிரிஜிஹாரிலால் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நீதிபதி "ஜெர்மன் ஸ்திரிக்கு ஜமீன்தார், பிரதிமாதம் ரூ. 650 ஜீவனும்சத்துக்காகவும், ஒரு மோட்டார் வாங்க ரூ. 4000மும், ஜமீன்தார் அவளை வீட்டில் வைத்துக் கொள்ளாவிடில், அவளுக்கு வீடு கட்டிக்கொள்ள வேண்டி. ரூ. 20,000மும், பழைய பாக்கிப் பணம் ரூ. 6000த்தை மாதம் 500 ரூ. வீதம் தரும்படியும், கோர்ட் செலவுகள் முழுவதையும் அவளுக்குத்தரவேண்டுமென்று"........ முடிவு கூறினார்.

ஜமீன்தாரை விவாகம் செய்து கொள்வதற்கு முன் இந்த ஜெர்மன் ஸ்திரி ஒரு கம்பெனியில் மாதம் 700 ரூ. சம்பாதித்துக் கொண்டிருந்தாளாம்.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யாலய சங்கித பாடசாலை.

ஸ்ரீ சத்தியமூர்த்தி திறந்து வைத்தார்.

குடந்தை 8-வது வார்டு சோலையப்ப முதலித்தெரு முனிசிபல் பாடசாலைக்குச் சமீபத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய சங்கீத பாடசாலையை 14-5-39 மாலை 6 மணிக்கு ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி திறந்து வைத்தார்.

அவ்வமயம் குடந்தை நகரபரிபாலன சபை தலைவர் டாக்டர் தியாகராஜய்யர் தலைமை வகித்தார்.

ஏராளமாய் ஜனங்கள் திறப்பு விழாவுக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்திரிகளும் வந்திருந்தார்கள்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வேத கோஷங்களுடன் வேதியர்கள் பூர்ணகும்பம் கொடுத்தார்கள்.

சங்கீதபாடசாலை ஒன்றையும், புத்தகசாலை ஒன்றையும் கரகோஷத்தினிடையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி திறந்து வைத்து, "சங்கீதம்" என்னும் பொருட்பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர், பாடசாலை ஹிந்தி வகுப்பில் தேறிய மாணவர் மாணவிகளுக்கு நற்சாட்சிப் பத்திரங்களை வழங்கினர்.

வந்தனோபசாரம்கூறியபின் வைபவம் இனிது முடிவுபெற்றது.



263

## அயல்நாட்டுச் செய்திகள்.

### இதாலியர்கள் பலி

அபிசினியாவின் தலைநகரமான அடிஸ் அபாபாவில் சென்றவாரம் திடீரென்று அபிசினியர்கள் தோன்றி பல இதாலியர்களைக் கொலை செய்துவிட்டார்கள். கோஜா என்ற ரயில்வேஸ்டேஷனையும் வெடிமருந்து கிடங்குகளையும் கொளுத்திவிட்டுச் சென்றார்கள்.

### புதிய ஸ்பெயின்

"ஸ்பெயின் புனருத்தாரண வேலையில்" பிராங்கோ சர்க்கார் இறங்கியிருக்கிறார்கள். 388 மைல் ராணுவ ரோடுகளையும், 8,600 மைல் பொதுச்சாலைகளையும் போட ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

### சர்வதேச சங்கம்

"லீக் ஆப்நேஷன்ஸ்" என்ற உயிரற்ற சர்வதேச சங்கத்தை ஜினிவாவிலிருந்து பிரான்சுக்கு மாற்றிவிட உத்தேசித்திருக்கிறார்கள்.

### ஹிட்லருக்கு வாரசு

ஹெர் ஹிட்லருக்குப் பிறகு கைசரின் பேரனை ஜெர்மனிதேசத்து சர்வாதிகாரியாக நியமிக்கவேண்டுமென்று பொதுஜனங்கள் விரும்புவதாகத் தெரிகிறது, ஹிட்லர் ஒரு வாலிபரைத் தேர்ந்தெடுத்து "சர்வாதிகாரியாக இருப்பதற்கு" வேண்டிய பயிற்சிகளைக் கற்றுகொடுத்துவருகிறாராம்.

### ரஷியா—பிரிட்டன் நட்பு

பிரிட்டனுடைய கேள்விகளுக்கு ரஷியா மே 16 தேதி பதிலளித்து விட்டது. பிரிடிஷ் யோஜனைகளைப் பற்றி சோவியத் அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்கள்.

### ஆங்கிலோ- துருக்கி ஒப்பந்தம்.

துருக்கியும், பிரிட்டனும்செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரஷியா அங்கீகரித்திருக்கிறது. இதாலியும், ஜர்மனியும் இதுபற்றி கவலைப்படுகிறது.

### சீனு-பர்மா ரோடு.

சீனாவுக்கு பர்மாவிலிருந்து போகும் சாலையை அபிவிருத்தி செய்ய 28 ஆயிரம் பவுன்கள் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

### மற்றொரு மகாநாடு.

ஜெகஸ்லேவேகியாவை ஹிட்லருக்குத் தானம் செய்ய வேண்டி சர்வ தேசங்கள் முனிச் மகாநாட்டைக்கூட்டிற்று. இன்று மே. த போப் பாண்டவர் மற்றொரு மகாநாட்டைக் கூட்டப் போகிறாராம். இதில் "போலந்து" பலியிடப்படலாம். போலந்து பிரிட்டனின் பேச்சுகளை நம்பி இருக்கிறது. ஆனால் அந்தி காலத்தில் பிரிட்டன் போலந்தை கைவிட்டு விடும் என்று போலந்து மக்கள் கருதுகிறார்கள்.

## மேன்மை தங்கிய ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகளின் விஜய யாத்திரை விவரம்.

25-6-39 குடந்தைக்கு விஜயம்.

மே-மீ 18—5—39 காட்டுமன்னார் கோவில், 19, அணக்கரை & ஒழுகச்சேரி, 20, கோனேரிராஜபுரம், 21, மூடிகொண்டான் 22, திருவாரூர், 23 மூலங்குடி, 24, மன்னார்குடி, 25, மணங்காடு, 26, பட்டுகோட்டை, 27, சேதுபாவாசத்திரம், 28, அம்மணி சத்திரம், 29, மணல்மேக்குடி சத்திரம், 30, மீமிசல் சத்திரம், 31 சுந்தரபாண்டிய பட்டணம்.

ஜூன் 1-6-39 தொண்டி, 2, உயக்கூரு 3, தேவிப்பட்டணம், 4, உச்சிபள்ளி சத்திரம், 5, மண்டபம், 6, ராமேச்வரம், 7, தனுஷ்கோடி, 8, ராமேச்வரம், 9, பாம்பன், 10, ராமநாதபுரம், 11, பரமகுடி, 12, மானமதுரை, 13, சிவகெங்கை, 14, காளையார் கோவில், 15, தேவகோட்டை, 16, காரைக்குடி, 17, காளடிகாத்தான், 18, இளையாத்தங்குடி, 19, நச்சாந்துப்பட்டி, 20, புதுக்கோட்டை, 21, பெருங்களூர், 22, வல்லம் 23, தஞ்சாவூர், 24, திருக்களாவூர், 25, கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்.,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம். பையிண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றாய்செய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

அகில இந்திய யாத்ரா ஸ்பெஷல்.

புதுக்கோட்டையிலிருந்து பம்பாய் மார்க்கமாக ஹரித்வாரம் போய் காசி, கல்கத்தா, மதருஸ், ராமேச்வாம் வழியாக புதுக்கோட்டை திரும்ப:— சார்ஜ் ரூ 97—8—0

80 பேர்களுக்கு ஏற்பட்ட இடம் 40 பேருக்கு மட்டில் கொடுக்கப்படும். வைத்திய வசதிகள் உண்டு. இன்னும் கொஞ்சம் டிக்கட்டுகளுக்குத்தான் இடமுண்டு. உடனே ரிஸர்வ் செய்யவும்.

புதுக்கோட்டை, திருச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, காட்பாடி, திருப்பதி, ரேணுகுண்டா, (Broad Gauge) துங்கபத்ரா, பண்டரிபுரம், பூனா, பம்பாய், நாஸிக்- பஞ்சவடி- த்ரியம்பகம், புஷாவல், ஓஷங்கபாத், ஆக்ரா, மதுரா- பிருந்தாவனம், கோகுலம் கோவர்த்தனம், புது டெல்லி, குருக்ஷேத்ரம், அம்பாலா, ஹரித்துவாரம், (ரிஷிகேசம்) நைமிசாரண்யம், லக்னோ (லக்ஷ்மணபுரி) அயோத்யா, பிரயாகை, திருவேணி, ஸ்ரீ காசி, கயை, வைத்யநாதம், கல்கத்தா, கட்டாக், பூரி-ஜகன்னாதம், ஸிம்ஹாசலம், விசாகபட்டிணம், ராஜமகேந்திரம், பெஸவாடா (கிருஷ்ணா) மதராஸ், செங்கல்பட்டு, சிதம்பரம், கும்பகோணம் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தனுஷ்கோடி, ராமேஸ்வரம், மதுரை, முதலிய இடங்களுக்குச் சென்று புதுக்கோட்டைக்கு திரும்பிவரும்.

ஸ்ரீ கோமள விலாஸ்,
ரயில்வே ஸ்பெஷல் ஆர்கனைஸர்கள், புதுக்கோட்டை.

# நமது கல்கத்தா கடிதம்

### ஸ்ரீ சங்கர ஜயந்தி.

கல்கத்தா ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர வேத வித்யா சாலையில் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் இவ்வருஷம் நன்கு நடைபெற்றது. இவ்வருஷத்திய விசேஷம், ரவிவர்மா எழுதியுள்ள ஸ்ரீ ஆசார்யாள் படத்தைப்போல புருஷாக்ருதியில் செய்துவேதபாராயணத்துடன் ஊர்வலமாய் எடுத்துச்சென்று ஸ்ரீகாளி கோவிலருகில் கங்கையில் சேர்ப்பித்ததாகும்.

19—4—39ல் ஆவாஹனமும், இருவேளை நித்ய பூஜை, வேதபாராயணம், சந்தர்ப்பணைகளும், உத்தியோகஸ்தர்களை உத்தேசித்து 23௳ 24௳ மாலையும் பஞ்சமியில் மஹந்யாஸ பூஜை, அபிஷேகங்களும், 29௳ ஸமாப்தியும் ஊர்வலமும் நடந்தன. 24, 25, 26௳களில் மஹாமஹோபாத்யாய பண்டிட் ப்ரம்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளவர்களின் உபந்யாஸம் நடைபெற்றது.

### வேதபாடசாலை.

வேதபாடசாலை இரவு 8—9க்குள் ஓரிடத்திலும் காலை 5—6க்குள் ஓரிடத்திலும் நடந்துவருகிறது. இதில் அத்யாயிகள் காலை மாலைகளில் தனியே உபநிஷத்து, ருத்ரம், புருஷஸூக்தம் முதலியன பாராயணம் செய்தார்கள். அவர்கள் சிரத்தா பக்தி மிகவும் கொண்டாடத்தக்கது. இதன் பெருமையை அனுபவித்த பாடசாலை உபாத்யாயர் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் சந்தோஷமுற்றார். தரிசனத்திற்கு வந்தவர்களும் ஆனந்தம் அடைந்தார்கள்.

(நமது விசேஷ நிருபர்).

## காஞ்சி ஸ்ரீ காமாட்சி அம்மன் தேவஸ்தானம் வெள்ளித்தேரும் கும்பாபிஷேகமும்

### ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீமுகம்

சென்னையில் போராதரவு

காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்கும் வெள்ளிரதத்திற்கும் பொருளுதவி செய்யவேண்டுமென்று ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் அனுப்பியிருந்த ஸ்ரீமுகத்தையொட்டி 11௳ சென்னை ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் சென்னையிலுள்ள குஜராத்தி சமூகத்தினரின் கூட்டமொன்று நடைபெற்றது.

தங்கசாலைத்தெரு ஆரம்பத்திலுள்ள விநாயகர் கோயிலிலிருந்து புஷ்பங்களால் அலங்கரித்த பல்லக்கில் ஸ்ரீ ஆச்சாரியாளுடைய படத்தை ஊர்வலமாக மேளவாத்தியங்களுடன் தங்கசாலைத்தெரு ஏகாம்பரேசுவரர் அக்கிரஹாரம் வழியாக ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் ஆலயத்திற்கு பக்த கோடிகள் எடுத்துச் சென்றார்கள். அங்கு ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் லக்ஷ்மீ நாராயண சாஸ்திரியார் ஸ்ரீ ஆச்சாரிய ஸ்வாமிகளுடைய ஸ்ரீமுகத்தைப் படித்து எல்லோரும் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரும் அதை ஆதரித்துப் பேசினர். கூட்டத்தில் பிரசன்னமாகவிருந்த பலரும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவியைச் செய்வதாக வாக்களித்தனர். ஸ்திரீகளும் மிகுந்த உத்ஸாகத்துடன் வெள்ளி ரதத்திற்கு வெள்ளி நகைகளைக் கொடுத்துதவுவதாக உறுதி கூறினர். நன்கொடைகளை வசூலிக்க செல்வாக்குள்ள கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டது.

## தேன வேதியர் தெய்வம்.

ஸ்ரீ ப. ரெ. திருமலை அய்யங்கார், எழுதியது.

" ஒங்கலிடை வந்துயர்ந்தோர்
தொழ விளங்கி
யேங்கொலி நீர்ஞாலத்திருளகற்று-
மாங்கவற்றுள்
மின்னேர் தனியொழி வெங்கதி
ரொன்றேனையது
தன்னேரிலாததமிழ்"—

தண்டியலங்காரவுரை.

தெய்வம் உண்டென்திரு, தெய்வம் ஒன்றென்திரு என்பனபழந் தமிழ் மொழிகள். மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன் என்பார் ஐங்குரவர். இவரானை மறக்கலாகாது. அறநெறிச் செல்வனே மறைகூறும் அண்ணல். மெய்ந்நெறி நன்மையன் பாதமே பற்றற்றார் பற்றுவது. அறநெறிச் சாரத்தை அடக்கிக் கொண்டிருக்கும் ஓர் பழம் பாட்டு அனைவரும் அறியவேண்டுவதாகையால் அதனை இதன் கண்முற்கூறுவாம்.

''ஐயமிடுமினறநெறியே கைப்பிடிமி
னிவ்வளவேனும் முனைவையிட்டுண்
மின்—றெய்வ
மொருவனே யென்றிங் குணாவல்லிரே
லருவினைகளைந்துமறும்''.

இல்லார் இரக்கும் பொருள் ஐயம், இடுதல் உதவுதல். இது நிறந்தகையால் செய்வது. கைப்பிடித்தலாவது ஒழுக்கமாகப் பற்றுதல். முடிய கையால் அறநெறியை விடாது பிடித்தல் வேண்டும். புகழ் கருதி இடுதலையும், இட்டும் தீநெறி பொழுகுதலையும் அறவே விலக்கி தருமமார்க்கத்தையே பற்றவேண்டும். இல்வாழ்வாருள் உண்ணுது உயிர் வாழ்வார் இலாரகலின் உண்பவெல்லாம் மூன்றவிரல் குவித்தளையாற் சிறிதளவேனும் தாமுண்ணும் உணவைப் பசித்தார்க்கு இட்டு எஞ்சியதை உண்பாராக. 'ஐயமிட்டுண்' என்றதை நோக்குக. இடுதலை முன்கூறியதுபின்னும் இடுதற்குயிர்வாழ்தல் வேண்டி, இங்ஙனம் இட்டு உண்டு அறநெறியே கைப்பிடித்தார்க்குப் பயனளிக்குந் தெய்வம் பலவில்லை. அவன் ஒருவனே. இதுவே மறையின் முடிபு. சுட்டுவிரல் நிறவிய கையால் இது உணர்ப்பாற்று. இங்கு அயர்வறும் அமரர்களதிபதி உயர்வற உயர்நலம் உடையவன் ஒருவனே என்று நினைந்து வாழ்ந்தால் அறக்கரிய வினை ஐந்தும் தாமே அறும்.

''சுருதியாதியிற்றொடங்கு று
மெல்லையிற்சொன்ன
ஒருவன் யாவர்க்கு நாயகன்
திருப்பெயருணக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்
திடர்க்கடல் கடக்க
உரிய மற்றிதினல்ல தொன்றில்
லெனவுரைத்தான்''

துணையிலான்றனைத் துயோனென வுடையவனை பிருங்கா தலன் என்ற கம்பநாடர் செய்யுளின் கருத்தை நன்கு மனத்திற் கொள்க.

உலகந்தொழும் பரமபுருடன் எல்லையின் மறைகளாலும் இயம்பும் பொருள், தொல்லையில் ஒன்றே யாசித்துறை தொறும் பார்த்துளான். 'பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் ஈதே. இதன் அம்பொருளை தூப் புல்வளளலார்,

''பொன்னஙில் சேர்த்தலைக்கும் புனல்
வேகை வடகரையில்
தென்னனுகந்து தொழுந் தேன
வேதியர் தெய்வமொன்றே''

என்று கூறுவதைச்சற்று விளக்குவாம்.

வேகையென்பது வைகை. தென்னன் என்பான் பாண்டியன். தேன 'வேதியர் என்பதைக் கபில பாணர்' போற்கொள்க. தேனர் கள்ளர். ''தேன நெறி கொண்டனைத்தந்திருடர் வண்ணம்'' என்பது பழமபக்கம். திருட்டு நெறியே தேன நெறி வேதியர் வேதம் வல்லவர். வேதங்களை ஓதுதலோடு ஓதுவித்தற்கும் உரிமை அந்தணர்க்கேயுள்ளதால் அவர்கள் வேதியரெனப் பெயர்பெறுவர். தென்னனுகந்து தொழுந் தெய்வம் திருமாலிருஞ்சோலைக் கள்ளழகர். ''கொன்னவில் கூர்வேற்கோன் நெடுமாறன் தென்கூடற்கோன், தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலையே'' என்பர் வில்லிபுத்தூர் விட்டு சித்தன். கள்ளர் முதலியோர் இப்பெருமானிடம் ஈடுபட்டிருந்ததைப் பெரியாழ்வார் கூறுவதைக் கேண்மின்.

''கோவலர் கோவிந்தனைக்
குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலி பாடி நடம்
பயில் மாலிருஞ்சோலையதே'';
''புனைத்தினை கிள்ளிப் புதுவவி காட்டி
உன் பொன்னடி வாழ்கவென்று
இனக்குறவர் புதியதுண்ணும்
எழில் மாலிருஞ்சோலையெந்தாய்!''
''முத்தரும்பாருந் தொழுமழகா'' ''அந்தணர் கைதொழு மாலலங்கார்'' ''வைதாரையு முன்மலைந்தாரையு மலர்த்தாளில் வைத்தாய்'' என்ற அழகரந்தாதித் தொடர்கள் இங்கு நோக்கற்பாலன.

தூய தென்மறை வல்லவர் தேனவேதியர் பண்ணமருந் தமிழ்வேதமறிந்த பகவர்களே இவர் என்பது நூமொழி. அந்தணரும் அந்தியரும் முறையாற்றொழுதுகக்கும்தெய்வம் சுந்தரத்தோளன் மேலெடுத்தாளப் பெற்ற பாசுரத்தின் முன்னிரண்டடிகள் பின்வருமாறு:—

''என்னிருடிகேசனிறைக் கிழிடக்
கமுத்தென்றிவற்றில்
மன்னிலை மின்னாருவாய்
நானுமுற்நாங் கொண்டளிக்கும்''

இருடிகேசன் என்பதைப் பொறிவாயிலைந்தவித்தான் எனக்கூறுவர் திருவள்ளுவர். அவன் பொய்தீரொழுக்க நெறிநிற்பார் நீடு வாழ்வார். சந்தமிகு தமிழ்மறையோனின் பாவளருந்தமிழ்வல்லமையைச் சற்றே கண்டு களித்தோம்.

## உபநயனம்.

''கும்பகோணம் பாங்கியின்'' ப்ரதம நிர்வாக டைரக்டர் உயர்திருவாளர் ஸ்ரீ. எஸ். மகாலிங்கம் அய்யர், பி. ஏ., பி. எல்., அவர்கள் 10ந்தேதி தனது குமாரன் ஸ்ரீ. எம். நாகேஸ்வரனுக்கும், தனது தம்பி மதுராந்தகம் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீ. மல்லிகார்ஜுனம் அய்யர் குமாரன் ஸ்ரீ. எம். சாமிநாதனுக்கும் உபநயனம் வெகு சிறப்பாக செய்வித்தார். இதனை ஒட்டி இரவில் ஒரு விருந்து நடைபெற்றது. அழைப்பிற்கிணங்கி நகரிலுள்ள பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

### புதுக்கோட்டை.

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபா.

ஆறுவது ஆண்டுவிழா.

இச்சபையின் ஆறுவது ஆண்டுவிழாவை ஒட்டி 15—5—39 முதல் 31—5—39வரை வடக்கு ராஜவீதி மகாராஜா கல்லூரியில் தினசரி இரவு 7-மணி முதல் 8½வரை பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதி பூஷண ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகள் சொற் பொழிவுகள் நிகழ்த்துவார்.

புதுக்கோட்டை சமஸ்தான உதவி நிர்வாக அதிகாரி ராவ்பகதூர் ஸ்ரீ. கிருஷ்ணமாச்சாரியார் தலைமை வகிப்பார்.



**Arya Dharmam Special Supplement:—**

(ஆர்யதர்மம் விசேஷ வெளியீடு)—

# வைதிக தர்ம ஸங்கம், தமிழ் நாடு.

தபோவனம், பணையூர், பாலூர் போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.

## தர்ம ப்ரசாரக மஹாஸபை

நாளது ப்ரமாதி வருஷம் வைகாசி மாதம் 11, 12, 13, 15 தேதி (25, 29,—மே—1939)களில் வைதிக தர்ம ஸங்கத்தின் தர்ம ப்ரசார பஞ்சாயத்தின் ஆதரவில் ஒரு 'தர்ம ப்ரசாரக மஹாஸபை' யானது 'ப்ரம்மஸ்ரீ சாஸ்திர ரத்னாகரம் விச்வநாத சாஸ்திரிகள்' (திருவையார்) அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் செங்கல்பட்டு ஜில்லா பணையூர் கிராமத்திற்கடுத்த தபோவனத்தில் கூட்டப்படும். வைதிக தர்மாபிமானிகளும் தர்மப்ரசாரத்தில் ஆவலுள்ள ஆஸ்திக மஹா ஜனங்களும் மேற்படி ஸபைக்கு வந்து கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சபையில் ஆலோசித்து தீர்மானிக்க வேண்டியவைகளாவன:—

1 தர்ம ப்ரசாரத்திற்கு இன்றியமையாத யோக்யதா விசேஷங்கள்.

2 ப்ராம்மண தர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய சௌகர்யங்கள் நிறைந்த ஆச்ரமங்களை ஏற்படுத்திவைத்து அங்கு குரு சிஷ்யக்ரமமாக வித்யா ப்ரசாரம் செய்வித்தல்.

3 எல்லோரும் அறியும்படி தர்மஸூக்ஷ்மங்களை ப்ரசுரித்தி செய்வதற்கான உபாயங்கள்.

4 லௌகிகர்களுடைய பிள்ளைகளுக்கு வைதிக தர்மம், ஆசாரம், இவைகளுடன் கூடிய லௌகிக வித்யாப்யாஸ முறை.

5 ஸ்திரீகளுக்கு தர்ம விரோத மற்ற வித்யாப்யாஸ முறை.

6 தத்கால சமூகத்திலுள்ள அனாசார நிவர்த்தி உபாயங்கள்.

மேற்படி விஷயங்களைத் தீர்மானிப்பதில் சாஸ்த்ரீயமாயும் அனுபவத்தை முன்னிட்டதாயும் இருக்கின்ற தங்கள் ஆலோசனைகளை ஸபையானது எதிர்பார்க்கிறது.

ரா. ஸ்ரீனிவாஸ சாஸ்திரி,
ஸ்ரீ கார்யம்,
தர்ம ப்ரசார பஞ்சாயத்து:
ஸாது வெங்கட்டராம சர்மா,
அ. கை சபை. ஸ்ரீரங்கம்.

## மஹா ருத்ர ஜப ஹோம மஹோத்ஸவம்

ஸ்வஸ்தி ஸ்ரீ ப்ரமாதி வருஷம் வைகாசி மாதம் 11ந் தேதி முதல் 18ந் தேதி வியாழன் முடிய 8 தினங்களில் வைதிக தர்ம ஸங்கத்து ஸம்வத்ஸரீய மஹோத்ஸவங்கள் ஸ்ரீ சதீதீரம், பணையூர் கிராமத்து தபோவன ஆச்ரம ப்ரதேசத்தில் நடத்துவதாய் பகவத் கிருபையை முன்னிட்டுத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட மஹோத்ஸவ பத்தியில் வைகாசி மாதம் 14ந் தேதி (28-5-39) 'ஸ்ரீ மஹா ருத்ர ஹோமகர்மாவை' ஜகத் க்ஷேமத்தின் பொருட்டு ஸங்கல்பித்து நடத்துவதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதை முன்னிட்டு வைகாசி மாதம் 12ந் தேதி (26—5—39) 13ந் தேதி (27—5—39) இந்த இரண்டு தினங்களிலும் கலச ஸ்தாபனத்துடன் சிஷ்டர்களான வேத வித்துக்களைக் கொண்டு 'ஸ்ரீ மஹா ருத்ர ஜபம்' நடத்தப்படும். மேற்படி ஸங்கத்து உற்சவங்களுக்கும் ஸ்ரீ மஹா ருத்ர ஜப, ஹோம, வைபவங்களுக்கும் ஆஸ்திகர்களனைவரும் வந்திருந்து தரிசனம் செய்து பரமேச்வர, யக்ஞ புருஷ, அனுக்ரகத்தை பரிபூர்ணமாகப் பெற்று இஹபரச்ரேயஸ்ஸுகளை அடையும்படிக்கு வேண்டிக் கொள்கின்றோம்.

சிவகாளீபுரம்
அனந்தராம தீக்ஷிதர்,
தேசஸங்கம் ஸ்ரீகார்யம்,
ரா. ஸ்ரீனிவாஸ சாஸ்திரி,
தர்மப்ரசார பஞ்சாயத்து ஸ்ரீகார்யம்.
ஆர். ராதாகிருஷ்ண அய்யர்,
ஸங்கம் குஜகுலகர்ணி
ஸாது வெங்கட்ராம சர்மா,
அ. கை. ஸபை, ஸ்ரீகார்யம்.

## தேச ஸங்க மஹாநாடு

இப்பவும் நாளது ப்ரமாதி வருஷம் வைகாசி மாதம் 16, 17 தேதி (மேமீ 30, 31)களில் 'வைதிக தர்ம தேச ஸங்க மஹாநாடு' 'வைதிக தர்ம ஸம்ரக்ஷக ப்ரம்மஸ்ரீ சிவகாளீபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்' தலைமையில் செங்கல்பட்டு ஜில்லா, பணையூர் கிராமத்தில் தபோவன ஆச்ரம ப்ரதேசத்தில் கூடுகிறது. அது சமயம் ஸங்கத்து அங்கத்தினர்களும் அபிமானிகளும் மஹாநாட்டிற்கு விஜயம் செய்து மஹா நாட்டை சிறப்பாக நடத்தி வைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மகாநாட்டில் ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள் அடியில் கண்டபடி குறிக்கப்படுகின்றன:—

1 தேச ஸங்க கார்ய நிர்வாக ஸபையின் அமைப்பும் அங்கத்தினர்களின் நியமனமும்.

2 நகர ஸங்கங்களும் அவைகளின் அதிகார, கார்ய, நிதானங்களும்.

3 கிராம ஸங்க அமைப்பின் விவரங்கள்.

4 மந்திராலோசனை ஸபை அவசியம் என்பது, அதன் நிர்மாணத்திற்குச் செய்யவேண்டிய கார்யங்கள்.

5 தேச சங்க கார்ய நிர்வாக சபையின் ஆதரவில் தசவித பஞ்சாயத்துக்கள் அமைப்பும், அதன் அங்கத்தினர்களும், கார்யங்களும்.

6 ஸங்க சக்தியை விருத்தி செய்யும் உபாயங்களும், அங்கத்தினர்கள் சேர்த்தலும்.

மேற்படி மஹாநாட்டிற்கு அன்புடன் தேச, சமூக, தர்ம அபிவிருத்தியில் ஆர்வம் கொண்ட ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து மஹா நாட்டு கார்ய ஆலோசனைகளில் கலந்து கொள்ளும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

| | |
|---|---|
| ஸாது வெங்கட்ராம சர்மா, | இப்படிக்கு, |
| ஸ்ரீகார்யம், | ஆர். ராதாகிருஷ்ணய்யர். |
| அந்தரங்க கைங்கர்ய ஸபை. | B.A., B.L., வக்கீல், தஞ்சாவூர். |
| | தேசஸங்கம், குஜகுலகர்ணி. |

குறிப்பு:—பணையூர் கிராமம், செங்கல்பட்டு காஞ்சிபுரம் ரயில் மார்க்கத்தில் வில்லியம்பாக்கம் ஸ்டேஷனுக்கு 1½ பாலாற்றிற்கு அக்கரையில் இருக்கிறது.

# குடந்தை நகர 2-வது அரசியல் மகா நாடு.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

## ஸ்ரீ சத்தியமூர்த்தியின் தலைமைப் பிரசங்கம்.

"கும்பகோணம் வாசிகளுக்குப் பாராட்டு"

கும்பகோணம் நகர இரண்டாவது அரசியல் மகாநாடு 14—5—39 காலை 8-மணிக்கு குடந்தை ஸ்ரீ வாணி விலாச மண்டபத்தில் கூடிற்று. மகா நாட்டுக்கு ஏராளமாய் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஆயிரக்கணக்கில் பார்வையாளர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்திரீகளும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ வாணி விலாஸ் கொட்டகை தேசிய தோரணங்களினும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மகா நாட்டை மதுரை நகர பரிபாலன சபையின் உபதலைவர் ஜனாப் ஹாஜீ மௌலானா சாகேப் திறந்து வைத்தார்.

மகாநாட்டிற்கு ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி தலைமை வகித்தார்.

கடலூர் ஸ்ரீ தெய்வநாயகய்ய "தேசிய கொடியை" ஏற்றி வைத்தார்.

ஸ்ரீ சி. பி. சுப்பையா "கதர் கண்காட்சியைத்" திறந்து வைத்தார்.

மகா நாட்டுக்கு ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கனம் முனுசாமி பிள்ளை, டாக்டர் ஸ்ரீநிவாசன், கனம் வி வி கிரி, கனம் ராமராவ், கனம் டாக்டர் ராஜன், ஸ்ரீ புதுசு சாம்பமூர்த்தி, ஷாபிமுகமது, ஸ்ரீமதிகள் ஜானம்மாள் அம்புஜம்மாள் கோதைநாயகியம்மாள், முதலியவர்கள் "ஆசிச் செய்திகள்" அனுப்பியிருந்தார்கள்.

"கனம் ராமன் மேனன் மரணத்துக்கு அனுதாபம் காட்டுவதென்றும், புதிய காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாதுக்கு வாழ்த்து கூறுவதென்றும், வங்காளத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நடை பெற்ற கலவரத்தைக் கண்டிப்பதென்றும், இந்தோ-பிரிட்டிஷ் ஒப்பந்தத்தை கண்டிக்கிறதென்றும், பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், விற்பனை வரிக்குப் போதாவு காட்டுவதாகவும், யுத்த காலத்தில் பிரிட்டிஷாருடன் ஒத்துழையாமை செய்வதென்றும், இலங்கை, ஆப்ரிகா பர்மா முதலிய தேசங்களில் இந்தியர்கள் துன்புறுத்தப்படுவதைக் கேட்டு வருந்துவதாகவும், ஹிந்தி எதிர்ப்பு, விற்பனை வரி எதிர்ப்புப்போன்ற மூட இயக்கத்தைக்கண்டிக்கிறதென்றும், கும்பகோணம் ஜல தாரை திட்ட விஷயமாக அரசாங்கம் சீக்கிரத்தில் நகரபரிபாலன சபைக்கு உதவி செய்ய முன்வரவேண்டுமென்றும்".... இரவாஞ்சேரி காவி தனத்தைக்கண்டிப்பதாகவும், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறிற்று."

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி தனது முடிவுரையில்........ "கும்பகோணத்தில் காங்கிரசுக்குப் போதாவு காட்டப்படுவதைக்கண்டு களிப்புறுவதாயும், இதற்காக கும்பகோண வாசிகளைப் பாராட்டுவதாயும், கும்பகோணத்திலிருக்கும் வக்கீல்களும், சனாதனிகளும், ஆசிரியர்களும் ஏராளமாய் காங்கிரசில் வந்து சேரவேண்டுமென்றும், காங்கிரஸ் சர்க்காரைக்கவிழ்க்க வேண்டி நடத்தப்பட்ட எல்லா இயக்கங்களும் ஒடுங்கிப் போய்விட்ட தென்றும், காங்கிரஸ் எதிரிகள் கூட்டத்துக்கு பொது மக்களும், மாணவர்களும் போகக்கூடாதென்றும் அங்கு போவதால் ஒருவித பிரயோசனமும் ஏற்படாதென்றும், அவர்களுக்கு வசை புராணம் பாடுவதை விட வேறு வேலைகள் கிடையாதென்றும், விற்பனை வரியைப்பற்றி தாறுமாறாகப் பொய்ப்பிரசாரம் செய்வதை ஒருவரும் நம்பக்கூடாதென்றும், காங்கிரஸில் பல கட்சிகள் இருக்கக்கூடாதென்றும், ஒருங்கு சேர்ந்து காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டுமென்றும், கதருக்கும் ஸ்வதேசிக்கும் பொது மக்கள் ஆதரவு காட்ட வேண்டுமென்றும், மகாத்மா காந்தி விரைவில் ஒரு பெரும் போராட்டத்தை நடத்துவரென்றும், அதுவே கடைசி சுதந்திரப் போராட்டமாகயிருக்குமென்றும், காங்கிரஸ் பொது ஜனங்களின் பிரதிநிதியென்றும், அதில் ஜாதி, மத, கட்சி, மாகாண, வித்யாசங்கள் கிடையாதென்றும், வகுப்புத்துவேஷத்தையொழித்து யாவரும் "இந்தியர்கள்" என்று கருதி வேலை செய்ய வேண்டுமென்றும், காங்கிரஸ் சர்க்கார் பதவிக்கு வந்து இன்னும் சரியாக 2 வருஷங்கள் கூட ஆகவில்லையென்றும், அதற்குள் யாவரும் ஆச்சர்யப்படும்படி காங்கிரஸ் மந்திரிகள் வேலை செய்திருப்பதாகவும், அவர்கள் மாதம் ரூ 500 சம்பளத்தில் வேலை செய்வதிலிருந்தே காங்கிரஸ் மந்திரி சபையின் வேலைத்திட்டத்தை நன்கு அறியலாமென்றும், கும்பகோணம் சாக்கடைத்திட்ட விஷயமாக சர்க்காரிடம் தான் கூறுவதாகவும், கும்பகோணம் வரி செலுத்துபவர்கள் மௌனமாக இராமல் அடிக்கடி நகரில் பொதுக்கூட்டங்களைக்கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றிப் பத்திரிகைகளுக்கனுப்பவேண்டுமென்றும், கிராமபஞ்சாயத்து சபையிலிருந்து சமஷ்டி அசெம்பிளி வரையில் காங்கிரஸ்காரர்கள் தான் அபேக்ஷகர்களாக நின்று பிரதிநிதிகளாய் வரவேண்டும்".............. என்று கூறி முடித்தார்.

வந்தனோபசாரம் கூறிய பின் மகாநாடு ஜே கோஷத்தினிடையில் இனிது முடிவுபெற்றது.

# ஸ்ரீ சத்தியமூர்த்தி குடந்தை விஜயம்

பிரபல காங்கிரஸ் தலைவரும் இந்திய சட்ட சபை அங்கத்தினருமான ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி 14 தேதி கும்பகோணத்துக்கு விஜயம் செய்தார். அவருக்கு கும்பகோணம் பிரபல மிராசுதாரும், பலவத்தன் கட்டளை பஞ்சாயத்து கோர்ட் தலைவரும், கிராம முனுசிப்புமான ஸ்ரீ கே. பி. தங்கவேல்நாடார் 14-5-39 தேதி இரவு 10 மணிக்கு ரயில்வே ரோடிலுள்ள தமது கிருஹத்தில் ஒரு விருந்து நடத்தினர். அழைப்பிற்கிணங்கி விருந்துக்கு பிரபல காங்கிரஸ் தலைவர்களும், குடந்தை நகர சபைத் தலைவரும், உபதலைவரும், வக்கீல்களும், பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

விருந்துக்குப்பிறகு சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. பின்னர் யாவருக்கும் சந்தன தாம்பூலம், புஷ்பம், கற்கண்டு, பழம் வழங்கப்பட்டது. ஸ்ரீ சத்தியமூர்த்தியும் இதர விருந்தினர்களும் ஸ்ரீ தங்கவேல் நாடாரைப்பாராட்டி வந்தனமளித்த பின் வைபவம் இனிது கலைந்தது.

# குடந்தையில் ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி

## மகத்தான உபசாரம்

### ஜனங்களின் குதூஹலம்

டெல்லி சட்ட சபை அங்கத்தினரும், பிரபல காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீ மான் எஸ். சத்தியமூர்த்தி அய்யாவர்கள் பி. ஏ. பி. எல், 14 தேதி காலை 7 மணிக்கு கும்பகோணத்துக்கு விஜயம் செய்தார்.

ஸ்ரீ எஸ். சத்யமூர்த்திக்கு கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கில் ஜனங்கள் ஸ்டேஷனில் கூடியிருந்தார்கள். பல பிரமுகர்கள் ஸ்ரீ சத்யமூர்த்திக்கு ரோஜா ஹாரங்கள் சூட்டினார்கள்.

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி பாண்டு, மேளம், தாரை, தப்பட்டை முதலிய வாத்ய கருவிகள் முழங்க, தேசிய கீதங்கள் பாடிக்கொண்டு தொண்டர்கள் முன் செல்ல, ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

நகர பரிபாலன சபையார் தெருக்களையெல்லாம் வழக்கத்துக்கு மாறாக 14 தேதி சுத்தப்படுத்தி, தண்ணீர் தெளித்து வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தெருக்களெல்லாம் தேசிய கொடிகளினாலும், தோரணங்களினாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

14 தேதி கும்பகோணம் ஒரு திருநாளாக தோன்றியது. எங்கும் ஒரே ஜனக்கூட்டம் மாணவர்களும், வியாபாரிகளும், காங்கிரஸ்காரர்களும் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு வழிநெடுக மாலைகள் சூட்டினார்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்தார். டவுன் ஹைஸ்கூல் மைதானத்தில் மாணவர் கூட்டத்தில் பேசினர். ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய சங்கத்தையும் சங்கீத கலாசாலையையும் திறந்து வைத்தார். காந்தி பார்க்கில் ஒரு பெருங் கூட்டத்தில் பேசினர். அன்றிரவு ஸ்ரீ சுவாமிமலைக்குச் சென்று விட்டு டாக்டர் சாம்பசிவய்யர் வீட்டில் வந்து தங்கினர். 15 தேதி காலை குடவாசல் மகாநாட்டில் தலைமை வகிக்க வேண்டிப் புறப்பட்டுச்சென்றனர்.

ஸ்ரீ எஸ். சத்திய மூர்த்தியைப் பார்க்க வேண்டி ஜில்லாவின் பல பாகங்களிலிருந்து காங்கிரஸ்காரர்களும், சநாதனக் கட்சித் தலைவர்களும், மிராசுதாரர்களும் கும்பகோணத்துக்கு வந்திருந்தார்கள். பலருக்குப் பேட்டியளித்து ராஜீய விஷயங்களைப் பற்றி விவாதித்தார். கும்பகோணம் நகர ஜலதாரைத் திட்ட விஷயமாக அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு நகரசபை தலைவரிடம் பேசிவிட்டு பல விவரங்களைத் தெரிந்துகொண்டார். சர்க்காரிடம் சாக்கடை கட்டும் விஷயமாகப் பேசித்தக்கது செய்வதாகக்கூறினர்.

"LIFE AFTER DEATH"
JUST PUBLISHED
BY
Sri. T. R. Ganapathiramier, B.A., B.L.
Advocate,
Author of "Bagavatham Series" etc.
In 2 Parts Bound Rs. 3/-
Part I:— The Hindu View (its fears)
Part II:— Conquest of Death by Yogic Methods.
Each Part Rs, 1—8—0.
Both Parts Rs, 2—8—0. (Wrapper)
Apply:— Author,
Tinnevelly Jn. S. I. R.



# வெளியூர்ச் செய்திகள்.

## திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம்

### ஸ்ரீ பாஷ்யகாரர் திருநாட் கொண்டாட்டம்

இவ்வருடம் விசிஷ்டாத்வைத சித்தாந்த ப்ரவர்த்தகரான ஸ்ரீ பெரும்பூதூர் வள்ளலாரின் வருடத்திருநாள் 21—4—39உ திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வேதவியாஸர் திருநாட் கொண்டாட்டத்தில் ஆரம்பமாகி மறுதினம் 22—4—39உ முதல் பிரதிதினம் ஸ்ரீதேசிகனுர் இயற்றியருளிய "கீதார்த்த சங்கிரஹம்" என்ற பிரபந்தம் வியாக்கியானத்துடன் ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீகீதா பாஷ்யம், தாத்பர்ய சந்திரிகை, கீதாபாஷ்ய முதலிய ஆன்றோர் நூல்களைக்கொண்டு சங்கத்தலைவர் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்காரவர்களால் வகுப்பாகவே நடத்தப் பெற்றுவந்து 30-4-39உ சாற்றுமுறை அதிவிலக்ஷணமாய் நடந்தது.

## அழகர்மாலை அரங்கேற்று விழா.

திருமாலிருஞ்சோலை மலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கள்ளழகர் விஷயமாய் ஆழ்வார்கள் பாசுரங்களையும் சங்கப்புலவர் பாடல்களையும் தொகுத்தும் அன்பர் வியாசங்களுடனும் திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி செ. திருமலை அய்யங்கார் ஸ்வாமி எழுதி வெளியிட்டுள்ள "அழகர்மாலை" யென்னும் நூல் பிரமாதிஞு சித்திரை மீ 20உ மதுரையில் ஸ்ரீமான் நெரூர் வித்வான் நாராயணய்யங்கார் ஸ்வாமி தலைமையில் அரங்கேற்றப்பெற்றது.

அன்று மாலை 9 மணி சுமாருக்கு ஸ்ரீ அழகப்பிரானுர் குதிரை வாஹனத்தில் ஷெடி மண்டகப்படிக்கு எழுந்தருள அச்சுந்தரத்தோளன் திருவடிவாரத்தில் இந்நன்னூல் இரண்டு பிரதிகள் இடப்பெற்று தேவஸ்தானத்தாரிடம் கொடுக்கப்பெற்றது. அக்காலை அதனை தொகுத்து வெளியிட்ட அய்யங்கார் ஸ்வாமிக்கு மரியாதை செய்யப்பட்டது.

வித்வான் நாராயணய்யங்கார்ஸ்வாமி தலைமை வஹித்து, அழகியதாக முன்னுரையாக நூலின் அவதாரத்தையும் அதன்பெருமையினையும் சற்று எடுத்துக்கூற ஸ்ரீமான் திருமலை அய்யங்கார் நூலின் உள்ளுரை, முகவுரை மதுரைத்தமிழ்ச் சங்கத்தை வளர்த்து வரும் வள்ளலார் வரைந்துதவிய முன்னுரை முழுமையும் முதற்கண்படித்து, செந்தமிழ் பாடும் பழம கவிகளின் பாசுரங்களில் ஒவ்வொரு பகுதியினின்றும் சிலவற்றைப்பாடி, 'கள்ளழகர்' கட்டுரையிலமைந்துள்ள பாக்கள் யாவையும் பாடி, 'அழகர் திருமலையின் பழம் பெருமை'யின் இறுதிப்பகுதியையும், திருமாலிருஞ்சோலை வியாச முழுமையும்; திருவரையில் சேர்த்து 'சட்டுப்பகுதி முற்றவும்,படித்து நிறுத்த, 'செந்தமிழ்' உதவி பத்திராதிபர் ஸ்ரீ டி.கே. ராமாநுஜாசாரியார், ஆழ்வார் திருநகரி வித்வான் நியாய சிரோமணி ராமகிருஷ்ணய்யங்கார், வில்லூர் ஆசுகவி ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியார், காவல்பாக்கம் நீலமேகதாததாசர் ஸ்வாமி முதலியோர் நூலை சிலாகித்துப் பேசியதுடன் அழகரின் ரூபலாவண்யத்தையும் நன்கு எடுத்துக்காட்ட, ஸ்ரீ. டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்கார் மிக விரிவாக 'அழகை'ப்பற்றி விவரிக்க தலைவரவர்கள் சுருக்கமாக முடிவுரை கூற,ஸ்ரீ.என். ஆர். கிருஷ்ணய்யங்காரவர்கள் தக்கவாறு வந்தனோபசாரம் அளிக்க அழகர் மாலை அங்கு குழுமியிருந்த சகலருக்கும் இனமாக வழங்க ஸபை மாலை 6மேலிக்கு இனிது நிறைவெய்தியது.

## முடிகொண்டான்

### "ஸ்ரீ சங்கர ஸ்வயம்பிரகாசாநந்த ஸரஸ்வதீ பாடசாலை"

இப்பாடசாலையில் ஸாமவேதம் மட்டிலும் சொல்லிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சென்ற வருஷம் கார்த்திகைமீ 30உயில் உள்ளூர் ஸ்ரீ வெங்கிடாசலபதி ஸ்வாமி ஸன்னதியில், கிராமத்தார்களின் சிரத்தையினுல், யஜுர்வேதம் சொல்லிவைக்கவும் ஏற்பாடுசெய்து, முன்போலவே விமரிசையாய் ஆரம்பம் செய்யப்பட்டது.

இப்போது இப்பாடசாலையில் சுமார் 20 வித்தியார்த்திகள் வேதாப்யாஸம் செய்து வருகிறார்கள். ஸாமவேதத்திற்கு சிவசூரகாம் ஸ்ரீ சுப்பிரமணிய சிரௌதிகள் அவர்களும், யஜுர்வேதத்திற்கு, ஸ்ரீ வைத்தினாத கனபாடிகள் அவர்களும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் மேல்படி இரண்டு வேதங்களின் அபிவிருத்தியில் விசேஷ சிரத்தையுடன் ஷெடி பாடசாலையை ஆதரித்துவருவது மிகவும் பாராட்டத்தக்கது. மேலும், வேதாபிவிருத்திக்காக வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் வித்தியார்த்திகளை, கிராமத்திய பிரமுகர்கள், வீட்டிற்கு ஒரு குழந்தைகளாய் வைத்துக்கொண்டு, நமது சாஸ்திரத்தில்

कुक्षौ तिष्ठति यस्यान्नं वेदाभ्यासेन जीर्यते ।
कुलं तारयते तेषां दश पूर्वान् दशावरान् ॥

என்ற வாக்கியத்தின்படி, அதாவது எவனுடைய ஒரு வேளை அன்னமானது ஒருவனின் குக்ஷியில் போடப்பட்டு, அது வேதாப்யாஸம் செய்வதினுல் ஜீரணம் செய்யப்படுகிறதோ அவர்களுடையகுலம் இருபத்தோரு தலைமுறைகளையேறுகிறதுஎன்பதற்கு இணங்க தரும சிந்தனையுடன் அவர்களுக்கு வேண்டிய ஆஹாராதிபோஷணைகளைச் செய்து தங்கள் குழந்தைகளைப்போல் ஆதரித்து வருவது போற்றத்தக்கது.

நமது பரமாசார்யாள் அவர்கள், இப்போது ஸேது யாத்ரைக்காக விஜயம் செய்யும் மார்க்கத்தில் முடிகொண்டான் கிராமத்துக்கு நாளது மேமீ 21உ விஜயம் செய்யப் போவதாகத் தெரிகிறது.

## மதுவிலக்குப் பிரசாரம்

"பம்பாய் மாகாணத்தில் மதுவிலக்குச் சட்டம்" ஏற்பட்டதை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனுல் பார்சி வகுப்பினர் மட்டும் எதிர்த்துவருகிறார்கள். காரணம் பார்சி மக்கள் இதன்மூலம் அதிக வருமானம் இழப்பார்கள்" என்று பொக்கிஷமந்திரி கனம் லத்தே குறிப்பிட்டார். மேமீ 11உ பம்பாயில் மதுவிலக்குப் பிரசாரக்கூட்டம் கூடிய பொழுது பார்சிகள் கலவரம்செய்து நாற்காலிகளை உடைத்து, மண்டபத்தின் கண்ணாடிக்கதவுகளைத்தகர்த்துத் தூளாக்கினர்.

## மேல்மங்கலம்

### ஆஸ்திக மஹாஜனஸபை இரண்டாவது ஆண்டுவிழா

பிரமாதி-ஞு சித்திரை-மீ 23, 24 தேதிகளில் மேல்மங்கலம் ஆஸ்திகமஹாஜன ஸபையின் இரண்டாவது ஆண்டுவிழா ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யர் (ராமேஸ்வரம் தேவஸ்தானக் கல்லூரித் தலைவர்) அக்கிராஸனத்தின் கீழ் நடந்தேறியது.

சித்திரை-மீ 23-ம் உ மாலை 4½-மணிக்கு ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து பூர்ண கும்பம், உபநிஷத் கோஷம்,மங்கள வாத்யங்களுடன் அக்கிராஸனர் அவர்களுக்கும்வந்திருந்த பிரமுகர்களுக்கும், மாலைகள் சூட்டப்பெற்றுஊர்வலமாக அழைத்துவரப்பெற்றது. V. S ராமசாமி சாஸ்திரிகள் B.A., B.L., (ராமேஸ்வரம் தேவஸ்தான ஸம்ஸ்கிருத கலாசாலையின் மாஜி பிரதம ஆசிரியர்) அவர்கள் வரவேற்புப் பிரசங்கத்தை ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் வாசித்து ஸபைக்கு விஜயம் செய்திருந்தவர்களை வரவேற்றார்.

பிறகு ஸ்ரீ சிருங்கேரி மஹாஸன்னிதானத்திலிருந்து அனுப்பப்பட்ட மந்திராக்ஷதை ப்ரசாதங்கள் வழங்கப்பெற்றது.

பிறகு தலைவர் தமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தினர்.

ஸபை 24-ம் உ காலை 8½ மணிக்கு கூடிற்று. மதுரை பிரம்மஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள் "தர்மமும் ராஜாங்கச்சட்டங்களும்" என்னும் விஷயம்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். ஆஸ்திக மஹாஜன ஸபையின் அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பெற்று ஸபையோரால் அங்கீகரிக்கப்பெற்றது.

பிறகு மதுரை ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி ஸநாதனதர்ம தத்வத்தை விளக்கினர். சாஸ்திரிகள் நான்கு புருஷார்த்தங்களை அடைவதற்கு தர்மம்தான் மூலகாரணம் என்றும், ஆகையால் வேதவிஹிதமான தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், தர்மங்களை நிஷ்காம்யமாய் செய்தால்தான் மனஸானது ஸ்வச்சமாக பரிசுத்தத்தை அடையுமென்றும், சித்தசுத்தியால்தான் மோக்ஷ ஞானத்தை அடையலாமென்றும், அந்த ஞானத்தால்தான் மோக்ஷம் ஸித்திக்கும் என்று விளக்கியும், தர்க்கம், வ்யாகரணம், மீமாம்சை, வேதாந்த சாஸ்திரங்களின் நுட்பங்களை ஸங்கிரஹமாயும் யாவரும் அறியும் வண்ணமும் தெரியப் படுத்தினர்கள்.

தலைவர் தன் முடிவுரையில் "நம் ஸமூஹத்திற்கு இவ்வளவு ஸங்கடமான நிலை ஏற்பட்டதற்கு பாவித்யையே காரணமென்றும், இந்த ஸங்கடங்களை நிவர்த்திப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இது போன்ற ஸபைகளில் வேதசாஸ்திர கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டியது அவசியமென்றும், இதை இச்சபை யோஜிக்க வேண்டுமென்றும், பள்ளிக்கூட நேரங்களுக்கு இடைஞ்சலன்னியில் சௌகர்யமான நேரங்களில் பிராமணக் குழந்தைகளுக்கு பிராசீன வித்யையை அப்யசித்தல் நலம் என்றும், மேலும் சட்டசபைகளில் அதிகாரத்தையும் வஹித்து நம் தர்மத்தைக் காப்பாற்றுவது வீண் சிரமமென்றும் சட்டங்களை மீறுவதும் சிரமம் என்றும், எல்லாவற்றையும் யோஜித்துப்பார்க்கையில் மஹம்மதிய, கிருஸ்துவர்கள் போன்ற மைனாரிடிகளைப்போல் நாமும் ஓர் மைனாரிடிகளாகி என்று வ்யவஹரித்து, நம் பிராமண ஸமூஹ ஸம்பந்தமான அதார்மிகச் சட்டங்களை விலக்கிக்கொள்ளலாமென்ற அபிப்ராயம் நமக்குத் தோன்றுவதாயும்........" கூறினர். இது சிலரால் விவாதிக்கப்பெற்று அகிலபாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க சபைத் தலைவர்களின் யோஜனையின்பேரில் தீர்மானம் செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டது.

பிறகு ஸ்ரீ. வெங்கடாசலமய்யாவர்கள் வந்தனோபசாரம் சொன்னர்.

215283




அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்




அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது.

அமிர்தாஞ்சனம்


## ஒரு வேண்டுகோள்

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் நேரிலும் சொல்லிவருகிறார்கள். ஆர்யதர்மம் நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதிய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.


முகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்,

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

'பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள்'

முதல்பாகம்

ஸாரஸாரம் முதலியன.

விலை ரூ. 1—8—0

இரண்டாம் பாகம்

விரோதபரிஹாரம் முதலியனவும் பரமபதஸோபாநமும்.

விலை ரூ. 1—4—0

இரண்டும் சேர்த்து

ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு ரு. 2-4-0

முகபஞ்சசதியின் முதல் பாகம்.

"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது, மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்., டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.


## அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்"
கும்பகோணம்.


தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்,

டி. ராமகிருஷ்ணய்யங்கார் எழுதியது.

ஆண்டாள் திருமணம். ரூ. 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.

மேன்மையான தன்மை படைத்தது

ஸைன்டிபிக்
டி. டி.
மிஸ்கி பெருங்காயம்

இரஸாயன தத்துவப்படி

இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)

இரத்த புஷ்டியை வளர்க்கிறது,

— அத்துடன் —

அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!

அஜீரணத்தை அகற்றுகின்றது!!

விலை ரூ. 1—14—0. பவுண்டு.

வேகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

முக்கிய கவனிப்பு

3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கரேக்கையோப்போன்ற 'கன்னூஸ் ப்ளேட்ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர்:—என். கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்
4
24
25-5-1939

215206.

1002
215286
297

REGD No. M. 2913. ARYADHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஸு வைகாசி-மீ 11வ 1939-ஸு மே-மீ 25வ | ஸ-21

## ஜபத்தினால் நோய் சிகிச்சை

### டாக்டர் எஸ். ஜே. பீடர்ஸ் அறிக்கை

“ரணசிகிச்சையினால் முடியாததை ஜபத்தினால் சொஸ்தப்படுத்தினேன்”

வைத்தியர்களால் கைவிடப்பட்டவர் மீண்டும் குணம் பெற்ற விபரம்

“[illegible] அல்லது வைத்தியர்களால்தான் உடல் பிணியைத் தீர்க்கமுடியுமென்று சொல்வதை நான் நம்பவில்லை. ஜபத்தினாலும் பிணியைத்தீர்க்க முடியும்” என்று டாக்டர் எஸ். ஜே. பீடர்ஸ் எழுதுகிறார்.

டாக்டர் பீடர்ஸ் ஓர் ஆங்கிலேயர். காமன்ஸ் சபையில் லிபரல் கட்சி அங்கத்தினர். தொழில் இலாகா மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசியுமாவர். காமன்ஸ் சபையில் வைத்திய பரீட்சையில் தேறாதவர்கள் வைத்தியம் செய்யக்கூடாதென்று சட்டம் வந்தபோது அதை எதிர்த்து அவர் பேசினார்.

“சில வருஷங்களுக்கு முன் நான் நோய் வாய்ப்பட்டு படுத்திருந்தேன். வைத்திய பரீட்சைகளில் தேறிய வைத்தியர்கள் ஒருவராலும் என்னை சொஸ்தம் செய்ய முடியாமல் போயிற்று. அதன் பின் ஸெய்ண்ட் இவான்ஸ் என்னுமிடத்தில் ஒருபெண் இருப்பதாகவும் அவள் ஜபத்தினால் வியாதிஸ்தர்களை சொஸ்தப்படுத்துவதாயும் எனக்குச்சொன்னார்கள். அந்தப்பெண்ணை நான் தருவித்தேன். அவள் எனக்கு மருந்து ஒன்றும் கொடுக்கவில்லை. அவள் என்னைத் தொட்டுக்கொண்டே ஜபம் செய்தாள். நான் குணமடைந்து விட்டேன். இது என்னுடைய சொந்த அநுபவம்.

“அதற்குப்பின் நானே அந்த சிகித்சை முறையை சாதகம் செய்தேன்.—அந்த முறையை ‘நம்பிக்கை’ என்றும், ‘வசீகரசக்தி’ என்றும் எந்தப்பெயர் வைத்து அழைத்தாலும் சரி—அந்த முறையினால் நானே பலரை சொஸ்தப்படுத்தியிருக்கிறேன். என்னுடைய சொந்த அநுபவத்திலிருந்து மேலும் இரண்டு உதாரணங்களைச் சொல்லுகிறேன்.

“ரணசிகிச்சை செய்யமுடியாத கொடிய புற்றுப்புண் (கான்சர்) வியாதியினால் ஒரு பெண் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். ஜபத்தினால் அந்தப்பெண்ணை சொஸ்தப்படுத்தினேன்.

“மற்றொரு மனிதன் கபவாத ஜுரத்தினால் அடிபட்டு சாகும் நிலைமையிலிருந்தான். அவனையும் சொஸ்தப்படுத்தினேன். மேற்சொன்ன இருவர்களும் வைத்தியர்களால் கைவிடப்பட்டவர்கள். அவர்களுக்கு மருந்து ஒன்றும் கொடுக்கவேயில்லை. ஜபத்தினாலேதான் சொஸ்தம் செய்தேன். ‘புற்றுப் புண்’ நோயினால் சிரமப்பட்டுக் கொண்டிருந்த பெண்ணுக்கு அந்த புண் இருந்த இடம் கூட தெரியாமல் சொஸ்தமாகிவிட்டது.

“நான் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கு சொஸ்தம்செய்திருக்கிறேன். பணம் வாங்காமல் இந்த தர்ம காரியத்தை நான் செய்தேன். இவ்வித தர்ம கைங்கரியம் செய்வது என் உரிமை என்றும் கருதுகிறேன்.”

(3-ம் பத்தி தொடர்ச்சி)

துடன் ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் இந்திய சமூகம் வேலைசெய்யவேண்டும்’ அதில் தான் பலமும் மதிப்பும் நிறைந்திருக்கின்றன. தங்கள் நிலைமை மேம்பாடடையவும் தங்களது ஸ்வீகார தேசமான தென்னாபிரிக்காவின் க்ஷேமத்துக்கும் இந்தியர்கள் மிகுந்த ஒற்றுமையுடன் பாடுபடுவதாக்கேட்பதைக் காட்டிலும் எனக்கு சந்தோஷமளிக்கக் கூடிய செய்தி வேறு கிடையாது. தங்களுடன் வசிக்கும் அண்டை அயலாருக்கு வெறுப்பளிக்கக் கூடிய விதமாக எந்த இந்தியரும் நடந்து கொள்ளக் கூடாது என்பதை மீண்டும் வற்புறுத்துகிறேன்.” ........என்று கூறியிருக்கிறார்.

## ஆபிரிகாவில் இந்தியர் நிலைமை

“இந்தியர்களிடம் தாராளமாக நடந்துகொள்ளவேண்டும்”

சர்க்காருக்கு எச்சரிக்கை

எதிர்கால க்ஷேமத்துக்கு உதவியாயிருப்பர்

டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணனின் செய்தி

ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் தத்துவ சாஸ்திர போசிரியாராக இருந்து வரும் டாக்டர் ஸர். எஸ் ராதாகிருஷ்ணன் அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்கி ஆபிரிகாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். பல கலாசாலைகளின் ஆதரவில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்துக்குப் புறப்படு முன் தென்னாபிரிக்காவுக்கு விடுத்த செய்தியில்....

“சர்க்கார் அழைப்பின் பேரில் இந்தியர்கள் தென்னாபிரிக்காவுக்கு வந்தனர். இந்த நாட்டை சீரும் செழிப்புமாக்க அவர்கள் வேலையும் செய்தனர். சந்தர்ப்பம் அளித்தால், இந்த நாட்டின் பொது க்ஷேமத்துக்கு இன்னும் மிகவும் பயன் தரத்தக்க முறையில் உழைப்பர் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

“அரசியல் விஷயங்களில் ஒரு ஸமூகம் வெற்றிகரமாக வேலை செய்ய வில்லையெனில், அதற்கு காரணம் நேர்மையாகவும் நீதியாகவும் அந்த ஸமூஹத்தை மற்றவர்கள் நடத்தவில்லையென்றே அர்த்தம். இந்தியர்களைப் பொறுத்த வரையில் அவர்களிடம் மற்றவர்கள் தாராளமாக நடந்து கொண்டால் முக்கியமாக ஜாதி, நிற பேதங்களின்றி நடந்து கொண்டால், தென்னாபிரிக்காவின் எதிர்கால க்ஷேமத்துக்கு அவர்கள் பெரிதும் உதவியாயிருப்பர்.

“தற்போதைய நிலைமையைச் சீர்திருத்தியாகவேண்டும் என்ற உண்மையான நிடத்

(2-ம் பத்தி பார்க்க)

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# நாடும் நடப்பும்.

## மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தி க்ஷயரோகநிதி

79 லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறது.

"மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி க்ஷய ரோக நிதிக்காக" மஹா வைசிராய் பிரபுவின் மனைவி மே. த. லின்லித்கோ சீமாட்டியார் சில மாதங்களுக்கு முன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்த விஷயம் நேயர்களுக்கு தெரிந்திருக்கும். இந்த வேண்டுகோட்கிணங்கி இந்தியாவின் நானாபாகங்களிலிருந்து நிதிக்கு நன்கொடை கிடைத்துவந்தது. ஒரு சில சமஸ்தானாதிபதிகள் ஏராளமாய் நன்கொடை கொடுத்திருந்தபோதிலும், பெரும்பாலான தொகை ஏழை மக்களிடமிருந்துதான் நிதிக்குப் போயிருக்கிறதென்பதை ஒருவரும் மறக்கமுடியாது.

இந்த நிதிக்கு 1938ஞு மார்ச்சுமீ 31உ வரையில் மொத்தம் ரூ. 79,04763-9-7 கிடைத்திருக்கிறது.

## கூந்தல் நன்கு வளர

ஒரு ஆசிரியரின் ஆராய்ச்சி

"கவலையைக் குறை, நிறை உணவு கொள். ஓய்வை அதிகரி. உடலை உருக்கும் உத்தி போகங்களைத் தணி!"............... இதுவே கூந்தல் நன்கு வளர, சிறந்த மார்க்கம் என்று அமெரிக்கா தேசத்து நியூயார்க் புக்னர் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் ஏ. ஓ. புட்சர் கூறுகிறார்.

உடல் புஷ்டி குறைந்தால், தலைமயிருக்குக் கிடைக்கக்கூடிய சக்தியும் குறையுமாம்.

## சென்னை கவர்னர்

மே. த. கனம் ஆர்தர் ஆஸ்வல்டு ஹோப் துரை

நவம்பர்மீ பதவி ஏற்பார்.

நமது சென்னை மாகாண கவர்னர், மே. த. லார்டு எர்ஸ்கின் பிரபு 1939ஞு நவம்பர்மீ கடைசி வாரத்தில் கவர்னர் பதவியிலிருந்து விலகுகிறார். அவருக்குப் பதில் மே. த. கனம் காப்டன் ஆர்தர் ஆஸ்வல்டு ஹோப் துரை M. C. M. P., அவர்களை "சென்னை கவர்னராக" மாட்சிமை தங்கிய ஆறாவது ஜார்ஜ் அரசர் நியமித்திருக்கிறார். இதன் விபரம் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

### பால்டிக்கடல்-மத்தியதரை கடல்

ஹிட்லருக்கு பால்டிக் கடலில் ஏகபோக உரிமை. மத்திய தரை கடலில் முஸோலினிக்குச் சர்வபாத்யம். அங்குள்ள பிரதேசங்கள் நாம் கூறுமலே அவரவர்களுக்கு வந்துவிட வேண்டும். எதிர்த்தால் யுத்தமாம்.

### முஸ்லீம் நாடுகளில் நாஜிகள்.

இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் விரோதமாக நாஜிகள் முஸ்லீம் நாடுகளில் பிரசாரம் செய்து வருகிறார்கள். அங்கு அவர்கள் "கிருஸ்துவ மதத்தை விட முகம்மதிய மதமே சிறந்தது. ஜர்மனியர்கள் முஸ்லீம் மதத்தில் பற்றுடையவர்களாகி இருந்து வருகிறார்கள். என்று பிரசாரம் செய்கிறார்கள்.

கைரோவில் ஒரு நாஜி பிரசாரசபை இருக்கிறது. ஜெர்மன் சர்க்கார் பிரசார இலாகா மாதமொன்றுக்கு 3 ஆயிரம் பவுன்கள் செலவிடுகிறார்கள். எகிப்து, சிரியா, இராக், பாலஸ்தீனம் அரேபியா முதலியவிடங்களில் நாஜிப் பிரசாரம் மும்முரமாயிருக்கிறது.

### ஹிட்லருக்கு வெற்றி

ஐரோப்பாவிலிருக்கும் எல்லா சிறிய தேசங்களையும் ஜெர்மன் சாம்ராஜ்யத்தோடு இணைத்துவிட ஹிட்லர் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். முதலில் சார் பிரதேசம், பிறகு ஆஸ்திரியா, கடைசியில் சார் ஸ்லேவேகிய பிரதேசங்கள், மெம்மல், பொஹிமியா, முதலியவைகளைக் கபளீகரம்செய்துகொண்டார் இப்போது போலந்துமீது அவருக்குக் கண் விழுந்துவிட்டது.

"டான்ஸிக்கடல் பாதை" தகராறை போலந்து ஜெர்மனியுடன் முதலில் தீர்த்துக் கொள்ளவேண்டும். இந்தப் பிரதேசங்கள் யாவும் சட்டப்படி ஜெர்மனிக்குட்பட்டவை. போலந்துக்கு உயிர்நாடி டான்ஸிக். இதை இழந்தால் போலந்து மற்றொரு செக்கோஸ்லேவேகியாவாகப் போய்விடும் என்பதில் சந்தேகமென்ன?

### ரஷ்ய ராஜதந்திரி ராஜிநாமா

ரஷ்யா தேசத்தின் அந்நிய நாட்டு இலாகா அமைச்சர் தோழர் லிட்வினாப் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

### பிரிட்டன் கேட்பது என்ன?

பால்டிக் கடல் பிரதேச நாடுகளை ஜெர்மனி கைப்பற்றினால் அதன்மூலம் ரஷ்யாவுக்கு ஆபத்து ஏற்படும். இந்த பிரதேசங்களுக்கு ரஷ்யா பாதுகாப்பு வரம் அளித்து விட்டது. ஆனால்பிரிட்டன் பாதுகாப்பளிக்கவில்லை. தந்திரசாலியான பிரிட்டன் மட்டும், "ரஷியாவை" தாங்கள் பாதுகாக்கும் தேசங்களுக்கு" ஆதரவு காட்ட வரும்படிக் கூறுகிறது. ரஷ்யா கை விரித்து விட்டது.

## தஞ்சை ஜில்லா ஹிந்து மகாநாடு.

மேமீ 28உ கூடும்.

தஞ்சை ஜில்லா ஹிந்து மகாநாடு மேமீ 28உ நியாக சமுத்திரம் என்ற கிராமத்தில் கூடும். ஒரு உபசரணைக்கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவிலிருக்கும் ஹிந்து அன்பர்கள் அனைவரும் மகாநாட்டில் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த மகாநாடு கூடும்பொழுது பாபநாசம் அரசியல் மகாநாடும் அங்கு கூடுகிறது. பிரபல தேசபக்தர்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்களெனத் தெரிகிறது. (மு-சி)

## ராணி ரூபாய் செல்லும்

வாங்கமறுத்தால் தண்டனை

"ராணி தலை" உள்ள ரூபாய்கள் செல்லாதென்ற வீண் புரளியைபரவும் நம்பவேண்டாம் "விக்டோரியா எம்பரஸ்" "விக்டோரியா குவீன்" என்ற எழுத்துள்ள எந்த ரூபாயும் மற்ற ரூபாய்களைப் போலச் செல்லத்தக்கதே. அந்த ரூபாய்களை வாங்க மறுப்பதும் செலாவணியாகாமல் தடுக்கும் முறையில் பிரசாரம் செய்வதும், சட்டப்படி குற்றமாகும். அப்படியாரேனும் வாங்க மறுத்தால், போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளேண்டு கொடுக்கும்படி பொதுஜனங்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அவர்கள் தவறாது கடுமையான தண்டனைக்கு ஆளாவார்கள் என காரைக்குடி நகர சபை கமிஷனர் ஸ்ரீ டி. புருஷோத்தம் அறிவிக்கிறார்.

## புதுக்கோட்டையில் கிரீஸ் தேசத்து ராஜகுமாரன்

ஐந்து தினங்கள் தங்குவார்.

மே. த. கிரீஸ் தேசத்து ராஜகுமாரர் பீட்டர் 20உ புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார்.

அவரை புதுக்கோட்டை சமஸ்தானத்து உதவி அதிகாரி ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் வரவேற்று உபசரித்தார்.

மே. த. பீட்டர் ராஜாங்க விருந்தினராகத் தங்கி இருக்கிறார். புதுக்கோட்டையில் 5 தினங்கள் தங்கி இருப்பார்.

## ஹிந்து-முஸ்லிம் கலவரம்

மேமீ 22உ ஷோலாப்பூரில் ஆர்ய சமாஜ தொண்டர்கள் ஒரு மசூதியின் வழியாகச் சென்றார்கள். அவர்கள் மசூதி முன் கோஷஞ்செய்தார்களாம். இதனால் முஸ்லீம்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டதாம். அவர்கள் தொண்டர்களைத் தாக்கினார்கள். இச்சம்பவத்தைக் கேட்டவுடன் ஹிந்துக்கள் ஏராளமாய் அங்கு கூடினார்கள். முஸ்லீம்களும் ஆயிரக்கணக்கில் வந்துவிட்டார்கள். உடனே கலவரம் ஏற்பட்டது. இதனால் இருவர் இறந்தனர். 20 பேர்களுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஒரு ஸ்திரீ அபாயகரமான ஸ்திதியிலிருக்கிறாள்.

### ஜெர்மன்-இதாலி ராணுவ ஒப்பந்தம்

மேமீ 22உ ஜெர்மனி-இதாலி ராணுவ ஒப்பந்தத்தில் இரண்டு தேசத்து மந்திரிகளும் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் 10 ஞு காலம் அமுலிலிருக்குமாம். யுத்தகாலத்தில் தங்களுடைய தரை, கடல், ஆகாயப்படைகளனைத்தையும் கொடுத்து உதவிசெய்வதென்பது ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்தாகும்.



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# மூகபஞ்ச சதீ

## மந்தஸ்மித சதகம்.

45 பீயூஷம் கலு பீயதே ஸுரஜனை: துக்தாம்புதிர் மத்யதே |
மஹேசைச்ச ஜடாகலாபநிகடை: மந்தாகினீ நஹ்யதே |
சீதாம்சு: பரிபூயதேச தமஸா தஸ்மாதியம் தாத்ருசீ |
காமாக்ஷி ஸ்மிதமஞ்ஜரீ தவ வசோ வைதக்ய முல்லங்கதே ||

காமாக்ஷி! காமாக்ஷியே. ஸுரஜனை:— தேவர்களால். பீயூஷம் கலு- அமிர்தமானது. பீயதே- பானம் செய்யப்படுகிறது. துக்தாம்புதி:— பால் ஸமுத்ரமானது. மத்யதே- கடையப்படுகிறது. மந்தாகினீ- கங்கையானது. மஹேசை:- பரமசிவனுடையது தான். ஜடாகலாபநிகடை:— சடைகளென்ற விலங்குகளால். நஹ்யதே- கட்டாயப்படுத்துகிறது. சீதாம்சு:— சந்திரனும். தமஸா- இருட்டினால் பரிபூயதே- அவமதிக்கப்படுகிறான். தஸ்மாத்- ஆதலால். தாத்ருசீ- அப்படிப்பட்ட, இயம்- இந்த. தவ- உனது. ஸ்மிதமஞ்ஜரீ- புன்சிரிப்போவென்றால். வசோவைதக்த்யம்- வாக்கின் ஸாமர்த்யத்தை. உல்லங்கதே- தாண்டி நிற்கிறது.

46 ஆசங்கே தவ மந்தஹாஸ லஹரீ மந்யாத்ருசீம் சந்த்ரிகாம் |
ஏகாம்ரேச குடும்பினி! ப்ரதிபதம் யஸ்யா: ப்ரபா ஸங்கமே!
வக்ஷோஜாம்புருஹே நதே ரஹயத: காஞ்சித்தசாம் கௌட்மலீம் |
ஆஸ்யாம்போருஹமம்ப! கிஞ்ச சனகைராலம்ப தேபுல்லதாம் ||

ஏகாம்ரேச குடும்பினி! ஏகாம்பரநாதனுக்கு பத்னியான அம்பி! தாயான காமாக்ஷியே. தவ- உன்னுடைய. மந்தஹாஸலஹரீம்- புன் சிரிப்பின் காந்தியை. அந்யாத்ருசீம்- அதிசயமான, சந்த்ரிகாம்- நிலாவாக. ஆசங்கே- நினைக்கிறேன். யஸ்யா:- எதனுடைய ப்ரபாஸங்கமே- காந்தியின் சேர்க்கையில். ப்ரதிபதம்- ஒவ்வொரு ஸமயத்திலும். தே- உனது. வக்ஷோஜாம்புருஹே- ஸ்தானங்களாகிற இரு தாமரைப்பூக்கள். கௌட்மலீம், காஞ்சித்தசாம்- மொட்டாக இருக்கும் ஒரு வித நிலைமையை நஹ்யத.- விடுகிறதில்லை. கிஞ்ச- மேலும் தே- உனது. ஆஸ்யாம்போருஹம்- முகமெனும் தாமரையும். சனகை:- மெள்ள மெள்ள புல்லதி- மலருகிறது.

47 ஆஸ்தீர்ணாதர காந்தி பல்லவசயே பாதம் முஹு ஜக்முஷீ |
காமத்ரோஹிணி மாம்ஸலஸ்மர சர ஜ்வாலாவலிம் வ்யஞ்ஜதீ |
நிந்தந்தீ கனஸார ஹாரவலயம் ஜ்யோத்ஸ்னாம்
ருணஸாநிதே காமாக்ஷி ஸ்மித சாதுரீ விரஹிணீ ரீதிம் ஜகாஹேதராம் ||

காமாக்ஷி! காமாக்ஷியே. தே- உனது. ஸ்மித சாதுரீ- புன்சிரிப்பின் சாதுர்யமானது. ஆஸ்தீர்ணாதர காந்திபல்லவசயே- பரவி நிற்கிற கீழ் உதடு காந்தியாகிய தளிர் கூட்டத்தில்- முஹு:- அடிக்கடி பாதம் ஜக்முஷீ- விழுந்து எழுந்திருப்பதாயும். காமத்ரோஹிணி- பரமசிவன் விஷயத்தில். மாம்ஸலஸ்மர சரஜ்வாலாவலிம்- அதிகமான மன்மத பாணத்தின் ஜ்வாலையை. வ்யஞ்ஜதீ- வெளிப்படுத்திருக்கிறதாயும். கனஸாரஹாரவலயம்- கற்பூரத்தையும் முத்துமாலையையும், ஜ்யோத்ஸ்னாம்ருணாளாநி- நிலாவையும், தாமரைத்தண்டையும், நிந்தந்தீ- இகழ்கிறதாயுமிருக்கிற விரஹிணீரீதிம்- விரஹமடைந்த ஸ்திரீயின் நிலைமையை, ஜகாஹேதராம்- அடைந்திருக்கிறது.

48 ஸூர்யலோகவிதௌ விகாஸமதிகம் யாந்தீ ஹரந்தீதம: ஸந்தோஹம் நமதாம் நிஜஸ்மரணத: தோஷாகரத்வேஷிணீ |
நிர்யாந்தீ வதனாரவிந்த குஹராத் நிர்த்தூத ஜாட்யாந்ருணாம் |
ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதத்யுதிமயீ சித்ரீயதே சந்த்ரிகா |

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. தவ- உனது. ஸ்மிதத்யுதிமயீ- புன்சிரிப்பு காந்தியாகிற சந்த்ரிகா- நிலாவானது. ஸூர்யாலோகவிதௌ- ஸூர்யனைப்பார்க்கும் போது. அதிகம் விகாஸம் யாந்தீ- அதிகமான காந்தியை அடைந்ததாயும். நிஜஸ்மரணத:- தன்னை நினைத்தமாத்திரத்திலேயே நமதாம்- நமஸ்கரிப்பவர்களுக்கு. தமஸ்ஸந்தோஹம்- இருள் கூட்டத்தை. ஹரந்தீ- போக்கடிக்கிறதாயும். தோஷாகரத்வேஷிணீ- சந்திரனை இகழ்கிறதாயும். வதனாரவிந்தகுஹராத்- முகமென்கிற தாமரைப்பூவின் மத்யிலிருந்து. நிர்யாந்தீ- வெளியானதாயும். ந்ருணாம்- ஜனங்களுடைய நிர்த்தூத ஜாட்யா- பாபத்தைப்போக்குகிறதாயுமிருந்து. சித்ரீயதே- விசித்திரமாயிருக்கிறது.

49 குண்டீகுர்யுரமீ கபோத கடனும் அஸ்மம்மனோ மாதினீம் |
ஸ்ரீ காமாக்ஷி! சிவம் கரா: தவசிவே! ஸ்ரீமந்தஹாஸாங்குரா: |
யேதந்வந்தி நிரந்தரம் தருணீ மஸ்தம்பேமக்ராமணீ கும்பத்வந்த விடம்பினீ ஸ்தனதடே முக்தாகுதாடம்பரம்.

சிவே! மங்களமூர்த்தியாகிய ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. யே எந்தப்புன்சிரிப்புகளானவை. நிரந்தரம்- எப்போதும், தருணீமஸ்தம்பேமக்ராமணீ கும்பத்வந்தவிடம்பினி- யௌவனமாகிற யானையின் இரண்டு கும்பங்களைப்போன்ற ஸ்தனதடே- ஸ்தன பிரதேசத்தில் முக்தாகுதாடம்பரம்- முத்துகளால் செய்யப்பட்ட விரிப்பின் நிலைமையை, தந்வந்தி- செய்கின்றனவோ. அமீ- இந்த சிவங்கரா:— மங்களகரங்களான தே- உனது. ஸ்ரீமந்தஹாஸாங்குரா:— புன்சிரிப்புக் கொழுந்துகள். அஸ்மந்மனோமாதினீம்- எமது மனதை கெடுக்கிற குபோதகடனும்- அக்ஞானத்தின் சேர்க்கையை. குண்டீகுர்யு:— அழிக்கச்செய்யட்டும்.

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
பிரமாதி-ஞு வைகாசி-மீ 11உ

## "கர்மானுஷ்டானத்தைப் பற்றி" கனம் ஆசாரியார்.

சென்னையில் நபி நாயகத்தினக்கொண்டாட்டம் 20உ நடைபெற்றது. நமது பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாசாரியர் அதில் ஓர் பிரஸங்கம் புரிந்தார். மத சம்பந்தமான கர்மானுஷ்டான விஷயத்தில், முஸ்லீம்களின் சிரத்தையைப் புகழ்ந்தும், ஹிந்துக்களின் அசிரத்தையை இகழ்ந்தும் கனம் ஆசாரியார் பேசினர். அவர் பேசியதின் சாராம்சமாவது:—

"முஸ்லீம் மதத்தினரிடம் தான் புராதன ஆசாரங்கள் இன்னும் காணப்படுகின்றன. நவீனக்கல்வி கற்ற ஹிந்துக்களிடம் புராதன ஆசாரம் காணப்படுவது அரிதாயிருக்கிறது. எவ்வளவு படித்த முஸ்லீமாயிருந்தாலும் ஸரி பிரார்த்தனை காலம் வந்து விட்டால் துணியை விரித்து பிரார்த்தனையைத் தொடங்கத் தவறுவதில்லை. படித்த ஹிந்துக்களோ ஐந்து நாட்களுக்கு ஒரு முறை கூட காலக்கடன்களைச் செய்வதில்லை. "வெளி வேஷத்தில் என்ன இருக்கிறது" என்று சிலர் கூறி சொல்லலாம். ஆயினும் தீர்க்கதரிசிகளான மத ஸ்தாபகர்கள் நாம் கட்டாயமாக அனுஸரிப்பதற்காகச் சில கர்மானுஷ்டான விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய கர்மங்களை ஹிந்துக்களைக் காட்டிலும் மஹம்மதியர்கள் நன்றாக இன்னும் அனுஷ்டித்து வருவதைப் பாராட்டுகிறேன்............".

மேற்கண்டவாறு ஸ்ரீமான் ஆசாரியர் பேசியிருப்பதில் ஹிந்துக்களுக்கு கர்மானுஷ்டானத்தில் சிரத்தையில்லாததைப்பற்றி வருத்தம் காட்டியிருப்பது விளங்குகிறது. இது மனப்பூர்வமான பேச்சாயிருக்கும் பக்ஷத்தில் ஸ்ரீ ஆசாரியாருடைய சிரத்தையைப் போற்றவேண்டியதே.

ஹிந்து மதத்தின கர்மானுஷ்டானம் மிக முக்யமானது. கர்மானுஷ்டானமின்றி மதமில்லை. மதமென்பது மானஸிக பாவனையுடன் மட்டும் நிற்கக்கூடியதன்று. அதற்கேற்பட்ட கர்மானுஷ்டானங்களாலேயே மத தர்மத்தை நாம் அனுஸரிக்க முடியும். ஆதலால், வெளி ஆடம்பரத்தினாலும், அர்த்தமற்ற அனுஷ்டானங்களாலும் தான் மதம் நிலைக்குமாவென்று சில குதர்க்கிகள் ஆக்ஷேபிக்க நியாயமில்லை. உலகத்தில் எந்த மதத்திலும் மானஸிக பாவனையுடன் சிற்சில கர்மானுஷ்டானங்களும் சேர்ந்தே மதம் பூர்ணமாகக் கூடியதாயிருக்கிறது. கிறிஸ்தவம், மஹம்மதியம், சிக்கியம், பௌத்தம் போன்ற எல்லா மதத்தினரும் ஒவ்வொரு மாதிரியான அனுஷ்டான விசேஷங்களை வைத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். அவைகளை "மூடநம்பிக்கை" என்று விட்டுவிடவில்லை. மஹம்மதியர் இத்தகைய அனுஷ்டானங்களை விடாமலிருப்பதை கனம் ஆசாரியார் கொண்டாடுவதிலிருந்தும், நவீன தோரணையில் மூழ்கியிருக்கிறவர்கட்கூட கர்மானுஷ்டானத்தின் ஆவச்யகத்தை உணர்ந்திருப்பது விளங்குகிறது.

ஹிந்துமதமானது கர்மானுஷ்டானத்தையே உயிராகக்கொண்டது. அதற்கேற்பட்ட சிறப்பெல்லாம் கர்மானுஷ்டானத்தினால்தான். ஸ்நானம், ஸந்த்யை, ஜபம், ஹோமம், தேவபூஜை முதலான அநேக கர்மானுஷ்டானங்கள் மிகுந்த சக்திவாய்ந்தவைகளாயும், இஹபர நன்மைகளை அபரிமிதமாக விளைவிக்கக்கூடியனவாயுமிருக்கின்றன. முன்காலத்திய ரிஷிகள் இந்த கர்மானுஷ்டானத்தினால்தான் "பிரம்ம தேஜஸ்" என்ற ஓர் அரிய சக்தியையும் ஆரோக்யம் ஆயுள் முதலிய ஸௌகர்யங்களையும் அபரிமிதமாகப் பெற்றிருந்தனர்.

"பிராணாயாமத்தை ஒழுங்காகச் செய்தால் எல்லா ரோகங்களும் விலகும்" என்று வைத்ய நூல்களும், தர்ம நூல்களும் கூறுகின்றன. ரிஷிகள் இதை அநுபவத்தில் கண்டவர்கள். தேக பயிற்சிக்காக இக்காலத்தில் எவ்வளவோ முறைகள் கையாளப்படுகின்றன. அவைகளெல்லாவற்றையும் விட "பிராணாயாமம்" மிகச் சிறந்ததென்பதை நாம் வற்புறுத்த முடியும். பிராணாயாமத்தின் மஹிமையால் அடையக் கூடாதது ஒன்றுமில்லை. இக்காலத்தில் கூட பிராணாயாம சக்தியால் பலர் உயர்ந்த தேக பலம் பெற்று ஆச்சர்யகரமான கார்யங்களைச் செய்துவருவதை நேரில் பார்த்துவருகிறோம். இப்படிப்பட்ட கர்மாக்கள் ஹிந்துமதத்தில் அநேகம் உண்டு.

இக்காலத்தியவர்கள் இவைகளை நம்பாமல் விட்டுவிட்டதாலேயே, தேக வலிமை, புத்திக் கூர்மை இழந்து தாழ்ந்தநிலைமைக்குப்போய்க் கொண்டிருக்கிறார்கள். "ரிஷிகள் நீண்ட நேரம் ஸந்தியாவந்தனம் அனுஷ்டித்து வந்ததால் தீர்க்காயுஸ்ஸைப் பெற்றார்கள்" என்று மனுஸ்மிருதி கூறுவது வெறும் ஸ்துதிமாத்திரமல்ல. ஜீவனத்தையே முக்கியமாகக்கொண்ட இக்காலத்தில் இத்தகைய கர்மானுஷ்டானங்களைச் செய்ய மாணவர்களுக்கும், மற்ற உத்யோகஸ்தர்களும் அவகாசமில்லையென ஸால்ஜாப்புச் சொல்லுகிறார்கள். முன் காலத்திலிருந்தவர் ஒருவர் பட்டினிகிடந்து இறந்துவிடவில்லை. முன்னோர்கள் பட்டினி கிடந்து தவிக்காததுடன் அடிமைத் தொழில் செய்யாமலே வயிரா கௌரவமாகப் புஜித்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இப்போது அந்நிய ராஜ்யத்தின் கீழ் அடைப்பட்டு கைங்கர்யம் செய்து பிழைப்பது வாஸ்தவமாயினும், அதற்காக நமது கர்மானுஷ்டானங்களைக் கைவிடவோ, இகழவோ என்ன நிர்ப்பந்தமுள்ளது? காலை மாலை வேளைகளில் வெகு சிறிய காலத்தை கர்மானுஷ்டானத்திற்கு ஏன் செலவிடக்கூடாது!

உத்யோகநேரம் கழிந்தபின் மாலைநேரங்களில், ஸமுத்ரக் கரைகளிலும், டவுன்ஹால்களிலும், உல்லாஸமாகக் காலங்கழித்து வீண் வம்பு பேச அவகாசம் கிடைக்கவில்லையா! இந்த அவகாசத்தில் ஸ்வல்பநேரத்தையாவது கர்மானுஷ்டானத்தில் செலவிட முடியாதா! தேகப் பயிற்சிக்காகப் பலர் தற்காலத்தில் ஏதேதோ உபாயங்களில் புகுந்து கஷ்டப்படுகிறார்கள். அவர்களும், கர்மானுஷ்டானங்கள் யாவும் மிகுந்த தேகப்பயிற்சி முறை நிறம்பியவை யென்பதை அநுபவத்தில் காணமுடியும். ஆதலால் கனம் ஆசாரியர், ஹிந்துக்கள் கர்மானுஷ்டானங்களைக் கைவிட்டுவிட்டார்களென்று குறை கூறுவதுடன் நிற்காமல் மாணக்கர்களும், உபாத்யாயர்களும், உத்யோகஸ்தர்களும் கர்மானுஷ்டானங்களைச் செய்யும்படி தூண்டக்கூடியவழியைக் காட்டவேண்டும். மஹம்மதியர்களுடைய பிரார்த்தனை காலம் முதலியவற்றிற்காக ஸர்க்கார் ஏற்பாடுகள் செய்திருப்பதுபோல் ஹிந்துக்களுக்கும் வஸதிகள் செய்து கொடுக்கட்டும். பாடசாலைகளில், நாஸ்திக்யமும், மத அசிரத்தையும் வளரும்படி நமது மாணவர்களுக்கு போதிக்கப்படுவதைத் தடுக்கவேண்டும். தவிர, கர்மானுஷ்டானமென்பது பிராம்மணர்களுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. தற்காலம் பிராம்மணரல்லாதார்களென்று வழங்கப்படுகிற நான்காவது வர்ணத்தினருக்கும் பற்பல கர்மானுஷ்டானங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சாஸ்திரமானது அவர்களுக்கு அநேக ஸம்ஸ்காரங்களையும், அனுஷ்டானங்களையும் விதித்திருக்கிறது. பிராம்மணர்களைப்போல் அவர்களும் நித்ய கர்மானுஷ்டானம் செய்யவேண்டியவர்களேயாவார்கள். ஆகையால் ஹிந்துக்களில் எல்லா ஜாதியாருக்கும் இது ஒரு நித்யக்கடனாக அமைந்திருக்கிறது. இதை ஒருவரும் விடமுடியாது. இப்படியிருந்தும், நவீன நாகரிக பித்து காரணமாக ஹிந்துக்களே மத சிரத்தை யிழந்து நிற்பது பரிதபிக்கத்தக்கது. கனம் ஆசாரியார் சொல்லுவதுபோல் மஹம்மதியர்களில் இத்தகைய நாஸ்திக்யம் ஏற்படவில்லை. நவீன நாகரிகமும், ஆங்கில பாஷை, ஆசாரம், வேஷம், மனப்போக்கு ஆகியவையாற்றாக்கும் ஹிந்துக்கள் மட்டும் அடிமைகளாகி விட்டதைக்கண்டு தலை குனிந்து வெட்கப்பட வேண்டியதே.

## குறிப்புகள்.

### போட்டிப்பரிசுகளும் சர்க்கார் கடமையும்.

குதிரைப்பந்தயம், போட்டிப் பரிசு, ஆகிய இரண்டும் சூதாட்டத்தைச் சேர்ந்தன. சூதாட்டத்தால் எவ்வளவு கெடுதல்கள் ஏற்படமுடியுமோ அவ்வளவும் போட்டிப் பரிசுகளால் ஏற்படுகின்றன. குதிரைப்பந்தயங்களினால் நாசமடைந்தவர்களுக்குக் கணக்கில்லை. போட்டிப் பரிசால் பலர் பணத்தை இழந்து பரிதவிக்கிறார்கள். பேராசையை உண்டுபண்ணி மனிதனின் குணத்தைப்போட்டிப்பரிசு கெடுத்துவருகிறது. பலருக்குப் பரிசு வரும் வரும் என்று எதிர்பார்க்கச்செய்து பலரை இது ஏமாற்றிவருகிறது. ஏமாற்றத்திற்குள்ளாக்கி சரீரத்தையும் கெடுக்கிறது. சரீர அவஸ்தைக்குட்படுத்தி வேதோடில்லாமல் பணத்தையும் இழக்கும்படி செய்கிறது. போட்டிப் பரிசுகளால் ஜனங்களுக்குப் பலிதத்தில் கெடுதியே யொழிய நன்மையல்ல. மதுவிலக்கு எவ்வளவு அவசியமோ அதைப்போல் குதிரைப்பந்தயம், போட்டிப்பரிசு, லாட்டரி ஆகியவைகள் ஒழியவேண்டியது மிக அவசியமாகும்.



301

பம்பாயில் "போட்டிப்பரிசுகள்" மீதுபிரேமை அதிகம். அநேகப் பத்திரிகைகள் இதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருக்கின்றன. பம்பாயில் லக்ஷக்கணக்கில் ஒரு வெள்ளைக்காரப் பத்திரிகை "போட்டிப் பரிசுகள்" மூலம் சம்பாதித்திருக்கிறது. பம்பாய் சர்க்கார் "போட்டிப் பரிசுகளை" ஒழிக்க விரும்பினர்கள். முதலில் இதற்காக ஒரு வரி விதித்திருக்கிறார்கள். இதன் மூலம் சர்க்காருக்கு வருமானம் கிடைக்கும்படி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. போட்டிப்பரிசுக்காக வசூலாகும் தொகையில் 12½% அரசாங்கத்துக்கு "வரி" கொடுத்துவிட வேண்டும். போட்டிப்பரிசுகளை நடத்துபவர்கள் சர்க்காரிடம் "அனுமதி" பெற வேண்டும். பம்பாயில் "போட்டிப் பரிசுகளை" ஒழிக்க இந்த வரி ஒரு முதல்படி யென்று கூறத்தேவையில்லை. விரைவில் பல விதவரிகளை அவர்கள் விதித்து பம்பாயிலிருந்து "போட்டிப் பரிசுகளை" விரட்டிவிடப் போகிறார்கள். கனம். கே. எம். முன்ஷி கொண்டு வந்த இந்தப் "போட்டிப் பரிசு மசோதாவுக்கு" பம்பாயில் எதிர்ப்பே இல்லை.

பம்பாயுக்கு அடுத்தபடி சென்னைக்குப் போட்டிப் பரிசுகள்மீது அதிக பிரேமை உண்டு. சென்னை ராஜதானியில் 100-க்கு 90-பத்திரிகைகள் (தினசரி-வாரம்-வாரமும்முறை-மாத வெளியீடு) "போட்டிப் பரிசுகள்" நடத்தி வருகின்றன.

போட்டிப் பரிசு, பத்திரிகை வளர்ச்சிக்கு அவசியமென்று சிலர் கூறுவர். குதிரை பந்தயத்தால், பல குதிரைப்பந்தயப் புத்தகங்கள் (ரேஸ் அக்சப்டன்ஸ்) ஆயிரக்கணக்கில் விற்கின்றன. இதனால் பத்திரிகை வளர்ச்சி என்று கூற முடியாது. சூதாட்டத்துக்குக் கொடுக்கும் வியர்த்தச் செலவென்றுதான் கூறவேண்டும். இதேமாதிரி போட்டிப்பந்தயங்களினால் பத்திரிகை யாவி வளர்ச்சியடைவதாகக் கூற முடியாது. பல பத்திரிகைகள் மோசடித்தனமாய் பரிசுகளைப்பகிர்ந்து கொடுத்துவருகின்றன. சில பத்திரிகைக்காரர்கள் தங்கள் தங்கள் உறவினர்களை வெளியிடங்களுக்கு அனுப்பி, அவர்களுக்குப் பரிசுகள் ஆயிரக்கணக்கில் விழுந்திருப்பதாகக் கூறுகிறார்கள். சிலவிடங்களில் பரிசே கொடுக்கப்படுவதேயில்லை. தமிழ்நாட்டில் ஒரு பிரபல வாரப் பத்திரிகை இந்தப்போட்டிப்பரிசுகள் நடத்துவதில் பிரசித்தம் அடைந்திருக்கிறது அந்தப் பத்திரிகை சென்ற 10 வருட காலத்தில் 20 லக்ஷ ரூபாய் சம்பாதித்திருப்பதாக நம்பத்தகுந்தவிடத்திலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இந்தப்பத்திரிகையின் போட்டிப் பரிசு வேலையைப் பார்த்துவிட்டு நான் எல்லா பத்திரிகைக்காரர்களும் இந்தத்தகாத வேலையை நடத்திவருகிறார்கள்.

சென்னை மாகாணமெங்கும் இந்தப்போட்டிப் பந்தய மோசடிகளைக் கண்டித்து வருகிறார்கள். பிரபல தேசிய தினசரியான 'சுதேசமித்திரன்' சில வருடங்களுக்கு முன்பே இந்த மோசடிகளைக் கண்டித்துப் பிரசாரம் செய்துவந்தது நேயர்கள் நன்கறிவார்கள். தற்சமயம் தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கும் 'தினமணி' என்ற தினசரி இந்தப் போட்டிப் பரிசுகளின் போக்யதைகளைப் பத்தி பத்தியாக வெளியிட்டு வருகிறது. பல தடவை இந்தப் போட்டிப்பரிசுகளின் குட்டுகளைக் கண்டித்து "தலையங்கமும், குறிப்புகளும்" எழுதியிருக்கிறது.

தமிழ் நாட்டில் நடைபெற்ற எல்லா அரசியல் மகாநாடுகளிலும், சமீபத்தில் நடைபெற்ற தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், "போட்டிப்பந்தய மோசடிகளை" நிறுத்தவேண்டுமென்றுத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குடந்தையில் ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி அய்யர் தலைமையில் கூடிய அரசியல் மகாநாட்டில் கூட இந்தப் "போட்டிப்பந்தயங்களை ஒழிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக" ஒரு தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஏன் இப்பொழுது இந்தப் போட்டிப்பந்தயங்களைப்பற்றிக் கூக்குரல்கள் எழும்புகின்றன? இவ்வளவு வருஷங்களாக யாவரும் மௌனமாக இருந்துவிட்டு இப்பொழுது கண்டிக்க முன்வருவானேன்? ஏனென்றால் இந்த மகா கொடிய போட்டிப் பரிசுகள்மூலம் பல குடும்பங்கள் இன்று வறுமையில் ஆழ்ந்து துன்புறுகின்றன. எனவே, ஆக்ஷேபனை கிளம்பியிருக்கிறது.

தற்சமயம் சென்னை அரசாங்கத்தினர் அடியோடு போட்டிப்பரிசுகளை ஒழிக்க முன்வாராவிடினும், பம்பாய் சர்க்காரைப் போலவாவது ஒரு வரி ஏற்படுத்தி இதனை ஒரு சட்டதிட்டத்திற்குள்ளாக்க வேண்டும். முதல் இல்லாமல் மாணவர்கள் முதல் கொண்டு போட்டிப் பரிசுகளை நடத்த முன் வருகிறார்களென்றால், இதன் மூலம்வருவாய் எவ்வளவு கிடைக்கும் என்று நாம் கூறாமலே நேயர்கள் அறிவர்.

சென்னை அரசாங்கத்துக்குத் தற்சமயம் வருமானம் மது விலக்கினால் அதிகமாய் குறைந்திருக்கிறது. அதற்கு ஈடு செய்ய வேண்டி "விற்பனை வரி", "புகையிலை வரி" போன்ற புதிய வரிகளை சிருஷ்டித்தார்கள். அதே போல் ஏன் "போட்டிப் பரிசுகள் வரி" என்ற ஒரு வரியை ஏற்படுத்தக்கூடாது என்று கேட்கிறோம். 100 க்கு 33⅓-விதம் வரி போடலாம் என்று சிபார்ஸ் செய்கிறோம். 5 ஆயிரம் ரூபாய் பரிசு கொடுக்கிறார்களென்றால், 25 ஆயிரம் ரூபாய் (குறைந்தது) வசூலாகிறது. இவ்வளவு சுலபமாகப் பத்திரிகைக்காரர்கள் சம்பாதிக்கிறார்கள். இவர்களுக்கு சர்க்கார் (பம்பாய் சர்க்காரைப்போல்) ஒரு வரிவிதித்தால் சர்க்காருக்கு ஆண்டு தோறும் 5 லக்ஷம் ரூபாயாவது கிடைக்கும். பரிசில் கலந்து கொள்பவர்களை இந்தப் புதிய வரி பாதிக்காது. பரிசு நடத்துபவர்கள் அடையும் லாபத்திலிருந்து இந்த வரியை கொடுக்கப் போகிறார்கள். பிரதம மந்திரி கனம். ராஜகோபாலசாரியார் கவனத்துக்கு இந்தப் போட்டிப் பந்தய மோசடிகளைக் கொண்டு வர விரும்புகிறோம். சென்னை மாகாணத்திலிருக்கும் அன்பர்கள் யாவரும் இந்தப் போட்டிப் பந்தயத்தின் கெடுதிகளைப்பற்றி நாடங்கும் பிரசாரம் செய்ய முன் வரும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம். [ L. S. மணி ]

### ராஜ்கோட் சீர்திருத்தக்கமிட்டி.

சென்ற சில வாரங்களாக ராஜ்கோட் சமஸ்தானத்தில் அடக்குமுறை தாண்டவமாடிற்று. தாகூர் சாகேப் மகாத்மா காந்திஜியின் யோசனைப்படி நடக்க மறுத்துவிட்டார். மே-மீ 20உ திடீரென்று தாகூர் சாகேப் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன்படி சமஸ்தானத்தில் அடக்குமுறை உத்திரவுகள் யாவும் ரத்து செய்யப்பட்டன. அபாரதத்தொகைகளைத் திருப்பிக்கொடுத்துவிட உத்தரவிட்டிருக்கிறார். 10 அங்கத்தினர்களடங்கிய ஒரு அரசியல் சீர்திருத்தக் கமிட்டியை தாகூர் சாகேப் நியமித்து ஒரு மாதத்திற்குள் ராஜ்கோட்டிற்கு வழங்க வேண்டிய சீர்திருத்தத்திட்டத்தை தயாரித்துத் தன்னிடம் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார். கமிட்டியில் முஸ்லீம்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தர்பார் வீரவாலா கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## மேன்மை தங்கிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள்

### திருவாரூருக்கு விஜயம்

#### மக்களின் மகத்தான வரவேற்பு

மே. த. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெகத்குரு சங்காராசாரியார் சுவாமிகள் 22-5-39 இரவு திருவாரூருக்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீ தியாகராஜ தேவஸ்தான பிரதம தர்மகர்த்தா கோவில் மரியாதைகளுடன் ஸ்ரீ ஆசார்யாள் சுவாமிகளை வரவேற்றனர். திருவாரூர் நகரப்பிரமுகர்களும், ஸர். ஆர். எஸ். சர்மாவும் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீ சுவாமிகளை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தார்கள். 23-5-39 காலை ஸ்ரீ சங்காராசாரியார் சுவாமிகள் ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோவிலுக்குச் சென்றார்கள். ஸ்ரீசுவாமிகள் 24தேதி மூலங்குடிக்குப் புறப்பட்டுச் செல்வார்கள்.

### ஹிந்தி எதிர்ப்பு.

ஹிந்தி எதிர்ப்புக்கிளர்ச்சி சம்பந்தமாகக் கோயமுத்தூர் சிறையில் சிறைவாஸம் அனுபவித்து வந்த ஸ்ரீ ஈ. வே ராமஸ்வாமி நாயக்கர் 22-10-39 மாலை தேக அசௌக்கியம் காரணமாக விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டதாம். நாயக்கருக்கு 1½ வருடக்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதுவரையில் அவர் 5 மீ 2) நாட்கள் தான் ஜெயிலில் தண்டனை அநுபவித்திருக்கிறார்.

### ஸ்ரீ பாட்லிவாலா கைதியானர்.

#### ராஜாங்கத்துவேஷ குற்றத்துக்காக.

காங்கிரஸ் அபேதவாதக் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். எஸ். பாட்லிவாலா சென்ற ஏப்ரல்மீ யுத்தத்தை எதிர்த்து கல்கத்தா சர்வகலாசாலை மண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அந்தப் பிரசங்கம் துவேஷமூட்டும்படி இருந்ததென்று இரகசிய போலீசார் கூறி 22—5—39 இரவு ஸ்ரீ பாட்லிவாலாவை கைது செய்தனர். இ. பி. கோ. 124 பிரிவின்படி இவர்மீது வழக்குத் வழக்குத் தொடரப்படும். 500 ரூ ஜாமீனில் இவரை கல்கத்தா பிரதம மாஜிஸ்திரேட் விடுதலை செய்திருக்கிறார். ஜூன்மீ 5உ கல்கத்தாவில் விசாரணை நடக்கும்.

ஸ்ரீ பாட்லிவாலாவை சென்ற வருஷம் சென்னை காங்கிரஸ் சர்க்கார் கைதுசெய்து, பிறகு விடுதலை செய்தவிஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்.

### ராஜாஜீ-கவர்னர் பேட்டி.

பிரதமமந்திரி கனம் ஸ்ரீ. ராஜகோபாலாசாரியார் மேமீ 22உ மாலை 6 மணிக்கு உதகமண்டலம் வந்துசேர்ந்தார். கவர்னர் மாளிகையில் மே. த. லார்டு எர்ஸ்கின் பிரபுவை பேட்டிகண்டு பேசிக்கொண்டிருந்தார்.

# புத்தக விமர்சனம்.
# REVIEWS
॥ पुस्तकपरामर्शः ॥

["ஆர்யதர்மம்" வாரப்பதிப்பில் மதிப்புரைக்காக அனுப்பப்படும் புஸ்தகங்கள், பத்திரிகைகள் யாவும் பிரதி திங்கட்கிழமைக்குள் ஆசிரியர் விலாசத்துக்கு அனுப்பவேண்டும். ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பப்படவேண்டும். "மதிப்புரை" விஷயமாக தர்க்கங்கள்—ஆக்ஷேபணைகள் பிரசுரிக்கப்படமாட்டாது. கடிதப்போக்குவரத்தும் நடத்தப்படமாட்டாது. ஆசிரியர்.]

## "ஸ்தோத்ர ரத்னவளி"

ஆசிரியர்:—ஸ்ரீ ஆர். சுப்பரத்னம் அய்யர்
இன்ஸ்பெக்டர். S. I. Ry.
மதுரை.

(கிடைக்குமிடம்:)—ஸ்ரீ டி. ராமசேஷ அய்யர்.
விரூர், புதுக்கோட்டை.

விலை:— 5 அணா. (இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகத்துக்கு சென்னை ராஜாங்கக்கல்லூரியில் வடமொழி ஆசிரியராக வேலை பார்த்துவரும் வித்யாசாகர வித்யா வாசஸ்பதி ஸ்ரீ. P. P. சுப்பிரமணிய சாஸ்திரிகள் B. A. (oxon) M. A. அவர்கள் மதிப்புரை எழுதியுள்ளார். மஹாமஹோபாத்யாய எஸ். குப்புசாமி சாஸ்திரிகளும் திவான்பகதூர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகளும் புத்தகத்தைப்பற்றித் தங்களது அபிப்பிராயங்களை எழுதியிருக்கிறார்கள்.

"ஸ்தோத்ர ரத்னவளி" 72 பக்கங்கள் கொண்டது. நல்ல காகிதம். நேர்த்தியான அச்சு. உயர்ந்த பதிப்பு. ஸம்ஸ்கிருதம், கிரந்தம், தமிழ், மூன்று பாஷைகளில், பிராசீனமான ஸ்துதிகளிலிருந்து முக்கியமானவைகளை எடுத்து அச்சிடப்பட்டிருக்கின்றன. பொழிப்புரையுடன் அச்சிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

"இப்புத்தகத்தின் விற்பனையின் நேரம் புதுக்கோட்டை விரூர் கிராமத்திலிருக்கும் விநாயகர், ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவில்களின் ஜீர்ண உத்தாரணத்திற்கு உபயோகப் படுத்தப்படும்" என்று ஆசிரியர் கூறியிருப்பதால் அன்பர்கள் அனைவரும் இப்புத்தகத்தை வாங்கி கடவுளின் கிருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எஸ். எஸ். எல். ஸி பிரவேசப்பரீக்ஷையில் தேறிவிட்டுக்கல்லூரியில் சேரும் (இண்டர்மீடியெட் வகுப்பில்) மாணவர்களுக்குச் சென்னையிலிருந்துவமத பிரசார சபையினர் ஆண்டுதோறும் இலவசமாக கிருஸ்துவ மத வேத புஸ்தகத்தை கொடுத்து வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். பெரும்பாலும் ஹிந்து மாணவர்களுக்கு மதம் மாற வேண்டியே இப்புத்தகம் கொடுக்கப்படுகிறது என்பது எனது அபிப்பிராயம். என்னே! கிருஸ்துவ பாதிரிமார் பிரசார வேலை! "ஸ்தோத்ர ரத்னவளி" போன்ற புத்தகங்களை ஹிந்து மதத்தில் பற்றுள்ள சபைகளாவது, ஆஸ்திகப்பிரமுகர்களாவது மாணவர்களுக்கு வழங்கினால் எவ்வளவு நன்றாயிருக்கும். அந்த நன்னாளை நாம் எதிர்பார்ப்போம்!

(எல். எஸ். மணி.)
உதவி ஆசிரியர்.

## திருபர்களும் வாசகர்களும்

### கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

"ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி தினசரி வாசகர்களும், நிருபர்களும், ஏராளமாய் செய்திகள் அனுப்பி வருகிறார்கள். பத்திரிகையின்மீதுள்ள அபிமானத்தினால் அவர்கள் செய்யும் உதவிக்கு நமது நன்றி உரித்தாகுக. நமது பத்திரிகையில் அதிகப் பக்கங்கள் இல்லாததால், தற்சமயம் செய்திகள் மிகக்குறைக்கப்பட்டுத் திருத்தப்படுகின்றன. இதனை ஒட்டிச் சிலருக்கு வருத்தமேற்படலாம்.

நிருபர்களும், வாசகர்களும், நம்முடன் ஒத்துழைத்து பத்திரிகை நன்கு வெளிவர உதவவேண்டும். நிருபர்கள் (Latest News) ஒரு வாரத்துக்கு முன் நடந்த விஷயங்களைப் பற்றி எழுதி அனுப்பவேண்டும். நான்கு வாரங்களுக்குமுன் நடந்த பழையசெய்திகள் பக்கம் பக்கமாக எழுதியனுப்புவது சரியல்ல. செய்திகளில் ராஜாங்க தூஷணை, ஜாதி, மத, கட்சி நிந்தனை, வகுப்புத்துவேஷம், முதலியவைகள் கண்டிப்பாக இருக்கக்கூடாது. ஆர்யதர்மத்துக்கு ஆயிரக்கணக்கில் சந்தாதார்களும் நேயர்களும் இருப்பதால், எல்லோருடைய விருப்பத்துக்கும் விரோதமின்றி செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன. நமது பத்திரிகையில் உள்நாட்டுச்செய்தி, வெளிநாட்டுச்செய்தி, செய்தித்திரட்டு, மதிப்புரை, உள்ளூர் வர்த்தமானம் முதலிய பகுதிகளை வெளியிடும்படி பெரும்பாலோர் எழுதிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கட்டுரைகளும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் வழக்கம்போல் வெளிவரும்.

புதிதாக அடுத்த வாரம் முதல் "ஆசிரியருக்குக் கடிதங்கள்" (Letters to the Editor) என்ற ஒருபகுதி சேர்க்கப்படும். இந்தப் பிரிவுக்கு நேயர்களும், நிருபர்களும், முக்கியப் பிரச்னையைப்பற்றி அச்சம், தயை (Without Fear or Favour) தாக்ஷிண்யமின்றி மிகச்சுருக்கமாக ஒரே பக்கத்தில் (50 வரிகளுக்கு மேல் போகாமல்) எழுதலாம். பிரசாரத்துக்கோ-தர்க்கத்துக்கோ இப்பகுதியை உபயோகப்படுத்தலாகாது. வரதக்ஷிணைக் கொடுமை, பிராமண நிந்தனை புரிய வரிகள், பொது காரியங்களில் ஆக்ஷேபனை, சில அக்ரமங்களைப் பகிரங்கப்படுத்துவது, தேவஸ்தானங்கள், பொதுகாரியாலயங்கள், முனிசிபாலிடிகள், பஞ்சாயத்து போர்டுகள், முதலியவைகளில் நடக்கும் ஊழல்களைப் பற்றியும்; ஜில்லா, தாலுகா, கிராமங்களில் அரசாங்க அதிகாரிகள், ரயில்வே அதிகாரிகள் பொதுஜனங்களுக்கு திருப்தியின்றி காரியங்கள் நடத்திவருவதாயுள்ள ஆக்ஷேபணைகளையும்; எழுதலாம்.

இந்த மாதிரிச்செய்திகளை உடனுக்குடன் பிரசுரம்செய்து நன்மைசெய்ய இந்தப் பகுதி உபயோகப்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே, நேயர்களும் நிருபர்களும் இந்தப் பகுதியை உபயோகப்படுத்திக் கொள்வார்களாக.

[ஆசிரியர் & மானேஜர்.]

## வெளியூர்ச் செய்திகள்,

### முடிகொண்டான்

ஸ்ரீசங்கர ஸ்வயம்ப்ரகாசாநந்த ஸாமவேத பாடசாலை.

மேற்படி பாடசாலை சுமார் 4 வருஷங்களாக இவ்வூர் ஆஸ்திகர்களின் ஆதரவைக்கொண்டு நடந்துவருகிறது. இதில் 10 மாணவர்கள் அத்யயனம் செய்துவருகிறார்கள். இங்கு தனியாக ஒரு யஜுர்வேத பாடசாலையும் ஏற்பட்டு நடந்துவருகிறது. இரண்டு பாடசாலைகளும் தனித்தனியே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. (ஓ-நி)

### கும்பகோணம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய சங்கம்.

மேற்படி சங்கத்தின் சங்கீத பாடசாலையில் சென்ற ஞாயிறன்று மைசூர் ஸம்ஸ்கிருத கல்லூரித் தலைவர் ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் அவர்கள் 'தர்மா' என்பதைப்பற்றி உபன்யாஸம் செய்தார். பிரசங்கத்துக்கு ஏராளமாய் ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். மேற்படி சங்க ஆதரவில் பிரதிவாரம் பிரசங்கங்கள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### திண்டுக்கல்

காலக்ஷேபம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (14—5—39) ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ஸ்ரீ ஸோமசேகர சாஸ்திரிகள் ஸ்ரீ ஸ்வபாவரிபு அல்லது இயற்கை நாயனார் சரித்திரத்தை உபன்யஸித்தார்.

### உடையாளூர்

ஸ்ரீபாகவத உபன்யாஸம்.

உடையாளூர் மடத்தில் வைகாசி-மீ 1௳ முதல் தினசரி இரவு 7 மணி முதல் 8 மணி வரை ஸ்ரீ ஆத்மநாத சாஸ்திரியார், "ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தை" உபன்யாஸம் செய்துவருகிறார். (ஓ-நி.)

### பழூர்

கீர்வாண வாணி பரிஷத்

21—5—39 பழூர் வேதபாடசாலையில் மேற்படி பரிஷத்தின் கூட்டம் திருச்சிராப்பள்ளி யஜ்ஞேச்வர சாஸ்திரிகள் அவர்களின் தலைமையில் கூடிற்று. தலைவர் "ஸ்ரீபாகவத தத்வம்" என்ற விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார்கள். ஸ்ரீ S. V. சுப்ரமணிய சாஸ்திரியாவருக்கும் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் இனிது கலைந்தது. (ஓ-நி)



## "மனஸ் தத்துவம்"

ஸ்ரீ வியாகரண சாஹித்ய சிரோமணி
T. S. வேங்கடராமய்யர்
உபன்யாசம்.

1939-ஞு மே-மீ 2௳ திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் பிரும்மஸ்ரீ வியாகரண, சாஹித்ய சிரோமணி T. S வேங்கடராமய்யர் அவர்களால் செய்யப்பட்ட மனஸ் தத்துவம் என்ற விஷயத்தைப் பற்றிய உபன்யாஸத்தின் ஸாராம்சமாவது:—

எண்ணிறந்த சாஸ்திரங்கள் ஆத்ம சுயரூபத்தின் நிச்சயத்திற்கும், கடவுளை ஆராதிக்க சரீரத்தையும், தியானம் செய்ய மனதையும், நிர்மலமான புத்தியை அடைய தீர்த்தங்களையும், தத்துவங்களை உபதேசிக்க உத்தம குருக்களையும், கொடுத்த பகவான் அருள நாம் சம்சாரத்தில் ஈடுபட உபகரணமாக இவைகளை எண்ணி, சம்சார சாகரத்தில் அமிழ்வோமாயின் கடவுள் என்செய்வார் என விசுவகுண தரிசத்தில் விளக்கியிருக்கிறார் வெங்கடாத்வரி என்னும் கவிஞர். அவர் கூறியுள்ளதில் தியானஸாதனமாக மனது. அதனைப்பற்றி மனதென்பதுயாது? எங்குள்ளது? அதன் தொழிலென்ன? அது எதனால் ஆனது? அதன் பெருமை என்ன? என்பனவற்றை ஆராய்வோம்.

இங்கு மனஸ் என்பது அந்தக்கரணம் என்பதற்குப் பொருளாக உலகில் யாவருக்கும் தெரியும் வண்ணம் எல்லோராலும் வழங்கப்பட்டுவரும் மனஸ் என்பதைத்தான் விசாரிக்கிறேன். சாஸ்திரங்களில் கூறியுள்ளபடிக்கு மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற விருத்தி பேதத்திலுள்ள மனஸ் என்பதை அல்ல. மனது காணக்கூடாததாகிய சக்தி போலுள்ளது. பிரத்யக்ஷமாய்க் காண முடியாது. விருப்பம், வெறுப்பு, சங்கற்பம், சந்தேகம், நிச்சயம், ஊகம் முதலியன அதன் செய்கைகள்.

மனதென்பது ஸ்தூல சரீரமே யென்று நாஸ்திகர் சொல்லுகின்றனர். அஃதாவது பிருதிவி, அப்பு, முதலிய பூதங்கள் தேகவடிவமாய் பரிணமிக்க அச்சரீரத்தில் விமரிச சக்தியும் அதனால் விருப்பம் முதலியன ஏற்படுகின்றன என கூறுகின்றனர். அங்ஙனமாயின் சுஷுப்தியிலும், மூர்ச்சை காலத்திலும் அந்த சக்தி ஏன் காணவில்லை என்பதற்கு விடையில்லை. ஆனதால் அவர்கள் கூறுவது சரியில்லை. சில தத்வ ஆராய்ச்சியாளர்கள் உணர்ச்சி, எண்ணம், தீர்மானம், முதலியன ஏற்படும்பொழுது சரீரத்தை பரிசோதித்ததில் மூளையில் கொஞ்சம் சலனம் ஏற்படுகின்றது. ஆதலால் இந்த சலனத்தால் இவைகள் ஏற்படுவதால் மூளைக்கன்னியமாக மனதென்றொன்று இல்லையெனக் கூறுகின்றனர்.

இவர்கள் கூறுவதும் உயிரற்ற உடலிலுள்ள மூளையை சலிக்கச்செய்யலாம். அப்பொழுது உணர்ச்சி, எண்ணம் முதலியன உண்டாகவில்லை. ஆதலால் மனது சூக்ஷமம் ஆனதால் அதன் சலனம் கண்ணால் காணமுடியாது. மூளை ஸ்தூலப்பொருள். அதன் சலனம் காண முடிகிறது. காணக்கூடிய பொருளின் சலனமும் காண முடியாத பொருளின் சலனமும் ஒன்றெனக்கொள்வது பொருந்தாமையாலும் சரியல்ல. உதாரணமாக கடிகாரத்தின் முள் சலிப்பது நமக்குத் தெரிகிறது. சலிக்கக் காரணமான சக்கிரங்கள் சலனம் நமக்கு தெரியவில்லை. ஆதல் பற்றி இரண்டின் சலனமும் ஒன்றென்று கொள்ள முடியுமா? காரால் சுத்த சைகிள் ஓடுவதால் காரும் சைகிளும் ஒன்றென்னலாமா? அதுபோல மனதின் சலனம் வேறு. மூளையின் சலனம் வேறு. ஆதலால் மனமும் மூளையும் ஒன்றல்ல; வெவ்வேறு தான்.

ஒரு உடலில் ஒரு மனமா, அல்லது அதிகமா எனின், மூரான், தேள் முதலியவைகளை துண்டித்தால் இரு கூறுகளும் சலிப்பதால் அந்த சலனத்திற்கு காரணம் வேதனையாதலால் வேதனை மனதில்லாமல் ஏற்படாது. ஆதலால் மனம் ஒன்றிற்கு அதிகம் என்னலாம். ஆயினும் சலனத்திற்கு காரணம் வேதனை என்பது மட்டுமில்லை. ரக்த ஓட்டத்தினாலும் வாயுவினாலும் ஏற்படலாம். ஆதலால் வேதனை காரணமாக சலனமில்லை. ஆகலால் மனம் ஒன்று என்பதுதான் யுக்தமாக ஆகின்றது. இங்ஙனமுள்ள மனம் உடலில் தங்கியுள்ள இடம் யாதெனில் தத்துவ சாஸ்திரிகள் மூளையில் என்கின்றனர். நமது சாஸ்திரங்களிலோ மூன்று இடம் மனதிற்கென்றும் ஒவ்வோரிடத்திலும் அதன் வேலைகள் வெவ்வேறென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதில் தத்துவ சாஸ்திரிகளின் கூற்று சரியானதாவென ஆராய்வோமாயின் அது ஒருவாறு சரியாகவே தோன்றுகின்றதாயினும், சாஸ்திரத்தில் கூறியிருப்பது தான் சித்தாந்தமாகின்றது. எங்ஙனமெனின், உலகில் கிரியாஸ்தானத்தைக்காட்டிலும் நிஜஸ்தானம் வேறாக வேயிருப்பதை நாம் கண் கூடாகக்காண்கிறோம். உழுது பயிரிடுதல், வழக்கு விசாரித்தல், வண்டி இழுத்தல், இங்ஙனமான கிரியைகள், வயல், கோர்ட்டு, ரோடு, முதலிய இடங்களிலும், இவ்வேலையைச் செய்வோர் வேலையின்றி சும்மாவிருக்குமிடம் வயல், கோர்ட்டு, ரோடு, இவைகளுக்கன்னியமாய் வேறோரிடம் இதேபோல் மனதிற்கும் வேலை செய்யுமிடம் ஒன்று. அஃதன்றி இருக்குமிடமொன்றும் இருக்க வேண்டுமாதலால் நியாயாதிபதி வழக்கு விசாரிக்க கோர்டில் உள்ள ஆஸனத்தில் அமருவதுபோல் மனமும் தன் வேலையைச்செய்ய மூளையை இடமாகக்கொண்டுள்ளது. அஃதன்றி தனக்கு இருப்பிடமாக ஹிருதய கமலத்தைக் கொண்டுள்ளது. என்பதுதான் சரியாகவிருக்கிறது.

மேலும், சிலர் மூளை இரண்டு; ஒன்று பெரிய மூளை; இரண்டாவது சிறிய மூளை ஆதலால் ஒன்று மனதிற்கு வேலையின்றியிருப்பதற்கு அவர்கள் சொல்வதும் சரியில்லை. எங்ஙனமெனில் மனதின் செய்கை இரண்டுவிதமாகவுள்ளது. ஒன்று சரியானதாகவும் மற்றொன்று தாறுமாறாகவுள்ளதெனவும் இதைத்தான் ஜாக்ரத் என்றும் சொப்பனமென்றும் கூறுவது. ஸொப்பனமாவது எல்லா இந்திரியங்களும் அடங்கி மனம்மட்டும் அடங்காமல் இருப்பதுடன் கங்கைக்கு வடக்கில் ராமேசுவரம் உள்ளதாக மாங்கள் பேசுவதாகவும், தானே இறந்துவிட்டதாகவும் தாறுமாறாக மனம் வேலை செய்வது. ஒழுங்காக வேலை செய்வது ஜாக்கிரத் உள்ளது. உள்ளவாறே தோன்றுதல் என்பது. ஆதலால் இரண்டு வேலைகளுக்கும் இரண்டிடம் வேண்டியதவசியமாக விருப்பதால் இரண்டு மூளையும் மனதிற்கு கிரியை ஸ்தானங்கள் தான். ஆதலால் கிரியை இன்றி சுகமாக விருக்கக்கூடிய இடம் ஹிருதய கமலம் என மனதிற்கு இடம் மூன்று.

முற்கூறிய இரண்டிடமும் கிரியாஸ்தானங்கள் பின் கூறியது நிஜஸ்தானம், லயஸ்தானம் என்று சாஸ்திரங்களில் கூறியிருப்பதுதான்யுக்தம்.

(தொடரும்.

## எல்லோருக்கும் குடி தண்ணீர்.

### ஒரு ஸ்டேஷன் மாஸ்டரின் தயாள குணம்.

சிலவையும் ஏற்றுக்கொள்ளுகிறார்.

வட நாட்டில் ஒரு ஸ்டேஷன் மாஸ்டரைப் பற்றி ஒரு நல்ல விஷயம் நேயர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தென்னிந்திய ரயில்வே ஸ்டேஷன்மாஸ்டர்கள் இதைச்சற்றுப் படித்துப்பார்க்க வேண்டும்.

ஈஸ்டு இந்திய ரயில்வேயில் பாலமௌ என்பது ஒரு ஸ்டேஷன். அங்கு ஒரு ஸ்டேஷன்மாஸ்டர் இருக்கிறார். அவர் கத்தியவாரைச்சேர்ந்தவர். ஹிந்து மதத்தினர். தெய்வ பக்தியுடையவர்.

"தினசரி ரயில்வே பிரயாணிகள் எல்லோருக்கும் தாகவிடாயைத் தணிப்பதற்காக இந்த ஸ்டேஷன்மாஸ்டர் 50 மண்பானைகள் நிறைய தண்ணீர் நிறப்பி விடுகிறார். ரயில் வந்ததும் பிரயாணிகளனைவருக்கும் தண்ணீர் கொடுக்க ஆட்களை நியமித்திருக்கிறார்.

ஸ்டேஷன்மாஸ்டர் வேலைகள் முடிந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கும் காலத்தில் கூட அவரே நேரில் வந்து தண்ணீர் கொடுத்து வருகிறார்.

தண்ணீர் நிரப்புவது, தண்ணீர் கொடுப்பது முதலியவைகளுக்காக ஏற்படும் சிலவுகளைத் தாமே ஏற்றுக்கொள்ளுகிறார். இவருடைய இந்த தர்ம குணத்தை எல்லோரும் பாராட்டி புகழ்ந்து வருகிறார்கள்.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக்
டி.டி
மிஸ்கி பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
விலை ரூ. 1—14—0. பவுண்டு.
வேதுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

# சிசு விவாஹத்தடைச் சட்டம்:

(தர்மதாஸ்)

விவாஹம் ஓர் ஸம்ஸ்காரமாகும். பெண்களுக்கு உபநயன ஸ்தானத்திலுள்ளது. ஆகையால் பையன்களுக்கு உபநயனம் செய்யும் வயதில் பெண்களுக்கு விவாஹம் செய்ய வேண்டியது. தற்காலம் 14 வயதுக்குள் விவாஹம்செய்வது சட்டப்படி குற்றமாகும். பிராம்மணர்களுக்கோ எட்டுவித விவாஹங்களுக்குள் கன்னிகாதானமே விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மதக்கோட்பாடுகளுக்கடங்கிநடந்தால் சட்டத்திற்கு விரோதமாகிறது. அன்றி சட்டத்தை அனுசரித்தாலோ சாஸ்திர ஸம்மதமற்ற முறையில் நடக்கவேண்டியிருக்கிறது.

சிசு விவாஹத்தடைச்சட்டத்தின் நோக்கம் யாது? பால்ய விவாஹத்தால் ஸமூஹத்துக்கு ஏற்படக்கூடியக் கெடுதிகளைத்தடுப்பதே. விவாஹம் பெண்களுக்கு உபநயனமாகுமென்பதில் நம்பிக்கையில்லாததாலும் கேவலம் காம இச்சாநிவர்த்திக்கும், பிரஜோத்பத்திக்குமே விவாஹம் என்ற எண்ணத்தாலும் இச்சட்டம் சீர்திருத்தவாதிகளால் கொண்டுவரப்பட்டது.

ஆனால் இதற்கு நேர்மாறுபாடான சீரிய ஆஸ்திகக்கொள்கைகளையுடையோர் பலரிருக்கிறார்கள். இச்சட்டம் அமுலுக்கு வரும் சமயத்தில் எவ்வளவு அளவற்ற கன்னிகாதானங்கள் நடந்தன என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கும். அவ்வாறு அநேகமாக விவாஹம் ஆகக்கூடிய மிகச்சிறிய பெண்களுக்கு கூட அப்பொழுதே விவாஹம் ஆகிவிட்டபடியாலேயே, சில வருஷங்களாக, சிசு விவாஹத்தடைச்சட்டத்தின் கொடுமையை ஆஸ்திகர் அனுபவத்தில் உணராதிருந்தனர்.

தடைச்சட்டம், சீர்திருத்தவாதிகளுக்கும் விவாஹம் நடத்தத் நிதிய மற்றவர்களுக்கும் வெளித்தோற்றத்தில் அநுகூலமாயிருக்கிறது ஆஸ்திகர்களுக்கோ மிகவும் இடையூறாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் 12 முதல் 20, 22 வரையிலுங் கூட விவாஹமாகாத பெண்களிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பிராமணரல்லாத ஜாதிப்பெண்களைப் போல் பருவமடைந்த பின் விவாஹம் ஆகும் வரை வெளி வராது இருக்கவுமில்லை. ஒன்று இவர்கள் வெளியில்வந்து பிராஹ்மண ஸமூகத்துக்கே சீர்கேட்டை உண்டுபண்ண வேண்டும். அல்லது கோஷாஸ்திரீகளாக வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். இதுதான் சிசு விவாஹத்தடைச்சட்டத்தின் விளைவு. இதுவே சீர்திருத்தம்! என்னே மடமை! சீர்திருத்தப்பேய்கடிமையாகிய ப்ராஹ்மணர்கள் தங்கள் ஸமூஹத்தின் தலையில் மண்ணையள்ளிப்போட்டுவிட்டார்கள்!

ஆனால் உண்மையான மதநம்பிக்கையும்—முக்கியமாக விவாஹம் மத ஸம்ஸ்காரம் என்ற உறுதியான நம்பிக்கையுள்ளவர்கள் இனியும் உறங்கலாமா?

தடைச் சட்டம் அமுலுக்கு வந்து சில வருஷங்கள் வரை விவாஹம் வயது வந்த பெண்களில்லாமையால் கஷ்டம்தெரியவில்லை. மதக்கோட்பாட்டுக்கடங்கி நடக்க விரும்புபவர்களுக்கு அநுமதியளிக்கப்படவேண்டும்.

மத விஷயங்களில் சட்டம் செய்வது பிசகென்பது சீர்திருத்த வாதிகளில் உண்மையறிவாளிகளெனவராலுங்கூட ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்காலம் சென்னையிலிருந்து ஆஸ்திகர் ஒருவர் சமஷ்டி நீதிபதியாக இருக்கையில், சிசு விவாஹத்தடைச்சட்டம், ஆங்கிலேயர் கொடுத்த வாக்குறுதிக்கும், உலகத்தில் நியாயமெனக் கருதப்படும் மத ஸ்வதந்திர உரிமைக் கொள்கைக்கும், "ஹிந்து" மதப்பெருந்தன்மைக்கும் முற்றும் முரணாகவிருந்தலால் செல்லுபடியாகாதென்று சமஷ்டி நீதிஸ்தலத்தில் வாதித்து வெற்றி பெற இக்கணம் முதல் முயற்சியெடுக்க வேண்டும்.

சிசு விவாஹத்தடைச்சட்டம் அவசியமா? அவசியமானால் யாருக்கு? இச்சட்டத்தால் பால்ய விதவைகளுண்டாகாமல் தடுக்க முடியுமா? பால்ய விதவைகளுக்குக்காரணம் பால்யவிவாஹமா, பையன்களின் இயற்கை பலக்குறைவா? பிராம்மணர்களும் மற்றும் பலர்களும் கன்னிகாதான முறையில் செய்யும் விவாஹத்தை இது கட்டுப்படுத்துமா? கன்னிகாதானத்தில் சீர்திருத்த வாதிகள் கூற்றின்படி ஸமூகத்திற்கும் தம்பதிகளுக்கும் கெடுதிகள் உண்டாகின்றனவா? 14 வயது வரை சட்டப்படி விவாஹம் கூடாதென்பதாலும், நவ நாகரீகத்தில் பையன்களும் பெண்களும் சேர்ந்து பழகலாம், பழகவேண்டுமென்ற போதனைகளுமிருப்பதாலும், ஜாதி, மதம், ஆண், பெண் என்ற பேதங்கள் கூடாதென்ற கொள்கைப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும், போதிக்கப்படுவதாலும் இந்தச் சட்டம் இன்னும் 5, 6 வருஷங்களிருந்தால், இங்கிலாந்திலுள்ளது போல் குழந்தை பிறந்து ஒரு வருஷத்திற்குள் விவாஹம் பதிவு செய்யப்பட்டாலும் முறையாகச்சட்டப்படி ஸகல உரிமையுள்ள "தர்ம" ப்ரஜையாகுமென்று சட்டமும் வர வேண்டியது தான்!

14 வயதுக்குட்பட்ட பெண்ணும் 21 வயதுக்குட்பட்ட ஆணும் விவாஹம் செய்து கொள்ளக்கூடாதாம். இந்த வயதுக்குட்பட்டவர்களுக்குள் ஸ்நேகம் உண்டாவதையோ, மதக்கோட்பாடுகளுக்கும், ஸமூகச் சீர்மைக்கும் முரண் பாடானதும், பருத்தநிலிற்கும் ஒவ்வாததான நெருங்கிய ஸம்பந்தம் உண்டாவதையோ, இவற்றின் பலனாக ஏற்படும் பிரஜோத்பத்தியையோ, தடுக்க சட்டமிருக்கிறதா? சட்டப் படி இவை குற்றமல்ல! குறிப்பிட்ட வயதுக்குட் பட்டவர்கள் விவாஹச் சடங்கை வெளிப் படையாக நடத்துவதே சட்டப்படி குற்றம்! குழந்தை பிறந்தாலும் பாதகமில்லை! அதைத் தடுப்பதற்கோ நவீன முறைகள் பல உள. தவிரப் பிறந்தாலும் அமெரிக்காவிலுள்ளது போன்ற, ஆறுகளும், குளங்களும் ஏரிகளுமில்லையா என்ன! இவையனைத்தும் சிசு தப்பி விடுமானால் "அனாதை விடுதிகளேற்படுத்த இளகிய தாராள மனமுள்ள சீமான்களில்லையா? என்ன குறைவு! இச்சீர்கேடாகிலோ வரவேண்டுமா? விழிமின்! எழுமின்! உழைமின். தர்ம ஸேவா ஸங்கமும், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கமும் இனியும் உறங்கலாமா? ஆண்டவன் அருள்புரிவாராக!

## ஹைதராபாத் ஹைகோர்ட்டில் சத்தியாக்ரஹம்.

மே௴ 21௳ ஹைதராபாத் உயர்நீதி மன்றத்தில் (ஹைகோர்ட்) ஸ்ரீ பாஸ்கர கோபால காயிஸ்கர் என்ற பிரபல வக்கீல் ஒரு கொடியுடன் சத்யாக்ரஹம் செய்தார். இவர் ஹிந்து மகா சபை கோஷங்களைச் செய்து கொண்டு கோர்ட் அறைக்குள் நுழைந்தார். இதனால் கோர்ட் வேலைகள் தடைப்பட்டன. போலீஸார் அந்த வக்கீலை கைது செய்து சிறைக்கு அழைத்துச்சென்றார்கள்.

## இன்ஷ்யூரன்ஸ் சட்டம்

ஜூலை௴ 1௳ அமுலுக்கு வரும்.

"1938௵ இன்ஷ்யூரன்ஸ் சட்டம்" 1939௵ ஜூலை௴ 1௳ முதல் அமுலுக்கு வரும்.

## பிள்ளையை சிறைக்கு அனுப்பிய தந்தை

எல்லைப்புற மாகாண பிரதம மந்திரி கனம் டாக்டர் கான் சாகேப் அவர்களுக்கு உபயதுல்லா என்ற ஒரு பிள்ளை உண்டு. அவர் விவசாயிகள் சார்பாக பரிந்து வேலை செய்து வந்தார். விவசாயிகள் விஷயத்தில் பிறப்பிக்கப்பட்ட சர்க்கார் உத்திரவுகளை அதிகாரிகளால் நிறைவேற்றமுடியாமல் இவர் செய்துவந்தார். போலீசாருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்துவந்தார்.

அதிகாரிகள் பிரதம மந்திரிக்கு இந்த விஷயங்களை அறிவித்தார்கள். உடனே பிரதம மந்திரி தன்பிள்ளையென்று கருதாமல் கைது செய்ய போலீசாருக்கு உத்திரவு கொடுத்தார். போலீசார் உபயதுல்லாவை கைது செய்து சார்சடா என்ற சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கனம் டாக்டர் கான் சாகேப் இந்த சம்பவத்தைப்பற்றி ஒரு பொதுக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தார். "அவர் என் பிள்ளையென்றால் என்ன? அவன் விஷயத்தில் மட்டும் விதிவிலக்காகுமோ? அவன் மட்டும் சட்டத்தை மீறலாமா? அவனுக்கு நான் பரிந்திருந்தால் அதைவிட அநீதியாத"........ என்று கூறினார்.

## பம்பாய்-சென்னை விமானயாத்திரை.

பம்பாய்-சென்னை விமானயாத்திரையைத் துரிதப்படுத்த டாடா கம்பெனி அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து பம்பாயுக்கு 5மணி நேரத்தில் விமானம் போய்ச்சேரும்.

## சென்னை-கொழும்பு மார்க்கம்.

சென்னையிலிருந்து கொழும்புவுக்கு 2மணி 40நிமிஷத்தில் இனி ஆகாயவிமானம் போய்விடுமென்று அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

## மதராஸ்.

சென்ற 8-5-29 முதல் எழும்பூர் ஸ்ரீனிவாஸப்பெருமாள் சன்னிதியில் உடையாளூர் பிம்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களால், ஸ்ரீ ராமாயண உபன்யாஸம் நடத்தப்பட்டு வருகிறது.

## ஆரம்ப பாலிகா பாடசாலை

ஆரம்ப பாலிகா பாடசாலைகளுக்காக 1000 உபாத்தியாயினிகளை அமர்த்த ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

## ராஜ்கோட்டில் காந்திஜீ.

மே௴ 20௳ காலை 8 மணிக்கு மகாத்மா காந்தி தன்னுடைய மனைவியுடன் ராஜ்கோட் சமஸ்தானத்தின் தர்பாருக்குப் போயிருந்தார். அவருக்கு மகத்தான வரவேற்பு அங்கு நடந்தது. தாகூர் சாகேப் சிம்மாஸனத்திற்கு வலது புறத்தில் காந்தியடிகளுக்கு ஆஸனமளிக்கப்பட்டது. சமஸ்தானத்தின் முக்கிய அதிகாரிகளை தாகூர் சாகேப் காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் காந்திஜியும், தாகூர் சாகேபும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.



# அயல் நாட்டுச் செய்திகள்.

## ஹிட்லர் குடும்பத்தின் ரகசியம்.

அடால்வ் ஹிட்லர் வெட்கப்படுவது எதனால்?

ஹிட்லரைப்பற்றி எதிர் பிரசாரம் செய்ய அவரது ஒன்று விட்ட அண்ணன் பிள்ளையே அமெரிக்காவிக்கு வந்திருக்கிறார். வில்லியம் பாட்ரிக் ஹிட்லர் என்பது அவர் பெயர். வயது 28.

வில்லியத்தின் மூலம், ஜெர்மன் தலைவரின் ரகசிய பூர்வோத்திரங்கள் பல இப்போது வெளியாகியுள்ளன.

தமது குடும்ப சரித்திரத்தைப்பற்றி சொல்லிக்கொள்ளவே ஹிட்லர் வெட்கப்படுவதன் ரகசியம் இதிலிருந்து வெளியாகும்.

ஹிட்லரின் தகப்பனாரின் பெயர் அலாய்ஸ் அவருக்கு மூன்று மனைவிகள். கடைசி மனைவிக்குப் பிறந்தவரே நாஜி தலைவரான அடால்ப் ஹிட்லர். தகப்பனாரான அலாய்ஸ் குடி வெறியில் மாண்டார்

ஹிட்லரின் தகப்பனாரான அலாய்ஸ் சட்டமுறைப்படி பிறந்த குழந்தையல்ல,

ஆஸ்திரிய குடியானப் பெண்ணான மேரியா ஹிக்ருபர் என்பவளுக்கும் ஜான் ஹிட்லர் என்பவனுக்கும் கல்யாணமின்றியே பிறந்த குழந்தை அது. அலாய்ஸைத் தன் குழந்தை என ஒப்புக்கொள்ளவே ஜான் ஹிட்லர் மறுத்து விட்டார்.

இதனால் அலாய்ஸ் தன் தாயாருடைய குடும்பப் பெயரான ஷிக்ருபர் எனும் பெயருடனேயே வளர்ந்து வந்தார்.

நாற்பதாவது வயதில் தான் அலாய்ஸ், அதிகாரிகளின் அனுமதியின் மீது தந்தை வழி குடும்பப் பெயரைப்பெற்று "ஹிட்லர்" என்று மாற்றிக் கொண்டார்.

அவருக்கு மட்டும் அதிகாரிகள், தந்தையின் குடும்பப்பெயரை வைத்துக்கொள்ள அனுமதி மறுத்திருந்தால், இன்று ஜெர்மன் நாஜிகள் அனைவரும் "ஹிட்லருக்கு ஜே!" என்று சொல்வதற்கு பதிலாக "ஷிக்ருபருக்கு ஜே" என்று தான் சொல்லவேண்டியிருந்திருக்கும். (ஹிந்துஸ்தான்)

## 5 கோடி பிரதிகள்

ஹெர் ஹிட்லர் எழுதிய "மெயின் காம்ப்" (எனது போராட்டம்) என்ற புத்தகம் இது வரையில் 5 கோடி பிரதிகள் விற்பனையாயிருக்கிறது.

## 10 லக்ஷம் கைதிகள்

ஸ்பெயின் சிறைகளில் 10 லக்ஷம் ஸ்பானிஷ் குடியரசு கைதிகள் இருக்கிறார்கள். அவர்களை ஜெனரல் பிராங்கோ, ஸ்பெயின் நிர்மாண வேலைத்திட்டத்திற்கு வைத்துக்கொள்வாராம்.

## முஸோலினி பதில்

அமெரிக்கா குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் யோசனைகளை அடியோடு நிராகரித்து, முசோலினி ஒரு பிரசங்கம் 21 தேதி செய்தார். அதில் 10௵சமாதான யோசனை மதியீனமென்றும் மகாநாடு கூட்டுவதால் பயனில்லையென்றும் அவர் கூறினார். சமாதான ஐக்கிய முன்னணி ஏற்பாடுகளைப் பரிகாசம் செய்தார்.

## ஜெர்மனிக்கு காண்டிராக்ட்

இஸ்மித்விளே குடாவில் கூல்டர் என்ற இடத்தில் 25 லக்ஷம் பவுன் செலவில் ஒரு முதல் தரமான கடற்படைதளத்தை கட்ட துருக்கி சர்க்கார் டெண்டர்களைக் கேட்டனர்.

உடனே பிரிட்டிஷ், டச், ஜெர்மன் கம்பெனிகள் போட்டிபோட்டன.

மூன்று வருஷகாலமாக டச் கம்பெனி வெகு சுறுசுறுப்பாய் பிளான்களைத் தயாரித்து வந்தது. கடைசியாக ஜெர்மனி கம்பெனிக்குத்தான் கண்டிராக்ட் கிடைத்தது.

## பிரிட்டனில் வெடிகுண்டு அட்டூழியங்கள்.

சென்ற சில மாதகாலமாய் இங்கிலாந்தின் பல பாகங்களில் வெடிகுண்டுகள் விழுகின்றன. பலருக்குக் காயம். பல கட்டடங்கள் சேதமடைந்தன. போலீஸார் இந்த வெடிகுண்டுகளுக்கு யார் பொறுப்பாளி என்று ஆராய்ந்து வருகிறார்கள்.

## ஜெர்மனியின்மீது சந்தேகம்

நாஜிகளுக்கும் இந்த வெடிகுண்டு அட்டூழியங்களுக்கும் சம்பந்தமிருப்பதாகக் காட்டும் பல தஸ்தவேஜிகளை டப்ளின்போலிசார் கைப்பற்றியிருக்கின்றனர். இந்த தஸ்தாவேஜிகளில் ஜெர்மன் நாஜி பிரசார இலாகா மாஜி ஐ. ஆர். ஏ. வீரர்களுக்கு அனுப்பிய பிரசுரங்களும் சேர்ந்துள்ளன.

ஐ. ஆர். ஏ. அயரில் சட்ட விரோதமாயிருந்தும், அதன் பெயரால் பிரிட்டனில் வெடிகுண்டு அட்டூழியங்கள் நடந்துவருகின்றன.

ஜெர்மன் பிரசார மந்திரியின் கையெழுத்துடன் கூடிய ஒரு கடிதமும் அகப்பட்டிருக்கிறது.

## "எங்கள் ஊரில் உங்களுக்கு வேலை இல்லை"

இலங்கை இலங்கையருக்கே,

இந்தியர்களை நாடுகடத்த முடிவு

8000 இந்தியர்களின் பரிதாப நிலைமை

இலங்கை அரசாங்கத்தினர் தங்களிடம் தினச்சம்பளத்திற்குள்ள எல்லா இலங்கையரல்லாத தொழிலாளிகளையும் திருப்பி இந்தியாவுக்கு அனுப்பிவிடவேண்டி ஒரு திட்டம் தயாரித்திருக்கின்றனர்.

"இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை மிக்க முக்கியமானது. நாளுக்குநாள் இதன் நெருக்கடி அதிகரித்து வருகிறது. சர்க்கார் ஊழியத்தில் தினச்சம்பளமுள்ள இலங்கையரல்லாத தொழிலாளர்கள் (இந்தியர்கள்) 8000 பேருக்குமேல் இருக்கின்றனர். எல்லா இலாகாக்களிலும் இலங்கையல்லாதவர்களுக்குப் பதில் இலங்கை வாசிகளையே வேலைக்கு வைத்தால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை ஓரளவு தீரும்.

இலங்கையர் கிடைக்கையில் இந்தியர்களை நியமிக்கக்கூடாதென்பது சர்க்கார் அபிப்பிராயமாகும்." என்று வரவுசிலவு காரியதரிசி கனம் எச். ஜே. ஹெக்ஸாம் சட்ட சபையில் கூறினார்.

"5 வருஷங்களுக்கு மேற்பட்ட சர்விஸிலுள்ள இலங்கையரல்லாத தொழிலாலர்கள் இஷ்டபூர்வமாக சர்க்கார் ஊழியத்தை விட்டுத் தங்களது வீடுகளுக்குத் திரும்ப விரும்பினால் அதற்குப் பண உதவி செய்யவும் வகைசெய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றிவைக்க 25 லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கிறதாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவைக்க வேண்டி முதல் தவணையாக 5 லக்ஷம் ரூபாய் உபமான்யம் தரும்படி மே௴ 30௳ இலங்கை சட்டசபையில் சபையின் முதல் மெம்பர் கனம் சர் பாரான் ஜெயதிலகர் கோருவார்."

இலங்கையிலிருந்து திரும்பி தாய்நாடு செல்லும் இந்தத் தொழிலாளர்களுக்கு அவர்கள் கிராமம்போய் சேர டிக்கெட்டுகள் வாங்கித்தரப்படுமாம். இவர்கள் தங்களுடைய கிராமம் போய்ச் சேர்ந்ததும் இவர்களுக்கு ஒருமாதச் சம்பளத்தொகை போனஸாகக் கொடுக்கப்படும்.

5 வருஷங்களுக்கு மேற்பட்ட சர்விஸிலுள்ள இலங்கையரல்லாதவர்களைத் தற்சமயம் கட்டாய முறையில் வேலையை விட்டு நீக்க சர்க்கார் உத்தேசிக்கவில்லை.

ஆனால் இரண்டொரு வருஷத்தில் சிக்கனம் செய்யவேண்டி ஆட்களை எடுப்பது அத்யாவசியமாக இருக்கும்.

215286

# ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி தேவஸ்தானம், எட்டுகுடி.

## 1346ம் பசலி நெல், ரொக்கம் வரவு—செலவு ஸடேட்மெண்டு

(1—7—36 முதல் 30—6—37 முடிய)

| வரவு விபரம் | | நெல் க. ம. ப. | ரொக்கம் ரூ. அ. பை. |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 144 9 0 | 3557 11 3 |
| கிராம ஆதாயம் நெல் | | 617 8 0 | |
| அயன் பண்டு வரவு | | | 2727 11 3 |
| நெல் வித்து முதல் | | | 555 13 9 |
| கால்நடை வித்து வரவு | | | 4 15 0 |
| நிர்மால்ய ஆதாயம் | | | 15 3 4 |
| சில்லரை ஆதாயங்கள் | | 12 11 0 | 86 6 6 |
| நெல் கொள்முதல் வரவு | | 75 8 0 | |
| பத்து வரவு அயிட்டங்கள்:— | | | |
| கிராம பத்து வரவு கணக்கு | 22 8 0 | | |
| சிப்பந்திகள் | 1040 8 0 | | |
| குருக்கள் வீதம் | 1068 7 6 | | |
| குத்தகைதாரர்கள் | 91 8 0 | 685 8 0 | |
| இதர பத்து வரவு கணக்குகள் | 4464 2 4 | 40 0 0 | |
| | | | 6687 1 10 |
| திருப்பணி வீதம் வரவு | | | 2463 0 7 |
| திருவாபரண வீதம் | | | 230 14 6 |
| வேதாரண்யம் தேவஸ்தானம் வரவு | | | 14000 0 0 |
| ஆகமொத்தம் | | 1576 8 0 | 30337 13 11 |

| செலவு விபரம். | | நெல் க. ம. ப. | ரொக்கம் ரூ. அ. பை. |
|---|---|---|---|
| ஆபீஸ் சிப்பந்திகள் செலவு:— | | | |
| உத்தியோகஸ்தர் சம்பளம் | 1007 2 10 | | |
| டிராவலிங் செலவு | 184 12 6 | | |
| தபால் செலவு | 3 9 6 | | |
| பிரிண்டிங் செலவு | 26 6 0 | | |
| ஸ்டேஷனரி செலவு | 12 14 0 | | |
| | | | 1234 12 10 |
| கோவில் நித்தியப்படி செலவு:— | | | |
| அமுதுபடி செலவு | | 57 0 0 | 293 8 0 |
| சாமான் கொள் முதல் | | | 580 3 6 |
| கோவில் ஏறபடிகள்:— | | | |
| கிருத்திகை | 9 7 0 | | |
| விஜயதசமி | 0 4 0 | | |
| தீபாவளி | 13 14 0 | | |
| ஸ்கந்தஷஷ்டி | 93 6 5 | | |
| திருக்கார்த்திகை | 1 14 0 | | |
| தனுர் மாதம் ஏறபடி | 5 2 9 | | |
| சங்கராந்தி மாட்டுப்பொங்கல் | 2 3 6 | 2 0 0 | |
| வைகுண்ட ஏகாதசி | 0 2 0 | | |
| | | | 126 5 8 |
| சித்ராபௌர்ணமி உத்ஸவம் | | | 1301 1 8 |
| வேதாரண்யம் கிஸ்தி | | | 1265 10 0 |
| கிராம மராமத்து செலவு | | | 480 12 0 |
| கோர்ட்டு செலவு:— | | | |
| O. R. P. 10-8-36 கோர்ட்டு | 620 11 3 | | |
| இதர கோர்ட்டு செலவு | 31 8 0 | | |
| | | | 652 3 3 |
| H. R. E. Board கண்டிரிபூஷன் | | | 105 8 0 |
| ஆடிட் பீசு கொடுத்தது | | | 200 0 0 |
| ரிபேர் செலவு:— | | | |
| வாகன ரிபேர் | 22 6 9 | | |
| கொட்டகை ரிபேர் | 110 4 0 | | |
| தளவாடம், பாத்திரம் ரிபேர் | 15 10 6 | | |
| | | | 157 5 3 |
| சில்லரைச் செலவு | | | 118 11 11 |
| இனாம் செலவு | | | 1 0 0 |
| நெல் கொள்முதல் | | | 91 10 0 |
| நெல் வித்துமுதல் செலவு | | 453 11 1 | |
| இடை கட்டு கூலி | | 12 1 0 | |
| நெல் வண்டி சத்தம் | | 9 6 0 | |
| நெல் காய்ச்சல்பாடு | | 15 2 3 | |
| நிலம் கொள்முதல் | | | 14000 0 0 |
| பாங்கு டிபாசிட்டு (திருவாபரணம் பண்டு) | | | 228 3 3 |
| பத்து வரவு அயிட்டங்கள்:— | | | |
| கிராம பத்து வரவு கணக்கு | 22 8 0 | | |
| சிப்பந்திகள் | 1834 3 3 | 21 0 0 | |
| குருக்கள் | 1242 7 6 | | |
| குத்தகைதாரர்கள் | 89 0 0 | 694 0 0 | |
| இதர அயிட்டங்கள் | 4570 4 8 | | 7258 7 5 |
| ஆகிய இருப்பு | | 311 2 0 | 2234 7 2 |
| ஆகமொத்தம் | | 1576 8 0 | 30337 13 11 |

எட்டுக்குடி,
13—5—1939.

ஜி. நடேசன் G. D. A., R A.
(ஆடிட்டர்.)

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd, Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்
-ல
H 22
24 1-1939

215284

27 REGD. No. M. 2913. ARYADHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1¾
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஸு வைகாசி-மீ 18உ 1939-ஸு ஜூன்-மீ 1உ | வ-22

3 - JUL 1939 MADRAS
215284

# வான சாஸ்திர ஆராய்ச்சி

## இந்தியாவில் அமோகமாக அபிவிருத்தி அடையவேண்டாமா?

## அன்று முன்னணியில் நின்ற நாடு இன்று பின்னணியில் நிற்கின்றதே!

### நம் நாட்டு தனவந்தர்கள் கடமை என்ன?

டாக்டர் ஸர். சி. வி. ராமனின் வேண்டுகோள்.

"எனக்கு மீண்டும் வாலிபம் கிடைத்து முதலிலிருந்து வாழ்க்கையை நடத்த ஓர் சந்தர்ப்பமும் கிடைத்தால்நான் என்னென்ன செய்வேன்?" என்பது பற்றி உலகப்பிரசித்தி பெற்ற விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நிபுணரும், "நோபிள் பரிசை"ப்பெற்ற ஆசிரியருமான டாக்டர் ஸர். ஸி. வி. ராமன் எழுதுவதாவது:—

"மீண்டும் என் வாழ்க்கையை முதலிலிருந்து ஆரம்பிக்கவும், எத்துறையில் ஈடுபடுவதென்பதைக்குறித்து நிர்ணயம் செய்து கொள்ளும் சுதந்திரமும், எனக்குக் கிடைக்குமானால், நான் வான சாஸ்திரியாக இருக்க கொஞ்சம் கூட தயங்காமல் விரும்புவேன்.

சில காலத்திற்கு முன்பு நானும் வான சாஸ்திர துறையிலிறங்கி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேன். அக்காலத்தில் என்னிடம் ஏழு அங்குல நீளமுள்ள ஓர் தூரதிருஷ்டி கண்ணாடி இருந்தது. அதை நான் கல்கத்தாவில் போபஜார் தெருவிலுள்ள ஆராய்ச்சிச் சாலை மேல்மாடி மீது வைத்து மாலை வேளைகளில் விண்மீன்களை உற்று நோக்கி அவைகளின் அமைப்பு, உருவம், சஞ்சாரம் முதலியவைகளைக் கவனிக்கலானேன். நான் பல தினங்கள் மாலை வேளைகளை இக் கைங்கரியத்தில் செலவு செய்தேன். ஆனால், என்னிடமிருந்த தூரதிருஷ்டி கண்ணாடி திருஷ்டி கூர்மை அதிகம் வாய்ந்ததில்லையாகையாலும், அக்கருவியைக்கொண்டு நட்சத்திரத்தின் இருப்பிடத்தை நிதானிக்க முடியவில்லையாகையாலும் அக்கருமத்தை கைவிடநேர்ந்தது.

நான் உலக சுற்றுப்பிரயாணம் செய்து வந்த காலத்தில் வட அமெரிக்கா பசிபிக் சமுத்திரக்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும், இவ்வுலகத்தில் மிகப்பிரம்மாண்டமான வானசாஸ்திர ஆராய்ச்சி சாலையைப் போய்ப் பார்த்தேன்.

கலிபோர்னியாவில் மவுண்ட் வில்ஸன் வான சாஸ்திர ஆராய்ச்சி சாலையையும் நான் சென்று பார்த்தேன். அங்கே வைக்கப்பட்டிருக்கும் தூரதிருஷ்டி கண்ணாடிக் கருவியின் குறுகிய பாகத்தின் கண்ணாடி மாத்திரம் 100 அங்குலம் பருமன் வாய்ந்தது. அந்தக் கண்ணாடி மூலமாக நான் விண்மீன்களை நோக்கினபோது என் உள்ளத்தில் எழுந்த ஆனந்தமும், உற்சாகமும் வர்ணிக்கமுடியாதவை. அது என் ஆயுள் காலத்திலேயே ஒரு பெரும் பாக்கியத்தைப்பெற்ற காலமென்று நான் கருதினேன்.

இந்த வர்ணனையிலிருந்து வான சாஸ்திரிகளின் வாழ்க்கை கஷ்டமில்லாத சௌக்கியமானது என்று எண்ணிவிடக்கூடாது. வானசாஸ்திரிகள் இரவெல்லாம் கண் கொட்டாமல் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே யிருக்கவேண்டும். அவ்வப்போது வானத்தில் வான மீன்களின் சலனத்திலும், உருவத்திலும், ஒளியிலும், காணும் தோற்றங்களைக்குறித்துக் கொள்ள வேண்டும். இரவு காலங்களில் கள்ளங் கபடற்ற மானிடர்களெல்லாம் சுகமாக படுக்கை விரித்து தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில், இந்த ஆராய்ச்சிக்காரர்கள் மாத்திரம் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு அவதிப்பட்டுக்கொண்டிருப்பார்கள்.

ஆனால், இவ்வளவு கஷ்டத்திற்கு ஈடாக சௌக்கியங்கள் சில இல்லாமல் போகவில்லை. இந்த உலகத்தில் அமைக்கப் பட்டிருக்கும் முதல்தரமான ஆராய்ச்சி சாலைகளெல்லாம் மிகச்சிறப்பான சுற்றமைப்பும், மப்பு மந்தாரமில்லாத பட்டு போன்ற வானமும், தூய்மை தூசில்லாத காற்றும், கலைவளி உண்டாகக் கூடிய கோஷமும் இரைச்சலுமில்லாத ரமணீயமான, பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட வானசாஸ்திர ஆராய்ச்சி துறையிலும் சரி, மற்றத் துறைகளிலும் சரி, நாம் வேண்டுமென்று நினைப்பது போல் அவசியம் தான் இல்லை. நினைப்பதெல்லாம் சித்தியாகிவிடுகிறதா? [illegible] வான சாஸ்திர [illegible] ஆரியராணி மகா பாண்டித்யம் அடைந்து முன்னணியில் நின்றனள். ஆனால், அந்தோ! இன்றோ அந்த ராணி உலகத்தில் மற்ற நாகரிக நாடுகளுக்கெல்லாம் பின்னணியில் நிற்கின்றனளே! அதுவும் உலகத்தில் மற்றெந்த தேசத்திற்குமில்லாத சௌகர்யங்கள் இந்தியாவிற்கு மாத்திரம் இருந்தும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வானசாஸ்திர ஆராய்ச்சிக்கு அவசியமான சுற்றமைப்பு, சீதோஷ்ணம், இன்னும் மற்ற வசதிகள் பெற்ற பல இடங்கள் இந்தியாவில் இருந்தும் அத்துறையில் இந்தியா அபிவிருத்தியடையாமலிருக்கிறது.

வான சாஸ்திர ஆராய்ச்சி இந்தியாவில் அமோகமாக அபிவிருத்தியடைய வேண்டுமென்று நான் கொண்டுள்ள பேரவல் கைகூட வேண்டுமாயின் இந்த தேசத்திலுள்ள செல்வந்தர்கள் தங்கள் பண மூட்டையின் சுறுக்கை அவிழ்த்தால் தான் முடியும். இதர தேசங்களில் செல்வந்தர்கள் பணத்தை லட்சியம்செய்யாமல் கொட்டி, பெரியபெரிய ஆராய்ச்சி சாலைகளை கட்டி தேசத்திற்கு புகழ்தேடியது போல, நம் நாட்டு தனவந்தர்களும் முன்னுக்கு வந்தால்தான் என் கனவு கைகூட முடியும்.

வான் சாஸ்திர தேவி மிக சனாதன தேவி. அவள் நவீன வாலிப தேவியுமாவள். அவள் வீற்றிருக்கும் கோயிலுக்குச் சென்று தொழ பக்தர்கள் தான் தேவை. அந்த தேவியின் அடி பணிந்து தொழுவதை விட ஆனந்த மளிக்க வல்லது மற்றொன்றுமில்லை யென்று நான் கருதுகிறேன்."

பல் வியாதிகள் கவனிக்கும்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

पत्राधिपस्य लेखनम् ॥

[இந்தப் பகுதியில் நேயர்கள் தங்களுக்கேற்பட்ட சந்தேகங்களையும், யோசனைகளையும்கூறலாம். கடிதங்கள் ஜாதி, மத, கக்ஷி தூஷணையுடன் எழுதப்படக் கூடாது. ராஜாங்க நிந்தனையும் கூடாது. அச்சம், தயை, தாக்ஷிண்யமின்றி "குறிப்பு" என்ற தலைப்பின்கீழ் "ஆசிரியர் பதில்" உடனுக்குடன் வெளியிடப்படும். "கடிதங்கள்" 30 வரிகளுக்குமேல் எழுதக்கூடாது. காகிதத்தின் ஒரேபக்கத்தில் மசியினால் எழுதி "ஆசிரியர் 'ஆர்ய தர்மம்', கும்பகோணம்", என் றவிலாசத்துக்கு பிரதி திங்கட்கிழமைக்குள் அனுப்ப வேண்டும். "ஆசிரியர் குறிப்பு"க்கு ஆக்ஷேபனை, தர்க்கங்கள் கூறி வரும் கடிதங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது. சாஸ்திர ஆராய்ச்சி, நூலாராய்ச்சி, ஸநாதன தர்ம விஷயமாக வரும் கடிதங்களுக்குத் தான் இங்கு அதிக இடமுண்டு. [ஆசிரியர், ஆர்யதர்மம்]

## புதுமுறை வார வெளியீடு.

"விரகிருவர் புகழ்வாரும் வேண்டும், விர னிறைய மோதிரங்கள் வேண்டும்— அரையி லொரு, பஞ்சேனும் பட்டேனும் வேண்டும வர் கவிதை, நஞ்சேனும் வேம்பேனு நன்று, என்பது ஒளவையார் ஆடம்பர கவியைக்கு றித்துப் பாடிய பாட்டென்ப. இதனைச் செந் தமிழ் பிரசுரம்' -62- பெருந்தொகை பக்கம் 85ல் 364ஞ் செய்யுளாகக் காண்கலாம். இக் காலத்து ஆடம்பாமும் வேண்டியிருக்கின்றது. அதனையேகண்டு ஏமாற்றமடையும் உலகமும். எவ்வளவு கற்றவஞயினும் வெளிவேடம் முறைய அவனை முதற்கண்டு கௌரவிப்பவர் காண்கிலம். அடக்கமுடமை ஆழமுடைமைக் கறிகுறி என்பதும் பொய்யுரையன்று.

எனவே, காலத்துக்சேற்றகோலமும் வேண்டற்பாலதே. கைப்பு மருந்துகளை உள் வைத்து இனிப்புப் பூச்சுடன் கொடுக்கும் மருத்துவன் போலே நல்ல உயர்ந்த விஷயங் களை உதாசினரும் உணர்ந்துய்யுமாறு சநா தன தர்மப்ரசார வெளியீடுகள் நவீன முறை களைக்கைக்கொண்டொழுகல் மிகவும் ஆவசி யகமே. இதனை யாம் முன்னர் அடிக்கடி வற் புறுத்தியுள்ளோம். ஆகு நாளிற்றுனே எடுத் ருகமங்களாகும். திருக்குடந்தையினின்றும் வாரந்தோறும் வெளியாகிக் கோண்டிருந்த நம் "ஆர்யதர்மம்" தற்போது புது முறை யில் வெளிவரத்தோடங்கியது இந்நாட்டின் பாக்கியமே. பெரிய எழுத்துக்களில் படிக் கும் மனதை இழுக்கும் வல்லமையுடன் தலை யங்கங்கள் போடுவது தனி நலம். "செய்தித் திரட்டு"; "உள்ளூர் வர்த்தமானங்கள்"; "புத்தக விமர்சனம்"; "அயல் நாட்டுச்செய் திகள்"; "வெளியூர்ச் செய்திகள்" என்ற தலைப்பின் கீழ் அவ்வவ் விஷயங்களை வெளி யிடுவதே சாலப் பொருத்தமானது. ஆசிரிய ரின் "ஒரு வேண்டுகோளையும்'; மானேஜரின் "அறிக்கை"யையும் நேயர்கள் நன்கு கவ னித்து நிறைவேற்றின் ஆர்யதர்மவெற்றிக் கொடி நாடெங்கும் ஓங்கிப் பறக்கும் என்ப தில் எள்ளளவும் ஐயமில்லை. விளம்பரங்க ளும்அழகானரீதியில் பிரசுரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள தனிக வைசியர்கள் ஆர் யதர்மத்துக்கும் தங்கள் விளம்பரங்களைக் கொடுத்ததவினுல் ஒருவித கஷ்டமின்றி இப் பத்திரிகை இனிது நடைபெற இயலும். தர் மாபிமானிகளனைவரும் இச்சிரிய தமிழ் வாரப் பத்திரிகையின் உதவியாளராகச்சேர்த்துச் சநாதனதொகைகளை காலாகாலத்தில் கட்டி தக்க முறையில் தக்க உதவி செய்ய வேண் டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆர் யதர்மமே நல்வழி விளக்கு. இவ்விளக்கு நம்; கொளி வீச இருள் மாயும்; அல்லல் போன் நாடு நலனுறும். தக்கவை செய்து புகழ்நாட் டுக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ஸ்ரீ. ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி,
திருவல்லிகேணி தமிழ்ச்சங்கம், சென்னை.

## பள்ளிக்கூடங்களில் மத போதனை.

பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் திறக் கப்பட்டு வருகின்றன. கல்வியில் மத போ தனை மிகவும் அவசியமாதலால், கிறிஸ்தவர் களும் முகம்மதியர்களும் தனித் தனியே அவரவர் மதத்தைப்பற்றி படிப்பது போல் ஹிந்துக்களும் படிக்க ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும்,கல்லூரியிலும் ஏற்பாடு செய்யும் படி "பெற்றோர்கள் சங்கமோ" பொதுஜனங் களோ கிளர்ச்சி செய்ய வேண்டும்.

பள்ளியதிகாரிகள் இதற்கிசைந்த விடங் களில் "பொது ஜனங்கள்" ஊக்கத்துடன் ஓர் உபாத்தியாயரை ஏற்பாடு செய்து, 7 வயதுக்குட்பட்டவர்களுக்குச்சிறு கதைகள் மூலமாகவும், பெரியபையன்களுக்குக் கர்மா நுஷ்டானங்கள், ஸாமான்ய தர்மங்கள், வர் ணாச்ரம தர்மம், புராண இதிஹாஸங்களுடைய தத்துவ ஆராய்ச்சிப் பிரசங்கங்கள் மூலமும், கல்லூரி மாணவர்களுக்கு விசேஷ ஆராய்ச்சி கள், தர்க்கங்கள் மூலமும், ஸநாதன வைதிக "ஹிந்து" மதக்கோட்பாடுகளை மனதில் வேரூன்றச் செய்வது பெற்றோர்களின் கட மையாகும்.

பிள்ளைகளைப்பெற்று உணவு, ஆடையாபர ணங்கள் கொடுத்துப் பள்ளிக்கனுப்பி விட்டு, அவர்கள் என்ன படிக்கிறார்களென்பதைப்ப ற்றிக் கனவிலும் நினையாதிருந்தநின் பலனே இன்று அனுபவிக்கிறோம். இனியும் அசட் டையாயிருக்கலாகாது. இன்றே ஓர் சங்கம் ஏற்படுத்தியோ அல்லது தனிப்பட்ட முறை யிலோ, ஒவ்வொரு ஊரிலும் பள்ளியதிகாரி களைப் பேட்டி கண்டு தகுந்த ஏற்பாடு செய் யப்படவேண்டும். "தர்மதாஸ்".

['தர்மதாஸ்' அறிக்கைப்பாராட்டத்தக்கது. கல்வி அதிகாரிகள் இது விஷயமாக கவனித்துத் தக்கது செய்வார்களாக. முகமதிய மாணவர்க ளுக்கு மட்டும் சலுகை காட்டப்படும் போது ஹிந்துக்களுக்கு மட்டும் ஏன் காட்டப்படு வதில்லை. இதனை ஹிந்துக்கள் நாடெங்கும் ஸநாதன சபைகள் பிரசாரம் செய்ய வேண்டும்."ஜனங்களே தனியாக ஒரு ஆசிரியனை நியமித்து செய்யவேண் டும்" என்று கூறுவது சரியல்ல. ஹிந்துக்களிட மிருந்து பலவித வரிகள் வாங்கும் சர்க்காரே இம் மாதிரி வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்யவேண் டும். ஆசிரியர் ஆ. த.]

## வடமொழியும் தென்மொழியும்.

சமய வளர்ச்சிக்கு இன்றியமையாதது தமிழும், ஸம்ஸ்கிருதமும். பண்டைக்காலத் தமிழ் புலவர்களனைவரும் வடமொழியை நன்கு கற்றறிந்தவர் என்பது வெள்ளிடை மலை. சமீபகாலத்தில் தமிழ் மொழி வளர்ச் சிக்காகப் பலர் பாடுபடுவதாகக் கூறுகிறார்கள். வடமொழியை அபிவிருத்தி செய்ய தக்க முயற்சிகள் செய்ய வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்,இலவச படிப்பு மூலமும், கட்டுரைப். பரிசுகள் மூல மும், இனமாகச் சிறு ஸ்தோத்திரப் புஸ்தகங் கள் வழங்குதல் மூலமும் பாஷா உற்சாகம் உண்டு பண்ண வேண்டும்.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், வடமொழியில் நாடகங்களும் நடத்த வேண் டும். சம்ஸ்கிருதாபிமானிகள் இதை உட னே கவனித்தால் உலகத்திற்கே க்ஷேமம் உண்டு.

D. M. Sarma, B.A.,
Thirupattur.

[இத்தக்காலத்தில் தமிழுக்கு உழைப்பதாகக் கூறும் சில பண்டித சிகாமணிகள் "சம்ஸ்கிருத பாஷையை" அறவே ஒழிக்கவேண்டு மென்று கூறுகிறார்கள். இது ஒருநாளும் முடியாத காரியம். தமிழ் மொழியையே மாற்றி ஒரு புது தமிழ் பா ஷையில் ஒருதினசரி பத்திரிகை எழுதுகிறது. அப் படி எழுதியும் கூட அதில் 100க்கு 99 பதங்கள் சம்ஸ்கிருதமாகவேயிருக்கிறது. தொன்று தொட்டு தமிழ்நாட்டில் வழங்கி வரும் பாஷைகளை ஒருசில ரால் ஒழிக்கமுடியுமா? பிரசாரம் இல்லாமலே வட மொழியை மாணவர்கள் கற்று வருகிறார்கள். பா திரியார்களைப் போல் ஹிந்துமதாபிமானிகள் வட மொழியில் பல அரிய புத்தகங்களை இலவசமாக நாட்டில் வழங்கி வரவேண்டும். நேயர் கூறிய யோ சனைகளை நாம் முழுமனதுடன் ஆதரிக்கின்றோம். ஆ. த.]

## தகாத படங்களை பகிஷ்கரிக்க.

பொதுவாக "ஸினிமா" வினால் கெடுதலே யொழிய நன்மையில்லை. அதிலும் தமிழ்ப்பட ங்களோ"நாஸ்திகத்தையும்,வகுப்பு த்துவே ஷத்தையும்," உண்டு பண்ணக் கூடியனவாயி ருக்கின்றன. ஆயினும் ஆஸ்திகர்கள் பலரும் ஸகுடும்பமாகக் கும்பல் கும்பலாகச் சென்று பணத்தைக்கொடுத்து, நித்திரை யிழந்து, மதி மயங்கி, சுயமரியாதை யுணர்ச்சியின்றி, கள் குடித்தவன் போலாகி விடுவது கண் கூடு. காப்பிக்குடியைக் கூட தோற்கடித்து விடும் போலிருக்கிறது இந்த ஸினிமா பைத்யம்.

ஆகவே ஒவ்வொரு ஊரிலும் இதைப்பற்றி பிரசாரம் செய்து, சிறந்த கதையோ அல்லது அறிவு புகட்டும் படமாக இருந்தாலொழிய ஆஸ்திகர்கள் போய் பார்க்காத வழியைத் தேடவேண்டும். மேலும் குறிப்பிட்ட இடங் களில் ஆக்ஷேபகரமான படங்கள் நடக்கும் சமயத்தில் துண்டு பிரசுரங்கள் மூலமும், பிர சங்கங்கள் மூலமும், ஜனங்களுக்கு பிரசாரம் செய்து, புராண இதிகாசக்கதா காலக்ஷேப ங்களை நடத்தி, ஜனங்கள் மனதைத் திருத்த வேண்டும்.

முக்கியமாக சிறுவர்களும் சிறுமிகளும் ஸினிமாபோவதை நிறுத்த வேண்டும்.

டி. எம். சர்மா. பி. ஏ.,
திருப்பத்தூர்.

[சினிமாப் படங்களைப் பற்றி அன்பர் குறை கூறி, சில யோஜனைகள் கூறியுள்ளார். பொது 'வாசப்பேசும் படங்களில், பிராமண வகுப்பை மட்டும் இழிவு படுத்திப்படம் எடுக்கப்படுகின்றன. புராண கதைகளில் காமிக் என்ற கூறும் ஹாஸ் யப்பகுதிகளில் பிராமணர்களை மிகவும் இழிவு படுத்திக் காட்டி யிருக்கிறார்கள். இம்மாதிரி படங் களை காசு கொடுத்துப் பார்க்கும் பிராமணர்களை அறவே ஒழிக்க முடியும். இந்த மூடாத்மாக்கள் கிறிஸ்தவர்களைப்பற்றியாவது, முகமதியர்களைப் பற்றியாவது ஆபாசமாய் படம் எடுத்துக்காட்டுவ தில்லை, அந்த ஜனங்களையும் இழிவு படுத்துவதி ல்லை. காரணம் 'பயம்'. சர்க்காரும் அந்தப் படங் களை காட்ட அனுமதிப்பதில்லை. ஏனோ! இந்த விஷயமும், பட முதலாளிகள் இனி ஒரு வகுப் பாரையும் இழிவு படுத்திக்காட்டக்கூடாது. அப்படி வெளி வந்தால் அதை பரிகரிய யோசனைகள் ஒரே முறையில் அர்த்தங்கள் காட்ட வேண்டும். ஆசிரியர் ஆ. த.]



3 - JUL 1939
MADRAS

# மூகபஞ்ச சதீ

## மந்தஸ்மித சதகம்.

50 ப்ரேங்கந்த: சரதம்புதா இவ சனை: ப்ரேமாநிலை: ப்ரேரிதா: |
மஜ்ஜந்தோ மதனாரிகண்டஸுஷமா விந்தௌ முஹு: மந்தரம் |
ஸ்ரீ காமாக்ஷி! தவஸ்மிதாம்சு நிகரா: ச்யாமாயமானச்ரிய: |
நீலாம்போதரநைபுணீம் தத இதோ நிர்நித்ரயந்த்யஞ்ஜஸா ||

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. சரதம்புதா இவ— சரத்காலத்திய மேகம் போல். ப்ரேங்கந்த:— விளங்குகிற. தவ- உனது. ஸ்மிதாம்சுநிகரா:- புன்சிரிப்புக் காந்தியானவை. சனை:- மெள்ள. ப்ரேமாநிலை:- அன்பெனும் காற்றினால். ப்ரேரிதா:- அலைக்கப்பட்டவைகளாய். முஹு:- அடிக்கடி. மதனாரிகண்ட ஸுஷமா விந்தௌ- சிவனுடைய கழுத்தின் காந்தியாகிற ஸமுத்திரத்தில். மந்தரம்- மெதுவாக. மஜ்ஜந்த:- முழுகினவைகளாய்க் கொண்டு. ச்யாமாயனச்ரிய:- கருத்த நிறமுள்ளவைகளாகி. அஞ்ஜஸா- உடனே. தத இத:- அங்குமிங்கும். நீலாம்போதரநைபுணீம்- நீருண்ட கருத்த மேகத்தின் நிலைமையை. நிர்நித்ரயந்தி விளங்கச்செய்கின்றன.

51. வ்யாபாரம் சதுராநனைக விஹ்ருதௌ வ்யாகுர்வதீ குர்வதீ |
ருத்ராக்ஷக்ரஹணம் கரேண ஸததம் வாகூர்மி கல்லோலிதா |
உத்புல்லம் தவளாரவிந்த மதரீ க்ருத்ய ஸ்புரந்தீ ஸதா |
ஸ்ரீ காமாக்ஷி! ஸாரஸ்வதீ விஜயதே த்வந்மந்தஹாஸ ப்ரபா ||

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே சதுராநனைகவிஹ்ருதௌ - பிரம்ம தேவனுடைய விளையாட்டில் (ஸாமர்த்தியமாகப் பேசுகிறவர்களுடைய விளையாட்டில்) வ்யாபாரம் - தனது காரியத்தை, வ்யாகுர்வதீ - காட்டுகிறதாயும், கரேண - கையினால், ருத்ராக்ஷக்ரஹணம் குர்வதீ - ருத்ராக்ஷத்தை வைத்துக்கொண்டிருப்பதாயும், (சிவனுடைய இந்திரியங்களை வசப்படுத்துகிறதாயும்) ஸததம் - எப்போதும், வாகூர்மி கல்லோலிதா - வாக் என்னும் அலையால் அலைக்கப்பட்டதாயும், ஸதா - எப்போதும், உத்புல்லம் - நன்கு மலர்ந்ததான தவளாரவிந்தம் - வெண்டாமரைப்பூவை, அதரீக்ருத்ய - தாழ்த்தியதாகச் செய்துகொண்டு (அஸனமாக்கிக்கொண்டு) ஸ்புரந்தீ - விளங்குகிற, த்வந்மந்தஹாஸப்ரபா - உனது புன்சிரிப்புக்காந்தியானது, ஸாரஸ்வதீ - ஸரஸ்வதியாக, விஜயதே - விளங்குகிறது.

52 கர்ப்பூரத்யுதி தஸ்கரேண மஹஸா கல்மாஷயந்த்யானனம் |
ஸ்ரீகாமாக்ஷி! சிவப்ரியே! பதிரிவ ஸ்ரீமந்தஹாஸோऽபி தே |
ஆலிங்கத்யதி பீவரம் ஸ்தனதடம் பிம்பாதரம் சும்பதி ப்ரௌடம் ராகபரம் வ்யனக்தி மனஸோ தைர்யம் துனீதே தராம் ||

சிவப்ரியே - சிவபத்னியான. ஸ்ரீகாமாக்ஷி! - காமாக்ஷியே. தே - உனது. ஸ்ரீமந்தஹாஸோऽபி - புன்சிரிப்பும். பதிரிவ - உன்பர்த்தாவைப் போலவே. கர்ப்பூரத்யுதி தஸ்கரேண - கர்ப்பூர காந்தியைக் கவர்கிற மஹஸா - ஒளியினால், ஆனனம் - முகத்தை கல்மாஷயதி - விசித்ர நிறமுள்ளதாகச் செய்கிறது. அதிபீவரம் மிகவும் பெருத்த. ஸ்தனதடம் - ஸ்தனப் பிரதேசத்தை. ஆலிங்கதி ஆலிங்கனம் பண்ணிக் கொள்ளுகிறது. பிம்பாதரம் - கோவைப் பழம் போன்ற உதட்டை. சும்பதி - முத்தமிடுகிறது. மனஸ:- மனதினுடைய. தைர்யம் - தைர்யத்தை. துனீதேதராம் - ஆடச் செய்கிறது.

53 வைசத்யேனச விச்வதாப ஹரணக்ரீடா படீயஸ்தயா |
பாண்டித்யேன பசேளிமேன ஜகதாம் நேத்ரோத்ஸவோத்பாதனே |
காமாக்ஷி! ஸ்மிதகந்தளஸ்தவ துலாமாரோடுமுத்யோகினீ |
ஜ்யோத்ஸ்னௌ ஜலராசி போஷணதயா தூஷ்யாம் ப்ரபந்நாதசாம் ||

காமாக்ஷி! காமாக்ஷியே. வைசத்யேனச- வெளுமையைக் கொண்டும். விச்வதாபஹரணக்ரீடாபடீயஸ்தயா- உலகத்தின் தாபத்தை நீக்குவதிலுள்ள ஸாமர்த்யத்தினாலும். ஜகதாம்- ஜகத்திற்கு நேத்ரோத்ஸவோத்பாதனே- நேத்திரானந்தத்தை உண்டு பண்ணும் விஷயத்தில். பசேளிமேன பாண்டித்யேன - பழுத்ததான ஸாமர்த்தியத்தினாலும், தவ- உனது. ஸ்மித கந்தள:- புன்சிரிப்புக்களோடு. துலாம்- ஸமதையை. ஆரோடு முத்யோகினீ- அடைவதற்கு முயற்சி செய்கிற. அஸௌ ஜ்யோத்ஸ்னா- அந்த நிலவானது, ஜலராசி போஷணதயா- ஜல ராசி யென்கிற ஜடராசியின் மத்யத்தில் வளர்க்கததாலே. தூஷ்யாம்- இழிவான. தசாம்- நிலைமையை ப்ரபன்னா அடைந்து விட்டது.

54. லாவண்யாம்புஜினீம்ருணாளவலயை: ச்ருங்கார கர்ஜத் த்விப |
க்ராமண்ய ச்ருதிசாமரைஸ்தருணிம ஸ்வாராஜ்ய பீஜாங்குரை: |
ஆனந்தாம்ருதவிந்து வீசிப்ருஷதை: ஆஸ்யாப்ஜஹம் ஸைஸ்தவ |
ஸ்ரீ காமாக்ஷி! மதான மந்தஹஸிதை: மத்கம் மன:கல்மஷம் |

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, லாவண்யாம்புஜினீம்ருணாளவலயை:- அழகென்னும் தாமரைப்பூவின் தண்டுகளாயும், ச்ருங்கார கர்ஜத்த்விபக்ராமண்யச்ருதிசாமரை: - சிருங்காரமென்னும் உயர்ந்த யானையின் சாமரம் போன்ற காதுகளாயும், தருணிமஸ்வாராஜ்யபீஜாங்குரை: - யௌவனமென்னும் ஸ்வாராஜ்யத்தின் வித்துக்களாயும், ஆனந்தாம்ருத விந்துவீசிப்ருஷதை: - ஆனந்தமென்னும் அம்ருத ஸாகரத்தின் சிறிய அலைகளாயுமிருக்கிற, ஆஸ்யாப்ஜஹம்ஸை: - முகமென்னும் தாமரைப்பூவிலிருக்கும் ஹம்ஸங்களாயுமிருக்கிற, தவ - உனது மந்தஹஸிதை: - புன்சிரிப்புக்களால் மத்கம் - எனது, மன:கல்மஷம் - மனதிலிருக்கும் அழுக்கை, மதான - போக்கடிப்பாயாக.

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸு வைகாசி-மீ 18உ

## மீண்டும் கலப்பு விவாஹ மசோதா.

இந்தியா சட்டஸபை மெம்பரான ஸ்ரீமான் பிரகாச் என்பவர், ஹிந்துக்களுள் ஜாதிக்கலப்பு விவாஹம் செய்து கொண்டால் செல்லுபடியாகக் கூடியதும், விவாஹத்தை ரெஜிஸ்தர் மூலம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதுமான ஓர் மசோதாவைக்கொண்டு வரப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். இத்தகைய கலப்பு விவாஹ முயற்சியானது ஆசாரத்திருத்தக்காரர்களால் வெகுகாலமாகச் செய்யப்பட்டு வருகிறது. பூபேந்திரநாதவஸு, விட்டல்பாய் படேல், டாக்டர் கவர், பாபு பகவான் தாஸ் முதலியவர்கள் இத்தகைய மசோதாவைக்கொண்டு வந்தும், அது பொதுஜன ஆதரவில்லாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டு விட்டது. மேலும், இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய மத நடுநிலைமைக் கொள்கையால் இத்தகைய மசோதாவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

சென்ற வருஷத்தில் தான் இந்த ஸ்ரீபிரகாசரின் நிருத்தகப்பனான பாபு பகவான் தாஸ் கொண்டு வந்த மசோதா நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இதற்குள் அத்தகைய மசோதா ஒன்றை பின்னும் அவஸரமாகக் கொண்டு வந்திருப்பதிலிருந்து இவருடைய ஆசாரத்திருத்த வெறியும், ஜாதி தர்மத்தை அழிப்பதிலுள்ள ஆவேசமும் நன்கு வெளியாகிறது.

ஆதி முதல் ஜாதிக் கலப்பு விவாஹத்திற்கு முயற்சிப்பதானது, ஹிந்துக்களுள் சாஸ்திரியமாக அமைந்துள்ள ஜாதி பேதத்தை ஒழிக்கவே நோக்கம் கொண்டதென்பது வெட்ட வெளிச்சமானது. ஜாதிப் பிரிவும், ஜாதிப் பூசலும் இருப்பதாலேயே, இந்தியா முன்னேற்ற மடையவில்லையென்ற விபரீத புத்தியானது ஸ்ரீபிரகாச் போன்றவர்களுக்கு இன்றும் இருந்து வருவதானது வருந்தத்தக்கது. பாரததேசத்தில் அமைந்துள்ள ஜாதி பேதமானது மனிதர்களால் செய்து கொள்ளப்பட்டதல்லவென்றும், அது பகவானாலேயே ஏற்படுத்தப்பட்டதென்றும் பகவத்கீதையில் ஸ்ரீ பகவானே வெளியிட்டிருக்கிறார். இந்த ஜாதிபேதமானது ஹிந்துக்களின் கலை, நாகரிகம், மேதாசக்தி போன்றவைகளுக்குக்காரணமாகி நம்மை இன்று வரையில் உரு அழியாமல் காத்து வந்திருக்கிறது.

உலகிலுள்ள மற்ற எல்லா தேசங்களையும் விட ஹிந்து தேசத்தினர் இன்றும் உயர் நிலைமையிலிருந்து வருவதற்கும் இந்த ஜாதி பேதமே முக்ய காரணமென்பது மிகையாகாது. திருத்தக்கார பிரகஸ்பதிகள் நினைப்பதுபோல் ஜாதி பேதமானது, துவேஷத்தையோ, ஏற்றத்தாழ்வையோ ஆதாரமாகக் கொண்டதன்று வர்ண தர்மங்களும், ஆச்ரம தர்மங்களும், அந்தந்த ஜாதியாரின் இஹபர நன்மைகளை வகுத்துக்காப்பாற்றி மிருந்த ஒற்றுமையையும், அதன்மூலம் தேசத்தில் அமைதியையும் நிலவச்செய்யவே ஏற்பட்டவையென்பதை வெகு எளிதாக அறியக் கூடும்.

ஜாதி பேதத்தையும், ஸ்வராஜ்யத்தையும் ஸம்பந்தப்படுத்திப் பேசுவது வெறும் மூடத்தனமென்பது பலதடவை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பாரத தேசத்தில் எவ்வளவோ காலமாக ஜாதிபேதமிருந்துவந்தும், நனங்கள் ஒருமாதிரியாக ஸ்வராஜ்யம் அநுபவித்து வந்ததாகவே சரித்திர விமர்சகர்களின் கூற்றுலும், நமது புராணங்களிலிருந்தும் அறியக் கூடியது. தசரத சக்ரவர்த்தி ஸ்ரீ ராமபிரானுக்கு ராஜ்ய பட்டம் கட்ட எண்ணியவுடன் பிரஜைகளின் கூட்டமொன்றைக் கூட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். அந்த ஸபையில் வஸிஷ்டர், வாமதேவர் போன்ற அந்தண ச்ரேஷ்டர்களுடன் மிலேச்சர், யவனர், போன்ற வேறு பல ஜாதியினரும் வந்திருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் ஜாதிபேதமானது மத ஸம்பந்தப்பட்ட கார்யங்களுக்கு மட்டும் ஏற்பட்டதென்றும், ராஜ்யம் போன்ற பொதுக் காரியங்களில் எல்லா ஜாதியாரும் ஸம உரிமையுடனிருந்ததாகவும் தக்க ஆதாரத்துடன் கூறமுடியும்.

ஜாதிபேதத்தினால் இந்தியா ஸ்வராஜ்யமடைய முடியவில்லையென்பது, உண்மையானல் ஜாதிபேதமே இல்லாத மேற்றிசை நாடுகளில் பிரஜைகளுக்கு ஸ்வராஜ்யம் கிடைத்து ஸௌபாக்யமாக வாழ்கிறார்களா? ஓரே ஜாதியினராயிருந்த அயர்லாந்து, நேற்று வரையில் அடிமைப்பட்டு ஸ்வராஜ்யத்திற்கு நிண்டாடவில்லையா?

இந்திய ஆசாரத்திருத்தக்காரர்கள் ஜாதி பேதத்தின் மீது சீறிவிழுந்தாலும், இன்று நவீன உலகில் நாகரிகத்தின் உச்சியில் விளங்கிவரும் தேசங்கள் யாவும் பிறப்பு ஜாதி அபிமானத்தை ஆதாரமாகக்கொண்டே ராஜ்யம் நடத்துவதை ஸ்ரீ பிரகாச் அறியவில்லை. ஆங்கிலேயன், பிரஞ்சுக்காரன், ஜர்மானியன், இதாலியன் என்று அந்தந்த தேசத்தான் தனது பிறப்பு ஜாதியை முன்னிட்டே உரிமைகளைப் பெற விரும்புகிறான். ஆங்கிலேயன் நன்மைக்காகவே ஆங்கிலேயர் ராஜ்யம் நடத்துகிறார்கள். மற்ற ஜாதியாரைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

இது மாதிரியே மற்ற ஒவ்வொரு தேசத்தாரும் தம் தேசத்தில் பிறந்த பிரஜைகளின் க்ஷேமத்தையும், பாத்தியங்களையுமே கவனிக்கிறார்கள். ஆங்கிலேயனுக்கும், ஆங்கில ஸ்திரீக்கும் பிறந்தவனே சுத்த ஆங்கிலேயனாக மதிக்கப்படுகிறான். கலப்பு விவாஹம் செய்துகொண்டவர்களுக்குத் தனிப் பெயரும், தனி பாத்யங்களுமே கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். வெள்ளைநிற முள்ளவர்கள் யாவரும் ஒரே ஜாதியினராக ஆகிவிட்டனரா? இப்போது ஐரோப்பாவில் புகைந்துகொண்டிருக்கும் நெருப்பானது பிறப்பு ஜாதிபேத இறுமாப்பையே அடிப்படையாகக் கொண்டதென்றே உண்மையை மறைக்க முடியுமா?

ஜர்மனியில் ஹிட்லர் ஜாதிபேதத்தை சட்டமூலமாக ஸ்திரப்படுத்தியுள்ளார். ஆர்யர்களாகக் கருதப்படும், ஜர்மானியர்கள் யூதர் முதலிய அந்த இதர ஸ்திரீ—புருஷர்களையும் மணக்கக்கூடாதென்று சட்டம் செய்திருக்கிறார். ஆகையால் உலகெங்குமே ஜாதிபேதமும், ஜாதியபிமானமும், ஸ்வஜாதி ரக்ஷண ஆர்வமும் காணப்படுகையில் பாரத தேசத்தைமட்டும் பழி கூறுவது அபத்தமானது.

ஜாதிபேதமானது, சரீரத்த குணங்களின் அமைப்பை ஆதாரமாகக் கொண்டது. ஸ்தூலமாகக் காணப்படும் சரீர அமைப்பை மாத்திரம் பற்றியதல்ல பால் வெளுப்பு நிறமுள்ளதுதான். ஆயினும், பசு, எருமை, ஆடு போன்றவைகளின் பாலில், ருசி பேதமும் குணபேதமும் இருப்பதை ஸூக்ஷ்மதர்சிகளே அறியமுடியும். அதுபோல், சரீர தத்வ சாஸ்திரிகள் செய்துள்ள ஆராய்ச்சியின்படியும் கலப்பு விவாஹமும் தடுக்கப்படுகிறது.

பிரபல ஸயன்ஸ் நிபுணரான ஸர். ஹர்பர்ட்ஸ்பென்ஸர் இங்கிலாந்தினரும், ஜப்பானியரும் கலப்பு விவாகம் செய்து கொள்ளக் கூடாதென்று அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். கலப்பு விவாஹத்தால் பிறக்கும் பிரஜைகள், தகப்பன் ஜாதியில் சேராமலும், தாய் ஜாதியில் சேராமலும், நடுத்தர புதிய ஜாதியினராகவே இருக்க முடியுமென்றும் சரீர பலம், புத்தி பலம், பொது அந்தஸ்து இவைகளில் கலப்பு ஜாதியினர் கீழ்ப்பட்டவர்களாகவே இருப்பார்களென்றும், இதற்கு நீக்ரோவர், யூரேஷ்யர் போன்றவர்களே உதாரணமென்றும் ஸ்பென்ஸர் கூறியுள்ளார். கலப்பு விவாஹத்தால் பிறந்த யூரேஷ்யர்கள், தந்தை ஜாதியிலோ, சேராமல் தனி ஜாதியாகத்தாழ்ந்த நிலைமையிலே வாழ்ந்து வருகிறார்கள். ஆகையால் ஜாதி கலப்பு விவாஹமானது ஜாதிபேதத்தை ஒழிப்பது போக, தேசத்தில் இன்னும் பற்பல ஜாதிகளை உற்பத்திசெய்து சுத்த ஜாதியின் சரீர, புத்தி சக்தியை நசிக்கச் செய்து பாரததேசத்தின் சிறப்பையே பாழாக்கி விடும். இந்தக் கலப்பு விவாஹமசோதாவை ஹிந்துக்கள் ஒருமுகமாக எதிர்த்துத் தூர்த்தவேண்டும்.

## குறிப்புகள்

### ஹைதராபாத் சத்யாக்கிரஹம்

சில தினங்களுக்கு முன் ஹைதராபாத் சமஸ்தானத்தில் நடந்துவரும் சத்யாக்கிரஹத்தைப்பற்றி விவரித்திருந்தோம். ஆரம்பத்தில் இந்த இயக்கத்துக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஹைதராபாத் சமஸ்தானத்தில் நடக்கும் அக்ரமங்களைப் பற்றி ஹிந்துக்களுக்குத் தெரியவாவே, அவர்கள் இந்த இயக்கத்துக்குப் போதாவு காட்டினார்கள். காட்டியும் வருகிறார்கள். பிரபல தேசியத் தினசரிப் பத்திரிகைகள் என்று கூறப்படும் சில முதலாளிப் பத்திரிகைகள் இந்த இயக்கத்தைப்பற்றி ஒருவரிகூட எழுதவில்லை. ஹைதராபாத்திலிருந்து வரும் செய்திகளை இவர்கள் தணிக்கை செய்து வந்தார்கள். ஆனால் இயக்கம் வலுக்கவே, அவர்கள் அடிபணிந்து செய்திகளுக்கு இடம் கொடுக்கவேண்டி வந்துவிட்டது. ஹைதராபாத்தில் இப்பொழுது என்ன நடக்கிறது? ஏன் அங்கு சத்யாக்கிரஹம் ஆரம்பிக்கப்பட்டது? ஹைதராபாத்தில் வசிப்போர்களில் பெரும்பாலோர் ஹிந்துக்கள்;



முஸ்லீம்கள் 100க்கு 10½பேர்தான். அந்த சமஸ்தானத்தை அரசாள்பவர் ஒரு முஸ்லீம். இந்த சமஸ்தானத்தில் பெயருக்களவில் ஒரு சட்டசபை இருக்கிறது. அதில் 21 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 21 பேரில் 15 பேர் அதிகாரிகள். மீதி 6 பேரில் 2 பேர்களை பிரதம மந்திரி நியமிக்கிறார். மீதி நான்கு ஸ்தானங்களுக்கு இருவரை வக்கீல் சங்கம் நியமிக்கும். இதர இருவர் ஜாகீர்தார்கள்! ஆகா! ஜனப் பிரதிநித்வம் கொண்ட சபையாம் இது! இந்த சட்டசபையின் சிறப்பே சிறப்பு! 100க்கு 88பேர்கள் ஹிந்துக்களாயிருந்தும் சர்க்கார் சேவகத்தில் 22½ சதம் தான் இருக்கிறது. ஆனால் 100க்கு 10½ சதம் இருக்கும் முகமதியர்களுக்கு 68 சதம் இருக்கிறது. மீதி இலாகாவிலிருக்கும் அக்ரமங்களை விவரிக்க முடியாது இதில் 92சதம் முஸ்லீம்கள். கல்வி அபிவிருத்தியைப்பற்றி சொல்லவேண்டியதேயில்லை. முகமதியர்களில் 1000க்கு 133 பேருக்கு கல்வியுண்டு. ஹிந்துக்களில் 1000க்கு 33 பேருக்குத்தான் கல்வி. இதேமாதிரிதான் மற்ற விஷயங்களிலும். ஹிந்துக்களுக்கு மத சுதந்திரம் கிடையாது. ஹிந்துக்களின் பத்திரிகைகளுக்குப் பலவிதத்தில் இன்னல்கள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன.

ஹிந்துக்களுக்கு சமஸ்தானத்தில் போதிய பாதுகாப்பு காட்டப்படவில்லை. ஹிந்துக்களுக்கு பிரஜா உரிமை கிடையாது. இந்த மாதிரி அக்கிரமங்களை அடியோடு அகற்றிவிட வேண்டிதான் அங்கே சத். இயக்கம் ஆரம்பமாயிருக்கிறது.

ஹைதராபாத் சமஸ்தானத்திலிருக்கும் முஸ்லீம் பத்திரிகைகளைப்பற்றி ஒருவார்த்தை. அவைகள் மகா கேவலமான பாஷையில் ஹிந்துக்களைத் தூஷித்து எழுதுகின்றன. காங்கிரஸ் மந்திரிகளை ஆபாசமாய் தாக்குகின்றன. இதை நிஜாம் சர்க்கார் கண்டிக்கவுமில்லை. தடைசெய்யவுமில்லை. ஆனால் ஹைதராபாத்தில் நடக்கும் அக்ரமங்களைப் பற்றி வெளியான பிரசுரங்களை மட்டும் சென்னை காங்கிரஸ் சர்க்கார் பறிமுதல் செய்துவிட்டார்கள். சென்னை சர்க்கார் ஹைதராபாத் சமஸ்தானத்தினரோடு நட்பு முறையில் இருக்கவேண்டி விரும்பினார்கள் போலும்! ஆனால் ஹைதராபாத் சர்க்கார் தமது பெருந்தன்மையைக் காட்டிக்கொள்ள முன் வராதது வருந்தத்தக்கது.

"சுதேச சமஸ்தானங்களில்" பொறுப்பாட்சி கிளர்ச்சி" கூடாதென்று ஜின்னா கூறுகிறார். பொறுப்பாட்சி ஏற்பட்டுவிட்டால் முற்போக்காளர் அதிகாரத்திற்கு வருவர். அவர்கள் வந்தால், சமஷ்டி சபைக்கு முற்போக்காளர்களாயிருப்பவர்களையே அனுப்புவார்கள். அவர்கள் காங்கிரஸில்தான் சேருவார்கள்." இந்த பயம் முகம்மதியர்களின் முன்னேற்றத்திற்கு உழைப்பதாகக் கூறும் ஜின்னாவுக்கு ஏற்பட்டிருப்பது இயற்கை. இந்த சவடால் பேர்வழி "காஷ்மீரத்தில்" முகமதியர்கள் நடத்தும் பொறுப்பாட்சி கிளர்ச்சியை எதிர்க்கவில்லை. ஏனென்றால் அங்கு முஸ்லீம்கள் பெரும்பான்மையோர். அரசரோ ஹிந்து. மதத்தினர் ஹிந்துக்களின் ஜன்ம விரோதியான ஜின்னா அங்கு அதுக்கர்களைத் தூண்டிவிடுகிறார். ஆனால் ஹைதராபாத்தில் நடக்கும் பொறுப்பாட்சி இயக்கத்தை மட்டும் கண்டிக்கிறார். பத்திரிகைகளில் ஆவேஷித்து எழுதுகிறார்.

"முஸ்லீம் லீக்" என்ற இந்த பிற்போக்கான கட்சியினர் ஹைதராபாத்தில் பொறுப்பாட்சி கூடாதென்று கூறுவதின் ரகசியம் இப்பொழுது தெரிந்துவிட்டது.

ஆரம்பத்தில் ஆர்ய சமாஜிகளினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த சத்தியாக்கிரஹ இயக்கம் இன்று "ஹிந்துக்களின் பிரஜா உரிமை போராட்டம்" என்று உலகெங்கும் கூறப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான ஹிந்து தொண்டர்களையும், தலைவர்களையும் நிஜாம் அரசாங்கம் சிறையிலிட்டு கொடுமைசெய்து வருகிறது. தண்டனை பெற்ற பல தொண்டர்கள். சிறையில் உயிர் துறந்தனர். பலருக்குக் கசையடி தண்டனை விதிக்கப்பட்டது.

இதுதான் ஹைதராபாத் சமஸ்தானத்தின் நீதி. மே. த. நிஜாம் கவிகட்டுவதில் சமர்த்தராயிருக்கலாம். உலகில், கோடீஸ்வரன் என்ற பட்டப்பெயர் பெற்றிருக்கலாம். இவைகளெல்லாம் இருந்து யாது பயன். ஹிந்து மக்களிடமிருந்து பல இனங்களில் வாங்கும் வரி பணத்திலிருந்து அவர்களுக்கு ஒருவித நன்மையும் செய்யவில்லை என்றால் ஹிந்துக்களால் மௌனமாகஇருக்கமுடியுமா? முஸ்லீம் லீகின் எவ்வளவு பயமுறுத்தினாலும், நிராதியான தொண்டர்களை மூர்க்கமாகத் தாக்கினாலும் ஹிந்துக்கள் ஒரு நாளும் பயப்படப்போவதில்லை. ஹைதராபாத்தில் 100-க்கு 88 பேர் ஹிந்துக்கள் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமஸ்தானத்தில் பெரும் பான்மையோரான ஹிந்துக்களை சிறு பான்மையோரான முஸ்லீம்கள் அதிக காலம் அடக்கி ஆளமுடியாது. ஹிந்துக்களுக்கு பிரஜா உரிமை அளித்து அவர்களுக்கும் அவர்கள் விதாசாரப்படி உத்தியோகங்களில் பதவி அளித்து, ஏற்பாடு செய்யும் வரையில் இந்த இயக்கம் நடந்து கொண்டேதானிருக்கும். எனவே, ஹைதராபாத் சமஸ்தானத்து அதிகாரிகள் விழிப்புற்று தக்கது செய்து ஹிந்துக்களின் மதிப்பைப் பெற முன்வரும்படி யோஜனை கூறுகிறோம். "இந்த ஹிந்து பிரஜா உரிமை இயக்கத்தை" நசுக்கமுடியுமா என்று ஜின்னாவையும், முஸ்லீம்லீகையும் கேட்கிறோம்!

(எல். எஸ். மணி.)

### ஹைகோர்ட் ஜட்ஜ் பென்ஷன் பறிமுதல்

திருவாங்கூர் ஹைகோர்ட் ஜட்ஜாகவிருந்து உபகாரச்சம்பளம் பெற்றுவரும் ஸ்ரீ சங்கன்சேரி கே. பரமேஸ்வரன் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டுவரும் "பென்ஷனை" நிறுத்திவிட திருவாங்கூர் அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த ஜட்ஜ் சர்க்காருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்துவந்தாராம்.

### ஸ்ரீ மடத்தில் அன்னதானம்

மே. த. ஸ்ரீ ஜெகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளின் உத்திரவுக் கிணங்கி மேமீ 30உ 11 மணிக்கு காலம் சென்ற ஸ்ரீ ராமசாமி சிவன் ஞாபகார்த்தமாக "ஸ்ரீமடத்தில்" சுமார் 1500 பேர்களுக்கு அன்னதானம் செய்யப் பட்டது.

### கபூர்தலாவில் வரிவஜா

கபூர்தலா சமஸ்தானத்தில் 1939ஸு சர்குபடியில் 28,180 ரூ. கிஸ்தி வசூலாக வேண்டும். அதை மகாராஜா வஜா செய்துவிட்டார்.

### திருப்பதி தேவஸ்தான கமிட்டி.

திருப்பதி தேவஸ்தானக் கமிட்டிக்கு ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாசய்யங்கார் B.A., B.L. M.L.C. அவர்களை ஒரு அங்கத்தினராக சென்னை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். ஸ்ரீ அய்யங்கார் பிரபல எழுத்தாளர் உண்மைத் தமிழன்பர். ஆலய வழி பாட்டில் பற்றுடையவர். பிரபல வழக் கறிஞர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்து தமிழ்த் தொண்டு செய்த விஷயம் யாவரும் நன்கறிவர்.

### இந்தோ—பிரிட்டிஷ் ஒப்பந்தம்

இந்தோ—பிரிட்டிஷ் வர்த்தக ஒப்பந்தத்தின் ஷரத்துகளடங்கிய காப்பு வரிச்சட்டத்துக்கு மா. த. மன்னர் மேமீ 27உ அங்கீகாரமளித்து விட்டார்.

### ஷில்லாங்கில் பூகம்பம்.

மேமீ 27உ காலை 9மணிக்கு ஷில்லாங்கில் (அஸ்ஸாம்) பூகம்ப மேற்பட்டது. பூகம்ப அதிர்ச்சி 50 வினாடிகள் வரை இருந்தது. கட்டிடங்கள் வெடிப்புண்டன.

### டாடா கம்பெனி அதிர்ஷ்டம்.

இந்திய ராணுவ அதிகாரிகள், டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலையினரை, கவசந்தரித்த மோட்டார்கள், டாங்கிகள், கடற்படை ஆயுதங்கள் இவற்றிற்கு வேண்டிய கவசத்தகடுகளை உற்பத்தி செய்து தரமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள்?

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக்
டி.டி.
மிஸ்கி பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
விலை ரூ. 1—14—0. பவுண்டு.
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

# நாடும் நடப்பும்.

## "இந்தி ஒளிப்பு"

### வீரர்களுக்கு விடுதலை.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு ஒரு சிலர் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்கை வரலாற்றைப்பற்றி இங்கு விவரிக்க இடமில்லை. இவர்கள் எல்லோரையும் விடுதலை செய்துவிட சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். "இந்த இயக்கம் மறைந்து வருவதாக பொதுவான அபிப்பிராயமிருப்பதாலும், அதன் தலைவர் சமீபத்தில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாலும் கைதிகளை இனி சிறையில் வைத்திருப்பது கூடாதென்று" சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

### கிணறு தோண்டுகையில் மரணம்.

திருப்பதி, மூண்டபுடி கிராமத்தில் மே-மீ 27௳ கிணறு வெட்டுகையில் ஒரு பாகம் கீழே சரிந்து விழுந்து விட்டது. இதனால் மூன்று தொழிலாளர்கள் புதைந்து போயினர். பிரேதங்கள் கடைசியில் வெளியே எடுக்கப்பட்டன.

## சென்னை—ஒரிசா மந்திரிகள் மகாநாடு.

ஹைட்ரோ — எலக்டிரிக் திட்டத்தைக் குறித்து யோசிக்க வேண்டி சென்னை ஒரிசா மந்திரிகள் மகாநாடு ஜுன்-மீ கடைசி வாரத்தில் கூடும். இரண்டு மாகாணங்களுக்கும் விசேஷ வருமானத்தைத் தாக்கூடிய "போர்ரா நீர் வீழ்ச்சி" யிலிருந்து மலிவான முறையில் மின்சார சக்தியை உற்பத்தியையும் முறைப்பற்றி மகாநாட்டில் விவாதிக்கப்படுமாம்.

## வகுப்புவதாகப் பத்திரிகைகள்.

"அகில இந்தியாவிலுள்ள வகுப்புவாதப் பத்திரிகைகளை அதிக கண்டிப்பான முறையில் அடக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும், எல்லா மாகாண அரசாங்கங்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு மித்த முறையைக் கையாள வேண்டுமென்றும்," மே-மீ 28௳ சிம்லாவில் கூடிய "உள்நாட்டு அமைச்சர்கள் மகாநாட்டில்" ஒப்புக்கொள்ளப்பட்டது.

## "லஞ்சப்பேய் "எங்கே?

வடமேற்கு எல்லைப் புறமாகாண அரசாங்கத்தின் பிரதம அமைச்சர் கனம் டாக்டர் கான் அவர்களிடம் இரண்டு கிராமவாசிகள் "ஓர் கோர்ட் குமாஸ்தா 20 ரூ. லஞ்சம்" கேட்பதாகப் புகார்கூறினர். மந்திரி உடனே தமது கையொப்பத்துடன் 5ரூ. நோட்டை அவர்களிடம் அளித்து அதை லஞ்சம் கேட்பவரிடம் கொடுக்குமாறு அறிவித்தார். மறுதினம் கோர்ட் குமஸ்தாவுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. திடீரென்று பிரதம மந்திரியும், உதவிக் கமிஷனரும் கோர்ட்டுக்குப்போய் அந்த குமஸ்தாவைச் சோதனை செய்தார்கள். போலீஸார் குமாஸ்தா ஜேபியிலிருந்து 20ரூ நோட்டுகளை எடுத்தார்கள். அந்த நோட்டுகளில் பிரதம மந்திரி கையொப்பமிட்ட 5ரூ நோட்டு இருந்தது. குமாஸ்தா குற்றத்தை ஒப்புக் கொண்டார். போலீஸார்கள் அவரை கைதுசெய்தார்கள். விசாரணை நடந்து வருகிறது.

## முகம்மதியர்களுக்குள் ஒற்றுமையில்லை.

வடநாட்டில் ஷியா-சுனே வகுப்புத் தகராறு நடந்து வருகிறது. "தாபாத்" கிளர்ச்சி சம்பந்தமாக ஷியாக்கள் சத்யாக்ரஹம் செய்து வருகிறார்கள்., இது வரை 10,500 பேர் சிறைசென்றிருக்கின்றனர்.

இரவில் லக்ஷ்மணபுரியில் முஸ்லீம்கள் நடமாட கூடாதெனப் பிறப்பித்திருந்த தடை உத்திரவை இன்னும் 3 வாரங்களுக்கு நீடித்திருக்கிறார்கள்.

## சத்திரம் யாருடையது?

கிடுப்ரோலு என்ற விடத்தில் ஒரு சத்திரம் இருக்கிறது. இந்த சத்திரம் யாருக்குச் சொந்தம்? கிருஷிகர்களுக்குச் சொந்தமானதா? அல்லது ஜமீன்தாருக்குச் சொந்தமானதா? என்ற விஷயத்தில் தகராறு ஏற்பட்டிருக்கிறது. சத்திரத்துக்குள் கிருஷிகர்கள் நுழையக்கூடாதென்று 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. கிருஷிகர்கள் இதற்காக சத்யாக்ரஹம் செய்ய முடிவு செய்திருக்கிறார்கள்.

ஏஜண்டுகள் தேவை.
"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய வசதியுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை நல்ல கமிஷன் கொடுக்கப்படும் ஏஜண்டு நிபந்தனைகளுக்கு எழுதவும். மானேஜர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## மரம் விழுந்து மாண்டனர்.

மே-மீ 23௳ விருதுநகர் சாத்தூரில் பலத்த மழை பெய்தது. நாயுடு வகுப்பைச் சேர்ந்த மூன்று பெண்கள் மழைக்காக ஒரு புளிய மரத்தடியில் ஒதுங்கினர். புயல் காற்றினால் திடிரென்று மரம் சாய்ந்ததினால் அந்த மூன்று பெண்களும் அடியுடன் நசுங்கி மாண்டனர்.

## காங்கிரசுக்கு மூஸ்லீம்கள் ஆதரவு.

மோடாபாத்தில் ஜும்மா பிரார்த்தனை முடிந்ததற்குப் பிறகு நடந்த முஸ்லீம்களின் மாபெருங்கூட்டத்தில் ஜனாப் ஹபிள் அமத் என்பவர் பேசினார்.

"சுதந்திரம் பெற வேண்டுமானால் முஸ்லீம்கள் காங்கிரஸில் சேர்ந்து ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## ஹைதராபாத் சிறையில் 7000 கைதிகள்.

இதுவரையில் 7000 தொண்டர்கள் சிறை சென்றிருப்பதில் 100க்கு 7 வீதம் சமஸ்தானத்திலிருந்தே வந்திருக்கிறார்களென்றும் ஆரிய சமாஜிகளின் சாமானிய உரிமைகளாவது கிடைக்கும் வரையில் போராட்டம் நடந்தேதீருமென்றும் ஸ்ரீ கிருஷ்ண குறிப்பிட்டார்.

## முஸ்லீம்லீக்கை முஸ்லீம்கள் கண்டிக்கிறார்கள்.

ஆக்ரா மாகாண ஜமையத்துல் மகாநாட்டில் மௌலானா அமீன் அஷான் அலம் கனி பேசுகையில், "முஸ்லீம்லீகையும், அதன் மெம்பர்களையும் கண்டித்தார். இஸ்லாமியக்கலையையும், மதத்தையும் பாதுகாக்க இந்தியாவில் ஜமையத்துள்—இமாஹிஹிந்த என்ற ஒரே ஸ்தாபனம் தான் இருக்கிறது" என்று கூறினார்.

## ஸ்ரீரங்கம் யானைக்கு மதம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் தேவஸ்தானத்தைச்சேர்ந்த சேகான் என்ற ஆண்யானைக்கு மதம் பிடித்திருக்கிறது. இந்த யானைக்கு 30 வயதாகிறது. சேகான் சரிவர ஆகாரம் எடுப்பதில்லை. அடிக்கடி சத்தகிறான். இவனுடைய மதம் இறங்க இரண்டுமாதம் பிடிக்கும். யானைப்பாகனை சேகான் பயமுறுத்தி வருகிறான்.

## இந்தூரில் அடக்குமுறை.

இந்தூரில் அடக்குமுறை தாண்டவமாடுகிறது. "பொதுக்கூட்டங்கள் சம்மந்தமான தடை உத்திரவுகளை ரத்து செய்தல், கைதியானவர்களை விடுவித்தல், ஒரு கமிட்டி நியமித்தல், புதிய வரிகளை நிறுத்திவைத்தல்" இவைகளே பொதுஜனங்களின் கோரிக்கைகள். இந்தூர் பிரஜா மண்டலத் தலைவரும் மற்றும் 4 பேர்கள் மேமீ 25௳ முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கின்றனர். கடைக்காரர்கள் ஹர்த்தால் அனுஷ்டித்துவருகிறார்கள். சில ஜவுளிக்கடை திறக்கப்பட்டிருந்ததால் அதை மூடவேண்டுமென்று ஜனங்கள் வற்புறுத்தினர். உடனே போலீஸ் படை வந்தது. தடியடிப் பிரயோகமும் நடந்தது. 24 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இந்த சம்பவங்களைக் கேட்டு மகாராஜா வருத்தமுற்றார். அவர் மக்களின் குறைகளைத் தாமே நேரில் கவனிப்பதாகக் கூறினர்.

## ராமசாமி நாய்க்கர்.

இந்தி ஒழிப்பு இயக்கத் தலைவரான ஸ்ரீராமசாமி நாயக்கர் சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய பொழுது "தமது தேக நிலைசரியான பின் திரும்பவும் ஜெயில் போகப்போவதாகக் கூறினர். பின் எதற்காக இவரை சென்னை சர்க்கார் விடுதலை செய்தார்களோ? தெரியவில்லை.

முக்கிய கவனிப்பு
3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.
அசல் தங்கநகைகளைப்போன்ற "கன்னுஸ் ப்ளேட்ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.



## தர்மம்.

(ஸ்ரீ S. வைத்தீஸ்வர அய்யர். கல்கத்தா.)

தரிப்பது எதுவோ அது தர்மம். (Law of the universe). உலகமெலாம் நிலை குலையாது அணுப்பு முதல் அண்டம் ஈருக ஒவ்வொன்றுக அததற்கு ஏற்பட்ட இடத்திலிருப்பதும் அததற்கு ஏற்பட்ட காரியத்தைச் செய்வதும் தர்மமாகும். "ஆமுாமி கனையின்றி நிற்கவில்லையோ" என்று தாயுமானவர் இந்த தர்மத்தையே குறிப்பிடுகிறார். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பதால் தர்மத்தை விதிக்கிறவர் கடவுள். கடவுள் என்றால் கடைசியில் உள்ளவர். நாம் பேசும் போது "In conclusion" என்றும் "கடைசியில்" என்றும் ஒரு தீர்மானத்தைச் சொல்லுகிறோம். அவ்விதமே எல்லா வியவகாரங்களுக்கும் கடைசியில் ஸாரமாய் உள்ளவர் கடவுள். கடவுளின்றி தர்மமில்லை. தர்மத்தை அறிந்தாலன்றி கடவுளை அறிவது இயலாது.

புவனங்களுக்கெல்லாம் பொதுவாயுள்ளது ஸநாதன தர்மம். சூரியன் முதலான கிரஹ தர்மங்களும், தேவாஸுர தர்மங்களும், செழிப்பாயுள்ள நிலம், பாலைவனம், மலைநாடு, ஜலம் பனி வெயிற் பிரதேசங்கள் முதலிய தேசதர்மங்களும், சீதோஷ்ணம் பிறப்பிறப்பு முதலிய கால தர்மங்களும், மனிதர், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, முதலிய ஜந்து தர்மங்களும், மரம் செடி கொடி புல் பூண்டு முதலிய ஓஷதி தர்மங்களும், ஸநாதன தர்மத்தின் பிரிவுகள். மனிதர் நீங்கலாக எல்லாம் அதனதன் ஸ்வதர்மத்தின் பிரகாரம் சிறிதும் வழுவாது நடக்கின்றன. சூரியன் சிரமபரிகாரத்தைத் தேடுவதில்லை. சந்திரன் தேடுவதில்லை. சந்திரன் சுடுவதில்லை. மிருகம் முதலானவை தன் இனத்தை அடிமை கொள்வதில்லை. பிறப்பு, இறப்பு, பூப்பது, காய்ப்பது இவைகாலத்தை மீறுவதில்லை. மனிதன் தான் செய்கிறேன் என்பதெல்லாம் அறியாமையே மின்சாரத்தை மனிதன் செய்யவில்லை. நீராவியின் சக்தியை மனிதன் செய்யவில்லை. பதார்த்தங்களின் குணாகுணங்களை பரீக்ஷித்து ஆராய்ந்து உபயோகப்படுத்திக்கொள்கிறான். விதைக்கிறான், அறுவிடுகிறான். கடவுள் பலனைக்கொடுத்தால் அடைகிறான். ஆனால் மனிதன் தன்னையும் பிறரையும் ஆக்கவும், காக்கவும் அழிக்கவும் சக்தியுள்ளவனயிருக்கிறான் ஆக்குவதும் காப்பதும் மிகவும் அரிது. கடவுளின் அருள் பெற்ற மஹான்களாலே தான் முடியும். இது தர்மம். அழிப்பதும் ஹிம்சைப்படுவதும்தான் மிகவும் அதிகம். மனிதரெல்லோரும் இதனை எப்பொழுதும் செய்துகொண்டேயிருக்கிறார்கள். இது அதர்மம். இவ்விதம் ஸநாதன தர்மத்தில் தன் வசமில்லாதிருக்கும் அரும் பெரும் பாகத்தையும் வசமுள்ள அணுவளவையும் தர்மா தர்மத்தையும் ஒருவன் சிந்தித்தால் கடவுளை நம்புவான். தர்மத்தை நம்புவான். நற்கதியடைவான்.

மனித தர்மத்திலும் தேக தர்மம், மனோ தர்மம், ஸ்திரீதர்மம், மததர்மம், ஜாதிதர்மம் முதலான பிரிவுகள் இருக்கின்றன. ஆக்கவும் காக்கவும் சக்தியுள்ளவனே ஸ்வராஜ்யநிலையுற்றவன். அவனே தன்னைத் தானறிவான். அதற்கு வேண்டிய ஒழுக்கங்களை விதிப்பது ஆர்ய தர்மமாகும்.

ஆர்ய என்றால் தற்காலத்தில் சரித்திர புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் மத்திய ஆசியாவிலிருந்து வெளியேறியவர் அல்ல. ராமாயண காலத்திலும் சோழசோழ பாண்டிய நாடுகள் இருந்ததாக வால்மீகி ராமாயணத்தால் தெரிகிறது. பூமியென்பது எப்பொழுது படைக்கப்பட்டதாகக் கொள்கிறோமோ அப்பொழுதே பரதக்கண்டமும் அதன் நாற்புறங்களிலும் ஆர்யரும் படைக்கப் பட்டதாகக் கொள்ள வேண்டும். பஞ்ச திராவிடர்கள் பஞ்ச கௌடர்கள் என்று நம் தேசத்தவர் பிரிக்கப்பட்டிருக்கிறார்களே யன்றி ஆர்யமென்ற வகுப்பைக் காணோம். சம, தம, கருணை ஸம்பூர்ணர்களே ஆர்யராவர்.

ஆர்யதர்மத்தை அருமையாய் எடுத்தோதியவர் திருவள்ளுவர். அவர் அதனை வத்துளைத்து அதனுள் அண்டத்தைப்புகுத்தியுள்ளாரென்று ஔவையாரே கொண்டாடியுள்ளார். "அகரமுதலாய—" என்பது திருக்குறளுக் குறித்து எழுத்துக்களுக்கு முதல் "அ" எப்படியோ அப்படியே உலகிற்கு முதல் பகவன் என்று இரண்டையும் ஸமரிக்கிறார் திருவள்ளுவர். வாக்கிலிருந்து எழுந்து எழுத்தாகிறது. எழுத்தலாமென்றதாலும் உவமையாலும் பகவானிடமிருந்து எழுந்தது உலகு என்கிறது. எல்லா எழுத்துக்களிலும் "அ" என்ற சப்தம் எவ்வாறு நிறைந்திருக்கிறதோ அவ்வாறு உலகமெல்லாவற்றிலும் பகவான் அந்தர்யாமியாய் நிறைந்துள்ளார். "அ" விலிருந்து பெருகிய திருக்குறள் முழுதும் கிரஹித்துக்கொள்ளும் ஆற்றலையுடையவன் உலக முழுதும் அறிந்தவனாவான். உலகத்தை அறிந்தவன் பகவானை அறிவான் "ஆதி பகவன்" என்றதால் அவனும் பகவானாகவே ஆவான் என்றும் கொள்ளலாம். எழுத்து, ஆதி, உலகு என்றெல்லாம் அளவைக்குட்படுத்தியதால் எதிலிருந்து எழுகிறதோ அந்தப் பரம்பொருளையும் குறிப்பதாகிறது. "முதலாம்" என்று "முதல் ஆம்" என்றும் "முதற்றே" என்று உலக விஷயத்தில் தேற்றேகாரமும் வருவதால் பகவானில்லாது உலகமே இல்லை என்கிறது. "அ" என்பதை ஓரெழுத்து ஒரு சொல்லாய்க் கொண்டால் "சிவன்" என்று அர்த்தமாகிறது. ஆதி, பகவன், உலகு என்ற ஸம்ஸ்கிருத சொற்கள் முதல் குறளிலேயே வருவதால் திருவள்ளுவர் ஸம்ஸ்கிருதத்தில் வல்லாரென்பதும் அந்தபாஷை ஜாதி வித்யாஸமின்றி எவருக்கும் போதிக்கப்பட்டதென்பதும் புலப்படுகின்றன.

காளிதாஸனுடைய "வாகர்த்தாவிவ—" என்ற ச்லோகமும் அவரியற்றிய ரகுவம்சத்தின் தியான ச்லோகம். அதாவது 'வாக்கு அர்த்தம் ஆகியவைகளின் ஸ்வரூபமும் ஜகத்துக்கு மாதாபிதாக்களுமாகிய பார்வதி பரமேச்வரர்களை நமஸ்கரிக்கிறேன்" என்பது திருக்குறள் வணக்கம் போலவே இதுவும் அமைந்தது வியக்கத்தக்கது ரகு வம்சத்தில் உள்ள தர்மோபதேசங்களும் திருக்குறளுக்கிணையே ஆனால் ரகுவம்ச சரித்திரம் காவ்யம், திருக்குறள் நீதி நூல்.

(தொடரும்)

## ஸ்ரீமான் ராமசாமி சிவன் காலமானார்

தென்னாட்டில் பல ஆண்டுகளாக அன்னதான தர்மப்பணியை கைக்கொண்டு அன்னதான் சிவன் எனப் புகழ்பெற்ற ஸ்ரீமான் ராமஸ்வாமி சிவன் அவர்கள் சென்ற மேமீ திருபுவனத்தில் காலமானார். அன்னாருக்கு வயது 90. இவரது ஈமச்சடங்கிற்குப் பல பெரியோர்கள் வந்திருந்தனர். இப்பெரியோர் பிரிவினால் இந்துமதத்தில் நடந்த அன்னதான தர்மத்திற்கு ஓர் பெரிய நஷ்டமேற்பட்டுவிட்டதென்பது மிகையாகாது. இவ்வளவு வயோதிக தசையிலும், மனோதிடத்துடன் தர்மகைங்கர்யத்தை செய்துவந்தார்.

## பிரமாதி வருஷத்திய உபாகர்ம விசாரம்.

(ஸ்ரீ சங்கர சாஸ்திரி, சோழவந்தான்)

நாளது பிரமாதி வருஷத்தில் ஆவணி புரட்டாசி மாஸங்களில் சிராவணபாத்ரபத பௌர்ணிமைகளுக்கு சுக்ராஸ்தமன தோஷமாகையாலும் ஆனிமீ 17௳ ஆஷாட பௌர்ணிமையில் உபாகர்மாவைச் செய்யவேண்டுமென்றும் சிலபஞ்சாங்கங்களில் குறிப்பிட்டபடியே பலர் அபிப்ராயப்படுகிறார்கள். ஷை ஆஷாட பௌர்ணிமி உபாகர்மாவுக்கு அனர்ஹமாக இருக்கிறது.

ஆசுவலாயனர் கிருஹ்யத்தில் ஸர்வோபகர்மஸாதாரணமான "வார்ஷிகமித்யேததாசக்ஷதே" என்ற ஸூத்ரத்துக்கு "வர்ஷருதுவில் செய்யப்படும் கர்மா வார்ஷிகமென்றும் இது ஒரு பரிபாஷையென்று" "ஓஷதீநாம் ப்ராதுர்பாவே" என்ற இடத்தில் "சிராவண பாத்ரபத மாஸங்களிரண்டுமே வர்ஷருதுவாகு" மென்றும் நார்க்ய நாராயண பட்டர் வியாக்யானம் செய்திருக்கிறார்.

இதை அனுஸரித்தே ஆபஸ்தம்பர், காத்யாயனர், முதலான எல்லா ஸூத்ரகாரர்களும், மனு யக்ஞவல்கியர் முதலான ஸ்மிருதிக்காரர்களும், வர்ஷருதுவான சிராவண பாத்ரபத மாஸங்களிலேயே உபாகர்ம காலத்தைச் சொல்லி இருக்கிறார்கள். போதாயனர் மட்டிலும் சிராவணியைச் சொல்லி அடுத்தபடியாக ஆஷாடியையும் சொல்லி இருக்கிறார். வர்ஷருது அல்லாத ஆஷாடியை போதாயனர் ஏன் சொன்னார்? அவருடைய அபிப்ராயம் என்ன? வைத்யநாத தீக்ஷிதீயம் சிராத்தகாண்டத்தில் ருதுப்ரஸ்தாவத்தில் சைத்ர வைசாகாதியாக சாந்திரமான ருதுக்களைக் குறிப்பிட்டிருப்பதுபோலவே, ஸௌரமான ரீதியாக ருதுக்களைச் சொல்லுமிடத்தில் "பங்குனியும் சித்திரையும், வஸந்தருது என்பர்", "சித்திரையும் வைகாசியும் வஸந்தருது" என்றும் இரண்டுவிதமாக ருதுக்களைச் சொல்வது போதாயனருக்குச் சம்மதமென்று தெரியவருகிறது. மீனமேஷாதியென்ற பக்ஷத்தையனுஸரித்து ஆடியும் ஆவணியும் வர்ஷருதுவாக ஆகிறது. ஆகையால் ஆடிமாஸத்தில் நேரும் ஆஷாடத்துக்கு கதஞ்சித் வருஷருது ஸம்பந்தம் ஏற்படுகிறது. அந்த கடகமாஸத்தில் நேரும் ஆஷாடிதான் போதாயன ஸம்மதமேயல்லாது, எவ்விதத்திலும் வர்ஷருது சம்பந்தமில்லாத ஸௌரமான மிதுனமாஸத்தில் ஆஷாடி போதாயனருக்கு ஸம்மதமில்லை. இவ்விதம் தாத்பர்யம் சொல்லாத பக்ஷத்தில் "வார்ஷிகமிதி ஸமாக்யாபலாத்" என்று சொல்லியது பொருந்தாது. புருஷார்த்த சிந்தாமணி கல்பத்ருமம் முதலான நிபந்தனங்களில் உபாகர்ம ப்ரகரணத்தில் போதாயனீய ப்ரஸ்தாவத்தில் "மிதுநாஷாட வர்ஜம்" என்று வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அறியவும்.

இவ்வருஷத்திய உபாகர்மாவைப்பற்றி திருவண்ணாதபுரம் பிர்ம்மஸ்ரீ கிருஷ்ண தீக்ஷிதர் சிருங்கேரி ஸ்ரீமத் ஜகத்குரு ஸந்நிதானத்துக்கு விஞ்ஞாபனம் செய்துகொண்டார்— ஸ்ரீமஹாஸந்நிதானத்திலிருந்து "உத்தராயணத்தில் உபாகர்ம ப்ரஸக்தியே கிடையாது. என்று ஸ்ரீமுகப்பத்திரிகை வந்திருக்கிறது. அதன் விபரத்தை ஷை தீக்ஷிதரவர்கள் தமது பஞ்சாங்கத்திலேயே பிரசுரப்படுத்தி இருக்கிறார்கள்.

இவ்வருஷத்தில் ஆனிமீ மிதுநாஷாடமாகையாலும் ஆடிமீ அதிக சிராவணம் மலமாஸமாகையாலும் ஆவணி புரட்டாசி மாஸங்களிலும் சுக்ராஸ்தமன தோஷமாகையாலும் முக்கிய காலமாகிய ஆவணிமீ சிராவணபௌர்ணமியிலேயே பிரதமப்பிரதம சாதாரணமாக எல்லா உபகர்மாக்களையும் சுக்ரசாந்தியுடன் அனுஷ்டிப்பதுதான் சாஸ்திரீயமாகும்.

# குடந்தைச் செய்திகள்.

## ஸ்ரீமத் பாகவதம்.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் மடத்தில் 15 மாதகாலமாக விக்கிரமபாண்டியம் பிரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகளால் உபன்யாஸம் செய்துவரும் ஸ்ரீமத்பாகவதம் (24—5—39) புதன்கிழமை நன்கு நிறைவேறியது. காலையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கு ஸஹஸ்ரநாம அஷ்டோத்திர அர்ச்சனையும், பிராம்மண, சந்தர்ப்பணம் சுமார் 500 பேர்களுக்கு நடந்தன. மாலையில் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு வடமொழியிலும் தென்மொழியிலும், ஆங்கிலத்திலும், உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஸ்ரீமடத்திலிருந்து மரியாதைகளும், பிரஸாதங்களும், உயர்ந்த சால்வையும் சமர்ப்பிக்கப்பட்டது. பக்த மகாஜனங்களால் சாஸ்திரிகளுக்கு தகுந்த பரிசுகளும், வெள்ளிக்கிண்ணங்களும், வேஷ்டியும் அளிக்கப்பட்டன. ஸ்ரீசாஸ்திரிகள் பக்தமகாஜனங்கள் தனக்குச்செய்த மரியாதைகளுக்கு வந்தனம் கூறினார். முடிவில் சாஸ்திரிகள் மேளதாளத்துடன் கிரஹத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

## ஸப்தஸ்தல உத்ஸவம்.

இவ்வூர் ஸ்ரீஆதிகும்பேசுவர ஸ்வாமி ஆலயத்தின் ஸப்தஸ்தல உத்ஸவம் எவ்வாண்டையும் விட இவ்வாண்டு மிகவும் விசேஷமாக நடைபெற்றது. சுவாமி புறப்பட்டுப் போன விடங்களிலெல்லாம் வழக்கப்பிரகாரம் மண்டகப்படிகள் நன்கு நடந்தன. ஆலய மானேஜர் ஸ்ரீமான் திருச்சி. வி. டி. கோபாலய்யர் நிர்வாகத்தை யாவரும் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

## ஸ்ரீமகாலிங்கஸ்வாமி திருக்கல்யாண உத்ஸவம்.

திருவிடைமருதூர் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமியின் வருடாந்திரத் திருக்கல்யாணம் உற்சவம் மே-மீ 22உ முதல் நடந்துவருகிறது. 27உ திருக்கல்யாணம் நன்கு நடைபெற்றது. திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னதி ஸ்வாமிகள் விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறார். தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து யாத்ரீகர்கள் வந்திருந்தார்கள்.

# வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா. சென்னை)

ஸ்வாகதம்—புதிய முறையில் எல்லோரும் களிக்கும்வண்ணம் பிரசுரமாகும் நமது ஆர்ய தர்மத்திற்கு நல்வரவு கூறுவது நமது முதற் கடமையாகும். இவ்வரிய ஸேவைக்காக கார்யநிர்வாஹிகளனைவர்க்கும் நன்றி செலுத்துகிறோம்.

சுருங்கச் சொல்லி விளங்கவை! என்பது பெரியோர் சொல். நமக்கு உள்ள பக்கம் 10 அல்லது உயர்ந்தால் 12 பக்கங்களுக்கு மேலில்லை. நமக்கு ஆசையோ அபரிமிதம் ஆதலின் எல்லாவற்றையும் விடாமல் மிகமிக சுருக்கமாய் வெளியிடல் வேண்டும். நேயர்களுமாசிரியரும் குற்றமாக எண்ணுவிடில் சென்னை ராயப் பேட்டையிருந்து வரும், "நவசக்தி" எனும் பத்திரிகை போல் நடத்தலாம்.

உலகம் பல விதம்! ஸ்ரீ பரமாசாரியாளிடம் பக்தி, ஸ்வதர்மாபிமானம் முதலிய காரணங்களால் பலர் நமது சந்தாதாரர்களானார்கள். சிலர் தர்ம விஷயந்தவிற மற்ற உலக விருத்தாந்தத்தை விரும்பவில்லை. நேரிலும் கடித மூலமாகவும் அறிவிக்கின்றனர். கேவல தர்மமோ, கேவல விஷயமோ தற்காலத்திற்கு போதா! இரண்டுமே கலந்திருத்தல் வேண்டுமெனினும், தர்மத்திற்கு அதிக இடமளிக்கவேண்டும்.

விஷயவிளக்கம்! ஜம்புகேச்வரத்தில் ஓர் யாகம்நிறுத்தப்பட்டதென அறைகுறையாக ஓர் விஷயம் எல்லாப்பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. அது ஓர் யஜினசாத்ய யாக பசுபந்தம். உடனே அருகிலுள்ள ஸ்ரீமதாசார்ய மடத்தில் நன்கு நடைபெற்றது.

ஸோமயாகம்! திருச்சி நேஷனல் ஹைஸ்கூல் ஸம்ஸ்க்ருத பண்டிதர் பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் ஜம்புகேச்வரம் ஸ்ரீமடத்தில் வைகாசி 14உ 19உ வரை யாகம் நடத்துகிறார். ஸ்ரீ காமகோடி ஸ்ரீ சிருங்கேரி குருமடங்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறார். ஆஸ்திகாளைவருமிதை ஆதரிக்க வேண்டும்.

ஸ்ரீ பிரும்ம வித்யாலயம்!! ச்வேதாரண்யத்தில் ஷை அம்பாள் ஆலயத் திருப்பணி ஓர் நாட்டுக்கோட்டை தார்மிக செட்டியாரால் செய்யப்பட்டு அநேகமாக பூர்த்தியாய் விட்டது. ஆவணிமீ 14உ கும்பாபிஷேகம்.

ஓர் அரிய வேலை!! திருசதியைத் தமிழில் வெளியிட்ட மகா ஸ-ஸ்ரீ நாராயணசாமி அய்யரெனும் பக்தசிகாமணி ஸ்ரீ லலிதோபாக்யானத்தை விரைவில் வெளியிட முயற்சிக்கிறார். பலர் இத்தகைய நூல்களை வெளியிட முன்வரவேண்டும்.

# அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்"
கும்பகோணம்.

# ஒரு வேண்டுகோள்.

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் நேரிலும் சொல்லிவருகிறார்கள். ஆர்யதர்மம் நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதிய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.


## C. S. தீக்ஷிதர் அண்டு கோ., பிரசுரங்கள்.

கும்பகோணம் C. S. தீக்ஷிதர் அண்டு கோ. வால் பிரசுரிக்கப்பட்ட அடியிற்கண்ட ஸம்ஸ்கிருதம், தமிழ் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

பள்ளிக்கூடங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழக்கம்போல் கமிஷன் கொடுக்கப்படும் விபரத்துக்கு எழுதவும்.

பண்டிட் S. வெங்கட்டராம சாஸ்திரிகள் இயற்றிய ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் (தேவநாகரம்).

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | கதாகுஸுமமஞ்சரி முதல்பாகம் | 0 | 8 |
| 2. | ஷை இரண்டாவது | 0 | 10 |
| 3. | ஷை மூன்றாவது | 0 | 8 |
| 4. | விக்ரமார்க்க சரித்திரம் | 0 | 8 |
| 5 | ஸுபாஷித மஞ்சரி | 0 | 6 |
| 6. | போஜ சரித்திர ஸங்கிரகம் | 0 | 4 |
| 7. | சப்தமஞ்சரி | 0 | 5 |
| 8. | பிரதமபாடமஞ்சரி | 0 | 5 |
| | தமிழ் புஸ்தகங்கள். | | |
| 1. | உத்தமர் சரித்திரம் மலர் | 0 | 3 |
| 2. | ஷை 2 | 0 | 4 |
| 3. | ஷை 3 | 0 | 5 |
| 4. | ஷை 4 | 0 | 5 |
| 5. | ஷை 5 | 0 | 7 |

கிடைக்குமிடம்:—ஸ்ரீஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

## ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்.,

டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம். பைண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றாய்செய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.




# வெளியூர்ச் செய்திகள்.

## பாபநாசம் தாலுக்கா அரசியல் மகாநாடு.

காங்கிரசிலும் வகுப்பு வாதம்.

"வகுப்பு வாதத்தை ஒழிக்கவும்"

தலைவரின் தலைமைப்பிரசங்கம்.

(நமது சொந்த நிருபர்)

(முகாம்) தியாகசமுத்திரம் மே 30உ. பாபநாசம் தாலுக்கா அரசியல் மகாநாடு மே-மீ 28 தேதி காலை தியாகசமுத்திரத்தில் கூடிற்று. மகாநாட்டுக்கு ஆயிரக்கணக்கில் ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஏராளமாய் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

மகாநாட்டிற்கு ஸ்ரீ. விருதுநகர் காமராஜ் நாடார் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான் திருச்சி என். ஹாலாசியம் பி. ஏ பி. எல். (சட்ட சபை அங்கத்தினர்) மகாநாட்டைத்திறந்து வைத்தார்.

ஸ்ரீமான் வி. பி. சுப்பையா தேசியக்கொடியை ஏற்றுவித்தார்.

மதுரை நகரபரிபாலன ஸபை உபத்தலைவர் ஜனாப் ஹாஜி மௌலானா சாகேப் "கதர் காட்சியை"த் திறந்து வைத்தார்.

ஆரம்பத்தில் தெய்வ வணக்கம் நடைபெற்றது. பின்பு தேசியகீதங்கள் பாடப்பட்டன.

மகாநாட்டிற்குத் தலைமை வகித்த (தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிப் பொது காரியதரிசி) ஸ்ரீ காமராஜநாடார் தலைமை வகித்து ஒரு நீண்ட பிரசங்கம் நிகழ்த்தினார். அவர் கூறியதாவது:—

"உலகம்போற்றும் உத்தமரான மகாத்மா காந்தியடிகளிடத்தில் நமக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. அவருடைய கொள்கையைப்பின் பற்றி நாம் சென்றதால் தான் நாம் இப்பொழுது சுதந்திர வீரர்களாய் விளங்குகிறோம். இதற்குமுன் போலீஸ்காரர்களை கண்டு பயந்தோம். இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இன்று எல்லா மாகாணங்களிலும் நமது காங்கிரஸ் கொடி பறக்கிறது. 9 மாகாணங்களில் நமது காங்கிரஸ் ஆட்சி புரிந்து வருகிறது. காங்கிரஸ் ஜாதி, மத, கட்சி, மாகாண வித்யாஸமின்றி வேலை செய்து வருகிறது. தேசவிடுதலைக்காக அது போராடுகிறது. வகுப்புத்வேஷம் அதிகமாக பரவியிருப்பதால் நமக்குப் பல காரியங்களுக்கு அது இடஞ்சலாயிருக்கிறது. காங்கிரஸில் கூட வகுப்புத் வேஷம் தாண்டவமாடுகிறது. காங்கிரஸ்காரர்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமையைக் கண்டு எதிரிகள் பொறாமைப்படுகிறார்கள். அவர்கள் பல சூழ்ச்சிகள் புரிந்து நமக்குள் பிளவு உண்டாக்கப்பார்க்கிறார்கள். நாம் ஒன்றாக நின்று நமது காரியங்களைப் பார்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## திண்டுக்கல்.

பிரசங்கம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை (21—539) ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ஸ்ரீ ஸுந்தரேச சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ உபமன்யு பக்த விலாஸத்திற் கூறப்பட்ட "ஸ்ரீ சண்டேச நாயனாரின்" சரிதத்தைப்பற்றி ப்ரவசனம் செய்தார்கள்.

[நமது நிருபர்.]

## சென்னை.

ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.

மதராஸ் தியாகராஜநகர விநாயகர் கோவிலில் உடையாளூர் பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் நடத்தப்பட்டு வரும் "ஸ்ரீராமாயண உபன்யாஸத்தில் 4—6—39 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடைபெறும்.

## செங்கற்பட்டு.

ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவில்.

சென்ற செவ்வாய்கிழமை செங்கற்பட்டு ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவிலில் வடையாத்தி உத்ஸவம் நடைபெற்றது. அன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. பஜனை கோஷ்டிகள் தமிழ் நாட்டின் பல பகங்களிலிருந்து வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. காலக்ஷேபங்களும் நடந்தன. செங்கற்பட்டு ரயில்வே போலீஸ் சிப்பந்திகளின் முயற்சியினால் இந்த ஆண்டு உத்ஸவம் நன்கு நடை பெற்றது.

(நமது நிருபர்.)

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், உபந்யாஸம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினுதரவில் 27-5-39 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்கத்தலைவர் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்காரவர்கள் "கண்ணனெழிற் கமலபதக் காதல் வந்தார்" என்ற தேசிகமாலை (கீதச் சுருக்கு) 7ம் பாடலைப்பாடி அதனுண்மையை விளக்கி, திருச்சின்ன மாலையின் பதார்த்தத்தை எடுத்துக்காட்டி அன்று சொற்பொழிவாற்ற வந்துள்ளிவருக்கு அவரும், குருச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியாரும் நல்வரவு கூற, கோயம்புத்தூர் அட்வகேட் ஸ்ரீ. பி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள் "தன்னிலை உணர்தல்" என்ற பொருள் பற்றி கீதை, வான்மீகி, கம்பராமாயணங்கள், ஆழ்வார் பாசுரங்கள், தேசிகனார் அருண் மொழிகள் விரவிய ஒரு பரந்த உபந்யாசம் நடத்த, சங்கக்காரியதரிசி வந்தனோபசாரம்வழங்க சபை இரவு8-30மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## ஸ்ரீமத் வால்மீக ராமாயணம்.

நிகழும் பிரமாதி-ஹூ வைகாசி-மீ 18உக்குச் சரியான (1—6—1939) குருவாரம் மாலை 6-மணிக்கு மேல், விக்கிர பாண்டியம் பிரும்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களால் கும்பகோணம் "பச்சையப்ப முதலியார்" அக்கிரஹார பக்த மகா ஜனங்களின் ஆதரவின் பேரில் ஷை தெருவில் வக்கீல் ஸ்ரீ வி. கிருஷ்ணஸாமி அய்யங்கார் கிரஹத்தில் "ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்" ஆரம்பித்து, தொடர்ந்து பிரதி தினமும் இரவு 8-மணிக்கு மேல ப்ரவசனம் செய்யப் படும். ஆஸ்திகமஹா ஜனங்கள் அனைவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சென்ற ஒரு வருஷகாலமாக ஸ்ரீகோபால சாஸ்திரிகள் ஸ்ரீ சங்கரமடத்தில் "ஸ்ரீமத் பாகவதத்தை" ப்ரவசனம் செய்த விஷயம் யாவரும் அறிந்ததே.

## கும்பகோணம் தேவஸ்தான கமிட்டி.

மே-மீ 28உ மாலை குடந்தை தேவஸ்தான கமிட்டியின் விசேஷக் கூட்டம் சிங்காரக் கட்டிடத்தில் கூடியது. ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயங்கார் தலைமை வகித்தார். ஸ்ரீ. ஆர். மாணிக்கம் பிள்ளை கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். புதிய தலைவரை யாவரும் பாராட்டிப் பேசினார்கள்.


மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகுதுரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது.




அமிர்தாஞ்சனம்

281

# ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி தேவஸ்தானம், எட்டுகுடி.

## 1347ம் பசலி நெல், ரொக்கம் வரவு—செலவு ஸ்டேட்மெண்டு

(1—7—36 முதல் 30—6—37 முடிய)

| வரவு விபரம் | | நெல் க. ம. ப. | ரொக்கம். ரூ. அ. பை. |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 311 2 0 | 2234 7 2 |
| கிராம வருமான நெல் | | 868 1 2 | |
| அயன் பண்டு வரவு | | | 3024 1 7 |
| நெல் வித்து முதல் | | | 1124 0 6 |
| கால்நடை வித்து வரவு | | | 24 0 0 |
| நிர்மால்ய ஆதாயம் | | | 15 3 4 |
| சில்லரை ஆதாயங்கள் | | 39 3 0 | 27 12 8 |
| தோப்பு ஆதாயம் | | | 35 3 3 |
| நெல் கொள்முதல் வரவு | | 1060 0 0 | |
| பத்து வரவு கணக்குகள்:— | | | |
| சிப்பந்திகள் | 1745 2 6 | 115 0 0 | |
| குருக்கள் வீதம் | 1171 11 10 | | |
| குத்தகைதாரர்கள் | 357 8 9 | 1241 2 3 | |
| இதரர்கள் | 4364 5 5 | | |
| | | | 7648 7 6 |
| திருவாபரண வீதம் | | | 248 8 9 |
| திருப்பணி பண்டு வீதம் | | | 2712 9 6 |
| ஆக மொத்தம் | | 3634 9 1 | 17094 6 3 |

| செலவு விபரம் | | நெல் க. ம. ப. | ரொக்கம். ரூ. அ. பை. |
|---|---|---|---|
| சிப்பந்திகள் சம்பளம் etc. :— | | | |
| சம்பளம் | 1609 5 3 | 115 0 0 | |
| டிராவலிங் செலவு | 111 11 3 | | |
| தபால் செலவு | 9 4 0 | | |
| பிரிண்டிங் செலவு | 28 3 0 | | |
| ஸ்டேஷனரி செலவு | 9 12 3 | | |
| | | | 1769 3 9 |
| கோவில் நித்தியப்படி செலவு:- | | | |
| அமுதுபடி நெல் | | 271 2 0 | |
| சாமான் கிரயம் | | | 711 11 0 |
| வருஷ ஏறுபடிகள்:— | | | |
| கிருத்திகை | 62 0 0 | | |
| ஆடிப்பூரம் | 0 3 0 | | |
| விநாயகசதுர்த்தி | 0 5 0 | | |
| ஸரஸ்வதிபூஜை விஜயதசமி | 0 12 0 | | |
| தீபாவளி | 13 6 8 | | |
| ஸ்கந்தஷஷ்டி | 101 8 0 | | |
| திருக்கார்த்திகை | 0 12 0 | | |
| தனுர் மாதம் ஏறுபடி | 4 4 3 | | |
| சங்கராந்தி மாட்டுப்பொங்கல் | 4 7 6 | | |
| விசாகம் ஏறுபடி | 8 10 0 | | |
| | | | 196 4 3 |
| சித்ராபௌர்ணமி உத்ஸவம் | | | 1676 2 2 |
| வேதாரண்யம் தேவஸ்தானம் கிஸ்தி | | 628 0 0 | 1058 8 3 |
| கிராம மருமத்து செலவு | | | 55 12 0 |
| கோர்ட்டு செலவு வக்கீல் பீஸ் etc. | | | |
| C. R. P. 10-8-36 சம்பந்தமான செலவு | 280 12 0 | | |
| வக்கீல்பீஸ் வகையறா பழைய பாக்கி ஆட்ஜெஸ்டு செய்தது உள்பட | 609 12 0 | | |
| H. R. E Board சம்பந்தமான செலவு | 294 15 0 | | |
| | | | 1185 7 0 |
| டிஸ்ரிக்ட்போர்டு கண்டிரிபூஷன் தொகை | | | 74 15 6 |
| ஆடிட் பீஸ் செலவு பழயபாக்கி | | | 300 0 0 |
| ரிபேர் செலவு:— | | | |
| வாகன ரிபேர் | 40 2 0 | | |
| உடைக்கல சாமான் ரிபேர் | 15 13 0 | | |
| | | | 55 15 0 |
| தளவாடம் ரிபேர் | | | 14 2 9 |
| சில்லரைச் செலவு | | | 92 13 0 |
| ஆலாகுமணி புறப்பித்த கூலி | | | 170 2 3 |
| நெல் கொள்முதல் | | | 1368 11 3 |
| நெல் வித்துமுதல் செலவு | | 945 4 0 | |
| நெல் காய்ச்சல்பாடு | | 43 0 0 | |
| அடங்கல் செலவு | | 2 1 1 | |
| பத்து வரவு கணக்குகள்:— | | | |
| சிப்பந்திகள் | 1567 10 9 | 58 3 0 | |
| குருக்கள் | 1585 5 1 | | |
| இதரர்கள் | 3738 14 10 | 40 0 0 | 7196 14 8 |
| குத்தகைதாரர்கள் | 305 0 0 | 1365 4 3 | |
| கையிருப்பு (30—6—38ல்) | | 166 6 1 | 238 3 8 |
| ஆகமொத்தம் | | 3634 9 1 | 17094 6 3 |

எட்டுகுடி,
13—5—1939.

ஜி. நடேசன் G. D. A., R. A.,
(ஆடிட்டர்.)

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

283

ஆரியதர்மம்

4 ஸ 23
24
8-6-1939

215285

28

REGD No. M. 2913.

215285

ARYADHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]

| | |
|---|---|
| ஜீவிய சந்தா .... | ரூ. 50 |
| ஒரு வருஷ சந்தா | ரூ. 3 |
| ஆறுமாத சந்தா | ரூ. 1½ |

தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஸு வைகாசி-மீ 25 உ 1939-ஸு ஜூன்-மீ 8உ | ல-23

## இலங்கையில் இந்தியர் துயரம்.

### 8000 குடும்பங்கள் பரிதாபநிலை.

### நாடு கடத்த ரூ 5 லக்ஷம் செலவு.

### "வருஷக்கணக்கில் உண்மையாக வேலை செய்ததற்கு இதுவோ வெகுமதி"

### இந்தியர்கள் தியாகம் செய்ய முன்வரவேண்டும்.

எண்ணாயிரம் இந்தியக்குடும்பங்களின் வாயில் மண்போட்டு, அவரை ஊரைவிட்டே விரட்டி விடும் கைங்கர்யத்தில் இலங்கை மந்திரிகள் இப்போது முனைந்திருக்கிறார்கள்.

இலங்கை சர்க்காரில் 1934-ம் வருஷத்திற்குப் பிறகு நியமனம் பெற்று தினச்சம்பளத்தில் வேலை பார்த்து வரும் இந்தியர்களையெல்லாம் ஒருமாத சம்பளம் கொடுத்து இலங்கையை விட்டே விரட்டவும், அதற்கு முன்பிருந்து வேலை பார்த்து வரும் இந்தியர்களை சில மாத சம்பளத்தை வெகுமதியாகக் கொடுத்து நாடுகடத்தவும் சர்க்கார் தீர்மானித்து விட்டார்கள்.

இந்தப் புண்ணிய கைங்கர்யத்திற்காக 5,00,000 ரூபாய் உபமான்யம் வேண்டுமென்று, இலங்கை நிதி இலாகா காரியதரிசி ஸ்ரீ ஹக்ஸாம் இலங்கை சபையில் கேட்டிருக்கிறார்.

சிங்களவர்களிடையே வேலையற்றோர் பலர் இருப்பது உண்மை தான். ஆனால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, வருஷக்கணக்காக உண்மையாகவும், திறமையாகவும் ஊழியம் செய்து வந்துள்ள ஏழை இந்தியர்களின் தலையிலா கை வைக்க வேண்டும்? இது தர்மமா? ஒரு நல்ல சர்க்காருக்கு இது அழகா?

சிங்களவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமாயின், இப்போது இந்தியருக்கு உயிருடனேயே வாய்க்கரிசி போடக்கேட்கும் இந்த 5 லட்சத்தையும், நல்ல உபயோகமான திட்டங்களில் செலவழித்து, பல சிங்களவர்களுக்கு வேலை கொடுக்கலாமே!

இலங்கையில் மட்டுமல்ல. தென் ஆபிரிக்கா பர்மா, மலாய் முதலிய நாடுகளில் குடியேறி இருக்கும் இந்தியர்களுக்கும் இதே விதமான பல ஆபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த இத்தேசங்களிலேயே பிரிட்டிஷ் மன்னரின் துர்பாக்கியமான இந்திய பிரஜைகளுக்கு இவ்வித அநீதியை செய்து வருகிறார்கள்.

இந்தியர்களல்லாமல், ஒருவெள்ளைக்காரனை இதே காரணத்திற்காக இலங்கை மந்திரி வெளியேற்றுவதாயிருப்பின், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே அல்லோல கல்லோலப்பட்டிருக்கும் இலங்கை மந்திரி ஸபையைக்கலைத்து அரசியல் அமைப்பு திட்டத்தையும் கூட கவர்னர் குலைத்திருப்பார்.

ஆனால், கேவலம் இந்தியர்கள்; அதிலும் அதிகமாக தமிழர்கள் தானே. இதனால்தான் இவ்வளவு பெரிய அநீதியும் ஆபத்தும் ஏற்படினும், பிரிட்டிஷ் சர்க்காரும், அதன் ஏஜண்டான இந்திய சர்க்காரும் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

இலங்கை வாழ் இந்தியர்களுக்கு இது பெரிய சோதனை காலம்.

இந்திய சர்க்காரிடமிருந்தோ அல்லது வேறு வெளியிடத்திலிருந்தோ அவர்கள் அதிக ஒத்தாசையை எதிர்பார்ப்பதில் பயனில்லை.

அவர்களது கதி மோக்ஷம் அவர்கள் கையிலேயே உள்ளது.

தென்னாபிரிக்க இந்தியர் இன்று மகாத்மா காந்தி காட்டிய சத்தியாக்ரஹ வழியைப் பின்பற்றி தியாக அக்னி குண்டத்தில் குதிக்கத்தீர்மானித்து விட்டனர்.

இலங்கை வாழ் இந்தியரும் அவ்விதமே தியாகம் செய்யக் கச்சை கட்டிக் கொள்ள கட்டுப்பாடாக முன் வரவேண்டும்." என்று ஒரு கடல் கடந்த ஆசிரியர் ஒரு அறிக்கை விடுவித்திருக்கிறார்.

## "தமிழ் தாதா" ஆசீர்வாதம்.

### "ஆர்யதர்மம் நீடூழி வாழ்க"

### "தமிழ் மொழியில் மத ஸம்பிரதாயங்களை வெளியிடுக."

மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் விசேஷச்செய்தி.

தமிழ்ப்பணி செய்தலையே சிறந்த தொண்டாக மேற்கொண்டு தமிழ் நிலத்தாருக்கு அரிய பல பழந் தமிழ் நூல்களை வெளியிட்டு உதவிய அன்பு மறிவு மாற்றலுமைந்த அண்ணலாகிய மகாவித்வான் மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் உ. வே. சாமிநாதையர், D. Lit, அவர்கள் அன்பு கூர்ந்து "ஆரியதர்மம்" பத்திரிகைக்குக் கீழ்கண்ட "விசேஷச் செய்தியை" அனுப்பியுள்ளார்:—

"ஆரியதர்மம்" என்னும் பத்திரிகை வரவரச் சிறப்புற்று விளங்குவதைக்கண்டு மிகவும் ஸந்தோஷமடைகின்றேன். பலவகையான அபிப்பிராயங்களும், ஸம்பிரதாயங்களும் பத்திரிகைகளால் உலக முழுவதும் பரப்பப் பெறும் இந்த நாளில் நம் நாட்டின் பெருமைக்கு ஆதாரமாக இருக்கும் 'ஸநாதன தர்ம'த்தைப் பரப்புவதற்கு இத்தகைய பத்திரிகை ஒன்று இருத்தல் இன்றியமையததாகும். கௌரவம் பொருந்திய ஸ்ரீமத் ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளவர்களுடைய திருவருளேக்கத்தால் இப்பத்திரிகை பெற்றுவரும் தனிப்பெருமை வேறு எதற்கும் இல்லை.

தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் நம் மத ஸம்பிரதாயங்களைத் தெளிவாக வெளியிட்டு ஆன்றோர் மரபுகள் பிறழாமல் யாவரும் ஒழுகும் வண்ணம் செய்விக்கும் துறையில் இப்பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சியடையுமென்று நம்புகின்றேன். ஆரிய தர்மம் நீடூழி வாழ்க!

இங்ஙனம், வே. சாமிநாதய்யர்.

பல் வியாதிகள் கவனிக்கும்:— T. B. சீதாராம், டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# நாடும் நடப்பும்.

## கதிரவன் கொடுமை.

1939ஞு ஜூன்மீ 1உ சென்னை நகரில் 110. 3° டிகிரி உஷ்ணம். ஏழைமக்கள் உஷ்ணத்தினால் பட்ட கஷ்டங்கள் கூறிமுடியாது. அதிக உஷ்ணம் தாங்கமாட்டாமல் பங்கின்ஹாம் கர்னாடிக் ஆலை உதவி என்ஜினீர் திரு பி. ஈ. குட்மன் துரை இறந்துபோனார்.

## ஹைதராபாத் சமரஸம்

ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸ்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிவிடுவது சம்மந்தமாக காந்திஜீ-ஹைதரி இவர்களுக்குள் கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது.

## இந்தியன் ஸிவில் சர்விஸ்

இந்த ஞு ஐந்து முகம்மதியர்கள் ஐ. ஸி. எஸ். இலாகாவிற்கு நியமிக்க சர்க்கார் முடிவு செய்திருந்தார்கள். ஆனால், ஒரு முகம்மதிய மாணவர் பகிரங்கப்போட்டிப் பரீக்ஷையில் தேறிவிட்டதால், நான்கு முகம்மதியர்களுக்கு மட்டும்தான் நியமனம்.

## மதுவிலக்குக்கு எதிர்ப்பு

பம்பாயில் மதுவிலக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து பம்பாய் ஆர்ச் பிஷப் பிரசாரம் செய்துவருகிறார்.

## "ராம்கார்" காங்கிரஸ்

அடுத்த இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைக்கூட்டம் 1939ஞு டிசம்பர்மீ ராம்காரில் கூடும். இந்த காங்கிரஸ் கூடவேண்டி எல்லா ஏற்பாடுகளும் நன்கு நடந்துவருகின்றன.

## டக்கா பட்டமளிப்பு விழாவில் கவியரசி.

இந்தியாவின் கவியரசி ஸ்ரீ சரோஜினி தேவி ஜூலைமீ 29உ டக்கா சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் நிகழ்த்துவார். மே. த. கவர்னர் தலைமை வகிப்பார்.

## ஹக் "புலிகோஷ்டி"

வங்காள ஹக் மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்தார் சையத் நௌஷராலி. இவர் ஹக் கோஷ்டியின் யோக்யதையை வெட்டவெளிச்சமாக்கினார். இவர் ஜூன்மீ 1உ காங்கிரஸில் சேர்ந்துவிட்டார். பசுலுல் ஹக் தனது கோஷ்டியை "புலிகள்-சிங்கங்கள்" என்று கூறினார். காங்கிரஸ்காரர்கள் புலிகளையும் சிங்கங்களையும் தாக்கி வேட்டையாடி ஒழித்துப்போட்டு வருகிறார்கள். புலி கோஷ்டியில் 'ஒரு புலி' ஓடிவந்து காங்கிரஸில் சேர்ந்துவிட்டதற்குத் தாய்ப்புலி காரணம் கூறுமா?

## கடைசியில் வருகிறார்!

முசிரி சுப்பிரமணியய்யர் தமிழ் சினிமா திரைக்கு வந்துபோனார். மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் பேசும் படத்துக்கு வந்தார். கடைசியில் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் வருகிறார்?

முசிரியுடன் சீதாவும், மகாராஜபுரத்துடன் சுந்தராம்பாளும் நடித்தனர். இப்பொழுது காஞ்சனமாலா என்ற ஆந்திர நடிகை அரியக்குடியுடன் தோன்றுவர்ராம்.

இளங்கோவன் எழுதிய புராணக்கதையில் அரியக்குடி தோன்றுவார். காரைக்குடி மெய்யப்ப செட்டியார் படம் பிடிப்பாராம்.

## பிரஸித்திபெற்ற பாடசாலை

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்தர பாடசாலை"யில் 20 மாணவர்களை எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு அனுப்பினார்கள். அவர்களில் ஒருவர் தவறவேண்டுமே! அவ்வளவுபேரும் கல்லூரியில் வாசிக்கவேண்டி தேறிவிட்டார்கள்! பாடசாலை தலைமை ஆசிரியருக்கு நமது பாராட்டு உரித்தாகுக. இந்தப் பாடசாலையிலிருந்து வெளிவந்த ரத்னங்களுக்குக் கணக்கில்லை. பல கலக்டர்களைக் கூட இது உற்பத்தி செய்திருப்பது உங்களுக்குத் தெரியாதா?

## ஸ்ரீ ஜெகத்குரு சங்கராசார்யார் படம்

அரோரா கம்பெனியார் இந்தப் படத்தை கல்கத்தாவில் பிடிக்கப்போகிறார்களாம். ஜகதீச சக்கரவர்த்தி டைரக்டர். மாஸ்டர். ராஜகோபாலனும், மாஸ்டர். வி. என். சுந்தரமும் சங்கராசாரியாராக நடிப்பர். மண்டனமிச்ரராக அட்வகேட் ஸ்ரீ K. R. வேங்கட்டராமய்யர் தோன்றுவார். ஸ்ரீ பாபநாசம் சிவன் பாட்டுகளை இயற்றியுள்ளார். ஸ்ரீ வே. சே. சர்மா கதை தயாரித்துள்ளார். ஸ்ரீமதி ராஜம்மா, ஸ்ரீ சுப்பலக்ஷ்மி பாத்திரங்களில் வருவார்கள்.

## பார்சிகளுக்குச் சங்கடி

பம்பாயில் மதுவிலக்கு ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் காங்கிரஸ் சர்க்காரை இதற்காக பாராட்டுகிறார்கள். ஆனால் பார்சி வகுப்பினர் மட்டும் ஆக்ஷேபிக்கிறார்கள். ஏனென்றால் இந்த வகுப்பினரில் பலருடைய வருமானம் இந்த மதுவிலக்கினால் பாதிக்கப்படுகிறது. இதனை ஒட்டி மகாத்மா காந்தி ஜூன்மீ 1ஸ்ரீ தனது 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதுவதாவது:—

"பார்சி வகுப்பினரின் மொத்த ஜனத்தொகை 1லக்ஷத்துக்கு மேலில்லை. பம்பாயில் தொழிலாளர்தொகையோ அதைவிட அதிகமாகும். ஆகவே, பல நாளாக எதிர்பார்த்திருந்த மதுவிலக்கை இந்த 1 லக்ஷம் பேர் தடுத்துவிடமுடியாது."

## மந்திரிகளுக்கு ஹிந்தி தெரியாது

சென்னை சர்க்கார் சுகாதார மந்திரி கனம் டாக்டர் ராஜன் மைசூரில் கூடிய ஒரு போதனக் கூட்டத்தில், சென்னை மந்திரிகளுக்கு ஹிந்தி தெரியாது. பிற்கால சந்ததியார்களாவது இந்தக் குறைபாடில்லாமலிருக்கவேண்டுமென்பதற்காகக் கட்டாய ஹிந்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். ஹிந்தி தெரியாமலிருப்பதால் மந்திரிகள் அதிகக்கஷ்டப்படுகிறார்களாம்.

## ஆசியாக்காரர் மசோதா நிறைவேறியது

ஜூன்மீ 2உ "ஆசியாக்காரர் மசோதா ஆபிலிகா" சட்டசபையில் நிறைவேறியது.

## மைசூரில் ராஜாஜி

சென்னை காங்கிரஸ் அரசாங்கதின் பிரதம மந்திரி கனம் ஸி. ராஜகோபாலாசாரியார் ஜூன்மீ 2உ மைசூருக்கு விஜயம் செய்தார். கனம் ஸர். மீர்ஸா இஸ்மெயில் (மைசூர் திவான்) அதிதியாக தங்குவார். 2உ மைசூர் சட்டசபை கூட்டத்துக்கு விஜயம்செய்திருந்தார்.

## சப்மரின் மூழ்கியது

ஜூன்-மீ 3-உ திடிஸ் என்ற சப்மரின் லிவர்பூல் விரிகுடாவில் மூழ்கியது. சப்மரின் 140 அடி ஆழத்திற்குப் போய் விட்டது. அதில் இருந்தவர்களில் 86 பேர் இறந்தனர். நால்வர் உயிர்தப்பினர்.

## ஹைதராபாத் "சத்" இயக்கம்

### "சமஸ்தானத்தில் நடக்கும் அக்ரமங்களைப் பற்றிக் கவனிக்க"

ராஜப்பிரதிநிதிக்கு வேண்டுகோள்

ஒருலக்ஷம் கையெழுத்துகள் அடங்கிய மகஜர்

"ஹைதராபாத் சத்யாக்ரஹ விஷயத்தில் மே. த. இராஜப்பிரதிநிதி தலையிட்டுத் தக்கது செய்யவேண்டுமென்று", கேட்டுக் கொள்ளும் ஒரு மகஜரில் ஒரு லக்ஷம் பேர்கள் கையெழுத்திடப்போகிறார்களாம்.

ஆரியப் பாதுகாப்புக் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ. சந்திரா என்பவர் கல்கத்தாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். நகரிலுள்ள பிரபல ஹிந்து மதத்தலைவர்களைப் பேட்டிகண்டார்.

டாக்டர் ஸர். பி. ஸி. ரே, சர். நீலரத்ன சர்க்கார், மே. த. மைமன் சிங் மகாராஜா, ஸ்ரீ. ராமநந்த சட்டர்ஜி (மாடர்ன் ரெவியூ ஆசிரியர்) டாக்டர் ஸி. முகர்ஜி, (மாஜி உப அத்யக்ஷகர்) ஸ்ரீ. என். ஸி. சென் முதலியவர்கள் ஆரிய சத்யாக்ரஹத்துக்கு அனுதாபம் தெரிவித்ததுடன் விஞ்ஞாபனத்தில் கையொப்பமுமிட்டனர்.

ஸ்ரீ. சந்திரா பண்டித மதன் மோகன் மாளவியாவையும், டாக்டர் தாகூரையும் சந்தித்து அவர்களது கையொப்பங்களையும் பெறுவார்.



ஸ்ரீ காமக்ஷ்யை நம:.

# மூகபஞ்சசதீ.

## மந்தஸ்மிதசதகம்.

55 உத்துங்க ஸ்தனமண்டலீ பரிசலன் மாணிக்ய [ஹாரச்சடா

சஞ்சச்சோணிம புஞ்ஜமத்ய ஸரணிம் மாத: பரிஷ்க்ருர்வதீ |

யாவைதக்த்ய முபைதி சங்கரஜடா காந்தார வாடீ [பதத் ஸ்வர்வாபீ பயஸ:

ஸ்மித த்யுதிரவெள காமாக்ஷி! மே மஞ்ஜுலா ||

மாத:— தாயாரான, காமாக்ஷி! காமாக்ஷியே. உத்துங்கஸ்தனமண்டலீ பரிசலன் மாணிக்ய ஹாரச்சடா சஞ்சச்சோணிம புஞ்ஜமத்ய ஸரணிம்- பெருத்த ஸ்தனபாரங்களில் விளங்கா நிற்கும் மாணிக்ய ஹாரத்திலிருந்து வெளிவரும் சிவந்த காந்திக் கொடியினுடைய புதரின் மத்தியில் இருக்கும் நிலைமையை. பரிஷ்குர்வதீ- அடைந்த. தே-ஸ்மிதத்யுதீ: உனது புன்சிரிப்பு காந்தியானது. சங்கரஜடா காந்தார வாடீ பதத்ஸ்வர் வாபீபயஸ:- சங்கரனுடை ஜடையென்னும் காடுகளில் பாய்கிற கங்கையின் ஜலத்தின். வைதக்த்யம் நிலைமையை. உபைதி-அடைகிறதோ. அவெள இதுதான். மஞ்ஜுளா-அழகாகும்.

56 ஸந்நாமை கஜூஷோஜனேத ஸுலபம் ஸம்ஸு [சயந்திசனை:

உத்துங்கஸ்ய சிராதனுக்ரஹத ரோருக் பத்ஸ் [யமானம் பலம் |

ப்ராதம்யேன விகஸ்வரா குஸுமவத் ப்ராகல்ப் [யமப்யே யுஷீ

காமாக்ஷி! ஸ்மித சாதுரீ தவ மம க்ஷேமங்கரீ [கல்பதாம் ||

காமாக்ஷி! காமாக்ஷியே. சனை:- மெள்ள மெள்ள. ஸந்நாமைகஜுஷா - ஸாது என்ற பெயரை அடைந்த. ஜனேந-மனிதனால். சிராத்-வெகு நாள் கழித்து. ஸுலபம்-அடையக் கூடிய. உத்துங்கஸ்ய-உயர்ந்த. அநுக்ரஹதரோ:- அநுக்ரஹமாகிற விருக்ஷத்திலிருந்து. உத்பத்ஸ்யமானம்-உண்டாகப் போகிற. பலம் பலத்தை. ஸம்ஸுசயந்தீ-ஸுசனை செய்கிறதாயும். குஸுமவத்-புஷ்பம் போல். ப்ராதம்யேன-முதல் முதலாக. விகஸ்வரா-மலர்ந்து. ப்ரா கல்பம்-அப்யேயுஷீ-அடைந்துள்ள. தவ-உன்னுடைய ஸ்மிதமஞ்ஜரீ-புன் சிரிப்புப் பூங்கொத்தானது. மம-எனக்கு க்ஷேமங்கரீ-க்ஷேமத்தைச் செய்கிறதாக. கல்பதாம்-ஆகட்டும்.

57. தாநுஷ்காக்ர ஸரண்ய லோலகுடிலப்ருலேகயா [பிப்ரதோ |

லீலாலோகசிலீமுகம் நவவயஸ்ஸாம்ராஜ்யலக்ஷ் [மீபுஷ: |

ஜேதும் மன்மதமர்த்தினம் ஜநநி தே காமாக்ஷி! [ஹாஸாங்குர: |

வல்குர் விப்ரம பூப்ருதோ விதநுதே ஸேனாபதி [ப்ரக்ரியாம்||

ஜனனி! தாயாரான காமக்ஷி! காமாக்ஷியே, லோலகுடிலப்ருலேகயா - அசைந்து வளைந்துகொண்டிருக்கிற புருவக்கொடியால், தாநுஷ்காக்ரஸரண்ய - பெரிய வில்லாளியாயும், லீலாலோகசிலீமுகம் - தாமக்ஷாகிற பார்வையென்கிற பாணத்தை, பிப்ரத: - வைத்துக்கொண்டிருப்பதாயும், நவவயஸ்ஸாம்ராஜ்யலக்ஷ்மீபுஷ: - யௌவனமென்னும் ராஜ்யலக்ஷ்மியை அடைந்ததாயுமிருக்கிற - விப்ரமபூப்ருத: - விலாஸமென்கிற அரசனுக்கு, மன்மதமர்த்தினம் - சிவனை, ஜேதும் - ஜயிக்கவேண்டிய விஷயத்தில், தே - உனது, வல்கு: - அழகிய, ஹாஸாங்குரா: - புன்சிரிப்புக்கள், ஸேனாபதிப்ரக்ரியாம் - ஸேனாபதியின் தொழிலை, விதநுதே - செய்கிறது.

58 யன்னுகம்பத கால கூடகபலீகாரேசுசும்பே [நயத்

க்லான்யா சக்ஷுஷிருஷிதா நலருசே ருத்ரஸ் யத [த்தாத்ருசம் |

சேதோயத் ப்ரஸபம் ஸ்மரஜ்வர சிகி ஜ்வாலேன [லேலிஹ்யதே தத்

காமாக்ஷி தவ ஸ்மிதாம்சு கணிகா ஹேலாபவம் [ப்ராபவம் ||

யத்- எந்த மனதானது, காலகூடகபளீகாரே - காலகூட விஷத்தைச் சாப்பிடும்விஷயத்தில், நாகம்பத - நடுக்கமுறவில்லையோ, யத் - எந்தமனதானது, க்லான்யா - களைப்பினால், நசுசும்பே - மயங்கவில்லை, தவ - உன்னுடைய, தாத்ருசம் - அப்படிப்பட்ட' ருத்ரஸ்ய - ருத்ரனுடைய, சேத: - மனஸும், சக்ஷுஷீ - கண்களும், ரூஷிதாநலசிகே - கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருக்கும்போதே, ஸ்மரஜ்வரசிகாஜ்வலேன - மன்மதஜ்வரத்தினால், ப்ரஸபம் - பலாத்காரமாக, லேலிஹ்யதேயத் - கஷ்டப்படுகிறதென்பது யாதொன்று உண்டோ, தத் - அது, காமாக்ஷி - காமாக்ஷியே, தவ - உனது, ஸ்மிதாம்சுகணிகாஹேலாபவம் - புன்சிரிப்புத்திவிலையால் ஏற்பட்ட. ப்ராபவம் - மஹிமையே.

59. ஸம்பின்னேவஸுபர்வலோக தடினீ வீசீசயைர் [யாமுனை: |

ஸம்மிச்ரேவ சசாங்கதீப்திலஹரீ நீலைர்மஹா நீர [தை: |

காமாக்ஷி! ஸ்புரிதா தவஸ்மிதருசி: காலாஞ்சன [ஸ்பர்த்தினா |

காளிம்னா கசரோசிஷாம் வ்யதிகரே காஞ்சித் [த்ருசாமச்னுதே ||

காமாக்ஷி! காமாக்ஷியே, தவ - உனது, ஸ்புரிதா - விளங்கிக்கொண்டிருக்கிற, ஸ்மிதருசி: - புன்சிரிப்பானது, காலாஞ்ஜனஸ்பர்த்தினா - கருத்தமையோடு ஸமமாயிருக்கிற, கசரோசிஷாம் - கூந்தல் காந்திகளின், காளிம்னா - கருநிறத்துடன், வ்யதிகரே - ஸம்பந்திக்கும்போது, யாமுனை: - யமுனாநதியினுடையவையான, வீசிசயை: - அலைகளோடு, ஸம்பின்னா - சேர்ந்த, ஸுபர்வலோகதடினீவ - கங்காநதிபோலவும், நீலை: - கருத்த, மஹாநீரதை: - பெரியமேகங்களோடு, ஸம்மிச்ரா - சேர்ந்த, சசாங்கதீப்திலஹரீவ - சந்திரகாந்தியின் கொடிபோலவும், காஞ்சித் - ஒரு மாதிரியான, தசாம் - நிலைமையை, அச்னுதே - அடைகிறது.

(தொடரும்).



परित्राणाय साधूनं विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
பிரமாதி-ஞு வைகாசி-மீ 25உ

## காந்திஜியின் உத்திரவு.

சுதேச ஸமஸ்தானங்களில் நடைபெற்று வந்த பொறுப்பாட்சிப் போராட்டத்தைக் காலவரையின்றி நிறுத்திவைக்கும்படி காந்திஜி ஓர் புதிய உத்திரவு பிறப்பித்திருக்கிறார். தம்முன் தோன்றிய புதிய வெளிச்சத்தின் காரணமாகவே இத்தகைய முடிவைத் தாம் வெளியிட்டதாக அவர் கூறுகிறார். அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டு, நிர்மாண திட்டங்களை நிறைவேற்றியும், ஸம்ஸ்தான அதிகாரிகளை அனுஸரித்து சாந்தமான நிலைமையில் குறைகளை வெளியிட்டுப் பரிஹாரம் தேடிக்கொள்ளும்படியும் காந்திஜி யோசனை சொல்லியிருக்கிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஸம்ஸ்தானங்களில் சட்டமறுப்பு, ஸத்யாக்ரஹக் கிளர்ச்சிகளை நடத்த இனி தாம் அநுமதி கொடுக்க முடியாதென்றும் அவர் சொல்லியிருக்கிறார். காந்திஜியின் இந்த யோஜனை காரணமாக ஸம்ஸ்தானங்களில் இனி அமைதி நிலவுமென்று எதிர்பார்க்கலாம்.

திருவாங்கூர், ராஜ்கோட் முதலியவிடங்களில் நடந்த ராஜ்யக் கிளர்ச்சிகளுக்கு காந்திஜி அவஸரப்பட்டு ஆதரவு அளித்து விட்டதாகவே ராஜ்ய வாதிகளில் பலர் அபிப்பிராயப்பட்டனர். அதிலும் ராஜ்கோட் உபவாஸமானது முற்றிலும் அநாவச்யகமென்றும் அஸந்தர்ப்பமென்னும் காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே கூட அபிப்பிராயமிருந்தது. ஆயினும் காந்திஜி அங்கு தாமே நேரில் நின்று நடத்திய போராட்டத்திலிருந்து கௌரவமாகப் பின்வாங்கி தமது ஊழியர்களுக்கு வேறு ஆலோசனை கூற முன் வந்தது வரவேற்கக் கூடியதே. ராஜ்கோட்டில் காந்திஜி தமது தீவ்ர முறைகளை வெகுகாலம் கையாண்டு பார்த்தபிறகு, அவைகளை விட, தமது எதிரியான வீரவாலாவுடன் ஸமரஸமாகப் போவதே கார்யஸித்திக்கேற்றதென்ற அநுபவம் அவருக்கேற்பட்டது. மேலும் அஹிம்ஸை என்பது அதிகம் வற்புறுத்தப்பட்டபோதிலும் அது வார்த்தையளவோடு நிற்கிறதேயல்லாது கார்யத்தில் பலிக்கவில்லையென்பதை காந்திஜி நன்கு உணர்ந்துகொண்டு விட்டார். திருவாங்கூரில் கணக்கற்ற பலாத்காரச் செயல்கள் நடைபெற்றன. வேறு சில ஸம்ஸ்தானங்களில் கொலைகளும் நடந்துவிட்டன. பலவ்கட்டி கொலை வழக்கில் பிரஜாமண்டலக் காரியதர்சியே தூக்குதண்டனை விதிக்கப் பட்டிருக்கிறார். இவைகளையெல்லாம் பார்த்த பிறகு காந்திஜிக்குப் புதிய எண்ணங்கள் தோன்றுவது ஸஹஜமே. சௌரிசாராவில் நடந்த பலாத்காரத்திற்குப் பிறகு சட்ட மறுப்பை அவர் நிறுத்தியதுபோல் இப்பொழும் ஸம்ஸ்தான விஷயத்தில் நடந்துகொண்டிருக்கிறார்.

ஸம்ஸ்தானங்களில்பொறுப்பாட்சிக்கிளர்ச்சி நடத்தும் விஷயத்தில் ஹிந்துக்களுக்குள்ளேயே பலத்த அபிப்பிராய பேதமிருக்கிறது பிராசீன காலமாக நம் தேசத்தில் இருந்து வரும் சுதேச ஸம்ஸ்தானங்கள், நமது கலை, நாகரிகம், வித்யை முதலிய உயர்வுகளுக்கு ஓர் சின்னம் போல் விளங்கி வருகின்றன. அவ்விடங்களில் மேற்றிசை நாகரிகத்தையும் ஜநநாயகம், ஓட்டுரிமை எலெக்ஷன் போன்ற புதிய முறைகளையும் புகவிட்டு கலக்கமுண்டு பண்ணுவதைப் பல தீர்க்கதரிசிகள் விரும்பவில்லை.

ஜனநாயக ஆட்சியின் அலங்கோலத்தை நாம் ஐரோப்பாவிலும் மற்றவிடங்களிலும் பார்த்து வருகிறோம். முக்கியமாக இந்தியாவிற்கு ஜனநாயக தத்வம் ஏற்காதென்று பிரபல ஆங்கில அரசியல் வாதிகள் பலர் அபிப்பிராயம் வெளியிட்டிருப்பதை வெளியிட்டிருக்கிறோம். வகுப்புவாதம் நிறைந்த இந்தியாவில், ஒவ்வொரு வகுப்பாரும் தம்தம்இனத்தின் பிரதிநிதிஸ்தானத்தைத்தேடிக்கொண்டு தம் தம் இனத்தின் நன்மைக்காகவே பாடுபடுவதைப்பார்க்கிறோம். ஆகையால் நம் தேசத்திலுள்ள சட்ட ஸபை போன்ற ஜனப்ரதிநிதி ஸ்தாபனங்களெல்லாம் ஜனநாயக முறையில் அமைந்திருப்பதாக ராஜிய நிபுணர்கள் ஒப்ப முடியாது. இத்தகைய போலி ஜனநாயகத்தை ஸம்ஸ்தானங்களிலும் புகவிடுவதில் பிரயோஜன மென்ன? ராஜ்கோட் அநுபவத்திலிருந்து காந்திஜிக்கு இத்தன்மை புலப்பட்டிருக்கவேண்டும். முஸ்லீம்கள், கிராஸியர்கள், பாயா வகுப்பினர் தாழ்ந்த வகுப்பினர் போன்ற பற்பலர் தங்கள் தங்கள் வகுப்புகளுக்குப்பிரதிநிதி ஸ்தானம் கொடுத்தாலல்லது சீர்திருத்தம் வேண்டியதில்லையென்றனர். ஆகையால் பொருப்பாட்சிக்கிளர்ச்சி நடத்தினால், வகுப்புப் பூசல் சேர்ந்து சண்டை யேற்படுவது காந்திஜிக்கு இப்போ நன்கு விளங்கி விட்டது,

தவிர, ஸம்ஸ்தானக் கிளர்ச்சி விஷயத்திலும் ஹிந்து. முஸ்லீம் பக்ஷபாதமிருப்பதாக ஹிந்து மஹா ஸபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். காந்திஜி அல்லது காங்கிரஸ் நடத்தும் ஸம்ஸ்தானக்கிளர்ச்சியானது பெரும்பாலும் ஹிந்து ராஜ்யங்களையும், ஹிந்து அரசர்களையுமே பாதிப்பதாயிருப்பதாக ஹிந்துத் தலைவர்கள் நினைக்கிறார்கள் காங்கிரஸ் வாதிகள் முஸ்லீம் ராஜ்யங்களில் கிளர்ச்சி நடத்த தைர்யம் காட்டவில்லை. அங்கு நுழைய பயப்படுகிறார்கள். ஹிந்து ராஜ்யங்களில் கிளர்ச்சி செய்து வெற்றிபெற்றால், முஸ்லீம்கள், கிறிஸ்தவர் போன்றவர்கள் என்றுமில்லாதபடி விதம் கேட்டுச் சண்டைபோட முன் வருகிறார்கள்.

இந்த அநுபவமும் காந்திஜிக்கு ஏற்பட்டதாலேயே இப்போது அவர் ஸம்ஸ்தானப் போராட்டத்தை நிறுத்த முன் வந்தார் போலும். எப்படியும் இப்போது காந்திஜி வெளியிட்டுள்ள கொள்கையால் இந்தியாவில் பெரும் பாலும் சிறிதுகாலத்திற்காவது அமைதி நிலவுமென்று நினைக்கிறோம்.

இச்சமயம் ஸம்ஸ்தானாதிபதிகளின் கடமையும் மிகப் பெரிதாயிருக்கிறது பிரஜா ரக்ஷணமென்பது ஓர் உயர்ந்த தபஸ். பிரஜைகளிடமிருந்து வஸூலிக்கும் வரிப்பணத்தைபிரஜைகளின் க்ஷேமத்திற்கே அவர்கள் செலவிட வேண்டும், மேற்றிசை நாகரிகத்தில்மூழ்கி, எப்போதும் அத்தேசங்களில் திரிந்துகொண்டு, டிராமா, ஸினிமா, போன்ற தமாஷாக்களில் ஜனங்களின் பணத்தை வாரி இறைத்துக் கொண்டு காலம் கழிப்பதை பிரஜைகள் இனி ஸஹித்திருக்கமாட்டார்கள்,

மேலும் சுதேச அரசர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கையாளாகவே பராதீனப் பட்டுக் கிடக்கிறார்கள். உண்மையில் ஸம்ஸ்தானங்களை ஆட்டிவைப்பவர்கள் பிரிடிஷ் வெள்ளை உத்யோகஸ்தர்களேயென்று தேசமெங்கும் பெருத்த அதிருப்தி தோன்றியிருக்கிறது. ஆகையால் ஸம்ஸ்தானக் கிளர்ச்சியானது உண்மையில் அரசர்களை எதிர்த்துச் செய்யப்படவில்லையென்றும் பிரிடிஷ் ஆதிக்யத்தை எதிர்த்தே செய்யப் படுவதாயும் ஸ்ரீ நேரு முதலியவர்கள் நினைக்கிறார்கள். ஆதலால் அரசர்கள் வெறும் பொம்மைகளாயிருக்காமல் காலதேச நிலைமைக் கேற்றபடி பிரஜைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டியது அவச்யம். அதற்கு காந்திஜி ஓர் ஸந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள். இதை அரசர்கள் உபயோகித்துக்கொள்ளாவிடில் அவர்கள், பிரிட்டிஷாருக்கும், பிரஜைகளுக்கும் இடையில் திரிசங்குபோல் தொங்கி அவதிப்பட நேருமென்பது திண்ணம்.

---

## குறிப்புகள்

### "தமிழ் தாதா"

#### ஆசீர்வாதம்.

தமிழ் நாட்டின் பழமை பெருமைகளை அறிதற்குக் கருவியாகும். தொன்னூல்கள் பலவற்றையும் நன்னர் ஆராய்ந்து வெளியிட்டு, அயன் மொழியாளர் முன்னே தமிழ் மக்கள் தலை நிமிர்ந்திருக்குமாறு செய்த பெருமை மகாவித்வான் மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யா பூஷணம் டாக்டர் உ. வே சாமிநாதையரவர்களுக்கே உரியதாகும். அப்பெரியார், "ஆர்ய தர்மம்" பத்திரிகைக்கு அனுப்பிய "விசேஷ செய்தி" ஒன்றை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம் "ஆரியதர்மம்" உதவி ஆசிரியர் ஸ்ரீ எல். எஸ். சுப்பிரமண்யம் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு விசேஷ செய்தி அனுப்பி வைத்த அன்புமறிவு மாற்றுமமைந்த அன்னவாகிய அய்யர் அவர்களுக்கு நமது வந்தனமும் நன்றியும் உரித்தாகுக. நம் தமிழ்ப் பெரியார் இன்னும் [illegible] பருவத்திலும் பல தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிப்பித்து வருகின்றார் எனின், இவர் தம் உலையா உழைப்பையும் சலியா ஊக்கத்தையும் என்னெனப் புகழ்வோம்.

தமிழாகிய அமுதை நமக்கு ஊட்டி இன்புறச்செய்த மகாமகோபாத்யாய சாமிநாதையர் இன்னும் பல்லாண்டு நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெருகப் பெற்றுத் தமிழுக்கு ஓர் இணையற்ற அணிகலமாய் மிளிரும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

மன்றன் இறைவன் அருளால் நீ
வண்ணமேனி நலஞ் சிறக்க
வாழ்க வாழ்க பல்லாண்டு
வாழ்க வாழ்க வாழியவே



289

## தமிழர்களுக்கு அவமதிப்பு!

தமிழ் நாட்டின் பெயரை உலக அரங்கத்தில் ஏற்றிய டாக்டர் ஸர். ஸி. வி. ராமனை அறியாதார் உலகில் இருக்கமாட்டார்கள். டாக்டர் ஸர், ராமன் பிரசித்திப் பெற்ற விஞ்ஞான நிபுணர். இந்தியத்தாய் ஈன்ற அரும் பெரும் தலைவர்களில் இராமனும் ஒருவர். உலகம் போற்றும் இப்பெரியார், "ஒளியை பற்றியும், ஒலியைப் பற்றியும்," ஆராய்ந்து விஞ்ஞான உலகம் வியக்குமாறு அரியபெரிய விஷயங்களைக்கண்டறிந்த விஷயம் நேயர்கள் அறிந்ததே. இராமன் இளமை முதற்கொண்டே பேருக்கத்துடன் கல்வி கற்கலானார். அதன் பயனாக அவர் பதினெட்டாம் வயதிலேயே எம். ஏ. பரீக்ஷையில் ராஜதானியிலேயே முதல்வராகத் தேறினார். பின்னர், பொக்கிஷ இலாக்கா உத்தியோகத்திற்குரிய போட்டிப்பரீக்ஷையிலும் இந்தியாவில் முதல்வராகத் தேறி வந்தார். உடனே இவருக்கு கல்கத்தாவில் உயர்ந்த சம்பளத்தில் டெப்டி அகௌண்டண்டு ஜெனரல் உத்யோகம் கிடைத்தது. இவருக்கு அப்பொழுது வயது பத்தொன்பது தான்.

அரசாங்க உத்யோகத்தால் அதிக வருமானம் கிடைக்குமென்பதை அவர் அறிந்திருந்தும், சரித்திர ஆராய்ச்சியில் தமக்கிருந்த பேராவலால் இவர் தமது உயர்ந்த உத்யோகத்தை உதறித்தள்ளி விட்டு, பௌதிக சாஸ்திர போரசிரியர் பதவியை ஒப்புக்கொண்டார்.

இவர், "வெளிச்சம் வளைந்து சிறிய பொருள்களின் பின்புறமாகச் செல்லும் தன்மையைக் குறித்தும், பலவித ஆராய்ச்சிகள் செய்தார். எல்லா ஆராய்ச்சிகளையும் விட அணுக்களாற் சிதறப்படும் வெளிச்சத்தைப் பற்றிய ஆராய்ச்சி இராமனுக்குக் கீர்த்தியை கொணர்ந்தது. இந்த ஆராய்ச்சி மூலம் இவரது பெயர் உலகெங்கும் பரவியது. இதுவே இவருக்கு "நோபிள் பரிசை"க்கிடைக்கும்படி செய்தது. இவருடைய கூர்ந்த அறிவையும் ஆராய்ச்சி புரியும் ஆற்றலையுங்கண்டு வியந்த அரசாங்கம் இவருக்கு "ஸர்" பட்டம் அளித்தது. உலகிலிருக்கும் பல சர்வகலாசாலைகள் (சுமார் 100) இவருக்குப் பல கௌரவப்பட்டங்களை அளித்தன. இராமனது மேதையை இராமன் விஞ்ஞான உலகிற்குச் செய்துள்ள அரிய சேவையை இன்று உலகம் போற்றுகிறது.

இராமனுக்கு உலகில் கீர்த்தி ஏற்படுவதை வங்க நாட்டினர் விரும்பவில்லை. வங்காளிகள் எப்பொழுதும் மாச்சரியம் பிடித்தவர்கள். இராமனை வங்கத்தை விட்டு விலகும்படி சூழ்ச்சிகள் பல புரிந்தார்கள்.

இராமன் கல்கத்தாவை விட்டு பெங்களூர் வந்தார். பெங்களூர் "விஞ்ஞான ஆராய்ச்சி கழகத்தில்" [illegible] பெங்களூர் டாடா இன்ஸ்டிடியூட்டில் உள்ளது போல பௌதிக ஆராய்ச்சிக்கு அவசியமான கருவிகளும் வசதிகளும் இந்தியாவில் வேறெங்கும் இல்லை. பெங்களூர் கழகத்தில் பல ஆராய்ச்சிகளை நடத்தினர். உலகிலுள்ள எல்லா விஞ்ஞானிகளும் இராமனுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். இந்த கழகத்தை ஸ்தாபித்தவர் டாட்டா என்ற பார்ஸி பிரபு. இந்தக்கழகத்து நிர்வாகக் கமிட்டியிலிருப்பவர்கள் வங்காளிகளும், வெள்ளையர்களும் தான். ஒரு தமிழன் முன்னேறிக்கொண்டு போவதை வங்காட்டான் பார்த்துக்கொண்டிருப்பானா! வந்தது வினை.

வங்காளிகள் இந்த பெங்களூர் இன்ஸ்டிடியூட்டில் ஆசிரியர்களுக்குள் பிளவை உண்டாக்கினார்கள். மாணவர்களிடம் மாகாணத்துவேஷமும், வகுப்புத்துவேஷமும் தாண்டவமாடின. சண்டை சச்சரவுகள் அதிகம் ஏற்பட்டன. ஆண்டவன் உண்மை அறிவான்! எல்லாவற்றிற்கும் உலகப்பெரியார் இராமன் தான் காரணம் என்று கூறி டைரக்டர் பதவியிலிருந்து விலக்கி விட்டனர். இராமனுக்கு ஏற்பட்ட அவமதிப்பை அறிந்தும் தமிழ் நாட்டினர் வாளாயிருந்தனர். ஏனென்றால், தமிழ் நாட்டில் ஒரு சிலர் பிரசாரத்தால் வகுப்புத்துவேஷம் தலைகாட்டி வந்தது. அதனால் இராமனுக்கேற்பட்ட அநீதிகளை அறிய முடியவில்லை.

இந்தியாவின் விஞ்ஞான அபிவிருத்தியை உத்தேசித்து இராமன் டைரக்டர் பதவியை இழந்ததைக் குறித்து வருத்தமுறாமல் ஒரு போரசிரியராக இருக்க இசைந்தார். என்னே! இராமனுக்குள்ள விஞ்ஞான பித்து! ஆசிரியராயிருந்துவரும் இராமனை அடியுடன் ஒழித்துவிட விரும்பி வங்காளிகள் ஏதாவது இடுக்கண்கள் இராமனுக்குப் புரிந்து வருகிறார்கள்.

வங்காளிகள் ஜாதி பித்து கொண்டவர்களென்று கூறினுமல்லவா! அவர்களுடைய செய்கையே அதை மெய் படுத்தி காட்டி விட்டது.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் "அ" என்ற பதம் கூடத் தெரியாத, விசேஷ யோக்யதை ஏதுவுமில்லாத, ஒரு வங்காளியை இராமனுக்குப் பதில் டைரக்டராக நியமித்திருக்கின்றனர். புலி இருந்த இடத்தில் பூனை இருக்கிறது போலும்! இந்தப் புதிய டைரக்டர் பெயர் டாக்டர் கோஷாம் இவர் வங்காளி. நிர்வாகக்கமிட்டியிலிருக்கும் வங்காளிகளின் வக்காலத்து மூலம் இவர் பதவி பெற்றார். டைரக்டர் பதவிக்கு விளம்பரம் செய்திருந்தும், மனுச் செய்து கொள்ளாத ஒருவரை டைரக்டராக நியமித்தது எப்படிப்பொருந்தும்! ஆண்டவனுக்கு அடுக்குமா? இந்தப்புதிய பேர்வழியை 10 வருஷ காலம் இந்தப்பதவியில் வைத்திருக்கப்போகிறார்களாம். இவ்வளவு சலுகை காட்ட காரணமென்ன? டாக்டர் கோஷ் ஒரு வங்காளி. ஸர். ராமன் ஒரு தமிழர் தானே. தமிழர்களே! தமிழ் நாடு தமிழருக்கே, என்று கூச்சல் போடுவதில் பிரயோசனமில்லை. தமிழ் நாட்டின் அரும் பெரும் ஆசிரியரான இராமனுக்கு ஏற்பட்ட அநீதிகளை வீரத்தமிழர்கள் ஒருங்கு சேர்ந்து ஆக்ஷேபித்து நியாயம் வழங்க வழி தேடவேண்டும். இது இராமனுக்கு ஏற்பட்ட அவமரியாதை அல்ல. தமிழருக்கு தான். கடைசியில் நேயர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஸர். ஸி. வி. ராமன் புரொபஸராக இருந்து ஆராய்ச்சி நடத்துவது கூட இக்க[illegible]ளுக்கு பிடிக்கவில்லை. [illegible]மமாய் அநியாயமாய் [illegible]களுக்குத்தொந்திரவுகள் கொடுத்து வருகிறார்கள். ஆராய்ச்சி கட்டிடத்தில் பௌதிக ஆராய்ச்சி சாலையை வைத்திருந்தார்கள். இப்பொழுது ஒரு பாழ் மண்டபத்துக்கு மாற்றி இராமனை அங்குபோகச்சொல்லுகின்றார்கள். அவர் அநேக வருஷகாலமாய் கூடி இருந்த வீட்டைக் கூடக்காலி செய்யச்சொல்லுகிறார்களாம். இந்தியாவில் இராமனை வைத்துக் கொண்டு நாம் ஆதரவு கொடுக்காவிடில் நஷ்டம் இந்தியர்களுக்குத்தான். (வங்காளிகளுக்கும் கூட) ஏனென்றால், உலகப்பிரசித்தி பெற்ற இராமனை மேனாட்டு சர்வ கலாசாலைகள் வருந்தி வருந்தி அழைக்கின்றன. லக்ஷக்கணக்கில் சம்பளம் தருவதாக அமெரிக்கா தேசத்து சர்வ கலாசாலைகள் இராமனை மன்றாடி கேட்டுவருகின்றன. உதாரணமாக டாக்டர் ஸர். எஸ். இராதாகிருஷ்ணனை இந்தியாவிலிருக்கும் சர்வகலாசாலைகளில் ஒன்றுவது வைத்து ஆதரிப்பதற்கு சக்தி யில்லாமல் போய் விட்டது விசனிக்கத்தக்கது. அவரை இன்று ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை அதிகாரிகள் "ஸ்பால்டிங் தத்துவ சாஸ்திர போரசிரியராக" நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இந்த வேலை இரண்டொரு வருஷங்களுக்கு என்று கூறினர். ஆனால் இராதகிருஷ்ணனது மதிவன்மை மேனாட்டார் கண்டு மகிழ்ந்து பதினைந்து வருட காலத்துக்கப் பதவியை நீடித்திருக்கிறார்கள். இத்துடன் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் ஆண்டுதோறும் இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் போக வர முதல் வகுப்பு பிரயாணச்செலவுகளையும் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அதுபோல இராமனையும் ஏதாவதொரு மேனாட்டு சர்வ கலாசாலை விரைவில் அழைத்துக்கொள்ளப் போகிறது என்று நாம் கூறுகிறோம். இராமனை வெளிநாட்டுக்கு அனுப்புவது இந்தியாவுக்கு நஷ்டம் என்று மீண்டும் கூறுவோம். ஆகவே இந்தியர்களே விழுமின்! எழுமின்! இராமனது பிரச்சனையாக வைத்து கிளர்ச்சி செய்வோமாக! வாழ்க. டாக்டர் ஸர். ஸி. வி. வேங்கட்டராமன்.

மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவுக்கு பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சி கழகத்தில் ஆராட்சி செய்யும் 125 மாணவர்கள் (10 வங்காளி மாணவர்கள் நீங்கலாக)ஒரு மகஜர் அனுப்பியுள்ளார்கள். அந்த மகஜரில் "தகுதியில்லாத ஒரு மனுஷரை டைரக்டர் பதவிக்கு கொண்டு வருவது விரும்பத்தக்கதல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

டாக்டர் கோஷ் என்ற புதிய டைரக்டர் ஒன்பது ஆண்டுகளுக்குமுன் ஒரு ஆராய்ச்சி கட்டுரை எழுதி வெளியிட்டாராம். அந்தக் கட்டுரையில் கண்ட முடிவுகள் "சுத்த அபத்தம்" என்று பின்னர் தெரிய வந்ததாம்.

வங்காளிகளே! உங்களுக்கு எச்சரிக்கை. குறுகிய மாகாண மனப்பான்மையுடன் செய்யும் கார்யங்களினால் தீங்கையே விளைவித்து கொள்கிறீர்கள். உங்கள் மாகாண அரசியலில் அடிபட்டு புதைந்து கிடப்பது எதனால்? ஹக் மந்திரி சபையினர், 'புலிகள், சிங்கங்கள்' என்று தங்களைக் கூறிக்கொண்டு வங்காளிகளை வேட்டையாடுகின்றார்களே! புலிகளை ஒழிக்க ஒருங்கு சேர்ந்து வேலை செய்யுங்கள். இராமனுக்கு இன்னல்செய்து ஜயித்து விட்டதாக நீங்கள் கருதினால் அது பகற்கனவாகும். இராமனை பெங்களூர் இன்ஸ்டிடியூடிலிருந்து விலகும்படி நீங்கள் செய்து விடுவதாகவே வைத்துக்கொள்வோம். அப்பொழுது அந்த ஆராய்ச்சி [illegible]த்தையை கவிழ்த்து விடும்படி செய்ய தமிழ்மக்களுக்குப்பூர்ண சக்தி இருக்கிறது. சென்னை அரசாங்கம் ஆயிரக்கணக்கில் பண உதவி செய்துவருகிறது. மைசூர் அரசாங்கம் ஆண்டுதோறும் 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்து வருகிறது. இதையெல்லாம் நிறுத்தி விடும்படி பிரசாரம் செய்ய வேண்டும். தவிர, ஆராய்ச்சி கழகத்தின்நிர்வாக கமிட்டியிலிருக்கும் வங்காளிகளை விரட்ட வழி தேடவேண்டும். தமிழர்களே! நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். இராமனின் விஞ்ஞான பாண்டித்யத்தைக் கண்டு பிடித்து உலகிற்குப் பிரபல்யப்படுத்தியவர் ஒரு வங்காளியே. அவர்தான் ஸர். ஆஷ்டோத் முகர்ஜி. அவருடைய சிஷ்யர்களான வங்காளிகள் இம்மாதிரி பிற்போக்கான ரீதியில் செய்வது வருந்தத்தக்கதே.

எல். எஸ் மணி
உதவி ஆசிரியர்.

## தர்மம்.

(சென்றவாரத் தொடர்ச்சி).

ஸ்ரீ. எஸ். வைத்தீஸ்வர அய்யர், கல்கத்தா.

ஸ்ரீ ஆதி சங்கராசார்யாள் ச்லோகமொன்றும் தலைப்பிலிருக்கிறது. இது அன்னபூர்ணி ஸ்தோத்திரத்தின் கடைசிச்லோகம். இதற்கு முந்திய ச்லோகத்தில் ஞான வைராக்கிய பிக்ஷை கேட்கிறார். அதற்கு முந்தியெல்லாம் வெறும்பிக்ஷை கேட்கிறார். ஆகையால் ஞான வைராக்யத்திலும் சிறந்ததாகிறது. இதை நம் முன்னோர்கள் கோவிலில் தரிசனம் செய்து திரும்பும்போது தினமும் சொல்வது வழக்கம். ஆகவே இதுவும் கடவுள் வணக்கமே. அதாவது "மாதா பிதாக்கள் பார்வதியும் பரமேச்வரனும். பக்தர்கள் சிவனடியார்கள். ஸ்வதேசம் மூவுலகு என்பது. ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரங்களும் திருக்குறளைப் போலவே ஸங்க்ரஹமாய் இதனுள் அடங்கி இருக்கிறது. ஔவையார் அருளிய "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதிலும் பின்னறியவேண்டிய பார்வதி பரமேச்வரர்களை குறிப்பிடுகிறார். அவர் "மனிதர்" என்று சொல்லாது "தெய்வம்" என்றதால் சிறிதும் இகழத்தக்கதவர் என்பதும் மனிதன் வழிபடவேண்டியது தெய்வமேயல்லாது மனிதரல்ல என்பதும் உணரத்தக்கவை.

ஸ்ரீ ஆசார்யாள் முதலானோர் பார்வதி பரமேச்வரர்களை எடுத்துக்கொள்வானேன்? சைவம் வைஷ்ணவம் என்ற பிரிவினைகள் நம்முடைய கால அளவையில் இமைப்பொழுது காலமாகவே இருந்து வருகிறது. அவர்கள் காலத்தில் இந்தப்போட்டி பிரிவினைகள் இல்லை. மேலும் பாரதத்தில் சிவ விஷ்ணு ஸஹஸ்ர நாமங்கள் இரண்டும் வருகின்றன. ஆனால் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கே ஸ்ரீ ஆசார்யாள் முதல் மொத்தமான பாஷ்யமிருப்பதாலும், அவர் ராம கிருஷ்ணவதாரங்களில் ஈடுபட்டு அநேக கீர்த்தங்கள் செய்திருப்பதாலும் தானே நாராயணஸ்மிருதியாயிருப்பதாலும் அவருக்குக் கடவுள் விஷயத்தில் வித்யாஸமில்லை என்பது விளங்குகிறது. தாய்-தகப்பன் போல் எளிதில் எல்லாரும் பாவனை செய்யக்கூடிய மூர்த்திகள் பார்வதி பரமேச்வரர்கள். ஸரஸ்வதி வாக்தேவதையாக நாக்கிலிருப்பதாலும் லக்ஷ்மி கருணை கடாக்ஷ தேவதையாக ஹ்ருதயத்திலிருப்பதாலும் அன்னையாகக்கொள்வது எளிதல்ல. மேலும் பார்வதி பரமேச்வரர்கள் ஒரே மூர்த்தியில் அர்த்த நாரீச்வரராயிருப்பதும் ஒவ்வொருவரிடமுள்ள சிவத்தையும் சக்தியையும் குறிக்கிறது. நாம் பேசும்பொழுது 'சிவனில்லை" என்று சிவத்தையும் "சக்தியில்லை" என்று சக்தியையும் குறிப்பிடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் தர்மபுத்ரருக்கு வைஷ்ணவ தர்மத்தை உபதேசிக்கும் என்னுடைய காயத்ரீயையாவது சிவனுடைய காயத்ரீயையாவது என்றும் எனக்காவது சிவனுக்காவது அபிஷேகாதி பூஜைகள் செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார்.

மாதாபிதா என்றார். மாதாபிதா நம்மைப்பெற்று ஆதரித்துப் போஷிப்பவர். எல்லாரும் அவரவர் பத்னியைத் தவிர மற்ற ஸ்திரீகளையெல்லாம் ஜாதி பந்துத்வ பேதத்தைக் கவனியாமல் "அம்மா" என்றும் "தாயே" என்றும் அழைக்கிறார்கள். அவ்விதம் அழைக்கிறவர் ஒரு ஜன்மத்தில் அந்த ஸ்திரீக்கே பிறந்திருக்கலாம். இந்த ஜன்ம வழக்கத்தையும் ஜன்மாந்திர ஹேதுத்தையும் நன்கு ஆலோசித்தால் எல்லா ஸ்திரீ ரூபமும் நமக்குத் தாயான ஈச்வரியே என்பது புலப்படும். இம்மாதிரியே ஒருவர் "அப்பா" என்று இன்னொருவரை அழைப்பதுமாகும். இவ்வாறு உலகத்தோரெல்லாம் மாதாபிதாக்கள் என்ற எண்ணம் உதித்தால் யாரை யார் கைவிடுவார். 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பதையும் உணரக்கூடும். அல்லது நாமெல்லாரும் பார்வதி பரமேச்வரர்களின் குழந்தைகள் என்ற பாவனை ஏற்பட்டாலும் நாம் ஸஹோதரர்கள். ஸஹோதரர்களுக்குள் கலகத்திற்கிடமில்லை. கலகமுண்டானாலும் பெற்றோரிடம் முறையிடவேண்டும். நாமொன்றும் செய்யலாகாது. துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் அவர் பொறுப்பு.

சிவனடியாரே பக்தர்களென்றார். பக்தர்கள் என்றால் கட்டுப்பட்டவர். பெற்றோர் நன்மைசெய்யக் கட்டுப்பட்டவர். பெற்றோர் என்றும் ஸர்வம் விஷ்ணுமயம் என்றும் பாவனை வருவதற்கு வேண்டிய உதவி பகவத் பக்தர்களே செய்யவல்லார். இதனால் நாம் கடைத்தேறும் வழிகாட்டப்பட்டது.

புவன மூன்றும் ஸ்வதேசம். ஸ்வதேசமென்றதால் புவனங்கள் நமக்கு சொந்தமாகின்றன. முன்னர் மாதாபிதா என்றதால் ஜீவராசிகளில் ஒன்று மற்றொன்றாக மாறவேதேற்படுகிறது. சொந்தமாயுள்ள வீடுகளில் ஒன்றைவிட்டு ஒன்று போவது போல ஜீவராசிகள் ஒரு உலகிலிருந்து இன்னொன்றுக்குப் போகும் யாத்திரை குறிப்பிடப்படுகிறது. ஜீவித்திருப்பதற்கும், மாறுபடுவதற்கும், யாத்திரைக்கும் காலம் வேண்டும். இவைகளால் ஒரு ஜீவன் கல்பகோடி காலமிருப்பதும், பல்வேறு லோகங்களில் ஜனிப்பதும், பல்வேறு ரூபங்களெடுப்பதும் அறியலாகும். இதனை ஆழ்ந்து சிந்தித்தால் நமது வாழ்நாள் என்றும் கொண்டாடுவதெல்லாம் எவ்வளவு அற்பமான கனவு என்பது புலப்படும்.

புவனங்கள் நம்முடையன. நமக்கு மிகவும் நெருங்கிய சொந்தமாயுள்ளது நமது தேகம். இதில் ஒரிடத்தில் மூளையும் ஒரிடத்தில் அமேத்யமும் எப்பொழுதும் இருக்கிறது. தேகமெல்லாம் கழுவக் கழுவ மலம் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கிறது. மலங்களை விலக்கிவிட ஒருவராலும் இயலவில்லை. ஆனால் அடிக்கடி சுத்தம் செய்து கொள்கிறோம். வீட்டிலும் க்ருஹாரமும் கக்கூஸும் இருக்கின்றன. கக்கூஸை சுத்தம் செய்வதல்லாது அதை விலக்கிவிடுவதில்லை. தேசத்திலும் செழிப்புள்ளதும், செழிப்புற்றதும் ஜீவராசிகளிலும் நல்லது கெட்டது தனிகர் ஏழை ஆள்பவர் அடிமைகள் முதலியன இருக்கின்றன. இவைகளிலும் கெட்டது என்று ஒன்றை அடியோடு விலக்க யத்தனிக்கக்கூடாது. நாம் சௌசத்தால் சுத்தமாக்கிக் கொள்வதுபோல ஒழுக்கத்தால் எல்லாவற்றிற்கும் நன்மை செய்யக்கூடும். செய்யவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு இருக்கவேண்டுமேயல்லாது; விரோதிப்பது தன்னையே [illegible]ப்பதாகும். த்வைதங்கள் இருக்கும்வரையில் எல்லாம் நம்முடையது என்ற பாவனை வேண்டும். ஆயினும் மலத்தை விலக்குவதுபோல் கெட்டவைகளை விலக்கவே வேண்டும்.

உலகத்திலுள்ள துக்கமெல்லாம் உலகத்தை யீன்ற தாய்க்குத் தெரியாதா? அவரே ஸஹித்திருந்தால் நாம் என்ன செய்யக்கூடும். ஒரு சிறு கதை. ஒரு நதிக்கரையில் ஸ்ரீ ராமன் தன் கோதண்டத்தை பூமியில் குத்தி வைத்து அனுஷ்டானத்திற்குப் போனார். அது முடித்து கோதண்டத்தை எடுக்கும் பொழுது அதன் முனையில் ரத்தமிருந்தது. ஒரு தவளை குத்தப் பட்டது தெரிந்து அதை ஏன் கூச்சலிடாமல் பொறுத்துக் கொண்டிருந்தா யென்று வினவ "லோக சரண்யனானவரே செய்ததை நான் யாரிடம் முறையிடுவேன்" என்றது. திவ்ய ரூபத்துடன் வைகுண்டமும் சேர்ந்தது.

## வாரக்குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா, சென்னை.)

சங்கமும் இடமும் சிறந்ததே! மைலமெனும் சுப்ரமண்ய க்ஷேத்திரத்தில் ஸாது ஸங்கம் கூடிற்று. ஆரியங்கலக்கா பல பெரியார் பேசினர். ஸாது குணத்தை விருத்தி செய்ய வழி தேடில் அது சிறந்ததே!

நல்ல யோசனை! திருவண்ணாமலை கோவில் அதிகாரிகள் ஓர் ஆகம பாடசாலை வைக்க தீர்மானித்தனர். இதுசிறந்த கார்யம். ஆனால் அந்தந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தை தமிழர்த்தத்துடன் வடமொழியில் வெளியிட்டு ஸ்வல்பவிலைக்கு பக்தருக்களிப்பது ஒவ்வோர் அதிகாரிகளின் கடமையாகும்.

நல்ல தேர்தலே! திருப்பதி வெங்கடேச விச்வ வித்யாலயத்திற்கு பிரும்மஸ்ரீ மீமாம்ஸா கேஸரி காசி சின்னசாமி சாஸ்திரிகளையும் ஓர் வகுப்புக்கு பிரும்மஸ்ரீ ம. மஹோபாத்யாய சேட்லூர் ஸ்வாமிகளையும் தேர்ந்தெடுத்தது மிகச் சிறந்ததே! மற்றும் பல இத்தகைய பண்டித ரத்னங்களது கல்வியை அனுபவிக்க தற்கால உலகம் முன்னுக்கு வாராதது பெருங் குறையாகும்.

யக்ஞமின்றி மீமாம்ஸையா? பல இடங்களில் ஷடி சாஸ்திரம் விருத்தியாகிறதென்றாலும் அதன் அநுபவஸ்தானமான யக்ஞம் அக்நிஹோத்ர இஷ்டிகளைப்பக்ஷத்தில் ஒரு தீக்ஷிதரைக்கொண்டு நடத்தாவிடில் மாப்பிள்ளை இல்லாத கல்யாணம் போலாகும். திருப்பதி இக்குறையை நீக்குமா!

விதை வேண்டாமா? போலி அஹிம்ஸா தர்மத்தால் பலர் யக்ஞத்தை தூஷிப்பதும் கலியில் கூடாதென்பதும் அதிகமாய் விட்டது. பஹுத்ரவ்யஸாத்யமானதால் ஆஸ்திகரிருந்தும் செய்ய முடியவில்லை. வேதத்தில் முக்கால் பங்கு கர்மாவையபேக்ஷ, மீமாம்ஸா சாஸ்திரம் பூர்ணமாய் யக்ஞத்தை அஸ்திவாரமாகக்கொண்டிருக்க அதை விதைக்கேனும் ரக்ஷிக்காவிடில் வேதாதிகளை எப்படி ரக்ஷிப்பதாகும்?

தர்மம் செய்க! பாபத்தை விடுக! சென்னையில் 29 வருஷமாக இல்லாத உஷ்ணம் 110-3. டிகிரி அதிகமாகக் காரணமென்ன! பாபம் நாளுக்கு நாள் அதிகமாவதே! மழை அகாலத்தில் பெய்து காலத்தில் பெய்யாமல் பயிரையும் ஜனரையும் கெடுக்கின்றது. எங்கும் விராட பர்வாதி பாராயணம் செய்து கூடியவரை பாபத்தை விலக்கின் க்ஷேமமுண்டாகும்.

புராணப்ரவசனம்! பதினெண் புராணப்ரவசன ஸபையினரால் நடைபெற்று வந்த ஆவந்த்ய கண்டம் கர்க்க ஸம்ஹிதை தேவி பாகவதம் முதலியன விராமகாலத்தில் நிறுத்தப்பட்டு சென்னையில் ஜூன் 18௳ முதல் கிரமமாக ஆரம்பிக்கப்படும்.

---

ஒவ்வொரு ஜீவனும் அந்தப் பரம்பொருளை அறிந்து அதுவே ஆகக் கூடுமென்பதும் தாய் தந்தை என்றதால் குறிப்பிக்கப் படுகிறது. மக்கள் பெற்றோரை அறிகிறார். காலக்ரமத்தில் அந்த மக்களே பெற்றோராவது போல பக்வ காலத்தில் அதுவே ஆகிறார்.

இவ்வாறு ஒவ்வொரு ஜீவனும் நிர்மலனாக வேண்டியே நமது சாஸ்திரங்களும், ஆசாரங்களும், கர்மானுஷ்டானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஸநாதனதர்மம் என்பது ஒரு தேசத்திற்கோ, ஒரு காலத்திற்கோ, ஒரு ஜாதிக்கோ, ஏற்பட்டதல்ல. புவனத்ரயத்திற்கும், எக்காலத்திற்கும், நாமரூபமுடைய எல்லா ஜீவராசிகளுக்கும் ஏற்பட்டதாகும். ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்யப்ரபுரச்யுத:



# அயல்நாட்டுச் செய்திகள்.

## ஜெர்மனி - ரஷ்யா உறவு.

ஜெர்மனி தேசத்து சர்வாதிகாரி ஹெர் ஹிட்லர் போலந்தினிடமிருந்து சமாஸமாக டான்ஸிக்கும், கடல் பாதை பிரதேசமும் கிடைக்காவிடில், ரஷ்யாவின் உதவியை நாடி போலந்தை பணிய வைப்பாராம். இதனை ஒட்டி பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகி விட்டன.

ரஷ்யா - இதாலி உதவியைக் கொண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை சிர்குலைக்கப் போவதாகவும், இந்தியாவை ரஷ்யாவுக்கும், ஆபிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் காலனிகளை இதாலிக்கும் கொடுத்து விடுவதாக ஹெர் ஹிட்லர் 1931 ௵ அக்டோபர்௴ 13௳ பேர்லினில் நாஜி கட்சி கூட்டத்தில் பேசியுள்ளார்.

ஜோஸப் ஸ்டாலினும், ஹெர் ஹிட்லரும் ஒருநாளும் சேரமாட்டார்களென்று சிலர் கூறினாலும், இவர்கள்கூட்டுறவை இத்தேசத்திலுள்ள ராஜ தந்திரிகள் ஆதரித்து வரவேற்கிறார்கள்.

## ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா?

ஹெர் ஹிட்லருக்கு "ஜெர்மனிய பாஷை ஒன்றுதான் தெரியும். ஜெர்மனியில் பிரசங்கம் செய்வதில் வல்லவர். முஸோலினிக்கு 18 பாஷைகள் தெரியும். தற்சமயம் ஹெர் ஹிட்லர் இங்கிலீஷ் பாஷையை கற்றுக்கொண்டு வருகிறார். இங்கிலீஷ் பாஷையில் அவருக்கு அதிகப்பிரியம் ஏற்பட்டிருக்கிறதாம்.

பால்ஷ்மிட் என்பவர் ஹிட்லரின் உபாத்தியாயர். தினசரி மாலை வேளைகளில் இவர் சர்வாதிகாரிக்கு ஆங்கிலம்கற்பிக்கிறார். ஹெர் ஹிட்லருக்கு 50 வயதாகிறது. ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா? என்ற பழமொழியை இனி மாற்ற வேண்டியது தான்.

## இதாலி- ஜெர்மன் ஒப்பந்தம்.

"இதாலி- ஜெர்மன் ராணுவ உடன்படிக்கை", முஸோலினிக்குப் பிடிக்கவில்லை. ஜெர்மன் வற்புறுத்தலுக்கிணங்கி முஸோலினி உடன்படிக்கைக்குச் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

யுத்தம் ஏற்படின், இதாலியில் உணவு பொருள்களுக்கு, பஞ்சம் ஏற்பட்டு விடுமென்றும், அப்போது ஜெர்மனியை நம்பி யிருக்க முடியாதென்று இதாலி சர்வாதிகாரி பயப்படுகிறார்.

## இதாலியை ஹிட்லர் விழுங்குவாரா?

இதாலியா தேசத்தை ஹெர்ஹிட்லர் ஜெர்மனியுடன் இணைத்தாலும் இணைப்பாராம். ஏனென்றால், ஹிட்லர் இதாலியாவின் வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து வருகிறாரென்றும், இதாலிக்கு ஜெர்மனி நாள்பட்ட விரோதியென்றும் இதாலியர் கூறுகிறார்கள்,

## தேவேந்திரன் ரயில் வண்டி.

நமது சக்கரவர்த்தி — சக்கரவர்த்தினி அமெரிக்காவுக்கு விஜயம் செய்த விஷயம் உங்களுக்குத்தான தெரியுமே! இவர்கள் கனடாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் ரயிலில் எல்லாவசதிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ரயில் வண்டியில் சிதோஷ்ணத்தை சிர்படுத்தும் விசேஷ கருவிகளும், ரேடியோக்களும், டெலிபோன்களும், போஸ்டாபீஸ், சினிமா முதலியவைகள் இருக்கின்றன.

ராஜா ரயிலிலிருந்துகொண்டே லண்டனில் இருக்கும் தனது குழந்தைகளுடன் டெலிபோனில் பேச வசதிசெய்யப்பட்டிருக்கிறது. நினைத்த பொழுது யாரிடம் வேண்டுமானாலும் பேசலமாம். இந்த ரயில்வண்டி டெலிபோனிலிருந்து. ஆகா! என்ன உல்லாச ரயில் இது.

## அடிமைகளானாலும் ஆண்மை போய்விடுமா?

அபிசீனியாவை இதாலி கைப்பற்றி ஆண்டு வருகிறது. அங்கு இதாலியர்களின் தினசரி வாழ்க்கை நித்யகண்டமாயிருக்கிறது. அபிசீனியர்கள் தினசரி பல இதாலியர்களை படுகொலை செய்து வருகிறார்கள். இதாலியப் படையிலிருந்த அபிசீனியர்கள் 42 இதாலிய ஆண், பெண், குழந்தைகளை கொன்று, அவர்களுடைய வீடுகளையும் கொளுத்திவிட்டனர்.

## ஜெனரல் பிராங்கோ கடன் கேட்கிறார்?

ஸ்பெயின் ராஜ்யத்தின் தலைவரான ஜெனரல் பிராங்கோ, ஸ்விட்ஜர்லந்து, ஹாலந்து முதலிய தேசங்களிடமிருந்து கடன் வாங்க முயன்று வருகிறார்.

## ருமேனியா பாக்கி.

அமெரிக்காவுக்கு ருமேனியா செலுத்த வேண்டிய கடன் 12,800,000 பவுன்களை தீர்த்து விடத்தயாராயிருப்பதாக ருமேனியா சர்க்கார் அமெரிக்கா உள் நாட்டு மந்திரிக்கு அறிவித்திருக்கிறார்கள்.

## ரஷ்யா - துருக்கி சேர்ந்தால்?

"கருங்கடல் நாடுகளை ஒட்டி" ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் சம்பாஷணைகள் நடந்து வருகின்றன. கருங்கடலைச் சுற்றியுள்ள பிரஷியா, துருக்கி, ருமேனியா, பல்கேரியா, இத்தேசங்களிடையே ஒரு தனி கூட்டுறவு ஒப்பந்தம் செய்து கொள்ள ரஷ்யாவுக்கு விருப்பம்.

இதனை ஒட்டி ரஷ்யாவும் துருக்கியும் கலந்து யோசித்து வருகின்றன. ஒப்பந்தம் ஏற்பட்டால் ரஷ்யா ஒரு புதிய உரிமையைக் கொண்டாடுமோ? இவர்களுடைய நட்பை ஜெர்மனி சிர்குலைத்து வருகிறது.

## பிரிட்டனுக்கு எதிர் பிரசாரம்.

ஜிப்ரால்டர் ஸ்பெயினிலிருக்கிறது. ஆங்கிலேயருக்கு இது ஒரு ஜீவிய நாடி போன்றது. ஜிப்ரால்டர் இல்லையேல் மத்தியதரைக்கடலில் பிரிட்டனுக்குப் பலமில்லை. எனவே, கோடிக்கணக்கில் செலவிட்டு ஜிப்ரால்டரை பாதுகாத்துவருகிறது.

தற்சமயம் அங்கு ஸ்பானிஷ் கலகக்காரர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளைத் தாக்கி வருகிறார்கள். விரோதவுணர்ச்சி அதிகரித்துவருகிறது.

## ஜப்பானின் நிலைமை.

ஜப்பான் யுத்தத்தில் இறங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஜப்பானின் பொருளாதார நிலைமை மோசமாய்விட்டது. உள்நாட்டுச் சாமான்களின் விலை ஏறிவிட்டது. வியாபார ஏக போக உரிமையை அரசாங்கம் கைப்பற்றி விட்டது.

## அந்தி காலத்தில் ஆதரவா?

சைனாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஒரு ரகசிய ஒப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

இதன் மூலம் யுத்தக்கருவிகளும், மருந்துகளும் கடன் தவணையில் ரஷ்யா சைனாவுக்கனுப்பும்.

## சீனா- ஜப்பான் யுத்தம்.

பலியிடப்பட்டவர்கள் எண்ணிக்கை.

இரண்டு வருஷங்கள் கடந்தன ஜப்பான் சைனாயுத்தம் ஆரம்பித்து யுத்தத்தில் ஜப்பானியர்கள் 8,70,000 பேர் பலியாகி இருக்கிறார்கள். சைனா கட்சியில் 9,36,000 பேர் உயிர் துறந்தார்கள்.

## அன்று செய்தவைகளுக்கு அந்திகாலத்தில்,

ஆஸ்திரியா தேசத்து அதிபதி டாக்டர் ருஸ்னிக் ஒரு காலத்தில் பிரபல கோடீஸ்வரராயிருந்தார். அவர் இட்டது சட்டம். அவரது வாக்கு வேத வாக்காக இருந்தது. ஹிட்லர் ஆஸ்திரியாவை விழுங்கியதும் ருஸ்னிங் சிறையில் வைக்கப்பட்டார். அவரைப் பலவித இன்னல்களுக்குட்படுத்தி வருகிறார் ஹிட்லர். ருஸ்னிங்கை அவருடைய மனைவி மக்கள் வாரந்தோறும் சிறையில் வந்து பார்ப்பார்கள். அதையும் தடுத்துவிட்டார் ஹிட்லர்.

## அரசருக்கு அழைப்பு

1939-௵ செப்டம்பர்-௴ பெல்ஜியத்திற்கு விஜயம் செய்யுமாறு மா. த. லியபால்ட் மன்னர் நமது சக்கரவர்த்திக்கும்—சக்கரவர்த்தினிக்கும் அழைப்பு அனுப்பி இருக்கிறார்.

215285

293

## ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்,

டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
...ர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம், பைபிண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றாய்ச்செய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

---

## உண்மை அறிஞர் உணர்ந்தனர்.

மேன்மையான தன்மை படைத்தது

ஸைன்டிபிக்
டி.டி
மிஸ்கீ பெருங்காயம்

### இரஸாயன தத்துவப்படி

இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)

### இரத்த புஷ்டியை வளர்க்கிறது,

— அத்துடன் —

அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!

**விலை ரூ. 1—14—0. பவுண்டு.**

வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

---

## ஒரு வேண்டுகோள்.

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் நேரிலும் சொல்லிவருகிறார்கள். ஆர்யதர்மம் நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ் நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதிய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.

---

### மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
### "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

---

டி. ராமகிருஷ்ணய்யங்கார் எழுதியது.
ஆண்டாள் திருமணம். ரூ. 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

---

### ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்
அருளிச்செய்த
### பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள்'

முதல்பாகம்
ஸாரஸாரம் முதலியன.
விலை ரூ. 1—8—0

இரண்டாம் பாகம்
விரோதபரிஹாரம் முதலியனவும் பரமபதஸோபாநமும்.
விலை ரூ. 1—4—0

இரண்டும் சேர்த்து
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு ரூ. 2-4-0

---

### தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியது அவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—
பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.
ஆர்யதர்மம் ஆபிஸ், கும்பகோணம்,

---

## அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்"
கும்பகோணம்.

---

### எழுத்தாளர்களுக்கு

[நமது "ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டித் தமிழ்நாட்டிலிருக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வியாஸங்களும், கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஸநாதன தர்மத்தைப்பற்றியும், சாஸ்திர ஆராய்ச்சி, சாஸ்திரஸந்தேகங்கள், புராண இதிஹாஸங்கள், ஜோதிஷம், வைத்யம், சங்கீதம், போன்ற விஷயங்கள், சரித்திரக்குறிப்புகள் முதலியவைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதியனுப்பலாம். பொருளாதாரம், அரசியல் கிலவாணி, தத்துவம் தேச விஷயங்களைப் பற்றிச் சிறந்தகட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பத்தில் எத்தகைய பண உதவியும் செய்யமுடியாது. பத்திரிகையின் இதழ்கள் 2 அனுப்பப்படும். செய்திகள், அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆசிரியர், ஆர்யதர்மம்.

---

ஏஜண்டுகள் தேவை,

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய நாக்கமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும் ஏஜண்டு கிபந்தனைகளுக்கு எழுதவும். மானேஜர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

---

"LIFE AFTER DEATH"
JUST PUBLISHED
BY
Sri. T. R. Ganapathiramlor, B.A., B.L.,
Advocate,
Author of "Bagavatham Series" etc.
In 2 PARTS BOUND Rs. 3/-
Part I:— THE HINDU VIEW (its fears)
Part II:— CONQUEST OF DEATH by YOGIC METHODS.
Each Part Rs. 1—8—0.
Both Parts Rs, 2—8—0. (Wrapper)
*Apply:*— Author,
Tinnevelly Jn. S. I. R.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyansundaram.

[illegible]

4. ரூ 24

24 15-6-1939

215288

29

215288

REGD No. M. 2913. ARYADHARMAM.

# ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்கிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்
களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஹூ ஆனி-மீ 1உ 1939-ஹூ ஜூன்-மீ 15உ | வா-24

## திருக்குடந்தைக்கு
## மே. த. ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள்
## 29--6--39 இரவு
## விஜயம் செய்கிறார்கள்.

வருக ! வருக !!

அங்கமு வேதந்தானும்
ஆகமநூல்களெல்லாம்
அங்கத மின்றி யாளும்
அரசரு மமைச்சர் கூட்டம்

சங்கர பகவத் பாதர்
சார்ந்துள மதங்கள் வாழி
மங்களம் பொங்க வெங்கும்
மாரியும் பொழிய மாதோ.-



॥ श्रीजगद्गुरु श्रीशङ्कराचार्य स्वामि कुंभघोण विजयम् ॥

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

पत्राधिपस्य लेखनम् ॥

## ஸ்ரீ சங்கராசாரியார் பேசும் படம்.

ஸ்ரீ சங்கராசாரியாள் படம் எடுக்கப்போவதாகத்தெரிகிறது. எடுப்பதாயிருந்தால்இப்பொழுது ஜகத்குருவாய் விளங்கும் ஸ்ரீகாஞ்சி, ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளின் அனுமதி இல்லாமல் எடுக்கக்கூடாது. படம் பிடிப்பதில் பல அதர்மங்களும் ஆபாஸங்களும் சேர்ந்து விடக்கூடும். ஆகையால் பிடிப்பதே மிகவும் தவறு. ஆஸ்திகர்கள் எல்லாரும் ஒரு மனமாயிருந்து இதை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேணும். சீர்திருத்தக்காரர்களுக்கு எல்லாம் கேலியாக இருக்கிறது. ஆசார்ய பக்தி இருப்பவர்களுக்கு நிந்தனைகளைக் கேட்டு உயிரில் விருப்பமிருக்காது. என்மட்டில் நான் உயிர் துறக்கத்தயார்.

கேலிக்கூத்தாகப் போவதுடன் அநேகர் மனங்களையும் குழப்பி விடும். சிரமப்பட்டு தேடிய பொருளும் அதர்மவிநியோகமாகும்.

அயல் நாடுகளுக்குப் பணத்தை வாரிக் கொட்டிவிட்டு ஸ்டுடியோ தயாரிக்கிறது என்பதை கவனிக்க வேணும்.

நடிக்கும் பாத்திரங்கள் கொஞ்சமாவது தர்மத்தை அறிந்தவர்களா? பக்தி உள்ளவர்களா? கௌரவம் பெற யோக்யதையுள்ளவர்களா? இவைகளை ஆராய வேண்டும். இம்மாதிரி குணங்களுள்ளவர் கிடைப்பதரிது. படம் பிடிப்பதும் தவறு.

S. வைத்தீஸ்வரன், கல்கத்தா.

குறிப்புகள்:— [தங்களுடைய கடிதத்தைப் பற்றி படம் பிடிப்பவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் பின்னர் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர், ஆ. த.]

## ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறதா?

ஸ்ரீராமன் மாயையினால் மான் ரூபமெடுத்து வந்த மாரீசனைக் கொன்று, அந்த மானின் தோலையே தன் ஆஸனமாக உபயோகித்து வந்தார்" என்று ஸ்ரீதேசிகஸ்வாமி எவ்விடத்தில் எழுதியிருக்கிறாரென்று ஓர் அறிஞர் சிலதினங்களுக்கு முன்னர் 'ஆரிய தர்மத்தில்' கேட்டிருந்தார். இந்த விஷயமாக ஒரு ச்லோகத்தைச் சில பாகவதர்கள் ஹரிகதா காலக்ஷேபங்களில் சொல்லி வருகிறார்கள். அந்த சுலோகம் ஸ்ரீ தேசிக ஸ்வாமியால் செய்யப்பட்டது தானா, அல்லது ஏதாவது சாடு ச்லோகமாயிருக்குமாவென்று சந்தேகிக்கிறோம். ஆனால் ஸ்ரீதேசிகர் சாதித்த "ரகுவீரகத்யத்தில்" மாரீச மாயாம்ருக சர்ம பரிகர்மித நிர்பர தர்பாஸ்தரண, என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வாக்யத்தை மூலமாகக்கொண்டு வேறு இதர கவிகள் யாராவது மேற் குறிப்பிட்ட ச்லோகத்தை எழுதியிருக்கலாம். அபிப்ராயம் ராமாயண ரீதியாகப்பொருந்தாது. ஏனெனில், மாயா மிருகமானது தனது ஸ்வயமான ராக்ஷஸ ரூபத்தை அடைந்தவுடனேயே பிராணனை விட்டது. காவ்ய ரஸம், அலங்காரம் முதலானதை உத்தேசித்தே ஸ்ரீதேசிகஸ்வாமி மேற்கூறியபடி எழுதியுள்ளார்.

ஆர். ராமச்சந்திர சாஸ்திரி, மைலாப்பூர்.

குறிப்பு:—[அன்பர் கடிதமூலம் சந்தேக நிவர்த்தியானது பற்றி நேயர்கள் சந்தோஷிப்பார்களென்று நம்புகிறோம். அன்பர் அடிக்கடி இத்தப்பத்திரிகை மூலம் சந்தேகங்களை வெளப்பி விட்டு ஆராய்ச்சி செய்து எழுதினால் நன்றாயிருக்கும். இதபோன்ற கடிதங்களைபிரசுரிக்க நாங்கள் தயார். ஆ. த.]

## பிரமாதி வருஷத்திய உபாகர்ம

ஸ்ரீ T. S. விச்வநாத சிரௌதிகள் அவர்கள் தனது பஞ்சாங்கத்தில் ஆடிமீ அதிக ச்ராவணம் ஆனதாலும் ஆவணி புரட்டாசிமீ-ல் சுக்ரமௌட்யதோஷம் ஆனதாலும் ஆனிமீ 17௳ சனிக்கிழமை ஆஷாட பௌர்ணமியில் யஜுருபகர்ம செய்ய வேண்டு மென்று குறிப்பிட்டிருக்கிறார். சென்றவாரம் வெளியான ஆர்யதர்ம (பு-24 ஸ-22) பத்திரிகையில் சோழ வந்தான் ஸ்ரீசங்கர சாஸ்திரிகள் அவர்கள் எழுதியுள்ள விஷயத்தை கவனித்தால் மிதுன மாதத்தில் சிராவணத்திற்கு ப்ரஸக்தியே இல்லை. என்று நிச்சயமாகத் தெரியவருகிறது. அப்படியே ஸ்ரீசிங்கிரி ஆசாரியாளும் தெரிவித்து இருப்பதாகத் தெரியப் படுத்தியிருக்கிறார். மிதுனமீ உபாகர்மாவுக்கு ப்ரஸக்தியில்லை, என்பதற்கு புருஷார்த்த சிந்தாமணி முதலான நிபந்தன கிரந்தங்களை பிரமாணமாகக் காட்டியிருக்கிறார். அதில் வார்ஷிக மித்யேதத்ர சஷுதே. வார்ஷிக மிதி ஸமாக்யா பலாத் இத்யாதி வசனங்கள் காணப்படுகிறது. சிராவண பாத்ர பத பௌர்ணமிகளுக்கு தோஷம் ஏற்படுமானால் போதாயன வாக்யத்தைக்கொண்டு ஆடி மாதத்திற்கு வார்ஷிகமிதி ஸமாக்யா பலாத்வார்ஷிகத்வம் ஸம்பவிக்குமானதால். ஆடி மாதத்தில் வரும் ஆஷாடியில் செய்வது சாஸ்திர சம்மதமாகும் என்று தெரிய வருகிறது. வார்ஷிகத்வப்ராப்தியே இல்லாத மிதுன மாஸத்தில் எப்படி உசிதமாகும்? இதற்கு முன் எவ்வருஷத்திலாவது இவ்விதம் ஸம்பவித்திருக்கிறதா? எந்த ஆதாரத்தைக் கொண்டு பஞ்சாங்கத்தில் மிதுன மாஸத்தில் போடப் பட்டிருக்கிறது. என்ற இவ்விஷயத்தை சிரௌதிகளவர்கள் இவ்வார்யதர்ம பத்திரிகை மூலமாகத் தெரிவித்து திருக்கணித பஞ்சாங்கத்தில் பொது ஜனங்களுக்குள்ள விச்வாஸத்தை அபிவிருத்தி செய்ய வேணுமாய்க்கேட்டுக்கொள்கிறேன். பண்டித மணிகளும் உபேக்ஷயாக இல்லாமல் உசிதமான காலத்தை இப்பத்திரிகை மூலமாகவே வெளியிட்டுப் பொது ஜனங்களுக்கு உபகாரம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

M. K. வெங்கடராமண சாஸ்திரி.

குறிப்பு:—பிரமாதிஞு உபாகர்ம விஷயமாக அன்பர்கள் பலர் சந்தேகங்களைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். பஞ்சாங்கத்தைக் கணிக்கும் ஆசிரியர்கள் மௌனமாக இருப்பது வருந்தத்தக்கது. அவர்கள் ஏன் பதில் எழுத முன்வரக்கூடாது. ஆ. த.]

## ஸ்ரீ சங்கர குருகுலம்

### ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரிதேவி பிரதிஷ்டை

ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் அக்ராரத்தில் ஏற்பட்டுள்ள ஆதி சங்கரர் கோவிலில் சிருங்கேரி ஜகத்குரு அவர்களின் கட்டளைப்படி இன்று காலை ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பல பண்டிதர்களும் புரோஹிதர்களும் பல ஊர்களிலிருந்து வந்திருந்தனர். பூர்வாங்கமாக நேற்று வேதபாராயணம், பிரம ஸம்ஸ்காரம் முதலிய வைபவங்களும் மற்றும் ஏகாதச ருத்ர மகன்யாஸ பூர்வகமாக அபிஷேகமும், விசேஷ அர்ச்சனையும், ஆராதனையும், பிராமண போஜனமும் மிகவும்சிறப்பாக நடைபெற்றது.

இச்சிலாரூபம் ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் வெள்ளைக் கல்லினால் செய்யப்பட்டது. சுமார் மூன்று அடி உயரம். மலர்ந்த, புன்சிரிப்புள்ள தோற்றத்துடன் காணப்படுகிறது. ஆகம முறைப்படி தலையில் பொன் கிறமான மகுடமும், கையில் புஸ்தகமும் வைக்கப்பட்டிருக்கிறது.

## வாரக்குறிப்புகள்

[ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா]

பாலக்காட்டில் 18 ஆலயம் பலி:— சென்ற வாரம் ஏககாலத்தில் எண்டோன்மெண்ட் போர்டு 18 ஆலயங்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டது. ஆலய பிரவேசத்திற்கு இது ஓர் குறுக்கான தந்திர வழியாம். மலையாள வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கம் வழக்கு தொடங்க இது ஏற்றகாலம்

முக்யமானதை கூட கவனிக்க வில்லை! பத்து இருபது சம்பளங்களை வாங்கி நடத்திய வேலைக்கு நூறு நாற்பது சம்பளங் கொடுப்பதுடன் ஷை ஸபை தானும் ஓர் பகுதி பெறுகிறது. பல இடங்களில் மூல விக்ரஹங்கள் அஷ்டபந்தன மின்றி ஆடுகின்றன. அதையேனும் கவனிக் கலாகாதா!

பல்லவ னாலயக் களவு!:— காவேரிப் பட்டணத் தருகே ஷை ஆலயத்தில் சென்ற வியாழனிரவு கள்வர்கள் உள்புகுந்து தேவி விக்ரஹத்தைப் பிடுங்கிவிட்டனர். வெள்ளி மாலை போலீஸார் உத்திரவளித்தபின் பிர்ம்ம ஸ்ரீ சுப்ரமண்ய சிவாசாரியா ரென்னும் ஷெட்டாங் நேஸகர். அஷ்ட பந்தனநிகளை விதிப்படி செய்வித்தார்.

குருவிற்கு மிஞ்சிய சீடர்! மகாராஷ்டிரத்தில் ஒருவர் ஸ்வாராஜ்யம் கொடாவிடில்-தேசிய ஸபைக்குள் ஒற்றுமை உண்டாகாவிடில் கங்கையிலிறங்கி உயிரை விடுவேன்! பலரிப்படி விடவேண்டும் என்கிறார். காந்தியை விட ஓர்படி அதிகம் செல்லும் இவரை யாரோ கவனிப்பர்.

அரிய உபதேசம்! ஆலய நிர்வாகர்கள் ஓர்வகையில் தர்மம் செய்பவர் ஆனாலும் தன்னை யறியாமலே தைவபசாரம் நேர்மோ என பயந்து சிஷ்டர்கள் அதை ஏற்க அஞ்சுவர் ராமேச்வரத்தில் ஷை அதிகாரிகள். கடமையை விளக்கி ஸ்ரீ ஜகத் குரு செய்த ப்ரவசநம் ஒவ்வோர் ஆலயாதிகாரிகளாலும் நன்கு கவனித்து அனுஷ்டிக்க வேண்டும்.

படக்காக்ஷி சண்டை! ஓர் அதிருஷ்டத்தால் பலர் ஆதரவைப் பெறும் ஓர் பத்திரிகையின் ஆசிரியர் படக்காக்ஷிக்கு தான் எழுதிய கல்பனாகதை பலரால் கண்டிக்கப் பட்டும் தான் பிடித்ததையே ஸாதிக்கிறார். இக் காலகதைகளில் பல அதர்மப்ரசாரம் செய்யப்படுகின்றன. நல்ல ஸாதுக்கள் எழுதும் தர்மகதை முன்னுக்கு வருவதில்லை. இது கலியின் விலாஸமே!

அடுத்தவாரம் விளக்குவாம்! ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரர் சரிதம் படக்காக்ஷிக்கு வந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்லவேண்டிய சில அம்சங்களுள்ளதை அடுத்த இதழில் விரிவாக விளக்குவாம்!



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:.

# மூகபஞ்சசதீ.

## மந்தஸ்மிதசதகம்.

60 ஜாநீமே மா ஜகதீச்வரப்ரணயிநி! த்வந்மந்தஹாஸப்ரபாம் ஸ்ரீ காமாக்ஷி! குமுத்வதீமபிநவாமேஷாய தஸ்ஸர்வதா |
ஆஸ்யேந்தோரவலோகனே பசுபதே ரப்யேதி ஸம்புல்லதாம் தந்த்ராளு: ததபாவ ஏவதநுதே தத்வைபரீத்யக்ரமம்||

ஜகதீச்வரப்ரணயிநி! ஈச்வரனின் பத்நியான. ஸ்ரீகாமாக்ஷி! காமாக்ஷியே. த்வந்மந்தஹாஸப்ரபாம்- உனது புன்சிரிப்பின் காந்தியை அபிநவாம்- புதிதான. குமுத்வதீம்- ஆம்பலென்று. ஜாநீம:— நினைக்கிறோம். யத:— ஏனென்றால் ஏஷா- இந்த புன்சிரிப்பானது ஸர்வதா- எப்போதும். பசுபதே:- பரமசிவனுடைய ஆஸ்யேந்தோ: முகமான சந்திரனுடைய. அவலோகனே- பார்வையில். ஸம்புல்லதாம்- மலர்ச்சியை. அப்யேதி- அடைகிறது. ததபாவே- அதில்லா சமயத்தில் தந்த்ராளு:- மந்தமாயிருந்து கொண்டு. தத்வைபரீத்யக்ரமம்- அதற்கு எதிராக இருக்கும் தன்மையை (மலர்ச்சியில்லாததை) தநுத ஏவ- கட்டாயம் அடைகிறது.

61 யாந்தி லோஹிதிமான மப்ரதடிநீ தாதுர்ச்சடாகர்த்தமை:— பாந்தி பாலகபஸ்திமாலிகிரணை: மேகாவலீ சாரதீ |
பிம்போஷ்டத்யுதி புஞ்ஜசும்பன கலாசோணாயமாநேநதே காமாக்ஷி! ஸ்மிதரோசிஷா ஸமதசாமாரோடுமாகாங்க்ஷதி||

காமாக்ஷி! காமாக்ஷியே. அப்ரதடிநீ- ஆகாச கங்கையானது. தாதுச்சடாகர்த்தமை:— நற்செங்கற் பொடியின் சேற்றால். லோஹிதிமானம்- சிவப்பு நிறத்தை. யாந்தி- அடைகிறதாயும். சாரதீ- சரத்காலத்திலுடைய. மேகாவலீ மேகக்கூட்டமானது. பாலகபஸ்திமாலிகிரணை:— இளங்கதிரவனின் கிரணங்களோடு சேர்ந்து. பாந்தி- விளங்குகிறதாயும். பிம்போஷ்டத்யுதி புஞ்ஜ சும்பனகலாசோணாயமானேந- கோவைப்பழம் போன்ற உதட்டின் காந்தியோடு. சேர்ந்ததால் சிவப்பாக தோன்றுகிற. தே ஸ்மிதரோசிஷா- உனது புன் சிரிப்புக்காந்தியோடு. ஸமதசாம்- ஸமானமாயிருக்கும் நிலைமையை. ஆரோடும்- அடைவதற்கு ஆகாங்க்ஷதே- ஆசைப்படுகிறது

62 ஸ்ரீ காமாக்ஷி முகேந்துபூஷணமிதம்மந்தஸ்மிதம் தாவகம் |
நேத்ரானந்தகரம் ததா ஹிமகரோ கச்சேத்யதா திக்மதாம் |
சீதம் தேவி! ததா யதா ஹிமஜலம் ஸந்தாப முத்ராஸ்பதம் |
ச்வேதம் கிஞ்ச ததா யதா மலினதாம்தத்தேசமுக்தாமணி:||

தேவீ; ஜகன்மாதாவான ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, தாவகம் - உனது, முகேந்துபூஷணம் - சந்திரன்போன்ற முகத்திற்கு அலங்காரமான, மந்தஸ்மிதம் - புன்சிரிப்பானது, ஹிமகர: - சந்திரன், யதா - எப்படி, திக்மதாம் - சூடாயிருக்கும்தன்மையை, கச்சேத் - அடைவானோ, ததா - அப்படி, நேத்ரானந்தகரம் - கண்ணுக்கு ஆனந்தத்தைக்கொடுப்பதாயிருக்கிறது. ஹிமஜலம் - பனிஜலமும், யதா - எப்படி, ஸந்தாபமுத்ராஸ்பதம் - சுடுகைக்கு இடமாயிருக்குமோ, ததா சீதம் - அவ்வளவு குளிர்ந்ததாயிருக்கிறது, கிஞ்ச - மேலும், முக்தாமணி: - நல்முத்தானது, யதா - எப்படி, மலினதாம் - அழுக்காயிருக்கும் தன்மையை, தத்தே - அடைகிறதோ, ததா - அப்படி, ச்வேதம்ச - வெளுப்பாயுமிருக்கிறது.

63 த்வன் மந்தஸ்மித மஞ்ஜரீம் ப்ரஸ்ருமராம் காமாக்ஷி சந்த்ராதபம் |
ஸந்தஸ்ஸந்ததமாமனந்த்யமலதா தல்லக்ஷணம் லக்ஷ்யதே |
யந்நாஸௌ விதுநோதி தாபமதிகம் நாப்யந்தரம் மானஸத்வாந்தம் |
தத்கலு துக்கினோ வயமமீ கேனேதி ஜாநீமஹே||

காமாக்ஷி! காமாக்ஷியே, ப்ரஸ்ருமராம் - பரவியுள்ள, த்வன் மந்தஸ்மிதமஞ்ஜரீம் - பூங்கொத்துப்போன்ற உனதுபுன்சிரிப்பை, சந்த்ராதபம் - நிலவாக, ஸந்த: - பெரியோர்கள், ஸந்ததம் - எப்போதும், ஆமனந்தி - சொல்லுகிறார்கள், தல்லக்ஷணம் - அடையாளமாக, அமலதா - பரிசுத்தியும், லக்ஷ்யதே - காணப்படுகிறது.

அஸௌ - இந்தநிலவானது, அதிகம்தாபம் - அதிகதாபத்தை, நவிதுநோதி - போக்குகிறதில்லை. ஆப்யந்தரம் - உள்ளேயிருக்கிற, மானஸத்வாந்தம் - மனதின் இருளையும், ந - போக்கடிப்பதில்லை யென்பது யாதொன்றுண்டோ, தத் - அந்த விஷயமானது, கேனேதி-எந்தக்காரணத்தினாலென்று, துக்கின: - துக்கமடைந்துள்ள, அமீவயம் - இந்த நாங்கள், நஜாநீமஹேகலு - அறிந்துகொள்ளமுடியவில்லை.

64 நம்ரஸ்ய ப்ரணயப்ரரோஹகலஹச்சேதாயபாதாப்ஜயோ: |
மந்தம் சந்த்ரகிசோர சேகரமணே: காமாக்ஷி ராகேணதே |
பந்தூகப்ரஸவச்ரியம் ஜிதவதோ பம்ஹீயஸீம் தாத்ருசீம் |
பிம்போஷ்டஸ்ய ருசிம் நிரஸ்யஹஸிதம் ஜ்யோத்ஸ்னா வயஸ்யாயதே||

காமாக்ஷி - காமாக்ஷியே, ராகேண - அநுராகத்தினால் ஏற்பட்ட தே - உனது, ஹஸிதஜ்யோத்ஸ்னா - புன்சிரிப்பென்னும் நிலவானது, தாத்ருசீம் - அப்படிப்பட்ட, பம்ஹீயஸீம் - பெருத்த பந்தூகப்ரஸவச்ரியம் - சம்பாத்தம்பூவின்காந்தியை, ஜிதவத: - ஜயித்திருக்கிற, பிம்போஷ்டஸ்ய - கோவைக்கனிபோன்ற உதட்டினுடைய, ருசிம் - காந்தியை, நிரஸ்ய - உபயோகமற்றதாகத்தள்ளி, பாதாப்ஜயோ: - தாமரைப்பூபோன்ற பாதங்களில், மந்தம் - மெதுவாக, நம்ரஸ்ய - நமஸ்கரித்துக்கொண்டிருக்கிற, சந்த்ரகிசோரசேகரமணே: - பாலசந்திரனைசிரோபூஷணமாகக்கொண்ட பரமசிவனுக்கு, ப்ரணயப்ரரோஹகலஹச்சேதாய - ப்ரணயகலஹத்தை நிவர்த்திசெய்யும் விஷயத்தில், வயஸ்யாயதே - தோழியாயிருக்கிறது.

(தொடரும்).



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ளு ஆனி-மீ 1உ

# நிலவரிக் கொள்கை.

சென்னை மாகாணமானது மற்ற மாகாணங்களைவிடமிக அதிகமாக நிலவரி செலுத்தி வருகிறது. அதிலும், தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள் நிலவரிப்பளுவைத்தாங்க முடியாமல் தவித்து வருகின்றன. ஒவ்வொரு ஸெட்டில் மெண்ட் காலத்திலும் கண்மூடித்தனமாகத் தீர்வைகளை உயர்த்தியும், புதிய வரிகளை உற்பத்தி செய்தும் வியவஸாயிகளை ஸர்க்கார் ஈவு இரக்கமின்றித் துன்புறுத்தி வருகிறார்கள் இரண்டு தலைமுறைக்கு மேலாக இந்த அநீதி நிலவரி முறையை மாற்றப் பெரிய கிளர்ச்சி நடந்தும் இன்று வரையில் எவ்வித திட்டமான பரிஹாரமும் கிடைக்காமல் வியவஸாயிகள் பரிதவித்து நிற்கிறார்கள்.

1931ம் வருஷத்தில் குடந்தையில் நடைபெற்ற ஜில்லா மிராசுதார் கூட்டத்தில், அரசியல் ஞானியான ஸ்ரீ எ. அரங்கஸாமி அய்யங்கார் பேசுகையில் "கூடிய சீக்கிரத்தில் ஏற்படப்போகும் மாகாண ஸ்வய ஆட்சியில், நிலவரி முறையை மாற்றுவதே முதல்வேலையாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

எலெக்ஷனில் போட்டிபோட முன்வந்த காங்கிரஸும், முதன்முதலாக நிலவரி விஷயத்தையே கவனிக்கப்போவதாகத் தனது எலெக்ஷன் வாக்குறுதியில் குறிப்பிட்டிருக்கிறது. வாக்குறுதியை நம்பியே, நமது ஜில்லாக்களில், ஸநாதநிகளும், மற்றவர்களும் ஒரு முகமாகக் காங்கிரஸ் அபேக்ஷகர்களை ஆதரிக்க முன்வந்தார்களென்பதை அவர்கள் மறந்திருக்கமுடியாது. ஆயினுமென்ன? காங்கிரஸ் மந்திரிகள் பதவியேற்று 2 வருஷமாகியும் மிராசுதார்களின் நெருக்கடியான கஷ்டதசைக்கு எவ்வித விமோசனமும் ஏற்பட்டபாடில்லை. எலெக்ஷன் வாக்குறுதிகளில் சேர்ந்த மதுவிலக்கு, தீண்டாமைவிலக்கு முதலிய ஸமூக, மதப்புரட்சி கார்யங்களில் மந்திரிகள் எவ்வளவு கவலையும், சிரத்தையும் காட்டுகிறார்களோ, அவ்வளவு வியவஸாயிகளிடம் காட்டப்படவில்லையென்று பெரிய புகார் ஏற்பட்டிருக்கிறது, இது சட்டஸபைகளிலும் வெளிப்பட்டிருக்கிறது,

ஆயினும் இப்போது தான் இவ்விஷயம் ஸர்க்காருக்குச் சிறிது உறைத்திருப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸ் மந்திரிகள் நிலவரி விஷயமாக அநுஷ்டிக்க உத்தேசித்துள்ள முறைகளைப் பற்றி, நாகப்பட்டிணத்தில், கனம் ராவின் யூ மந்திரியும், மாயவரத்தில் கனம் விளம்பர மந்திரியும் ஸூசனமாகப் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களிலிருந்து ஒன்றையும் நிர்ணயமாக நாம் அறியமுடியவில்லையாயினும் பொதுவாகச்சில விஷயங்களைக்கவனிக்க முடிகிறது

சென்னை மாகாணத்தில், சாச்வத ஸெட்டில்மெண்ட் முறையையும், நிலவரி விஷயத்தைச்சட்ட ஸபையின் ஆதிக்யத்தில் விடுவதையும் ஆதரித்து பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டியானது பல வருஷங்களுக்கு முன் பே சிபார்சு செய்திருக்கிறது. ஆயினும் அதற்குபின் ஏற்பட்ட இரட்டையாட்சி மந்திரிகளோ மற்றவர்களோ, அதன் வழி போகப்பயந்து பின் வாங்கி நின்றார்கள். மாகாணத்தின் பெரிய வருமானமாகிய நிலவரியை விட்டுக் கொடுத்தால் அதற்குப் பதிலாக வேறு வருமானத்தைக்கண்டு பிடிப்பதில் ஒருவருக்கும் சக்தியில்லாமலிருந்தது. ஆயினும் இடைக்கால மந்திரிகள் பதவியேற்றவுடனேயே, வியவஸாயிகளின் மனதைக்கவர்ந்து நீர்க்காயுசுடன் வாழலாமென்ற நம்பிக்கையுடன் மார்ஷ் பாங்க்ஸ் கமிட்டியை அவஸரக்கோலத்தில் நியமித்தார்கள்.

அக்கமிட்டியானது 1914-ல் நடந்த ஸெட்டில்மெண்டிற்கு முன்னிருந்தநிலைவாசிகளை அனுஸரித்து நிலவரி விகிதத்தை ஏற்படுத்தலாமென்று சிபார்சு செய்தது. சாச்வதப் பைஸலைப் பற்றி அது எவ்வித சிபார்சும் செய்ய முன் வரவில்லை. 1914ளுக்கு முந்திய விலைப்படி வரிவிகிதம் ஏற்படுத்துவதால் நிலவரிப் பளுவானது சிறியம் குறையுமென்று எடுத்துக் காட்டப் பட்டது. கடைசியாகக் காங்கிரஸ் மந்திரிகள் யோஜனை செய்து மார்ஷ் பாங்க் கமிட்டியின் சிபார்சை நிராகரித்து விட்டு 1905-ம்ளுக்கு முந்தியிருந்த விலைவாசிகளை அனுஸரித்து வரிவிகிதத்தை ஏற்படுத்த உத்தேசிப்பதாக கனம் பிரகாசம் சொல்லியிருக்கிறார். இதன் மூலம் ஏழைகளின் வரிப்பளு அதிகம் குறையுமென்று அவர் எதிர்பார்க்கிறார்.

மேலும், நிலவரி விஷயத்தை, கவர்ன்மெண்ட் ஆதிக்யத்திலிருந்து எடுத்துவிட்டுச் சட்ட ஸபையின் ஆதீனத்தில் விடப்போவதாயும் சொல்லியிருக்கிறார். இவர் வெளியிட்டுள்ள கொள்கையைப் பொதுவாக மாயவரம் மிராசுதார் கூட்டம் வரவேற்றதாயினும், தண்ணீர் தீர்வை நிலங்களின் தரம், வடிகால் ஸௌகர்யம் புஞ்சைத் தீர்வைபோன்ற ஸவகளிலும் ஸர்க்காரின் கொள்கை என்னவென்று திட்டமாக அறிவிக்கவேண்டியது அவச்யமாகும். 1905ம் வருஷத்திற்கு முந்திய நிலைமையை அநுஸரிப்பதால் திட்டமாக எவ்வளவு வரி குறையுமென்பதையும் புள்ளிவிவரங்களுடன் முன்னதாகவே வெளியிட்டு மிராசுதார்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளவேண்டியது அவச்யமாகும். விற்பனை வரி மூலம் ஸர்க்காருக்கு ஏராளமான வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது, இச்சமயம், மிராசுதார் விஷயத்தில் தாராளபுத்தி காட்டாமல், தாராளமான மனப்போக்குக்காட்டவேண்டியது ஸர்க்கார் கடமையாகும். ஸர்க்கார் மீண்டும் அநாவச்யமாகத் தாமதம் செய்யாமல் தங்களுடைய யோசனைகளை வெகு சீக்கிரத்தில் பிரசுரித்து வெகு நீண்டகாலமாகக் குற்றுயிருடன் ஜீவனத்திற்கு மன்றாடிக் கொண்டிருக்கும் வியவஸாயிகளைக் காப்பாற்றிப் புகழைப் பெறுவார்களாக.

---

# இதுவோ நேர் முறை?

## மதுரையில் போலி மகாநாடு.

### எத்தனை ஹரிஜனங்கள் வந்திருந்தனர்?

### ஸநாதனிகளைக்கண்டு நடுக்கம்.

"தமிழ் நாட்டு ஹரிஜன் ஆலயப்பிரவேச மகாநாடு" என்ற ஓர் போலி மகாநாடு மதுரையில் 15உ கூடிற்றும்.

இதற்கு யாரோ (ஊர், பேர் தெரியாத) ஒரு அம்மையார்— ராமேஷ்வரிநேருவாம் தலைமை வகித்தாளாம். இவளுக்குத் தமிழ் தெரியாதாம். இந்த மகாநாட்டை மந்திரி கனம் முனுசாமி பிள்ளை திறந்தாராம்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட ஹரிஜனங்கள் எத்தனை பேர்? அவர்களின் பெயர்கள் என்ன? தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்தார்களென்றால், அந்த ஊர் பெயர்களை எழுத தைரியம் உண்டா?

### ஸநாதனிகளுக்கு அனுமதி இல்லையாம்?

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவதாக வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் காரியதரிசி, ஸ்ரீமான் கே. என். சோமசுந்திர சாஸ்திரிகள், பி. ஏ. பி. எல். மகாநாட்டின் உபசாரணைக்கமிட்டித்தலைவரான ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமனுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

### ஸநாதநிகளின் வேண்டுகோள்.

அந்தக் கடிதத்தில் "மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் அங்கத்தினர்களும், சில ஸநாதனிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டு தங்களது அபிப்பிராயங்களை தெரிவிக்க விரும்புகிறார்கள். அவர்கள் அப்படிக் கலந்து கொள்வதில் தங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபனை உண்டா? ஆக்ஷேபனை இல்லையேல், மகாநாட்டில் ஸநாதனிகளுக்குத் தனியாக ஓர் இடம் ஒதுக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். ஸநாதனிகள், அக்கிரசனாதிபதியிடத்தில் மரியாதையுடன் நடந்து கொள்வதுடன், அவாது தீர்ப்புக்குக்கட்டுப்பட்டடப்பார்கள் என்பதில் ஐயமில்லை" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இக்கடிதம் 9-5-39 காரியதரிசியினால் அனுப்பப்பட்டது.

### மகாநாட்டின் காரியதரிசி பதில்.

1-6-39 தேதி மதுரை ஜில்லா ஹரிஜன் சேவா சங்க காரியதரிசி ஸ்ரீ P. K. ராமசாரி ஒரு பதில் கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர்

> "பொதுவாக ஒரு மகாநாட்டில் முற்றிலும் நேர் விரோதக்கொள்கைகளையுடையவர்களைப் பேச அனுமதிப்பதில் பல கெடுதிகள் ஏற்படுமாதலால்" அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### கலந்துகொள்ளாதே! ஆனால் தர்க்கம் பிறகு செய்யலாம்.

> "வேண்டுமானால் பொதுவான ஒரு இடத்தில் மகாநாடு சமயத்தில் இரு கட்சியாரும் வாதப்பிரதிவாதம் செய்யவேண்டி ஒரு தர்க்க சபை ஏற்படுத்தலாம்" என்று கடைசியில் எழுதியிருக்கிறார்.

ஸநாதனிகள் மகாநாட்டில் கலந்து கொண்டால் மகாநாட்டின் போக்கை வெட்ட வெளிச்சமாய் விடுமென்று காங்கிரஸ்காரர்கள் பயப்படுகிறார்கள் என்று மதுரை ஜில்லா எங்கும் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

(மதுரை விசேஷ நிருபர்.)



# ஸநாதன திலகம் மறைந்தது.

## பண்டிட் யு. பி. கிருஷ்ணமாசாரியார் காலமானார்.

### இந்தியாவின் தலைசிறந்த ஸநாதனத் தலைவர் ஸநாதனிகளுக்கு மகத்தான நஷ்டம்

இந்தியாவின் தலைசிறந்த ஸநாதனத்தலைவரும், பிரபல நூலாசிரியரும், பிரசாரகரும், மாஜி தமிழ் நாட்டு வர்ணாச்ரம சங்கத்தலைவருமான ஸ்ரீமான் பண்டிட் யூ. பி. கிருஷ்ணமாச்சாரியார் ஜூன்மீ 12உ காலை செங்கற்பட்டில் காலமான விஷயத்தை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியாருக்கு இறந்துபோகும் போது 48 வயது. அவருக்கு மனைவியும் மூன்று புதல்விகளும் இருக்கிறார்கள். இவர் இந்தியாவைப்பல தடவைச்சுற்றி ஸநாதன தர்ம விஷயமாகப்பிரசாரம் செய்திருக்கிறார். பல மகாநாட்டில் தலைமை வகித்திருக்கிறார். சிறந்த சொற்பொழிவாளர். நிமிஷத்திற்கு 200 வார்த்தைகள் ஆங்கிலத்தில் பேசுவார். இவரது மதிவன்மை கண்டு மதிமாத ஆங்கிலேயர் இலர். இவர் வேதாந்தத்தைப்பற்றியும், மத சம்பந்தமாயும் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

இவருடைய மரணத்தினால் இந்தியாவிலிருக்கும் ஸநாதனிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் கூறி முடியாது. சமீபத்தில் இவர் மலையாள ராஜ்யத்தில் ஹரிஜன் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்த விஷயம் யாவரும் அறிந்ததே. அன்னார் ஆத்மா சாந்தி அடைக.

---

# வகுப்பு முறை நிய மனம் மாற வேண்டும்

## "பிராமணரல்லாதார் செய்யும் ஏமாற்றம்"

### மறவர் குல மகாநாட்டில் தீர்மானம்.

ஸ்ரீ வைகுண்டத்தில் மறவர் குல மகாநாடு சென்ற வாரம் கூடிற்று. சென்னை சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமுத்து ராமலிங்க தேவர் தலைமை வகித்தார். மகாநாட்டில் மதுவிலக்கு கட்டாயக் கல்வி முதலியன வற்புறுத்தப் பட்டன. சர்க்கார் உத்தியோகங்களில் வகுப்பு நியமனம் (கம்யூனல் ஜீ. ஓ.) மாற வேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பிராமணரல்லாதார் என்று கூறிக் கொண்டு ஒருசிலர் இந்த முறையில் சாதகம் பெற்று வருகிறார்னென்றும், பிராம்மணரல்லாதார் என்றால் அதில் பல ஜாதிகளும் வகுப்புகளும் இருக்கிறதென்றும், ஆகவே, ஜனசங்கை விகிதா சாரப்படி யாதிவாரியாக வேலை கிடைக்க வேண்டுமென்றும், மறவர்கள் காவல் தொழிலை ஒழித்து விடவேண்டு மென்றும், 'கி. டி. ஆக்ட்' எடுபட வேண்டு மென்பதும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறை வேற்றப் பட்டன.

[மதுரை நிருபர்]

---

# நாடும் நடப்பும்.

## மா. த. சக்கிரவர்த்தி க்ஷயரோக நிதி

மா. த. சக்ரவர்த்தி க்ஷயரோக நிதிக்கு 1939-ளு ஏப்ரல்மீ 30 தேதி வரை ரூ. 79,54,700—1—7. சேர்ந்திருக்கிறது. சென்னைமாகாணம் ரூ. 5,00,C0. அளித்திருக்கிறது. வங்காளம் ரூ. 7,42,432—13—1. ஒரிஸா ரூ. 44,63—9—6. அதிகமாய் கொடுத்தது வங்காளம் குறைவாக அளித்தது ஒரிஸா.

## கடல்கடந்த இந்தியர்

பிரிட்டிஷ் கயானாவில் 143,000 இந்தியர்கள் இருக்கிறார்கள். அதில் 68,000 பேர் ஸ்திரீகள்.

## இந்திய விவசாயப்படம்

இந்தியாவின் விவசாயப் படம் ஒன்றை இராஜாங்க விவசாய ஆராய்ச்சிக் கழகம் தயாரித்துவருகிறது.

## பூமிக்கடியில் சமாதி

ஜூன்மீ 9 தேதி பம்பாயிலுள்ள தாதரில் பிராம்மணர் சங்கத்தின் காரியாலயத்தின் மைதானத்தில் மத்ராஸைச்சேர்ந்த ஸ்ரீபகவான் ஸ்வாமிஜீஎன்பவர் ஒரு அற்புதச்செயல் செய்துகாட்டி யாவரையும் பிரமிக்கச் செய்தார். ஒரு குழி வெட்டி காலை 10 மணிக்கு அதில் இறங்கினார் ஸ்வாமிஜீ. தன்னுடன் ஒரு கிருஷ்ணபடமொன்றை எடுத்துச் சென்றார். நான்கு அடி ஆழமுள்ளது அக்குழி. ஸ்வாமிகள் உள்சென்றதும் குழி மூடப்பட்டது. ஒருஇரும்புத்தகடு வைக்கப்பட்டு சிமின்டினால் கெட்டிக்கப்பட்டது. உள்ளே காற்று போகமுடியாமல் செய்யப்பட்டது. ஸ்வாமிஜீ 9 மணிநேரம் குழியிலிருந்துவிட்டு வெளியே வந்தார். சுவாமிஜீ சிறிதுகூட களைப்புற்றவராகக் காணப்படவில்லை. அவர் கழுத்தில் அணிந்திருந்த மலர்கள் சிறிதுகூட வாடவில்லையாம்.

## எட்டாவது சர்வாதிகாரி

ஸ்ரீ விநாயகராவ் ஹைதராபாத் ஆர்ய சத்யாக்ரஹத்தின் எட்டாவது சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## கடைசியில் காலடியில் விழுந்தார்

மோசம் செய்ததாகவும், பொய்க்கணக்குகள் வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட தி. நா. பாங்கி டைரக்டரில் ஒருவரான கே. வி. ஈப்பன் 11 தேதி திருவனந்தபுரம் ஜில்லா மாஜிஸ்திரேட் காலடியில் சரண்புகுந்தார். ஜாமீனில் விடுவிக்கவேண்டுமென்ற அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது. இதர குற்றவாளிகளில் கே. சி. மாமன் மாப்பிள்ளை, சி. பி. மாத்தன் முக்கியமானவர்கள்.

## புதிய வங்காள கவர்னர்

மே. த. மகாகனம் ஸர் ஜான்வுட்ஹெட் துரை 12 தேதி காலை வங்காள கவர்னர் பதவியை ஏற்று ராஜவிஸ்வாசப்பிரமாணம் செய்தார்.

## பம்பாயில் யூதர்கள் !

12ம் தேதி பம்பாய்மார்க்கமாக 900 யூதர்கள் சைனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். 5 யூதர்கள் இந்தியாவிலேயே வசிக்கப்போகிறார்களாம்.

## ஷியா-சுனே ஒற்றுமை ?

லக்ஷ்மணபுரியில் ஷியா-சுனே முகமதியர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. இதனால் இரு துலுக்கர்கள் மாண்டனர்.

## அக்ரமத்திலும் அக்ரமம்

ஹைதராபாத் சிறைகளில் நடக்கும் அக்ரமங்களுக்குக் கணக்கில்லை. இந்தியத்தாயின் ஹிந்து புதல்வர்களில் ஒன்பது ஆயிரம் பேர்கள் நிஜாம் ராஜ்யத்தின் ஊழல்களைக் கண்டித்து சிறையிலிருப்பது யாவரும் அறிவர். பலர் உயிர் துறந்தார்கள். இன்று ஸ்ரீ எல் பி போபட்கர் என்ற மாபெரும் ஹிந்து மகா சபைத் (மகாராஷ்டிர பிரிவு) தலைவர் ஔரங்கபாத் சிறையில் வாடி வதங்கி வருகிறார். போபட்காருடன் 159 தொண்டர்கள் சிறை சென்றார்கள். ஏப்ரல்மீ 26 தேதி கைது செய்யப்பட்டத் தலைவருக்கு ஜூன்மீ 17 தேதி தான் விசாரணை நடத்தப் போகிறார்களாம்! என்னே! நிஜாம் ராஜ்யத்தின் நீதி இலாகா முறை!

## "கைத்தரியைக் காப்போம்"

"கைத்தறி நெசவாளிகளின் கஷ்டங்களைக் கவனித்து அவர்களின் துயரங்களை அறவே ஒழிக்க," சென்னை சர்க்கார் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது.

ஜூன்மீ 10தேதி சென்னை சர்க்கார் எல்லா மாகாண சர்க்கார்களுக்கும், இந்திய மத்திய சர்க்காருக்கும் இவ்விஷயமாக ஒரு சுற்றுக்கடிதம் அனுப்பியுள்ளார்கள். மத்திய சர்க்கார் தற்சமயம் கைத்தறி நெசவுக்காரர்களுக்குக் கொடுத்துவரும் கிராண்டை இன்னும்5ளுகாலத்துக்குத்தொடர்ந்து கொடுத்துவரும்படி சென்னைசர்க்கார் (சிபார்ஸ்செய்து)வற்புறுத்தியிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி காலத்தில் மதிமந்திரிகள் இது விஷயமாக யாது செய்தார்கள் என்று நெசவுக்காரன் கேள்வி கேட்கிறான், பன்னீர் செல்வம் போன்றவர்கள் பதில் கொடுப்பார்களாக.

## இலங்கையில் இந்தியர்கூட்டம்

ஜூன்மீ 8 தேதி கொழும்பில் 20 ஆயிரம் இந்தியர்கள்கொண்ட ஒரு கூட்டத்தில், பல தலைவர்கள் பேசினார்கள். சத்தியமும் நியாயமும் வெற்றிபெறுமென்றும், இலங்கையில் இந்தியர் ஒருங்குசேரவேண்டுமென்றும், வற்புறுத்தினார்கள். இலங்கை சர்க்கார் இந்தியர்களைவிரட்டிவிட, சட்டங்கள் ஏற்படுத்திவிட்டு, இலங்கை சாமான்களுக்கு இந்தியர் ஆதரவுகாட்டவேண்டுமென்றுகூறுவது சுத்த அபத்தம் என்று சுட்டிக்காட்டினார்கள்.

# மேன்மை தங்கிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள்

## சேதுவில் ஸ்நாநம் ராமேஸ்வரத்தில் விசேஷ ஏற்பாடுகள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள் ஜூன்மீ 6உ காலை 6 மணிக்கு ராமேஸ்வரத்திற்கு விஜயம் செய்தார்கள். இதற்கு முன் ஸ்ரீ சுவாமிகள் 1922 வருஷம் ராமேஸ்வரத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். 5உ இரவு மண்டபத்தில் தங்கினர். பாம்பன் ரயில்வே பாலத்தில் தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் ஆசாரிய சுவாமிகள் செல்வதற்கு வேண்டிய வசதிகளை அன்புடன்செய்திருந்தது பாராட்டத்தக்கது. ஸ்ரீ சுவாமிகள் முக்கால் மைல் கால் நடையாகவே சென்றார். தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் ரயில்வே பாலத்தில் பலகைகள் போட்டு, இரண்டு பக்கங்களிலிருந்து ரயில் வண்டிகளை பல மணி நேரம் தாமதித்து வர அனுமதித்தனர்.

ராமேஸ்வரத்தின் எல்லையைக்கடந்தவுடன் ஸ்ரீ ராமேஸ்வர தேவஸ்தான அதிகாரிகள் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீ சுவாமிகளை வரவேற்றினார்கள். மரியாதை குண்டுகள் வெடி தீர்த்தன. பரிவட்ட மரியாதைகள் செய்யப்பட்டன. சிவகங்கை ராஜா, ராமநாதபுரம் ராஜா இவர்களின் பிரதிநிதிகள் ஸ்ரீ ஆசார்யாளை அன்புடன் வரவேற்றினார்கள்.

ராமேஸ்வரத்தில் ஸ்ரீ சங்கரரைத் தரிசிக்க பத்தாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். ராமேஸ்வரம் தேவலோகம் போல் ஜூன்மீ 6தேதி காணப்பட்டது. ஸ்ரீ சுவாமிகள் ஆரம்பத்தில் விநாயகரைத்துதித்து விட்டு பைரவ தீர்த்த ஸ்நாநம் செய்தார்கள்.

ஸ்ரீ பட்டாபிராமய்யர (தேவஸ்தான தர்மகர்த்தர்) தேவஸ்தான விருதுகளுடனும், மரியாதைகளுடனும் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளை வரவேற்றினார்கள்.

ஸ்ரீ ஆசார்யாள் லக்ஷ்மண தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்தபின் எல்லோருக்கும் வெள்ளி நாணயங்களை வழங்கினார்கள். (இதில் ஒரு பக்கம் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் திருவுருப்படமும் மற்றொரு பக்கம் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் உருவமும் செதுக்கப்பட்டிருக்கிறது)

இந்த வெள்ளி நாணயங்களை ஆயிரக்கணக்கில் ஆஸ்திக சிகாமணிகளுக்கு ஆசாரிய சுவாமிகள் அளித்தார்கள்.

பின்னர் ராமேஸ்வர பட்டணப்பிரவேசம் நடைபெற்றது. திருப்பணி பங்களாவில், ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆங்கிலம், வடமொழி, தென்மொழியில் உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ ஆசார்யாள் பிரசாதங்கள் அளித்தார்கள்.

ஸ்ரீ சுவாமிகளின் திரிகால பூஜை இரவு 8 மணிக்கு முடிவு பெற்றது. தீபாராதனைக்கு தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து பக்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

இரவு 8-30 மணிக்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் இராமேஸ்வர தேவஸ்தான அதிகாரிகளுடன் ஸ்ரீ ராமநாதனை தரிசிக்கக்கோவிலுக்கு வந்திருந்தார்கள். அங்கு ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ ராமநாதனுக்கு பூஜை நடத்தினார்கள்.

மே. த. ஸ்ரீ சங்கரர் 7உ இரவு தனுஷ்கோடிக்குப் புறப்பட்டுச் சென்றார். 8உ காலை சேதுவில் ஸ்நாநம் செய்துவிட்டு ஸ்ரீ கோதண்டராமனை தரிசித்தார்கள். ராமேஸ்வரத்தில் ஸ்ரீசுவாமிகள் 10உ வரை இருந்தார்கள். ஆசார்ய சுவாமிகளைத் தரிசிக்க வேண்டி ஆயிரக்கணக்கில் ஸ்திரீகளும் புருஷர்களும் (எல்லா வகுப்பினரும்) வந்திருந்தனர். போலீஸார் விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ சுவாமிகள் ராமநாதபுரத்துக்கும், சிவகங்கைக்கும் சென்று விட்டு, கோக திருப்பத்தூர் வழியாக புதுக்கோட்டைக்கு வந்து அங்கிருந்து 29உ கும்பகோணம் வருகிறார்கள்.

ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளை தமிழ் நாட்டிலிருக்கும் பல ஜில்லாக்களுக்கு விஜயம் செய்யும்படி பலபிரமுகர்கள் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் சாதுர்மாஸ்ய காலத்துக்கு அவர்கள் குடந்தையிலிருக்க வேண்டியதால் பல இடங்களுக்குப் போக முடியவில்லை. (நமது விசேஷநிருபர்)

## "ஹிந்தியிலும் பிரசுரிக்க"

### ஸ்ரீசங்கராசார்யார் சுவாமிகளின் அபிப்பிராயம்

ராமேஸ்வரத்துக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியார் சுவாமிகள் விஜயம் செய்தபொழுது,

"ராமேஸ்வர தேவஸ்தான விஷயமாக வெளியிடும் எல்லா அறிக்கைகளை, எல்லா பாஷைகளிலும் வெளியிட வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஹிந்தியிலும் பிரசுரிக்க வேண்டுமென்று கூறினார்கள்."

"சேதுமகாத்மியம்" என்ற நூலை எல்லா வகுப்பினரும், மதத்தினரும் அறிந்துகொள்ளவேண்டி எல்லா பாஷைகளிலும் பிரசுரிக்க வேண்டுமென்று டிரஸ்டியிடம் ஸ்ரீ ஆசார்யாள் கூறினார்கள்.

## மே. த. ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள்

### விஜயயாத்திரை விபரம்.

ஜூன் மீ 13 தேதி சிவகங்கை; 16 தேதி திருப்பத்தூர்; 17உ இளையாத்தக்குடி; 18உ நச்சாந்துபட்டி; 19 & 20 புதுக்கோட்டை; 21 கீரனூர்; 22, 23, 24 திருச்சி; 25 ஜேமம் 26 பூதலூர்; 27 தஞ்சாவூர்; 28 திருவையார் 29 சுவாமிமலை; 29-6-39 இரவு 8 மணிக்கு கும்பகோணம் வருகிறார்கள்.

## குளத்தில் சங்கு உதயம்,

### ஐதீகத்தின் உண்மை

#### திருக்கழுக்குன்றத்தில் ஓர் அதிசயம்

இக்கோவிலில் உள்ள சங்கதீர்த்தத்தில் ஜூன்மீ 5உ காலையில் ஓர் சங்கு உதயமாயிற்று. அதை குளத்தில் குளித்தவர்கள் கண்டார்கள். இச்செய்தி வெகு விரைவில் பக்க கிராமங்களுக்கு பரவினதும் ஜனங்கள் உடனே திரளாகக்கூடினார்கள்.

திருக்குளத்தில் மார்க்கண்டேய கட்டம் என்று சொல்லுமிடத்தில் முதல் முதலாக சங்கு பார்க்கப்பட்டது. இவ்விடத்தில்தான் பல ஆண்டுகளுக்குமுன் மார்க்கண்டேயர் தபஸ் செய்துவிட்டு பகவானுக்கு அபிஷேகம் செய்ய ஓர்பாத்திரமும் இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது குளத்திலிருந்து ஒரு சங்கு தன்னை நோக்கி வருவதைக்கண்டார். அதைப் பலித்து எடுத்து அபிஷேகாதிகள் செய்தார் என்பது புராணக்கதை. இந்த இடத்திற்கு அப்பொழுதுமுதல் மார்க்கண்டேய கட்டம் என்று பெயர் வழங்கிவருகிறது.

கோவில் அதிகாரிகள் அச்சங்கத்தை எடுத்து அபிஷேகம் முதலியவைகள் நடத்திய பிறகு ஊர்வலம் செய்துவிட்டு திருபுரசுந்தரி கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள்.

பன்னிரண்டுவருஷத்திற்கொருமுறை இப்படி நடக்கிறதென்று இவ்வூரார்கள் சொல்லுகிறார்கள். இதற்குமுன் 1919ஞு ஜூன்மீ 27உ அன்று ஓர் சங்கு வெளிவந்தது. சில வருடங்களுக்குமுன் குளம் சீர்திருத்தப்பட்டபொழுதும் ஓர் சங்கு தென்பட்டது. ஆனால் அது குறிப்பிட்டபடி இல்லை.

## "சர்க்கார் ஊழியர்களை தண்டிக்க"

### ஜில்லா கலெக்டர்களுக்கு அதிகாரம்

### அப்பீலை ரெவினியூ போர்டு விசாரிக்குமாம்

#### புதிய சர்க்கார் உத்திரவு

"வேலை சம்பந்தமாக சப்மாஜிஸ்டிரேட்டுகளையும் இதர கீழ்தர சர்க்கார் சிப்பந்திகளையும் தண்டிக்கும் அதிகாரங்கள்" சர்க்காரிடம் இதுவரையில் இருந்தன. இனி இந்த அதிகாரங்களை ஜில்லா கலெக்டர்கள் உபயோகிப்பார்கள். தண்டனையைப்பற்றிய அப்பீல்களை ரெவினியூ போர்டு விசாரிக்குமென்று சென்னை சர்க்கார் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

## போலிஸ் நீதி இலாகாவில் புதிய முறை

வக்கீல் சங்கத்திலிருந்து "பிராசிகியூட்டிங் ஆபீசர்களை" இனி சர்க்கார் நியமிக்கும். அவர்களுக்கு அசிஸ்டெண்டு பப்ளிக் பிராசிகியூட்டர்கள் என்று பெயர் அளிக்கப்படும். தற்சமயம் பிராசிகியூட்டிங் இன்ஸ்பெக்டர்களாகவும், சப் இன்ஸ்பெக்டர்களாகவும் இருப்பவர்கள் போலீஸ் இலாகாவில் பழைய பதவிகளுக்கு மாற்றப்படுவர்.

இந்த புதிய திட்டத்தை சர்க்கார் மலையாளத்தில் முதலில் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறார்கள்.



# மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் ஸ்ரீ. உ. வெ. சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாறு.

## சில அரிய குறிப்புக்கள்

ஸ்ரீ. லால்குடி எல். எஸ். சுப்பிரமணியம்
(உதவி ஆசிரியர் "ஆர்யதர்மம்")

(முன் தொடர்ச்சி)

"திழற்போலி கனிச்சிமணி
செற்றுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு
டந்ததமிழ் தந்தான்"

என அகத்தியரைப்பற்றி கம்பன் கூறினர். சிவபெருமான் தந்த தமிழை அகத்தியன் போற்றி வளர்த்துக் குரவு பூண்டு வளர்த்து வந்ததை ஏட்டில் தான் அறிகிறோம். இன்று வழங்கும் தமிழ் தந்த பெருவள்ளல் யாரெனின், அக்காலத்து அகத்தியரைப்போல் இக்காலத்து அகத்தியராக விளங்கும் மகாமகோபாத்யாய சாமிநாதய்யர் என்பது நாம் கூறாமலே விளங்கும். சாமிநாதய்யர் சிறந்த புலவர். அவரினும் சிறந்தது அவர் தமிழ் நடை. ஐயரவர்களின்நடை மிகஎளிது. மிக இனிது. இவருடைய நூற்பதிப்பிற்கு ஒருதனிமதிப்பு உண்டு. ஐயரவர்களுக்கு இளம் வயதிலிருந்தே இசையில் பிரியமும் பயிற்சியுமுண்டு. 1929-ம் வருஷம் "பண்டைத்தமிழர் இசையும் இசைக்கருவிகளும்" என்னும் விஷயமாக வெகு அழகாய் சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார்கள்.

ஸ்ரீ. சாமிநாதய்யரவர்கள் சுமார் 70 நூல்கள் வரை ஆராய்ந்து பல ஆராய்ச்சிக் குறிப்புடன் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகள் வருமாறு:

வருஷம் நூல்கள்
1878 வேணுவனலிங்க விலாசச் சிறப்பு
83 திருக்குடந்தைப் புராணம்.
85 மத்தியார்ஜுன மான்மியம்
87 சீவக சிந்தாமணி
88 கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூது
88 திருமயிலைத் திரிபந்தாதி
89 பத்துப்பாட்டு மூலமும் உரையும்
1891 தண்டபாணி விருத்தம்
92 சிலப்பதிகாரம்
92 திருப்பெருந்துறைப் புராணம்
94 புறநானூறு
95 புறப்பொருள் வெண்பா மாலை
98 புத்த சரிதை, பௌத்த தருமம், பௌத்த சங்கம்
98 மணிமேகலை
98 மணிமேகலைக் கதைச் சுருக்கம்
1903 ஐங்குறுநூறு
03 சீகாழிக்கோவை
03 திருவாடுதுறைக்கோவை
03 வீரவன் புராணம்
04 திருத்தணிகைத் திருவிருத்தம்
04 திருப்பூவணநாதருலா
04 குறைமாநகர்ப் புராணம்
04 திருக்காளத்தி நாதருலா
04 பதிற்றுப் பத்து
05 திருவாரூர்த் தியாகராச லீலை
05 திருவாரூருலா
06 திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
07 தனியூர்ப் புராணம்
07 தேவையுலா
07 மண்ணிப்படிக்கரைப் புராணம்
08 திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்
1910 ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு
12 திருக்காளத்திப் புராணம்
18 நன்னூல் மயிலைநாதருரை
18 பரிபாடல்
21 பெருங்கதை
24 உதயணன் சரித்திரச் சுருக்கம்
25 நன்னூல் சங்கரநமச்சிவாயருரை
25 சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்
1930 தக்கயாகப்பரணி
30 தமிழ் விடுதூது
31 பத்துப்பாட்டு மூலம்
32 மதுரை சொக்கநாதருலா
32 கடம்பர் கோயிலுலா
32 ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்
32 பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது
33 பழனிப்பிள்ளைத் தமிழ்
33 மதுரை சொக்கநாதர் மும்மணிக் கோவை
33 சங்கரலிங்க உலா
33 திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா
33 வாசவதைப் பரணி
34 ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (2 பாகம்)
34 சங்கரநயினார் கோயிலந்தாதி
34 வலிவல மும்மணிக்கோவை
34 கிளத்தொட்டிப் புராணம்
35 திருஇலஞ்சி முருகன் உலா
36 பாயுமாலைக் கோவை

மகா மகோபாத்யாய சுவாமிநாதய்யர் இன்று இந்தியாக மட்டுமில்லாமல் ஒரு மேனாட்டாராக இருக்கும் பக்ஷத்தில், அவருக்கு "லார்டு" பட்டமும் அரசாங்கத்தின் உதவிச் சம்பளமும், கௌரவப் பட்டங்களும் அளிக்கப் பட்டிருக்கும். ஆனால் இந்தியாவிலே இம்மாதிரி கௌரவங்கள் கிடைப்பது கடினம். இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் இத்தகைய பெரியோர்களின் சிறப்பு விழா மிகவும் உன்னதமாகக் கொண்டாடப் பெறுவது அறிந்ததேயாம்.

குடந்தை அரசாங்கக் கல்லூரியின் வைர விழாவன்று தமிழ்வளர்த்த தனிப்பேராசிரியரான டாக்டர் சாமிநாதய்யரின் உருவப் படத்தை கல்லூரி மண்டபத்தில் சென்னை நீதிமன்ற நீதிபதி திவான்பகதூர் K. சுந்தரம் செட்டியார் திறந்து வைத்தார். திருப்பனந்தாள் ஆதின அதிகாரி ஐயரவர்களுடைய பெரிய உருவப் படமொன்றை சென்னை சர்வகலாசாலை அதிகாரிகளிடம் கொடுக்க, அப்படத்தை 6—3—35 அன்று சென்னை மாஜி கவர்னர் சர். உஸ்மான் சாகேப் சர்வகலாசாலை மண்டபத்தில் திறந்து வைத்தார்.

டாக்டர் சாமிநாதய்யருக்கு இந்தியாவிலும் இதர இடங்களிலும் அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள மடாதிபதிகள், அரசர்கள், ஜமீன்தார்கள், தனவந்தர்கள் முதலியவர்களுக்கு ஐயரிடத்தில் அளவுகடந்த விஸ்வாசம் உண்டு. பிரபல கவிச்சக்கரவர்த்தி டாக்டர் தாகூர் ஐயர் அவர்களுடைய வீட்டிற்கு விஜயம் செய்து அவர் வேலைகளைப் பாராட்டிப் புகழ்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார். சென்னை கவர்னர் லார்டு கார்மிகேல் பிரபுவுக்கு ஐயர்மீது அதிக மதிப்பு ஏற்பட்டிருந்தது. 1922-ம் வருஷம் மே. த. இளவரசருடன் அய்யர் அறிமுகம் செய்யப் பட்டார். இவருடைய சதாபிஷேகத்திருவிழாவிற்கு உலகின் பல பாகங்களிலிருந்து இவருக்குப் பாராட்டுச் செய்திகளும், வெகுமதிகளும் குவிந்தன. இதிலிருந்து இவரைப் பொதுமக்கள் எவ்விதம் மதித்து வருகிறார்கள் என்பது நன்கு விளங்கும்.

1927-ம் வருஷம் சென்னை சர்வகலாசாலை ஆதரவில் இவர் "சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும்" என்னும் பொருட்பற்றி பத்து பிரசங்கங்கள் நிகழ்த்தி யிருக்கிறார். 1933-ல் தமிழன்பர் மகாநாட்டில் தலைமை வகித்தார். இவர் தமிழ் நாட்டில் போகாத கிராமங்களில்லை. இவருடைய இனிய, எளிய பிரசங்கங்களைக் கேட்க ஏராளமாய்க் கூட்டம் வருவது வழக்கம்.

ஐயரவர்கள் 1893-ம் வருஷத்தில் தந்தையாரையும், 1905-ல் அன்னையாரையும், 1917 மனைவியாரையும் இழந்தார்கள். ஐயரவர்களின் ஏகபுதல்வரான ஸ்ரீ கல்யாணசுந்தரம் அய்யர் அவர்கள் சென்னை நீதி மன்றத்தில் உத்தியோகத்திலிருந்து விட்டுத் தற்சமயம் உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார்.

ஐயரவர்கள் இந்தத் தள்ளாத வயதில்கூட பூஜை முதலிய அனுஷ்டானங்களை விடவில்லை. இன்றும் காலை 7-மணிக்கு அவரைப் பார்க்கப் போகிறவர்கள் திடுக்கிடும்படியான காட்சி தான் பார்க்கநேரிடும். ஐயரவர்கள் ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் காட்சி தான் அக்காட்சி. இவருடைய வீடு கலைமகள் நிலயமாகத் திகழ்கின்றது. இப்பெரியாருடைய புகழ் தமிழ் மணக்கும் இடங்களில் எல்லாம் பரவி விளங்குகின்றது.

தமிழாகிய அமுதை நமக்கு ஊட்டி இன்புறச் செய்த மகா மகோபாத்தியாய சாமிநாதய்யர் இன்னும் பல்லாண்டு நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், பெருகப் பெற்றுத் தமிழுக்கு ஓர் இணையற்ற அணிகலமாய் மிளிரும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோம்!

வாழ்க சாமிநாத மகிபாலன்!
மன்றுள் இறைவன் அருளால் நீ
வன்னவேனி நலஞ்சிறந்து
வாழ்க! வாழ்க! பல்லாண்டு
வாழ்க! வாழ்க! வாழியவே.

## மணக்கோலம் பிணக்கோலம் ஆயிற்று.

### செங்கற்பட்டில் ஒரு பரிதாப சம்பவம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை திருப்பதியில் கலியாணமாய் நேற்று இவ்வூருக்கு வந்து இரவு சுமார் 12மணிக்கு ஆடம்பரமாய் வாண வேடிக்கையுடன் ஊர்வலம் வரும்பொழுது மணமகள் திடீரென மாரடைப்பினால் மயக்கமடைய உடனே வீட்டிற்கு எடுத்துச்செல்ல அங்கு மரண முற்றார். மணக்கோலம் யாவும் பிணக்கோலமாயிற்று.

இவ்வூர் வக்கீல் ஸ்ரீமான் எம். துரைசாமி அய்யங்கார் புதல்வியான சகுந்தலாவென்ற பெண்ணுக்கும் பாங்கிமலையில் ஜில்லா போலீஸ் சூப்ரண்ட் ஆபீஸில் குமாஸ்தாவாகயிருக்கும் ஸ்ரீமான் என். சாரங்கபாணி என்பவருக்கும் விவாஹம் நடந்தது.

விவாஹம் முடிவுபெற்று மணமகனும் மணமகளும் இங்கு வந்ததும் இரவு மணமகள் இல்லத்தில் பெரிய விருந்து செய்யப்பட்டது. பிறகு இரவு தம்பதிகள் இருவரையும் வாண வேடிக்கையுடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர். பாதிவழியில் பெண்ணுக்கு திடீரென்று மாரடைப்புவந்து வாயில் ரத்தமும் நுரையும் தள்ளிற்று. உடனே வீட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டதில் மணமகள் உயிர் நீத்தாள்.

# வெளியூர்ச் செய்திகள்

## வைதிக தர்ம ஸங்கம் தர்ம ப்ரசாரக மஹாஸபை.

பணையூர் கிராமத்தில் கூடிற்று.

செங்கல்பட்டு ஜில்லா பணையூர் கிராமத்தில், வைதிக தர்ம ஸங்கத் தபோவன ஆசிரமத்தில், வைகாசிமீ 11உ காலை 9 மணிக்கு மஹாஸபைக்கென்றமைக்கப்பட்ட பந்தலில் "தர்ம ப்ரசாரக மஹாஸபை" ஆரம்பமாயிற்று. ஸ்ரீயக்ஞேச்வர தீக்ஷிதரவர்கள் தர்மத்வஜத்தை ஏற்றிவைத்தார். தர்மப்ரசார பஞ்சாயத்து ஸ்ரீ கார்யதரால் ஸபையோர்களுக்கு வரவேற்புப்பத்திரம் வாசிக்கப்பட்டது. ஸ்ரீவிச்வநாத சாஸ்திரிகள் தலைமை வகித்தார்.

தலைவர் தனது முன்னுரையில் "தற்காலம் தர்மக் குறைவு, நாஸ்திக்யம், இவைகளால் விளைந்த ஸமூஹ சீர்கேட்டை நிவர்த்திக்க ராஜாக்கள் இல்லாததால் வைதிக தர்ம ஸங்கமே ஐகமத்ய நிதானத்துடன் கூடி தர்மத்தை நிலைநிறுத்தவேண்டுமென்று," குறிப்பிட்டார். அன்று மாலை திருவெண்காடு ஸ்ரீமுத்துஸ்வாமி சாஸ்திரிகள் மந்த்ரமாஹாத்ம்யம் என்ற விஷயத்தைக் குறித்து உபந்யஸித்தார். "ப்ராம்மணர்களுக்குண்டான மந்த்ரசக்தியானது, வேதாத்யயனம் செய்யாததால் இழக்கப்பட்டு ப்ராம்மணர்கள் எவ்வழியிலும் கஷ்டத்திற்கு ஆளாய்விட்டார்கள். இக்கேட்டை நிவர்த்திக்க, க்ரமாத்யயனத்தினால் மந்த்ர சக்தியை அடைந்து வீர்யவான்களாக ஆகவேண்டும் என்று கூறினர். இரவு ஸ்ரீகுருஸ்வாமி சர்மா "ஸாமான்யதர்மங்களும் ஆத்மகுணங்களும்" என்ற விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். ஆத்மகுணங்களுடன் கூடிய ஸாமான்ய தர்மங்களாலேயே மனித ஜன்மம் உத்க்ருஷ்டமாகின்றது என்று விவரித்தார்.

இரண்டாவது நாள் மாலை "அக்னி ஆராதனம்" என்ற விஷயத்தைப்பற்றியும் ஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் எடுத்துரைத்தார். இரவு V. H. சுப்ரமணிய சாஸ்திரியவர்கள் விசேஷ தர்மங்களையும் யோகத்தையும் பற்றிப்பேசினர். யோக சக்தியுடன் கூடிய உத்தம புருஷனால் அனுஷ்டிக்கப்படும் விசேஷ தர்மங்களால் ஸமூஹத்திற்கு மிகுந்த க்ஷேமமுண்டாகுமென்று யுக்திகளுடன் உபந்யஸித்தார். மூன்றாவது நாள் மாலை ஸ்ரீராமஸுப்ரமணியசாஸ்திரியவர்கள் "ஸ்வதர்மநிஷ்டை" என்ற விஷயத்தைப் பற்றி உபந்யஸிக்கும்போது அவதார புருஷர்களான ராமர் முதற்கொண்ட மஹான்கள் ஸ்வதர்மத்தையே அனுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்கள் என்று அநேக உதாஹரணங்களுடன் விளக்கினர். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் ஸங்க சக்தியும் வைதிக ஸமூஹமும் என்ற விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார்.

நான்காவது நாள் மாலை "வைதிக ஸம்ஸ்காரங்கள்" என்ற விஷயத்தைப்பற்றி ஸ்ரீகணேசசர்மா உபந்யஸித்தார். இரவு சேங்காலிபுரம் ஸ்ரீவைத்யநாத சாஸ்திரிகள் "ஸ்திரீகளின் தர்மமும் வித்யாப்யாஸமும்" என்ற விஷயத்தைப்பற்றி கூறுகையில் மேல்நாட்டு நாகரீகத்தால் நமது ஸ்த்ரீகளிடையே ஏற்பட்டுள்ள கெடுதல்களை எடுத்துரைத்து "பாரதேசத்து ப்ராசீன நாரீமணிகளின் கற்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய அரிய குணங்களையும் அதற்குக் காரணமான பெற்றோர்களால் போதிக்கத்தகுந்த குற்றமற்ற வித்யாமுறைகளைத் தற்கால ஸ்த்ரீகளுக்கேற்படுத்த வேண்டுமென்று, உபந்யஸித்தார். ஐந்தாவது நாள் மாலை ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் "ஸதாசாரத்தின் குணத்தைப்பற்றி" உபந்யஸித்தார்.

பிறகு, ப்ரதிதினம் காலையிலும் மாலையிலும் கூடிய தர்மப்ரசார கார்ய லோசனை சபையில் தீர்மானிக்கப்பட்ட தர்மப்ரசாரகர்களுக்கு இன்றியமையாத யோக்யதா விசேஷங்கள் "ப்ராம்மண தர்மானுஷ்டானத்துக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் நிறைந்த ஆசிரமங்களை ஏற்படுத்திவைத்து அங்கு குரு சிஷ்யக்ரமமாக வித்யாப்யாஸம் செய்வித்தல்" "எல்லோரும் அறியும்படி தர்மஸூக்ஷ்மங்களைப்பற்றி சபையில் வாசிக்கப்பட்டன. ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஸ்ரீகார்யமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகள் ஸ்ரீ முத்து சாஸ்திரிகள் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்களும் தர்மப்ரசாரகர்களாக அங்கீகரிக்கப்பட்டு, நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கப்பட்டார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் ஸ்ரீ கார்யத்தினால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு மஹாசபை கலைந்தது. ஸபை ஆரம்பம் முதல் முடிவுவரை பரமஹம்ஸ ஸ்ரீபரமாஜிவப்ரகாசானந்த ஸ்வாமிகள், கார்யாலோசனைக் காலங்களிலும், மகாசபைக் காலங்களிலும், ப்ரஸந்நர்களாக இருந்து அனுக்ரஹித்து வந்தார்கள். மகாநாட்டுக்குத் தமிழ் நாட்டின் பலபாகங்களிலிருந்து ஏராளமாய் ஆஸ்திக சிகாமணிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

எல்லோருக்கும் தபோவனத் தோப்பிலேயே எல்லா சவுகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

இத்துடன் வைகாசி 12, 13, 14, தேதிகளில் வைதிகோத்தமர்களான ப்ராம்மணர்களைக்கொண்டு தனியாக அமைக்கப்பட்ட பந்தலில், மஹாருத்ரஜபஹோம மஹோத்ஸவம், சிறப்பாக நடந்தேறியது. ஜப காலத்திலும் ஹோம காலத்திலும் ஜனங்கள் ஏராளமாய் வந்திருந்தார்கள். ச. நி

---

திண்டுக்கல்

### கண்டனக்கூட்டம்

திண்டுக்கல் முனிஸிபல் ஹைஸ்கூலில் ஸம்ஸ்கிருதக் கல்வியை எடுத்துவிடுவதாக விருக்கும் முனிஸிபாலிடியாரின் உத்தேசத்தை கண்டிக்கவேண்டி சென்ற சனிக்கிழமை (27-5-39) மாலை 5 மணிக்கு S. ஸுப்ரம்ஹமணிய ஐயரவர்கள் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் "ஹிந்து மத" ஸங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ K. கணேச ஐயர் ஸ்ரீ M. ஸ்வாமிநாத ஐயர், ஸ்ரீ K. தியாகராஜ தீக்ஷிதர், அருணாசலசர்மா, ஸ்ரீ R. பாலசுப்ரஹமண்யன் முதலியவர்கள் கண்டித்துப்பேசினர்கள். முனிஸிபாலிட்டியின் செய்கையை கண்டித்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது முனிஸிபல் சபைத் தலைவர் முனிஸிபல் காங்கிரஸ் கட்சித்தலைவர் கல்வி இலாகா மந்திரி முதலியவர்களுக்குத் தீர்மானங்களை அனுப்பத் தீர்மானம் செய்யப்பட்டு வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

---

திருச்சிராப்பள்ளி.

### திராவிட வைத்ய மண்டலம்.

மேற்படி மண்டலத்தின் 10வது வருடாந்த ஸம்மேளனம் ஜூலைமீ 3-வது வாரத்தில் மதுரையில் கூடும். ஒரு வரவேற்புக் கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. ஸம்மேளனம் 3 நாட்கள் நடைபெறும். ஒரு வைத்யகண்காக்ஷியும் நடைபெறும். கண் காக்ஷிக்கு ஔஷதங்களை அனுப்ப விரும்புவோரும், சாஸ்திரீய சர்ச்சைகளில் கலந்து கொள்ள விரும்புவோரும் "காரியதரிசி," 10 வது திராவிட வைத்திய மண்டல வரவேற்பு சங்கம், காக்காத்தோப்பு தெரு, மதுரை, என்ற விலாசத்துக்கு எழுதி முழு விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

இந்த மகாநாட்டில் இந்திய வைத்தியர்களுக்கேற்பட்ட எல்லா குறைகளைப்பற்றியும் விவாதிக்கப்படும். தமிழ் நாட்டிலிருக்கும் எல்லா திராவிட வைத்யர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும்படிக்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புதுக்கோட்டை.

வஸந்தோத்ஸவம்.

புதுக்கோட்டை ஸலசாக வஸந்தோத்ஸவம் 23-5-39உ பஞ்சமியன்று ஆரம்பிக்கப்பட்டு நேற்று 3-6-39உயிலவும் விமரிசையாக முடிவுபெற்றது.

ஸ்ரீ வடகூர் வெங்கிட்டராம சாஸ்திரிகள் சகலோபநிஷத் தாத்பர்யமயமான ப்ரம்மஸூத்ர சாஸ்திரத்தை தினம் காலைகளில் 8 முதல் 10 மணி முடிய ப்ரஸங்கம் செய்தார். இராத்திரிகளில் பஜனைகள், ஸங்கீத காலக்ஷேபங்கள் நடந்தன. பௌர்ணமியன்று விசேஷமான பூஜை அபிஷேகம் ஸஹஸ்ரநாமார்ச்சனை முதலியவைகள் நடைபெற்றது தீர ப்ரவசனமைப்தியும் ஆயிற்று. நன்றாக அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி படத்தையும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளின் படத்தையும் வைத்து, யானை, குதிரை மேளவாத்தியங்கள் ஸஹிதம் கிராம பிரதக்ஷிணம் கொண்டுவரப்பட்டது.

வடதஞ்சை ஆரியல் மகாநாடு.

வடதஞ்சை ஜில்லா அரசியல் மகாநாடு அய்யம்பேட்டையில் ஜூன்மீ 11உ காலை கூடிற்று. ஸ்ரீ கே. சந்தானம் தலைமை வகித்தார். கனம். எஸ். ராமநாதன் மகாநாட்டைத் திறந்துவைத்தார். பிரபல காங்கிரஸ் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

### திருச்சி-தஞ்சை ஜில்லா மிராசுதார் மகாநாடு.

திருச்சி-தஞ்சை ஜில்லா மிராசுதார் மகாநாடு ஜூன்மீ 12உ மாயவரத்தில் கூடியது. டெல்லி சட்ட சபை அங்கத்தினர் ஸ்ரீ. கே. சந்தானம், எம். ஏ. பி. எல் தலைமைவகித்தார். சென்னை அரசாங்க விளம்பர இலாகா அமைச்சர் கனம் ஸ்ரீ எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். மகாநாட்டைத் திறந்துவைத்தார்.

முக்கியமாய் பர்மா அரிசி இறக்குமதியாவது சம்பந்தமாக தக்க பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டியும், சர்க்காரின் நிலவரிக் கொள்கைகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டியும் மகாநாடு கூட்டப்பட்டது.



## செய்வதென்ன?

(ஸ்ரீ. S. வைதீஸ்வர அய்யர், கல்கத்தா.)

செய்வதென்ன! சிருஷ்டித்துவக்கமுதல் எது வழக்கமாயிருந்திருக்கிறதோ அதைத்தான் செய்யவேண்டும். நான்கு வேதங்களுமறிந்தவனுக்கு இந்த இனும்!" என்று ஒருவர் ஒரு கூட்டத்தில் உரைத்தார். உடனே ஒருவன் எழுந்து 'எனக்குத்தான் அது' என்றான். அவனை வேதமறிவாயோ என வினவ 'நான் அறியாமலா பேசுகிறேன். வேதம் என்ற வஸ்து நான்கு என்று நீங்கள் சொல்லவில்லையா மறந்துவிட்டீர்களா! என்றதுபோலிருக்கிறது நம்முடைய நிலைமை. வேதம் சாஸ்திரம் முதலான வித்யாஸ்தானங்கள் (கல்விக்கு மூலம்) 14 என்பதுகூட பலருக்கும் தெரியாது. அவைகளைக் கசடறக்கற்று ஒழுகுவோர் தற்காலத்தில் இருக்கிறார்களா? என்பதும் சந்தேகம். சந்தேகம் என்றது அத்தகைய சான்றோர் இருந்தாலும் உலகத்தோடு சேர்ந்தோராகார். இக்கலியில் தர்மம் ஒருகாலிலாவது நடக்கிறதோ அல்லது பறக்கிறதோ என்று தோன்றுகிறது. வாய்ப்பேச்சில் வேதம் நான்கு என்றவன்போல் ஸநாதனதர்மம் முழுதும் எனக்குத்தெரியும், எல்லாம் மூடநம்பிக்கை (Superstition) வினைப்பயன் எனும் தூங்குமூஞ்சிகள் (Fatalists) என்றுபேசுகிறவர்கள்கணக்கிலடங்கார். (கண்மூடிக்கொண்டு காந்திஜீயை நம்புங்கள். மந்திரி செய்வதையெல்லாம் விசாரியாமல் ஒப்புக்கொள்ளுங்கள். அதன் ஸுகம் பிறகு தெரியும் என்று அவர்கள் சொல்வதும் வியக்கத்தக்கது) தர்மத்தில் நம்பிக்கை உள்ளவர்களோ என்றால் ஏறக்குறைய எல்லாரும் "கலிகாலம் ஐயா, கலிகாலம்!" என்று சொல்லி கண்டனம் செய்வதுமில்லை, செய்யக்கூடிய பலமும் ஆசாரங்களில் சந்தேகமானவர்கள் விளக்கெண்ணை சாப்பிடுவதுபோல் நன்மையை உத்தேசித்து சில சடங்குகளை மாத்திரம் செய்துவருகிறார்கள். பெரும்பாலோர் டம்பத்திற்காகவும் தமாஷ்பொழுதுபோக்குக்குமாக செய்வது ஒரு மாதிரியும் க்ஷீணித்தும் வருகிறது.

க்ஷத்திரிய பலமில்லாமல் பிராம்மண பலமில்லை. பிராம்மண பலமில்லாமல் சுபிக்ஷமில்லை. சுபிக்ஷமில்லாமல் க்ஷத்திரியபலமில்லை. தண்டநீதி என்னும் செங்கோல் பலமிருந்தால் எந்தயுகத்திலும் தர்மம் நான்கு கால்களும் சேர்ந்து பூர்ணமாயிருக்கும். ராமராஜ்யம், பாண்டவராஜ்யம், சமீபகாலத்திலேயே, சரபோஜி மகாராஜா, ராணி மங்கம்மாள் இவர்கள் ராஜ்யம் நன்கு நடைபெற்றிருக்கின்றன. சிற்சிலகுறைகள் எக்காலத்திலுமுண்டு. பரம்பொருள் ஒன்றே குறையில்லாதது.

ஸுபுத்தியும் செங்கோலும் இல்லாவிடினும் அவ்வளவு தீமையில்லை. குபுத்தியும் தர்மவிரோதமான சட்டங்களும் பெருகுவதைப்பார்த்தால் தத்தளித்து நிற்கும் சிறிது தர்மமும் முழுவதுமே போய்விடுமென்று தோன்றுகிறது. குபுத்தி என்ற அஸுரன் இந்திரியஸுகத்தையே தர்மமாகச் செய்துவிட்டான். அந்த ஸுகத்திற்கு வேண்டிய ஆதாரங்களையே வித்யா ஸ்தானங்களின் போலி மொழிபெயர்ப்புகளில் பார்க்கிறான். ("To understand English one must think in English" is a great lesson. This appli- with greater force to Sanskrit) கண்ணைப் படைத்தது சினிமாவுக்காக. காது ரேடியோக்காக. மூக்கு அத்தர்களுக்காக. நாக்கு ஜங்கிரீம் மது மாம்ஸங்களுக்காக. ஜனனேந்திரியங்கள் (கர்ப்பத்தடைசெய்தாவது) சிற்றின்பத்திற்காக. விவாகரத்துசட்டமும் அவசியமாகிறது. இதற்கடுத்தபடி விவாகமே வேண்டாமென்பது. இவைகளைக் கும்பிடுகிறவரே தொண்டர்கள். அவர்களுக்கு கோவில்கள் அலுவலகம்.

மஹாபாரதத்தில் உமாமஹேச்வர ஸம்வாதத்தில் 'மூச்சுவிடுவதாலேயே ஜீவகோடிகள் நசிப்பதால் மூச்சையும் அடக்கியிருப்பது தான் அஹிம்ஸை" என்று இருக்கிறது. காற்று, ஜலம், உதிர் சருகு, பழங்கள், முளையாத கிழங்குகள், விதையில்லாத காய்கறி, விதையுள்ளவை, தானியங்கள், பால், மாம்ஸம். இவை முறையே ஒன்றைவிட ஒன்று ஜீவஹிம்ஸை உள்ள ஆகாரம். ஆகார நியமம் மாத்திரம் போதாது. மனோ வாக்கு காய நியமங்கள் தேவை. ஒன்றும் நினையாதிருப்பதும், பேசாதிருப்பதும், ஓரிடத்தில் அசையாதிருப்பதும் மனோ வாக்கு காய அஹிம்ஸைகளாகும். மற்றவை ஹிம்ஸையே. ஒருவன் துப்பாக்கியால் சுடுகிறான். ஒருவன் கத்தியால் வெட்டுகிறான். ஒருவன் தடியாலடிக்கிறான். ஒருவன் தூஷிக்கிறான். ஒருவன் பழிகிடக்கிறான் எல்லாம் அவரவர் ஆசையையோ பொதுஜன ஆசையையோ நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செய்யும் ஹிம்ஸைதான். ஒரு பசுங்கன்று மரண வேதனைப்படுவதைப்பார்த்தார் ஒருவர். தன் மனம் சகிக்கவில்லை. அதற்கு உயிரைக் கொடுக்க தனக்கு சாமர்த்தியமில்லை. சுட்டுக்கொன்றால் தன்மனம் சாந்தமடையுமென்று ஆராய்ந்து அவ்விதம் செய்தார். அவர் செய்கையால் மரணவேதனை போயிற்று என்று சொல்லமுடியுமா. கன்றுக்குட்டி பேசவில்லை. சுட்டது ஹிதமென்றும் அது சொல்லவில்லை. எல்லாம் தானே நினைத்துக்கொண்டது. இதேமாதிரி தன் கக்ஷியே ஹிம்ஸை அற்றது என்றும் எதிர் கக்ஷி எல்லாம் ஹிம்ஸை உள்ளது என்றும் மயங்குகிறார்கள். அஹிம்ஸையே தர்மம் என்றது மௌனநிஷ்டையில்சும்மா இருப்பதாகும்.

சாரதா சட்டம் முதலியன ஹிம்ஸையில்லையா? கண்டிப்பதல்லாமல் சிறையிலிட்டு ஆசாரத்தை குலைப்பது ஹிம்ஸையல்லவா! ஹிம்ஸையெல்லாம் அதர்மமல்லவா! ஆஸ்திக நாஸ்திகர் எல்லாரும் ஜோஸ்யத்தை நம்புகிறார்கள். தம்பதிகளுக்கு மக்கட்பேறு உண்டா என்பதற்கு ஸ்திரீ ஜாதகத்தையே பார்க்கிறார்கள். ஒரு ஸ்திரீக்கு 14 வயதுக்குள் பிரஜை உண்டாகுமென்றிருந்தால் அவசியம் உண்டாகும். பிரஜை என்பது தெய்வ யத்னம். எவ்வளவு யத்னம் செய்தாலும் வேத சம்பந்தமான யாகாதிகளாலன்றி மனுஷ்யனால் உண்டாக்கமுடிவதில்லை. எவ்வளவோ பேருக்கு 14க்குள் கர்ப்பம் தரிக்கிறது. விவாகமாகியிருந்தால் அதற்குப் பெற்றோர் உண்டு. இல்லாவிட்டால் கர்ப்பத்தைக்கரைக்கவேண்டியிருக்கிறது. இது எல்லா தேசங்களிலும் நடக்கிறது. ஸ்வராஜ்ய பார்டி என்ற காங்கிரஸார் சட்ட ஸபையில் புகுந்து செய்த முதல் தொண்டு இது. இதனால் பால்ய விதவைகளிருக்க மாட்டார் என்கிறார்கள். அவர்களுக்குப்பதிலாக விவாஹமாகாத கர்ப்பம் கரைத்தவர்களும், பெற்றவர்களும், பழிச்சொல்லோடு விவாகத்திற்கே இடமின்றியிருப்பதோடு கல்நெஞ்சர்களாயிருப்பார்கள். முன் காலத்தில் பால்ய விவாஹம் இல்லை என்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் கர்ப்பத்தைக் கொடுத்தவன் பிள்ளையையும் ஏற்றுக் கொண்டான். இக்காலத்தில் அம்மாதிரி செய்ய தைரியம் உண்டா! முன் காலத்தில் ஒரு ஸ்திரீயையே அவள் புருஷனிடமிருந்து இன்னொருவர் வாங்கிப்போய் புத்திரனை உண்டாக்கிக்கொண்டு திருப்பிக் கொடுத்துவிடுவதுண்டு. இம்மாதிரியும் சீர்திருத்தம் செய்வாரா. முன் காலத்தில் யாகமுண்டு, தானமுண்டு, தவமுண்டு. "அவையெல்லாம் இந்திரிய சுகத்தைக்கொடுக்கவில்லை வேண்டாம் யாகம் ஹிம்ஸை, வயிற்றுக்குக் கொல்வது ஹிம்ஸையில்லை. கர்ப்பத்தடை, கர்ப்பம் கலைப்பது ஹிம்ஸையில்லை". என்பதே கக்ஷி.

(தொடரும்)

## துவிச்சக்கர வண்டிக்கு நூறாண்டு விழா

ஒரு ஆங்கிலேயர் கண்டு பிடித்த விவரம்

"காற்றில் பறந்து சென்ற விந்தை"

இந்த மாதத்தோடு, சைக்கிளுக்கு நூறு வயதாகிறது!

அதாவது சைக்கிள் வண்டி கண்டுபிடிக்கப்பட்டு, இப்போதுசரியாக நூறுவருஷங்கள் ஆகின்றன.

இன்று சைகிள்கள் உலகமெங்கும் ஏழைகளின் வாகனமாக கோடிக்கணக்கில் பரவியிருக்கின்றன. ஆனால் இது முதன் முதல் எப்படி ஆரம்பித்தது?

1839-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில், கர்க்பாட்ரிக் மாக்மில்லன் என்ற இங்கிலீஷ்காரர் தான் முதன்முதலாக சைக்கிள் என்றுசொல்லக்கூடிய ஒரு வண்டியைத் தயாரித்தார்.

மாக்மில்லன் ஒரு கொல்லர். இங்கிலாந்திலுள்ள டம்ப்ரீஸ்ஷயர் ஜில்லாவில் கோர்ட்ஹில் என்ற குக்கிராமத்தில் வசித்து வந்தார்.

மாக்மில்லன் தயாரித்த வண்டியை இன்று பார்த்தால் "இதுதானா சைக்கிள்!" என்று ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அவரது சைகிள் பூராவும் மரக்கட்டையால் ஆனது. சக்கரத்தைச் சுற்றும் 'பாதம்' ['பெடல்'], குழந்தைகளின் மூன்று சக்கர வண்டுபோல முன் சக்கரத்தில் வைக்கப் பட்டிருந்தது. முன் சக்கரத்துக்கும் பின் சக்கரத்துக்கும் சங்கலியும் உருளையும் போட்டுச் சேர்த்திருந்தது, ஆசனம் மட்டும, இப்போது உள்ளது போலவே இருந்தது.

இந்த சைகிளால் மாக்மில்லன் திருப்தியடையவில்லை. ஆகையால், மூன்று வருஷம் இதை சவாரி செய்வதிலேயே கழித்து, சைகிளைப் பற்றிய பல ரகசியங்களையும், தந்திரங்களையும் கற்றுக் கொண்டார். அதற்குப் பின்னர், 1842-ம் வருஷம் ஜூன் 6-தேதி, மாக்மில்லன், தமது 29-வது வயதில் கிளாஸ்கோ நகரிலுள்ள தனது சகோதரர்களைப் பார்க்க சைக்கிளிலேயே கிளம்பினர்.

வழியெல்லாம், ஜனங்கள், மாக்மில்லன் சைக்கிளில் வேகமாகப்போவதைக் கண்டு பேராச்சரியமடைந்தார்கள். அவரைக் கண்ட ஒரு கிராமவாசி, "அடடே! ஒரு மனிதன் இரண்டு சக்கரத்தால் காற்றில் பறந்து போவதைக் கண்ணாரக் கண்டேனே. அவன் மனிதனில்லா விட்டால், பேயோ பிசாசாகவோதான் இருக்க வேண்டும்!" என்று ஊரெல்லாம் கத்திக் கொண்டு சென்றான்!

இந்தப் பிரயாணத்தின் போது, ஒரு குழந்தை பயத்தினால் சைகிள் மேல் மோதி விழுந்தது. அதற்காக, மாக்மில்லனுக்கு 5 ஷில்லிங் அபராதம் விதித்தார்கள். ஆகவே மாக்மில்லன் முதன் முதலாக சைகிள் கண்டு பிடித்தவர் மட்டுமல்ல, சைகிள் விபத்தில் அகப்பட்டுக் கொண்டவரும் இவரேதான்!

மாக்மில்லன் கண்டுபிடித்த சைகிள் நாளாவட்டத்தில் பல்வேறுமாறுதல்கள் அடைந்தது. "எலும்பு முறிப்பான்", [பெயரிலிருந்தே வண்டி எப்படிப் பட்டது தெரியவில்லையா?] கெட்டி ரப்பர் சக்கர வண்டி, "பென்னி-பார்த்திங்" சைகிள், என்று வெவ்வேறு வித வண்டிகள் பின்னர் வந்தன. ஆனால், கடைசியில் பழையபடி, மாக்மில்லன் கண்டுபிடித்த ஆதி சைகிளைப் போலவே கிட்டத்தட்ட இருக்கும் வண்டிகளே முன்னுக்குவந்தன.

J. E. ஸ்டார்லி என்பவர் தான் முதன் முதலாக கம்பிகள் போட்ட ஸ்போக் சக்கரத்தைத் தயாரித்தார். முதன்முதலாக, தற்போதிருப்பது போல 'பெடலை' கீழே வைத்து சங்கிலி போட்டதும் இவரே. தான்.

[ஹிந்துஸ்தான்]

215288
321

## ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்.,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், கிரந்தம், இங்கிலீஷ், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம். பையிண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றாய்செய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

## உன்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது

டி.டி

இரஸாயன தத்துவப்படி
இணைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
விலை ரூ. 1—14—0. பவுண்டு.
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஏஜண்டுகள் தேவை,
"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய வசக்கமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும் ஏஜண்டு நிபந்தனைகளுக்கு எழுதவும்.
மானேஜர், ஆர்யதர்மம்,
கும்பகோணம்.

"LIFE AFTER DEATH"
JUST PUBLISHED
BY
Sri. T. R. Ganapathiramier, B.A., B.L., Advocate.
Author of "Bagavatham Series" etc.
In 2 PARTS BOUND Rs. 3/-
Part I :— THE HINDU VIEW
Part II :— CONQUEST OF DEATH (its fears. by YOGIC METHODS.
Each Part Rs. 1—8—0.
Both Parts Rs. 2—8—0. (Wrapper)
*Apply* — Author,
Tinnevelly Jn. S. I. R.

## அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்", கும்பகோணம்.

## எழுத்தாளர்களுக்கு

[நமது "ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டித் தமிழ்நாட்டிலிருக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வியாஸங்களும், கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஸநாதன தர்மத்தைப்பற்றியும், சாஸ்திர ஆராய்ச்சி, சாஸ்திரஸந்தேகங்கள், புராண இதிஹாஸங்கள், ஜோதிஷம், வைத்யம், சங்கீதம், போன்ற விஷயங்கள், சரித்திரக்குறிப்புகள் முதலியவைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதியனுப்பலாம். பொருளாதாரம், அரசியல் கிலவாணி, தத்துவம் தேச விஷயங்களைப் பற்றிச் சிறந்தகட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பத்தில் எத்தகைய பண உதவியும் செய்யமுடியாது. பத்திரிகையின் இதழ்கள் 2அனுப்பப்படும். செய்திகள், அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இந்தியாவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸநாதன தர்ம விஷயங்களைப்பற்றியும், முக்கிய செய்திகளைப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் அனுப்பலாம்.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.



அநாவசியமாக என் — —
— — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது.




அமிர்தாஞ்சனம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

4 ரூ 2~~5~~

24

~~25-1-1939~~

22. 6.39

215287

30 3 0 325
215287

REGD No. M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY, Estd. 1914.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்
களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 கும்பகோணம் பிரமாதி-ஞு ஆனி-மீ 8உ 1939-ஞு ஜூன்-மீ 22உ ஸ-25

## ஹிந்து மதம் சக்தி வாய்ந்தது

இதர மதங்களை விழுங்கி விட்டது.

நமது மதம் உபதேசிப்பதென்ன ?

இ...... இருக்க..... து
பொதுவான தர்மதயின் இருக்கக்கூடாது
என்று சிலர் கேட்கின்றனர். மானிட சமூக
த்திலே எல்லா மக்களுடைய ஞானமும்
ஒரே அளவு பக்குவ மடைந்திருக்கவில்லை.
ஆகவே, மனம் எவ்வளவு பக்குவமடைந்திரு
க்கிறதோ அதற்கேற்றபடி மதம் இருக்க
வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது.
உலகத்தில் மதங்கள் பற்பல இருப்பதின்
காரணம் இதுவே," என்று கூறி ஸ்ரீ பி. ஆர்.
ராஜமய்யர் மேலும் எழுதுவதாவது:-

மக்களின் மனோநிலைக்கேற்றவாறு தான்
மதம் இருக்கமுடியும். ஆனால், அவ்வாறு
ஏற்பட்டுள்ள மதங்களின் சாராம்சங்களை
யெல்லாம் ஒன்றாகக் கூட்டிக் கலந்து பொது
மதம் ஒன்று செய்து விட முடியும். அதற்கு
தாராள மனப்பான்மை வேண்டும். எல்லா
விதமான கொள்கைகளையும் சேர்த்துபிணை
க்கவல்ல தத்துவம் வேண்டும். ஹிந்து மத
தத்துவம் அப்பேர்பட்ட சக்திவாய்ந்தது.

ராமாயணத்தில் வாலியின் பராக்ரமத்தை
குறித்துச் சொல்லும் போது அவனுக்கு ஓர்
அதிசயமான சக்தி இருந்ததாகச் சொல்லப்
படுகிறது: வாலியை யார் எதிர்த்தாலும்
அவர்களுடைய பலத்தில் பாதியை அவன்
ஆக்ரஹித்து விடுவானாம். ஹிந்து மதம் அப்
பேர்ப்பட்ட தன்மைவாய்ந்தது. ஹிந்துமதத்
துடன் முட்டி, மோத வந்த மதங்கள் பல்
லாயிரம். அவற்றை யெல்லாம் ஹிந்து மதம்
விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது.

ஹிந்து மதத்தைப்போல் தாராளம் வாய்ந்
தது[?], உலகத்தில் மக்கள் அறிந்த சர்வமதங்
களின் கொள்கைகளையும் தன்னுள்ளே கொ
ண்டதுமான மதம்வேறொன்றும் கிடையாது
டவுள் ஒருவரேயென்று கிறிஸ்தவ மதமும்,
ககமதிய மதமும் உபதேசிக்கின்றன. அக்
மக்கொள்கையை ஹிந்து மதமும் வெகு விம
ரிசையாக உபதேசிக்கின்றது.

## ஹரி ஜனங்கள் ஆலயப் பிரவேசம்

'சாஸ்திரம் கொஞ்சமேனும் இடம் கொடுக்கவில்லை'

ஆலயப்பிரவேசத்தினால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது

அவர்களுக்கு லௌகிகமான வசதிகள் செய்து கொடுக்கவும்

திருச்சி ஸநாதனிகளின் கூட்டத்தில் முடிவு

திருச்சி ஜில்லா ஸநாதநிகளின் கூட்டம்
ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஜூன்மீ 19உ
மாலை 5-30 மணிக்குக் கூடிற்று. ஆயிரக்
கணக்கில் ஆஸ்திகர்கள் விஜயம் செய்
திருந்தார்.

ஸ்ரீமான் வித்வான் கிருஷ்ணமாசார் தலை
மைவகித்தார்.

ஜில்லாவின் பல பாகங்களிலிருந்து ஸநா
தன பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தது
குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ T. K. பாலசுப்பிரமணிய அய்யரால்
பிரேரேபிக்கப் பட்டு, ஸ்ரீ வித்வான் புத்தங்
கோட்டம் ஸ்ரீநிவாஸாச்சாரியாரால் ஆமோ
திக்கப்பட்டுக் கீழ்கண்ட தீர்மானம் ஏகமன
துடன் நிறைவேறியது.

"ஹரி ஜனங்களின் ஆலயப் பிரவேச
விஷயத்தில் சாஸ்திரம் கொஞ்சமேனும்
இடம் கொடுக்கவில்லை. சாஸ்திர திருஷ்
டியாகவோ, வ்யவஹார திருஷ்டியாக
வோ எந்தவிதத்தில் பார்த்தாலும் ஆல
யப்பிரவேசத்தால் ஹரிஜனங்களுக்கு
எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது:
ஆலயப் பிரவேசம் தவிர மற்ற லௌகி
கமான எல்லா வித வசதிகளும் அவர்
களுக்குச் செய்து கொடுக்கலாம்".

உண்மையில் ஹிந்து மதம் என்று ஓர்
மதம் இல்லை. சர்வ மதங்களின் தத்துவங்க
ளும் ஒன்று சேர்ந்த பிரம்மாண்டமான தத்
துவத்திற்கே ஹிந்து மதம் என்னும் பெயர்
வழங்கி வருகிறது அதற்கு வேதாந்த மதம்
என்றே பெயர். ஆகவே, சர்வ மதத்தைச்
சேர்ந்தவர்களும் வேதாந்த மதத்தைத் தங்
களுடைய மதமாகக் கொண்டாட
முடியும். ஆசாரங்களை விட்டுக் கொடுக்கா
மலும் தங்களுடைய மதபக்திக்கு லோபம்
ஏற்படாமலும் வேதாந்த மதத்தைத் தங்
களுடைய தாக்கிக்கொள்ளலாம்

## "கல்வியும் ஞானமும் யாவருக்கும் பொது"

கனம் ராஜாஜி பிரசங்கம்

"நமது புராதீன சாஸ்திரங்கள் நம்முடைய
ரத்தத்தில் ஊறியிருப்பதால் எளிதில் நாம்
உண்மை கடைபிடிக்க முடியும் என்றும்
கல்வி ஞானம் பெறுவதில் சுதேசி கல்வி
என்று ஒன்றும் கிடையாது என்றும், ஞா
னம் எல்லா மதத்தினருக்கும் எல்லா நாடுக
ளுக்கும் ஒன்று தான் என்றும், ஞான வள
ர்ச்சிக்காக பாடுபடவேண்டு மென்றும்"
கனம் ராஜாஜி திருச்சியில் கூறினர்.

பல் வியாதிகள் கவனிக்கும்:- T. B. சீதாராம், டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்:—

# யஜுர்வேத உபாகர்மம்.

ஸ்ரீ அஹோபில...ம் நிர்ணயம்.

ஈளது ப்ரமாதி ஸு ஸம்பவிக்கும் யஜுஷ உபாகர்மாவில் த்விதீயத்யுபா கர்மத்தை ஆடிமீ 15உயன்றும் ப்ரதம உபாகர்மத்தை ஆனிமீ 17உ யன்றும் செய்ய வேண்டும்.

இது விஷயத்துக்கு ஆதாரமாய் தசநிர்ணயம் 45வது பக்கத்தில் ஸ்ரீ வைதிக ஸார்வபௌமாரும், வர்ணாச்ரமசார காண்டத்தில் (தெலுங்கு 51 வது பக்கம்) வைத்யநாத தீக்ஷிதர்வர்களாலும் எடுக்கப்பட்டிருக்கும்வசனங்கள் முறையே எழுதப்படுகின்றன.
(வைதிக ஸார்வபௌமர்)

குருபார்கவயோர் மௌட்யே பால்யேவா வார்தகே பிவா | ததாதி மாஸ ஸம்ஸர்பமலமாஸாதிஷ-த்ரிஷு | ப்ரதமோபாக்ருதிர் கஸ்யாத் குர்யாத்யதி வினச்யதி" என்று முதல் உபாகர்மத்தை செய்யக்கூடாது மலமாஸ சுக்ராஸ்தமயாதிகளில், என்று நிரூபித்துப்பிறகு," சண்டாம்சேர் மண்டலம் ப்ராப்தளயதா சுக்ர ப்ரஹஸ்பதீ— ச்ராவணஸ்யது நித்யத்வாத் கர்தவ்யம் நித்ய கர்மவத் என்று நித்யத்வத்தை ஸ்தாபித்து "அத: ப்ரதமேதரோபாகர்மணே ந தோஷகர்த:" என்று இரண்டாவது உபாகர்மாவுக்கு ஒருவிதமான தோஷமும் கிடையாது என்று நிர்ணயித்திருப்பதால், ஆடிமீ 15உயே இரண்டாவது முதலான உபாகர்மம் அனுஷ்டிக்க வேண்டும்.

தச நிர்ணயம் 45 வது பக்கத்தில், "ஆஷாடே ச்ராவணேவாபி ப்ரோஷ்ட பத்யாமதாபி ... யாதபாக்ருதிம்" என்றும் வைத்யநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரமசார காண்டம் 51வது பக்கத்தில் (தெலுங்கு) "ப்ரோஷ்ட பத்யாமுபாகுர்யாத் ச்ராவணீ துவிதாயதி, ஆஷாடே வாபிகர்த்தவ்யம் ப்ரோஷ்ட பத்யாஸ்து தூஷணே" என்றிருப்பதால் இந்த வசனங்களுக்கு ப்ரதமோபாகர்மம் தான் விஷயம் என்று நிர்ணயித்திருப்பதாலும், ஆவணி புரட்டாசி மாதங்களில் சுக்ரமௌட்யம் இருப்பதாலும் ஆடி, மல மாஸமானதாலும் ஈளது ஆனிமீ 17உ வரும் ஆஷாட பூர்ணிமையன்றே ப்ரதமோபாகர்மம் செய்ய வேண்டும்.

இது விஷயம் இங்கு ஸ்ரீ அழகிய சிங்கர் ஸன்னிதியில் விசாரித்து நிர்ணயிக்கப்பட்டது. இது மிகவும் சாஸ்திரீயமான விஷயமான படியாலும். அப்படிக்கே தொன்று தொட்டு அனுஷ்டானங்களும் இருப்பதாலும் ஆஸ்திகர்கள் இதன் படியே அனுஷ்டிப்பார்களாக.

இதைப்பற்றி விவரமான சர்சைக்கு நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டியது.

அம். வ. நரஸிம்மாச்சாரியார்,
ஆஸ்தான் வித்வான், ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்.

---

ஸ்ரீ விச்வநாத சிரௌதிகளின் ஸமாதானம்.

ஆனி மாதத்தில் ஏற்படும் ஆஷாட பூர்ணிமை வர்ஜ்யம் என்று ஒரு நிபந்தன க்ரந்தத்தில் போட்டிருப்பதாலும், உத்தராயணத்தில் உபாகர்ம சித்திக்கப்படவில்லையென்றும், வார்ஷிகீ என்ற லக்ஷணமில்லாமையாலும் ஆனி மாதத்தில் ஆஷாடபூர்ணிமையில் உபாகர்மா என் பஞ்சாங்கத்தில் போட்டிருப்பது சரியாகாது என்று ஆர்யதர்மத்தில் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது.

'மிதுனஷாடவர்ஜம்' என்று ஏதோ ஒரு நிபந்தன க்ரந்தத்தில் இருப்பதாய்ச் சொல்லியிருப்பதைத் தவிற நமக்கு அனுஷ்டானமாயிருக்கிற வைத்யநாத தீக்ஷிதீய உபாகர்ம ப்ரகரணத்தில் ஆர்ஷமான மிதுனஷாடவர்ஜனம் காணவில்லை. சென்ற பாரபவ குரோதன வருஷங்களில் மிதுனஷாடத்தில் பேர்தாயன உபாகர்ம போடப்பட்டு அக்காலங்களில் இந்த ஆக்ஷேபனை ஒருவராலும் செய்யப்படவில்லை. மேலும் அவ்வருஷத்தில் உபாகர்ம நிர்ணயமானது திருவையாறு தர்மசாஸ்திர ஸபாக்ரஸனாதிபதிகளும், பஹுஜ்ஞர்களும், ஸாக்னிசித்ய விசுவஜித் மகாவிருத பர்யந்தானேக மஹா யாகானுஷ்டாதாக்களும், கும்பகோணம் அத்வைத ஸபா பரீக்ஷாதிகாரிகளுமான ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் ஆமோதிக்கப் பட்டதென்பதை அவ்வருஷம் என் பஞ்சாங்கப் பிரகடனத்தால் அறியலாம்.

தக்ஷிணாயனம், வார்ஷிகீ என்றவையெல்லாம் ஸாமான்யமாக ஸம்பவிப்பதைப் பற்றியதே யல்லது தோஷப்பட்ட காலங்களில் விசேஷ விதிகளைத் தடுக்காது.

வைத்யநாத தீக்ஷிதீய உபாகர்மப் பிரகரணத்தில் வஸிஷ்ட வசனம்:—

ஈஹுஸாவெ ... ... ... வா । ... ... ஊஷாதே ... ... ... ... முமுறை உபாகர்மா கொள்வது சரியே.

சாந்திரமானப்படியுள்ள விதாதிகளில் ஸௌரமான மாதத்தைக்கொண்டு தோஷம் கற்பிப்பது சரியன்று, இவ்விடங்களில் ஸௌரமாதப் பிரமேயமே கிடையாது,

டி. எஸ். விசுவநாத சிரௌதி, பி. ஏ.,
கும்பகோணம் மடத்துப்பஞ்சாங்க கர்த்தர், சென்னை.

---

ஆவணியில் செய்யலாம்.

வேதங்கற் போர் மிக குறை! ச்ராவண சண்டையிடுவோர் மிக அதிகம்! ஆனியில் செய்யலாமென ஓர் தண்டு பத்ரிகை கூறுகிறது. அத்வைத ஸபை, அல்லது பண்டித ஸபை, அல்லது ஸகல ஆசார்ய ஸபை கூடி பஞ்சாங்கங்களை சீர்திருத்தி, ஆபஸ்தம்பிகள் எந்த தோஷமிருந்தாலும் ச்ராவணியிலேயே செய்வது என்பது போன்றதை ஆராய்ச்சி செய்து ஓர் முடிவு கட்டினால் நலம்! ஆண்டாண்டு இச்சண்டையா?

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா,
சென்னை.

---

புதுக்கோட்டை பண்டிதர்களின் முடிவு.

இவ்வருஷத்திய யஜுர் உபாகர்மாவைப் பற்றி வாகூர் ப்ரும்மஸ்ரீ பாஷ்யபாவக்ஞ ஸமிருதி பூஷண வேங்கடராம சாஸ்திரிகளவர்கள் தலைமையில் விசாரம் செய்து அடியிற்கண்டபடி தீர்மானம் செய்யப்பட்டது.

சோழவர்தான் ப்ரும்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் அவர்கள் ஆர்யதர்மத்தில் ஜூன்மீ 1உ பத்திரிகையில் 'உபாகர்ம விசாரம்' என்ற தலைப்பின்கீழ் ஆச்வலாயன கிருஹ்யத்தில் முதல் முதலில் 'வார்ஷிகமித்யேததாசக்ஷதே' என்று ஆச்வலாயன ஸூத்ரத்திற்கு 'ஸர்வோபாகர்ம ஸாதாரணமான' என்று விசேஷணம் கொடுத்திருப்பது தவறு. அந்த ஸூத்ரத்திலாவது, அதன் வ்யாக்யானமான 'கார்க்ய நாராயணீ' விருத்தியிலாவது உபாகர்மாவை ஸர்வஸாதாரணமென்று சொல்லவில்லை. இத்துடன் யஜுஸ் சாகி உபாகர்மாக்களைப்பற்றி அந்த ப்ரஸக்தியில் சொல்லப்படவில்லை. ஆதலால் அந்த ஸூத்ரம் ருக்வேதிகளுக்குமட்டில்தான் அன்வயிக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. மேலும் கார்க்ய நாராயண விருத்தியில் 'வைதிகீயம் ஸம்ஜ்ஞா' 'ந பரிபாஷிகீ' என்ற வாக்கியத்தில் 'ந பாரிபாஷிகீ' பாரிபாஷிகம் இல்லை என்று இருப்பதற்கு 'இது ஒரு பரிபாஷை' என்று பத்திரிகையில் எழுதி இருப்பது பத்திரிகை படிப்பவர்களை ஏமாற்றுவதாகும்.

'புருஷார்த்த சிந்தாமணி' கல்பத்ருமம், முதலிய க்ரந்தங்களில் 'மிதுனஷாட வர்ஜம்' என்று சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார். அதனை வசனபூர்வகமாக விளக்கவில்லை. ஷெ இரண்டு க்ரந்தங்களும் வைத்யநாத தீக்ஷிதீயத்தை அனுஷ்டிக்கும் தாக்ஷிணாத்யர்களைக் கட்டுப்படுத்தவும் மாட்டாது.

ஆகையால் இவ்வருஷத்திய யஜுஸ் சாகிகள் மிதுனஷாடியான நிர்த் துஷ்ட காலமான 1—7—39-ல் தான் உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டியது.

ஜி. மலையப்ப சாஸ்திரிகள்,
புதுக்கோட்டை.

---

மருத்துவக்குடி பஞ்சாங்கத்தின் திருத்தம்.

லோகத்தில் தற்காலத்தில் "உபாகர்மா" என்கிற நித்ய... ... ... ... இலௌகிகமாக கொஞ்சம் அனுஷ்டானத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை தோஷமில்லாத காலத்தில் செய்ய வேண்டுமென்பதற்கு தோஷ யுக்தமான காலத்தில் செய்தால், இவ்விதமான கெடுதிகளேற்படுமென்றும் மதன ரத்னமென்னும் க்ரந்தத்திலும் ஹேமாத்ரி, கார்க்யாதிகளாலும் சொல்லப் பட்டிருக்கிறதனாலும், இவ்வருஷத்தில் முக்ய காலமான சிராவணத்திற்கு, சுக்ரமௌட்யத்தால் தோஷமேற்பட்டு, இரண்டாவது காலமாகிற ஆஷாடத்தில் தோஷமில்லாமல், வியாஸ பகவான் சொல்லியிருக்கிறபடி இருப்பதால் ஆஷாட பௌர்ணமியில் அதாவது ப்ரமாதி ஸு ஆனிமீ 17உ சனிக்கிழமையன்று செய்ய வேண்டுமென்பது வித்வான்களுடையவும தர்ம சாஸ்திரங்களுடையவும் ஸம்மதமிருப்பதால் எனது பஞ்சாங்கத்தில் சிராவணத்தில் போட்டிருந்தாலும், ஆஷாட சுத்த பௌர்ணமியிலேயே அனுஷ்டித்து க்ருதார்த்தராகக் கேட்டுக்கொள்ளுகிறேன். G.S. குருமூர்த்தி அய்யர் மருத்துவக்குடி, பஞ்சாங்க கணிதர்.

---

உத்தராயணத்தில் உபாகர்மமா?

ஈளது ப்ரமாதி ஸு பஞ்சாங்கங்களில் திருக்கணித பஞ்சாங்கத்தில் ஆனிமீ யஜுருபாகர்மா பண்ணவேணுமாய் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் பஞ்சாங்கத்தில் சிராவணம் அதிமாஸமாகையாலும், நிஜச்ராவணீ ப்ரௌஷ்டபதி இவ்விரண்டுக்கும் சுக்ராஸ்தமனமிருப்பதால் ஆனிமீ யஜுர் உபாகர்ம போட்டதற்கு காரணமாயும் எழுதி இருக்கிறார்கள். மற்ற 28 பஞ்சாங்கத்திலும் மருத்துவக்குடி குருமூர்த்தி அய்யர் போட்டிருக்கிற பஞ்சாங்கத்திலும் ஆவணிமீ யஜுருபாகர்மா செய்ய வேணுமாயும் போட்டு இருக்கிறார்கள். அதன் பிறகு சிலகாள் மூர்த்தி மருத்

(தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க)



ஸ்ரீகாமாக்ஷ்யை நம:.

# மூகபஞ்சசதீ.

## மந்தஸ்மிதசதகம்.

65 முக்தாநாம் பரிமோசனம் விதததः தத்ப்ரீதி நிஷ்பாதினீ—பூயோ தூரத ஏவ தூதமநஸஸ்தத் பாலனம் தந்வதி |
உத்பூதஸ்ய ஜலாந்தரா தவிரதம் தத்தூரதாம் ஜக்முஷீ—காமாக்ஷி! ஸ்மிதமஞ்ஜரீ தவகதம் கம்போ: துலாமச்னுதே||

காமாக்ஷி! காமாக்ஷியே. முக்தானாம்-முத்துக்களுக்கு (முக்தர்களுக்கு) பரிமோசனம்- விடுதலையை. விததீ-செய்கிறதாயும். தூதமநஸ:—மனதில்லாதவர்களுக்கு-பூயோ: தூரத ஏவ-மிகவும் தூரத்திலிருப்பதாயும், ஜலாந்தாத்- ஜலத்தின் (ஜட) மத்தியிலிருந்து உத்பூதஸ்ய- உண்டானதாயுமிருக்கிற. கம்போ:— சங்குக்கு தத்ப்ரீதி நிஷ்பாதினி அந்த முக்தர்களுக்கு ப்ரீதியை கொடுப்பதும், தத் பாலனம்- தந்வதீ- அந்த மனதற்றவர்களை (மனதை அடக்கினவர்களை) ரக்ஷணம் செய்வதாயும், அவிரதம்- எப்போதும். தத்தூரதாம் ஜக்முஷீ- அந்த ஜடர்களுக்கு வெகு தூரத்தில் நிற்பதாயுமுள்ள, தவஸ்மித மஞ்ஜரீ- உனது புன்சிரிப்புக்கொத்தானது. துலாம்- ஸாம்யத்தை கதம் எப்படி. அச்னுதே- அடையும்?

66 ஸ்ரீ காமாக்ஷி தவஸ்மிதத்யுதி ஜரீவைதக்த்ய லீலாயிதம் பச்யந்தோऽபி நிரந்தரம்- ஸுவிமலம் மாவ்யா ஜகன்மண்டலே |
லோகம் ஹாஸயிதும் கிமர்த்தமநிசம் ப்ராகாச்யமாதந்வதே மந்தாக்ஷம் விரஹய்ய வஸ்துவிபவோ மந்தார சந்த்ராதய:||

ஸ்ரீகாமாக்ஷி! காமாக்ஷியே, ஸுவிமலம்- மிக பரிசுத்தமான, தவ- உன்னுடைய, ஸ்மிதத்யுதிஜரீவைதக்த்யலீலாயிதம்- உனது புன்சிரிப்புக்காந்தியின் விலாஸத்தை, நிரந்தரம்- எப்போதும், பச்யந்தோऽபி- பார்க்கிறவர்களாயிருந்தும், ஜகன்மண்டலே- பூலோகத்தில், மான்யா:- கௌரவப்பட்டவைகளும், வஸ்து விபவ:- உயர்ந்தவஸ்துக்களாயுமிருக்கிற, மந்தாரசந்த்ராதய:- மந்தாரம் சந்திரன் முதலியவைகள், லோகம்- உலகத்தை, ஹாஸயிதும்- ஸந்தோஷப்படுத்துவதற்கென்று,கிமர்த்தம்- எதற்காக, மந்தாக்ஷம் விரஹய்ய- வெட்கத்தைவிட்டு, அநிசம்- எப்போதும், ப்ராகாச்யம் ஆதந்வதே- வெளியில் கிளம்புகிறார்கள்?

67 க்ஷீராப்தோऽபி சைலராஜ தநயே! த்வந்மந்த ஹாஸஸ்யச |
ஸ்ரீ காமாக்ஷி! வலக்ஷிமோதயநிதே: கிஞ்சித் பிதாம் ப்ரூமஹே |
ஏகஸ்மை புருஷாய தேவி! ஸ ததௌ லக்ஷ்மீம் கதாசித் புரா |
ஸர்வேப்யோऽபி ததாத்யஸௌ து ஸததம் லக்ஷ்மீம்ச வாகீச்வரீம்||

சைலராஜதநயே! பர்வதராஜ குமாரியானதேவி! காமாக்ஷி! தேவியான காமாக்ஷியே. வலக்ஷிமோ தயநிதே:— வெளுப்புக்கு இருப்பிடமான. க்ஷீராப்தோऽபி - பால் கடலுக்கும், த்வன் மந்தஹாஸஸ்யச - உன் புன்சிரிப்புக்கு முள்ள பிதாம் - பேதத்தை. கிஞ்சித் - கொஞ்சம். ப்ரூமஹே - சொல்லுகிறோம். ஸ:—அந்தப் பாற்கடலானது. புரா - முன்பு, கதாசித் - ஒருசமயம். ஏகஸ்மை புருஷாய - ஒருபுருஷனுக்கு. லக்ஷ்மீம் ததௌ - லக்ஷ்மீயைக் கொடுத்தது. அஸௌது - இந்தப் புன்சிரிப்போ வென்றால்- ஸததம் - எப்பொழுதும். ஸர்வேப்யோऽபி - எல்லோருக்கும். லக்ஷ்மீம்ச— ஐச்வர்யத்தையும், வாகீச்வரீம்- ஸரஸ்வதியையும் (வித்யையும்) ததாதி- கொடுக்கிறது.

68 ஸ்ரீகாஞ்சீபுர ரத்ந தீபகலிகே! தான்யேவ விச்வாந்தரே |
சாகோராணி சராசரேச்வரி!பரம் தன்யாநி மன்யாமஹே |
கம்பாதீர குடும்ப சங்க்ருதிகலாசஞ்சுனி காமாக்ஷி! தே நித்யம் யாநிம்ருதுஸ்மிதேந்து மஹஸாம் ஸ்வாதமாதந்வதே||

ஸ்ரீகாஞ்சீபுரரத்நதீபகலிகே! காஞ்சிபட்டணத்தில் ரத்நதீபக் கொடியும், சராசரேச்வரி! ஸ்தாவரஜங்கமமயமான ஜகத்திற்கு ஈச்வரியுமான, ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, யானி- எந்த சகோரபக்ஷிக் கூட்டங்கள், கம்பாதீரகுடும்பசங்க்ருதிகலாசஞ்சுனி - கம்பைக் கரையில் குடியிருப்பதில் ஸமர்த்தங்களாய், தே- உனது, ம்ருதுஸ்மிதேந்துமஹஸாம்- மிருதுவான புன்சிரிப்பாகிற சந்திர கிரணங்களை, ஆஸ்வாதமாதந்வதே - பருகுகிக்கொண்டிருக்கின்றனவோ, தான்யேவ - அந்த, சாகோராணி - சகோரபக்ஷிக்கூட்டங்களே விச்வாந்தரே - இந்த உலகில், பரம் தன்யாநி - மிகவும் அதிர்ஷ்டமுள்ளவைகளென்று, மன்யாமஹே - நினைக்கிறோம்.

69 சைத்ப்ரக்ரமமாச்ரிதோऽபி நமதாம் ஜாட்யப்ரதாம் தூனயந் |
ராகவ்யஞ்ஜந பேசலோऽபி கிரிஜே! வைமல்யமுல்லாஸயன் |
லீலாலாபபுரஸ்ஸரோऽபி ஸததம் வாசம்யமான் ப்ரீணயன் காமாக்ஷி! ஸ்மிதரோசிஷாம் தவஸமுல்லாஸ: கதம் வர்ண்யதே||

கிரிஜே! பர்வத புத்திரியான, காமாக்ஷி! காமாக்ஷியே, சைத்யப்ரக்ரமமாச்ரிதோऽபி - மிகுந்த குளிர்ச்சியை அடைந்ததாயிருப்பினும், ஜாட்யப்ரதாம் - ஜாட்யத்தின் சேஷ்டையை, தூனயன் - நிவர்த்தி செய்கிறதாயும், ராகவ்யஞ்ஜன பேசலோऽபி - அநுராகமென்கிற சிவப்பு நிறக்கலப்பினால் மனோஹரமாயிருப்பினும், வைமல்யமுல்லாஸயன் - வெளுப்பு நிறத்தை (பரிசுத்தியை) உண்டாக்குகிறதாயும், லீலாலாபபுரஸ்ஸரோऽபி - விளையாட்டுப் பேச்சுடன் கூடியிருந்தபோதிலும், ஸததம் - எப்போதும், வாசம்யமான் - மௌனிகளை, ப்ரீணயன் - ஸந்தோஷப்படுத்துகிறதாயுமிருக்கிற, தவ - உன்னுடைய, ஸ்மிதரோசிஷாம் - புன்சிரிப்பின் காந்தியினுடைய, ஸமுல்லாஸ: - விலாஸமானது, கதம் - எப்படி, வர்ண்யதே - வர்ணிக்கப்படும்.

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்ய தர்மம்

பிரமாதி-ஞு ஆனி-மீ 8உ

## காங்கிரஸ் ஆட்சியில் கசப்பு.

இந்தியாவில் மாகாண ஸ்வய ஆட்சியானது மிகுந்த அபசகுனத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் விபரீத பலனானது நாளுக்கு நாள் நன்கு வெளியாகி வருகிறது. மாகாண ஸ்வய ஆட்சி ஏற்பட்ட நாள் முதல் என்றுமில்லாதபடி தேசத்தில் கசப்பும், அமைதியின்மையும், வகுப்புத் த்வேஷமும் வெகு தீவிரமாகப் பரவி நிற்பதை ஒருவரும் மறைக்கமுடியாது. காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி நடத்தும் மாகாணங்களில் பிரஜைகளின் உரிமைகள் பறிக்கப்படுவதாகப் பெரிய புகார் ஏற்பட்டிருப்பதை அறியாதாரில்லை. காங்கிரஸின் எதிரியான ராஜீய ஸ்தாபனங்களான முஸ்லீம் லீக், ஹிந்து மஹாஸபை. ஜஸ்டிஸ் கக்ஷி, ஆகியவைகள் காங்கிரஸால் தங்கள் ஸமூஹத்தின் ஸமூஹ ராஜீய பாத்யங்களுக்குப் பெருத்த பாதகமேற்பட்டு விட்டதாக பிரசாரம் செய்து வருகின்றன.

வட இந்தியாவில் முஸ்லீம்கள் பெரிய கிளர்ச்சி நடத்தி வருவது ஒரு புறமிருக்க, ஹிந்து ஸமூஹத்தினர் ஹிந்து மஹாஸபையின் ஆதரவில் காங்கிரஸ் மந்திரி ஸபைகளின் செய்கைகளைப் பலமாகக் கண்டித்து வருகிறார்கள். முஸ்லீம்களிடம் தாக்ஷிண்யத்தாலும், பயத்தாலும், ஹிந்துக்களின் நியாயமான உரிமைகளில் கூட காங்கிரஸ் மந்திரிகள் அலக்ஷ்யம் காட்டுவதாகக் கண்டிக்கப்படுகிறது. மத்ய மாகாணம், ஐக்யமாகாண மிரண்டிலும் வகுப்புச் சண்டை எல்லை மீறி ஏற்பட்டு அதனால் ஹிந்து ஸமூஹம் அடைந்துள்ள கஷ்டங்களையும், அவைகளுக்குப் பரிஹாரம் தேட மந்திரிகள் முன் வராததையும் ஹிந்து மஹாஸபை வெளியிட்டு வருகிறது. 18உயன்று மொரடாபாத்தில் நடைபெற்ற ஹிந்து மஹாஸபைக்கூட்டத்தில், "ஹிந்துக்களுக்குக் காங்கிரஸிடமும், காங்கிரஸ் மந்திரி ஸபையிடமும் நம்பிக்கை போய்விட்டதாகத்" தீர்மானிக்கப் பட்டிருப்பதை நேயர்கள் இச்சமயம் கவனிக்கவேண்டும்.

தென்னிந்தியாவைப் பற்றியவரையிலும் காங்கிரஸ் மந்திரி ஆட்சியில் பற்பல வகுப்பினருக்கும் அதிருப்தி அதிகரித்துவருவது பிரத்யக்ஷமானது. 18உ யன்று ராயபுரத்தில்நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் கனம் ராஜகோபாலாசாரியாரே இதைத் தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறார். உத்யோகச் சண்டையும், ஜாதித்வேஷமும், எப்போதுமில்லாதபடி இச்சமயம் அதிகரித்திருப்பதாக அவர் கூறுகிறார். ஜாதித்வேஷமென்ற பிசாசத்தை விட்டவேண்டியது அவச்யமென்கிறார். காங்கிரஸ் மந்திரிஸபை ஏற்பட்டபிறகு எந்தக் காரணத்தினாலோ, வகுப்புத்வேஷமும், வகுப்புணர்ச்சியும் வெகுவாக அதிகரித்து, ஒரு வகுப்பார் மிகுந்த கிமத்திற்குள்ளாகி வருவதை கனம் மந்திரி அறியாமலில்லை. ஜாதியையும், ஜாதி தர்மங்களையும் அடியோடு உதறித்தள்ளிவிட்ட நிலைமையில் கூட கனம் ஸி. ஆர். பிறப்பு ஜாதி காரணமாகத் தூற்றப்படுவாராயின் மற்றவர்களின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதைச்சொல்லவேண்டியதில்லை

ஆயினும் கனம் ஆசாரியார் வகுப்புவாதிகள் மட்டுமே தம்மை எதிர்ப்பதாகக் கூறியிருப்பதை ஏற்கமுடியாது, கனம் மந்திரியின் பிடிவாதம் காரணமாக அநேகமாக எல்லாப்பிரிவினரும் இவருடைய நிர்வாகத்தில் அதிருப்திகொண்டிருப்பதை மறைப்பதில் பிரயோஜனமில்லை- காங்கிரஸை உத்ஸாகத்துடன் ஆதரித்த மிராசுதார்கள், வியாபாரிகள், பணக்காரர்கள், தார்மிகர்கள் ஆகிய எல்லா வகுப்பினரும் தற்சமயம் புதிய சட்டங்களாலும், வரிகளாலும், வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்டு அதிருப்தியுற்றிருக்கிறார்கள், இதற்குக்காரணம், கனம் மந்திரி பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து நடக்கும் முறையை அலக்ஷ்யம் செய்துவருவதேயாகும்.

மேலும், காங்கிரஸ்வாதிகளால் அநுஷ்டித்து வந்த பிரசாரமுறைகளே இப்போது காங்கிரஸ் மந்திரிகளைத் திருப்பித்தாக்க வழிகாட்டிகளாகிவிட்டதை கனம் ராஜாஜி மறக்கக்கூடாது. ஏழைகளைப் பணக்காரர்மீதும், குடியானவர்களை எஜமானன்மீதும், அதார்மிகர்களை தார்மிகர்மீதும் ஸ்திரீகளைப் புருஷர்கள்மீதும், தாழ்ந்தோரை உயர்ந்தவர்கள் மீதுமாக, உரிமையென்று பொய் வியாஜம் கொண்டு தூண்டிவிட்டு தேசத்தில் பெரிய அவ்யவஸ்தையைக் கிளப்பி விட்டவர்கள் காங்கிரஸ்காரரல்லவோ? அதன்விபரீத பலனை அவர்களே இப்போது அநுபவிக்க நேர்ந்திருப்பதில் அதிசயமென்ன?

இப்போது மதுரையில் மந்திரிகளின் அநுக்ரஹத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஆலயப்ரவேச பிரசாரத்தின் கருத்தென்ன? ஜாதியையும், ஜாதி தர்மத்தையும் நாசிக்க வழிகாட்டுவதுடன், ஒருஜாதியார் மீது மற்றொரு ஜாதியாருக்கு அதிருப்தி அதிகரிக்கச் செய்யும் கார்யமல்லவா அது?

"ஸநாதன தர்மம் ஹரிஜனங்களைப் பாதிக்கிறது, இதனால் ஹரிஜனங்கள் கோபமடைந்திருப்பது ஸரியேயாகும்"

என்று கனம் ராஜகோபாலாசாரியார் பேசியிருப்பது ஸநாதனிகளிடம் நீண்டாதாருக்கு அதிக வெறுப்பை உண்டாக்கக் கூடியதல்லவா? பொறுப்புள்ள பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் இம் மாதிரி பேசி வழிகாட்டினால் பாமரர்கள் வகுப்புத்வேஷத்தில் ருசிகொள்வது வெகு எளிதாகிவிடாதா? இம்மாதிரிக் கார்யத்தைச் செய்துகொண்டே காங்கிரஸ் பிரசாரம் நடக்கையில், தம்மிடத்திலும் தமது ஸர்க்காரிடமும் அதிருப்தி அதிகரித்து வருவதாக அவர் குறை சொல்லி வருத்தப்படநியாயமுண்டா?

ஆதலால் கனம் மந்திரி எந்த ஸமூஹ, ராஜீய, மத விஷயத்திலும் புரட்சிகரமான மனப்போக்கைக் காட்டாமல் பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து நடந்து, தமக்கு நண்பர்களை அதிகரித்துக்கொள்ள முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## குறிப்புகள்

### வகுப்புத்வேஷிகளுக்கு விடுதலையா?

சென்னை அரசாங்கத்தினர் "இந்தி ஒழிப்பு" இயக்கத்தின் தலைவரையும் அதன் கூட்டத்தார்களையும் விடுதலை செய்திருக்கிறார்கள்.

இந்த விடுதலையின் மூலம் அரசாங்கத்தின் ஹிந்திப் போதனைப்பற்றிய கொள்கையில் சிறிது மாறுதலேற்பட்டிருப்பதாக ஒருசிலர் கூறுவர். உண்மையில் அரசாங்கத்தின் ஹிந்திப்போதனை கொள்கையில் சிறிதளவேனும் மாறுதல் ஏற்படவில்லை. மாறக்கூடாது என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இந்தி ஒழிப்பு இயக்கம் இறந்துவிட்டது. இறந்த பின் எதற்காக சிறையில் தொண்டர்களை அடைத்துவைப்பது? என்ற நோக்கத்துடன் தான் ஸ்ரீ ராஜாஜி இந்த இந்தி ஒழிப்புக்காரர்களையெல்லாம் விடுதலை செய்திருக்கிறார். சர்க்காரின் பெருந்தன்மையை இந்தத் தியாகிகள் பாராட்டவேண்டியிருக்க, அவர்கள் இயக்கத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகச் சிலவிடங்களில் பேசி வருகிறார்கள். சர்க்காரைத் தூஷித்தும் வருகிறார்கள். அவர்களுடைய பிரசாரப் பத்திரிகைகள் இன்னும் வசை புராணம் பாடுவதை நிறுத்தவில்லை.

இம் மாதிரி நிலையில், ராஜாஜி அந்த வீரர்களைவிட்டு வைத்திருந்தால் நிலைமை மோசமாகிவிடுமென்று எச்சரிக்கை செய்யவிருப்புகிறோம். கனம் ராஜகோபாலாசாரியார் சகிப்புத் தன்மை காட்டிவருவதாகச் சிலர் கூறுவர்.

இம்மாதிரி வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பி விடுகிறவர்களிடம் சகிப்புத்தன்மை காட்டுவதால் எவ்வித பிரயோஜனமுமில்லை.

சமீபத்தில் சிம்லாவில் உள்நாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெற்றது. அதில், "அகில இந்தியாவிலுள்ள வகுப்புவாதப் பத்திரிகைகளை அதிக கண்டிப்பான முறையில் அடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், எல்லா மாகாண அரசாங்கங்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு மிக்க முறையைக் கையாளவேண்டுமென்றும்," ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனை ஒட்டி பஞ்சாபிலும், வங்காளத்திலும் வகுப்புத் துவேஷப் பத்திரிகைகளை அங்குள்ள முஸ்லீம்லீக் மந்திரிகள் அடக்கி வருவது பாராட்டத்தக்கது. பம்பாயிலும், ஐக்ய மாகாணத்திலும் வகுப்புத்துவேஷப் பத்திரிகைகளை ஒடுக்கவேண்டி ஜாமீன் கேட்கப்படுகிறது. ஆனால், சென்னை மாகாணத்தில் வகுப்புத்துவேஷப்பத்திரிகைகளுக்குப் பூர்ண சுதந்திரமும், அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இந்த வகுப்புத்துவேஷப்பத்திரிகைகள் மேயாக்கியத்தையற்ற முறையில் தலையங்கமும் குறிப்புகளும் எழுதிவருகின்றன. இந்தப் பத்திரிகைகள் சென்னை மாகாணத்தில ஒரு வகுப்பினரை மட்டும் தாக்கி எழுதி வருகின்றன. இந்தப் பத்திரிகைகள் முகமதியர்களையும் கிருஸ்துவர்களையும் தூஷித்து எழுதுவதில்லை. அந்தணர்களைமட்டும் அலட்சியமாகவும், அவமரியாதையாகவும் தூஷித்து பொய் மூட்டைகளைச் சித்தரிக்கின்றன. ஸ்ரீராஜாஜி இதைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார். முஸ்லீமைத்தாக்கி எழுதிவிட்டால் ஸ்ரீராஜாஜி சகிப்புத்தன்மை காட்டுவாரா? முகமதியர்களையும் கிருஸ்துவர்களையும் தூஷிக்கக்கூடாதென்று சர்க்கார் அபிப்பிராயப்பட்டால் பிராமண வகுப்பினரைமட்டும் தூஷிப்பதை ஏன் அனுமதிக்கிறார்கள்? எனவே, தமிழ் நாட்டிலிருக்கும் பிராமணர்கள் யாவரும் ஒருங்குசேர்ந்து இம்மாதிரி முறையைக்கண்டிக்க முன்வரவேண்டும். ஆங்காங்கு கண்டனக் கூட்டங்கள் கூட்டி வகுப்புத்துவேஷப் பத்திரிகைகளை ஒழிக்கும்படி பிரசாரம் செய்யும்படி அவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிராமணர்களைத் தூஷிப்பதற்காக இந்தி இயக்கம் ஏற்பட்டது. இந்த இயக்கத்தின் தலைவர்கள் இந்த இயக்க மூலமாக பிராமண வகுப்பையே ஒழித்துவிட வேண்டுமென்று விரும்பினார்கள். கடைசியில் இயக்கமே இறந்துபோய் மண்ணோடு மண்ணாய் விட்டது. இருபது ஆண்டுகளாய் ஜஸ்டிஸ் கட்சி அந்தணர்களுக்குப் பலவந்தத்தில் அநீதி செய்து வந்ததை நேயர்கள் நன்கறிவார்கள். முடிவில் அந்த ஜஸ்டிஸ் கக்ஷி இருக்கும் இடமே தெரியவில்லை.

இந்தி ஒழிப்பு இயக்கத்துக்குப் பாடுபடும் ஒருதருதலைப்பத்திரிகை, 1001 தமிழர்கள் சிறைசென்றனர். தமிழா! நீ என்னசெய்யப்போகிறாய்"! என்று ஓலமிடுகிறது. அதற்குத் தமிழர்கள் சரியான பதில் கூறிவிட்டார்கள். எப்படியெனில், "இந்தி ஒழிப்பு இயக்கம் உண்மையாக இந்தியை ஒழிக்க வேண்டுமென்று ஏற்படவில்லை. அது ஒரு வகுப்புத் துவேஷ இயக்கம். இதனை தமிழர் வெறுத்தார்கள். சிறைச்சாலைக்குச் சென்றவர்கள் மீண்டும் சிறைக்கல்லவோ செல்லவேண்டும். ஆனால் அவர்கள் சிறைபோக விரும்பவில்லை. இந்த இயக்கத்தினால் ச. ம. தலைவர்களுக்கு இரண்டு லக்ஷருபாய் செலவாயிற்று. சரீரசிரமம், அவமானம், எல்லாம் சேர்த்துக் கடைசியில் இயக்கமே இல்லாமல் போகும்படி நேரிட்டது. சர்க்காரும் சிறையிலிருந்து யாவரையும் விடுதலை செய்துவிட்டார்கள்.

இந்தி ஒழிப்பு இயக்கத்தில் கலந்து சிறை சென்ற வீரர்கள், தாய்மார்கள் இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை விபரமாக அறிய விரும்புகிறோம். உண்மையில் சிறையில் 1001 பேர்கள் இருந்தார்களா? என்ற சந்தேகத்தைக் கிளப்பி விடுகிறோம். தமிழ் நாட்டின் பல கிராமங்களில் வசித்துவந்த கிருபாநிதிகளான மாணவர்களை ஏமாற்றி அவர்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம், உங்கள் குடும்பத்துக்கு உபகாரச் சம்பளம் அளிக்கிறோம். ரயில் சார்ஜ் தருகிறோம். என்று வஞ்சகமாகக் கூறி இயக்கத்தை நடத்தி வந்தார்கள். இம்மாதிரி எத்தனை நாள் நடக்கும். இதில் ஒரு விசித்திரம். இயக்கத்துக்கு பிராமணர்கள் தயவை விரும்பினார் ஒரு பெரியார். பிராமணர்களை தூஷித்து விட்டு பிராமணர்களை அழைக்கும் அரிய காட்சியை இந்த இயக்கத்தில் தான் கண்டோம். ஊர்வலமாகச் சுற்றி கடைசியில் கஞ்சிமா நகரில் ஒரு வைஷ்ணவபிராமணரை, இவர் பிராமணரா என்பது எமது சந்தேகம், கண்டுபிடித்து அவருக்கு ஏராளமாய் பொருளுதவி செய்து பிரசாரம் செய்துபார்த்தார்கள். இந்த அபூர்வ ஆசாமியின் வலையில் ஒரு பிராமணராவது சிக்கவில்லை, இம்மாதிரியெல்லாம் தலைவர்கள் இயக்கத்துக்கு ஆதரவு தேடினார்கள். கடைசியில் இயக்கம் இருந்த இடமே தெரியவில்லை. இம்மாதிரி தமிழ்நாட்டில் ஒரு இயக்கம் ஏற்பட்டு இறந்துபோனதைப்பற்றித் தமிழ்நாட்டு சரிதையில் சரித்திரக்காரர்கள் பொன்னெழுத்துக்களில் பொறிப்பார்களென்பதில் ஐயமுண்டா! [எல். என். மணி]

### வங்காள ஹிந்துக்களுக்கு அநீதி!

காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாகம் சில மாகாணங்களில் ஏற்பட்ட பிறகு ஹிந்துக்களின் நிலைமையில் விசேஷ கஷ்டமேற்பட்டிருக்கிறது. முஸ்லீம்கள் ஹிந்து மந்திரிகளிடம், அஸெம்பிளியை கொண்டு விபரீதக்கிளர்ச்சியில் இறங்கியிருப்பதும், இதற்கு காங்கிரஸ் வாதிகள் பதில் செய்யாமல் பயந்து பதுங்கி வருவதும் ஓர் காரணமாகும். ஏற்கனவே வகுப்புத்தீர்ப்பு முறையால் பாதிக்கப்பட்டிருக்கிற வங்காள ஹிந்துக்களுக்கு ஹக் மந்திரி ஸபை தன்னாலான உபத்திரவத்தை அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. வங்காளத்தில் வகுப்பு வாரியாக உத்யோகங்களைப்பங்கிட்டு கொடுக்க ஹக் மந்திரி ஸபை ஓர் திட்டம் போட்டிருக்கிறது. இது வங்கஹிந்துக்களுக்கன்றி இந்தியா முழுவதுமுள்ள ஹிந்துக்களுக்கே பழி வாங்கும் தோரணையில் அநீதி செய்வதாயிருக்கிறது. நூற்றுக்கு 50 வீதமுள்ள உத்யோகங்கள் மஹம்மதியர்களுக்கு கொடுக்கப்படுமாம். ஷெடியூல் வகுப்பினரெனச் சொல்லப்படும் தாழ்ந்த வகுப்பாருக்கு 20 வீதம் கொடுக்கப்படும். பாக்கியுள்ள 20 வீதத்தில் தான் ஹிந்துக்களுக்கு வீதாசாரம் கிடைக்கும். அதுவும் எப்படி? இந்த 20 வீதத்தில் தான் ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர் முதலியவர்களுக்கும் பாகம் கிடைக்கவேண்டும். இவ்வளவுக்குப் பிறகு ஹிந்துக்களுக்கு கிடைக்கக்கூடிய விதம் எவ்வளவென்பது விளங்கவில்லையா?

இம்மாதிரி ஹிந்துக்களை விரட்டியடிக்கும் யோஜனையை வங்க ஹிந்துக்கள் எதிர்த்து வருகிறார்கள். ஆயினும் இங்கு கிளர்ச்சியானது தக்க முறையில் அபிவிருத்தியடையவில்லை, இத்துடன் கல்கத்தா கார்ப்பரேஷனிலும் ஹிந்துக்களுடைய ஸங்க்யைக் குறைக்க ஹக் மந்திரி ஸபை சூழ்ச்சி செய்து வருகிறது.

இந்த ஸந்தர்ப்பத்தில் காங்கிரஸ் தனது கடமையைச்செய்ய முன் வந்ததா? காந்திஜி உள் பட காங்கிரஸ் தலைவர்கள் மௌனம் ஸாதித்து வருகிறார்கள். முஸ்லீம்களைத்திருப்தி செய்து வைத்து, ஹிந்துக்களின் உரிமைகளை விட்டுக்கொடுப்பதிலேயே நோக்கமுள்ள காங்கிரஸ் வாதிகள் வங்காள விஷயத்தில் வாய் திறவாமல் இருப்பது அதிசயமில்லை.

"காங்கிரஸ் ஆட்சியின் கீழ் ஹிந்துக்களுக்குப்பல துறைகளில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிற", தென்று ஸ்ரீமான் ஸவர்க்கார் போன்ற ஹிந்து மகாஸபைத்தலைவர்கள் குற்றம் கூறுவதில் பிசகென்ன?

இச்சமயத்தில் வங்காளத்தலைவரான ஸ்ரீமான் போஸ் தமது மாகாணத்தியவர்களின் உரிமைக்குப்பாதகம் ஏற்படுவதைத் தடுக்க முற்பட வேண்டாமா?

### மகாத்மா காந்திமீது மானநஷ்ட வழக்கு.

பண்டித கோபிலால் சர்மா என்பவர் "மஹாத்மா காந்திமீதும், டெல்லியில் பிரசுரமாகும் ஆங்கில தினசரியான ஹிந்துஸ்தான் டைம்ஸ்மீதும்", மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

### ஹைதராபாத் சத்யாக்ரஹம்

லாகூரில் ஸ்ரீமான் தாராசிங் தலைமையில் மேமீ 27உ கூடிய ஒரு மாபெருங் கூட்டத்தில் ரூ 18 ஆயிரம் ரூபாய் அடங்கிய பண முடிப்பு ஹைதராபாத் சத்யாக்ரஹ நிதிக்கு அளிக்கப்பட்டது. ஸ்ரீமஹாசே கிருஷ்ணா என்பவர் சத்யாக்ரஹத்துக்காக ரூ50 ஆயிரம் வசூலிக்க உறுதி கொண்டிருந்தார். ஆனால் ரூ75 ஆயிரத்துக்கு மேல் வசூலாகிவிட்டது. இந்தியா வெங்கும் ஆயிரக்கணக்கான ஹிந்து தொண்டர்கள் இந்தப்போராட்டத்தில் கலந்து கொள்ள முன் வருவதாக தீர்மானித்திருக்கிறார்கள். "மத பூர்வமான சுதந்திரங்களைப் பெறுவதற்காகவே இந்தப் போராட்டம் நடத்தப் படுகிற தென்றும், ஆர்ய சமாஜிகளின் சாமானிய உரிமைகளாவது கிடைக்கும் வரையில் போராட்டம் நடந்தே தீருமென்று"

### மே. த. ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் விஜய ஸ்ரீ முகபடனம்.

ஸ்ரீ ஆசார்யாள் காஞ்சி க்ஷேத்திரத்தில் ஏற்படுத்தியிருக்கும் காமகோடி பீடத்தில், பிரகிருதம் அபிஷிக்தாளாய் இருக்கும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்கள் காளயுக்தி வருஷம் தைமீ 21உல் கும்பகோணம் ஸ்ரீ மடத்தை விட்டு யாத்திரையாய் புறப்பட்டு ஸேதுவில் துந்துபி வருஷம் புரட்டாசிமீ 20உ கங்கா யாத்திரைக்காக ஸைகதம் எடுத்து, ஸ்ரீ ஜம்புகேச்வர க்ஷேத்திரத்தில் ருத்ரோத்காரிஞு சித்திரைமீ 16உயில் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பாளுக்கு தாடங்கப்ரதிஷ்டா மஹோத்ஸவத்தையும், ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்ரத்தில் பிரஜாபதி வருஷம் சித்திரைமீ 17உயில் ஸ்ரீ தபஸ் காமாக்ஷி அஷ்டபந்தன ஸம்ப்ரோக்ஷணத்தையும் செய்து கொண்டு யாத்ராக்ரமமாய் பாவ வருஷம் ஆடி மீ 10உயில் கங்கையில் ஸைகதத்தை அர்ப்பணம் செய்துவிட்டு, அங்கிருந்து ஸ்ரீ கங்கா தீர்த்தத்தை ப்ரமாதி-ஞு வைகாசி-மீ 26உயில் ஸ்ரீராமநாதஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து விட்டு கும்பகோணத்திற்கு ஜூன்-மீ 28உ சாதுர்மாஸ்யப் பிரயுக்தமாய் விஜயம் செய்வதாக நிச்சயித்து நமது நகரத்திலுள்ள பக்தகோடிகளுக்கு ஸ்ரீமுகம் அனுப்பியிருப்பதை பிரமாதி-ஞு ஆனி-மீ 8உ (1939-ஞு ஜூன் மீ 22உ) வியாழக்கிழமை மாலை 5- மணிக்கு பகவத்படித்துறையிலிருந்து ஊர்வலமாக ஷை ஸ்ரீ முகத்தை ஸ்ரீ ஆதிகும்பேச்வரஸ்வாமி ஸந்நிதானத்திற்கு எடுத்துச்சென்று ஷை ஸந்நிதானத்தில் படனம் செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், ஆஸ்திக மஹாஜனங்கள் யாவரும் வந்திருந்து ஸ்ரீமுக ச்ரவணம் செய்து ஸ்ரீமத் ஆசார்யாளின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும் வண்ணம் பிரார்த்திக்கின்றனம்.

### அரண்மனை அழிந்தது

ஜூன்மீ 20உ காசியிலுள்ள விஜய நகரம் அரண்மனையில் தீவிபத்து ஏற்பட்டது, ரூ,50 ஆயிரம் பொய் சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது,

### மற்றொருசட்டம்!

புதிய தொழிலாளர் சட்டம் ஒன்று சென்னை சர்க்காரால் இயற்றப்படும். தொழில் அமைதியை நிறுவி தொழிலாளர் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு ஒரு மசோதா தயாரிக்கப்படுமென்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

### கஷ்டங்களை கவனிக்க!

இலங்கையில் இந்தியத் துவேஷம் அதிகரித்து வருகிறது. எல்லா இலாக்காக்களிலிருந்தும்; கம்பெனிகளிலிருந்தும் இந்தியர் நீக்கப்படுகின்றனர். பதினைந்து இருபதுவருஷகாலமாய் வேலை செய்தவர்களை கூட தள்ளிவிடுகிறார்கள். கொழும்பு புகையிலை தொழிற்சாலையிலிருந்து பல இந்தியர்கள் முன்னறிக்கையின்றி விரட்டப் பட்டார்கள். இவர்கள் ராஜாஜியுக்கும், கனம்ஸர் சி. பி. ராமசாமி அய்யருக்கும் ஒரு மகஜர் அனுப்பி கஷ்டங்களைக் கவனிக்கும் படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

# "ஆர்யதர்மம்" பத்திரிகைக்கு விசேஷச் செய்திகள்.

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் டி. எஸ். இராமஸாமி அய்யர் அவர்கள் கீழ்கண்ட செய்தியை "ஆர்யதர்மம்" பத்திரிகைக்கு நமது வேண்டுகோட்கிணங்கி அனுப்பியுள்ளார்:—

### "ஆர்யதர்மம்' முன்னணியில்" நின்றுவருகிறது

ஸ்ரீ டி. எஸ்.ராமசாமி அய்யர் அவர்களின் ஆசிச் செய்தி.

தர்மத்துக்கு க்லானி ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஜனங்களுக்கு நல்வழிகாட்ட பிரசாரம் முக்கியமாகும். அதில் பத்திரிகைகள் சிறந்த அம்சம் நமது இயக்கத்துக்கு அநுதாபம் உள்ளவர்கள் கணக்கற்று இருந்த போதிலும், நாம் மற்ற அரசியல் கக்ஷிகளைப் போல் முன்னேற முடியாமல் இருப்பதற்குக் காரணம், பலர் பலர் ஆங்காங்கு ஏதேதோ தங்களால் ஆன தொண்டுகளை செய்து வந்தபோதிலும் அவைகளின் பலன் மற்ற இடங்களுக்குப் பரவாமலிருப்பதுதான், இதற்கு முக்கிய காரணம் பிரசாரக்குறைவே. இருந்தாலும் சில பத்திரிகைகள் இருப்பதினாலேயாவதுதான், நமது இயக்கம் இந்த நிலைமையிலாவது இருக்கிறது. ஸனாதன தர்மத்தை தன் கொள்கையாகக்கொண்ட பத்திரிகைகள் இந்தியாவிலும் சிறப்பாக தென்னாட்டிலும் மிகக்குறைவு. அதில் இவ்வளவு காலமாக "ஆர்யதர்மம்" முன்னணியில் நின்று வந்திருக்கிறது. அநேக கஷ்டங்களுக்கிடையே பத்திரிகையை தொடர்ந்து நடத்தி வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். இது தர்மத்திலுள்ள அபிமானத்தைக் காட்டுகிறது. பத்திரிகை பல சிறந்த புது அம்சங்களுடன் வெளிவந்திருப்பதனால் ஜனங்கள் அதற்கு முன்னைவிட அதிக ஆதரவு காட்டிப் போற்றவேண்டு மென்று என்னுடைய விருப்பம். டி.எஸ். ராமசாமிஅய்யர்

தேசபூஷணம் ஸ்ரீ ஆர். கே. பிரசன்ன வெங்கடேச ராவ் அவர்களை "ஆர்யதர்மம்" வாசகர்கள் நன்கு அறிவார்கள். அன்பர் ஆர்யதர்மத்தின்மீதுள்ள அன்பின் மிகுதியால் ரூ 500 நன்கொடை சில ஆண்டுகட்கு முன் கொடுத்த உதவியை நல்வாறு மறக்கமுடியும்? ஸ்ரீரங்கம் ப்ரஸந்ந வேங்கடேசராவ் நமது வேண்டுகோட்கிணங்கி ஒரு விசேஷ செய்தியை அனுப்பியுள்ளார்:—

### "புதிய முறையில் தோன்றுவது அவசியம்"

தேசபூஷணம் ஸ்ரீ பிரஸன்ன வேங்கடேச ராவ் அவர்களின் செய்தி

ஆர்யதர்மம் இக்காலத்தை அநுஸரித்து தெய்விக, லௌகிக, ஸமூக, உகை விஷயங்களுடன் புதிய அமைப்பாட்டில் இப்போது தோன்றி இருப்பது மிகவும் அவசியமென்றதை, ஸநாதநிகள் யாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

நம்ம மேன்மைபொருந்திய, தெய்விக, சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி, இந்த யுகதர்மத்தை அநுஸரித்து, இந்தக்கோர கலிபுருஷன் இந்தப் பிரதம பாதத்திலேயே மிகவும் வேகமாய், உண்மையான ஸநாதன தர்மத்தை ஆக்கிரமிக்கிறபடியால், 'ஆர்ய தர்மம்' போன்ற உண்மையான ஸநாதனப் பத்திரிகைகள், கலிபுருஷனின் அதி ஆக்கிரம, வேகத்தைக் கூடியவரையில் அப்பப்போது தடுக்கவேண்டியதவச்யம். தமிழ் 'ஆர்யதர்மம்' பத்திரிகைக்கு உண்மையான ஸநாதன தர்மத்தைக் காக்க, மேன்மேலும் விசேஷ பலத்தையும், வகுப்புச் சண்டையில்லாத அஞ்சாத, தேசசேவையைச் செய்யவும், என்றும் சிரஞ்சீவியாயிருக்கவும், கடவுள் பரிபூரண அநுக்கிரஹம் செய்ய நான் மிகவும் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ கடவுளே துணை! தர்மமே ஜயம்,!
சத்தியமே நித்தியம்! இது கலியுகம்!

(5ம் பக்கத்தொடர்ச்சி.)

துலக்குடி குருமூர்த்தி அய்யர் (20-5-39) ல் பிட் நோட்டீஸ் மூலமாய் சிலது வெளியிட்டிருக்கிறார். அதில் உபாகர்ம விஷயத்தையும் பிரதானமாய் எழுதி இருக்கிறார். அதாவது தான் பஞ்சாங்கத்தில் ஆவணிமீ திதில் யஜுருபாகர்ம செய்ய வேண்டுமென்று எழுதியது தவறாகல் என்றும் ஆனிமீ தில் தான் செய்ய வேண்டுமென்றும் அதற்கு காரணம் சாகாந்தீச பலமில்லாமல் போனதென்றும் சாகாந்தீசனுக்கு சக்தி இல்லாத காலத்தில் உபாகர்மாசெய்தால் துக்கசோகாதிகள் உண்டாகிறதென்றும் மதனரத்னம் முதலான கிரந்தங்களில் இருப்பதாயும் சிராவண்யாம் மதவாஷாட்யாம் என்கிற வாக்கியத்தால் சிராவணி பூர்வம் ஆஷாட மீ திலேயே செய்யவேணுமாயும் எழுதி இருக்கிறார். அவர் பஞ்சாங்கப்படி ஆனி மீ மல மீ ஆடிமீ ஆஷாடிமீ ஆகிறது.

சிராவண்யா மத வாஷாட்யாம் என்கிற வாக்யமானது, பஞ்சாங்கத்துக்கு விருத்தமாய் இருக்கிறது. அவர் என்ன காரணங்கொண்டு ஆடிமீ ஒதுக்கி ஆனிமீ பண்ணவேண்டும் என்று எழுதினர் என்று தெரியவில்லை. லோகத்தில் ஜனன மரண நிர்வாஹ கஷ்டாதிகள் ஷை ஜோஸ்யம் குருமூர்த்தி அய்யர் வாக்கினின்றும் வெளி வருகிற பஞ்சாங்கத்தை கொண்டு சகலமும் நடக்க வேண்டியதாய் இருக்க அவர் இப்படி எழுதுவதானது ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிர இதற்கு சந்தேகம் இருந்தால் இவருக்கு சோல் ஏற்பட்டு ருதுகோபாலய்யரை எழுதிக்கேட்டுக் கொள்ளும்படி எழுதி இருக்கிறார். பொருப்பானியாய் ஜகத்தில் நடக்கும் தர்ம கர்மாக்களுடைய லாப லோபங்களுக்கு பாத்தியப்பட்டு பஞ்சாங்கம் போடக்கூடியதாயுண்டு. வித்வான்கள் இப்படி எழுதுவதானது ரொம்பவும் சரி இல்லை. ஆடிமீ இன்னா தோஷம் என்பதையும் அவர் போட்டபஞ்சாங்கப்படி மலமாஸமான ஆனிமீ தில் உபாகர்மா செய்யும்படிக்கு போட்டதற்கு காரணமும் இந்த ஆர்யதர்மம் மூலமே ஷை குருமூர்த்தியவர் வெளியிட்டாரேயாகில் ஜனங்களுக்கு உபகாரமாயும் அவருடைய பஞ்சாங்கத்துக்கு ஒரு கவுரவமும் இருக்கும். கிறந உத்தராயணத்தில் யஜுருபாகர்ம செய்வது என்பது இது வரையில் கேட்டதாக இல்லை. அப்படிக்கு பஞ்சாங்கம் போட்டவருடையவோ இதர்களுடையவோ அபிப்ராயம் முன் பின் இருந்தபோதிலும் மதனரத்னம் ஹேமாத்ரி நிர்ணயஸிந்து தர்மஸிந்து முதலிய கிரந்தங்களைக்கொண்டு வாக்கிய பஞ்சாங்கம் மருத்துக்கு பஞ்சாங்கத்தில் கண்டவாறு நிர்வாஹ கஷ்டத்திரம் சரியானல் ஆடிமீ திலேயே உபாகர்மா செய்யலாமென்றும் திருக்கணித பஞ்சாங்கத்துப்படிக்கு அநுஷ்டிக்கிறவர்களுக்கு ஆவணிமீ திலேயே சாந்தி பூர்வகமாய் உபாகர்மா செய்ய வேணுமாயும் சாஸ்திரார்த்தம் தெரிகிறது.

கோதண்டராம தீக்ஷிதர்.
பருத்தியூர்.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ. வத்ஸ வே வோ. சர்மா)

ஸ்ரீ மீனாக்ஷி! நின் கருணை யாதோ? அவர்கள் அத்தாத்மா பக்தர்களும் ராஜாங்கபலத்தைக் கொண்டு மதுரையில் ஆலயப்ரவேசகூட்டம் நடந்தது. அக்கோயில் தர்மகர்த்தா அறவரில் ஐவர் அதர்மத்திற்கு ஆதரவளிக்கின்றனராம்! பக்தர் பொருட்டு ஆலயத்தைக்காக்க நின்னருள் சுறக்க வேண்டும்!!

சோதனை காலம்!! நம் தலைவர் இருப்பிடமான மதுரையிலே முதலில் அதர்மத்தை நிலை நாட்ட பகிரத முயற்சி நடக்கின்றது! சாணக்ய தந்த்ரமும் செய்யப்படுகிறது! ஆஸ்திகரும் தலைவரும் தக்க பலத்துடன் சாந்த போருக்கு ஆயத்தம் செய்ய வேண்டிய காலம் நெருங்குகிறது!! படை திரட்டுக!!

போதும்! போதும்!! சென்னை நகரபரிபாலன சபை ஹிந்துக்கள் பணத்தை முஹம்மதியருக்கும் பஞ்சமருக்கும் அளவு கடந்து அதிகமாக செலவு செய்கிறது. தாழ்ந்தவரை உசத்துவதென்ற தொந்து நாகரிக நோயால் எவரும் ஆக்ஷேபிக்க வில்லை! இப்போது ஒவ்வோர் தனி மஹம்மதிய ஸ்கூலுக்கும் மத போதகாசிரியர் தனியாக வேண்டு மென கிளர்ச்சி செய்கிறார்கள். பொதுப்பணத்தில் மஹம்மதிய பெண்களுக்கு வீட்டிற்கு வண்டியனுப்பி அழைத்து வருவது போன்ற சலுகை அநீதி!!

ஜந நாயக பலனோ இது? மதுரையில் மந்திரி எட்டு நாளில் ஓர் சட்டம் செய்வேன், என்றார். தபோதனர்கள்கூட கிழிந்து உலகை நட்டி நடப்பர். கக்ஷி பலத்தினால் எதையுஞ்செய்ய துணியுமிவர்களிடம் இனி வாக்காளர் வெகு ஜாக்ரதையாயிருப்பர்

தர்மத்திற்கல்லவா! சேலத்தில் தர்ம கர்த்தா சபை கூடுகிறது. அதைச்சேர்ந்தவர்களை பார்த்தால் ஸபை நோக்கந் தெரிகிறது.

ஸம வாதிகள் கவனிக்க! கிறத்திருல் பசுவின் பாலிலுள்ள ஸத்தும் மாறுபடுகிறது. கலப்பு ஜாதி மாட்டின் பால் பயனற்றதென பெங்களூர் விஞ்ஞான சாஸ்திர ஸபை கூறுகிறது! எங்கே ஸமம்?

இது ஆதிகாலமானுல் அது அநீதியல்லவா! ஆலயப்ரவேச இயக்கம் ஆதிகாலந் தொட்டு தென்றாயராஜி தீண்டாமை அநீதி என்பதை ஏற்க வேண்டாமா?

### ஹைதராபாத் சீர்திருத்தங்கள்.

அறிக்கை பிரசுரிக்கப்படும்.

ஹைதாபாத்சமஸ்தானத்தின் "அரசியல் சீர்திருத்தங்கள்" சம்மந்தமான அறிக்கை இம் மாதம் 19தேதி வெளியிடப்படுமென்று செய்திகிடைத்திருக்கிறது.

வரன்கள் வேண்டுமா?
பெண்ணின் ஜாதி (உட்பிரிவுகளுடன்) கோத்திரம், ஜாதகம், படிப்பு, பந்துக்கள், வேண்டிய வரனின் யோக்யதை முதலிய விபரங்களும், தெரிந்த எல்லா பையன்களுடைய விபரங்களும் எழுதி 4 அணா பதிவுக்கட்டணமும் அநுப்பவும். புதிய பையன்கள் விலாசங்கள் அநுப்பப்படும்.
M. B. C/o. லேட் ஆவ் எஷ்யாப்ரேஸ், தெப்பக்குளம் போஸ்ட், (திருச்சி)
தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம் தெரிந்து, அக்காயிஸ் வேலைகள் வேலை கற்றுக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் உடனே எழுதவும்.



## சிருஷ்டி.

(ஸ்ரீ எஸ். வைதீஸ்வரய்யர், கல்கத்தா)

அநாதிகாலம் முதல் மனிதர்களுக்கு மயக்கத்தைத் தருவது சிருஷ்டி. 200 வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் வீரன், இருளன், காட்டேரி போன்ற தெய்வங்களை வழிபட்டனர். கிருஸ்தவர்கள் அங்கே பிரசாரம் செய்யச் சென்றார்கள். "எங்கிருந்து வந்தோம்? இறந்த பின் எங்கே போகிறோம்" என்ற அருமையான கேள்வியை ஆங்கிலேயர் கேட்டனர். 'கடவுளிடமிருந்து வந்தோம். கடவுளிடமே போவோம்" என்று பதிலளித்தனர் பாதிரிமார். இதை நம்பி ஆங்கிலேயரும் கிருஸ்தவ மதத்தைப் பற்றினர். நாம் அறியவேண்டியது அந்தக் கேள்வியைப் பற்றியே. அது முக்காலத்திற்கும் பொதுவான புதுக்கேள்வி. கடோபநிஷத்தில் நசிகேதஸ் என்பவர் யமனைக்கேட்பதும் அதுவே தற்காலத்திலும் அந்தக்கேள்வி இருக்கிறது. ஆனால் வ்யாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு வயிறு வளர்ப்பதே தொழிலாக உள்ள ஆஸ்திகர்களுக்குங்கூட அது தோன்றுவதில்லை. ஆபத்காலங்களில் எப்பொழுதாவது தோன்றினும் கேள்வி கேட்பதில்லை. கேட்டால் நாசத்தைப்பற்றிய பேச்சு வரும். அது பொய்யோ மெய்யோ பயங்காம். ஆகையால் கேட்பதில்லை. வீட்டிற்குள் திருடனிருப்பது போல் சந்தேகமேற்பட்டால் அநேக ஜனம் கண்ணைப்பொத்திக்கொள்வார்கள். தலையணையில் முகத்தைப்புதைத்துக் கொள்வார்கள். அவ்வளவு பயம். எல்லாவற்றிற்குக் காரணம் கோழைத்தனம். ஐக்யமாய் நடந்து கொள்ளாதது அபலத்தனம்.

அயர்ந்த தூக்கம். அதிகாலையில் திடீரென விழிப்பு. அப்பொழுது நாம் யார் என்பது எங்கே இருக்கிறோமென்பதும் உடனே நிச்சயப்படுவதில்லை. சற்றுத் நிகைக்கிறோம். நான் ராமன். இது கட்டில். இதோ மனைவி மக்கள். இது என் வீடு." என்பனவெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டு தேறுகிறோம். பிறகு நாள் முழுதும் வேலை. இரவில் திரும்பவும் தூக்கம். இது மாதிரியே சிருஷ்டியும் லயமும். இல்லாத வஸ்து உண்டாவதில்லை. உள்ளதே தூங்கி எழுந்தவன் போல் மறைந்து தோன்றுகிறது. எதுவும் அழிவதில்லை. லயமடைகிறது. நீரில் போட்ட உப்பு போல் மறைந்து போகிறது. அல்லது ஜலம் ஆவியாவது போலும், விளக்கிலுள்ள எண்ணெய் திரிபோலும் மாறுகிறது. மறைவதும் மாறுவதும், தூங்குவதும், இறப்பதும் போல் பிரளயங்கள்.

ஸாங்கிய சாஸ்திரத்தின் பிரகாரம் முதலில் மூலப்ரக்ருதி. அதிலிருந்து மஹத் என்னும் புத்தி தத்வம், மஹத்திலிருந்து அஹங்காரம் அதிலிருந்து சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் ஐந்து தன் மாத்திரைகளும் செவி, மெய், கண், வாய், மூக்கு எனும் ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்கு, கை, கால், குதம், உபஸ்தம் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களும் மன இந்திரியமும் ஆகப்பதினாறு தத்வங்களும் உண்டாகின்றன. ஐந்து தன்மாத்திரைகளிலிருந்து ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவி என்னும் பாகுபாட்டால் (Permuteation & Commutation) ஜீவராசிகள் உண்டாகின்றன. இவைகளுக்கு நரை, திரை, மூப்பு, பிணி உண்டு. சூரியன் முதலான க்ரஹங்களுக்கும் பல நக்ஷத்திரங்களுக்கும், நரை திரை விகாரங்கள் இல்லாதிருப்பது கவனிக்கத்தக்கது. விகாரமில்லாததால் இவைகளை நாம் கடவுள் ஸ்வரூபமாக வணங்குகிறோம். இவைகளே ஜீவராசிகளின் வாழ்க்கை பலாபலன்களை அறிவிக்கிறவைகளாயிருப்பதும் கவனிக்கத்தக்கது. க்ரஹாதிகள் தேஜோமயமாயிருப்பதால் தேவர்கள் என்கிறோம். சந்திரனுக்கு விகாரமிருப்பதாய்த் தோன்றினாலும் உண்மையில் இல்லை. சந்திரன் ஜலமயமாயுள்ள கிரஹம். மூலப்ரக்ருதி மஹத் அஹங்காரம் என மூன்று, தன் மாத்திரைகள் ஐந்து. அவற்றிலிருந்துண்டான பூதங்கள் ஐந்து. இந்திரியங்கள் பதினொன்று ஆக 24 தத்வங்களுள் இந்த சராசரமெல்லாம் அடங்கும். ஆத்மா இவைகளுள் வியாபித்தும் ஆனால் இவைகளுக்கு வேறாகவும் இருக்கும் 25-வது தத்வமான கடவுளே.

தூங்குகிறவனை மூலப்ரக்ருதியாகவும், விழித்துக்கொள்வதை மஹத்தாகவும், "நான் ராமன்" என்பதை அஹங்காரமாகவும், "இது எனது", என்பவை இந்திரிய ப்ரவிருத்திகளாகவும் வைத்துக் கொண்டால், சிருஷ்டி தத்வம் அறியலாகும். தூங்கியது, விழித்தது, நினைத்தது பேசியது எல்லாவற்றையும் அறிந்து அறிவூட்டும் சக்தியாயிருப்பது ஆத்மா.

இறப்பது பிறப்பது இவை அயர்ந்து தூங்கப் போவதும், விழித்துக் கொள்வதும் மாதிரி என்னலாம், யுகாந்த ப்ரளயம், கல்பாந்த ப்ரளயம், மஹாப்ரளயம் இவைகளும் அதனதன் பிறகு சிருஷ்டிகளும் அவ்வாறே தூக்கமும் விழிப்புமாகும். இறப்பது தேக தர்மத்தைப் பற்றியது. யுகாந்த ப்ரளயம் யுகதர்மத்தைப் பற்றியது. கலியுகத்தில் தர்ம க்ஷீணத்திற்குக் காரணம் இரண்டு இந்திரியங்கள். ஒன்று நாக்கு. சொல்லது சொல்லாதது என்ற வியவஸ்தை யின்றி எல்லாவற்றையும் கேட்கிறது. மற்றது ஜனனேந்திரியம். அதற்கும் வியவஸ்தை இல்லை. இவை இரண்டும் வியவஸ்தைக்கு உட்படுவதே ப்ரளயம். (Revolution) என்றும் சொல்லலாம்.) கல்பாந்த மஹாப்ரளயங்களும் அவ்வாறே அதனதன் தர்மத்தைச் சார்ந்தது. ஆனால் இந்த ப்ரளய சிருஷ்டிகளில் தாரதம்யம் உண்டு. இறப்பது மிகவும் சிறிது. மஹாப்ரளயம் மிகப் பெரிது. மாறுபாடுகள் அதிகமாகி கடைசியில் உருவே இல்லாமல் மறைகிறது. தூங்குவதற்கு முன் எந்த ஞாபகங்கள் இருந்தனவோ அவைகளே விழித்த பிறகும் வருகின்றன.

இறக்குமுன் இருந்த ஞாபகங்கள் இறந்த பிறகும் இருப்பதாக வைக்கலாம். ஆனால் திரும்பவும் பிறக்கும் போது ஞாபகம் என்ற பெருங் காயம் இல்லை. அதன் வாஸனை இருக்கிறது. (முன்னொரு கல்பத்தில் மனிதர்களுக்கு ஜன்மாந்திர ஞாபகம் பூர்ணமாயிருந்ததாம். அதனால் தங்கள் பூர்வ கர்மாக்களின் பலாபலன் அறிந்து தர்மமார்க்கத்திலிருந்து சிறிதும் வழுவாது நடக்கவே ஒருவரும் இறக்கவில்லையாம். அப்பொழுது "மறதி" உண்டாக்கப்பட்டதாம்). அந்த வாஸனையே இந்த ஜன்மத்தில் அவன் செய்யும் காரியங்களுக்குத் தூண்டுகோலாயிருக்கிறது. ஜன்மாந்திரத்தில் கெட்ட எண்ணங்கள் இருந்திருந்தால் நன்மை அடைகிறான். எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து நமது முன்னோர்கள் விதி விலக்குகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். வேத சாஸ்திரங்களின் பிரகாரம் நடந்தால் எவனும் கடைத்தேறலாம். ஸநாதன தர்மம் ஒரு குடியரசு மாதிரி. எவனும் சாஸ்திரத்தை அநுஸரித்து நடந்து எந்த நிலைமையும் பெறலாம். கடோபநிஷத்தில் "நான் இந்த படிகளையெல்லாம் அறிந்திருந்தும் யம பட்டம் என்னும் அநித்ய பதவிக்கு வேண்டிய ஸாதனைகளைச் செய்தேன்", என்று யமன் சொல்லுகிறார். நமது சாஸ்திரங்களின் முடிவு ஸ்வராஜ்யம். இது ஒரு புவனத்தின் வசிமுனையவான பூமியைப்பற்றியதல்ல. எல்லா புவனங்களையும் அடக்கியாளும் சக்தியுள்ளது. பிறப்பிறப்பை அறவே ஒழித்து கேவலம் பரம்பொருளுள் ஐக்யமாகும் நிலை. (தொடரும்)

காலடி.

## ஸோமயாகம்.

ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாசார்யாரவர்களுடைய அவதாரபூமியான காலடி என்கிற புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸோமயாகத்தை ஜூன்மீ 27உ முதல் ஆரம்பித்து ஸ்ரீ சிருங்ககிரிஜகத்குருமஹாஸன்னிதானத்தின் அநுக்கிரஹத்தாலும் மற்றும் பெரியோர்களின் ஸகாயத்தினாலும் நடத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. யாகம் 6-தினங்கள் தொடர்ந்து நடக்கும்.

சென்னை.

## ஸ்ரீராம பட்டாபிஷேகம்

சென்னை மாம்பலம் ஸ்ரீராமகிருஷ்ணபுரத்தில் 25—6—39 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு உடையாளூர் ராமாயணம் ஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீராம பட்டாபிஷேக பிரவசனம் நடைபெறும். (ந-நி)

டெல்லி.

## அகில இந்திய ஸநாதன தர்ம மகாநாடு

### டெல்லியில் கூடும்

ஜூலைமாதம் ஆரம்பம்

டெல்லியிலுள்ள ஸநாதனிகளின் முயற்சியால் "ஒரு அகில இந்திய ஸநாதனதர்ம மகாநாடு" டெல்லியில் 1939 ஜூலைமீ கடைசி வாரத்தில் கூடும்.

புதிய மாகாண சுய ஆட்சியினுல் ஸநாதனிகளுக்கேற்பட்ட அல்லல்களை இங்கு விவரிக்க முடியாது. புராதன தர்ம சாஸ்திரங்களுக்கு விரோதமாக ஆலயப்பிரவேச சட்டம், சாரதா சட்டம், தீண்டாமை ஒழிப்புச் சட்டம், ஹிந்து மதபரிபாலன மசோதாக்கள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. ஸநாதனிகளைப் பலவிதமாக பெரும்பாலோர் அவமதித்துவருகிறார்கள்.

இந்த நிலையில், சாம்ராஜ்ய தலைநகரான டெல்லியில் ஒரு மகாநாடு கூட்டுவது சாலச் சிறப்பு வாய்ந்ததாகும்.

இந்தியாவிலிருக்கும் எல்லா மடாதிபதிகளும், ஸநாதன சங்கங்களும், பிரமுகர்களும், மகாநாடு இனிது நடைபெற ஒத்துழைக்க முன்வரவேண்டும். [ந நி]

## புத்தகங்கள் வரவு.

["ஆர்யதர்மம்" வாரப்பதிப்பில் புத்தக விமர்சனத்திற்காக அனுப்பப்பட்டிருக்கும் சஞ்சிகைகள், புஸ்தகங்கள் அடுத்த வாரம் விமர்சனம் செய்து பிரசுரம் செய்யப்படும். சென்ற மூன்று வாரங்களாக ஆர்யதர்மத்தில் இடமில்லாததால் பிரசுரிக்கமுடியவில்லை.
ஆ. ஆ. த]

(1) வேதாந்த தேசிக ருசல்
(2) பத்யசங்காஹம்
(3) சப்தமஞ்சரி.
(4) தானவ்ரதம்
(5) விகடகேசரி
(6) Life after Death (2Parts.)

# "வேதாந்த விசாரம்"

## திண்டுக்கல்லில் ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமிய்யர் சொற்பொழிவு.

திண்டுக்கல் ஹிந்துமதஸங்கத்தின் ஆதரவில் ஜூன்மீ 6உ காலை ஸ்ரீசங்கரமடத்தில் திருநெல்வேலி நீதிவழக்கறிஞர் ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யர்

'வேதாந்த விசாரம்'

என்பதைப் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் ஸாரம்சம் பின்வருமாறு:—

"ஸகல லௌகிக ஞானங்களும் கிரியைகளில் அன்வயிப்பதுபோல் வேதாந்த விசாரமானது பரிஸமாப்தியை யடையாமல் ஞானத்திலேயே பரிஸமாப்தியையடைகிறது. புஸ்தகங்களும் அதிலுள்ள ரேகைகளும் உபநிஷத்துக்கள் ஆகமாட்டா. ஆகையால் புஸ்தக விஞ்ஞானமானது வேதாந்த ஞானமாகாது. ஆனால் அவை சப்தரூபமாக மாறினால்தான் உபநிஷத்துக்களாகும்.

ப்ரம்மாதி ஸ்தம்பபர்யந்தமுள்ள ஸகல ஜீவராசிகளும் நாம் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறிந்து ஆனந்தமாக இருக்கவேண்டுமென்று எண்ணுவதால் எல்லோரும் மோக்ஷத்தை யடைவதற்கு பாத்யதையுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். அப்படியில்லாவிட்டால் பகவான் பக்ஷபாதியாவார். நான் பத்தன் என்று நினைக்கும் ஒவ்வொரு ஜீவனும் மோக்ஷத்தையடைய அதிகாரியாக விருந்தபோதிலும் அதற்குள்ள ஸாதனசதுஷ்டயங்களுள்ளவர்களே முக்கியமாய் அதிகாரிகளாகிறார்கள் என்று வேதாந்தஸூத்திரத்திலுள்ள 'அத' சப்தம் விளக்குகிறது.

கூட்டிலடைபட்ட சிங்கத்தைப்போலுள்ள ஜீவனானவன் தன்னைத் தன்னுடைய மூன்று வித சரீரங்களிலிருந்துப் விடுவித்துக்கொள்ள பரித்ருச்யமான தன் சரீரம் 'எவ்விதம் வந்திருக்கிறது? அதன் லக்ஷணமென்ன? என்று நன்றாக விசாரிக்கவேண்டும். தேஹமானது கர்மாவால் ஆனது. எல்லா சிஷ்யர்களுக்கும் ஒரேவிதமான ஸம்ஸ்காரங்களைக் கொடுத்தபோதிலும் எல்லோரும் ஒரேவிதமான ஸாமர்த்யத்தோடும் ஞானத்தோடும் இருப்பதில்லை. ஸ்தாவரங்கள்கூட ஒரேவிதமாகப் பயிரிடப்பட்டாலும் வித்யாஸமாகவே முளைக்கின்றன. அதற்குக்காரணம் பூர்வஜன்மஸம்ஸ்காரங்களினால் ஏற்பட்டவாஸனையென்றுதான் கூறவேண்டும் ஏகரூபமாகஆக்குவது அஸாத்யமாகும். அசேதனமான பதார்த்தங்களைத்தான் ஏகரூபமாகமாற்ற இயலுமேயல்லாது சேதனவத்தான ஜீவர்களை ஏகரூபமாக்குவது முடியாத கார்யம். ஆகையால், தற்காலத்தில் கிளம்பியிருக்கு ஏகாசாரம், ஏகஜாதி ஏகமதம், என்ற ஆபாஸ தத்வமானது இயற்கைக்கும் ஈச்வர ஸங்கல்பத்திற்கும் முற்றிலும் விருத்தமானது. எந்தமதமானது எல்லோரையும் ஒரே மாதிரியாகவும், ஒரேஜாதியாகவும், ஆக்குவதாக கோஷிக்கிறதோ, அது ஈச்வரஸம்மத மதமாகாது. கிருபாளுவான வைத்யன் தனது ஒவ்வொரு வியாதியஸ்தர்களையும், பரிசோதித்து அவனவனுக்குள்ள வியாதிகளைக் கண்டிக்கும் ஔஷதங்களைக் கொடுத்து அவைகளைச் சாப்பிடும் முறைகளையும் காலங்களையும் பத்யங்களையும் உபதேசிப்பதுபோல் பரம க்ருபாளுவான நம் வைதிக மதம் ஒன்றுதான் உலகிலுள்ள எல்லோருக்கும் ஸாமான்ய தர்மங்களை யுபதேசித்து அவர்களில் சிலருக்கு வர்ணதர்மங்களையும், ஆச்ரமதர்மங்களையும், ஸ்திரீ தர்மங்களையும் உபதேசிக்கிறது. எல்லா வியாதியஸ்தர்களுக்கும் ஒரே மருந்தை ஒரே விதமாய் நிஷ்பக்ஷபாதமாய்க் கொடுக்கும் வைத்யன் வைத்யனுமல்ல. அவன் இருப்பது வைத்யசாலையுமல்ல. வியாதிகள் வித்யாஸப்படுவதால் மருந்துகளும் வித்யாஸப்படுகின்றன. அவ்விதமேதான் வர்ணாச்ரமதர்மமும். ஆசார்யனே ஸர்வஜ்ஞனாகிய வியாதிக்கு பிஷக்வர்யனாக விளங்குகிறான். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் விஷயங்களையே அவர் உபதேசிக்கிறார். சிஷ்யர்களான வியாதியஸ்தர்கள் அவ்வண்ணமே அநுஷ்டிப்பது தான் அவர்கள் கடமை.

சித்த சுத்தியிருந்தாலல்லது வேதாந்தஞானமானது ஏற்படாது. அது ப்ராம்ஹணனுக்கே விசேஷமாக ஏற்படுமாகையால் அவனே அதிகாரியாகின்றான். சுத்தமாயுள்ளவனே அசுத்திக்குப் பயப்படுகிறான். நாஸ்திகன் வேதாந்தத்தால் வேதாந்தஞானம் ஸித்திக்கவே ஸித்திக்காது. சரீரத்திற்கு வேண்டிய ஸம்ஸ்காரங்களைக்கொடுத்தால்தான் சித்தமும் நன்கு ஸம்ஸ்கரிக்கப்பெற்று ஆத்மாவை ப்ரதிபிம்பிக்கச் செய்கிறது. இந்த ஸம்ஸ்காரங்களைத்தான் 'கர்மங்கள்' என்கிறோம். அவைகளின் வேத விஹித பலாபிஸந்திரஹித நித்ய கர்மங்களே சித்தசுத்தியைக் கொடுக்கும். சுகஜட பாதவாமதேவாதிகள் பிறக்கும்பொழுதே ஞானவான்களாகத் தோன்றியபோதிலும் தங்கள் பூர்வஜென்மங்களில் அவர்கள் சித்தசுத்தியை ஸம்பாதித்திருக்கவேண்டும் என்பது தான் நம் வைதிகமதஸித்தாந்தம். சித்தசுத்தியென்றால் காமக்ரோதாதிகளில்லாத மனத்தோடு கூடியிருப்பது.

இப்பேர்ப்பட்ட சித்தசுத்தியோடு கூடிய ஜீவனே சிரவண மனன நிதித்யாஸத்தினால் எல்லா வஸ்துக்களிலும் ப்ரம்ஹதர்சனமாகிய 'ஸமதர்சன'த்தைச் செய்ய வல்லமை பெற்றவன். ஸச்சிதானந்த வஸ்துவைத் தன்னிடத்திலும் தன்னை எவ்விடத்திலும்பார்ப்பதே ஸமதர்சனம் எனப்படும். இதைத்தான் கீதையில்ஸ்ரீபகவான் 'विद्याविनयसंपन्ने....'என்றுகூறியிருக்கிறார். அச்சுலோகத்தில் 'இல்' உருபையுடைய ஏழாம் வேற்றுமை இருக்கிறதேயன்றி 'ஐ'என்ற இரண்டாம் வேற்றுமையின்மையின் ஸ்வாரஸ்யம் மிக்க கவனிக்கத்தக்கது, ஆகையால் ஸமதர்சனம் 'அல்லது அத்வைத தர்சனமானது பாவனையில் மாத்திரமேயொழிய கிரியையிலல்ல. ஆகையால்ஸ்ரீஆசார்யாள்

भावाद्वैतं सदा कुर्यात् क्रियाद्वैतं न कर्हिचित् ।
अद्वैतं त्रिषु लोकेषु नाद्वैतं गुरुणा सह ॥

அத்வைதமான பாவனையில் மட்டும் இருக்கவேண்டுமேயொழிய கிரியையில் எப்பொழுதும் கூடாது. மூன்று லோகங்களிலும் அத்வைத பாவனை யோடிருக்கவேண்டும். ஆனால் குருவோடு கூட கூடாது" என்று உபதேசித்திருக்கிறார் வஸ்துகள் தங்கமதான் என்ற ஞானம் வேண்டுமானால் எவ்விதம் அவைகளின் நாம ரூபங்களை நீக்கிப்பார்க்கவேண்டுமோ அவ்விதமே ஜீவன் ப்ரம்ஹமிவர்களின் நாம ரூபங்களைப் போக்கினால் அபேதம் ஸித்திக்கிறது. உதாரணமாக, $7+5=4\times3$ என்பதில் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள அடையாளங்களை விலக்கிச் சுருக்கினால் $12=12$ என்றாகிறது. அத்வைதமானது "நான்னவில்லை" பேதத்தைப் பரிஹரிக்கிறதேயன்றி "ஐக்ய"த்தைச் சொல்லவில்லை."..................என்று குறிப்பிட்டார்.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

சென்ற 16-6-39 வெள்ளிக்கிழமை முதல் மைலாப்பூர் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதி வஸந்த மண்டபத்தில், வேத சாஸ்திர நிபுணர் ஸ்ரீ கப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் "ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபந்யாஸம்" நடத்தப்பட்டு வருகிறது.

# காலஞ்சென்ற பண்டிட் கிருஷ்ணமாசாரியர்.

## தலைவர்களின் பாராட்டு.

சென்னை ஸ்ரீ வத்ஸ. வே. ஸோமதேவசர்மா பண்டிட் கிருஷ்ணமாசாரியார் மரணத்துக்கு அனுதாபம் கூறி எழுதுவதாவது:—

"ஞாபகச்சின்னம் வேண்டும்"

ஒப்பற்ற தர்மவீரரான ஸ்ரீ. யு. பி. கிருஷ்ணமாசாரியாரின் சிறந்த ஸேவையைப்போற்றாத தார்மிகரில்லை. அவர் வீழ்ந்ததிலே, அவர் தானாக விழுப்புரத்திலே, பிறந்து அவருடன் ஸஹ கார்யதரிசியாயிருந்து பல வர்ணாச்ரம ஸபைகளை நடத்திய பாக்யமெனக்குண்டு!

மனைவியின் தாலி தவிர மற்றதை அடகு வைத்து தர்ம ஸேவை புரிவர். ஸ்ரீ மாளவ்யா முதல் பலருடன் எதிர்த்து போராடிய அஞ்சாத வீர சிங்கம்! வாசாகைங்கர்யத்துடன் நிற்காது. அக்குடும்பத்திற்குஸஹாயம் செய்து, ஓர் தக்க சின்னத்தை ஏற்படுத்த பத்ராதிபர் போன்றவர் முன் வரவேண்டுகிறேன். ஸத்பாத்திரத்திற்குதவ தார்மிகரை வேண்டுகிறேன்.

"உண்மை ஸேவகர்"

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் காரியதரிசியும், பிரபல ஸநாதனத்தலைவருமான ஸ்ரீமான் T. S. இராமசாமி அய்யர் அவர்கள் காலம் சென்ற பண்டிட் U. P. கிருஷ்ணமாசாரியார் அவர்களின் அகாலமரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து எழுதுவதாவது:—

"ஸ்ரீ பண்டிட் U. P. கிருஷ்ணமாசாரியார் அவர்களுடைய அகால மரணத்தினால் ஸநாதனிகளுக்கு மகத்தான கஷ்ட மேற்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் இன்று நமது ஸநாதன இயக்கம் வலுவு பெற்று விளங்கி வருகிறது. நமது ஸநாதன இயக்கத்தைப் பலப்படுத்தியவர்களில் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் அவர்களும் ஒருவர் என கூறத் தேவையில்லை.

அவர் ஒரு உண்மை ஸேவகர். சுயநலமின்றி சிறந்த தொண்டுகள் பல புரிந்திருக்கிறார். அவர் ஒரு பிரபல சொற்பொழிவாளர். அவருடைய பிரசங்கங்கள் — முக்கியமாய் ஆலயப்ரவேச பிரச்சனைகளைப்பற்றி செய்த சொற்பொழிவுகள் யாவராலும் நன்கு பாராட்டப்பட்டது சென்னைமாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கசார்பாகவும், ஸநாதனிகளின் சார்பாகவும், என் சொந்த சார்பாகவும் அவருடைய மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவரது ஆத்மா அமைதி பெறுக."............

## மின்சாரக்கட்டணக் குறைவு

சென்னை நகர மின்சாரக்கட்டணத்தைக் குறைக்க சர்க்கார்முடிவுசெய்திருக்கிறார்கள். ஜூலை 1௳ தேதியிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் அமுலுக்கு வரும்.

## சென்னை சர்க்கார் புதிய கடன்

ஜூன்மீ 17௳ தேதி சென்னை சர்க்கார் 1½ கோடி ரூபாய் கடன் கேட்டு விண்ணப்பம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். ஜூன்மீ 21௳ தேதி இக்கடனுக்குப் பணம் வாங்கிக்கொள்ளப்படும். இந்தக் கடன் ரூ 98¾ சதவீதவீதத்தில் 1950ஆு ஜூன்மீ 21உ காலாவதி அடையும். இந்தத் தேதியில் 100 சத விகிதத்தில் திருப்பிக்கொடுக்கப்படும்.



# செய்வதென்ன?

[ஸ்ரீ எஸ். வைதீஸ்வரய்யர், கல்கத்தா.]
(சென்ற வாரத் தொடர்ச்சி)

குபுத்திக்கு இன்னொரு உதாரணம். கையை புரட்டி விட்டு நிஷ்காம கர்மா செய்வதாகச் சொல்கிறார்கள். வித்யாஸ்தானங்களில் சொல்லியிருக்கும் கர்மாநுஷ்டானங்களை அததற்கு ஏற்பட்ட பலனில் ஆசை இல்லாமல் செய்வது நிஷ்காம கர்மா. ஆனால் வித்யாஸ்தானங்களுக்கு விபரீதமாய் தாங்கள் ஸ்வயநலம் பாராட்டாததாக சொல்லிக்கொண்டு இந்திரியத் தொண்டு செய்வதே நிஷ்காம்யகம் என்று நினைத்து இவர்கள் "கர்மா" வைத்தள்ளி விடுகிறார்கள்.

உலகமெல்லாம் யுத்தம் கர்ஜிக்கிறது. முன்னர் எம்டன் வந்து குண்டு போட்டது. இப்பொழுது விமானங்கள் தேசமெங்கும் நிர்பயமாய் வெடிகளை இறைக்கும். மிகுந்த காவல் பலமுள்ள லண்டனே பயப்படுகிறது என்றால் ஒன்றுமே இல்லாத நமக்கு தெய்வமே சகாயம். இந்தியா மீது யாரேனும் படையெடுத்தால் வகுப்பு வாதங்களால் புத்திபேதமடைந்தவர் அவர்களுக்கு உதவி செய்து எல்லாருடைய வாயிலும் மண்ணைப்போடத் தயாராயிருக்கிறார்கள். முஸ்லீம்களோ பாதக் கண்டத்தில் பாதி பிரித்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறார்கள். அதிகம் சொல்லி என்ன? தர்மம் முழுகி அதர்மம் தாண்டவமாடுகிறது. யுத்தம் உண்டாகிஇந்தியாவுக்கே ஸ்வராஜ்யம் என்று சொல்வது கிடைத்து விட்டால் ஸநாதன தர்மம் தலைகாட்டாது ஓடவேண்டியது தான்.

அவர்கள் ஒவ்வொரு சமயம் கடவுளிடத்தில் பேர்முறையிட்டுக் கொண்டார்கள். அதர்மமான அஸுர ஹிம்ஸை பொறுக்கவில்லை. கடவுள் அவதாரம் செய்தார். கலிகாலத்திலும் பல நாயன்மார்கள் அவதாரத்தோடு, ஸ்ரீ சங்கராசாரிய அவதாரமும் ஏற்பட்டிருக்கிறது. பௌத்த மதத்தை ஒழிக்க ஸ்ரீ ஆசாரியாள். சமணர்களுக்கு ஞானசம்பந்தர். ப்ரம்மஸமாஜத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர். முறையிடுவதே அனுதிவழக்கமாயிருக்கிறது. உலகமெல்லாம் ஸகோதரர்கள் ஒருவரிடமும் பகை பாராட்டுவதற்கில்லை.

பகைத்துக் கிடைக்கும் ஜயம் நம்மையே அழித்து விடும். கலியில் ஹரிநாமமென்று நமது சாஸ்திரங்களிலேயே வழிகாட்டி இருக்கிறார்கள் பெரியோர். நாம் கூவினால் வருவாரா, என்று சந்தேகப் படலாம் சிலர். ஒருமுச்சு. நாம் மனங்கரைந்து கூவுவதே நம்மை பரிசுத்தப் படுத்தி பக்தியில் ஈடுபடச் செய்யும். இது எல்லாரையும் வசப்படுத்தும். உலகத்திற்கே நன்மை யுண்டாகும். குழந்தை அழாமல் தாயார் கவனிப்பதில்லை. கூவக்கூவ தாயான சக்தி நமக்கு உண்டாகும். ஆஸ்திகர் எல்லாரும் பூமியில் எங்கிருந்தாலும் காலை, மாலை 6-மணிக்குத்தினம் தவறாமல் வாய்விட்டுத் துதிக்க வேண்டும். ஸந்தியாவந்தனாதிகர்மானுஷ்டானங்கள் சிரத்தையுடன் செய்யவேண்டும். மேனாட்டிலும் யுத்தம் வாராதிருக்க மாதா கோவில்களில் துதிகள் செய்கிறார்கள். இவைகளின் வேகத்திற்கேற்றபடி நமக்கு ஒரே நாளிலோ பலநாட்களிலோ அபயப்ரதானம் ஏற்படுவது திண்ணம்.

ஆங்கிலேயரும், ஹிட்லரும், காங்கிரஸும், வகுப்பு வாதிகளும் நமக்கு ஒரு நன்மையோ தீமையோ செய்யமுடியாது. திரௌபதி தான் பதிவ்ருதை என்றும், பதிகள் பலவான் என்றும், தர்மமிருக்கிறது என்றும், அலக்ஷியமாய் அதர்மக்கூட்டத்தில் புகுந்தாள். தன்மானத்தை ரக்ஷிக்க ஒருவருக்கும் சக்தியில்லை என்று அறிந்தாள். தன்துணையையும், தன்னையும் மறந்து பகவானைச் சரணமடைந்தாள். பெற்றாள் வெற்றி!

ஸர்வலோக ஹிதத்தையும் உத்தேசித்து ஹிந்து, முஸ்லீம், ஸ்வதேசம் என்பதெல்லாம் மறந்து ஸர்வலோக சரண்யனை சரணமடைந்தால் உலகத்திற்கு நற்கதி உண்டு. உலக நன்மைக்கு பகவான் ஓடிவருவார். ஒரு வகுப்புக்கு வரமாட்டார். வகுப்பில்லாதவர்.

ஸர்வ ஜனங்களும் ஏகோபித்து ஒரே காலத்தில் எந்த வாக்யத்தைச் சொல்வதென்று ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளே தீர்மானிக்க வேண்டும்.

## எண்ணெய் ஊற்று

திருப்பூரில் 20உ ஒருகிணறு தோண்டப்பட்டபொழுது, கிரோஸின் எண்ணெய் ஊற்றிப்பதாகத் தெரியவந்தது.

## வேலூர் அமளி

வேலூர் கலகத்தை ஒட்டி கைதுசெய்யப்பட்ட 27ஹிந்துக்களை ஜாமீனில் விடுவித்திருக்கிறார்கள்.

## உபசாரம் எனக்கு எதற்கு?

டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவுக்கு கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர் முனிசிபல் சபைகள் உபசாரப் பத்திரங்களை அளிக்க வந்த பொழுது, "எனக்கு உபசாரப் பத்திரம் அவசியமில்லை. மந்திரிகளுக்கு மட்டும் தான் அந்த மரியாதை செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டார். நம்தமிழ் நாட்டுத் தலைவர்கள் இதைப் பின் பற்றுவார்களா!

## "கும்பாபிஷேகம் இல்லை"

தாண்டவன் தோட்டம் ஸ்ரீ நடனபுரீஸ்வரர் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் ஜூன் 19உ நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிலருடைய இடையூறுகளினால் கும்பாபிஷேகம் அன்று நடைபெற முடியவில்லை.

# தலைமை ஆசிரியருக்கு கௌரவம்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் பிரதம ஆசிரியராயிருந்த ஸ்ரீமான் ஆர். ஸ்வாமிநாதய்யர், பி. ஏ, எல். டி அவர்களுக்கு அரசாங்கத்தினர் "ராவ் சாஹேப்" பட்டம் அளித்து கௌரவித்திருக்கிறார்கள்.

# திருவண்ணாமலை

## ரமணாச்ரமத்தில் மாத்ரு பூஜை

திருவண்ணாமலையிலுள்ள ஸ்ரீ ரமணபகவானது மாத்ருபூஜை, சென்ற ஞாயிறன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்து பக்தர்கள் வந்திருந்தனர். அதிகாலையிலிருந்தே ஆச்ரமத்தில் ஜனத்திரள் கூடிக்கொண்டிருந்தது. ஸ்ரீ மஹரிஷி, வெளித்தாழ்வாரமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் அமர்ந்து பூஜைகளை சிறப்புற நடத்திவைத்தார். பூஜைகள் சரியாக ஒன்பது மணிக்கு ஆரம்பமாயின. வேதகோஷமும் நாதசுரமும் ஒலிக்க பூஜைகளும் நடந்தேறின. பூஜைக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பட்டது.

## ஹைதராபாத் ஸத்யாக்ரஹம்

ஆரியன் சங்கம் விரைவில், இந்தியாவின் நானாபாகங்களில் 'ஹைதராபாத் சத்யாக்ரஹத்தைப்பற்றி' பொதுமக்கள் முழுவிபரங்களை அறிந்துகொள்ளவேண்டி ஒரு புதிய தூது கோஷ்டியை நாடெங்கும் பிரசாரம் செய்ய அனுப்பும்.

தூது கோஷ்டியில் ஸ்ரீ எம். எஸ். அனே (சட்டசபை அங்கத்தினர்) லாலா தேசபந்து குப்தா, ஸ்ரீ விநாயகராவ், ஆசிரியர் பெபிசர் போன்ற பிரபலஸ்தர்கள் இருக்கிறார்கள்.

# அயல் நாட்டுச் செய்திகள்.

## அமெரிக்கா அரசாங்கத்தை ஒழிக்க சதி

அமெரிக்கா சர்க்காரைக்கவிழ்க்க சதிகள் நடந்து வருகின்றன. பாஸிஸ்டுகள் ஒரு புறமும் பொதுவுடமைக்காரர்கள் ஒரு புறம் அமெரிக்காவுக்கு விரோதமாக வேலைசெய்து வருகிறார்களென்று தெரியவந்தது அமெரிக்கா ஜனப்பிரதிநிதி சபை நியமித்த கமிட்டி விசாரணையில் இந்த ரகசியம் வெளியே வந்தது.

## ஜப்பானின் திமிரான செய்கை

சைனா ஜப்பான் யுத்தம் இன்னும் நின்றபாடில்லை. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குமேல் நீடிக்குமென்று ஜப்பானியர் கூறுகிறார்கள்.

## நான் வரலாமா?

அல்பேனியா மன்னரை முசோலினி நாட்டைவிட்டுத் துரத்தினார். அவர் பல தேசங்களைச் சுற்றி விட்டு இப்பொழுது பிரஞ்சு தேசத்திலிருக்கிறார். இங்கிலாந்தில் வசிக்க அனுமதி கேட்டிருக்கிறார்.

## பெண்கள் ஏற்றுமதி.

அபிசீனியாவில் இதாலியப்பெண்கள் குடியேற வேண்டுமென்று முசோலினி வாரா வாரம் 1000 பெண்களை இதாலியிலிருந்து ஏற்றுமதி செய்து வருகிறார்.

## ஒரு படி இறக்கம்.

ரஷ்யா தேசத்து அந்நிய நாட்டிலாகா அமைச்சர் பதவியை ராஜினாமா செய்த லிட்வினப், தற்சமயம் இங்கிலாந்தில் ரஷ்யஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொள்ளப்போகிறார்.

## அவளன்றி நடக்குமா?

எல்லா நாடுகளும் ஸ்திரிகள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றன. ஜெர்மனி தேசம் மட்டும் ஸ்திரீகளை "சமையலறைக்குச்செல்" என்று உத்திரவிட்டது. இப்பொழுது ஆடவர்கள் ராணுவத்தில் வேலை பார்க்கப் போய்விட்டதால், ஜெர்மனியில் ஸ்திரீகளுக்கு யோகம் பிறந்திருக்கிறது. ஸ்திரீகளை தபால்காரர் வேலைக்கு நியமித்து வருகிறார்கள். சில பெண்கள் டிராம் வண்டி கண்டக்டர்களாக வேலை பார்க்கிறார்கள். பல கடைகளில் பெண்களை சிப்பந்திகளாக வைத்திருக்கிறார்கள். ஜர்மனியில் 64,80,100 பெண் சிப்பந்திகள் பலவித வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## ஸ்ரீ சங்கராசாரியார் விஜய யாத்திரை புதிய விபரம்.

மேன்மைதங்கிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள் கும்பகோணத்துக்கு 28-6-39 இரவு 8 மணிக்கு விஜயம் செய்கிறார்கள். மகாமகக்குளம் மேலக்கரை சத்திரத்தில் இறங்குவார்கள். அன்றிரவு பட்டணப்பிரவேசம் நடைபெறும். மறுநாள் காலை 7-30 மணிக்கு ஸ்ரீ சங்கர மடத்துக்கு விஜயம்.

ஜூன்மீ 22, 23, 24 திருச்சி. 25 மகாராஜபுரம். 26 தஞ்சாவூர். 27 கணபதி அக்ரஹாரம். 28 இரவு குடந்தை விஜயம்.

## மத்திய சட்ட சபை (டெல்லி)

மத்திய சட்ட சபையின் அடுத்த கூட்டம் 30—8—39உ சிம்லாவில் ஆரம்பமாகும்.

## சர்க்காரின் செல்வ நிலைமை

சென்னை சர்க்கார் 1939-40ஆு வரவு செலவு திட்டத்தில் 17 லக்ஷத்து 27 ஆயிரம் ரூபாய் துண்டுவிழுகிறது. புகையிலை வரி, விற்பனைவரி, மூலம் துண்டுவிழுவதற்குப் பதிலாக மிச்சமேற்படுமென்று நம்பப்படுகிறது. 1939ஆு மார்ச்சுமீ 31 தேதி சர்க்காரின் கடன் பாக்கி 19¼ கோடி.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட்.,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம். பைபிண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றாய்செய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

## நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இந்தியாவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸநாதன தர்ம விஷயங்களைப்பற்றியும், முக்கிய செய்திகளைப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் அனுப்பலாம்.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## ஏஜண்டுகள் தேவை,

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய ஊக்கமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும் ஏஜண்டு நிபந்தனைகளுக்கு எழுதவும். மானேஜர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சாக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20·20% அயத் சத்தினால் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸைன்டிபிக்
டி. டி.
மிஸ்க்ஸ் பெருங்காயம்

## அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். மானேஜர்,
"ஆர்ய தர்மம்", கும்பகோணம்.

## எழுத்தாளர்களுக்கு

[நமது "ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டித் தமிழ்நாட்டிலிருக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வியாஸங்களும், கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஸநாதன தர்மத்தைப்பற்றியும், சாஸ்திர ஆராய்ச்சி, சாஸ்திரஸந்தேகங்கள், புராண இதிஹாஸங்கள், ஜோதிஷம், வைத்யம், சங்கீதம், போன்ற விஷயங்கள், சரித்திரக்குறிப்புகள் முதலியவைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதியனுப்பலாம். பொருளாதாரம், அரசியல் நிலவாணி, தத்துவம் தேச விஷயங்களைப் பற்றிச் சிறந்தகட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பத்தில் எத்தகைய பண உதவியும் செய்யமுடியாது. பத்திரிகையின் இதழ்கள் 2 அனுப்பப்படும். செய்திகள், அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## ஒரு வேண்டுகோள்.

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் நேரிலும் சொல்லிவருகிறார்கள். ஆர்யதர்மம் காலடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ் நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதிய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை. ஆசிரியர்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறு காண்டங்களையும் சங்க்ரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்.

## முகபஞ்சசதியில் இரண்டாம் பாகம்
## "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

H ஸ
24 26
29-6-1939

215289

31 329
215287

REGD No. M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY, Estd. 1915

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

विளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு-24 கும்பகோணம் பிரமாதி-௵ ஆனி-மீ 15௳ 1939-௵ ஜுன்-மீ 29௳ லஎ-26

## ஆலயப்பிரவேச மசோதாவுக்கு எதிர்ப்பு

### மதுரை பொதுமக்களின் கண்டனம்

### எதிர்ப்பிரசாரம் நடத்த முடிவு

#### பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் "ஆலயப்பிரவேச மசோதாவை" எதிர்த்துக் கண்டிக்கவேண்டி மதுரையில் ஒரு மாபெருங்கூட்டம் ஜுன்-மீ 20௳ மாலை கூடிற்று

ஏராளமாய் ஜனங்கள் கூடியிருந்தார்கள். மாஜி சப்-ஜட்ஜ் ஸ்ரீமான் ஆர். வேங்கடாஜலம் அய்யர், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமை வகித்தார்.

ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்துப் பலர் பேசினார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன:—

(1) சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் "ஆலயப்பிரவேச மசோதாவை", மதுரை பொதுமக்களின் சார்பாகக் கூடியிருக்கும் இந்தக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்துக் கண்டித்து நாடெங்கும் மீண்டும் பிரசாரம் செய்யவேண்டுமென்று இந்தக் கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

தீர்மானங்களை ஸ்ரீமான் ஆர். கணபதி அய்யர், பி.ஏ., பி.எல். அட்வகேட் பிரேரேபித்தார். ஸ்ரீமான் வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஆமோதித்தார். தீர்மானங்கள் எதிர்ப்பின்றி ஏகமனதுடன் நிறைவேறிற்று.

### ஐந்து பேர்களுக்கு மேல் கூடாதே!

ஜுன்மீ 24தேதி லக்ஷ்மணபுரி. (ஐ. மா.) ஜில்லா மாஜிஸ்டிரேட் இ. பி. கோ. 144 வது பிரிவின்படி இரு தடை உத்திரவுகளைப் பிறப்பித்திருக்கிறார். இரண்டு மாதம் இது அமுலிலிருக்கும். ஐந்து முஸ்லீம்களுக்கு மேல் சேரக்கூடாது. பொதுக் கூட்டங்கள் நடத்தக் கூடாது. மத விஷயத்துக்காக மட்டும் கூட்டம் நடத்தலாம்.

### இன்னும் விஸ்தரிப்பா

அண்ணாமலை சர்வகலாசாலை கட்டிட விஸ்தரிப்புக்காக ரூ 43 ஆயிரம் செலவிடப்பட்டிருக்கிறது. விடுதிச்சாலைக்காக 7 ஆயிரம் ரூ. பண்டிதர்கள் வாசஸ்தலத்துக்குக் 20 ஆயிரம் ரூ. வேலையாட்களின் வீடுகளுக்காக 15 ஆயிரம் ரூ. சர்வகலாசாலை உபயோகத்துக்கு தண்ணீர் கொண்டு வர ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. சர்வ கலாசாலை 26௳ திறக்கப்பட்டது.

### எங்களுக்கும் ஒரு மகாநாடு

எல்லோரும் மகாநாடுகள் கூட்டும் போது மேயர்கள் மட்டும் மவுனமாக இருப்பதா? எனவே, அவர்கள் ஜுலை மீ கடைசி வாரத்தில் கராச்சியில், "இந்திய மேயர்கள் மகாநாடு" ஒன்றை கூட்ட முடிவு செய்திருக்கிறார்கள். டெப்டி மேயர்களும் கலந்து கொள்ளலாமாம். காரச்சி மேயர் ஸ்ரீ ஆர். கே. ஸித்வா தான் மகாநாட்டைக்கூட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

## ஸநாதனிகளே விழுமின்! , எழுமின்!!

### ஆலயப்பிரவேச மசோதாவை தீவிரமாக எதிர்க்கவேண்டாமா?

#### "நாடெங்கும் பிரசாரம் நடத்துக"

#### ஆலயப்பிரவேசத்தினால் ஆதிதிராவிடர்களுக்கு அனுகூலமில்லை

"ஆதித்திராவிடர்கள் ஆலயங்களில் பிரவேசிப்பதினால் அவர்களுக்கு ஒரு அனுகூலமும் ஏற்படப்போவதில்லை. அது அவர்களை எவ்விதமும் முன்னேற்றமடையச் செய்யாது. இந்த யோசனையை அரசாங்கத்தினர் அடியோடு விட்டுவிட வேண்டுமென்று"..........

ஜுன்மீ 26௳ ஸ்ரீரங்கத்தில் ஸநாதனிகளின் மாபெருங்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் கூட்டத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டத்துக்கு கும்பகோணம் திவான் பகதூர் எஸ். ராகவய்யங்கார் தலைமை வகித்தார்.

தலைவர் 'காலக்ஷேபத்தினிடையில் எழுந்திருந்து' ஆதித்திராவிடர்கள் ஆலயங்களுக்குச் சென்றால் மகிமை போய்விடுமென்றும், சாஸ்திரங்களுக்கு விரோதமென்றும், ஸநாதனிகள் ஒருங்குசேர்ந்து ஆலயப் பிரவேச மசோதாவை எதிர்க்கவேண்டும்"............... என்று கேட்டுக்கொண்டார்.

"ஆலய தர்ம சம்ரக்ஷண சபை" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஆலயப் பிரவேச மசோதாவை எதிர்த்துப் பிரசா[illegible] ஒரு மனுஜர் அனுப்பவும், பணம் சேகரிக்கவும், கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டன.

பல் வியாதிகள் கவனிக்கும் இடம்:— T. B. சீதாராம், டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# நாடும் நடப்பும்.

## இலங்கையில் இந்தியர்கள்

இலங்கையிலிருக்கும் இந்தியர்களை விரட்டி அவர்களை அடியோடு அழித்து விட சிங்கள மந்திரிகள் சட்டங்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். இவர்களுக்குக்கவர்னர் பக்கபலமாயிருக்கிறார். இதனைக்கண்டிக்க வேண்டி மேமீ 19 தேதி யாழ்ப்பாணத்தில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம் கூடிற்று. பல தலைவர்கள் மந்திரிகளைக் கண்டித்துப் பேசினர்கள். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தியத் தமிழர்களென்றும், இலங்கைத்தமிழர்களென்றும் இந்தியர்களைப் பிரிக்கும் முறைகளையும் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்டன.

## ஹிந்து ஸ்திரிகளுக்கு ஆபத்து

ஜுன்மீ 23 தேதி பெஷாவரில் மூன்று ஹிந்து ஸ்திரீகளையும், ஒரு ஹிந்துவையும் எல்லைப்புற ஜாதியினர் தூக்கிச் சென்றனர். இவர்களை கிராம வாசிகள் துப்பாக்கியால் சுட்டு ஒரு ஸ்திரீயையும், ஒரு ஹிந்துவையும் மீட்டனர்.

## கண் காட்சி சாலையில் திருட்டு

பாட்னு கண் காட்சி சாலையில் 467 தங்க நாணயங்களும், சில விலையுயர்ந்த சாமான்களும் சில தினங்களுக்கு முன் களவாடப்பட்டன. இதனை ஒட்டி இரண்டு போலீஸ் கான்ஸ்டேபிள்கள், முநிஸிபல்காரியாலயத்து சிப்பந்திகள் மற்றும் 20 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்படி சாமான்களை ஐயாயிர ரூபாய்க்குத்திருடர்கள் விற்றிருப்பதாகத் தகவல் போலீஸாருக்குக் கிடைத்திருக்கிறது.

## "நிண்டாதார் மந்திரி" வேண்டும்

ஐக்கிய மாகாண மந்திரி சபையில் ஒரு நிண்டாதார் மந்திரியை நியமிக்கவேண்டு ஷஹரான்பூரில் நடந்த நிண்டாதார் மகாநாட்டில் வற்புறுத்தப்பட்டது.

## கடைசியில் ஜின்னுவும் ஆதரிக்கிறார்

இஸ்லாமிய மதம் "மது விலக்கை" ஆதரிக்கிறதென்றும், எனவே, பம்பாய் காங்கிரஸ் சர்க்காரின் மதுவிலக்குத் திட்டத்தை ஆதரிப்பதாக முஸ்லீம்லீக் தலைவர் ஜனுப் ஜின்னு ஜுன்மீ 23வ பம்பாயில் கூடிய மாகாண முஸ்லீம் லீக் கூட்டத்தில் கூறினர். ஆதரித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## மற்றொரு வருஷம்

சில வருஷங்களுக்கு முன் சென்னையில் "லக்ஷ்மிகாந்தன் வழக்கு" என்ற ஒரு வழக்கு நடந்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கும். இந்த லக்ஷ்மிகாந்தன் என்றவுவர் ஒரு கம்பிக்கை மோசடி வழக்கில் 7ஞு தண்டனை விதிக்கப்பட்டார். இவர் சேலம் சிறைச்சாலையிலிருக்கிறார். சிறைச்சாலை விதிகளை மீறியதற்காக இவருக்கு ஜுன்மீ 23வ சேலம் ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## பத்தாயிரம் ரூபாய் நஷ்டம்

ராமநாதபுரம் தொனுவலூர் கிராமத்தில் 20வ பகல் 12-மணிக்கு தீவிபத்து ஏற்பட்டது. 90வீடுகளும், 300 வைக்கோல் போர்களும் நாசமாயின. நஷ்டம் சுமார் 10,000 ரூபாய் 400 பேர்களுக்குத் தங்க இடமில்லை. பெரும்பாலும், முஸ்லீம்களும் நிண்டாதார்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறவயல் ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்கார் அல்லல்பட்டவர்களுக்கு அன்னமளித்து உதவினது பாராட்டத்தக்கது.

## "எதிரிகளை நசுக்கிவிடுக"

திருச்சி காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தின் புதிய கட்டிடத்தையும், ஹிந்திபிரசார சபையின் மண்டபத்தையும் ஜுன்மீ 21வ சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் திறந்துவைத்தார். அப்பொழுது காங்கிரஸ் தொண்டர்கள் தீவிர பிரசார வேலைசெய்து காங்கிரஸ் திட்டங்களை எங்கும் நன்கு பரப்பும்படிக் கேட்டுக்கொண்டார். எதிர்கக்ஷி பலப் சேகரிப்பதை "நசுக்கவேண்டுமென்று" மந்திரி கூறினர்.

## தந்திகள் குவிகின்றன.

இலங்கையில் இந்தியர்கள் படும் கஷ்டங்களைப்பற்றி விவரித்து அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அக்ராசனுதிபதிக்குத் தினசரி ஏராளமாய் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதுவரையில் 300 தந்திகள் வந்திருக்கின்றன.

## கோவை விவசாயக்கல்லூரி

கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியில் சேரவேண்டி இவ்வாண்டு 237 மாணவர்கள் மனு போட்டிருந்தார்கள். இதில் 48 மாணவர்களை ஜாதிமுறையில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 16 பிராமணர்கள், 21 ருத்திரர்கள், 6 முஸ்லீம்கள், 5 கிருஸ்துவர்கள். கல்லூரி ஜுலை 3வ திறக்கப்படும்.

## 'தேகப்பயிற்சி அவசியம்"

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் தேகப் பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் கட்டாயம் வரவேண்டுமென்று சர்க்கார் விதி செய்திருக்கிறார்கள். உயர்தர பாடசாலையில் வகுப்புப் பரீக்ஷையில் தேறுவதற்குத் தேகப் பயிற்சியில் திறமை பெற்றிருக்க வேண்டுமாம்.

## மேட்டூர் அணையில் அதிகமில்லை

தென்மேற்கு பருவகாற்று பலஹீனமாக இருந்து வருவதால் மேட்டூர் அணையில் ஜலம் அதிகம் இல்லை. இந்த நிலைமை நீடிக்குமாயின் ஜுலை 3வ ம்பிறகு மேட்டூரிலிருந்து ஜலம் சப்ளை செய்வது கஷ்டமாயிருக்கும் நிலைமை விருத்தியடையும் வரை குறுவை விதை விதைப்பதையோ நடவு சாகுபடியை செய்வதையோ செய்யாதிருக்கும் படி விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## "அவர்கள் அழுவதால்". ........

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் விநோதங்களைப் படிக்கப்படிக்க சந்தோஷமாயிருக்கும். ஒரு பருப்பு வியாபாரி. பெரிய குடும்பம். திடீரென்று தமிழ் மீது பற்று ஏற்பட்டு ஹிந்து தியாலஜிகல் பாடசாலை முன்பு மறியல் செய்தாராம். போலீசார் வியாபாரியை ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்றார்கள். கோர்ட்டை பார்த்ததும் தமிழ்பற்று போய்விட்டது. நீதிபதியே 'என் மனைவியும் குழந்தைகளும் அழுவதால்' சிறை செல்ல விருப்பமில்லையென்று கைதி கூறினர். இனி இவ்விதக் குற்றத்தை செய்வதில்லையென்று உறுதியும் கூறினர். அதன் பேரில் பருப்பு வியாபாரி விடுதலை செய்யப்பட்டார்.

## பிரதம மந்திரிகள் மகாநாடு

ஜுன் மீ 26 பம்பாயில், "பிரதம மந்திரிகள் மகாநாடு" கூடிற்று. பாபு ராஜேந்திர பிரசாத் மகா நாட்டை ஆரம்பித்து வைத்தார். இந்தியாவிலுள்ள 9 மாகாணங்களில் நிர்வாகம் நடத்தும் காங்கிரஸ் பிரதம மந்திரிகள் யாவரும் வந்திருந்தார்கள். மகாநாட்டுக்கு ஸ்ரீ படேல் தலைமை வகித்தார். இதர மந்திரிகளும் அழைப்பிற்கிணங்கி வந்திருந்தார்கள். நாடெங்கும் நடக்கும் வகுப்புச்சச்சரவுகளைப் பற்றி ஆலோசனை நடந்தது.

## ராஜாஜி மீது நடவடிக்கையில்லை

"கனம் ஸி. ராஜகோபாலசாரியார் சென்னைப்பொதுக்கூட்டங்கள் சிலவற்றை இ. பி. கோ. 144. பிரிவின்படி தடை உத்திரவு பிறபித்து தடை செய்து விட்டார்"........என்று சில தமிழ் நாடு காங்கிரஸ் வாதிகள் அ. இ. கா. கமிட்டிக்குப் புகார் செய்திருந்தார்கள். ஸ்ரீ ராஜாஜி தான் 144 பிரிவை உபயோகிக்க நேரிட்டதற்குரிய காரணங்களை விளக்கினர். இதனைக் கேட்டு காரியக்கமிட்டி திருப்தியடைந்து மேற்கொண்டு ராஜாஜி மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை" என முடிவு செய்தனர்.

## கடைசியில் ஸ்ரீ சுபாஷ் வருகிறார்

அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அக்ராஸனதிபதியாயிருந்தவரும், முன்னேற்றக்கட்சி ஸ்தாபகரும் தலைவருமான ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தமிழ் நாட்டுக்கு இம்மாதக்கடைசியில் வருகிறார். இதற்கு முன் மூன்றுதடவைவர முயற்சித்தார். தேக அசௌக்கியத்தினுல் வரமுடியவில்லை.

## இவரல்லவோ ஏழைபங்காளர்

மகர்வால் சாபி ஒரு மகாராஜா. இவருக்கு 52 வயதாகிறது. ஜன்மதினம் ஜுன்மீ 23வ வந்தது; அன்று அவர் குடிகளுக்கு நிலவரியில் 150 ஆயிரம் ரூபாய் வஜா செய்திருக்கிறார். நிலவரியில் பாக்கி வரவேண்டிய மற்றொரு பெருந்தொகையான 1¼ லக்ஷரூபாயையும் வஜாசெய்து விட்டார். வியாபார வரியையும் வஜா செய்ய உத்தரவிட்டார். மக்கள் இது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு மகாராஜாவைப் போற்றி வாழ்த்தினர்கள். இதரமகா ராஜாக்கள் இதனை பின் பற்றுவார்களாக?



## யஜுர் வேத உபாகர்ம

(அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியர் மீமாம்ஸா சிரோமணி, எழுதுவது)

இவ் வருஷத்திய உபாகர்மாவைப் பற்றி பத்திரிகைகளில் சில சர்ச்சைகள் வெளிவந்திருக்கின்றன.

இவ்வருஷத்திய யஜுர் உபாகர்மாவை இரண்டாக பிரிக்கலாம். ஒன்று, முதல் உபாகர்மாவை எப்பொழுது செய்வது என்பது மற்றொன்று இரண்டாவது உபாகர்மாவைப் பற்றியது. இவ்வருஷம் உள்ள நிலைமையில் எல்லா உபாகர்மாக்களையும் ஆவணி மாதத்தில் செய்யவேண்டுமென்பது தான் க்ரந்தங்களை நன்கு பரிசீலனை செய்ததில் வெளியாயிற்று.

### முதல் உபாகர்ம

முதல் உபாகர்மாவைப் பற்றின ஆக்ஷேப ஸமாதானங்களை கவனிப்போம். ச்ராவணீ ப்ரோஷ்டபதி இரண்டிற்கும் தோஷமிருந்தால் ஆஷாட்யில் உபாகர்மாவை செய்யவேண்டுமென்பதில் விவாதமில்லை. ஆனல் இவ்வருஷத்திய ஆஷாடியானது ஆனி மாதத்தில் வருவதாலும், அதிலும் சில தோஷங்கள் இருப்பதாகத்தெரிவதாலும் ஆனியில் உபாகர்மாவைச் செய்வது உசிதமாயில்லை. ஆஷாடயில் செய்யவேண்டுமென்று விதி இருந்தாலும் மிதுன ஆஷாடயில் செய்ய நியாயமில்லை.

உவாகஃ ஆ கதஃஷா
கக-டவெ ஷிவாகஷெ ।

என்று ஹேமாத்ரியில் உதாஹரிக்கப்பட்ட வசனத்தில் கடக— ஆஷாடியே விசேஷிக்கப்படுகிறது. அதாவது ஆஷாடி என்று பொதுவாக விதிக்கப்பட்ட காலத்தை இந்த வசனம் கடக— ஆஷாடி என்று விசேஷிப்பதால் மிதுன ஆஷாடிக்ராஹ்யமன்று என்று வசனத்தாலேயே விதிக்கிறது. இந்த வசனபலத்தையும் நியாயத்தையும் கொண்டு தான் புருஷார்த்த சிந்தாமணியில்

'ததுாவி ஷி-நவஸ் வ-ஷயஃபெ
ஃ நகாயஃஜி வஷவஃபெவொகஃ'

என்று ஆனிமீ கூடாதென்று தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஹேமாத்ரி முதலிய நிபந்தனக்காரர்கள் ஆஷாடியைக் காலமாக சொல்ல வேண்டிய இடங்களில் கர்கட சப்தத்தால் சொல்வதால் இந்த நிர்ணயம் மற்ற நிபந்தனக்காரர்கள் எல்லோருக்கும் ஸம்மதமென்று தெரிகிறது.

மேலும்— கீழ் கண்ட வசனங்கள் கர்கட ஆஷாடியிலேயே அதாவது ஆடி மாதத்திலேயே உபாகர்மாவைச் செய்ய வேண்டுமென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகின்றன.

ஊவாஉயெவஃவாகஃ ந ஹவெ
ஃஷிவெ தஃா । ஆஷாடெ ஶ்ராவணா
கஃயஃ கக-டவெ ஷிவாகஷெ ॥
ஆஷாடெ வாவி கதஃவூ ககஃ
டவெ ஶவள வதி ।

இந்த வசனங்கள் 40 வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்ட 'ஆத்யோபாகிருதி நிர்ணயம்' என்ற புஸ்தகத்தில் 93 வது பக்கத்தில் காணப்படுகின்றன. அதை எழுதிய காஞ்சி ஸ்ரீ பட்டப்பா ஸ்வாமிகளை நிரிமதஸ்த பண்டிதர்களும் அறிவர். ஹேமாத்ரி வசனமும் இந்த வசனங்களையே அநுஸரிக்கிறது, இந்த வசன ஸித்த நிர்ணயத்தையே புருஷார்த்த | சிந்தாமணிக்காரர், சொன்னுரென்பது தெளிவாகிறது,

மேலும் ஆனிமீ பூர்ணமியில் மூல நக்ஷத்திரமும் சனிக்கிழமையும் சேர்ந்திருக்கிறது. இந்த இரண்டும் தோஷமென்று காலப்ரகாசிகைக்ரந்தத்தாலும் தோழப்பர் க்ரந்தத்தாலும் ஏற்படுகிறது.

காலப்ரகாசிகையில் மூல நக்ஷத்ரத்துடன் கூடிய ஆஷாடமானது உபாகர்மாவில் வர்ஜிக்கத்தக்கதென்று சொல்லப்படுகிறது. இதன் கருத்தை நன்கு பரிசீலனை செய்யவேண்டியதவச்யம்.

தோழப்பர் கண்டபூஷணத்தில் ப்ரோஷ்டபதி மாதத்தில் உபாகர்மா சனி செவ்வாய் கிழமைகளில் வந்தால் தோஷமுண்டென்றும் முக்யமான ச்ராவணியில் சனி செவ்வாய்கிழமைகளில் உபாகர்மா வந்தால் தோஷமில்லை என்றும் குறிப்பிடுகிறார். முக்ய காலமான ச்ராவணியில் சனி, செவ்வாய் யோகத்தால் தோஷமில்லை என்று சொல்வதே அவருடைய முக்ய நோக்கமாகத்தெரிவதால் கௌண காலங்களில் சனிவார தோஷம் பார்க்க வேண்டியது அவச்யமென்று வெளியாகிறது. வசனத்தில் ப்ரோஷ்டபதி என்று ஒரு கௌண காலத்தை மட்டும் குறிப்பிட்ட போதிலும் மற்றொரு கௌண காலமான ஆஷாடிக்கும் இது பொருந்துமென்பது தோழப்பர் அபிப்பிராயமாகும்.

தாரவாரதிதிஜா என்ற வசனத்தை இதற்கு ப்ரமாணமாகக்காட்டியதே இதை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில், "தாரவார" என்ற வசனமானது முக்ய காலத்திற்கு திதிவார நக்ஷத்ர தோஷத்தைக்கிடையாதென்று சொல்வதன் மூலம் கௌண காலத்திற்கு வாராதி தோஷம் பார்க்க வேண்டுமென்பதை ஸ்திரப்படுத்துவதாக இருக்கிறது. ஆகையால், சனிவார தோஷமிருப்பதால் ஆனியில் உபாகர்மா செய்யக் கூடாது.

மேலும்— இங்கு ஸௌரமானப்படி ஆனி மாதமும் மல மாதத்தில் சேர்ந்ததென்று ஜோதிஷர்கள் அபிப்பிராயப்படுவதும் கவனிக்கத்தக்கது. எனவே, ஆவணியில் செய்வதே நியாயமானது, ஆபஸ்தம்பிகளுக்கு ச்ராவணீ முக்யமாகையால் ஆவணி விசேஷமானது.

### த்விதீயாதி உபாகர்ம

இதையும் ஆவணியில் செய்வதே நியாயம் அதிமாஸம் ஏற்படும் காலங்களில் இரண்டாவது மாதமே சுத்த மாதமென்றும் அது தான் கர்மாக்கள் செய்ய அர்ஹமென்றும் எல்லோரும் ஒப்பிய நிர்ணயம். இரண்டாவதாகிய நிஜசிராவணியே க்ராஹ்யத்தக்கதென்று

உவாகஃ தயொதஃஃ காஃஉ
தவஃஷஃகாஃ । ஊவல வஃஜள வஷெ கா
யஃஃ ॥

என்பது போன்ற வசனங்கள் குறிப்பாகச் சொல்லுகின்றன. தோழப்பர் இரண்டாவது உபாகர்மாவுக்கு அதிமாஸ தோஷம் கிடையாதென்றசொன்னுராகிலும் அவரே கண்டபூஷணத்தில் ஷை வசனமானது எல்லா உபாகர்மா விஷயமாக ஆகலாம் என் கிற குறிப்பிடுகிறார்.

வவஃவிஷயஃதஃஃ ஶஃஊவ
வஃவாசஃ தவஃவி ஶ்ராவணசவாவ

அவர் ஸர்வ விஷயமென்றபக்ஷத்தை தூஷிக்காமல் அதை ஆதரித்து பலபடுத்தியே எழுதுகிறார். ஸர்வ விஷயமென்பது அவருக்கு இஷ்டமில்லாதிருந்தால் அதைக்கண்டித்திருப்பாரல்லவா! ஆகையால் தோஷப்பருக்கு நிஜச்ராவணீயில் செய்வதே அதிக நோக்கமென்று வெளியாகிறது.

## யஜுர் உபாகர்ம நிர்ணயம்

ஸ்ரீ டி எஸ் வேங்கட்டருமய்யர், பீ. ஏ, திருச்சி,

இவ்வருஷத்தில் சிராவண காலத்தைப் பற்றி எங்கும் ஸந்தேகம் ஏற்பட்டிருப்பதால் ஆஸ்திகர்களானநண்பர்களின் உபகாரத்தின் பொருட்டு இங்கு ஸபையில் திருச்சி அத்வைதசபா பண்டிதர் தர்மக்ஞபோலகம் ஸ்ரீசுந்தரேசசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட தீர்மானத்தை இப்பத்திரிகை மூலமாக தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

ஆடி மாஸம் மலமாஸமாகையாலும் ஆவணிபுரட்டாசி மாதங்களுக்கு சுக்ராஸ்தமன தோஷமிருப்பதாலும் தோஷமில்லாத ஆஷாட பௌர்ணமியை ஆபஸ்தம்பிகளுக்கும் போதாயனிகளுக்கும் காலமாக எடுத்துக் கொள்வது வ்யாஸ ஸ்ம்ருதி என்பது முதலிய க்ரந்தங்களுக்கு ஸம்மதம் என்பது வைத்யநாத தீக்ஷிதீயம் முதலிய க்ரந்தங்களால் வ்யக்தமாக தெரிவதால் இவ்வருஷம் ஆனி மீ 17வ ஸ்திரவாரம் உபாகர்மாவை யஜுர் வேதிகள் அனுஷ்டிக்க வேண்டியது உசிதம் ஸ்ரீ சோழவந்தான் சங்கர சாஸ்திரிகள் வேறுவிதமாக ஜுன்மீ 1வ ஆர்யதர்மம் மூலம் வெளியிட்டிருப்பதால் மேலே சொல்லியிருக்கிற விஷயங்களை நன்ருக கவனிக்க வேண்டுமாக அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வார்ஷிகமித்யேததாசக்ஷதே என்கிற ஆச்வலாயன ஸூத்ர வசனம் ரிக்வேதிகளுக்கு மாத்திரமே ஒழிய மற்றவர்களுக்கு ஸம்மதப்படாது. அப்படியே ஸம்மதப்படுத்தினல் ஆஷாட பௌர்ணமி வர்ஷருதுவில் சேராததால் அதை காலமாக குறிப்பிடுகிற வைத்யநாததீக்ஷிதீயம் முதலியக்ரந்தங்களின் விதாதம் கண்டிப்பாய் ஏற்படும். வைத்யநாத தீக்ஷிதீயச்ராத்த காண்டத்தில் ருது நிர்ணயம் ரகஸ்யத்தில் மீனத்தை முதலாக வைத்து ருதுக்களை கணக்கிடும்படி ஒரு பக்ஷம் சொல்லியிருப்பதை காண்பித்து ஆஷாட பௌர்ணமியையும் வருஷ ருதுவில் சேர்க்கலாமென்று ஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் எழுதியிருப்பது முற்றிலும் ஸங்கதமில்லை. ருதுக்கள் 2 விதம் சாந்திரம் ஸௌரம் என்று அதில் சாந்திரம் சைத்ரம் முதலானது ஸௌரம் மேஷம் முதலாயுள்ளது. அல்லது மீனம் முதலாயுள்ளது. ச்ராத்த காண்டம் ஸௌரமானத்தை மீனுதியாகசொல்லப்பட்ட விஷயத்தை, சாந்த்ரமானப்படி ச்ராவண காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டிய ஸந்தர்பத்தில் உதாகரிப்பது மிகவும் பொருத்தமுள்ளதல்ல. ச்ராவணகாலம் சாந்த்ரமானப்படிதான் என்பதற்கு வேறு ப்ரமாணங்களிருப்பதால் அது விஷயத்தில் அபிக்ஞர்களுக்கு விவாதமிருக்காதென்றெண்ணி இங்கு அதை விவரிக்கவில்லை. மிதுனஷாடி வர்ஜம் என்று சாஸ்த்ரங்கள் சொல்லியிருப்பதற்கு மூலவசனம் எழுதப்படாததாலும் அவர்களால் உதாகரிக்கப்பட்ட புருஷார்த்த சிந்தாமணி என்கிற நமது தக்ஷிணதேசத்தின் ஆசார விஷயத்தில் அங்கீகரிக்கப்படாத க்ரந்தத்திலும் ஆதாரவசனத்தை காணப்படாததினுலும் நமக்கு ப்ரமாணமான வைத்யநாத தீக்ஷிதீயம், தர்மஸிந்து, நிர்ணயஸிந்து, ஸ்ம்ருதி கௌஸ்துபம், முதலிய நிபந்தனக்ரந்தங்களில் ஒருவிடத்திலாவது உத்தராயணத்தை அல்லது மிதுனமாஸத்தை நிஷேதம் செய்யாததாலும், ஆனிமீ 17வ ச்ராவணம் செய்வதில் ஒருவித தோஷமும் தெரியவில்லை. தர்மப்ரவ்ருத்தி என்கிற க்ரந்தத்தில் உத்தராயணத்தில் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டதாக சிலர் சொல்லுகிறார்கள். இங்கு

(தொடர்ச்சி 9பக்கம் பார்க்கம்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பிரமாதி-ளு ஆனி-மீ 15உ

## ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளின் விஜயம்.

மஹா மஹிமை பொருந்திய ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியஸ்வாமிகளவர்கள் நீண்ட கால திக்விஜயயாத்திரையை ஒருவாறு முடித்துக்கொண்டு நேற்றிரவு கும்பகோண க்ஷேத்ரத்திற்கு எழுந்தருளினார்கள். இந்தப்புனித ஸந்தர்ப்பத்தை முன்னிட்டு, பக்தி சிரத்தா விநய, நமஸ்கார பூர்வகமான எளிய ஸ்வாகத நிவேதனத்தை ஸ்ரீஸ்வாமிகளவர்களின் திவ்ய ஸன்னிதியில் ஸமர்ப்பித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீஸ்வாமிகள் பல வர்ஷங்களாக மிகக்கிலேசகரமானதும், ஓய்வில்லாததுமான தீர்த்த க்ஷேத்ர யாத்திரையை மேற்கொண்டிருந்தும், அதனால் அவர்களுடைய திருமேனிக்கு எவ்வித அஸௌகர்யமும் ஏற்படாமல் பாதுகாத்து அநுக்ரஹித்த பகவானுக்கு முதலில் நமது நன்றியைச் செலுத்தவேண்டும். பக்தர்களின் பாக்யமே உருவெடுத்துப் பிரகாசிப்பது போன்ற ஸ்ரீஸ்வாமிகளின் திருமேனியை பூர்ண ஆரோக்யாதிகளுடன் கூடிய நிலைமையில் ஸேவித்துக் கொள்ள நேர்ந்தது பெரும் பாக்யமேயாகும்.

ஸ்நேஹம், பக்தி போன்றவை, பரஸ்பரம் நீண்ட காலப்பிரிவினால், குன்றியோ, மறைந்தோ போய் விடுமென்று சிலர் வாதிப்பதை ஸ்ரீகாளிதாஸ கவி ஒப்பவில்லை. இஷ்ட வஸ்துவின் பிரிவினால், அதனிடம் ஸ்நேஹமானது பன்மடங்கு வளர்ந்து குவியுமேயல்லது குன்றாதென அவர் நிரூபித்தார்.

இந்த உண்மையானது நேற்று குடந்தையில் காணப்பட்ட குதூஹலத்தில் நன்றாகவிளங்கியது. வெகு நீண்டகாலம் பிரிந்து நின்ற பக்தர்களிடம் ஸ்ரீஸ்வாமிகளின் கருணை நிறைந்த அன்பும், ஸ்ரீஸ்வாமிகளிடம் பக்தர்களின் பழுதற்ற பக்தியும் அளவற்று வெளியாயின. "எங்கெங்கு அதிசாஸாதாரணமான மேன்மை காணப்படுகிறதோ, அங்கு பகவதம்சம் நிறைந்திருப்பதாக நினைக்கவேண்டு" மென்று கீதையில் பகவான் கூறினார். அத்தகைய பகவதம்சம் பொருந்திய மஹான்களில் நமது ஸ்ரீஆசாரிய பாதாளும் சேர்ந்தவர்களென்பதை ஸ்ரீ ஸ்வாமிகளின் உண்மையான மஹிமையை நன்கறிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளிய காலம் முதல் இன்று வரையில் நடந்துள்ள அதிசயிக்கத்தக்க கணக்கற்ற ஸம்பவங்களைக் கண்கூடாகப் பார்த்து வருகையில் கூட அதில் ஸந்தேஹப்படுவாருண்டோ! உயர்ந்த குணங்கள் யாவும் ஒரேயிடத்தில் திரண்டு பிரகாசிக்கும் ஸ்ரீமஹாஸ்வாமிகளைப்போன்ற மஹாபுருஷர்களைக் காண்பது மிக்க அரிதென்பதில் ஐயமில்லை. அபாரமான சாஸ்திர ஞானமும் அத்புதமான ஆத்மாநுபவமும், பக்ஷபாதமற்ற நடுநிலைமையும், கலப்பற்ற காருண்யமும் மாசற்ற மதப்பற்றும், பழுதற்ற பகவத் பக்தியும் வேறு பல குணங்களும் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் கார்யகாங்களாக பிரகாசிப்பதை ஒவ்வொருவரும் அநுபவத்தில் கண்டு வருவதே எல்லாவற்றையும் விட நிகரற்ற வைராக்ய மூலமாக ஏற்பட்டுள்ள தபோமஹிமையானது அதிசயிக்கத்தக்கதாயிருக்கிறது. ஸ்ரீஸ்வாமிகளின் விஜய யாத்திரை காலத்தில், மஹாராஜாக்களும், பெரியபடிப்பாளிகளும், மேதாவிகளும் பண்டிதர்களும், ராஜ்ய வாதிகளும், சீர்திருத்த வாதிகளும், நாஸ்திகவாதிகளுமாக கணக்கற்ற பற்பல பிரிவினரும் ஸ்வாமிகளை தர்சித்து மட்டில்லா மகிழ்ச்சியுடன் ஸ்வாமிகளிடம் ஈடுபட்டிருந்த விஷயம் யாவருமறிந்ததல்லவா?

தற்காலம் பாரததேசத்தில் ஸநாதன தர்மத்தின் நிலைமையானது மிக்க அபாயமாயிருந்துவருகிறது. தர்மத்தைப் பாதுகாக்க கடமைப்பட்ட க்ஷத்திரியர்கள் இல்லை, அத்தகைய அரசாட்சியும் கிடையாது. இந்த நிலைமையில் நமது மதாசாரிய ஸ்தாபனங்களை விட மதத்தை ஸம்ரக்ஷிப்பவர்கள் வேறு கிடையாது, இந்தக் கடமையை மதித்தே நமது பரமாசாரியர் தங்களது விஜய யாத்திரை மூலமாயும், வேறு பல வழிகளாலும் தர்மத்தைக்காத்து, ஜனங்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள், அந்த தர்மகைங்கர்யத்தை ஸ்ரீஸ்வாமிகள் எவ்வளவு உறுதியுடன் நிறைவேற்றி வருகிறார்களென்பதை பாரததேச மக்களில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

சாஸ்திரங்களை ஆராய்ந்து, அதன்படி தாமும் ஆசரித்து பிறரையும் ஆசரிக்கும்படி செய்வதே ஆசார்யர்களின் லக்ஷணமாகுமென்பது மநுவாக்யம். இவ்வித ஆசார்யர்களாலும், அவர்களைப் பின்பற்றும் சிஷ்யர்களாலுமே பாரததேசத்தின் மஹோன்னத மஹிமையானது இன்றைக்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைக்கு எவ்விதக் குறைவும் ஏற்படக்கூடாதென்ற கவலையினாலேயே ஸ்ரீ ஸ்வாமிகள் இந்த தர்மதேசமெங்கும் தீவ்ரமான சுற்றுப்பிரயாணத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஸ்வாமிகளுடைய யாத்திரையால் தேசத்தில் மிகுந்த நன்மை ஏற்பட்டிருக்கிறது. அதைக் குறைத்துக் கூறமுடியாது. ஸநாதனதர்மத்திற்குப் புத்துயிர் ஏற்பட்டுள்ளது. நாஸ்திக வாதங்கள் சிர்குலைந்துவருகின்றன. வழி தவறிய பலர் நல்வழிப்பட்டிருக்கிறார்கள். ஹிந்து ஸமூகமும் மதமும் மிகுந்த பலம் பெற்றிருக்கிறது.

இத்தகைய நிகரில்லாத கார்யங்களைச் செய்யவே பகவானால் அவதரிப்பிக்கப்பட்டுள்ள நமது ஸ்ரீ பரமாசாரியாள் ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதாளைப்போல் பாரததேச தர்ம ஸம்ரக்ஷண கார்யத்தில் மேன்மேலும் ஈடுபடும்படி. நீண்ட ஆயுளையும், ஆரோக்யத்தையும் ஸ்ரீஸ்வாமிகளுக்கு பகவான் அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

### அறிக்கை.

ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகளுக்குவாசித்துக் கொடுக்கப்பட்ட உபசாரப்பத்திரங்களை அடுத்த "ஆர்ய தர்மம்" இதழில் விபரமாக வெளியிடப்படும்.

மானேஜர் ஆர்யதர்மம்,
கும்பகோணம்.

### உபாகர்மா

### திருத்தம்

இன்று 8-வது பக்கத்தில், "தக்ஷிணாயனம் கூடாது" என்றிருப்பது தவறு. "உத்திராயணம் கூடாது" என்று அதை திருத்தி வாசிக்கவும் கடைசி வரியிலும் இப்படியே திருத்தவும்.

### இதுவோ சுதந்திரம்!

"பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் கொடுத்தோம். ஹிந்துக்களை நன்கு நடத்தி வருகிறோம்!!........ என்கிறார் ஹக் புலி. இவர்தான் வங்காள பிரதம மந்திரி. சில சமயங்களில் தன்னை "புலி, காடி, சிங்கம்" என்று யாவரும் கருத வேண்டுமென்று கூறுவார். இத்தப்புலி இப்போது வங்காளத்தில் ஹிந்து பத்திரிகைகளின் மீது சீறுகிறது. ஆனந்த பஜார் பத்ரிகா. ஜகந்தர் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கிறது. இதுவோ பத்திரிகை சுதந்திரம்!

### இப்பொழுது என்ன செய்வீர்கள்.

டோரான் என்ற இடத்தில் ஸத்யாக்கிரஹத்தில் சேர வேண்டி தொண்டர்கள் ஒருங்கு சேர்ந்தார்கள். ஊர்வலமாக செல்ல விரும்பியபொழுது போலீஸார் தடை செய்து விட்டார்கள். இதனைக் கண்டித்து ஹிந்து வியாபாரிகள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர். ஒரு ஹிந்து கடை கூட திறக்கப்படவில்லை. "இப்பொழுது என்ன செய்வீர்கள்" என்று தொண்டர்கள் போலீஸாரை கேட்டார்களாம்.

"தான விரதம்":—28 பக்கங்கள் கொண்டது. நல்ல காகிதம். சேர்ந்தியான அச்சு. உயர்ந்த பதிப்பு.

விலை:— இரண்டணா.
ஆசிரியர்:— மோரூர். ஸ்ரீ கா. சுப்பு குட்டி அய்யர்.
பிரசுரகர்த்தா:— (கிடைக்குமிடம்) ஸ்ரீ த. கா. குமாரஸ்வாமி பி. ஏ, பாடிக்கிராமம், வில்லிவாக்கம் போஸ்டு.

M. S. M. Ry.

"தானவ்ரதம்" ஒரு முதிய ஸுமங்கலியான ஆசிரியையினால் பெண்பாலருக்கென்றே எழுதப்பட்டது. இதிஹாஸ புராணங்களில் வரும் உபாக்யானங்களைப்பாட்டுகளாக அமைத்திருக்கிறார். இறைவனருளால் இவருக்கு கவிதை கட்டும் திறமை ஏற்பட்டதாம். இவருக்கு இலக்கண இலக்கியங்கள் தெரியாதாம். இந்நூலை இயற்றி இருபது ஆண்டுகளாகின்றன. ஆனால், ஸ்ரீ த. கா. குமாரஸ்வாமி, பி. ஏ வேண்டுகோட்கிணங்கி இந்நூலை இப்பொழுது அச்சு வாகனத்தில் ஏற்ற இவர் இணங்கினார்களாம். இந்தப் புத்தகத்தில் 47 விருத்தங்கள் உள. பதவுரையுடன் பிரசுரித்திருந்தால் நன்றாயிருக்கும். பாடசாலைகளில், "ஸ்தோத்திரப்புத்தகமாக" வைக்கலாம் என்பது நமது அபிப்பிராயம்.

L. S. மணி.



# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள்

## குடந்தை விஜயம்

## நகரவாசிகளின் குதூகலம்

## வழி நெடுக வரவேற்பு

### இருபது வருஷங்கள் திக்விஜயத்துக்குப்பின் திரும்பினார்கள்

28—6—39 10மணிக்கு ஸ்ரீ காஞ்சிகாமகோடி ஸ்ரீமத் சங்கராசரியஸ்வாமிகள் குடந்தைக்கு விஜயம் செய்தார்கள். மாலை 7மணி முதற்கொண்டே எல்லா ரஸ்தாக்களின் வழியாகவும் திரள் திரளாக ஜனங்கள் புதுப்பாலம் ஸ்ரீவரதராஜ ஸ்வாமி கோவில் நோக்கிச் சென்ற வண்ணமாயிருந்தனர். சில தினங்களாக நகரமெங்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் விஜயத்தைப்பற்றியே பேச்சாயிருந்ததால் ஸ்திரீ புருஷர், பாலர் முதலாக எல்லா வகுப்பு மகாஜனங்களும் பல்லாயிரக்கணக்கில் அங்கு கூடிவிட்டார்கள். வரவேற்புக்கமிட்டியாரும் மிக திறமையான ஏற்பாடுகளைச்செய்திருந்தார்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் ஊர்வலமாகச்செல்லக்கூடிய தெருக்களில் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் ஆங்காங்கு நல்வரவு கூறி வளைவுகள் கட்டப்பட்டிருந்தது.

சரியாகப்பத்து மணிக்கு ஸ்ரீமத் ஆசார்யாள் ஸ்வாமிமலையிலிருந்து ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந்நிதிக்கு விஜயம் செய்தார்கள், வேத கோஷத்துடன் பூர்ணகும்பம் முதலிய வரவேற்பு மரியாதைகள் செய்யப்பட்டபின் ஸ்ரீஸ்வாமிகள் கோவிலுள் சென்று ஸ்வாமி தர்சனம் செய்து விட்டு, அங்கு வந்திருந்த நகர முக்யஸ்தர்கள் சிலருக்கு தர்சனமளித்த பின் பெரிய ஊர்வலம் புறப்பட்டது.

ஸப் ஜட்ஜ், ஸ்ரீமான் நாராயணசாமி அய்யர், முன்ஸீப் ஸ்ரீபார்த்தசாரதி அய்யங்கார், வலங்கிமான் முன்ஸீப் ஸ்ரீ வெங்கடராமய்யர் ஸ்ரீமான் தாசில்தார் ஸ்ரீ கோபால நம்பியார், முனிஸிபல் சேர்மன் சிங்காரம் செட்டியார், ஸ்ரீமான்கள் எம். கே. ஸ்ரீ தியாகராஜய்யர், ஏ. ஸுப்ரமண்ய அய்யர், வைத்யநாதய்யர், ஸுப்ரமண்ய ஜி. வி. வெங்கட்டராமய்யர், கும்பகோணம் பாங்கின் மானேஜிங் டைரெக்டர் அய்யர், டாக்டர் மகாலிங்க அய்யர், கும்ப எஸ். மகாலிங்கய்யர், கே. குப்புஸாமியய்யர் மாஜி கலெக்டர் . ரங்கஸாமி அய்யங்கார், ஓ. என் சுப்பிரமண்ய அய்யர், கே எஸ். கல்யாணஸுந்தர நாராயணசாமி அய்யர், நகரப்பிரமுகர்கள் பல சாஸ்திரிகள் முதலிய அத்வைத சபா பண்டிதர் திருவாதி ஸ்ரீ ரும், மஹாமஹோபாத்தியாய விஸ்வநாத சாஸ்திரிகள் ஆங்கரை ஸ்ரீ ரங்கஸாமி சாஸ்திரிகள், ஸ்ரீகிருஷ்ணமாசாரியார், அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் முதலிய அநேக பண்டிதர்களும் வந்திருந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். ஏராளமான லைட்டுகள், தீவட்டிகள், மத்தாப்பு வாணவேடிக்கைகளுடனும் இனிய நாதஸ்வரம், பாண்டு வாத்யங்கள் முழங்க, நன்கு அலங்கரிக்கப்பட்ட நான்கு யானைகள் கம்பீரமாக முன் செல்ல, ஏராளமான இடுபிடிகளுடன் ஊர்வலம் வெகு சிறப்பாகப் புறப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகள் பெரியபல்லக்கில் எழுந்தருளியிருந்து ஜனக் கூட்டத்திற்கு நன்கு தர்சனம் கிடைக்கும் வண்ணம் அடிக்கடி பல்லக்கைத்திருப்பச் செய்தும் அன்புததும்பும் பார்வையுடன் ஜனத்திரளை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார்கள். ஊர்வலம் செல்லும் வழியெங்கும் இரு புறத்திலும் ஏராளமான ஜனங்கள் நின்று தர்சித்தனர். வரவேற்புக் கமிட்டியார் செய்திருந்த ஏற்பாட்டின்படி ஊர்வலமானது ஸ்ரீ ஆதிகும்பேச்வரர்கோவிலைப் பிரதக்ஷிணம் செய்து கொண்டு வந்தது கோவில் வாசலில் கோவில் மரியாதைகளுடனும், பூர்ண கும்பத்துடனும் கோவில் தர்மகர்த்தாக்கள் ஆசார்யஸ்வாமிகளை வரவேற்று உபசரித்தார்கள். பிறகு பேட்டை நாணயக்காரர் தெருவிற்கு சென்று பிறகு பேட்டுத்தெரு காமாக்ஷிஜோஸ்யர்தெரு மடத்துதெரு வழியாக மஹாமஹக்குளத்தெரு சென்றது. ஊர்வலம் முடியும்வரையில் ஜனக் கூட்டம் சிறிதும் குறையவில்லை.

ஊர்வலமானது சோலையப்பமுதலித்தெரு முனையில் வந்தபோது அக்கிரஹாரவாஸிகள் ஸ்ரீமான் அய்யாத்துரை அய்யர் தலைமையில் வேதகோஷத்துடன் பூர்ண கும்பம்கொடுத்து உபசரித்தார்கள். வெள்ளிக்கிழமை இரவு ஸ்ரீ ஸ்வாமிகள் சோலையப்பமுதலித் தெருவிற்கு எழுந்தருளுவார்கள்.

கடைசியாக இரவு 3மணி ஸுமாருக்கு ஊர்வலம் முடிந்து ஸ்ரீஸ்வாமிகள் மஹாமஹக்குளம் மேல்கரை அரமனை ஸ்ரீ ராமய்யர் ஸத்திரத்தில் இறங்கினார்கள்.

ஸௌராஷ்டிர பிராம்மண ஸமூஹப் பிரமுகரான ஸ்ரீமான் ஏ. ஆர். ராமய்யாவர்கள் அங்கு ஸ்ரீஸ்வாமிகளை வரவேற்று தக்கபடி உபசரித்தார்கள்.

#### ஸ்ரீமடத்திற்கு விஜயம்

வியாழக்கிழமை காலையில் ஸ்ரீ ஸ்வாமிகள் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீமடத்திற்குப் புறப்பட்டார்கள். 22வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீமடத்திற்கு விஜயம் செய்யும் புண்ய ஸந்தர்ப்பத்தைக்காண விரும்பும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீமடத்தின் வாசலில் காத்திருந்தனர். 8 மணிஸுமாருக்கு ஸ்ரீஸ்வாமிகள் ஊர்வலமாக ஸ்ரீமடத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள். பலவிடங்களில் பூர்ண கும்பமரியாதைகள் செய்யப்பட்டன.

#### ஆரியதர்மம் பத்திரிகாலயத்தில்

ஸ்ரீஜனார்தன அச்சுக்கூடம், ஆர்யதர்மம் கார்யாலய வாசலில் மேற்படி கார்யாலயத்தார்களால் பூர்ணகும்பம் கொடுத்து உபசரிக்கப்பட்டது. காரியாலயம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீமடத்திற்கு சென்றதும் வேதகோஷங்களும், மங்கள வாத்யங்களும் முழங்க சுபமுஹூர்த்தத்தில் ஸ்ரீதிரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீச்வரஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீமடத்தில் பிரவேசித்தார்கள். அச்சமயம் ஜனங்கள் அடைந்த ஸந்தோஷத்திற்கும், உத்ஸாஹ ஆரவாரத்திற்கும் அளவில்லை.

ஸ்ரீஸ்வாமிகள் உள்ளே சென்றதும் பொது ஜனங்களுக்குத் தர்சனம் கொடுக்க ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தார்கள்.

நேற்றிரவைப் போலவே நகரப்பிரமுகர்களும் வித்வான்களும், பொதுஜனங்களும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். ஸ்திரீ, புருஷர்களும் நூற்றுக்கணக்கில்ஸ்ரீஸ்வாமிகளை தரிசனம் செய்துகொண்டார்கள்.

ஸ்ரீமடத்தில் பிரவேசித்த சுபகாலத்தை முன்னிட்டு அங்கு வந்திருந்த வித்வான்களுக்கு முதலில் ஸம்மானம் செய்யப்பட்டது.

#### பொது ஸ்தாபனங்களின் உபசாரம்

பிறகு ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு பல பொது ஸ்தாபனங்களின் சார்பாக எல்லா பாஷைகளிலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அத்வைதஸபா ஸம்ஸ்க்ருத வரவேற்புப்பத்திரத்தை ஷை ஸபா பண்டிதர் பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் படித்துக் கொடுத்தார்கள்.

தமிழ், இங்கிலீஷ் ஆகியவைகளில் பொது ஜன வரவேற்புப் பத்திரத்தை ஸ்ரீமான் ஸி. எஸ். தீக்ஷிதர் வாசித்துக்கொடுத்தார்.

ராமமந்திரம் அத்வைத பாடசாலை உபாத்யாயர் ஸ்ரீரங்கஸாமி சாஸ்திரிகள் ஆத்ம வித்யா பூஷணம் ஸ்ரீஜகதீஸ்வர சாஸ்திரிகள், மாஜி தாசில்தார் ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் முதலியவர்களும் இனிய ச்லோகங்கள் மூலமாக நல்வரவு கூறினார்கள்.

தமிழ் பண்டிதர் ஸ்ரீ ஸ. சா. வேங்கடராமய்யர் இனிய தமிழ் பாக்கள் மூலம் ஸ்ரீ ஸ்வாமிகளை வரவேற்றார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் மௌன விரதமனுஷ்டித்து வருவதால் வரவேற்புக்களுக்கு பதில் கூற இயலவில்லை. இங்கிதங்களால் தங்களது ஸந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

பிறகு, இந்த வைபவத்திற்கென்றே சென்னையிலிருந்து வந்திருந்த தர்மரக்ஷாமணி ஸ்ரீமான். கே. பாலஸுப்ரமண்ய அய்யாவர்கள் பொதுஜனங்கள் சார்பாக ஸ்ரீஸ்வாமிகள் விஜயத்தைப்பற்றிய உத்ஸாஹத்தைவெளியிட்டுப் பேசினார்கள். ஸ்ரீஸ்வாமிகள் செய்ய உத்தேசித்திருக்கும் ஸ்ரீகாமாக்ஷிகோவில் கைங்கர்யங்களையும் பொது ஜனங்கள் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். கடைசியாக விபூதி, குங்கும பிரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டு யாவரும் ஸ்ரீஸ்வாமிகளிடம் விடைபெற்றுச் சென்றனர்.

கூட்டம் அதிகமாயிருந்த படியால் பொது ஜனங்கள் நெருக்கடியில்லாமல் தரிசனம் செய்து கொள்ளும்படி ஸ்ரீஸ்வாமிகள் சிறிது நேரம் மேடை மீது நின்று கொண்டு தரிசனமளித்தார்கள். நகர பரிபாலன சபையினர் தெருக்களைச் சுத்தப்படுத்தி நன்கு வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. போலிஸார் விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தது பாராட்டத்தக்கது.

இன்று ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யாவர்கள் பிக்ஷை நடத்தி வைத்தார்கள். பூஜைகளும் பிராம்மண போஜனமும் வெகு சிறப்பாக நடந்தன,

வெள்ளிக்கிழமையன்று ஸ்வாமிகள் ஊர்வலமாகச் சிலதெருக்கள் வழியாகச்சென்று ரயில்வே சத்திரத்தில் தங்கியிருந்து அங்கிருந்து இரவு புறப்பட்டு ஊர்வலமாக மடத்திற்கு விஜயம் செய்வார்கள்,

உபசாரப்பத்திரங்கள் அடுத்தவாரம்பிரசுரிக்கப்படும்

# குடந்தை செய்திகள்.

## புதிய தொழிலாளர் சங்கம்.

'குடந்தை அச்சுக்கூடத்தொழிலாளர் சங்கம்' என்ற ஒரு புதிய சங்கத்தை ஜூன்மீ 19உ கும்பகோணத்தில் ஸ்தாபித்திருக்கிறார்கள். கீழ்கண்ட பிரமுகர்கள் சங்க நிர்வாகக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்:—தலைவர் ஸ்ரீ சி. எல். ஆராமுது அய்யங்கார், உபதலைவர்கள்:—ஜனாப் கே. எம். ஷெரிப், ஸ்ரீ எஸ். வ. குழந்தையா தேவர், காரியதரிசிகள்:—ஸ்ரீ டி. கே. சோமசுந்தரம், ஸ்ரீ. வி. ராமகிருஷ்ணன், ஸ்ரீ ஜி. கோவிந்தஸ்வாமி. பொக்கிஷதார்:—ஸ்ரீநிவாச பிள்ளை. 24 நபர்களைக்கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது

## காலம் சென்ற டாக்டர் சாம்பசிவன் ஞாபகார்த்த நிதி

தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய தேசபக்தர் ஸ்ரீ டாக்டர் எம். கே. சாம்பசிவனை நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அன்னார் நகரபரிபாலனசபைத் தலைவராக இருந்து செய்த வேலைகளை எழுதிமுடியாது. நகரத்தின் அபிவிருத்திகளில் அவர் ஈடுபட்டுப் பல திட்டங்களை வகுத்திருந்தார். ஆனால், அகாலமரணத்தினால் அவைகளில் சில திட்டங்கள் முடிந்தபாடில்லை. ஸ்ரீ சாம்பசிவனுக்குத் தகுந்த "ஞாபகச் சின்னம்" ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று யேமீ 22உ குடந்தையில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஞாபகச் சின்னம் எந்தவகையில் அமைக்கப்படவேண்டுமென்பதை கமிட்டியார் பின்னர் முடிவுசெய்வார்கள். பொதுமக்களிடமிருந்து ஞாபக நிதிக்குப் பொருளுதவி வேண்டப்படுகிறது. சிறிய தொகையாயிருப்பினும் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்படுமென்று காரியதரிசி வேண்டுகோள் விடுவித்திருக்கிறார்.

## குடந்தை ராஜாங்கக் கல்லூரி.

தஞ்சை ஜில்லாவிலிருக்கும் ஆசிரியர்கள் 19 தேதி தஞ்சை ஸ்ரீ ஹனுமந்த விலாஸ் "கட்டிடத்தில் கூடினார்கள்." குடந்தை ராஜாங்கக் கல்லூரியும் அதன் எதிர்கால நிலையும்" என்னும் விஷயமாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்துக்கு ராவ்சாகேப் ஆர். சாமிநாதய்யர், பி. ஏ. எல். டி தலைமை வகித்தார். ஜில்லாவின் பல பாகங்களிலிருந்து ஏராளமாய் ஆசிரியர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்தில் கல்லூரி விஷயமாகப் பல விஷயங்கள் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டுக் கடைசியில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது:—

(1) கல்லூரியை எடுத்து விட சர்க்கார் தீர்மானித்திருப்பதாக ஜில்லா வெங்கும் ஒரு வதந்தி இருந்து வருவதால், சென்னை சர்க்கார் கல்வி இலாகா அமைச்சர் இது விஷயமாக ஒரு முடிவான அறிக்கை விடுவித்து வதந்திக்கு ஆதாரமில்லை என்பதைக்காட்ட முன்வரும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(2) தமிழ் நாட்டில் அரசாங்க முதல் வகுப்புக் கல்லூரியாக இருந்து வருவது "குடந்தை ராஜாங்கக்கல்லூரி ஒன்றுதான்". இந்த ஜில்லாவிலிருந்து அரசாங்கத்துக்கு நிலவரியாக மட்டும் 70 லக்ஷ ரூபாய் ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வருகிறதென்றும், இதனை ஒட்டியாவது கல்லூரியில் பி. எஸ். ஸி வகுப்புகளும், இன்டர்மீடியேட் வகுப்புக்கு இயற்கை சாஸ்திர பாடமும், பி. ஏ. வகுப்பில் தத்துவ சாஸ்திர பாடமும் வைத்துக் கல்லூரியை பல விதத்தில் அபிவிருத்தி செய்யும் படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) அடிக்கடி கல்லூரி ஆசிரியர்களை மாற்றி வருவது சரியாகாது. ஒவ்வொரு வருஷமும் கல்லூரி திறக்கப்படுவதற்கு முன்பே கல்லூரிக்குச் சிறந்த ஆசிரியர்களை நியமிக்கும்படி கல்வி இலாகா டைரெக்டரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) தஞ்சை ஜில்லாவிலிருக்கும் எல்லா பிரமுகர்களும் "தங்கள் தங்கள் பையன்களையும், பெண்களையும்" குடந்தை ராஜாங்கக் கல்லூரில் கல்வி கற்க அனுப்ப வேண்டுமே ஒழிய, வெளி ஜில்லாவிலிருக்கும் இதரக் கல்லூரிகளுக்கு அனுப்பக்கூடாது. இந்தக் கல்லூரியில் ஏராளமாய் உபகாரச்சம்பளங்கள் ஏழை மாணவர்களுக்கும், வகுப்பில் முதன்மையாக இருக்கும் மாணவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவும், கல்லூரியை ஒட்டி இருக்கும் விக்டோரியா ஜூபிலி விடுதியில் ஏழை மாணவர்களுக்கு ஆகார வசதிகள் அளிக்கவும்; கல்வி, விளையாட்டு, தேகப்பயிற்சி முதலியவைகளுக்காக இக் கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுகளும், மெடல்களும் ஏற்படுத்தவும்." (தஞ்சை ஜில்லா பிரமுகர்களை) ஏற்பாடுசெய்யும்படிக்கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(5)இந்த ஜில்லாவிலிருக்கும் "எல்லாமடாதிபதிகளும் 'குடந்தைக் கல்லூரி' விஷயமாக சிரத்தை எடுத்துக்கொண்டு, பல உபகாரச் சம்பளங்களைக் கொடுக்க சால்வதநிதி ஏற்படுத்தும்படியும், கல்லூரி விஷயமாக அவர்களது அபிப்பிராயங்களை அரசாங்கத்துக்குத் தெரிவித்துவிடும்படியும்" கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(6) சென்னை அரசாங்கத்துக்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்பவும், ஜில்லாவெங்கும் கல்லூரி விஷயமாகப் பிரசாரம் செய்யவும், சர்க்காருக்கு அனுப்பும் வேண்டுகோளை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழ்கண்ட பிரமுகர்களைக் கொண்ட தூதுகோஷ்டி குடந்தை கல்லூரி விஷயமாக ஜில்லாவெங்கும் பிரசாரம் செய்து, அரசாங்கத்தின் கல்வி மந்திரியைப் பேட்டிகாணும். ஸ்ரீ. வி. பூவராகஐயங்கார், (சட்டசபை அங்கத்தினர்) ஸ்ரீமான்கள் வி. நாடிமுத்து பிள்ளை (ஜில்லா போர்டு தலைவர்) டாக்டர் எம். கே. தியாகராஜ அய்யர்; (நகரசபைத் தலைவர்) ராவ்சாகேப் ஆர். சாமிநாதய்யர்; டி. கே. வெங்கட்டராமய்யர்; ஏ. சுப்பிரமணி அய்யர். வே. நடராஜன், வி. குருஸ்வாமி சாஸ்திரிகள்; ஏ. ஆர் ராமய்யர், ஆர். கந்தஸ்வாமி மூப்பனார். அரசாங்கத்துக்கு அனுப்பி இருக்கும் வேண்டுகோளில் B. sc. பிரிவை ஏற்படுத்தும்படி வற்புறுத்தியிருக்கிறார்கள்....


## உங்கள் நாக்கை ஏமாற்றாதீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20·20% அயத் ச்சத்தினால் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0





## ஸ்ரீசங்கராசாரியார் ஸ்ரீமுகம் படனம்

மே. த ஸ்ரீசங்கராசாரியார் இவ்வூருக்கு 28 தேதி இரவு விஜயம் செய்யப் போவதாக ஸ்ரீமுகம் அனுப்பி இருந்தார்கள். அதை 29உ இரவு ஊர்வலமாக எடுத்துச் சென்று ஸ்ரீகும்பேஸ்வர் சன்னதியில் படனம் செய்யப்பட்டது. ஸ்ரீமடத்திலிருந்து ஸ்ரீமுகம் ஊர்வலமாகச் சென்றபொழுது ஏராளமாய் ஜனங்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். இரண்டு யானைகள் முன் செல்ல, ஸ்ரீ கும்பேஸ்வர் திருக்கோயிலின் விருதுகள் பின்வர, வாத்யங்களுடன் ஸ்ரீமுகம் எடுத்துச்செல்லப்பட்டது. நகரின் பல பாகங்களில் ஸ்ரீமுகம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

## ஸ்ரீ சங்கர மடம்

மே. த. ஸ்ரீசங்கராசாரியார் சுவாமிகள் விஜயத்தை ஒட்டி ஸ்ரீ சங்கர மடம் சென்ற ஒருமாதகாலமாய் ரிபேர் செய்யப்பட்டு, அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீசுவாமிகள் விஜயத்தைப்பற்றியே நகரெங்கும் பேச்சு. யாவரும் ஸ்ரீ சுவாமிகளைத்தரிசிக்க ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள்.

## காவிரி நதி

காவிரி நதியில் ஜலம் 21 தேதி விடப்பட்டது. இந்தப் பக்கங்களில் விவசாயம் ஆரம்பமாய் விட்டது.

## குடந்தை அரசாங்கக் கல்லூரி.

குடந்தை அரசாங்கக் கல்லூரி ஜூலைமீ 4உ திறக்கப்படும்.

(நமது சொந்த நிருபர்.)



# திருமொழி நாவலர்

[ஸ்ரீ ப. ரெ. திருமலை அய்யங்கார், சென்னை.]

திருமொழி என்பது பிராட்டி பாஷை. அதுவே செந்தமிழ். நாவலர் என்பது நாவீறுடையவர். புலவர் பெருந்தகை என்க. இங்குக்குறிக்கப்பெறும் 'திருமொழி நாவலர்', செப்பச்செவிக்கமுதென்னத் திகழும் முப்பதிரண்டிவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே எனத்திருவந்தாதி அருளிய தூப்புல் வள்ளலார். ஸ்ரீவேதாந்த தேசிகன் எனக் கொண்டாடப்பெறுபவர். இவர் தமிழ் வளர்த்த பெருந்தகையாளர் . என்பது நற்றமிழர் நன்கு அறிந்த விஷயம். இவரது செந்தமிழ் வன்மையைச்சற்று கண்டு களிப்பாம்.

ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களிற்றலை சிறந்த ஸ்ரீமந்நாதமுனிகளைக் கொண்டாடுகையில் நந்தூப்புற்கோன் "காளம் வலம்புரியன்னநற் காதலடியவர்க்குத் தாளம் வழங்கித் தமிழ் மறை யின்னிசை தந்த வள்ளல்", எனக்கூறி மகிழ்கிறார். ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு அவரிடத்தில் மிகுந்த பக்தியுள்ள இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். கீழையகத் தாழ்வான் மமலையகத்தாழ்வான், என்பரே இவர்கள். முனிகளின் மருமக்களான ஸச்சிஷ்யர்கள். எம்பெருமானிடத்திற் போல ஆசாரியனிடத்தில் மிகுந்த பக்தியைச் செலுத்திய நற்காதல் அடியவர்களாகிய இவர்கள் காளம், வலம்புரிபோன்றவர்கள். வாதிகளோடு வாதம் செய்யும் போது அவர்களுடைய இவ்விரண்டு வாத்யங்கள் போல் கம்பீரமான சப்தமுள்ளதாயும், வாதிகளுக்கு பயத்தையுண்டாக்கினதாயும் இருந்தன. இவர்களுக்கு நாதமுனிகள் தாளவித்தையைச் சொல்லிக் கொடுத்து, தமிழ் வேதத்தினுடைய இனிமையான கானத்தையும் உபதேசித்து உபகாரம் செய்தார். வங்கரும் பாத நான்கும் வகுத்தவன்மீதி மஹரிஷி தாமியற்றியருளிய ராமாவதாரத்தை மிதிலைச்செல்வி திருவயிறு வாய்த்த குசலவர்கட்குச் சொல்லி வைத்து அந்தன்மக்களும் இன்னிசையுடன் கானம் பண்ணியதை நினைக. இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும். இவ்வாசிரியரே "பண்ணமரும் தமிழ் வேதம்" (கானத்தோடு கூடிய தமிழ் வேதாந்தம்) என்றும்; "செய்யதமிழ் மாலைகள்" (செவ்விய சிறந்த ஆழ்வாருளிய தமிழ்ப்பாசுரங்களாகிய மாலைகள்) என்றும்; "பாவளருந்தமிழ்மறை" என்றும்; "செந்தமிழ்நூல்" என்றும் கூறுதல் காண்க.

ஆசிரிய வண்ண விருத்தத்தில் உள்ள இவரது எம்பெருமானுடைய திருப்பாத வருணனை நன்குணாற் பாற்று—பாசுரம் வருமாறு "உறுசகடமுடைய வொருகாலுற்றுணர்ந்தன, உடன்மருத மொடிய வொருபோதில் தவழ்ந்தன, உதிதடவுமளவிலுலோடுற்றுநின்றன, உறுநெறியோர் தருமன் விடுதூதுக்குகந்தன, மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன, மலர்மகள் கைவருடமலர் போதிற் சிவந்தன, மறுபிறவி யறுமுனிவர் மானுக்கிசைந்தன, மனுமுறையில் வருவதோர் விமானத்துறைந்தன. அறமுடைய விசயனமர் தேரிற்றிகழ்ந்தன, அடலாகபடமடிய வாடிக் கடிந்தன, அறுசமயமறிவரிய தானத்தமர்ந்தன. வளிகுருக்கை நகர்முநகர் நாவுக்கமைந்தன, வெறியுடைய துவளமலர் வீறுக்கனிந்தன. விழுகரியோர் குமரனென மேவிச்சிறந்தன. விறல்காரியுடையடைய வியத்தொடர்ந்தன. விடலரிய பெரிய பெருமாள் மெய்ப்பதங்களே."

பெரிய பெருமாள் திருவரங்கச்செல்வன் ஞானிகளாலே விடமுடியாத அவனுடைய திவ்ய திருவடிகள் பலமுள்ள ஒரு வண்டியுருவாயிருந்த அசுரன் உடைந்துபோகும்படி ஒரு காலத்தில் ஜாக்கிரதையாய் விழித்துக்கொண்டிருந்தன; ஒன்றோடொன்று சேர்ந்திருந்த மருதமரங்கள் ஒடிந்து கீழே விழும்படி ஒரு காலத்தில் தவழ்ந்து அவற்றின் நடுவே போயின; உறியில்வைத்த வெண்ணெயையும் தயிரையும் எடுக்கும்போது யசோதையால் உரலோடு கட்டப்பட்டு அதனுடன் சேர்ந்துநின்றன; யோக்கியமான நன்னெறியையுடைய ஒப்பற்ற தருமபுத்திரனால் விடப்பட்ட தூதன் செய்யும் தொழிலை உவகையுடன் ஒப்புக்கொண்டன; கோபமேற்கொண்ட விரோதிகள் நாசமுறும்படி பிருந்தாவனத்தில் வந்து சஞ்சரித்தன. தாமரைப்பூவில் நித்யவாஸம்செய்யும் பெரிய பிராட்டி தன் கைகளாலே வருட அன்றலரும் தாமரைப்பூவைக்காட்டிலும் அதிகமாகச் சிவந்தன; மறுபிறவி அறவேண்டுகிற ரிஷிகளுடைய பக்திக்கு விஷயமாய் நின்றன; பிரும்மலோகத்திலிருந்து வைவஸ்வத மநுவின் ஸந்நிதியிலிருந்துவந்து திருவரங்க விமானத்தில் நித்தியவாஸம் செய்கின்றன; பகவானை அடைவதாகிய புண்ணியத்தையுடைய அருச்சுனன் அமர்ந்த தேரில் ஸாரதியாகத் திகழ்ந்தன; பலமுடைய காளியன் என்கிற பாம்பினுடைய படங்கள் நசுங்கும்படி அவற்றின்மேல் நர்த்தனம் செய்து அவன் கர்வத்தைப்போக்கின; ஆறுமதங்களால் அறிய முடியாத பரமபதத்தில் ஸ்திரமாயிருக்கின்றன; பூமிக்கு அலங்காரமான குருகை என்னும் நகரத்துக்குத் தலைவனான நம்மாழ்வாருடைய நாவால் பாடப்பெற்ற பாக்களுக்கு விஷயமாய் இருந்தன; வர்சனையையுடைய திருத்துழாய் மாலையையுடைய பெருமைக்கு யோக்கியங்களாய் இருந்தன; உத்தரையின் கருப்பத்திலிருந்து கீழே விழுந்த கரிக்கட்டையானது ஒப்பற்ற பரீக்ஷித்து என்ற அரசகுமாரனாகும்படி பிரீதியுடன் செய்தன; பல முடைய அசுரர்களுடைய சேனைகளானது நாசமாகும்படி அவற்றைத் தூக்கிக்கொண்டே போயின.

தூப்புல் வள்ளலாரின் தமிழ்க்கவியைப் போற்றுதார் இலர். "மூன்றிலொருமூன்றுமூயிரண்டு மூன்றுங் தோன்றத்தலையுந்துயர்" என்ற குறள்வெண்பா இவரது ஆற்றலை நன்கு விளக்கும், இதற்கு, பௌராணிக மத சித்தாந்தம், அத்துவைதம் சிவாத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், என்ற நான்கு முறையாக சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் உரைவகுத்துளாரெனின் இம்மறைமுடித் தேசிகனரின் ஆற்றல் அளவிடற்பாலதோ?

## எழுத்தாளர்களுக்கு

[நமது "ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டித் தமிழ்நாட்டிலிருக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வியாஸங்களும், கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஸநாதன தர்மத்தைப்பற்றியும், சாஸ்திர ஆராய்ச்சி, சாஸ்திரஸந்தேகங்கள், புராண இதிஹாஸங்கள், ஜோதிஷம், வைத்யம், சங்கீதம், போன்ற விஷயங்கள், சரித்திரக்குறிப்புகள் முதலியவைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதியனுப்பலாம். பொருளாதாரம், அரசியல் இலவாணி, தத்துவம் தேச விஷயங்களைப் பற்றிச் சிறந்தகட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பத்தில் எத்தகைய பண உதவியும் செய்யமுடியாது. பத்திரிகையின் இதழ்கள் 2 அனுப்பப்படும். செய்திகள், அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## வாரக்குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா, சென்னை.)

நமது நற்காலம்!! நமது பரமாசார்யாள் நம் நாடு வா நம் பத்ரிகை பல வகை முன்னேற்றமடைந்ததுடன் எனது வேண்டுகோளுக்கிணங்கி தமிழ் வித்வானும் பரம ஆஸ்திகரும்,பல நூலாசிரியரும்,சுதேசமித்திரன் உபபத்ராசிரியராக இருந்தவரும், தமிழ் ஸ்வராஜ்ய ஆசிரியரும், உத்தம தேசாபிமானியும், தியாகியும், சென்னை நகர பரிபாலன ஸபை அங்கத்தினரும், ஆழ்ந்த மதாபிமானியுமான மகா-ா-ா-ஸ்ரீ எம். எஸ். சுப்ரமண்ய அய்யரவர்கள் அன்புடன் ப்ரதி வாரமும் நமக்கு விஷயதானம் செய்யமுன்வந்துளார். எல்லோர் சார்பாகவும் அவருக்கு நன்றி செலுத்தி நேயர்களதை ஊன்றிப்படிக்க வேண்டுகிறேன்.

தப்பான வழி!! மாண்டி ஸமஸ்தான மன்னர் தன்னாட்டு விதவைகளைத்திருடரிடமிருந்துகாக்க விதவா விவாஹத்தை ஆதரித்து வருகிறார். சரியான மந்திரி அவரை நல் வழியில் திருப்ப வேண்டும்.

நல்ல காலமே!!காங்கிரஸ் கார்யக்கமிட்டி, அ. இ. கா. கமிட்டி இவை கூடின இடத்தேயே சுபாஷின் புதியகக்ஷிஸபையும் நடந்தது. பரஸ்பர த்வேஷம் முற்றுதபடி சாதுர்யமாக ஸபை நடந்தது சிறந்ததே!

குறுகிய தேசபக்தி நோய்!! ஸிலோன் தேசபக்தியின் பெயரால் இந்தியருக்குச் செய்த தீமை திடுக்கிடச்செய்கிறது! மாகாண பக்தி ஆங்காங்கு தலை நீட்டுகிறது. இதற்கு இடமளிக்காமல் தலைவர் நல்வழி காட்டவேண்டும்.

திருச்சி தலைவருக்கு நன்றி!! மந்திரிகள் வீசிய மாய வலையில் சிக்காமல் ஸநாதன தர்மத்தலைவர்கள் ஒன்று கூடி உண்மையை—தர்மத்தை தீரமாய் எடுத்துக்கூறியதற்கு பல முறை நன்றி செலுத்த கடமைபட்டிருக்கிறோம்! தலைவர் வாழி!

குளத்தை தூர்த்து தோட்டமா? திருநெல்வேலி நகர பரிபாலன ஸபை ஓர் ஆலய குளத்தை தூர்த்து தற்கால உல்லாஸ உத்யானம் வைக்க கூறிய யோசனையை நல்ல வேளை அரசாங்கம் ஏற்க மறுத்து விட்டது. இனி குளத்தை தூக்க கோயிலையே இடிக்கும் மேதாவிகள் தோன்றுமலிரார்.

பறவி வருகிறது!! திடீரென பல ஜில்லாக்களில் ஆலயப்ரவேச ஸபை நடைபெறுகிறது. ஜநாகர்ஷண வழியை யறிந்த மேதாவிகள் ராமேஸ்வரி நேருவை ஊரூராக அழைத்துச் செல்கின்றனர். இச்சமயமல்லவோ நாம் வேலை செய்ய வேண்டும்!

முன்வருக!! பிறர்க்குபதேசிப்பதற்குமுன் நாம் செய்து வழி காட்ட வேண்டுமென்று கருதி விராம காலத்தில் நீண்ட நிகழ்ச்சி முறை போட்டிருந்தேன். தைவானுக்ரஹமின்மையால் நோய் வாய்ப்பட்டபடியால் வெளிக்கிளம்ப வில்லை. நமது பத்ராசிரியர், உதவிஆசிரியர் இருப்பதால் தர்மப்ரசாரத்துக்கும் அனுப்பப்பட்டால் பத்ரிகைக்கும் தர்மத்திற்கும் ஸஹாயமாகும். சனி ஞாயறில் இப்போதும் அழைத்தவிடம் வந்து தெரிந்த அளவு கூற அடியேன் ஸித்தம்!!

## நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இந்தியாவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸநாதன தர்ம விஷயங்களைப்பற்றியும், முக்கிய செய்திகளைப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் எழுதி அனுப்பலாம்.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

## சிருஷ்டி

(ஸ்ரீ எஸ். வைத்தீஸ்வரய்யர், கல்கத்தா)

[முன் வாரத்தொடர்ச்சி]

சிருஷ்டிக்கிரமத்தில் ஆகாசத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியும் உண்டாகின்றன. ப்ரளயத்தில் பூமி ஜலத்திலும், ஜலம் அக்னியிலும், அக்னி வாயுவிலும், வாயு ஆகாசத்திலும் லயிக்கின்றன. கற்பூரம் கடின பதார்த்தம் (Solid) கொளுத்தினால் திரவமாகிறது. (Liquid) அது கொழுந்துவிட்டு எரிகிறது. (Flame) காற்றாகிறது. (Gas) பிறகு ஆகாசமே ஆகிறது. (Ether) சிதம்பர ரகஸ்யம் என்பது கர்ப்பூர நீராஜனமே. தாயுமானவர் கர்ப்பூரத்தை அத்வைத சாக்ஷியாக பாராட்டுகிறார்.

வீடு என்றால் என்ன அறிகிறோம். மண் குடிசை என்று சொல்வதற்கில்லை. செங்கற் கட்டிடமா? பாறைக்கல், சலவைக்கல், இரும்புடன் ஸிமெண்ட், மரம், மூங்கிலுடன் காகிதம் இவை ஒவ்வொன்றால் மாத்திரம் முழுதும் ஆகிய கட்டிடங்களும் இருக்கின்றன. பனிக்கட்டி வீடுகளும் இருக்கின்றன. இதே மாதிரி சிருஷ்டியிலும் பூமியிலுள்ளவை பூமி தத்வமே ப்ரதானமாயுடையவை. சந்திரனிலுள்ளவை ஜலதத்வமே ப்ரதானமாயுடையவை. சூரியனிலுள்ளவை தேஜோதத்வமே ப்ரதானமாயுடையவை. பூமியிலுள்ளவை நரை, திரை, மூப்புப்பிணியுள்ள ஜீவராசிகள். சந்திர சூரியனிலுள்ளவை நரை திரைகளில்லாத பித்ருக்களும் தேவர்களும், பித்ருக்களுக்கு பூமியில் கொடுக்கப்படும் ஜலதர்ப்பணமே ஆகாரம், தேவர்களுக்கு ஹவிஸுக்களே ஆகாரம். வாயு ஆகாச தத்வங்களாலாய மஹான்களும் ஸித்த புருஷர்களும் இருப்பார்களென்றும் ஊகிக்கலாகும். பல சாமான்கள் கலந்த வீடுகள் இருப்பது போல பல தத்வங்கள் கலந்த சிருஷ்டிகளும் அந்தரிக்ஷத்தில் இருக்கின்றன. அவை யக்ஷ ராக்ஷஸ கந்தர்வ கின்னர கிம்புருஷாதிகள். மனுஷ்ய கந்தர்வர், தேவகந்தர்வர், பித்ருக்கள், வேதப்பயிற்சியின் பலனாகத் தேவரானவர், யக்ஞாதி கர்மாக்களின் பலனாகத் தேவரானவர், தேவர்கள், இந்திரன், பிருஹஸ்பதி, ப்ரஜாபதி, ப்ரமா என்று ஒருவரை விட ஒருவர் மேலானதாகும், நிஷ்காம்யனாய் ப்ரம்மத்யானம் செய்கிறவன் இந்த படிகளை எல்லாம் தாண்டி பரம்பொருளுடன் தானும் ஒன்றென்று அறிகிறதாகவும் தைத்ரீயோபநிஷத்தில் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் சந்திராதி கிரஹங்களிடத்தில் பயிர் பச்சை ஜீவர்கள் பூமியிலிருப்பதுபோல் இருப்பதாக ஊஹிக்கிறார்கள். இந்த ஊஹம் பித்ருக்கள் தேவர்கள் முதலானோர் இருக்கிறார்கள் என்றவரையில் சரியே. ஆனால் பூமி தத்வம் இல்லை. ஆகையால் பயிர் பச்சையும் கிடையாது. ஜல தேஜஸ்ஸுகளின் தத்வம் இருக்கிறதென்றாலும் இங்கே பூமிதத்வம் நிறைந்த நம் கண்ணுக்கு அவர்கள் புலப்படமாட்டார்கள். காதால் ருசியை அறியமுடியாது. நாவால் பார்க்கமுடியாது. கண்ணால் முகரமுடியாது. அவ்வாறே பூமி தத்வத்தால் தேஜோதத்வத்தை அறியமுடியாது. தேஜோதத்வத்தால் ஆகாசதத்வத்தை அறியமுடியாது. ஆனால் இந்திரியதத்வங்களை அடக்கும் சக்தியுள்ளவன் இந்திரியங்களுக்கு அப்பால் சென்று எல்லாவற்றையும் அறிகிறான் இந்திரியம்—11. பூதம்—5. ஆகப் பதினாறையும் ஜயித்தவரே ஸித்தர்கள். 24 தத்வங்களையும் கடப்பது மனுஷ்யனால் முடியும் எல்லாமறிவதற்கு தத்வங்களைக் கடப்பதே சாதனை.

இன்னும் ஆராய்ச்சியாளர்கள் இந்த சூரிய மண்டலம்போல் அநேக சூரிய மண்டலங்களும் இருப்பதாக என்னுகிறார்கள். இது சாஸ்திரத்திலுமிருக்கிறது. இந்த சூரியமண்டலத்தில் பூமியானது மிகவும் சிறிய பாகம். பூமியிலுள்ள ஜீவராசிகளில்த்விஜர்களோ சிறபான்மையர். இந்த த்விஜர்கள் பிர்ம்மா முதல் ஸ்தம்பபர்யந்தம் எல்லாருக்கும் திருப்தி செய்துவைப்பதாக நமது சாஸ்திரம். பிரம்மயஜ்ஞம் செய்கிறவர்கள் இதை அறிவார்கள். தற்காலத்தில் அவரவர் வயிற்றையும் இந்திரியங்களையும் போஷிப்பதே பெரிய காரியமாய்க்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இந்திரியத்திற்கும் பூர்ண ஸ்வதந்திரம் வேண்டும் என்று போராடுவதே தொண்டாகவும் சாஸ்திரக்கட்டுபாடுகளை நிராகரிப்பதே தியாகமாகவும் கொண்டாடுகிறார்கள். புவனங்களின் போஷணைக்காகவும் கைவல்யமிலை பெறவும் ஏற்பட்ட சாஸ்திரக்கட்டுப்பாடுகளை உண்மை தியாகமும் கருத்தும் என்பதைச் சிறிதும் சிந்திப்பதில்லை.

த்விஜர்கள் மந்திர ஸம்ஸ்காரத்துடன் கொடுப்பது பித்ருக்களையும் தேவர்களையும் அடைகிறது. ஸம்ஸ்காரமில்லாதது பூத ப்ரேத பிசாசங்களையும் ராக்ஷஸர் முதலானவர்களையும் அடைகிறது. புவனங்கள் முழுதும் ரக்ஷிக்க வேண்டிய பொருப்புபிராம்மணர்களுடையது. அந்த பிராமணர்களை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு ராஜாங்கத்திற்கு.

எந்த சத்தமும் வார்த்தையும் வீண்போவதில்லை என்று ரேடியோ கண்டு பிடித்ததிலிருந்து அறியக்கூடும். காரியம், ப்ரதிபலன், (action, reaction) என்பது எல்லாரும் அறிந்தது. இம்மாதிரியே மனத்தில் தோன்றும் எண்ணங்களும் வீணாவதில்லை. வீணாகாமல் ப்ரதிபலிப்பதே சிருஷ்டிக்குக்காரணம் ஒரு ஜன்ம எண்ணங்கள், பேச்சுகள், செய்கைகள் மறு ஜன்மத்தில் ஸம்ஸ்காரம் (Impression) வாஸனை (inclination) அதிருஷ்டம் (unseen cause) என்பவைகளிலிருந்து பலனைக் கொடுக்கின்றன. இதனையே கர்மா என்கிறோம் ஸத்கர்மா மேலுலகத்தாருக்கும், துஷ்கர்மா கீழுலகத்தாருக்கும் ஜனன காரணமாகின்றன.

மேலே சொல்லப்பட்ட பிரகிருதியிலிருந்தே ஸத்வம், ரஜஸ், தமஸ், என்னும் முக்குணங்களும் உண்டாகின்றன. முக்குணபாகுபாடுகளும் சிருஷ்டிக்கு காரணமே. ஸத்வம் நிறைந்தவர் தேவர்கள். ரஜஸ் நிறைந்தவர் மனிதர்கள். தமஸ் நிறைந்தது மற்ற ஜீவராசிகளும் ஸ்தாவரங்களும். மனிதர்கள் இறந்த பிறகு அவரவர் கர்மாவிற்கு ஏற்றவாறு தேவலோக போகங்களையோ, நரக வாதனைகளையோ, இரண்டையுமோ அனுபவித்துத்திரும்பவும் மனிதர்களாகவும் மற்ற ஜீவராசிகளாகவும் ஸ்தாவரங்களாகவும் பூமிமேலும் பூமிக்குள்ளும் ஜனிக்கிறார்கள். மண்கட்டியை உடைப்பதும் துரும்பை கிள்ளுவதும் பாவங்கள். ஏன்? அவைகளுள்ளும் ஜீவனிருக்கிறது. நரகவாதனை வேறுலகில் இருக்கிறதோ என்னவோ இவ்வுலகில் இருக்கிறது. Microbes என்னும் அணுப்ரமாண ஜீவர்கள் காற்றிலும் ஜலத்திலும் கட்டையிலுமிருக்கின்றன. கட்டை எரிந்து ஜலம் கொதிக்கும் போது அவை என்னபாடுபடும்! கெல்லுத்தி சமைக்கிறோம். அறைக்கிறோம், காய்கறி அரிகிறோம். அந்தோ! இவைகளும் பாவம். பஞ்சஸூனை பாவம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இதற்குப் பரிகாரமும் இருக்கிறது. பசுபக்ஷிகளும் புற்பூண்டுகளும் பூர்வஜன்மஞாபகமிருந்து பேசக்கூடுமானால் தங்களில் சிலர் ஒரு காலத்தில் மனிதராயிருந்ததை சொல்லும். அவைகளுக்கு பூர்வ ஜன்ம ஞாபகம் இருப்பதாக பலகதைகள் புராணங்களில் இருக்கின்றன.

## அவனியை நீத்த ஆரிய வீரர்.

எத்தனையோ வயிரம் கல்வி இடம் அறிந்து உய்த்து உணர்வு இல்லெனில் இல்லாகும். உய்த்து உணர்தலும் சொல்வன்மை இன்றெனின் என்னாம்? ஆகியவண்டேல் பொன்மலர் நாற்றம் உடைத்து." இஃது ஒரு பெரியார் வாக்கு. இதற்கு இலக்காகிய இம்பர் இல்லை எனலாம். ஆயினும் ஆண்டவன் அருளால் அவ்வப்போது சில போதினர் தோன்றி மறைகுவர். அவர்களில் யாம் கண்ட அளவில் பண்டித U. P. கிருஷ்ணமாசாரியார் ஒரு தனிப் பெரியார். இவரை அநுபவியாதவர் சநாதன உலகில் இரார் என்பது எமது துணிபு. சுமார் இருபது ஆண்டுகளாக இவரை நாம் அறிவோம். இவரது போற்றல் ஒப்புயர் வற்றது. ஆங்கிலக் கல்வியால் ஆரிய தருமத்தை இழந்திருந்த அநேகர் இவரது அசாதாரணமான பிரசங்கங்களைக் கேட்டு நல்வழி பெற்று உய்ந்த வரலாறுகள் கணக்கற்றவை. மேனாட்டினர் கேட்டு ஒரு கன்னுவெயற்றியிருந்தால் அதனை இவ்வாசிரியர் முற்று முணர்ந்து அதனினும் நமது சநாதன தர்மம் மேம்பாடுற்றது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துரைத்து கேட்போரெவரையும் அதிசயிக்கச் செய்து அவர்கள் கொண்ட தப்பபிப்ராயங்களை ஒரு நொடியில் மாற்றி விடுவர். இவரது நன்முயற்சியால் நடைபெற்ற வருணாச்ரம மஹாநாடுகள் பல. வடமொழி ஆங்கிலம் விஷயம் சுத்தாசாரம்[illegible] சிறப்பெல்லாம் நகரில் விரமுழக்கம் செய்து அமைத்தது இக்கிருஷ்ணமாசாரியாரின் திறமையே. அங்கிலேயரும் அகமகிழ்ந்து கொண்டாடும் அறிவினராக ஆங்கிலச் சொற்பொழிவாற்றுவதில் இவருக்கு நிகர் ஒருவரும் இல்லை என்னலாம். "The Wisdom of the East"; "Rama Dhutha"; "Sanatanist" என்ற சநாதன தர்ம ஆங்கிலப் பத்திரிகைகட்கு ஆசிரியராக இருந்து இவர் ஆற்றிய தொண்டுகள் பல. அநேக ஆங்கில நூல்களும் இயற்றியுள்ளார். ஆரியச் செல்வர்கள் இவரது அறிவு கருவூல நூல்கள் யாவையுஞ் சேர்த்து ஒரு தொகுதியாக வெளியிடின் அதுவே அவருக்குச் செய்த உபகாரமாகும். நாடு நன்றியறிவும் கொண்டாடப் பெற்றதாகும். அரசியல் இயக்கங்களில் இவர் ஈடுபட்டிருந்தால் இவரது கீர்த்தி அகில உலகும் பரவியிருக்கும். மேனாட்டிற் பிறந்திருந்தால் இவரை ஒரு தெய்வமாக கொண்டாடியிருப்பர். நம் நாட்டார் சநாதன தர்மிகள் இவரிடம் கொண்டுள்ள அபிமானமும் இலையற்றதே. சநாதன தர்மத்தவர்கள் இவருக்குத் தக்க புகழ்மாலை இயற்றி அதனையனைத்து உலகெங்கும் விசாரணை செய்வர் என்பது எளியனின் வணக்கமுடை எண்ணம். இவ்வினிய நிறைவெய்த இறைவன் இன்னருள் காப்பாரூக. அவனியை நீத்த அவ்வாரிய வீரர் ஆதவன் திருவடிசேர்ந்து தக்கும் ஆட்செய்து இவ்வவனியை நலமுறச்செய்வாராக.

ப. செ. திருமலை ஐய்யங்கார், சென்னை.

ஏஜெண்டுகள் தேவை.

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய வசதியுள்ள ஏஜெண்டுகள் உடனே தேவை. 25% கமிஷன் கொடுக்கப்படும். ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கு எழுதவும். மானேஜர், ஆர்யதர்மம், கும்பகோணம்.



## யஜுர்வேத உபாகர்மா

ஆசிரியர் ஜீ. எஸ். குருமூர்த்தி அய்யர் ஆராய்ச்சி.

பருத்தியூர் கோதண்டராம தீக்ஷிதாவர்கள் உத்தராயணத்தில் உபாகர்மா எனக்கேட்பது விந்தையாகயிருக்கிறது நல்ல கர்மாவை நல்ல காலத்தில் செய்தல் கூடாதா? கூடாதென எவ்விடத்தில் சொல்லியிருக்கிறது. திற்க மருத்துவக்குடி பஞ்சாங்கத்தில் எந்த மாதம் அதிகம் போட்டிருக்கிற தென்றும் ஆவணியில் உபாகர்மா செய்யவுமென்றும், யோசித்து விசாரிக்கவுமென்று, எழுதியிருக்கிறதை அந்த பஞ்சாங்க அனுஷ்டானியாயிருந்தும் கவனித்திலர் போலும். வாயலோபங்களுக்குப்பாத்யப்பட்டதனால் தான் இப்படிக்கெழுதியதை அனுஸரித்தே க்ரந்த பரிசிலனை பெரியவர்களிடம் விசாரம் முதலியவைகள் செய்து தெளிந்து நாளது ஷு ஆனி மீ 17உ ஸ்திரவாரமே யஜுர் உபாகர்மா செய்ய ஏற்ற தினமென மதித்தெழுதியதென்பதையும் ஸ்ரீராஜகோபாலய்யரைச் சொன்னது திருவழுந்தூரில் ஷடி சமீபத்தில் பிரம்மஸ்ரீ வித்வான் மாதிரிமங்கலம் வைத்யநாத சாஸ்திரிகள், அவர்களிருப்பதால் நீவிர் விசாரித்து பதில் சீக்கிரம் கொடுப்பாரென்ற ஒர் நம்பிக்கையினாலேயே ஆதலின் குறைகூற இடமில்லை. விஷயம் சொல்லவேண்டுமாகில் நேரில் பேசவேண்டுமேயல்லாது எழுதின் விரியும். ஆஷாடம் மலமாஸமல்ல சிராவணம் பாத்ரபதம் இரண்டிற்கும் சுக்ர மௌட்ய தோஷம், ஆடி மாதம் அதிகமென்கிற மலமாதம் ஆனதால் ஆஷாடபௌர்ணமி நிர்தோஷமானது. அது ஆனி மீ 17உ தான். அஹோபிலமடத்தார் எழுதியிருக்கிற வசனங்கள்படி எந்த உபாகர்மாவாகயிருந்தாலும் தோஷமில்லாத காமே யேற்றதெனவும், அதில் பிரதமோபாகர்மத்தை விசேஷித்தும் இருக்கிறது யாதொரு தோஷமும் பார்க்க நியாயமில்லை யெனில் வன் மூட காலத்தில் செய்ய வேண்டுமோ "நித்ய கர்மவத்" என்றது நித்ய கர்மாவை கால நியமப்பட செய்வது போல் இதுவும் நல்ல தோஷமற்ற காலத்தில் தானே செய்ய வேண்டும் என்பதாக ஆகும் என்பதை கவனிக்கவேண்டாமா? திருவையாற்றுப்பெரியார் சொன்னது ஒன்று சந்தர்ப்ப வசனமேயல்லது ரிஷிகளின் வசனமல்ல, ஒப்பத்தகுந்ததுமல்ல. "யதோ மூடோ" என்ற வசனம் வர்ணநிபந்த சாகாநிபந்திகளை ஒத்திடுங்கால் மூடமா வர்ணநிபந்தியை விட சாஸ்திர பதி பலிஷ்டமாக இருக்கிறது என்பதை பார்க்க ஏற்படுகிறதே தவிர ஆவணியில் செய்யலாமென்பதற்காகாது என்பதைத் தெரிந்து கொள்ளவும். திற்க தோஷமற்ற காலமாகிய ஆஷாடசுத்த பூர்ணிமை ஆனிமீ 17 ஸ்திரவாரத்தன்று யஜுருபாகர்மம் செய்வதே க்ருதார்த்தமும், ஸம்பவமுமாகும்.

ஜீ. எஸ். குருமூர்த்தி அய்யர்.

(3-பக்கம் தொடர்ச்சி)

பழய ஓலை புஸ்தகத்தை பரிசோதித்துப்பார்த்ததில் ஷடி வாக்யம் அதில் இல்லை. மைசூரில் அச்சிடப்பட்ட புஸ்தகத்தில் உத்தராயணத்திலும் செய்யலாமென்றுதான் சொல்லியிருக்கிறது.

திற்க கும்பகோணம் மடம் பஞ்சாங்கத்திலும் ஸ்ருங்கேரி மடத்தில் அச்சிடப்பட்ட தெலுங்கு பஞ்சாங்கத்தி[illegible] ஆனிமீ 17உ [illegible]லேயே செய்யவே[illegible] [illegible] காரணங்களுடன் வெளியிட்டி[illegible] [illegible] ஆகையால் இந்த வருஷத்தில் ச்ரா[illegible] ஆனிமீ 17உ யே செய்யவேண்டுமென்று நிர்ணயம்.

## புத்தக விமர்சனம்.

### ஸ்ரீ ஆசீர்வாத சதகம்.

ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன் மைலாப்பூர்.

இந்த கிரந்தம் வெகு அபூர்வமானது. வாஞ்சை நாதகவி என்பவரால் இயற்றப்பட்டது. இவருக்குக் "குட்டி கவி" என்ற பெயர் பிரஸித்தமானது. ஒருக்கால் மிகவும் குள்ளமாயிருந்தமையால் இவருக்கு குட்டி கவி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். பண்டிதர்களும் இப்படியே அபிப்பிராயப்படுகின்றனர். பெயர் குட்டி கவி என்றிருந்த போதிலும் பாண்டித்யம் அபாரமானது. எல்லா சாஸ்திரங்களிலும் அசாதாரணமான ஞானம். திருவிசநல்லூரில் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவர் வசித்ததாகக்கூறுகின்றனர்.

இவருடைய லௌகிக ஸ்திதி இவர் பெயருக்கு நேர்மாறுபாடானது. வாஞ்சாநாதன் என்ற போதிலும், ஜீவனத்திற்கே போதுமான சௌகர்யங்களில்லாமல் பரம தாரித்ரயத்தை அனுபவித்தார். போஜனத்திற்கே வழி கிடையாது. ஆகவே, சில சுதேசி சமஸ்தானங்களுக்குச்சென்று அரசர்களைப்பேட்டி கண்டு தன் பாண்டித்யத்தினால் சிறந்த சன்மானங்களை யடையலாமென்றஎண்ணத்துடன் அநேக ராஜாக்களைப்பார்க்கப்பார்க்க போனார். ஆனால், எல்லா இடங்களிலும் மறுதளிக்கப்பட்டு, அவமானத்தை யடைந்து தேக அசௌக்யமும் ஏற்பட்டு இனி பிரபுக்களை ஸேவிப்பதே கிடையாது என்ற திடமான தீர்மானத்துடன் திரும்பி விட்டார். தன் கிராமத்திற்கு வந்து மிகவும் சிரமப்பட்டு, ஒரு எருமைக்கடாவையும் சிறிதளவு பூமியையும் சம்பாதித்தார். இதைக்கொண்டு தன் நிலத்தைத்தாமே உழுது பயிரிட்டுச்சாகுபடி செய்து, அதனால் தமக்கு ஏற்பட்ட வருமானத்தைக்கொண்டு தன் கஷ்ட ஜீவனத்தை நடத்தி வந்தார். இதற்குப் பிறகு தன்னை அவமதித்த ராஜாக்களைத் தகுந்தபடி சிக்ஷிக்க வேண்டுமென்று எண்ணினார். இதற்காக "மஹிஷ சதகம்" என்ற சிறந்த கிரந்தத்தை இயற்றினார் இந்த கிரந்தம் தாக்ஷிணாத்யர்கள் எழுதிய காவ்யங்களில் முதல் ஸ்தானம் பெற்று விளங்குகிறது இதைக்காவ்ய ருசி உள்ள ஒவ்வொருவரும் கட்டாயம் படித்தனுபவிக்க வேண்டும். இதைப்பற்றிப் பின்னர் விஸ்தாரமாக எழுதுவோம். இதில்தன் ஜீவனத்திற்கு உபயோகப்படும் படியான எருமையை வெகுவாக சிலாகித்துகடைசியில் கருவம்பிருந்தபிரபுக்களின் முகத்தைப் பார்ப்பதைக் காட்டிலும், தன் எருமை மாட்டைப் பார்ப்பது எவ்வளவோ சிறந்தது,என்று வசைமொழி கூறினார். இந்த கிரந்தத்தை எல்லா அரசர்களுக்கும் அனுப்பி அவர்களை அவமானப்படுத்தியதாகவும் கேள்வி.

பின்னர், தன்னிடமிருந்து மிகவும் கடுமையான கண்டனம் ஏற்பட்டதைப்பற்றி வருத்தமடைந்து அதற்குப் பரிகாரமாக மேற்சொன்ன "ஆசீர்வாத சதகம்" என்ற கிரந்தத்தை இயற்றினார். இந்த அபூர்வ கிரந்தம் வாணிவிலாச புத்தகசாலையில் அச்சிடப்பட்டிருக்கிறது. மொத்தமாக 106 ச்லோகங்கள் காணப்படுகின்றன. விருத்தம் முழுவதும் 'ஸ்ரக்தரா' ச்லோகங்கள். மிகவும் கம்பீரமாயும், அநேக பதங்களை ஒன்று சேர்த்த பெரிய விக்ரஹவாக்யங்களையுடையதாயும், பிராசத்துடன் கூடியதாயும், முதலில் படிப்பதற்குப் புரியாதுமிருக்கும். ஆனால் நிஜமாக காவ்யத்தில் அபிருசி உள்ளவர்களுக்குக் குட்டிக்கவியின் கவிதை ஓர் விருந்தென்றே சொல்லலாம். வித்வான்கள் ரஸிக்கக்கூடியது. எதிர்பார்க்காத அநேக பிரயோகங்களையுடையது. சாதாரணமாக காணக்கூடாத பல விஷயங்களைப் போதிப்பது.

ஆசீர்வாத சதகத்தில் ஒவ்வொரு சுலோகமும் ஒவ்வொரு தேவதையின் ஸ்தோத்திரம் கடைசி பாதத்தில் தேவதையின் அனுக்ரஹத்தைப் பிரார்த்தித்து மற்ற மூன்று பாதங்களில் அந்தந்த தேவதையின் ஸ்வரூபத்தை வர்ணித்திருக்கிறார். 106 தேவதைகளைப்பற்றி எழுதவேண்டுமென்றால், எவ்வளவு ஞானம் இருக்கவேண்டுமென்று வாசகர்கள் ஊகிக்கலாம். சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் ஆழ்ந்த ஞானம் வேண்டும். இதற்குமேல் வாக்தேவியின் பூர்ண கடாக்ஷமும் அவசியம். இதில் சொல்லப்பட்டிருக்கும் தேவதைகளாவன:—பிரம்மா, சாரதா தேவி, கிருஷ்ணன், லக்ஷ்மி, பூமிதேவி, தசாவதாரங்கள், மன்மதன், கருடன், வாசுகி, பாஞ்சஜன்யம், சக்ராயுதம், விஷ்வக்சேனர், சாம்பமூர்த்தி, அம்பிகை, விக்னேச்வரர், ஸ்கந்தன், நந்தி, நவக்ரஹங்கள், வேதம், ஸ்மிருதி, புராணங்கள், பர்வதங்கள், முதலியன. இன்னும் எவ்வளவோ அபூர்வ விஷயங்கள்குல் அடங்கி இருக்கின்றன,

லோககண்டகனாகக் கருதப்படும் ராவணனுக்கும் இந்த க்ரந்தத்தில் இடமேற்பட்டிருக்கிறது,

"எந்த ராவணன் ஸாஹஸத்தோடு கத்தியினால் தன் தலைகளைக்கொய்து கொழுந்துவிட்டெரியும் அக்னியில் அவைகளை ஆஹுதியாகக்கொடுத்து, இதனால்சந்தோஷமடைந்த பசுபதியின் வாக்கினால் தனக்கு இஷ்டமான வரங்களையடைந்தானோ; எவன் யுத்தரங்கத்தில் ஸ்ரீராமனால் வெட்டித்தள்ளப்பட்ட தலைகளைப் பசுபதிக்குச் சிறந்த வெகுமதியாகக் கொடுத்து, இதனால் பிரமதகணங்களுக்கெல்லாம் தலைமையையடைந்தானோ, அப்படிப்பட்ட மேலான சிவபக்தனான ராவணன் உங்கள் அபீஷ்டங்களையளிக்கட்டும்."

குட்டிகவியின் கிரந்தங்களை வித்வான்கள் பரிசீலனை செய்வார்களாக.

### தக்ஷிணாயனம் கூடாது

ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் என்ற கிரந்தத்தில் சிரவண ப்ரகரணத்தில் கீழ்க்கண்ட வசனங்கள் காணப்படுகின்றன.

சயனெ தக்ஷிணெ காயஷும் ஶ்ராவணெ நாதுரேஹயனெ। வேஷோ ஹி ஶ்ராவணே ஜாதஃ வேதஃ சுஷும் ஹி ஶ்ராவணாத்। தஸ்மாத் வைதாநிகாரம்பம் ஹோ தக்ஷிணாயனே। உத்தரே த்வ ஷூதே வேஷாவாரிலஷணம் ஹவேஷு தஸ்மாத் ஶுபேஷணம் வேதாரம்பம் வே தாரம்பம் தக்ஷிணே।

இந்த வசனங்களால் தக்ஷிணாயனத்தில் வேதாரம்பம் கூடாதென்று நிச்சயமாகிறது.

பி. வி. ஸுப்ரமண்ய பாகவதர்,

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

**"Dharmarajya"**

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director H. H. Sri Sankaracharya, Puri.

Widely circulated in India, Burma & Ceylon.

**Best Medium for Advertisement**

**Annual Subscrption Rs. 3.**

*Apply to:—*

The Manager, "DHARMARAJYA" Chandni Chowk, Delhi.

349




தஞ்சாவூர் ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி ஆதிக்கத்திற்குட்பட்ட
மன்னார்குடி தாலுக்கா, திருநெல்லிக்காவல்

## ஸ்ரீ நெல்லிவனநாதஸ்வாமி தேவஸ்தானத்தின்

1346ம் பசலி 30—6—37 தேதியில் ஆஸ்தி இருப்பு பொருப்பு ஸ்டேட்மெண்டு.

### மூலதனமும், கொடுபட வேண்டியதும்.

| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு (சென்ற ஆஸ்தி இருப்பு பொருப்பு ஸ்டேட்மெண்டுபடி) | | | | 1,12,639 | 4 | 7 |
| சொத்து ரிஜிஸ்டர்படி தள்ளுபடி வீடுகளின் மதிப்பு | 19 | 0 | 0 | | | |
| சிதம்பரம் பிள்ளை மனைப்பகுதி (தள்ளுபடி ஆக வேண்டியது) | 2 | 4 | 0 | | | |
| | 21 | 4 | 0 | | | |
| மாரிமுத்து பகுதி சேர வேண்டியது | 0 | 12 | 0 | | | |
| | | | | 20 | 8 | 0 |
| | | | | 1,12,618 | 12 | 7 |
| இந்தபசலியில் லாபம் (செலவுகளை விட வருமானம் அதிகமானது) | | | | 2079 | 14 | 1 |
| மூல நிதி (பசலி முடிவில்) | | | | 1,14,698 | 10 | 8 |
| ரூ. | | | | 1,14,698 | 10 | 8 |

### சொத்துகளும், வர வேண்டியதும்.

| | ரூ | அ | பை | ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|
| நிலங்கள் | | | | 94,085 | 0 | 0 |
| வீடுகளும், மனைகளும் (சென்ற இருப்புப் பொருப்பு ஸ்டேட்மெண்டுபடி) | 1816 | 8 | 0 | | | |
| சொத்து ரிஜிஸ்தர்படி 1345 பசலியில் சேர்க்க வேண்டியது | 10 | 0 | 0 | | | |
| | 1826 | 8 | 0 | | | |
| பசலியில் தள்ளுபடி (நீக்கி விட்டது) | 20 | 0 | 0 | | | |
| | | | | 1797 | 8 | 0 |
| கோவில் ரதமும் வாகனங்களும் | | | | 8061 | 14 | 0 |
| நகைகள் | | | | 1110 | 13 | 1 |
| பாத்திரங்கள் | | | | 480 | 6 | 3 |
| தளவாடங்கள் | | | | 711 | 13 | 0 |
| பட்டு பரி வட்டங்கள் சென்ற இருப்பு பொருப்பு ஸ்டேட்மெண்டுபடி | 222 | 0 | 6 | | | |
| பசலியில் அதிகப்படி | 23 | 1 | 6 | | | |
| | | | | 245 | 2 | 0 |
| கைவசமிருக்கும் தஸ்தாவேஜுகள் | | | | 75 | 7 | 6 |
| சுயர்தை கடன்கள் | | | | 1196 | 6 | 0 |
| சில்லரை இனங்கள் | | | | 87 | 8 | 0 |
| குத்தகை பாக்கிகள் | | | | 7 | 8 | 0 |
| மனைப்பகுதிகள் & வீட்டு வாடகைப் பாக்கிகள் | | | | 45 | 8 | 0 |
| நெல் குத்தகை பாக்கி (ல 110—6—0) | | | | 110 | 8 | 0 |
| 1347 பசலி சாகுபடி செலவுகளுக்கு முன் பணமாக | | | | 51 | 11 | 9 |
| சாகுபடி நெல் (ல. 150—8—1½) | | | | 150 | 11 | 2 |
| சாகுபடி செய்யும் குடியானவர்களுக்கு | | | | 751 | 7 | 3 |
| திருப்பணிகள் | | | | 4570 | 1 | 10 |
| ஜீவாரிகள் | | | | 145 | 0 | 0 |
| கைவச முன்ன நெல் (ல. 959—11—1½) | | | | 959 | 15 | 2 |
| தஞ்சை சேவாப்பேட்டை பாக்கியிலிருப்பது | | | | 29 | 9 | 4 |
| கையில் ரொக்கமாக | | | | 22 | 12 | 4 |
| ரூ. | | | | 1,14,698 | 10 | 8 |

ஆர். அருணாசல முதலியார்,
டிரஸ்டி.

டி. எஸ். விஸ்வநாதன், G.D.A., R.A.,
ரிஜிஸ்தர் ஆடிட்டர் & அக்கௌண்டண்டு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.